C

O-1842mK*1A
No5
55737

உ

பரமபதி துணை.

முதுகுளத்தூர் அஷ்டாவதானவித்வான்

வ. கலியாணசுந்தரம்பிள்ளை

அவர்களாற்பாடி

ஆரப்பாளையம்

# M. சுந்தரராஜவேளார்

அவர்கள் ஆடிவருகிற

# மெய்யரிச்சந்திர நாடகம்.

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

ஆர். மகாலிங்கக்கோனார்

விருப்பத்தின்படி

மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப்

இ. ரா. ம.

குருசாமிக்கோனாரால்

சென்னை - ஜூனி

நிரஞ்சனவிலாச் அச்சியந்திரசாலையிற்

பதிப்பிக்கப்பெற்றது.

Registered Copy Right.

1905.

இதன் விலை ரூபா 1-8-0.

OFFICE OF THE REGISTRAR ... REGISTERED 3 DEC 190... MADRAS

58737
O-,892MK+
N05
894.8112
1751

OFFICE OF THE REGISTRAR
REGISTERED
3 DEC 1906
MADRAS

பரமபதிதுணை.

# ரிஜஸ்தர் அறிவிப்பு.

இதனால் சகல அச்சுக்கூடத்தலைவர்களுக்குத் தெரிவிப்பது யாதெனில் இராமநாதபுரம் சமஸ்தானத்தைச் சேர்ந்த முதுகுளத்தூர் மூ. வன்னியப்பிள்ளை யவர்கள் குமாரர் அஷ்டாவதான வித்வான், மு. வ. கலியாணசுந்தரம்பிள்ளை யவர்களியற்றிய மெய்யரிச்சந்திர நாடகத்தை மதுரை புதுமண்டபம் புஸ்தகஷாப் இ-ரா-ம-குருசாமிக் கோனாகிய என்னால் அச்சிட்டு கெவர்ன்மெண்டில் ரிஜிஸ்தர் செய்திருப்பதால் யாதாமொருவர் அச்சிடுவரேல் 1887-௵த்து 25-வது ஆக்டு 20-வது பிரிவு [illegible]-வது உட்பிரிவின் விதிப்படி யான்கோரும் நஷ்டத்திற்கும் பினல்கோடு செக்ஷன் குற்றத்திற்கும் உத்தரவாதிகளாகவேண்டு மென்பதை கவனிக்கக் கோருகிறேன்.

இங்ஙனம்

இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புத்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

## முக்கிய அறிவிப்பு.

| | |
|---|---|
| சிவசாமியவர்கள் அரிச்சந்திரநாடகம் படத்துடன் | 0 12 0 |
| அனந்தபெருமான்பிள்ளையவர்கள் ஆடிவருகிற மாறுகுடி அரிச்சந்திரநாடகம் படத்துடன் | 1 0 0 |
| நீதிநெறி அரிச்சந்திரநாடகம் படத்துடன் | 1 0 0 |
| மூக்கவேளாரவர்கள் அரிச்சந்திரநாடகம் படத்துடன் | 1 4 0 |
| மெய்யரிச்சந்திரநாடகம் படத்துடன் | 1 8 0 |
| புவனேந்திரநாடகம் படத்துடன் | 1 4 0 |
| சத்தியவாக்கு அரிச்சந்திரநாடகம் படத்துடன் | 1 0 0 |
| அப்பாவுபிள்ளை சத்தியபாஷை அரிச்சந்திர விலாசம் படத்துடன் | 1 0 0 |

இந்த புத்தகங்கள் தேவையுள்ளவர்கள் அடியிற்கண்ட மேல்விலாசக்காரரிடங் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

எனது மேல்விலாசம்

இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

பரமபதிதுணை.

## ஆரப்பாளையம் எம். சுந்தரராஜ வேளாரவர்கள் மெய்யரிச்சந்திர நாடககம்பெனியைச் சேர்ந்தவர்கள்.

இராஜபார்ட்டு. எம். சுந்தரராஜவேளாரவர்கள்
ஸ்ரீபார்ட்டு. சி. வீராச்சாமிநாயுடு அவர்கள்
ஸ்ரீபார்ட்டு. புகளும்பெருமாள் வேளாரவர்கள்
பாலபார்ட்டு. சாமிநாதன்
பாலபார்ட்டு. இராமலிங்கவேளார்
மந்திரிபார்ட்டு. லெட்சுமண அய்யரவர்கள்
உ-வது மந்திரி. சுப்பிரமணிய அய்யரவர்கள்
மோகினிபார்ட்டு. அழகிரிசாமிநாயுடு அவர்கள்
மோகனராஜபார்ட்டு. மா. மூக்கவேளாரவர்கள்
கெஞ்சின்பார்ட்டு. விலாச்சேரி மாயாண்டி அம்பலம்
ஸ்ரீபலபார்ட்டு. சமுட்டிபுரம் வேலுப்பிள்ளையவர்கள்
விஸ்வாமித்திரபார்ட்டு. ஆரப்பாளையம் முத்துச்சாமிசேருவை
நட்சத்திரபார்ட்டு. ச மு. ஐயாச்சாமிபிள்ளையவர்கள்
பலவேஷபார்ட்டு. தி. வெள்ளைச்சாமிசேருவை
விதூஷகபார்ட்டு. மதுரை. இராமசாமிசேருவை
கோமாளிபார்ட்டு. மாடக்குளம் நீலமேகம்பிள்ளை
சூத்திரதார்பார்ட்டு. லெட்சுமணநாராயண அய்யர்

பக்கமேளத்திலுள்ளவர்கள்.

சோளங்குருணி இராமசாமியண்ணாவியவர்கள்
ஆரப்பாளையம் வில்லாயுத வேளாரவர்கள்
மாடக்குளம் வெள்ளைச்சாமிபிள்ளையவர்கள்
வயற்சேரி சி-பிச்சவேளாரவர்கள்
மிருதங்கம் மதுரை இராமுடு
தித்தி-மதுரை-இராமசாமி அய்யர்
முகவீணை கோரிப்பாளையம் சிக்கந்தர் சாயபு.

இங்ஙனம்
இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

3

உ
பரமபதிதுணை.

## மெய்யரிச்சந்திர நாடகத்தை உற்பத்திகாண்டந்துடங்கி மீட்சிகாண்டம் வரையிலும் பாடிக்கொடுக்க வேணுமென்று கேட்டுக்கொண்ட கனவான்கள்.

மதுரை புஸ்தகஷாப் எஸ். முத்தையபிள்ளையவர்கள்
மதுரை புஸ்தகஷாப் வி. என். இராகவக்கோன்
மதுரை புஸ்தகஷாப் இ. மா. கோபாலகிருஷ்ணக்கோன்

ஆரப்பாளையம்.

வெள்ளக்கண்ணுப் பிள்ளையவர்கள்
இராமலிங்கம் பிள்ளையவர்கள்
வெங்கிடாசல வேளாரவர்கள்
பா. பொன்னையா வேளாரவர்கள்

விளாங்குடி.

நாகுசேருவைகாரரவர்கள்
மொட்டைசேருவைகாரரவர்கள்
நாகமலைசேருவைகாரரவர்கள்
செண்பகவேளாரவர்கள்

விலாச்சேரி.

சுந்தரமய்யரவர்கள்
கர்ணம்-பெரியசாமியா பிள்ளையவர்கள்
முத்துராமநாயுடு அவர்கள்
அ - பெரியவீரவாசாயபு அவர்கள்
வீரபத்திர ஆசாரியவர்கள்
கருப்பண வேளாரவர்கள்
முனியாண்டி வேளாரவர்கள்
கந்தசாமி வேளாரவர்கள்
வெள்ளைய வேளாரவர்கள்
பெரியகருப்ப வேளாரவர்கள்
இருளப்ப வேளாரவர்கள்
சக்கரை வேளாரவர்கள்
கருப்பண வேளாரவர்கள்

அலங்காநல்லூர்.

வித்வான் பெரிய கங்கையண்ணாவியவர்கள்,
கிராமமுன்சீபு சொக்கயநாயக்கரவர்கள்
சுப்பா நாயக்கரவர்கள்
குமாருசாமி நாயக்கரவர்கள்
வேணுசேருவைகாரரவர்கள்
வெங்கிடசாமி ஆசாரியவர்கள்

முதுகுளத்தூர்.

பெத்தையா பிள்ளையவர்கள்
நாயனுநாயுடு அவர்கள்
கருப்பையா வேளாரவர்கள்
கருப்பணப் புலவரவர்கள்
முனிசாமிநாயுடு அவர்கள்
உலகநாதப் புலவரவர்கள்
கோமாளி உடையாத் தேவரவர்கள்
தையற்கடை சாயபு அவர்கள்
நாகலிங்கபண்டிதன்
பிச்சைபண்டிதன்

திருப்புவனம்.

இராமய்யா பிள்ளையவர்கள்
நாகலிங்கம் பிள்ளையவர்கள்
சுப்பிரமணிய பிள்ளையவர்கள்
சண்முகசுந்தரம் பிள்ளையவர்கள்
சுப்பையா பிள்ளையவர்கள்
கட்டையன் சேருவையவர்கள்
குருசாமி சேருவையவர்கள்
பெரியய்யா சேருவையவர்கள்
பாலகுருசாமி பிள்ளையவர்கள்
புதூர் பழனியாண்டிசேருவையவர்கள்
ஷை நாராயணபிள்ளையவர்கள்.

செங்கோட்டை.

வெள்ளைச்சாமியாபிள்ளையவர்கள்
பொன்னையாபிள்ளையவர்கள்
வேலுப்பிள்ளையவர்கள்
சோலையப்பபிள்ளையவர்கள்
சங்கரலிங்கநாயக்கரவர்கள்
குப்பமுத்துநாயக்கரவர்கள்
முத்துத்தேவரவர்கள்

ஏறுதிக்கோட்டை.

சு. முத்துச்சாமிபிள்ளையவர்கள்
ஆ. வாலசுப்பிரமணியபிள்ளையவர்கள்
க. நாகலிங்கம்பிள்ளையவர்கள்
க. உலகநாதபிள்ளையவர்கள்
மு. சாமிநாதபிள்ளையவர்கள்
சூரசங்குத்தேவரவர்கள்
உடையாத்தேவரவர்கள்
சுப்பையாத்தேவரவர்கள்

பலகிராமத்தோர்கள்.

வேதியரேந்தல் மேஸ்திரி வீரபத்திரபிள்ளையவர்கள்
ஷை யூர் கருப்பண அம்பலகாரவர்கள்
மானாமதுரை உபாத்தியாயர் மாணிக்கம்பிள்ளையவர்கள்
ஷை யூர் சாமிநாதஅய்யரவர்கள்
ஷை யூர் கெஞ்சின்-பமு. முத்துசெட்டியாரவர்கள்
பேரையூர் கலியாணசுந்தரமாசாரியவர்கள்
சாக்கொளம் நாகுத்தேவரவர்கள்
ஆப்பனூர் உடையணத்தேவரவர்கள்
சோனைப்பிரியான்கோட்டை. காயாம்புபிள்ளையவர்கள்
அகத்தாபட்டி நா. இராமசாமித்தேவர்கள்
வத்திராயிருப்பு அ. மு பாண்டியம்பிள்ளையவர்கள்
ஷை யூர் கருப்பணத்தேவரவர்கள்
மம்முசாபுரம். மாட்டுவைத்தியம் ஆகாசக்கோனாரவர்கள்

இங்ஙனம்

இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை

உ

பரமபதிதுணை.

## மெய்யரிச்சந்திரநாடகத்தை அச்சிட்டுத் தரவேணுமென்று கேட்டுக்கொண்ட கனவான்கள்.

மதுரை வடக்குமாசிவீதி இராமாயணச்சாவடித்தெருவு
பஜனைமடத்தைச் சேர்ந்தவர்கள்.

பஜனைமடம்-ஏஜண்டு, இருளப்பக்கோனரவர்கள்
தண்ணீர்பந்தல் அழகராஜக்கோனர்
சுப்பிரமணியக்கோனர்மகன் தெக்ஷணாமூர்த்திக்கோனர்
மாக்கடைக் கருப்பணக்கோனர்மகன் இருளப்பக்கோனர்
ஏழுமலைக்கோனர்மகன் சடையக்கோனர்
உதிரக்கோனர்மகன் ஆழிக்கக்கோனர்
குமாரவேல்க்கோனர்மகன் இருளப்பக்கோனர்
ஆழிக்கோனர்மகன் அழகராஜக்கோனர்
டை யார்தம்பி இராமசாமிக்கோனர்
கொ, நல்லமாடக்கோனர்மகன் இருளப்பக்கோனர்
காந்திமதிக்கோனர்மகன் இருளப்பக்கோனர்
இராமக்கோனர்மகன் வன்னியக்கோனர்
சி, முருகக்கோனர்மகன் கறைமுருகக்கோனர்
அக்கினிமாடக்கோனர்மகன் அக்கினிமாடக்கோனர்
அ, வன்னியக்கோனர்மகன் வன்னியக்கோனர்.

இப்படிக்கு
இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதிதுணை.

## மெய்யரிச்சந்திரநாடகத்தை அரங்கேத்தும்படிசெய்த கனவான்கள்.

மதுரைவடக்கு மாசிவீதி இராமாயணச்சாவடி கிழக்குதெரு
பஜனைமடத்தைச் சேர்ந்தவர்கள்.

பஜனைமடம்ஏஜண்டு இருளப்பக்கோனர்மகன் பொன்னுசாமிக்
நாடகஏஜண்டு மீனாக்ஷிசுந்தரக்கோனர் [கோன்
தெய்வேந்திரக்கோனர்மகன் தெய்வேந்திரக்கோனர்
கோட்டம்இராமக்கோனர்மகன் கோதண்டராமக்கோனர்
வெ, தம்மக்கோனர்மகன் மீனாக்ஷிக்கோனர்
செல்லப்பக்கோனர்மகன் அழகப்பக்கோனர்
நாகலிங்கக்கோனர்மகன் இராமசாமிக்கோனர்
சிவனாண்டிக்கோனர்மகன் மேகக்கோனர்
அருதக்கோனர்மகன் சப்பாணிக்கோனர்
பாகவதக்கிஷ்ணக்கோனர்மகன் முருகக்கோனர்
ராம, பெரியசாமிக்கோனர்மகன் பெரியசாமிக்கோனர்
கோட்டையக்கோனர்மகன் வெட்சமணக்கோனர்
கிருஷ்ணக்கோனர்மகன் பொன்னுச்சாமிக்கோனர்
த, வன்னியக்கோனர்மகன் சடைமுத்துக்கோனர்
பட்டி, பரமசிவக்கோனர்மகன் வெள்ளைச்சாமிக்கோனர்
சுந்தரராஜக்கோனர்மகன் தெய்வேந்திரக்கோனர்
மொட்டக்கோபுரத்தெரு சுந்தரம்பிள்ளையவர்கள்
பூ, ரெங்கசாமிபிள்ளையவர்கள்மகன் சுந்தரம்பிள்ளையவர்கள்

இப்படிக்கு
இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதிதுணை.

## மெய்யரிச்சந்திர நாடகத்தை பாடுவதற்கு உதவிசெய்த கனவான்கள்.

மதுரைவடக்கு மாசிவீதி இராக்கப்பன் சாவடித்தெரு.

சின்னக்கண்ணு சேருவைகாரரவர்கள்
கணபதி சேருவைகாரரவர்கள்
பெரியசாமி சேருவைகாரரவர்கள்
குருநாதன் சேருவைகாரரவர்கள்
குப்புச்சாமி சேருவைகாரரவர்கள்
முத்தயச்சாமி சேருவைகாரரவர்கள்
முத்துக்கிருஷ்ணன் சேருவைகாரரவர்கள்
காமாக்ஷி சேருவைகாரரவர்கள்
நாகமலை சேருவைகாரரவர்கள்
பொன்னழகுக் கோனாரவர்கள்
மூக்கபிள்ளையவர்கள்

தல்லாகுளம்.

கோபாலய்யங்காரவர்கள்
இராஜபார்ட்டு ஆலடிமுதலியாரவர்கள்
இராஜபார்ட்டு பண்டாரமுதலியாரவர்கள்
இராஜபார்ட்டு நாராயணசாமிநாயுடு அவர்கள்
முத்திருளாண்டி வாத்தியாரவர்கள்
குமாரமுதலியாரவர்கள்
அழகர்முதலியாரவர்கள்

இப்படிக்கு
இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதிதுணை.

## மெய்யரிச்சந்திர நாடகத்தைப்பாடியாடி தனித்தனியாய் அவாளவாள் செட்டுடன் நாடகம் நடத்தக்கூடிய கனவான்கள்.

| | |
|---|---|
| இராஜபார்ட்டு | முதுகுளத்தூர்சாமியய்யா ஆசாரியவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் கருப்பணப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | பாம்பக்குடி பொன்னையாபிள்ளையவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் சம்மர்தம்பிள்ளையவர்கள் |
| இராஜபார்ட்டு. | மானுமதுரை மதுரைவீரஆசாரியவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் அய்யாச்சாமியாசாரியவர்கள் |
| இராஜபார்ட்டு. | லாடனேந்தல் திருஞானசம்மந்தம்பிள்ளையவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷை பாலகுருசாமியாபிள்ளை |
| இராஜபார்ட்டு. | ஏனாதி தன்னகுட்டிஅம்பலம் |
| ஸ்ரீபார்ட்டு. | வடக்கம்பட்டி சங்கரலிங்கரெட்டியாரவர்கள் |
| இராஜபார்ட்டு. | பெருங்கருணை முத்துப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | பார்த்திபனூர் வெள்ளைப்பிச்சைவேளாரவர்கள் |
| இராஜபார்ட்டு. | ஆ. தி. மூக்கவேளாரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | திருவாடானை துரைச்சாமிசேருவைகாரரவர்கள் |
| இராஜபார்ட்டு. | பிரமனூர் மீனாக்ஷிசுந்தரம்பிள்ளையவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | மதுரை-பெ வீராச்சாமிநாயுடுஅவர்கள் |
| இராஜபார்ட்டு. | மருதங்குடி சுப்பிரமணியத்தேவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் வெள்ளையத்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | வீரபாண்டி வன்னியக்கோனாரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | சோழவந்தான் சிதம்பரம்பிள்ளையவர்கள் |
| இராஜபார்ட்டு. | சமையநல்லூர் மகாலிங்கம்பிள்ளையவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | காமாக்ஷிபுரம் இராமோஜிருவ்அவர்கள் |
| இராஜபார்ட்டு. | சக்குடி சின்னையாவேளாரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | வடபட்டி சுப்பையாத்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | உன்னிபட்டி முதலாளிசங்கரலிங்கரெட்டியாரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | மாடக்குளம் மூக்கவேளாரவர்கள் |
| இராஜபார்ட்டு. | கள்ளிக்குடி சிவநாராயணப்புலவரவர்கள் |

| | |
|---|---|
| ஸ்ரீபார்ட்டு. | பரம்பக்குடி இரத்தினபிள்ளையவர்கள் |
| இராஜபார்ட்டு. | சொரிக்குளந் தம்புச்சாமித்தேவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | வட்டபட்டி இராமசாமித்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | மதுரை கோனூரென்றசுப்பராயக்கோன் |
| ஸ்ரீபார்ட்டு. | வெள்ளியக்குண்டம் அய்யாவுக்கவண்டர் |
| இராஜபார்ட்டு. | பரவை கோட்டைவாசல்சேருவைகாரர் |
| ஸ்ரீபார்ட்டு. | பிரான்மலை வடிவேலாசாரியவர்கள் |
| இராஜபார்ட்டு. | மதுரை சாமிக்கண்ணுப்பிள்ளையவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷை சு. செல்லையாபிள்ளையவர்கள் |
| இராஜபார்ட்டு. | மாடக்குளம் பெரியசாமிஅம்பலகாரரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | திருப்பூவணம் காயாம்புசேருவைகாரரவர்கள் |
| இராஜபார்ட்டு. | நகரம் முத்துச்சாமிப்புலவரவர்கள்குமாரரும் சிறந்தவித்வானுமாகிய கந்தசாமிப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஈராட்சி கண்ணுப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | நகரம் சுந்தரப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | கள்ளிக்குடி கருப்பையாக்கோனூரவர்கள் |
| இராஜபார்ட்டு. | வடகரை குருசாமித்தேவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | எழாயிரம் பண்ணைசின்னப்பத்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | கயிலாசபுரம் கருப்பசாமிவாத்தியாரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | குதிரைக்குளம் பேசிமுத்துத்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | மலையடிக்குறிச்சி அருணாசலப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | சோலைகிரி கருப்பையாபிள்ளையவர்கள் |
| இராஜபார்ட்டு. | மலையடிக்குறிச்சி பழனிப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | புளியங்குடி வெள்ளையப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | கருவை நல்லூர்குருசாமி |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் முத்துச்சாமிப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | வில்வமரத்துபட்டி சண்முகரெட்டியாரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | சிவஞானபுரம் சின்னச்சாமிஆசாரியவர்கள் |
| இராஜபார்ட்டு. | மண்டலமாணிக்கம் கிருஷ்ணப்பத்தேவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | நன்சியூர் கருப்பையாப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | சிவகிரி கந்தசாமிப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | வயலி பழனிப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | சிவக்கொளம் சிதம்பரப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷை யூர் மருதய்யாப்புலவரவர்கள் |



| | |
|---|---|
| இராஜபார்ட்டு. | செட்டிகுளம் இராமலிங்கப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | மங்கலம் முத்துச்சாமிக்கவண்டரவர்கள் |
| இராஜபார்ட்டு. | கட்டாரக்குளம் முத்தையாமணியகாரரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷை யூர் செல்லையாமணியகாரரவர்கள் |
| இராஜபார்ட்டு. | வீரவநல்லூர் இராமசாமிப்புலவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷை யூர் பட்டணபுலவர் |
| இராஜபார்ட்டு. | கோசகுண்டு நாராயணநாடார் |
| ஸ்ரீபார்ட்டு. | கரையான்பட்டி முத்துப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | தேவராயன்பட்டி சின்னச்சாமியாசாரியவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | இராஜபாளையம் சின்னையா |
| இராஜபார்ட்டு. | நாகமலைபுதுக்கோட்டை முத்துசேருவையரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | கீழக்குடி கழுவத்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | பரம்பக்குடி சந்தானகிருஷ்ணம்பிள்ளையவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் இரத்தினம்பிள்ளையவர்கள் |
| இராஜபார்ட்டு. | எழாயிரம்பண்ணை தலைமலைத்தேவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் கண்ணுப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | ஸ்ரீவில்லிபுத்தூர் சுப்பையாபிள்ளை |
| ஸ்ரீபார்ட்டு. | எம் கருப்பையாப்புலவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | கருவனூர் சின்னவெட்டியம்பலகாரர் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் மூக்ககோனூரவர்கள் |
| இராஜபார்ட்டு. | சொரிக்குளம் நல்லதம்பித்தேவரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் சின்னக்கண்ணுத்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | ஷையூர் நாகையாநாயக்கரவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | வடபட்டி ராம தம்புச்சாமித்தேவரவர்கள் |
| இராஜபார்ட்டு. | திருப்பூவணம் நாகசாமிநாயுடுஅவர்கள் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் பாலகுருசாமியாபிள்ளை |
| இராஜபார்ட்டு. | பிள்ளையாபாளையம் அலங்காரஇராமன்செட்டியார் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் கோனேரிசெட்டியார் |
| இராஜபார்ட்டு. | ஷையூர் வரதன்செட்டியார் |
| ஸ்ரீபார்ட்டு. | ஷையூர் காயாம்புசெட்டியார் |

இப்படிக்கு,

**இ-ரா-ம-குருசாமிக்கோன்,**

புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

உ

பரமபதிதுணை.

# மெய்யரிச்சந்திரநாடகத்திற்கு

## பலபார்ட்டுக்காரர்கள்.

மந்திரிபார்ட்டு. யீராச்சி. சுப்பையாப்புலவரவர்கள்
நட்சத்திரபார்ட்டு. மருதங்குடி. சுப்பிரமணியஆசாரி
விஸ்வாமித்திரபார்ட்டு. எழாயிரம்பண்ணை அண்ணாமலைத்தேவரவர்கள்
நட்சத்திரபார்ட்டு. குருமலைக் கந்தசாமிப்புலவரவர்கள்
பாலபார்ட்டு. நள்ளியூர். முப்பிடாரிப்புலவரவர்கள்
மந்திரிபார்ட்டு. புளியங்குடி. முத்துவீரப்பக்கவிராயரவர்கள்
கோமாளிபார்ட்டு. நகரம். வேதாந்தப்புலவரவர்கள்
பாலபார்ட்டு. எழாயிரம்பண்ணை அய்யப்பத்தேவர்
கோமாளிபார்ட்டு. நள்ளியூர். சண்முகப்புலவர்
பாலபார்ட்டு. சங்கரநயினார்கோவில் முப்பிடாரிப்புலவர்
கோமளிபார்ட்டு. செயித்தலை. ஆறுமுகப்புலவரவர்கள்
விதூஷகபார்ட்டு. நடுவப்பட்டி. பொன்னையாபிள்ளை
கோமாளிபார்ட்டு. நல்லியூர். முப்பிடாரி
பலவேசஸ்ரீபார்ட்டு. மதுரை. சின்னநாய்க்கர்
இஞ்சின்பார்ட்டு. பிள்ளையார்பாளையம். வெங்கிட்டராமன்செட்டியார்
பாலபார்ட்டு. மதுரை. கந்தன்
பலவேசபார்ட்டு. பிள்ளையார்பாளையம் குஞ்சவான்செட்டியார்
நாடகஉபாத்தியாயர் ஷைகருவனூர் கருப்பணபிள்ளையவர்கள்
வெட்டியான்பார்ட்டு. ஷையூர். பெரியாம்பிள்ளை அம்பலகாரர்
விஸ்வாமித்திரர்பார்ட்டு. ஷையூர். செல்லச்சாமிக்கோனார்
சூஸ்திரதார்பார்ட்டும். நாடகஏஜண்டும். ஸ்ரீவில்லிபுத்தூரில் சாப்பாட்டுக் கடைவைத்திருக்கும் நா. வெள்ளையபிள்ளையவர்கள்.

இப்படிக்கு

**இ-ரா-ம-குருசாமிக்கோன்,**

புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

---

முருகன்துணை.

மதுரைஜில்லா முறையூர் ஸ்ரீமான்.

பழ. சி. சண்முகஞ்செட்டியாரவர்கள் சமுகவித்வான்களிலொருவராகிய

சிவகெங்கைதாலூகா படைமாற்றூர்சேகரம்

## செம்பூர். வீ. ஆறுமுகஞ்சேருவையவர்களா லியற்றிய

## சிறப்புப்பாயிரம்.

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்.

சங்குவளை வித்திலகுந்திட்டடஞ்சூழ் பண்ணைதொறு உந்தவளஞ்சார்ந்த
சங்குவனைந்தூர்வனவாச்சகுற்கொண்டு சருந்தராச்சவியாற்றங்கள்
சங்குவளையங்காதுகுழவிருளா தாவுகொடுசாலேத்தேய்மா
சங்குவளையாதுகளைகடிந்துகடைசி யருவக்குமயேற்றிநாடு. (க)

விரும்புவனதருநீகையத்தருறு மந்நாட்டின்விளக்கமென்ன
விரும்புவனக்காத்திறைய ரேத்தவுயர்சத்தியமேயிதுயத்தாக
விரும்புவனக்கருங்கலெனுஞ்சித்தமொரி இச்சுரனொளிறுமெதிர்த்திட்டாகி
விரும்புவனஞ்செதுமெனப்பின்காட்டவடித்தோட்டரிச்சந்திரனும்வேந்தே

மாதனத்திறலுயரம்மன்னவர்கொன்றய்ய வெண்டாமரையின்போதா
மாதனத்திறனுமைநன்னிறைகாக்கும் வடமீன்மன்மதனின்றேவி
மாதனத்திறவக்குமயிராணி யிவர்நாணவாய்த்தகற்பின்
மாதனத்திறவெலியர்பசிக்குஞ் சந்த்ரமதிவனயின்றேடு. (உ)

போதுமலிவிரையுமெனவாழ்ந்த பெரும்புகழ்ச்சரிதம்புதுமையாவெப்
போதுமலிறுதவணமருக்கவியாற் பொருந்தியதப்பொருளின்மாபொற் [று
போதுமலிற்பொருட்டவெனச் சிறந்தோர்க்கன்றிமற்றோர்க்குறலாற்போ
போதுமலிபரிதிகண்டதொப்பாறே யெனப்பலரும்புகலக்கேட்டு. (ங)

வருத்தமறவறிந்தார்க்குமறியார்க்கு முதவிடவண்டமிழால்வாய்ந்த
வருத்தமறவாதுமனமகிழினிய பதஞ்சேர்த்துவழுவேயில்லா
வருத்தமறமடையாதுவரும்படிசெய் சந்தவகையுநன்மை
வருத்தமறநெறிநின்றபெருங்கதையி துள்ளநனிவளங்கெடாது. (ச)

படியாருங்கேட்டவுடன்மனங்களிக்க விசைத்துமுன்னூல்பார்த்தங்குள்ள
படியாருங்குறைகூறுதிருக்க வுண்மையாயமைத்தபான்மையாலிப்
படியாருமெய்யரிச்சந்திரநாடகமென்று பெயர்பகர்ந்துபூவிற்
படியாரும்பருக்குதவும்போருதை வழங்கினன்மாயாவில்வல்லோன். (ரு)

சுந்தரமாயட்டாவதானமுஞ்செய் சூழ்ச்சியுளான்சகமதாப்பே
சுந்தரமார்ந்தான்கலைகள்பலதேர்ந்தான் ஆறுமுகனானவெம்மா
சுந்தரமாட்டானுயர்ந்தமுதுகுளத்தூர் வாசியெனச்சொலுங்கல்யாண
சுந்தரமாத்திருப்பெயரான்பல்லோரு மூவக்கவந்தசகுணமுள்ளான். (சு)

கம்பனினுஞ்சிறந்தவிவனியற்றிய மெஞ்ஞாடகத்தைக்காதிற்கேட்டோ
கம்பரிவாற்பூரித்துப்பெருமிதங்கொண்டாடி யிடையிடையேமாநா
கம்பலவுக்காசாறென்றுவதாற் காசினியாடவென்றோடு
கம்பமெனவறியாமையாற் பலருமுனைத் [illegible] நிற்பாரே. (எ)

முற்றுப்பெற்றது.

உ

பரம்பதிதுணை.

# புத்தகவிளம்பரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| தமிழ்போகராதி பதினாயிரஞ்சொற்கள் விசேஷமாய்சேர்ந்தது பி. வே. நமசிவாயமுதலியாரவர்கள்பதிப்பித்தது | ரூபா | 3 | 8 | 0 |
| பக்தவிஜயம்முதல்பாகம் சுத்தபிரிதிபடத்துடன் | ,, | 1 | 0 | 0 |
| ஷை இரண்டாம்பாகம் மூன்றும்பாகம் சுத்தபிரிதி தனித்தனி | ,, | 1 | 4 | 0 |
| அரிச்சந்திரன் ஒயிற்கும்மி முப்பிரப்புடன் | ,, | 0 | 1 | 0 |
| ஜெகன்மோகனராஜன்கதை சுத்த பிரிதி | ,, | 0 | 6 | 0 |
| காலடியார்உரை சுத்தபிரிதி | ,, | 0 | 10 | 0 |
| இராமதேவர்ரேகை படத்துடன் | ,, | 0 | 6 | 0 |
| மாந்திரகாவியம் | ,, | 0 | 12 | 0 |
| விஞ்ஞானதீபம் வசனம் | ,, | 0 | 4 | 0 |
| பிட்டுக்கு மண்சுமந்தகாதல் | ,, | 0 | 4 | 0 |
| கட்டளைக்கொத்து சுத்தபிரிதி | ,, | 0 | 8 | 0 |
| மூலிகையகராதி சுத்தபிரிதி | ,, | 0 | 12 | 0 |
| சங்கீதசுபூஷணி 1வது பாகம் | ,, | 0 | 8 | 0 |
| ஆண்பால் ரேகைசாஸ்திரம் | ,, | 0 | 8 | 0 |
| பாகவதஅம்மானை கிருஷ்ணன்பிறப்புடன் | ,, | 0 | 12 | 0 |
| காத்தவராயநாடகம் | ,, | 0 | 4 | 0 |
| ஞானக்கோர்வை இரண்டுபாகமும் | ,, | 0 | 12 | 0 |
| மாட்டுவாகடம் சக்கரத்துடன் | ,, | 0 | 12 | 0 |
| கன்மகாண்ட சாந்திதீபம் | ,, | 0 | 2 | 0 |
| கீழ்கின் நிலையறியுங்கூபசாஸ்திரம் | ,, | 0 | 4 | 0 |

இதில்கண்ட புத்தகங்களும் இன்னும் வேண்டிய புத்தகங்களும் அடியிற்கண்ட மேல்விலாசக்காரரிடம் கிரயத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம். புத்தகக்காட்டுலாக்கு தேவையாகில் அரையணாவேபில் அனுப்பினால் பெரிய கியாலாக்குஒன்று இனாமாக அனுப்பக்கூடும்.

எனது மேல்விலாசம்

இ-ரா-ம-குருசாமிக்கோன்,
புஸ்தகஷாப் புதுமண்டபம் மதுரை.

---

உ

பரம்பதிதுணை.

முதுகுளத்தூர் அஷ்டாவதான வித்வான்

மு. வ. கலியாணசுந்தரம்பிள்ளை

அவர்களாலியற்றிய

# மெய்யரிச்சந்திர நாடகம்.

விநாயகர் காப்பு வெண்பா.

சீரார் கதிர்குலத்தான் செங்கோலான் திண்புயத்தில்
தாராரு மெய்யரிச்சந்த் ரன்சரிதை—பாரதனில்
துங்கமிகு நாடகமாய்ச் சொல்ல வருள்புரியுங்
கங்கைபெற்றோன் கஞ்சக் கழல்.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஓம் கணநாதா — உயர்பிரக்யாதா
உம்பரெலாந்தொழுஞ் — செம்பொனற்பாதா (ஓம்)

அநுபல்லவி.

தேங்கமழ்மலரணி — சித்திதன்பாகா
திவ்யசொரூபாசித்தர் — தினம்பணியோகா (ஓம்)

சரணங்கள்.

பாசாங்குசதரா — பக்தர்கட்கிதனே
பஞ்சாயுதன்மருகா — பார்வதிசுதனே
தேசார்கரிமுகனே — ஜெகம்புகழ்பரனே
செந்தாமரைப்பூநிகர் — சீராலங்காரனே (ஓம்)

வல்லபைமகிழுறு — மாமணவாளா
வாசாமகோசரமாய் — மதம்பொழிகுணாளா
சொல்லுக்கரிச்சந்திரன் — சுபகதைபாட
துணையாகவந்தருள் — தொல்லுலகோர்கொண்டாட (ஓம்)





மங்களமானமுது குளத்தூர்நல்வாசன்
வாணர்முதலாகயா வர்க்குமாநேசன்
கங்கைகுலன் கல்யாணசுந்தரன்பாடுங்
கவிமாலையணிபுயக் கர்த்தனேமறைதேடும் (ஒம்)

முருகக்கடவுள் துதி விருத்தம்.

வையமெலா மோர்குடைக்கீழ்
மாண்புடன்செங் கோல்புரிந்த மன்ன னேங்கு
மெய்யரிச்சந் திரதீரன் வியன்கதையை
நாடகமாய் விளம்பச் சீரார்
செய்யதிரு மகள்மருகன் தென்குழந்தர்
புரிக்கதிபன் திகழுங் கானத்
தைய்ல்வள்ளி மணவாளன் தாமரைப்பொற்
பாதமதைத் தலைமேற் கொள்வாம்.

சிவபெருமான் துதி விருத்தம்.

விதியானைப் புரந்தவனை மேலவர்கா
ணுதற்கரிய வியன்ரு ளானை
நதியானைத் தேனொழுகு நறுங்காச்சூழ்
நான்மாடக் கூட லென்னும்
பதியானை யிருமூன்று பகையுள்ளார்
மலர்ப்பாதம் பணிந்தி டச்சம்
மதியானை மெய்யரிச்சந் திரமன்னன்
காதைசொல வணக்கஞ் செய்வாம்.

உமாதேவியார்துதி விருத்தம்.

கரும்புருவச் சிலையானைக் கமலமலர்ப்
பதத்தானைக் காட்சி யானைக்
கரும்புநிகர் வாக்கானைக் காவிவென்ற
நோக்கானைக் கற்றோர் தாம்ப
கரும்புன்மொழிக் கருள்வானைக் கவின்மிக்க
வடிவானைக் கருதி நற்பா
கரும்புகழுந் தாரகதமூர் மெய்யரிச்சந்
திரன்காதை கழறு வேனே.

திருமால் துதி விருத்தம்.

மாதங்கங் காத்தானை மலைகுடையாப்
பிடித்தானை மணித்தோ ளானை
மாதங்க முடையானை வையமெலா
முண்டுமிழ்ந்த வாயுள் ளானை
மாதங்கம் வைத்தானை மைத்துனனைக்
கொண்டானை வணங்கி யோங்கும்
மாதங்க வடிவுடையான் மெய்யரிச்சந்
திரன்சரிதை வழுத்து வேனால்.

நாமகள் துதி விருத்தம்.

பங்கயப்பூந் தவிசாளைப் பாரெல்லாம்
பூத்தாளைப் பவமில் லாளைத்
துங்கவச னத்தாளைத் துதியன்ப
ரகத்தாளைச் சோதி யாளைக்
கங்கணச்செங் கரத்தாளைக் காட்சியுற்ற
கலையாளைக் கருதி யோங்கும்
அங்கனுல கதில்யான்மெய் யரிச்சந்த்ரன்
காதைதனை யறைகு வேனே.

அவையடக்கம்.

இத்தலத்தில் மும்மதங்கொண் டிட்டமத்த
கக்களிற்றை யிசைந்தோர் காலை
கைத்தலத்திற் பூஞ்செழும்பங் கயத்தந்து
கொண்டுகட்டக் கருதல் போலச்
சத்தியமே யுருவுகொண்டான் தகைசேர்மெய்
யரிச்சந்த்ரன் சரிதை தன்னைப்
புத்தியிலாச் சிறியேன்யான் புகல்கின்றேன்
பிழையிருந்தாற் பொறுத்தாள் வீரே.



# சூஸ்திரதார்பிரவேசம்.

## சபைவணக்கம்.

ஸ்லோகம்.

ஸபாகல்பதரும்வந்தே வேதசாகோபஜீவிதம்,
சாஸ்த்ரபுஷ்பசமாயுக்தம் வித்வத்ப்ரமரசோபிதம்.

வசனம்.

நான்குவேதம், ஆறு சாஸ்திரம், பதினெண்புராணம், இருபத்தெட்டாகமம், முப்பத்திரண்டுதருமம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவம், மனுவிச்ஞான முதலிய சகலசாஸ்திர சம்பன்னராய் இவ்வரங்கினிடமாக வீற்றிருக்கும் வித்வசிகாமணிகளுக்கும் மற்றுமுள்ள சகல கனதனவான்களுக்கும் எங்கள் குருவாகிய முதுகுளத்தூர், அஷ்டாவதானி மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளை யவர்களுக்கும் அடியேன் வந்தனம் அன்புடன் தந்தனன்.

டை வசனம்.

அன்றியுங் கல்விச் செல்வர்களாகிய தங்கள்முன் யானடாத்த எத்தனித்திருக்கின்ற மெய்யரிச்சந்திரபூபதி திவ்யசரித்திரத்தில் சொற்சோர்வு பொருட்சோர்வு முதலிய எவ்விதகுற்றமிருந்தாலும் ப்ரமரமென்னும் வண்டினங்களானவை புட்பங்களிலுற்ற மதுவை எவ்வாறு க்ரகித்துக்கொள்கின்றனவோ அதுபோல் இந்நாடகமோர் கற்பகவிருக்ஷமாகவும், யானவ்விருக்ஷத்தி லுற்பவித்த புட்பமாகவும், எனது வசனசாதுர்யங்களானவை மதுரமாகவும்பாவித்து அங்கிகரிக்க வேண்டியதாய்ப் பிரார்த்திக்கின்றேன்.

டை வசனம்.

பராபரத்திற் பரந்தோன்றி, பரத்திற்சிவந்தோன்றி, சிவத்தில்சத்திதோன்றி, சத்தியில்நாதந்தோன்றி, நாதத்தில் விந்துதோன்றி, விந்துவில் சதாசிவந்தோன்றி, சதாசிவத்தில் மகேச்சுவரன் தோன்றி, மகேச்சுவரனில் ருத்திரன்தோன்றி, ருத்திரனில் விஷ்ணுதோன்றி, விஷ்ணுவில் பிர்மாதோன்றி, பிர்மாவில் ஆகாயந்தோன்றி, ஆகாயத்தில் வாயுதோன்றி, வாயுவில் தேயுதோன்றி தேயுவில் அப்புதோன்றி, அப்புவில் பிரிதிவுதோன்றி, பிரிதிவில் அன்னந்தோன்றி, அன்னத்தில் நரமிருகபட்சி தாவரங்களெல்லாமுண்டாயின.



டை வசனம்.

இத்யாதி காரணவழியால் ப்ரதமசிருஷ்டியில் தோன்றின நரரென்ற மானிடர்களுக்குச் சிவபெருமானால் ஏற்படுத்திய பாஷை யாவது (அங்கம், அருணம், கலிங்கம், கௌசிகம், காம்போசம், கொங்கணம், கோசலம், சாவகம், சிங்களம், சிந்து, சீனம், சோனகம், திராவிடம், துளுவம், பப்பரம், மகதம், மராட்டம், வங்கம்) என்று கூறப்பட்ட பதினெட்டு, அதில் திராவிடமென்ற செந்தமிழ்ப்பாஷை மிகவும் மேன்மையுடையது. அப்பாஷை விசேடமாகவழங்கிவரும் எல்லைகள் கீழ்திக்கில் சமுத்திரம்வரையும் தென்திக்கில் கன்னியாகுமரிவரையும் மேற்றிக்கில் குடகாடுவரையும் வடதிக்கில் திருவேங்கடம்வரையுமாம். மற்றும் அச்செந்தமிழானது இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத்தமிழென்ற மூன்று பிரிவையுடையது இதில் இயற்றமிழென்பது வசனம்; இசைத்தமிழென்பது செய்யுள், நாடகத்தமிழென்பது வசனம், செய்யுள், சந்தங்களடங்கியவைகள் இதில் நாடகத்தமிழுக்கேற்பட்ட ஸ்தாயீபாவகுணம் ஒன்பதாகிய சிங்காரம், வீரியம், இரௌத்திரம், பெருநகை, கருணை, குற்சை, அற்புதம், சாந்தம், பயம், என்று சொல்லப்பட்ட நவரசம் ஆனதால் மேற்கூறிய நவரசங்களும் வழுவாது இவ்வரங்கினிடமாக யானேற்படுத்தியிருக்கிற மெய்யரிச் சந்திரபூபதியின் திவ்யசரித்திரமாகிய இந்நாடகமானது எவ்வித விக்கினமுமின்றி முடியும்பொருட்டாக எனது வழிபடுகடவுளான விநாயகக்கடவுளைத் துதிக்கச்செல்கின்றேன்.

---

## சூஸ்திரதாருக்கும் விதூஷகனுக்கும் தர்க்கம்.

சூஸ்திரதார் வசனம்.

ஆ! ஈதென்ன ஆச்சரியம்? யானோ சர்வஜனங்களுஞ் சூழ்ந்திருக்கின்ற இவ்வரங்க சபையினிடத்திற் சிவபெருமான் ப்ரதமபுத்திரராகிய கணநாதரை ஸ்தோத்திரஞ் செய்யப்போந் தருணத்தில் யாரோ ஒருவன் ஆங்கிலேய ஆடவர்களைப்போல் தலையில்தொப்பி வைத்துக்கொண்டு என்முன்னம் ப்ராப்தமாயிருக்கின்றான் இவனை யாரென்று விசாரிக்கின்றேன் அடா நீயார்?

ஷை வசனம்.

ஈதென்ன விபரீதமாயிருக்கிறது இவனை யாரென்று விசாரிக்கமறுமொழிபுகலாது மௌனியாயிருக்கின்றான் நல்லது இன்னும் பக்கத்திற்போய் விசாரிக்கின்றேன்.

ஷை வசனம்.

அடா! நீயாவன்? நான்கேட்பதற்குப் பதிலுரைக்காமலிருக்கிற காரணமென்ன? சீக்கிரஞ்சொல்வாயாக.

விதூஷகன் வசனம்.

ஓய் உல்லாசமாக இடையில் பட்டுக்கரைவேஸ்டி மடிவைத்துக்கட்டியும் மார்பு, முதுகு, கைகள் இந்த அவயவங்களை மறைக்கக்கூடிய ஆள்முழுங்கிகளைப் போட்டுக்கொண்டும் தலையில் வட்டக்கொட்டானை வைத்தும் இவ்விடம் ப்ராப்தமாயிருக்கின்றீரே தாம் யாவர்? தமது பெயரென்ன?

(சூஸ்-வ-ம்) சபாஷ் நாடகத்துக்கேற்பட்டது நவரசம் அதில் அ[illegible] [illegible] உல்லாசத்தைக் கொடுக்கக்கூடியது (பெருநகை) என்ற ஆ[illegible]யரசம். இந்நாடகத்தில் அவ்வித ஆஸ்யரசத்துக்காக [illegible]ருஷன் குறைவாக இருப்பதால் இவனுடன் வாதாடாது இனியவசனங்கூறி இன்னவனைக் கைவசப்படுத்திக் கொள்கிறேன்.

ஷை வசனம்.

மித்திரா? எனது நாமதேயம் நாடகலங்காரச் சூஸ்திரதாரென்று சொல்வார்கள்.

(விது-வ-ம்.) ஓய் இதென்ன விபரீதம் ப்ரதமத்திலேயே சந்தேகத்தைக் கொண்டுவந்து விட்டீரே.

(சூஸ்-வ-ம்.) மித்திரா? என்னகாரணம்?

(விதூ-வ-ம்.) ஓய் சூஸ்திரமென்றால் (கருவி) தார் என்பது (மாலை) இரண்டுவார்த்தையையும் ஒன்றாகச்சேர்த்து வாசித்தால் (கருவிமாலை) என்றாகும், இதற்கருத்தம் உலகத்திற்குத் துணைக்காரணமாகிய மாலையென்பதே தாம் இவ்வுலகத்திற்கு எவ்விதத் துணைக்காரணமாலையாக ஏற்பட்டிருக்கிறீர்? சீக்கிரஞ் சொல்லும் பார்ப்போம்.



(சூஸ்-வ-ம்) நண்பா? நீ நவில்கின்ற ஆஸ்யரச வார்த்தைகளைக்கேட்கக்கேட்க எனது அவயவங்களெல்லாம் புளகாங்கிதங் கொள்கின்றது உனது நாமதேயத்தைச் சொல்வாயாக.

(விதூ-வ-ம்.) ஓய் சூஸ்திரதார் தாம் பிரதமத்தில் என்னையாரென்று வினவப் பதிற்சொல்வதற்குள்ளாகவே என்னடாமவுனமாயிருக்கின்றாய் சீக்கிரத்திற் பதிற்சொல்லென்று கேட்டீரே அப்படிக்கிருக்க யான் தற்சமயம் கேட்கும் கேள்விகளுக்குப் பதிற்சொல்லாது உனது நாமதேயம்யாது என்று கேட்கின்றீரே? உமக்குக் காதென்னசெவிடா? அப்படியானாற் சீக்கிரஞ்சொல்லும் வைத்தியசாலைக்குச் சென்று வைத்தியரைக் கூட்டி வருகிறேன்.

(சூஸ்-வ-ம்.) அடா துஷ்டா? வீணாக என்னுடன் குதர்க்கவாதஞ்செய்யாது விரைவில் உனது நாமதேயத்தைத் தெரிவிப்பாய்.

(விதூ-வ-ம்.) சபாஷ்? சூஸ்திரதார்வாதத்திலும் குதர்க்கவாதமென்று ஒன்றிருக்கிறதென்பதைத் தற்சமயம் உம்மால்தான், தெரிந்தேன் கோபங் கொள்ள வேண்டாம் எனது நாமதேயம் (விறகு.)

(சூஸ்-வ-ம்) என்னடா? உனது பெயரைச் சொல்லென்றால விறகென்று நவில்கின்றாய்.

(விதூ-வ-ம்) கட்டுவிறகு.

(சூஸ்-வ-ம்) என்னடாகட்டு?

(விதூ-வ-ம்) திசைக்கட்டு, நன்றிமறந்தவன் தலையில்வைப்பேன்குட்டு, யாருடனேயும் கெட்டுவேன்மறக்கட்டு, நெத்தியின்மத்தியிற் போடுவேன்பொட்டு, சண்டப்ரசண்டமாய் தொடுக்காதே அணைக்கட்டு, அதுவெரும்பகட்டு, இனிப்பதுவெல்லவட்டு, தோளிற்போடுவதுவல்லவட்டு, ஈதெல்லாம் ஒருமெட்டு, எதுவோசொல்வினையென்றெண்ணாதே என்னைப்பார் எறிட்டு.

(சூஸ்-வ-ம்) என்னடா என்னைப்பார் எறிட்டென்று நவில்கின்றாய்.

(விதூ-வ-ம்) என்காதைப்பார், கண்ணைப்பார், மூக்கைப்பார், கையைப்பார், காலைப்பார், டாசைப்பார், தொப்பியைப்பார்,

யான்போசுவதைப்பார், முகத்தில் வெள்ளைமீசை கருப்பு மீசையை ப்பார் மூடாமற்பார்.

(சூஸ்-வ-ம்) என்னடா மூடாமல்?

(விதூ-வ-ம்) கண் மூடாமல்.

(சூஸ்-வ-ம்) என்னடா கண்?

(விதூ-வ-ம்) முகக்கண்.

(சூஸ்-வ-ம்) என்னடா முகம்?

(விதூ-வ-ம்) ஆறுமுகம்.

(சூஸ்-வ-ம்) என்னடா ஆறு?

(விதூ-வ-ம்) வைகையாறு, வைப்பாறு, பாம்பாறு, குண்டாறு, மலட்டாறு, முல்லையாறு, தாம்பிரபரணியாறு, பொருனையாறு, காவேரியாறு, கோட்டாறு, குமரியாறு, உப்பாறு, சாராறு, மூவாறு, நாலாறு, பத்தாறு, போனாரு, வந்தாரு, இருந்தாரு, எழுந்தாரு, நீயாரு, நானாரு.

(சூஸ்-வ-ம்) என்னடா நானாரு?

(விதூ-வ-ம்) ஊருக்குப் போனாரு.

(சூஸ்-வ-ம்) என்னடா ஊர்?

(விதூ-வ-ம்) முதுகுளத்தூர், இளங்குளத்தூர், விளத்தூர், குளத்தூர், களத்தூர், காக்கூர், தேக்கூர், கானூர், கல்லூர், மணலூர், மறையூர், மாத்தூர், சேத்தூர், திண்டூர், சிலையூர், சின்னமனூர், திருச்செந்தூர், பார்த்திபனூர், பள்ளத்தூர், பருத்தியூர், அரப்பூர், அலங்கானூர், அபிலானூர், ஆதனூர், ஆப்பனூர், ஆலத்தூர், ஆயூர், ஆத்தூர், கன்னனூர், நானூர், நல்லூர், காட்டூர், கோட்டூர், திருப்புத்தூர், திருக்கோட்டியூர், கொடுமளூர், வரிசையூர், புலியூர், எலியூர், தேனூர், குன்னத்தூர், உப்பத்தூர், வேடன் செந்தூர்.

(சூஸ்-வ-ம்) என்னடா? வேடன்.

(விதூ-வ-ம்) மலைவேடன்.

(சூஸ்-வ-ம்) என்னடா? மலை.



(விதூ-வ-ம்) வெள்ளிமலை, கிராசிமலை, பொதிகைமலை, பழனிமலை, அண்ணாமலை, பசுமலை, நாகமலை, யானைமலை, அழகமலை, குருமலை, சிறுமலை, பெருமலை, மேருமலை, இமயமலை, விமலை.

(சூஸ்-வ-ம்) என்னடா விமலை?

(விதூ-வ-ம்) அரன்பாகத்துற்றவள்விமலை.

(சூஸ்-வ-ம்) என்னடா உற்றவள்?

(விதூ-வ-ம்) வாழ்வுற்றவள்.

(சூஸ்-வ-ம்) என்னடா வாழ்வு?

(விதூ-வ-ம்) உன்னதவாழ்வு.

(சூஸ்-வ-ம்) என்னடா உன்னதம்?

(வி-வ-ம்) ஏய் சூஸ்திரதார்? இப்பாண்டியநாட்டின்கண் எனக்குத் தெரிந்த வித்வான்களாகிய சோளவந்தான், பஞ்சவிலக்கண வித்துவான் சண்முகம்பிள்ளை, (வேம்பத்தூர், சிலேடைப் புலிபிச் சுவையர், (கொட்டாம்பட்டி) எம் கருப்பையாப்பாவலர், (முதுகுளத்தூர்) சித்திரகவி, எம், தெய்வநாயகம்பிள்ளை, ஷையூர் நிமிஷகவி ஆறுமுகம்பிள்ளை; மதுரகவி சுப்பையாபிள்ளை, ஆசுகவி சிதம்பரஞ்செட்டியார், அரு. சுப்பிரமணியபிள்ளை, பொன்னுசாமிபிள்ளை, சி. வ. முனியாண்டிபிள்ளை, பூலாறுசாமிபிள்ளை, சிதம்பரம்பிள்ளை, ரி யநாராயணபிள்ளை, சிவப்பிரகாசம்பிள்ளை; மாடசாமி செட்டியார், (வெண்கலக்குறிச்சி) முனியசாமிபிள்ளை, (கடலாடி) துரைச்சிங்கம்பிள்ளை, (பொந்தம்புளி) விஜயராமலிங்கத்தேவர், (முத்துச்செல்லையாபுரம்) சங்குமுத்துப்பிள்ளை, (ஏனாதி) வேலாயுதம்பிள்ளை, (பரம்பக்குடி) சொக்குப்பிள்ளை, சுந்தரமாணிக்கம்பிள்ளை, சைவத்துறையாபிள்ளை, சாமிநாதபிள்ளை, (ஆலங்குளம்) சேதுமாதவம்பிள்ளை, (காரக்குடி) கனகசபாபதிபிள்ளை, (சிவகெங்கை) வில்லியப்பபிள்ளை, முத்துக்கிர்ஷ்ணபிள்ளை, பஞ்சாட்சரம்பிள்ளை, (பிரமனூர்) வெங்கிடபதிஐயர், (ஆலாத்தூர்) வெள்ளைச்சாமித்தேவர் (அலங்கானூர்) பெரியகங்கைஅண்ணாவி, (சோளவந்தான்) இராமுபிள்ளை; (பார்த்திபனூர்) சங்கிலியாபிள்ளை, (மதுரைமாநகர்) பொன்னுசாமிபிள்ளை, இராமலிங்கம்பிள்ளை, வேலுச்சாமிபிள்ளை, திருமலைப்பிள்ளை, சடையபிள்ளை, திருச்சி சுப்பாமய்யர், லெட்சுமணையர், முத்தழகுபாரதி, (இராமநாதபுரஞ் சமஸ்தானத்தைச் சேர்

ந்த தென்குழந்தாபுரியென்ற முதுகுளத்தூரிலிருந்துவந்து திருவாலவாய்க்ஷேத்திரத்தில் வசிக்கும் எங்கள்குருவாகிய மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளை யவர்கள் மாணாக்கர்களாகிய சுப்பிரமணியய்யர் கோபாலய்யங்கார் சேகலிசாய்பு இவர்கள்பாடுகிற பாடல்களை உன்னதம்.

(சூஸ்-வ-ம்.) என்னடா பாடல்?

(விது-வ-ம்.) விருத்தப்பாடல்.

(சூஸ்-வ-ம்.) என்டா விருத்தம்?

(விது-வ-ம்.) சொல்வேன் விருத்தம்.

(சூஸ்-வ-ம்.) என்னடா சொல்வேன்?

(விது-வ-ம்.) பட்டியின்விபரஞ் சொல்வேன்.

(சூஸ்-வ-ம்.) என்னடா பட்டி?

(விது-வ-ம்.) புங்கமரத்துப்பட்டி, புதுப்பட்டி, புளியம்பட்டி, பொம்மக்காபட்டி, கல்லுப்பட்டி, காட்டுப்பட்டி, கைலாசப்பட்டி, கருக்காம்பட்டி, கணக்கன்பட்டி, காமக்காபட்டி, கட்டையன்பட்டி, கம்மாளப்பட்டி, கருவேலம்பட்டி, சுத்தாளம்பட்டி, கவண்டன்பட்டி, சுரிசப்பட்டி, விருதுக்கப்பட்டி, விளாம்பட்டி, வேங்கைப்பட்டி, மேட்டுப்பட்டி, மேலப்பட்டி, சிட்டம்பட்டி, சிருநாய்க்கம்பட்டி, செட்டியார்பட்டி, சிறுக்கார்பட்டி, தேவதானப்பட்டி, சேதுபட்டி, செம்மாபட்டி, சிவன்பட்டி, சித்தன்பட்டி, செக்காம்பட்டி, வாடிப்பட்டி, வல்லாளபட்டி, வடக்கம்பட்டி, வண்ணாரப்பட்டி, வள்ளம்பட்டி, வாணியன்பட்டி, வடுகபட்டி, மாக்கம்பட்டி, மகப்பட்டி, சங்கம்பட்டி, தவண்டன்பட்டி, வரல்பட்டி, பாளையம்பட்டி, உச்சிப்பட்டி, உசிலம்பட்டி, உளத்துப்பட்டி, டளாரளிபட்டி, உலகம்பட்டி, தொட்டியபட்டி, பொய்யைக்கரைப்பட்டி, கோவில்பட்டி, கோடாங்கிபட்டி, கோமாளிபட்டி, தாதன்பட்டி,

(சூஸ்-வ-ம்.) என்னடா தாதன்?

(விது-வ-ம்.) மூதேவித்தாதன்.

(சூஸ்-வ-ம்.) என்னடா மூதேவி?

(விது-வ-ம்.) குருநிந்தைசெய்வோன், அடுத்தோரைக்கெடுப்போன், சொன்னசொல் மாறிப்பேசுவோன், கட்குடிப்போன்



கைம்பெண்ணைச்சேருவோன், பொய்மொழிவோன் கொலைசெய்வோன், கோட்கவி கூறுவோன் மூதேவி.

(சூஸ்-வ-ம்.) என்னடா கவி?

(விது-வ-ம்.) விகடகவி.

(சூஸ்-வ-ம்.) என்னடாவிகடகவி?

(விது-வ-ம்.) இன்னுந்தெரியவில்லையா ஏமாளி.

எனது பெயர்தான் விகடகவி.

(சூஸ்-வ-ம்.) நண்பா ? இது என்னடா, விபரீதம், கரத்தினால் ஒருவனை மூக்கைத்தொடு என்றால் அன்னவன்நேரே மூக்கைத்தொடாது தலையைச்சுத்தி மூக்கைத்தொடுவதைப்போல யானுனது பெயரென்னவென்று வினவியதில் எது எதுவோ கூறி அப்பால் விகடகவியென்று கூறுகின்றாய்.

(விது-வ-ம்.) ஓய் சூஸ்திரதார் எனதுபெயர் விசேடம் அவளவுளேம்.

(சூஸ்-வ-ம்.) ஏ நண்பா ? உனதுபெயரில் என்னவிசேடமிருக்கிறது.

(விது-வ-ம்.) ஓய் சூஸ்திரதார் விகடகவி யென்பதைத்தலைகீழாகவாசியும் எனது பெயரிலுள்ள விசேடந்தெரியும்.

(சூஸ்-வ-ம்.) ஏமித்திரா!இதென்னடா ஆச்சரியம்? தலைகீழாக வாசித்தாலும் விகடகவியென்றே வருகிறது மெச்சினேன் இப்பெயர் உனக்கு யாவரால் சூட்டப்பட்டது.

(விது-வ-ம்.) சூஸ்திரதார் யானிப்பேர்க்கொற்ற அரங்கசபையைக்கண்ட மாத்திரத்தில் அத்யந்தசந்தோஷத்துடன் வார்த்தை புகலக்கூடியவனானதால் யான்பிறந்தன்றே எனது பேரால் சூட்டப்பட்டது.

(சூஸ்-வ-ம்.) நண்பா ? இப்பேர்க்கொற்ற அரங்கசபையைக் கண்டமாத்திரத்தில் அத்யந்தசந்தோஷத்துடன் வார்த்தை பகரக்கூடியவனென்று கூறினையே அதன்விர்த்தாந்தம் யாது.

(விது-வ-ம்.) சூஸ்திரதார் அதைக்கேளும் இதோ தெரிவிக்கிறேன்.

ஸ்லோகம்.

ககனேகர்க ரத்னானி க்ரஹாரத்னானி மூஷிகா
சயனேமட்குண ரத்னானி சபாரத்னானி விதூஷகா.

வசனம்

அதாவது காகங்களானவை ஆகாயத்திற்கழகு, பெருச்சாளிகளானவை வீட்டிற்கழகு, மூட்டைப்பூச்சிகளானவை நித்திரைக்கழகு, இப்பேர்க்கொற்ற அரங்கசபைக்கி யான்தான் அழகு. யானில்லாவிடில்ஒன்றுஞ் சோபிக்கமாட்டாது.

(சூஸ்-வ-ம்) அடா துஷ்டா என்னவார்த்தை சம்பாஷிக்கின்றனை முன்னோர்கூறிய ஸ்லோகங்களைக் கூடப்புரட்டுவதற்குத் தீர்க்கமாய்க் கற்றுக்கொண்டனைபோலுமிருக்கிறது.

ஸ்லோகம்.

ககனே நவரத்னானி க்ரஹாரத்னானி பாலகா
சயனேஸ்திரி ரத்னானி சபாரத்னானி பண்டிதஹா.

வசனம்.

அதாவது சூரியன், சந்திரன், முதலிய நவக்ரஹங்கள் ஆகாயத்திற்கழகு, பாலர்கள் வீட்டிற்கழகு, பெண்கள் சயனத்திற்கழகு, இவ்வரங்கசபைக்கு என்னைப்போலொத்த வித்துவாம்ஸாள் அழகென்ன ஸ்மிருதிகளால் கூறப்பட்டிருக்கின்றன அவ்விதமிருக்க மித்ரபேதமாக ஸ்லோகங்களைப்புரட்டிப் பொய்யான தாத்பரியஞ் செய்வதை இன்றுடன் விட்டுவிடுவாயாக.

(விது-வ-ம்) ஓய் சூஸ்திரதார்? பிறவிக்குணத்துக்கு மட்டை வைத்துக்கட்டினால் தீருமா? தீராது. ஆகையால் அஃதிருக்கட்டும் தாம் இவ்விடத்தில் ப்ராப்தமாயிருக்கிறகாரணம் என்ன எதற்காக இச்சபை சூழ்ந்திருக்கிறது இங்கு என்னவிசேடம் நடக்கப்போகின்றன?

(சூஸ்-வ-ம்) நண்பா தெரிவிக்கின்றேன் கவனிக்கவேண்டும்.

(விது-வ-ம்) கவனிக்கின்றேன் சொல்லும்பார்ப்போம்.

(சூஸ்-வ-ம்) நண்பா, மதுரை, மாயை, காஞ்சி, அவந்திகை, அயோத்தி, துவாரகை, காசி, என்றுசொல்லப்பட்ட சப்தபுரிகளிலும் மாட்சிமைதங்கிய அயோத்தியாபுரியை ஒர் குடைக்கீழ் செங்



கோல்புரிந்த இரவிகுலதிலக மெய்யரிச்சந்திரபூபதியின் திவ்யசரித்திரத்தை நாடகமாகவியற்றிய வித்வான்களெல்லாம் ஆசுகவிசிம்மமாகிய நெல்லூர் வீரக்கவிராயரவர்களியற்றிய புராணப்படி விவாககாண்டமுதல்மீட்சிகாண்டம்வரை இயற்றியிருக்கிறார்களே தவிர சகலகலைவல்லவரானகூளிகல். வெங்கடரமணமென்கிறமகாகவீஸ்வரரால் ஆந்திரபாஷையில்வெண்பாவாக இயற்றியிருக்கிற மெய்யரிச்சந்திரபூபதி ஜனன ஆத்யந்தோ பாக்யான நூலின்படி மெய்யரிச்சந்திர பூபதி ஜனனத்திலிருந்து ஒருவரும் நாடகமாக வியற்றவில்லையென்பதைத் தெரிந்ததிருவாலவாய்க்ஷேத்திரம் ஆயகுலதிலக இ. ரா. ம. குருசாமிக்கோனாரவர்களும் முன்னம் காமாக்ஷிபுரம் பெரியாம்பிள்ளை செற்றுக்கு எஜண்டாகவிருந்து தற்காலம் ஆரப்பாளையம் சுந்தரராசவேளார் செற்றுக்கு எஜண்டாக இருக்கிற இருளப்பக்கோனாரவர்களும் எங்கள்குருவாகிய முதுகுளத்தூர் அஷ்டாவதானி மு. வ. கலியாணசுந்தரம் பிள்ளையவர்களிடத்தில் வேண்ட அன்னவர் அன்னவர்கள் வேண்டுதற்கிணங்கி மேற்கூறிய மெய்யரிச்சந்திர பூபதியினுடைய ஜெனனத்திலிருந்து வீரக்கவிராயர்புராணப்படி மீட்சிகாண்டம்வரை நாடகரூபமாகவியற்றியிருப்பதை யான் இங்ஙனம் பாத்ரப் பிரவேசார்த்தமாய் நடாத்தப்போகின்றமையால் இஃதினிதாக யாதொரு விக்கினமுமின்றி முடியும்பொருட்டு எனது வழிபடு கடவுளாகிய விக்கினேச்சுரரைத் துதிக்கப் போகின்றேன். அதற்காகத் தான் இச்சபை சூழப்பட்டிருக்கிறது.

(விது-வ-ம்) ஓய் சூஸ்திரதார் என்ன நாடகம் நடத்தப்போகுதீர்.

(சூஸ்-வ-ம்) நண்பா மெய்யரிச்சந்திரநாடகம்.

(விது-வ-ம்) ஓய் சூஸ்திரதார் இஃதென்ன புதுமையாயிருக்கிறதே மெய்யரிச்சந்திர நாடகமா, இவ்வாறு எங்குங்கேட்டதில்லையே அரிச்சந்திரநாடகம் என்பதே வழக்கத்தில் அறிந்துளேன் நீர் மெய்யரிச்சந்திரநாடகம் என்று அடைகொடுத்த காரணம் யாதோ? இவ்வாறு கூறின் பொய்யரிச்சந்திரன் ஒருவன்வேண்டுமே? பிள்ளையார் குட்டுக்குட்டும்போதே கண்ணிற்குட்டினாற்போன்று நாடகத்தின் பெயர் சொல்லும்போதே இவ்வாறு கோணல்வழக்கம் கைக்கொண்டிருக்கிறீரே இனிநம்மால் நடத்தும் நாடகம் முடியும்வரை எத்தனைகோணல்கள் காணப்படுமோ இதற்

குச்சரியான விடைகொடுத்தபின்புதான் மற்றக்காரியங்களைக் கவனிப்பீர் என்று நம்புகிறேன்.

(குல-வ-ம்) நண்பனே உன்வாக்சாதுரியத்துக்கு மெச்சினேன்யான் கூறியபெயர்க்கு நியாயங்கூறுகின்றேன் சற்றே கவனித்துக்கேட்கவேண்டும் அடைமொழியென்பது இனமுள்ளதும் இனமில்லாததும் என இருவகையையுடையது பொருண்முதலாரும் அடைசேர் மொழியினம் உள்ளவும் இல்லவும் ஆம் இருவழக்கினும் என்பது சூத்திரம் இவ்விதியால் நெய்க்குடம் செந்தாமரை என இனம்பற்றிக் கூறலேயன்றியும் உப்பளம் தோய்தயிர் வெண்மதி செஞ்சூரியன் என இனமில்லாவற்றைக்கூறலும் ஆன்றோர் வழக்கேயாகும் இவ்விதியும் ஆன்றோர் ஆட்சியும்நீயும் அறிந்திருப்பாயின் குறைகூறமாட்டாய் அறியாமையாற் குறைகூறினை ஆதலின்நின்மீது சிறிதும் வருத்தங்கொள்தற்கு இடனில்லை வெண்மதியென்றால் கருமதியொன்றுண்டோ என்றுகேட்டல் பேதமைக்குணமாம் இவ்வாறுசத்தியத்தாற் சிறந்தவன் அரிச்சந்திரன் ஆதலின் மெய்யரிச்சந்திரனென்பது மிகவும் பொருத்தமானது தான் அன்றியும் இவ்வரசனிடத்து அநேக நற்குணங்களுள்ளன ஆயினும் அவற்றுளெல்லாம் தலைமைபெற்று நிற்பது சத்தியம் ஒன்றுமே என்பதைக் குறிப்பிடுதற்குச் சொன்னதாகக் கொண்டாலும் பொருந்தும் இப்போதுநீயும் ஒப்புக்கொள்வாயெனவே நினைக்கிறேன்.

(விது-வ-ம்) ஐயா போதும்போதும் முதலில் எனக்குத்தப்பிதமாகத்தான் தோற்றியது இப்போது நீர் கூறியவிதியும் உதாரணங்களும் பார்க்கும்போது சரியாகவே தோன்றுகிறது நான் அறியாமையாற் கூறியபிழையைப் பொறுத்துக்கொண்டு தயவுசெய்து நடத்தும்படி வேண்டுகிறேன்.

(குல-வ-ம்) நல்லது நீயுமென்னுடன் வந்துவிக்கினேச்சுரனை ஸ்மரிப்பாயாக.

(விது-வ-ம்) ஒய்குலதிரதார் பலாப்பழத்துக்கு ஈப்பிடித்து விடவாவேண்டும் இதோவருகின்றேன்.



## கணநாதர் ப்ரவேசம்.

வெண்பா.

திங்கட் கவிகையுள்ளான் சீரா ரரிச்சந்த்ரன்
துங்க மிருசரிதை சொல்லவே—யங்குசபா
சத்த னமல னருள்புதல்வன் வெங்கயமு
கத்தன் கமலத்தாள் காப்பு.

---

சுந்தரேசா எந்தனையாள்வாய் என்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

தும்பிமாமுகனே வந்தருள் வந்தருள்
நாயனே அன்பர்நேயனே புமைசேயனே யகஞ்
சூதிலாத தொண்டர்கள்பணி (து)

அனுபல்லவி.

ஏகாக்ஷரவடிமுடி வாழும் வாழும்
ஏகனேகனேயோகனே சித்திபாகனே யன்று
ஏனமான இறைவரின் மருகா (து)

சரணங்கள்.

அம்புவிமுதலும்பருந் துதி துதி
ஐயனேவுயர்மெய்யனே ஐந்துகையனே பர
மாதி சோதி யானவர்மகிழ் (து)

சத்தியவரிச்சந்திரன் சரிதை சரிதை
தண்டமிழினல் மண்டலந்தனில் விண்டிடவாந்
தாதா நீதா தண்மழைமதத் (து)

பாலன்கவியாண சுந்தரன் சுந்தரன்
பகர்ந்திடும்தமிழ்க் ககந்தனில்மகிழ் வுகந்திடுமலர்ப்
பாதா நீதா பண்ணவர்போற்றும் (து)



## பட்டர்வருகிற பாகம்.

விருத்தம்.

பூந்தடந்தனில்நீராடிப் பொன்னுடைகொய்துடுத்திக்
காந்திமெய்யதில்விபூதி கண்யமாயணிந்திலங்க
மாந்திரமோதியீசன் மதலையாங்கணபதிக்குச்
சாந்தமாய்ப்பூசைசெய்யச் சபைதனில்குருக்கள்வந்தார்.

---

கோவிற்பூசை செய்யவென்றமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

கணபதி பூசை செய்ய இதோ
கருத்துடன்குருக்களுந் தோன்றினரே (கண)

குணமுடன் நீராடி வேஷ்டி
கோதிலா மடிமையிற் கொய்துடுத்தி (கண)

மெய்யினில் விபூதிபூசி
வேதமோர்நான்கையு மிகவோதி (கண)

கையினிற்குடலைகொண்டு மிகு
கனிவுடனே ஜெப மந்த்ரம் விண்டு (கண)

### பட்டர் சம்பாஷணை.

(அர்ச்சகர் வசனம்) எங்காணுங் குருக்களே நாம் வைகறையிலெழுந்து ஸ்நானஞ்செய்து ஜெபதபமுடித்துத் தும்பிக்கையாழ்வாருக்கன்றோ பூசைபண்ணவந்தோம் பேசாதிருக்குறீரே நான் பூசைபண்ணட்டுமா?

குருக்கள் வசனம்.

ஏண்டா தும்பிக்கையாழ்வாரல்ல தும்பிமுக விநாயகரென்றுசொல்லடா இல்லாதவாடிக்கையெல்லாம்பண்ணுதே விக்னேஸ்வரருக்கு வைஷ்ணவாள் பூசைபண்ணலாமாடா.

அர்ச்சகர் வசனம்.

அடா சவுண்டிச்சோறுதிங்கிற பயலே வைஷ்ணவன்செய்யாத பூசை ஸ்மார்த்தனுக்குச் செய்யத்தெரியுமாடா.

குருக்கள் வசனம்.

ஏண்டா பொட்டிமகனே பொங்கலும் புளியோதரை தின்னத்தெரியுமேதவிர பூசைபண்ணத்தெரியுமாடா.

அர்ச்சகர் வசனம்.

போடா போடா சும்பப்பயலே.

குருக்கள்வசனம்.

இனிமேலுன்னைக் கோவிலுக்குள் நுழையவிட்டேண்டா.

விதூஷகன் வசனம்.

ஐயா பட்டமாருகளே நீங்களிருவருமிப்படியே ஒருவருக்கொருவர் சண்டையிட்டால் விநாயகர்பூசை நிறைவேறுவதெப்படி தேசகாலமாகுறது இதைத் தேவஸ்தானத்தார் கண்டால் தண்டிப்பார்கள் சீக்கிரமாய்ப் பூசைக்குப் பிரயத்தினஞ் செய்யுங்கள்.

(குருக்கள் வசனம்.) நான்தான் பூசைபண்ணுவேன்.

(அர்ச்சகர் வசனம்.) நான்தான் பூசைபண்ணுவேன்.

குருக்கள் வசனம்.

எங்காணும் அர்ச்சகரே இப்படிச் சண்டையிட்டால் விநாயகர் பூசை எப்படி நிறைவேறும் இரண்டுபேருஞ் சேர்ந்தே பூசை செய்வோம்.

அர்ச்சகர் வசனம்.

அப்படியானால் சரி.

பட்டமார்கள் அர்ச்சனை செய்கிற ஸ்லோகம்.

| | |
|---|---|
| ஓம் சுமுகாயநமஃ | ஓம் தூமகேதுவேநமஃ |
| ஏகதந்தாயநமஃ | கணாதியட்சாயநமஃ |
| கபிலாயநமஃ | பாலசந்திராயநமஃ |
| கஜகர்ணிகாயநமஃ | வக்ரதுண்டாயநமஃ |
| லம்போதராயநமஃ | சூர்ப்பகர்ணாயநமஃ |
| விகடாயநமஃ | ஏரம்பாயநமஃ |
| விக்நராஜாயநமஃ | ஸ்கந்தபூர்வஜாயநமஃ |
| கணாதிபாயநமஃ | ஸித்திவிநாயகாயநமஃ |

நாநாவித மந்திரபுஷ்பாணி சமர்ப்பயாமி.



குருக்கள் வசனம்.

எங்காணும் அர்ச்சகரே பூசைபண்ணியாச்சு ஆத்துக்குச்செல்லலாமில்லியோ.

அர்ச்சகர் வசனம்.

சரி வாருஞ்செல்வோம்.

---

## சூஸ்திரதார் ஸ்லோகம்.

சுக்லாம்பரதரம்விஷ்ணும் சசிவர்ணம்சதுர்புஜம்
ப்ரசன்னவதனம்த்யாயே சர்வவிக்னோபசாந்தயே
அகஜானனபத்மார்க்கம் கஜானனமகர்நிசம்
அனேகதந்தம்பக்தானும் ஏகதந்தமுபாஸ்மஹே.

சூஸ்திரதார் வசனம்.

கணநாதப்ரபோ சூஸ்திரதார் வந்தனஞ்செய்கின்றேன்.

கணேசர் வசனம்.

ஹே பாலகா கைலயங்கிரியில் மஹாமாட்சிமைதங்கிய முப்பத்துமுக்கோடி தேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷீஸ்வரர்களும், நந்தி, ப்ருங்கி, அமரர், அசுரர், சித்தர், தைத்யர், கருடர், காந்தர்வர். இயக்கர், விஞ்சையர், பூதர், பைசாசர், அந்தரர், முனிவர், உரகர், ஆகாயவாசிகள், போகபூமியர் முதலிய தெய்வகணங்களும் புடைசூழும்படியா யெனது மாதாவாகிய பர்வதராஜ புத்திரியினது வாமபாகத்தில் வீற்றிருக்குந்தருணத்தில் ஏதனையா? உனது தீனஸ்வரத்தைக்கேட்டு அகமகிழ்ந்து இவ்வரங்கின்கண் ப்ராப்தமாயினேன் உனக்கு யாதிச்சை ?

சூஸ்திரதார் வசனம்.

ஹே ப்ரபோ முன்னம் கோசலநாட்டைப் பரிபாலித்த யாதொரு திருச்சங்குபுத்திரனை மெய்யரிச்சந்திர பூபதியினது திவ்யசரித்திரத்தை இவ்வரங்கின்கண் பாத்ரப்ரவேசார்த்த நாடகரூபமாய் நடாத்தப்போகிறபடியால் அஃது யாதொரு விக்கினமுமுறாது நடக்கும்பொருட்டும் அன்றியும் நாடகபால்யர்கள் கேவலம்

அக்ஞானத்தோடு கூடியிருப்பதனல் அவ்வக்ஞானம் நீங்கி ஸ்வக்ஞானத்தோடு யாதொரு தேவகுருவாகிய வியாழ பகவானுக்குச் சமானமாகச் சம்பாஷிக்கும்படிக்கும் வரந் தந்தருள வேண்டும்.

கணேசர் வசனம்.

பாலகா அவ்விதமே வரமளித்தேன் இன்னும் ப்ரமபத்தினியாகிய வாணியை ஸ்மரிப்பாயாகில் அன்னவளுனக்குப் பூரண ஆசீர்வாதந் தந்தருள்வாள் இந்நாடகம் யாவராலியற்றியது?

சூஸ்திரதார் வசனம்.

இராமநாதபுரஞ் சமஸ்தானத்தைச்சேர்ந்த தென்குழந்தாபுரியென்ற முதுகுளத்தூரிலிருந்துவந்து மதுரைமாநகரில் வசிக்கும் அஷ்டாவதானி மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளை யவர்களாலியற்றியது.

கணேசர் வசனம்.

அன்னவர்க்கு முனக்கும் பூரணவாசீர்வாதந்தந்தேன் கைலையங்கிரிக்குச் செல்கின்றேன்.

சூஸ்திரதார் வசனம்.

ப்ரபோ வந்தனம்.

கணேசர் வசனம்.

கய்யாண் பாலகா.

## விதூஷகன் விகடப்ரசங்கம்.

(விதூ-வ-ம்) ஒய் சூஸ்திரதாரிங்கெழுந்தருளியிருப்பவரார்

(சூஸ்-வம்.) கணநாதர்.

விதூஷகன் வசனம்.

ஒய் சூஸ்திரதார் உமக்குப் படித்தும் புத்தியில்லைகாணும்.

சூஸ்திரதார் வசனம்.

அடே மூர்க்கா ஏண்டா இவ்விதஞ் சம்பாஷிக்கின்றாயை விஷயத்தைக் கூறுவாய்.



விதூஷகன் வசனம்.

ஒய் காட்டிலேதிரிகிற யானையைப் பிடித்துவந்து கட்டிவைத்துக்கொண்டு கணநாதரென்று வணங்கலாமா காணும்.

சூஸ்திரதார் வசனம்.

அடே துஷ்டா அப்படியல்ல கணநாதருடைய திருமுகமட்டும் அந்தவிதம் மற்ற அவயவங்களெல்லாம் நம்மைப்போலவேயிருக்கும் நன்றாகக் கூர்ந்துபார்.

விதூஷகன் வசனம்.

சூஸ்திரதார் முகம் ஒருமாதிரியாயும் அவயவங்களெல்லாமொருவிதமாயு மிருக்கவேண்டிய காரணமென்ன?

சூஸ்திரதார் வசனம்.

மித்திரா முன்னொருகாலத்தில் உமாதேவியாருக்குக் குடிலம் விளைத்துக்கொண்டிருந்த சிந்தூரனென்பவனைச் சங்கரிக்கும் பொருட்டு உமாதேவியார் திருவயிற்றில் விநாயகர் கர்ப்பந்தரித்திருக்குஞ்சமயம் நாரதரால் மேற்கூறிய சிந்தூரனென்பவன் தெரிந்து கைலையங்கிரியின் பக்கம்வந்து உமாதேவியார் நித்திரைசெய்யுஞ்சமயம் வாயுரூபங்கொண்டு அம்பாள் கருப்பத்திலிருந்த சிசுவைக்கழுத்தைச் சிதைத்துக்கொண்டுபோய் மற்றோரிடத்திற் போட்டுவிடப் பின்னர் சிலதினத்திற்கப்பால் விநாயகர் கழுத்தில்லாதவுருவமாயுற்பவித்து அக்கைலையங்கிரியி லிடமாயுற்ற கஜமுகாசூரனுடைய சிரசை சிவபெருமானுலளித்து கஜானனனெனப் பெயர் பெற்றனர் தெரிந்து கொண்டையா.

விதூஷகன் வசனம்.

ஒய் சூஸ்திரதார் அப்படியானால் யான்போய் வணங்கும்விஷயத்தில் எனக்கு வேண்டியவரங் கொடுத்தருள்வாரா?

(சூஸ்-வ-ம்) கொடுத்தருள்வார்.

(விதூ-வ-ம்) தேவா வந்தனம்புரிகின்றேன்.

கணேசர் வசனம்.

கல்யாண் நீயாவன்.

விதூஷகன் வசனம்.

யானின்னுடகத்தை பிரமிக்கச்செய்யும் விதூஷகன்.

கணேசர் வசனம்.

உனக்கு யாதிச்சை?

விதூஷகன் வசனம்.

ப்ரபோ தமது க்ருபையாலெனக்குச் சகல ஐஸ்வரியங்களுமி ருக்கின்றன ஆகினும் ஓர் காரணத்தால் தம்மிடம்வரலாயிற்று.

கணேசர் வசனம்,

அதுயாது?

விதூஷகன் வசனம்.

எனதில்லாளானவள் அரிசிபுடைக்க முறமில்லாதவஸ்தையடைகின்றுளாதலின் தமதங்கத்திலுற்ற செவியென்னு முறத்தைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றேன்.

கணேசர் வசனம்.

அடே துஷ்டா நீயென்றும் விதூஷகனுகக்கடவது.

விதூஷகன் வசனம்.

அஃதே விருப்பம்.

மேற்படி வசனம்.

சூஸ்திரதார் உமது க்ருபையால் யான் கணநாதரைஸ்மரித்து யான் பிறந்தன்றே எனதுபோனல் சூட்டப்பெற்ற விதூஷகனென்றபெயரே எக்காலத்தும் நிலைபெறும்படி வரம்பெற்றேன் இனிமேல் நடக்கும்விஷயம் யாது.

சூஸ்திரதார் வசனம்.

கணநாதர் வருதிபோலவே யாதொரு ப்ரம்மபத்தினியாகிய வாணியை ஸ்மரிக்கச் செல்கின்றேன்.

விதூஷகன் வசனம்.

அபபடியா? ஸ்மரியும் பார்ப்போம்.



## சரஸ்வதிப்ரவேசம்.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தருள்வாய்வாணி சுந்தரிகல்யாணி

அநுபல்லவி.

இந்துபோல்வதனி விந்தையாய்நிதநீ (வந்)

சரணம்.

சத்யநற்புராணி வித்தககாரணி
கொத்தார்மலர்வேணி நித்தியபூரணி (வந்

பங்கயத்தாசனி துங்கதெரிசனி
இங்கிதவசனி புங்கவன்சேர்கனி (வந்

சந்ததங்கல்யாண சுந்தரனல்வாண
ருந்துதிதாள்காண எந்தன்சிரம்பூண (வந்)

---

### சூஸ்திரதார் ஸ்லோகம்.

சரஸ்வதிநமஸ்துப்யம் வரதேகாமரூபணி
வித்யாரம்பம்கருஷ்யாமி சித்தர்பவதுமேஸதா,
பத்மபத்ரவிசாலாக்ஷி பத்மகேசரவர்ணினி
நித்யம்பத்மலயாதேவி சாமாம்பாதுசரஸ்வதி.

வசனம்.

தேவி வந்தனம் புரிகின்றேன் சூஸ்திரதார்.

சரஸ்வதி வசனம்.

ஹே வத்ஸா யானே ஸத்யலோகத்தில் சிருஷ்டி, திதி, ஸம்ஹாரம், திரோபாவம், அநுக்கிரகம் என்ற பஞ்சக்ருத்யத்தில் பிரதமமாகியசிருஷ்டிக்ருத்யத்தை வகித்த எனது பர்த்தாவாகியபிர்மாவுடைய வாமபாகத்தில் வீற்றிருந்தானந்தமாக வீணாகானம் செய்து கொண்டிருக்குந் தருணத்தில் தயா உனது தீனஸ்வரத்தைக்கேட்டு இவ்வரங்கின்கண் ப்ராப்தமாயினேன் உனக்கு யாது சங்கடம் நேரிட்டது அதனை யென்னிடந் தெரிவிப்பாயாகில் அதினின்றும் விமுக்தனாக்குகின்றேன்.



சூஸ்திரதார் வசனம்.

ஹே பத்மாசனி தனது க்ருபாகடாக்ஷ வீக்ஷண்யத்தால் யாதொருவிதமான சங்கடமும் ஏற்படவில்லை இவ்வரங்கின் கண் மெய்யரிச்சந்திரபூபதி சரித்திரத்தை பாத்ரப்ரவேசார்த்த நாடகரூபமாய் நடாத்த எத்தனித்திருக்கின்றேன். அதற்கு யாதொருவிக்கினமில்லா திருக்கும்பொருட்டும் அன்றியும் நாடகபால்யர்கள்ஸ்வக்ஞானத்துடன் பாஷிக்கவும் வரமருள வேண்டும்.

சரஸ்வதி வசனம்.

பாலகா நான் கோறியபடியே வரமளித்தேன் இந்நாடகம் எந்த இடத்தில் யாவராலியற்றியது

சூஸ்திரதார் வசனம்.

கமலாசனி இராமநாதபுரஞ் சமஸ்தானத்தைச் சேர்ந்த தென்குழந்தாபுரி யென்ற முதுகுளத்தூரிலிருந்துவந்து மதுரையம்பதியில் வசிக்கும், அஷ்டாவதானி மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளையவர்களாலியற்றியது.

சரஸ்வதி வசனம்.

வத்ஸா அன்னவருக்கு முனக்கும் பூரண ஆசீர்வாதந்தந்தேன் சத்யலோகஞ் செல்கின்றேன்.

சூஸ்திதார் வசனம்.

மாதுஸ்திரீ வந்தனம்புரிகின்றேன்

சரஸ்வதி வசனம்.

கல்யாண் பாலகா.

---

### விதூஷகன் விகடப்ரசங்கம்.

(விது-வ-ம்.) சூஸ்திரதார் இங்குப்ராப்தமா யிருக்கின்ற மாதுஸ்திரியார்.

(சூஸ்-வ-ம்.) நண்பா? ப்ரமபத்தினியாகிய நாமகள்.

(விது-வ-ம்) சூஸ்திரதார் நீர் சொல்லக்கூடிய வார்த்தைகளெல்லாம் எனக்கு ஆச்சரியமாகவே யிருக்கிறது நாமகளென்றால் தாத்பரியம் யாது.

(சூஸ்-வ-ம்) மித்திரா? சத்யலோகவாசியாகிய பிர்மாவின் நாவினிடமாகச் சதாவீற்றிருப்பதால் நாமகளென்பது தாத்பரியம்.

(விதூ-வ-ம்) சூஸ்திரதார் பிர்மாவினுடையநாவினிடமாக இமமாதாஸ்திரி சதாவீற்றிருப்பார்களாகில் மலசலமெல்லாம் கழிப்பதெப்படி?

(சூஸ்-வ-ம்) அடேதஷ்டா என்னவார்த்தை சம்பாஷிக்கின்றனை பிர்மாவின் நாவினிடமாக அட்சரரூபமாகவீற்றிருப்பார்கள்

(விதூ-வ-ம்) அப்படியா மிகவும் நல்லது யான்போய் ஸ்மாத்தாவெனக்கு வேண்டியவரங்கொடுப்பார்களா.

(சூஸ்-வ-ம்) தடையில்லை.

(விதூ-வ-ம்) மாதாஸ்திரீ வந்தனம்புரிகின்றேன்.

சரஸ்பதி வசனம்.

கல்யாண் நீயாவன்?

விதூஷகன் வசனம்.

யான் இன்னாடகத்தை யிரஞ்சிக்கச்செய்யும் விகடகவி.

சரஸ்பதி வசனம்.

உனக்கியாதிச்சை.

விதூஷகன் வசனம்.

அம்மணி எனதுபாரியாளுக்கு மூன்றுவயது குழந்தை ஒன்று, இரண்டுவயதுகுழந்தைஒன்று, ஒன்னரைவயதுக் குழந்தை ஒன்று, ஒருவயதுக்குழந்தை ஒன்று, அரைவயதுக்குழந்தை ஒன்று, ஆக ஐந்துகுழந்தைகள் இதில் மூன்றுவயதுகுழந்தை ஒன்றுதவிரமற்ற நான்குகுழந்தைகளும் பால்குடிக்கும் பருவத்திலிருக்கிறது அப்படி இருப்பதால் எனதுமனையாட்டியால் மேற்கூறிய நான்குகுழந்தைகளுக்கும் பால்கொடுக்கப்பாலும் ஊறவில்லை அன்றியுஞ்சக்தியும் போராது ஆதலால் எனது குழந்தைகளுக்கு தாங்கள் வந்து பால்கொடுத்து இரக்ஷிக்கவேண்டியதாய்ப் பிரார்த்திக்கிறேன.

சரஸ்பதி வசனம்.

அடாமூர்க்கா நீ யென்றும் விகாவசனைசக்கடவாது. யான் சத்தியலோகஞ்செல்லுகின்றேன்.



விதூஷகன் வசனம்.

ம்மணி மிகவும் சந்தோஷம்.

சூஸ்திரதார் வசனம்.

நண்பா தேவியைத்தெரிசித்துவேண்டிய வரங்களைப்பெற்றுக் கொண்டாயா?

விதூஷகன் வசனம்.

ஆம் பெற்றுக்கொண்டேன் இனிமேல் நடக்கவேண்டியவிஷயம் யாது?

சூஸ்திரதார் வசனம்.

மித்ர இவ்வரங்கினிடமாக மோகினிபிராப்தமாகப்போகின்றாள் அன்னவளுக்குவேண்டிய ஏவல் செய்வாயாக.

விதூஷகன் வசனம்.

உத்திரவுபோல் நடக்கச்சித்தமாக இருக்கின்றேன்.

## மோகினி சபை.

விருத்தம்.

இந்திரன்கொலுவில்வாழும் எழில்மடமாதரெல்லாம்
வந்தடிவணங்கலான வடிவினுளிரதிபோல்வாள்
இந்தமானிலத்திலுள்ளா ரியாரையும்மயங்கச்செய்யும்
விந்தைமோகினியாள்வந்தாள் மிகுசபையதனிற்றானே.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

செந்திருபோல் திகழ்நள் மோகினிவந்தாள்

அநுபல்லவி.

சிந்துரமாகியபொட்டு சுந்தரநுதலிலிட்டு
கொந்தார்சடைபின்னலிட்டுக் கந்தரத்திலாரந்தொட்டு (செ)

சரணம்.

தங்கச்சிலம்பெடுத்துப் பங்கயப்பாதந்தொடுத்து
மங்களகீதம்படித்துப் பொங்கமாகவேநடித்து (செ)



குங்குமகளபவாச மெங்கினுந்திரேகம்வீசத்
துங்கமாய்ப்பார்ப்போர்கண்கூசச் செங்கைவளையணிந்துல்லாசச் (செ)

தங்கணவனைத்தேடி அங்கணிலந்தனிலோடி
எங்கினுங்காணுமல்வாடிச் சங்கரனைக்கொண்டாடிச் (செ)

மோகினிசொல் தரு.

இன்னம்நாதன்வரக்காணேனென்றமெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-சாபு.

பல்லவி.

கன்னிநானென்செய்குவேனே கண்ணாளன்வரக்காணேனே

அநுபல்லவி.

வன்னமாரன்மலரம்பு வாரித்தேரி வாகாயெய்குறானே. (கன்)
தென்றல்வந்துசாடுறதே தேகம் ஆகம் வாடுறதே. (கன்)
மதிகிரணமதினாலே மயக்கத் தியங்க வாட்டுகின்றானே. (கன்)
சோலைக்குயில்கூவுறதே சோபம் தாபம் ஆகுறதே. (கன்)
கல்யாணசுந்தரன்பதம் கருதிச் சுருதிக்கணக் குடன்பாடக். (கன்)

வசனம்.

ஆகா ஈதென்ன ஆச்சரியம் எனது ஆசைநேசவிசுவாசமுள்ளப்பிராணேசரானவர் நேற்றிரவுபஞ்சணைமீது ரஞ்சிதமாகக் கொஞ்சியிருந்து வைகறையிலெழுந்து வெளியேசென்றவர் சூரியாஸ்தமனமாகி இரண்டரை நாழிகையாகியும் இன்னும் வராதகாரணம் என்னமோதெரியவில்லை அந்தோ நீாமிகுந்தமாரனுனவன் கரும்புவில்லில் அரும்பு மலர்தொடுத்து எனையடுத்து விடுத்துக் கொண்டிருக்கிறான் விரகதாபமோ மிகவும் உண்டாகிறது அதற்கிணங்கச் சுந்தரமிகுந்த சந்திரனே தனதுகிரணங்களைவிரித்துச் சூரியனைப்போலக் காய்ந்துகொண்டிருக்குறான் இதற்கென்செய்வேன் எனது கண்ணாளன் என்னைமறந்து வேறுமாதர்கள் கையிற்சிக்கிமீண்டுவர வெட்கிக்கொண்டிருக்கிறாரோ அல்லது வந்தவழியை மறந்துவிட்டாரோ என்னவோ தோன்றவில்லை சேவகனிடத்திலாவது விசாரிக்கின்றேன்.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரீ வந்தனஞ்செய்கின்றேன்.

மோகினி வசனம்.

கல்யாண் சேவகா ஏண்டா இன்னும் எனது பிராணேசர்வர வில்லை.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரீ வரக்கூடிய சமயந்தான்.

மோகினி வசனம்.

சேவகா துவாரத்தின்வழியாய் யார்வந்தாலும் என் அனுமதி யன்னியில் உள்ளேவிடாதே.

(சேவகன் வசனம்.) நல்லதம்மணி.

## மோகனராஜன் சபை.

விருத்தம்.

மாகன தனத்தார் மடல்வரை யெழிலான்
மாரனால் முழுதுணர் மாண்பன்
மோகன புரியான் மோகன ராஜன்
மூவுல கம்புக ழுடையான்
பாகன மொழியாள் மோகினி மாதைப்
பட்சமாய் நினைத்துபூங் கிள்ளை
வாகன மாரன் திருப்பதந் தொழுது
வாகுடன் சபையினில் வந்தான்.

இராகம்-இந்துஸ்தானி-பியாகு-தாளம்-ஏகம்.

நோட்டு.

பதப பதப சநிதப ரிகம பமக ரிகரிச
பபபமகமமமமக ரிகமபமகரிகரிச பக ரி ரி ச ச ச.



### மோகனராஜன்சொல் தரு.

சபை வந்தனம்.

இராகம் - பியாகு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

மாட்சிமைசேர் சபைதனக்கு மைந்தன் வந்தனம்
மைந்தன் வந்தனம் மனமகிழ்ந்து தந்தனன்.

அன்னைபிதா முன்னவர்க்கு மடியேன் வந்தனம்
அடியேன் வந்தனம் மிகு வன்பாய்த்தந்தனன்.

வேதமோது வேதியர்க்கு மிகவே வந்தனம்
மிகவே வந்தனம் விபரிதமாய்த் தந்தனன்.

பாவலர்க்குங் காவலர்க்கும் பணிவாய் வந்தனம்
பணிவாய் வந்தனம் வெகு பாங்காய்த்தந்தனன்.

தாசன் கல்யாணசுந்தரன் தமிழ்க்கு வந்தனம்
தமிழ்க்கு வந்தனம் இதோ தமியேன் தந்தனன்.

வசனம்.

எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணியென்றபஞ்சவிலக் கணங்களையு முணர்ந்து ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் என்ற நாற்கவியுஞ் சொல்ல வல்லவாக, இவ்வரங்கினிடமாக வீற்றிருக் கும் வித்வான்களுக்கும் மற்றுமுள்ள சகலகனதனவான்களுக்கும் எனது குருவாகிய பூதகுளத்தூர் மு. வ. கல்யாணசுந்தரம்பிள்ளை யவர்களுக்கும் பாலன்வந்தனம் பட்சமுடன் தந்தனன்.

டை வசனம்.

யான் வாசஞ்செய்யும் நகரம் சுந்தரமிகுந்த சந்தனமரங்களு ம் அற்புதமுயர்ந்த கற்பகவிருக்ஷமும் பந்திபந்தியதாய் விந்தை யாய் நிறைந்து மாகனந்தக்கும் மோகனபுரி எனது நாமம் பாரு சேர்மொழியார் பாதமேபணியும் மோகனராஜனென மொழி வார்கள். யான் பஞ்சவயதினில் ரஞ்சிதமாக முத்தமிழெல்லாமுழு துமுணர்ந்து மற்றுமாரனால் கற்று வருகையில் அதில் வரைந்தி ருந்த அதிசயமாவது (மங்கைமாரிடத் தின்பமே யின்பம் மற்றவ ரோடு இருந்துவாழ்வதும் வாழ்க்கையே வியல்புறாம் வாழ்க்கை அங்கவர்ப்பெறுஞ் செல்வமேசெல்வம் மற்றவர்கள் கொள்கையுங் குறை வுமையே கொமபகோர்வ்யமை) என்று கூறியிருந்ததைக்

படித்து நன்றிகுவென்று அன்றுமுதலாய்ப் பங்கைச்குதைப் பம்பரமதனைச் சந்தசம்வென்ற விங்தையாங்தனமும் பிங்தாங்கிட்டிய சுந்தாநுதலுமுடைய மோகினிமாதை வாகுடன்சேர்ந்து வருகையிலோர்நாள் மனவெறுப்பதனுல் வேறிடஞ்சென்றோர் நாரியைக் கலந்து வாழ்கையில் ஊழ்வினைவலியால் மோகினி ஆசையால் அன்னவள் தன்னைப்பிரிந்து வந்தேன் மோகினி வாழுமாளிகைக்கே மாளிகைக்குள்ளே மகிழ்வுடன் செல்கின்றேன்.

ஷை வசனம்.

யாரடா இவ்விடத்திற் சேவகன்.

சேவகன் வசனம்.

மஹாராஜ் வந்தனம் செய்குறேன்.

மோகனராஜன் வசனம்.

கல்யாண் சேவகா மோகினி யாதுசெய்கின்றாள்.

சேவகன் வசனம்.

மஹாராஜ் தங்கள்வரவுக் கெதிர்பார்த்து வியாகூலமாயிருந்து வர்கள் யார்வந்தாலும் துவாரத்திலுள்ளே விடாதே என்று ஆக்ஞாபித்துச் சயனித்திருக்குறார்கள்.

மோகனராஜன் வசனம்.

நல்லது யான் வந்திருக்குறேன் என்று தெரிவி.

சேவகன் வசனம்.

அப்படியே தெரிவிக்கிறேன்.

ஷை வசனம்.

மாதுஸ்திரீ வந்தனம் செய்கின்றேன் சேவகன்.

மோகினி வசனம்.

கல்யாண் சேவகா யாது விசேடம்.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரீ தங்கள்பிராணேசர் அதிக ஆவலாக துவாரத்தில் புகுந்தார் ஒருவரையும் உள்ளேவிடக் கூடாதென்று உத்தரவாயிருக்குறதென்றேன் யான் வந்திருக்குறேனென்று தெரிவிக்க சொன்னார்.



மோகினி வசனம்.

நீ வந்தால் துவாரத்தின்கண் உசாராகக் காவல்புரிந்து கொண்டிரு.

சேவகன் வசனம்.

மஹாராஜ் யான் வந்திருக்கிறேனென்று தெரிவித்தேன் நீவந்தால் துவாரத்தினிடமாகக் காவல்புரிந்து கொண்டிருவென்று ஆக்ஞாபித்தார்கள் ஆகையால் நீர் இந்த இடத்துக்குக்காவலாகவீற்றிரும் யான் வெளியே போய்வருகிறேன்.

மோகனராஜன் வசனம்.

அடா மூர்க்கா என்னவார்த்தை தெரிவிக்கின்றாய் சுந்தரபுருடன் வந்திருக்குறேனென்று தெரிவி.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரீ ஒரு சுந்தரக்குருடன் வந்திருக்கின்றார்.

மோகினி வசனம்.

சேவகா சுந்தரக்குருடன் வந்திருந்தால் ஓர் கோலைக்கையிற் கொடுத்து வழியைக் காண்பித்துப் போகச்சொல்.

சேவகன் வசனம்.

மஹாராஜ் மாதுஸ்திரீயிடம் ஓர் சுந்தரக்குருடன் வந்திருக்குறதென்று தெரிவித்தேன் ஓர் கோலைக்கொடுத்து வழியைக்காட்டும்படி சொன்னார்கள்.

மோகனராஜன் வசனம்.

அடா ஐஷ்டா என்னடா பரிகாசம் செய்கின்றாய் மோகனராஜன் வந்திருக்குறதென்று தெரிவி.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரீ போகனி வந்திருக்கிறது.

மோகினி வசனம்.

சேவகா போகனி வந்திருந்தால் அரையணுக்கொடுத்து இலையத்துக்கு வாங்கித் தாகத்துக்கு ஜலம்புசிக்கக் கையிலேயைத்துக்கொள்.

சேவகன் வசனம்.

மஹாராஜா மாதுஸ்திரீயிடம் போயவளிவந் திருக்கிறதென்று தெரிவித்தேன் போகணி வந்திருந்தால் அரையறைக் கொண்டுகிக்கி ளையத்துக்குவாங்கிக் கொள்ளச் சொன்னார்கள்.

மோகனராஜன் வசனம்.

சே துஷ்டா அப்பாற்செல்.

## மோகனராஜன்சொல் தரு.

மாதர்களுக்கெல்லாஞ் சிலாக்கியமென்றமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஏகம்.

ஓரடிப்பதம்.

மங்கையேபுந்தனைநான்கண்டேன் சல்லாபமாக
மாகருணையொடு சோகனகங்கடல்
வாருபர்கல்லயில் மோகயலிணையகண்
மதிவனசத்தைநேர் வதனஞ்சிமிழ்விக
சிதமோங்குங்கிணம் நறியெழுபுற்புதம்
வடதடவரைபொற் குடமெழில்செப்பதின்
முடிபம்பரமக திடமிகுவெங்கய
மத்தகமுதல டர்த்துவிம்மியத
னத்தோடென்முனமெ திர்த்துநிற்கின்றதோர்
மங்கையேபுந்தனைநான்கண்டேன் உல்லாசத்துடன்
மையலதிகமாக் கொண்டேன்

வசனம்.

மேகம்போன்ற கூந்தலும், மூன்றாம்பிறைபோன்ற நெற்றியும், விற்போன்றபுருவங்களும், கத்திரிக்கோல் போன்ற செவிகளும், வேல்போன்றவிழிகளும், குமிழமலர்போன்றநாசிகளும், பூரணச்சந்திரனைப்போன்ற திருமுகமும், கண்ணாடிபோன்ற கபோலமும், பவளம்போன்ற இதழ்களும், அல்லிமலர்போன்றவாயும், முத்தைப்போன்ற பற்களும், அமுதம்போன்ற வசனமும், சங்கம்போன்ற கழுத்தும் மூங்கிலைப்போன்ற தோள்களும், மகரயாழ் போன்றமுன் கைகளும், கனிற்ற மீன்போன்ற விரல்களும், கிளி



மூக்குப்போன்ற நகங்களும், பங்கயப்பொகுட்டைப்போன்ற தனங்களும், ஆலிலைபோன்ற வயிறும், வண்டுக் கூட்டங்கள் போன்ற உரோமக்கொடியும், மகிழமலர்போன்ற உந்தியும், உடுக்கைப்போன்ற இடையும், நாகபடம்போன்ற அல்குலும், யானைத்துதிக்கை போன்ற துடைகளும், நண்டுபோன்ற முழந்தாள்களும், வரால்மீன்போன்ற கணைக்கால்களும், கைத்தராசு போன்ற பாடுகளும், வித்துருமம்போன்ற கால்விரல்களும், அனிச்சமலர்போன்ற பாதமும், மயில்போன்ற சாயலுமுடைய என்தன் ஆசைக்குகந்த வஞ்சியிலே பெற்ற அபரஞ்சி உன்மேல் அதிக மோகமிஞ்சி மன்மதபாணத்துக் கஞ்சி பலவிதமாக வந்தனைக்கெஞ்சித் தஞ்சம் தஞ்சம் தருணம் தருணம் தற்காப்பாய் தற்கார்ப்பாய் என்று பணிந்து நிற்கும் எளியேனுடன் சரசசல்லாபமாக ஒருவார்த்தை பேசலாகாதா பேசினால் தகாதா என்ன தெரிவிக்கின்றாய்?

## மோகினிக்கும் மோகனராஜனுக்கும் தர்க்கம்.

மோகினிசொல் தரு.

இராகம் - இந்துஸ்தானிதோடி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

புத்தியில்லாமட்டியே பூதம்போதைட்டியே
புலம்புறாய்கிட்டியே போடாவப்பாலெட்டியே (பு)

## மோகனராஜன்சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

காமன்கணைபொல்லாது காணேன் துணையுனையல்லாது
காதல்தீர்ப்பாய்கில்லாது கண்ணே நடைசொல்லாது

மோகினி.

என்னசொன்னாலுமடா ஏற்காததபுகோடா
இன்னும்நின்றாற்குடிகேடா எட்டியுதைப்பேன்டாபோடா

மோகனராஜன்.

எட்டியுதைத்தாலேயோக்யம் எந்தனுக்கதிலாக்யம்
இன்பமாயொருவாக்யம் இயம்பிச்சேர்ந்தாலேபாக்யம்

மோகினி.

அச்சமற்றெனைநாடி அருகில்வந்தாயேபேடி
அடாதுவந்தவழிகூடி அகல்வாயுந்தன்பதிதேடி

மோகனராஜன்.

தேடிவந்தேனடி மானே தியங்குதென்மனந்தானே
தெண்டஞ்செய்குவேனுனே சேர்ந்தணைகுவாய்தேனே

மோகினி.

வீணையின்றடாநீயே விரகமேகொண்டேபேயே
மேன்மையில்வார்த்தைசொன்னாயே வெட்கங்கெட்டுப்போனாயே

மோகனராஜன்.

ஆசைவெட்கமறியாதே அறிந்தோர்கள்சொல்வாரிதே
அன்னமேநீயிப்போதே ஆதரவாய்ச்சேர்மாதே

மோகினி.

தாசன்கல்யாணசுந்த்ரன் தண்டமிழ்தேருந்தந்த்ரன்
மாசிலாப்பதம்பாடா மட்டியேதூரப்போடா

மோகனராஜன் வசனம்.

அடிபெண்ணே எந்தன் ஆசைக்குகந்த கண்ணே உன்னை என்னசொன்னேன் உன்னைநாடிவந்த என்னை இந்தவிதந் தூஷணமாகப்பேசலாமா? இது உனக்கு சம்மதியாமா? இதை யான்சகிக்கப்போமா? முன்னமே யுன்னைச் சையாக்கிரஹத்தில் சையாதுசேர்ந்த மணவாளனல்லவா மறந்துவிட்டாயா என்ன?

மோகினி வசனம்.

அடே சேவகா.

சேவகன் வசனம்.

மாதுஸ்திரி இதோ வந்துவிட்டேன்.

மோகினி வசனம்.

இவனாடா இவனையேண்டா உள்ளேவரவிடுத்தாய் பிடரியைப்பிடித்து வெளியேதள்ளுவாய்.

சேவகன் வசனம்.

ஆக்ஞை. ஆர்வோய் நீர்வெளியே போங்காணும் போகுமென்று சொல்லுகிறேன் பின்னும் நிற்குறீரா? சீக்கிரம் போங்காணும் மறுபடியும் நிற்கிறீரா?



மோகனராஜன் வசனம்.

சேவகா கோபங்கொள்ளாதே இவளுக்கென்மீது இவ்வளவு மனஸ்தாபம் வந்தகாரணமென்னடா?

சேவகன் வசனம்.

அதைக்கவனமாய்க்கேளுஞ் சொல்லுகிறேன் எங்கள் அம்மாளுக்குப் பகலிலேயும் இராத்திரியிலேயும் பக்கத்திலே புருஷனில்லாவிட்டால் சுகப்படமாட்டாது அவ்விதமிருக்கச் சதா கிட்டயிலேயிருந்தவரோ பிரிந்தபோனீர்.

மோகனராஜன் வசனம்.

சேவகா? பிரிந்தபோனது என்மீது குற்றந்தான் நீயாவது சொல்லிச் சமாதானஞ் செய்வாயாக.

மோகினி வசனம்.

அடே சேவகா யாரிடத்தில் வார்த்தை யாடிக்கொண்டிருக்கின்றனை சீக்கிரஞ் சொல்.

சேவகன் வசனம்.

மாதிஸ்திரி ஒருவருமில்லை வெளியே போங்காணும் வெளியேபோம்.

---

## மோகனராஜனுக்கும் மோகினிக்கும் தர்க்கம்.

---

என்னடி நான்பெற்றமங்கையென்ற காவடிச்சிந்து வர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மோகனராஜன்.

சோலைவளரிளங்குயிலே அடிமயிலே திருவயிலே உந்தன்
சோதிவிழிநடை யொயிலே நல்ல
சுபசோபன மிகுமாமொழி விபரீதமதாகப்பொழி
சுந்தரியே யுனைத்தேடி காணலேந்தேனே யென்னிணமோடி

மோகினி.

தேடிவந்தேனென்றாய்புலையா புத்தியில்லையா மதியில்லையா
தேவடியாள்நானுனக்குவிலையா இந்தத்
தில்லுமுல்லுவார்த்தைகளைச் சொல்லுவதாலேத்தருணம்
சீச்சியப்பாலேநீபோடா உறவாச்செனவெண்ணினையோடா

மோகனராஜன்.

தேடியேவந்தவென்மீது இந்தவாது நீயிப்போது இன்று
செய்வதுனக்குத்தகாது எழிற்
சித்ரக்கனகத்திற்செய்கின் னத்தைத்செருவித்தேவனர்
தேமற்படர்கொங்கைமாதேமலர்க் காமனெய்வதுவுந்நீதே

மோகினி.

காமபாணக்னதந்தாலேடா பெருமூடா மதிகேடா சேற்றுக்
கலந்தவளிடம்போடா என்முன்
காதலினுலுன்னதமா யோதுவதாலுந்தனுட
கைக்குட்சிக்கிக்கொள்வேனேடாசற்றும் வெட்கமில்லாதவிசேடா

மோகனராஜன்.

காதற்கிசைந்தவென்மானே செழுந்தேனே மகிழேனே உனைக்
கட்டிப்பிடிக்காமல்நானே பெருங்
காதகச்சொலே நீதரும்படி ஓதினுமே மாதராய்கடு
கவ்வளவும்விலகேனே இதைச் செவ்வையாய்த்தெருவாய்தானே

மோகினி.

தெருவதென்னடாமட்டி வெடிசுட்டி அறிகெட்டி யான்
திரன்போலென்முனங்கிட்டி. அந்தச்
சித்தசனர்பாணமதாற் பித்தன்போல்வாயுளறித்
தேனேமானேயென்றும்பேசினுலோ நானோசேருவேண்டாவேவி

மோகனராஜன்.

என்னசொன்னுலும் நான்கண்ணே அடிபெண்ணே அன்னம்
உன்னைன்வேறு எந்திழையார்களையெண்ணேன் பல
இனமர்மணிகனமாயணி அனமேயென்மேற்சின்மேகொள்ளா
திச்சமயஞ்சேருவாயே சேர்ந்தால்மெச்சுபுகழ்பெறுவாயே

மோகினி.

என்னைச்சேர்ந்தாற்புகழின்று வருமென்று நீசொன்று எந்த
னெதிர்நிற்காதேபோ வகன்று அடே
இந்தவிதஞ்சொல்லதுனக் கேனமடடாகடையா
எட்டேடகாலட்சணமடையா கையிலேதுமில்லாதபகடையா



மோகனராஜன்.

ஜையுமீறுதேகன்னி மாசம்பன்னி மலர்ப்பொன்னி மத
கமந்தேரும்விற்பன்னி தமி
ராய்ந்த நாவலர்மேவிடுஞ் சீரார்முதுகுளத்தூர் கவி
ரணசுந்த்ரன்சிந்துபாடி யுனைப் பேணியே கூடுவேன்வாடி

மோகினி.

ல்யாணசுந்தரதாசன் அன்பர்நேசன் விசுவாசன் சுப்ர
ண்யகவிராஜன்சிசன் சொல்லுஞ்
ற்பாசேர்சிந்துபதம் அற்புதமாய்ப்பாடுகிறேன்
தாரக்கேட்டுநீபோடா பிடிவாதஞ்செய்யாமலேமூடா

மோகனராஜன் வசனம்.

அடி அன்னமே மாற்றுயர்ந்தசொர்னமே உன்னைமுன்னமே கட்டிப்பிடித்து முத்தமிட்ட ஆசைநாயகனை என்னுடன் வாது செய்வது நீயா மனம்பேதியாதுசேர்வாய்.

மோகினி விருத்தம்.

அடவியில்முடவன்தேனுக் காசைப்பட்டதுபோலாகப்
படபடவெனவேபேசும் பாதகாகாதகாயிவ்
விடமதில்நின்றுயானல் வெட்கத்தைக்கெடுப்பேனுமால்
நடநடவிரைவதாக நாடியுன்பதிக்குத்தானே.

வசனம்.

அடாமூடா முடவன் கொம்புத்தேனுக் காசைப்பட்டதுபோலாக என்முன் இவ்விதமான வார்த்தைகள் பேசுவது சரியல்லவந்தவழியைப்பார்த்து மரியாதையாகச் சென்றுவிடுவாய் இல்லாதபக்ஷத்தில் உன் வெட்கத்தைக் கெடுத்துவிடுவேன்.

மோகனராஜன் வசனம்.

அடி பெண்பாவாய் வந்தவழியைப் பார்க்கத்தானே உன்னிடத்தில் வந்திருக்கின்றேன்.

(மோகினி வசனம்.) அடே சேவகா.

(சேவகன் வசனம்.) மாதாஸ்திரீ.

மோகினி வசனம்.

இவனாடா வெளியே போவென்றாலும் போகுறானில்லை வாயில்வந்தபடி உளறுகுறான் சீக்கிரத்தில் அப்புறம்போகச்சொல்.

சேவகன் வசனம்.

என்ன ஓய் உமக்குச் சொல்லச்சொல்லக் கிஞ்சிற்றேனும் புத்தியில்லை வெளியேபோவோய்.

மோகனராஜன் வசனம்.

சேவகா சினந்துபேசாதே உனக்கு வேண்டியதெல்லாம் தருகுறேன் இவளை எந்தவிதமாகக் கைவசப்படுத்தலாம்.

சேவகன் வசனம்.

ஏன்காணும் இந்த அம்மாளிடத்தில் போடா வாடா மூடா நாயே பேயே கழுதை என்றுபேச்சுக்கேழ்க்குதிர் இங்கே ஓர்இடத்தில் செம்மரியாட்டின் ரோமம்போலக் கூந்தலும், பூரண அமாவாசையைப்போன்றமுகமும், பனங்காய்போன்றகண்ணும், காக்கைமூக்குப்போன்ற பற்களும், காக்கரட்டான்பூப்போன்றவாயும், சுரைக்காயையும் அம்மிக்குழவியையும் நீண்டவடையையும் பெரும் பூசணிக்காயையும் பழித்த தனங்களும், செக்குலக்கைபோன்ற கையும், முருங்கைக்காய்கள்போன்றவிரலும், சாலைப்போன்றவயிறும், செக்கைப்போன்றஇடையும், எருமைக்கடாப்போன்றநடையும், கோடையிடியைப்போன்ற வார்த்தையுமுடைய ஒரு பெண்ணரசி யிருக்கின்றாள் அன்னவளை யழைத்துவருகுறேன் தாம் சந்தோஷமாகக் கூட்டிச்செல்கின்றீர.

மோகனராஜன் வசனம்.

சே துஷ்டா என்னவார்த்தை தெரிவிக்கின்றாய் அப்பாற் செல்வாய்.

## மோகனராஜனுக்கும் மோகினிக்கும் தர்க்கம்.

மானைப்பிடியே வனக்கிளியே என்ற மெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-அடதாளசாபு.

மோகனராஜன்.

விண்ணமுதேயெந்த உள்ளமுதேவிப
சித்திரமே.



மோகினி.

அந்த-விண்ணமுதுள்ளமு தானவிசித்திரம்
மேனியுடையதோ வேந்தனே

மோகனராஜன்.

கொண்டலையேபழித் தெண்டிசையும்புகழ்
கொண்ட குழற்கண்மணி

மோகினி.

அந்தக்-கொண்டலைக்கூந்தற்கு நேரெனக்கூறிடிற்
கோதாய்ச்சிதறுமே வேந்தனே

மோகனராஜன்.

மூன்றாம்பிறைதனை வென்றநுதலுடை
மூதறிவான பெண்ணே

மோகினி.

அந்த-மூன்றாம்பிறை நிகர்நெற்றியென்றே
மொழிந்தாலதேதுமே வேந்தனே.

மோகனராஜன்.

சீதகுளத்தி லாடுங்கயலைவென்ற
சீரார்நயனப் பெண்ணே

மோகினி.

அந்தச்-சீதக்குளக்கயல் ஞாலமுள்ளார்வலை
சிக்கிவருந்துமே வேந்தனே

மோகனராஜன்.

செங்கமலமதைத் தங்கமாய்வென்று
இகழ்முக மாதரசே

மோகினி.

அந்தச்-செங்கமலமலர் திங்களைக்கண்டக்காற்
செவ்விதழ்மூடுமே வேந்தனே

மோகனராஜன்.

அந்தமுள்ள கனகக்கிரிதன்னை
யடர்த்ததனக் கண்மணி

மோகினி.

உயர்-அர்தமுள்ளகிரிமுன்னட்    சிவன்காரத்
தாலேவலைந்தது    நாதனே

மோகனராஜன்.

எந்தவிதத்தினு    முந்தனைவெல்லுவே
னேந்திழையேயெந்தன்    கண்மணி

மோகினி.

அந்தப்பூச்சியிங்கே    காட்டாமலேரீரும்
அப்பாலேபோங்காணும்    வேந்தனே

மோகனராஜன்.

சந்ததங்கல்யாண    சுந்த்ரன்பதம்பாடிச்
சல்லாபமாய்ச்சேர்வேன்    கண்மணி

மோகினி.

இந்தவசனம்நீர்    வந்தபோதேசொன்னால்
இந்தவாதேதுக்கு    வேந்தனே

மோகனராஜன் வசனம்.

ஆ? எந்தன்பெண்கள் நாயகமே சித்தசன்பாணத்தால்சித்தங் லங்கி உன்னைநத்திவந்த எந்தனை வெறுத்துப்பேசுவது ஞாயமல்ல சுந்தரக்கல்யாண சுந்தரம்பதம் வெகுவிந்தையாய்ப் பாடுகிறேன் சித்தம்மகிழ்ந்து ஒருமுத்தங்கொடுப்பாய்.

மோகினி வசனம்.

அடே சேவகா இங்கேவா நான் எவ்வளவோ இவரைத்தூஷணமாகப்பேசியும் அதையெண்ணாது சொன்னவார்த்தைகளையே சொல்லிக்கொண்டிருக்குறார் தற்சமயம் யெனதெண்ணமும் அவர் மனதுக்கொத்ததாய்விட்டது உனது சம்மதமென்ன.

(சேவகன் வசனம்.) தங்கள் சித்தம் அம்மணி.

மோகினி வசனம்.

அடாயென்சாமி யெங்கும்புகழ்கோமி மையல்கொண்டேன் காமி தாமதஞ்செய்வாயேல் சித்தஞ்சகிக்கேன் சித்தசன் செய்யுஞ் சண்டையை நிர்வகிக்கேன் ஆனதால் சையாக்கிரகத்துக் கொய்யாரமாகச் செல்லலாம் வருவாய்,



மோகினிசொல் தரு.

இந்துஸ்தானி கோட்டு.

இராகம்-இந்துஸ்தான்பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பூவணையிற் சேர்ந்தணைய    பூமானே நீவருகுவாய்
மாவனக்கும்பம்பிடித்து    மன்னாமுத்தந்தருகுவாய்

தாமதம்புரிவாயானால்    தையல்சகிக்கேனடா
மாமதஜலம்பெருகி    வாரியாயோடுதடா

தங்கனங்களாவதைக்    கண்ணாலநீபாரடா
மங்கையென்னை இங்கிதமாய்    மனமுவந்துசேரடா

மோகனராஜன்வசனம்.

கண்மணி எப்போது இவ்வார்த்தை வருமென்றல்லவோ காத்துக்கொண்டிருக்குறேன் இதோ சீக்கிரம் செல்வோம்வா.

மோகனராஜன் தரு.

ராஜாதி ராஜர்பணி யென்ற மெட்டு.

இராகம்-அபுரூபம்-தாளம்.

கண்ணிகள்.

இந்தியாசக்ரவர்த்தி    எட்வேட்மகாராஜர்வாழ்க
அந்தமாயன்னவ    ராளுமகிலமெலாம்வாழ்க

சிந்தையாயிச்சபையில்மேவும்    சீர்கவிவாணர்வாழ்க
சந்தோஷமாய்மற்றமுள்ள    தனவான்கள்வாழ்க

தேசம்புகழுடையான்    சிவனைச்சிந்திக்கவேசடையான்
ஏஜண்டிருளப்பக்கோனு    ரின்பமுடன்வாழ்க

இந்தநல்நாடகத்தை    எழிலாகவேஅச்சிலிட்ட
விந்தைக்குருசாமி    மகாலிங்கவேளும்வாழ்க

மாசிலாவசனத்தான்    மதியோங்கும்பதசனத்தான்
தாசன்கல்யாணசுந்தரன்    சந்ததமும்வாழ்க

மோகினி மோகனராஜன் தர்க்கமுற்றிற்று.



உ

பரமபதி துணை.

# மெய்ப்ரிச்சந்திர நாடகம்.

## உற்பத்தி காண்டம்.

### திருசங்குமஹாராஜன் சபை.

ஆசிரிய விருத்தம்.

காராழி சூழ்புவியை யோராழி யாலரசு
கவனமாய்ப் புரியும் வேந்தன்
கருதரிய வேதவே தாந்தங்க டேர்ந்தவன்
கதிர்மரபி லவ தரித்தோன்
ஏராரு மலர்மங்கை நடனமிடு வாசலா
ளிந்துநிகர் சமுக மாண்பன்
எதிரிகொடி மதிலிடிப டநடவிடு மானையா
ளிணையிலாப் பெருந் தானையான்,
தாராரு மகளிர்கள் தகைபெற்ற ஜெயதுங்கன்
தயவிலார் நேச பங்கன்
சந்ததமு மீசனடி மறவாத வன்பினன்,
சந்திரவட் டக்குடையினன்
வாராரு குவிமுலை மடமாத ராராட
வாணரெதிர் கவிகள் பாட
மாதவமெ லாமாசி கூறிடத் திருசங்கு
மன்கொலு விருந்தனனரோ.

## திருசங்குசொல் தரு

ராஜாதி ராஜர்பணியென்ற வர்ணமெட்டு

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சீராமயோத்திநகர் செங்கோல்செலுத்துமுல்லாசன்
தாரார்புயவீரன் திருசங்குமஹாராசன்
தேனார்மலர்த்தாரான் திருந்தார்க்குப்புறந்தாரான்
காரார்குழல்மங்கையரைக் காதல்கொண்டேபாரான்
திங்கட்கவிகையுள்ளான் ஜெகத்தோரைமாசில்லாதெள்ளான்
துங்கமிகுமந்திரிகள் சொல்லும்வசனந்தள்ளான்
நல்லார்க்குமித்துருவான் நயமில்லார்க்குச்சத்துருவான்
வல்லசெயமன்றல்கொடை வழங்குமுரசதிர்வான்
மும்மதங்கொள்கரியான் பெலமுதிர்வுயர்பரியான்
இம்மைவாழ்விழந்தோர்மற் றிருவர்க்குமுபரியான்
மந்திரிதந்திரிகள் மணிமகுடவர்த்தனர்கள்
சிந்தைதெளிவுள்ளகோடி சேனாதிபதியர்கள்
விந்தையுடன்கதிக்க வேலையாட்களெதிர்துதிக்
வந்தேனிச்சிம்மாதனத்து வாகாய்க்கொலுவிருக்

### திருசங்கு சபைவணக்கம் விருத்தம்.

இருக்கெசுர் சாமமுயாதர் வணமென்
றியம்பிடுஞ் சதுர்மறை யுணர்ந்தோர்
வருக்கையங் கதலி மாங்கனிக் கொப்பாய்
வழுத்திடுங் கவியில்வல் லவர்கள்
தருக்களும் வெட்கத் தருங்கொடை யாளர்
தாணிபர் சற்குணர் மேவுந்
திருக்குள ரவைக்குச் சிறியன்வந் தனங்கள்
செய்தனன் சிர்கரங் குவித்தே.

வசனம்.

இருக்கு, எசுர், சாமம், அதர்வணம், என்ற நான்குவேதங்க
ளும் பாராயணஞ்செய்த பெரியோர்களும் மா, வருக்கை, கதலி,



என்ற முக்கனிக்கொப்பாகக் கவிபாடும் வித்வான்களும் கற்பக
த்தருவுக்கு நிகரான கொடையாளரும் தாணிபாலரும் சாந்தகுண
ம்பெற்றதனவான்களும வாழ்ந்திலங்கும் இந்த மஹோன்மதசபை
க்கு அடியேன்வந்தனம் அன்புடனே தந்தனன்.

### திருசங்கு வழிபடுகடவுள் வணக்கம்.

கந்தார்த்த விருத்தம்.

இந்தநல் லாசனத்தி லிருந்துயர் செங்கோ லோட்சி
வந்தவென் முன்னோர்போல மைந்தனு மிதனில் வீற்றே
அந்தமா யவனியாள அம்பிகை பக்கம் வாழும்
எந்தையே வரங்கொ டுக்க.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

இணையடி தனைப்போற்றினேன் என்னாளும்நீயே
துணையெனவே துனேற்றினேன்.

வசனம்.

மஹா மேன்மைதங்கிய நான்குமறைகளும், பிர்மா, விஷ்ணு
வும், காணுதற்கரிய கைலைநாதா இவ்வரியாசனத்திலிருந்து செங்
கோல்புரிந்த எனது மூதாதைகளாகிய இக்ஷ்வாகு, விகுக்ஷி, புரஞ்
சயன், அனேனசு, பிருதுவு, விஸ்வகோதன், சந்திரன், யுவனாசுவ
ன், சாவஸ்தன், பிரகஸ்தவன், குவலயாசுவன், திடாசுவன், அரி
யசுவன், நிகும்பன், பெரிஹிணாசுவன், கிரிசாசுவன், சேனசித்து,
யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், புருகுச்சன், திரசதசு, அ
னரண்ணியன், திரியசுவன், திரியகுணன், திரிபந்தன், என்னும்
பெயரையுடைய இருபத்தாறு பேர்கட்கும் அருள்புரிந்ததுபோல
யானும் இவ்வரியாசனத்தி னிடமாகவிருந்து அரசுபுரிய வருள்பு
ரிவாயாக.

சுபுத்திமந்திரி போற்றிவிருத்தம்.

வட்டவாம்பரியிலேறி மானிலமுழுதுஞ்சீராய்
இட்டமாய்விஜயஞ்செய்தே யிசைபெறக்கீர்த்திநாட்டி
மட்டடங்காதகட்டர் மலரடிவணங்கநான்றும்
இட்டமாயயோத்தியாளுந் திருசங்குமன்னுபோற்றி

வசனம்.

மஹா திடம்பொருந்திய தாரகமூர்த்தா அஷ்டதிக்கு விஜயஞ்செய்து சிஷ்டரைப்பரிபாலித்துத் துஷ்டரை யெல்லாம் பதமிசை வணங்கும்படியாகச்செய்து அயோத்தியாபுரியையாளுந் திருசங்குமஹா மந்திரி சுபுத்தி வந்தனஞ்செய்கின்றேன்.

திருசங்குமஹாராஜன் வசனம்.

கல்யாண மந்திரி இவ்வாசனத்தினிடமாக வீற்றிரும்.

ஷை வசனம்.

ஏ ப்ரதான் நானின்றும்மிடத்தில் நமதுராச்சிய விஷயமாகச் சிலசங்கதிகள் கேட்டுச் சந்தோஷமடைய வெண்ணுகிறேன் உமதிச்சையென்ன?

சுபுத்திமந்திரி வசனம்.

அரசர்கட்கரசே தாங்கள் கேட்பதற்குப் பதிலுரைக்கத்தயாராயிருக்கின்றேன்.

## திருசங்குமஹாராஜன் தேசவிசாரணை.

அரசன்சொல் தரு.

அகிலப்ரபஞ்ச மூன்றுலேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பூதலமெல்லா மாதமும்மாரி புத்தியிற்சிறந்தமந்த்ரி
பேதமில்லாமற்பெய்துவருகிற பெட்புரைப்பாய்மந்த்ரி

வசனம்.

ப்ரதான் நமது நாட்டினிடமாக மாதமூன்றுமாரிபெய்து நாடானது மிகவுஞ் செழிப்புற்றிருக்கின்றதா?

சுபுத்திமந்திரிசொல் தரு.

மேற்படி வர்ணமெட்டு.

மானிலமெல்லாமாதமும்மாரி மகிதலம்புகழரசே
வானுவரியினிர்வன்மையாயுண்டு வழங்குகிறதரசே



வசனம்.

புவன சக்ரேஸ்வரா நமதுசெங்கோற் குட்பட்ட என்றுடுகளிலும் மாதமூன்றுமாரிபெய்து சீர்த்தியாகச் செழிப்புற்றிருக்கிறது.

அரசன்சொல் தரு.

தேவாலயங்களில்தினந்தோறும்பூசை செம்மையாய்மதிமந்த்ரி
மாவிரதத்துடனர்ச்சகர்செய்து வரும்வகைசொல்மந்த்ரி

வசனம்.

மதிசிரேஸ்டா நமது ராச்சியங்களிலுள்ள தேவாலயங்களில் அர்ச்சகர்கள் தினந்தோறும் பூசைசெய்து வருகின்றார்களா?

மந்திரிசொல் தரு.

ஆளுநந்தேயமதிலுலதேவா லயங்களிலெனதரசே
நாளுநற்பூசைநானிலம்புகழ நடக்கிறதெனதரசே

வசனம்.

அரசர்க்கரசே நமதாளுகைக்குட்பட்ட என்றுடுகளிலுமுள்ள தேவாலயங்களில் நாடோறும் ஆறுவேளை பூசை குறைவின்றி நடந்துவருகிறது.

அரசன்சொல் தரு.

பிரமசத்ரியவைசியசூத்திரரெல்லாம் பின்னமில்மதிமந்த்ரி
வரமுறைப்படியேவாழ்ந்துவருகிற வகையெனக்குரைமந்த்ரி

வசனம்.

ப்ரதான் நமது நாட்டினிடமாகவும் நகரினிடமாகவும் வாழ்கின்ற ப்ரம, சத்திரிய, வைசிய, சூத்திர, வென்ற நான்குவருணத்தார்களும் அவரவர்களுக் கேற்பட்ட நியமப்பிரகாரம் நடந்துவருகின்றார்களா?

மந்திரிசொல் தரு.

நிதிமிகுசதுர்வருணத்தவரெல்லா நீணிலந்தனிலரசே
விதிமுறைப்படியேயவரவர்நடக்கிற விதமென்சொல்வேனரசே

வசனம்.

அரசர்க்கரசே நமது நாட்டினிடமாகவும் நகரினிடமாகவும் வாழ்கின்ற ப்ரம, சத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்குவருண

த்தார்களும் அவரவர்களுக்கேற்பட்ட நியமப்படி சட்கருமங்களும் புரிந்து சீர்த்தியாகவாழ்ந்து வருகின்றார்கள்.

## அரசன்சொல் தரு.

கொற்றவர்நமக்குக்குறைவிலாதென்றுங்    குணமிகுமதிமந்தி.
குற்றமில்லாமற்பணிவுடன்பகுதி    கொடுத்துவாராராமந்திரி

வசனம்.

மந்திரி சுபுத்தி நமது குடையின்கீழ் வாழ்கின்ற சிற்றரசர்களெல்லாம் யாதொரு குறைவின்றிப் பணிவுடன் பகுதிகட்டி வருகின்றார்களா?

## மந்திரிசொல் தரு.

மாசிலாவயோத்திமாநகர்புரக்கும்    வாகுயரெனதாசே
தேசம்வாழ்மன்னர்கள்பகுதிகள்கொடுத்துத்    திடமுடன்வாராராசே

வசனம்.

யாதொரு குற்றமில்லாமல் இவ்வயோத்தியாபுரியைப் பரிபாலிக்கும் வேந்தே நமதோர் குடையின்கீழ் வாழ்கின்ற ஐம்பத்தைந்து தேசத்துமன்னர்களும் அவரவர்கட்கேற்பட்ட பகுதிகள் சரியாகக்கட்டிவருகிறார்கள்.

அரசன் வசனம்.

பிரதான் நமது ராச்சியவிஷயமாக உன்னுடன் யான்வினவிய சங்கைகளுக்கெல்லாம் யாதொருகுறைவில்லாது விடையளித்தவுனது வசனாமிர்தத்தைப்பருகிய யான் தன்யனானேன், ஆகிலும், எனது மனதினிடமாக சதா ஓர் வியாகூலமிருந்து கொண்டிருக்கிறது.

மந்திரி வசனம்.

மகுடாதிபா யாதொருகவலையில்லாமல் இச் சிம்மாசனத்தினிடமாக விருந்து அரசுபுரிந்து வருகிறதாங்கள் தற்சமயம் சதா ஓர் கவலையேற்பட் டிருக்கிறதென் றெடுத்துரைத்தீர்களே அதன் விபரம் உத்தாரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

---



## திரிசங்குமஹாராசன் தனக்குப் புத்திரோற்பத்தியில்லாத விஷயத்தைப்பற்றி சுபுத்தி மந்திரியிடங்கூறி விசனமடைதல்.

விருத்தம்.

மதிதனிலுயர்ந்தமந்திரிகேளாய் மண்புவிவாழ்வறிஞோர்க்கு
விதிமுறைப்படியேதிதிமிகவளித்தும் வேணியில்விதுவுடனருகு
நதியணியீசன்நாண்மலர்ப்பாத நாடொறுந்தொழுதுமேயிந்தப்
பதிதனைப்புரந்தும்பாலனில்லாத பாவியானேனென்பவமே.

## திருசங்குசொல் தரு.

மறைவரேயிந்த மதலையின்மேல் நீர்தானென்றவர்ணமெட்டு

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

பாலகனில்லாதபாவியெனைப்    போலிந்தப்
பாரினில்யாருமுண்டோ    மந்திரி
வேலைவென்றிடும்விழி    விமலைபாகனருளோ
வினையென்னசெய்தேனோ    மந்திரி
அந்தணர்முதலோரை    நிந்தையாய்மொழிந்தேனோ
யார்செய்தவஞ்சனையோ    மந்திரி
சந்ததம்அறநெறி    தாழவேயரசாட்சி
தான்மிகப்புரிந்தேனோ    மந்திரி
அருதிபரதேசிகட்    கன்னங்கொடுக்காது
அநியாயஞ்செய்தேனோ    மந்திரி
தகுதியாயிதன்வகை    தனையெனக்குச்சீக்கிரந்
சந்தோஷமாயுரைப்பாய்    மந்திரி

வசனம்.

பிரதான் (மன்னவர்க்கழகு செங்கோன்முறைமை) என்ற நீதிவாக்கியத்துக் கிணங்க யானிந்த வைம்பத்தைந்து தேசத்தரசர்கட்கும் சக்ரவர்த்தியாகி யாதொரு கைலயங்கிரிவாசனாகிய சிவபெருமான் செந்தாமரைமலர்போன்ற திருப்பாதத்தை மறவாது அரசுபுரிந்தும் அன்றியும் (அறத்தால்வருவதே யின்பமற்றெல்லாம் புறத்தபுகழுமில) என்பதுபோல இவ்வுலகினிடமாக வாழும்வ

ரியோர்களுக்கெல்லாம் கிஞ்சிற்றும் குறைவின்றித் தானங்கள் செய்தும் எனதூழ்வினைவலியால் யாதொரு புத்திரனில்லாத பாவியாயிருக்கின்றேன் மற்றும் சாஸ்திரம் மக்கட்பேறு விஷயமாகக்கூறப்படுகிறதாவது.

முன்னூல் விருத்தம்.

உந்துநீர்க்கடலுடுத்தபார்முழுவதுமொருங்கே
வந்துதாடொழுமரசியல்வளமெலாம்பெறினும்
இந்திராதியர்பெரும்பதத்திருக்கையெய்திடினு
மைந்தரின்றியேவாழ்வதுவாழ்வுமற்றன்றே.

வசனம்.

இப்பிரபஞ்சத்தினிடமாகவுற்பவித்தயாதாமொருவன் இவ்வுலகையாள்கின்ற அரசர்களெல்லாம் பதமிசைவணங்கும்படியான ஓர் அரசாக்ஷியைக்கைக்கொண்டிருந்தாலும் அன்றியும்மாக்ஷிமை தங்கிய இந்திராதிதேவர்களெல்லாம்பெற்றுய்யும்படியானயாதொரு மேலானபதவியையடைந்திருந்தாலும் அன்னவன் புத்திரனில்லாமலிருப்பானாகில் அந்தவாழ்வு வாழ்வல்லவென்று மொழிகிறது ஆதலால்.

குறள்.

மக்கண்மெய்தீண்டலுடற்கின்பமற்றவர்
சொற்கேட்டலின்பஞ்செவிக்கு.

வசனம்.

என்பதுபோல எனக்கொருபுத்திரனிருந்து அவனதுசெழுமைபொருந்தியமேனியை எனதிருபங்கயக்கரங்களால் மேவியெடுத்துமார்போடணைத்து முத்தமிடவும் அதனாலெனது தேகம் புளகாங்கிதமுறவும் அன்றியும் அன்னவனது செம்பவளவாயினின் மொழியுமினியவசன சாதுர்யங்களை யெனதிருசெவிகளுங்கேட்டின்பமடையவும் எனக்குப்பின் இந்நாட்டைப் பரிபாலிக்கவும் சாக்ஷாத் கருணையின்கடலாகிய சிவபெருமான் கிருபைசெய்து எனக்கோர்புத்திரப்பேறு கொடுக்கப்பெறலாகாதா கொடியபாபிஷ்டனாகியும் துர்அதிஷ்டமுடையவனாகியு மிருக்கின்றேனே ப்ரதானி இதற்கென்செய்யலாம் நன்றாயாலோசனைசெய்து தெரிவிக்கவேண்டும்.



(சுபுத்திமந்திரி வசனம்.) அரசர்க்கரசே?

முன்னூல் விருத்தம்.

கண்ணில்யாக்கையுந்திங்களில்கங்குலுங்கண்போ
லண்ணல்மந்திரியில்லரசாட்சியுமருளில்
திண்ணெனெஞ்சமும்புலவரிலவையுமொண்மடம்பால்
வண்ணவாயிளமக்களில்வாழ்வுமொப்பாமால்.

வசனம்.

அதாவது நேத்திரமில்லாத சடமும், பூரணச்சந்திரனில்லாத இரவும், அரசர்கள் நேத்திரத்துக்குச் சமானமான மந்திரியில்லாத அரசாட்சியும், கிருபையில்லத மனமும், மஹாபாண்டித்யமுடைய வித்துவான்களில்லாத சபையும், ஒள்ளியமதுரம்பொருந்திய பாலொழுகின்ற கிண்ணம்போன்ற வாயையுடைய புத்திரர்களில்லாத இல்வாழ்க்கையும் சமமென்பதை யுணர்ந்தவெனக்கு நீண்ட நாளாகவந்த வியாகூலமே அதிகரித்துக் கொண்டிருக்கிறதே தவிரவேறில்லை ஆதலாலிதற்கோருபாயஞ் சொல்லுகின்றேன் கவனிக்கவேண்டும் ப்ரபூ.

அரசன் வசனம்.

கவனிக்கின்றேன் சொல்வாயாக.

மந்திரி வசனம்.

அரசே தாங்களும் தங்கள்பத்தினியாகிய கேகயராஜன் புத்திரி சத்தியவதியம்மாளும் நமதுகுலகுருவாகிய வசிஷ்டமஹாரிஷி ஆச்சிரமத்திற்குச் சென்று அன்னவர்யோகமுற்றிய பின்பாதபூசை செய்துஇச்சங்கதியைத் தெரிவிப்பீர்களாகில் யாதொருவழுவில்லாத சூரியகுலமானது சந்ததியற்றுப்போகாமல் எவ்விதத்திலுஞ்சந்த[illegible]ண்டாகும்படி கிருபைசெய்தருள்வார் ஆதலாலவ்விதமே செய்[illegible]பிரார்த்திக்கின்றேன்.

அரசன் வசனம்.

அமைச்சசிகாமணிநல்லயோசனை சொன்னீர் மிகவுஞ் சந்தோஷம் சீக்கிரத்தில் தாதியினிடமாகத் தெரிவித்து எனது பத்தினியாகிய சத்தியவதியை யிங்கழைத்து வரும்படி செய்யும்.

மந்திரி வசனம்.

அவ்விதமேசெய்கின்றேன் ப்ரபூ.

மேற்படி வசனம்.

தாதிநீவிரைவாக அந்தப்புறஞ் சென்று நமதிறைவர்பத்தினியாகிய சத்தியவதியம்மாளைச் சீக்கிரம் அழைத்துவா.

தாதி வசனம்.

உத்தரவுபோல் அழைத்துவருகின்றேன் ப்ரபூ.

மேற்படி வசனம்.

மாதுஸ்திரீ வந்தனஞ்செய்கின்றேன் தாதி.

சத்தியுவதி வசனம்.

கல்யாண் தாதிதற்சமயம்வி ரைவாக நீயிங்கு வந்த காரணம் என்ன?

தாதி வசனம்.

பெண்கட்கரசி தங்கள் பர்த்தாவாகிய திருசக்ருச்சக்கரவர்த்தியானவர் கொலுவிலமர்ந்திருக்குறார் ஆன்தால் தங்களையாங்கழைத்துவரும்படிகூறினர்.

சத்தியவதி வசனம்.

தாதி என்னையென்று பிராணேசரானவர் கொலுச்சமுகத்திற்கழைத்த காரணம் என்ன?

தாதி வசனம்.

மாதுஸ்திரீ யாதுகாரணமோ எனக்குத் தெரியவராது.

சத்தியவதி வசனம்.

சேடி அரசன் ஏதுவிஷயத்திற் கழைத்தாரென்ன அழைத்த சமையம் நாமேகவேண்டிய தவசியமல்லவா? சீக்கிரம் அரசன் சமுகஞ் செல்லலாம் வா.

சத்தியவதிசொல் தரு.

வாடாசாமிவாடா என்றவர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

செல்லுவோம்வா மன்னர்சபைசீக்கிரமதாய்

அனுபல்லவி.

சல்லாபமாகவே சகியேகாமிப்போதே(செல்)



சரணங்கள்.

என்னகாரணமதா யெந்தனையழைத்தாரோ
அன்னமேயதின்சங்கை யாராய்ந்துகொள்ளவே(செ)

வசனம்.

தாதி இதோ யிறைவர் சமுகம் வந்துவிட்டோம் நான் சென்று அரசனை வணங்கி அழைத்த காரணந்தெரிந்து கொண்டு வருகிறேன்.

சத்தியவதி அரசனைவணங்கும் விருத்தம்.

வண்டுபாணரற்றுந்தண்டார் மார்பநீகிலங்கவேயங்குன்
தண்டமிழ்வாணர்சூழத் தாரதிபர்கப்பங்கட்ட
ஒண்டொடிமாதராட லுயர்கொலுவதனில்வாழுக்
கெண்டிரற்புயவென்னுதா சேவடிபோற்றிபோற்றி.

வசனம்.

பிராணநாதா வந்தனஞ்செய்கின்றேன்.

அரசன் வசனம்.

கல்யாண் எனதாசைக்கிசைந்த கண்ணாட்டி சமீபத்தில் வீற்றிரு.

சத்தியவதி வசனம்.

ப்ராணநாதா அந்தபுரத்தினிடமாகச் சகிசனங்களுடன் வீற்றிருந்தவென்னைத்தாங்க ளதிவிரைவாகத் தாதியிடமழைத்து வரும்படியாய் ஆக்ஞாபித்த விஷயம் உத்தரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

அரசன் வசனம்.

பிராணசகி உன்னையிங்கழைத்த காரியந் தெரிவிக்கின்றேன் அஃதிருக்கட்டும் எப்போதும் அலர்ந்த செந்தாமரைப்புட்பத்துக்குச் சமானமாயிருக்கக்கூடிய வுன்முகமானது வாடியிருக்கவேண்டிய காரணமென்ன? அஃதைத் தெரியப்படுத்துவாய்.





## சத்தியவதிசொல் தரு.

என்னகாரணஞ் சொல்லடியென்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சாபு.

பல்லவி.

என்னை வென்றெடுத்துரைப்பேன் என்றுதனே போதனே நீதனே
என்னைவென்றெடுத்துரைப்பேன்

அநுபல்லவி.

மன்னர்மன்னவர்பணி மன்னவாமலர்ப்பாதா
மங்கையா ளித்துருணம்
என்றுதனே போதனே நீதனே (என)

சரணங்கள்.

பிழையென்னசெய்தேனோ ப்ராமணாரவைதேனோ
பேதைநான் னேதுமறியேன்
என்றுதனே போதனே நீதனே (என)

மாதர்களவையினில் மலடியென்றே யெனை
வசைபேசுரு ரையையோ
என்றுதனே போதனே நீதனே. (என)

வையகத்தனிலொரு மைந்தனில்லாக்கொடிய
மாபாவி யாகினனே
என்றுதனே போதனே நீதனே. (என)

வசனம்.

ப்ராணேசா தங்களிடத்தில் எனதையெடுத்துரைக்கப் போகின்றேன் வேறொன்றுமில்லை என்போலொத்த மாதர்களெல்லாம் பிள்ளையில்லாத மலடியென்று வசைசொல்லும்படியாகப் பிரமன்விதித்தானே யென்றவிசனந்தான் அதிகரித்துவருகிறது

அரசன் விருத்தம்.

சம்பகநேர் கொடையாங்கே கயராஜ
னீன்றெடுத்த கண்ணே சீரார்
பொற்கொடியே பூங்குயிலே பூந்திருவே
பொன்மயிலே புகல்வன் கேளாய்

முற்பவமென் செய்தேமோ முறைதவறி
நடந்தேமோ மொழிமா றுன
கற்பனைகள் சொன்னேமோ காதலரில்
லாதமனக் கவலை கொண்டோம்.

வசனம்.

கற்பகத்தருவுக்குச் சமானமான கைகையையுடைய கேகயரா ஜன் அருந்தவத்திலுதித்த என் ஆசைக்கண்ணாட்டி நாமுன்சென் மத்தில் செய்தபாதகமோ அல்லது தற்காலத்தில் தருமசாஸ்திர த்துக்கேதேனும் தவறிநடந்ததின் செயலோ மற்றெதுவோ தோ ன்றவில்லை மைந்தனில்லாதமாபாவியாகினோம் இதைப்பற்றிக் கவ லையடைந்தாவதென்ன ?

(சத்தியவதி வசனம்.) கண்ணாளா.

முன்னால் வெண்பா.

பொன்னுடையரேனும்புகழுடையரேனு மற்
றென்னுடையரேனுமுடையரோ—வின்னடிசிற்
புக்களையுந்தாமரைச்கைப் பூநாறுஞ்செய்யவாய்
மக்களையிங் கில்லாதவர்.

வசனம்.

அதாவது அரசே இனிமையான சோற்றிலேபுகுந்து அளைகி ன்ற தாமரைமலர்போன்ற கைகளையும் செவ்வல்லிமலர் போலத் தோன்றுகிற சிவந்த வாயையுமுடைய பிள்ளைகளை யிவ்வுலகத்திற் பெறாதவர்கள் மிகுந்த திரவியத்தையுடையவர்களானாலும் ம... அனேக மேன்மைகளையடைந்தவர்களானாலும் அஃதெல்லா... லாதவர்களாவார்களே தவிர உடையவர்களாக மாட்டார்கள் என் பது சாஸ்திரம் இவ்விதமிருக்க எம்பெருமான் நம்மையபகீர்த்திக் காளாக வைத்திருக்கும்போது கவலையடையா திருக்கமுடியுமா ப்ரபூ.

அரசன் வசனம்.

கண்மணி நீ யொன்றுக்கும் யோசிக்கவேண்டியதில்லை அதன் விஷயமாகத்தான் உன்னையிங்குவரவழைத்தேன் விபரமாய்க்கேள் சொல்லுகின்றேன்.



சத்தியவதி வசனம்.

கவனித்துக்கேட்குகின்றேன் சொல்லுங்கள் ப்ரபூ.

அரசன் விருத்தம்.

மங்கையே யென்னிருகண் மணியே கேளாய்
மைந்தனில்லா மனவருத்த மதனையானுந்
துங்கமிகு மந்திரிபாற் சொன்னே னன்னோன்
தோன்றலே வசிட்டராச் சிரமஞ்சென்றே
யங்கவர்பால் விண்டானும் மகத்திற் றுக்க
மகன் றுவிடு மெனவுரைத்தா னதனாலே
மங்களமாய் வசிட்டராச் சிரமஞ் சென்று
வாகுடனே வந்திடுவோம் வருகு வாயே.

வசனம்.

ப்ராணசகி நமக்குப் புத்திரனில்லாத மனவருத்தத்தை நமது முதல் மந்திரியாகிய சுபுத்தியிடங்கூறினேன் அன்னவன் தீர்க்கமா யாலோசித்து அரசே நமது குலகுருவாகிய வசிட்டராச்சிரமஞ் சென்று இவ்விஷயத்தைக் கூறினல் உமக்குப் புத்திரனில்லாத வியாகூலந்தீரும்படியான மார்க்கஞ்செய்வாரெனச் சொல்லினன் ஆதலால் இதுசமயமே வசிட்டராச்சிரமஞ் சென்று வாலாமென் றுத்தேசிக்கின்றேன் உனதிச்சையென்ன?

சத்தியவதி வசனம்.

ப்ராணநாதா மிகவும் ஆனந்தங்கொண்டேன் தடையென்ன விருக்கிறது தங்கள்மனம்போலவே வசிட்டராச்சிரமஞ் செல்வோ மவாருங்கள்.

அரசன்மந்திரியிடங்கூறும் விருத்தம்.

மந்திரிசொல்லக்கேளாய் வசிட்டராச்சிரமஞ்சென்று
சிந்தையின்குறையைக்கூறித் திருவரம்பெறறுமீண்டு
வந்திடும்வரையுமிந்த மாநில்செங்கோற்கைகொண்டே
யந்தமாமவனிதன்னை யன்புடனாளுவாயே.

வசனம்.

ஏ ப்ரதான் நீ நமைத்தபடிபோயானும்பத்தினியும் வசிட்டராச் சிரமஞ்சென்று வருகின்றோம் அதுவரையிந்தச் செங்கோலைச்

கைக்கொண்டு யாதொருகுறைவின்றி இராஜ்யபரிபாலனஞ்செய்து கொண்டிருப்பீராக.

மந்திரி வசனம்.

அரசர்க்கரசே மங்களமாகச்சென்று புத்திரப்பேறு பெற்று வாருங்கள் உத்தரவுபோல யாதொரு பின்னமின்றி அரசாட்சி செய்து வருகின்றேன்.

## திருசங்குமஹாராஜனுஞ் சத்தியவதியும் வசிட்டராச்சிரமஞ்செல்லல்.

வாராய்சந்திரவதியே என்றவர்ணமெட்டு.

இராகம் - ரீதிகௌளை - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

போவோம்வாராய் மயிலே
பூஞ்சோலைவாழுங் குயிலே (போ)
வாகுடனின்று மானே
வசிட்டராச்சிரமந் தானே (போ)
சஞ்சலமெல்லா நீங்க
தாரணிதனிற்புக ழோங்க (போ)
பெண்ணேசத்திய வதியே
பிள்ளைவரத்துக்கித் ததியே (போ)
ஆசைரஞ்சித மாதே
ஆரண்யமிதுவேயஞ் சாதே (போ)
மாவேகமாக நாமே
வசிட்டாச்ரமம்வந் தோமே (போ)

வசனம்.

பெண்ணே சத்தியவதி நாம் அனேகதூரம் நடந்து வசிட்டராச்சிரமம் வந்துசேர்ந்தோம் அதோ அன்னவர் வீற்றிருக்குறார் நாமிருவோருஞ் சென்று வணங்குவோம் வா.



## வசிட்டர் தனதாச்சிரமத்திலிருந்து பகவானைத் தோத்திரஞ்செய்யுந் தரு.

சுத்தப்பிரமபராத்மாருமென்றமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

கைலயங்கிரியில்வாழ் நாதா
கங்காதராபார்வதி சமேதா
மயிலவன்றனையேயருள் நீதா
மகேச்சுராமுளரிப் பாதா
கங்கைதிங்களணியுஞ் சடையா
காமதகனவொளிமழுப் படையா
கருணையங்கடலே பவநாசா
காட்சிபார்த்திடிமா மதுரேசா
சர்ப்பாபரணமணி மெய்ப்போதா
சம்போசங்கரா பிறைச்யாதா
ஆலமுண்டருளஞ்செவ் வாயா
அகிலமீதிலடியவர்ச காயா

## திருசங்குவசிட்டமஹாரிஷியைத் தோத்திரஞ்செய்தல்.

சரசஞ்செய்யவா என்றவர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

சரணஞ்செய்குறேன்நாதா சரணஞ்செய்குறேன்

அநுபல்லவி.

சரணஞ்செய்குறேன்குருவே சரணஞ்செய்குறேன் (சர)

சரணம்.

மெய்யவருட்சோதியே தூயபிரம்யாதியே
மெய்யவன்குலகுருவாய் விளங்குநீதியேநாதா. (சர)





வசனம்.

தவராஜா திருசங்கு வந்தனஞ்செய்கின்றேன்.

(வசிஷ்டர் வசனம்.) கல்யாண் திருசங்கு பூபதி.

சந்திரமதி வசிட்டரைவணங்கும் விருத்தம்.

அருள்மிகுநிதியேபோற்றி ஆரணப்பொருளேபோற்றி
கருணைநற்கடலேபோற்றி கானகவாசாபோற்றி
பெருமிதக்குணத்தாய்போற்றி பேசருந்தவத்தாய்போற்றி
தருணமெங்களைக்கண்பாரும் தாளிணைபோற்றிபோற்றி.

வசனம்.

மஹாதவத்திற்சிறந்து பிர்மரிஷிப்பட்டம்பெற்ற எங்கள்குல. குருவே அடியாள் சத்தியவதி வந்தனஞ்செய்கின்றேன்.

வசிட்டர் வசனம்.

கல்யாண் சுபமங்களம் சத்தியவதி.

வசிட்டர் விருத்தம்.

திருவளரயோத்தியாளுந் திருசங்குபூமாநீங்கள்
இருவரும்வாட்டத்தோடே யிவண்வந்திடனென்னசற்றும
மருவிலாவரசுக்கியாதும் வழுவுண்டோவலதுவேறு
மருவலர்பகைதானுண்டோ வழுத்துவாய்வழுத்துவாயே.

வசனம்.

திருசங்குபூபதி நீயு முனதுபத்தினியும் எனதாச்சிரமத்தை நாடிவந்தகாரணம் யாது பூரணச்சந்திரனைப் போன்ற உனது திருமுகமும் உனது பத்தினியாகிய சத்தியவதி திருமுகமும் ஏன் வாட்டமுற்றிருக்கின்றது அரசாளுமைக்கேதேனுங் குறைவேற்பட்டதா? அல்லது மாற்றலரால் ஏதாவதிடையூறுண்டா? விபரமாயெடுத்துரைப்பாயாக.

திருசங்கு விருத்தம்.

குற்றமிலாப் பானுகுல மரபுக்கென்றுங்
குருவாக வந்துதித்த கோவே கேளும்
பற்றலர்கள் துக்கமில்லை மற்று மிந்தப்
பார்புரக்கத் தாக்கமில்லைப் பால னில்லா

துற்றமன வருத்தத்தா லெங்க ளாக
முருகியிவண் வந்ததல்லால் வேறென் றில்லை
இற்றைநா ளிக்குறையைத் தீர்க்க வந்த
னிணையடித்தா மரைமலரை யிறைஞ்சி னேமே.

வசனம்.

யாதொரு குற்றமில்லாத சூரியகுலத்திற்கு வழிவழியா குருவாக வந்துதித்த நாதா அடியேனுடைய அரசாட்சிக்கு தோரிடையூறு மேற்படவில்லை இவ்விதமிருக்க வியாகுலமுண்டா வதற்குக் காரண மென்னவென்றாலோ மேற்கூறிய அரசாட்சியை யெனக்குப்பின் கைக்கொண்டாளுவதற்குப் புத்திரனில்லை யெ ன்பதே ஆகையாலக்குறையைத் தங்களிடம் வெளிப்படுத்திப் புத் திரசந்தான வரம்பெற்றுப்போகலா மென்றிங்குவந்தோம் பரிபூர ணகிருபைசெய்து வரந்தருளவேண்டும் ப்ரபூ.

வசிட்டர் விருத்தம்.

பூதலமோர் குடைகிழற்கீ ழரசுபுரி
திரிசங்கு பூமா யானும்
ஆதரவாய்ச் சொலும்வார்த்தை யதையோர்ந்து
கவுதமராச் சிரமஞ் சேர்ந்து
தீதிலா வன்னவர்தங் திருவடியை
வணங்கியிதைச் செப்பு வாயேல்
காதலனுண் டாகும்வகை கருணைசெய்வா
ரங்குசெல்வாய் களிப்பாய்த் தானே.

வசனம்.

வேலைசூழ்ந்த ஞாலமெல்லாம் விகசிதம்பொருந்திய ஓர்பூச் சக்ரக்குடைநிழலின் கீழிருந்து செங்கோல்புரியும் திருசங்குபூப தி மாட்சிமைதங்கிய சூரியகுலத்திற்கு யான் குருவாகயேற்பட் டும் அக்குலத்துக்குச் சந்ததியீனமாய்ப் போய்விடுமென்று நினை க்குகின்றையா ஒருக்காலும் யீனமாகாது ஆகையால் நீயுமுனது பத்தினியும் கௌதமருடைய ஆச்சிரமத்துக்குச்சென்று அன்ன வருடைய உபயபாதங்களையும் வணங்கிப் புத்திரனில்லாத சங்கதி யைத்தெரிவிப்பாயாகில் அவரெவ்விதத்திலும் பாலகன் கிட்டும்ப டி கிருபைசெய்வார் ஆனதால் மனமகிழ்வோடாங்குன் பத்தினியு டன்செல்வாய்.



திருசங்கு வசனம்.

குருமஹாராஜ் தங்களுத்திரவுபோலவே யானுமெனதுபத் தினியும் கௌதமராச்சிரமஞ் செல்லுகின்றோம் விடைகொடுக்க வேண்டும் ப்ரபூ.

(வசிட்டர் வசனம்.) மங்களமாகச்சென்று வாருங்கள்.

திருசங்கு வசனம்.

ப்ராணசகி நமதுகுலகுருவாகிய வசிட்டருத்திரவின் பிரகா ரம் கௌதமர் ஆச்சிரமஞ்செல்வோம் வருகின்றையா?

சத்தியவதி வசனம்.

செல்வோம் வாருங்கள் ப்ரபூ.

## திருசங்குவேந்தனும் சத்தியவதியும் கவுதம ராச்சிரமஞ்செல்லும் தரு.

போவோம் வாராய்மயிலே யென்றமெட்டு.

இராகம் - நீதிசெவ்வழி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

வாராய்சத்யவதியே மகிழ் வாகக்குணநிதியே. (வா)
குருவுபதேசம்போலே கோதிலாமலேசீக்கிரமே. (வா)
கவுதமராச்ரமமேக கண்மலிசந்தோஷமாக. (வா)
வனம்பலவுங்கடந்தோம் வருத்தமிகவடைந்தோம். (வா)
கவுதமராச்ரமமே காதலியேயிதோவந்தோமே. (வா)

வசனம்.

மாதரசி யிதோ கவுதமராச்சிரமம் வந்துசேர்ந்தோம் அன் னவரிதோ வீற்றிருக்கின்றார் தெரிசிக்கலாம் வா?

சத்தியவதி வசனம்.

நல்லது வாருங்கள் ப்ரபூ.

கௌதமர் தனதாச்சிரமத்திலிருந்து பகவானைத் தோத்திரஞ்செய்யுந் தரு.

ஸ்மரஹரசிவ சங்கரஹேர மென்றமெட்டு.

இராகம் - காபி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

சந்த்ரசேகராசதாசிவாநற் சம்போகைலாசவாசா. (ஆ

அநுபல்லவி.

நந்திபிருங்கிமுனிவர்போற்றும் நளினமலர்ப்பாதா
சந்தனைப்பயின்றதோர்முக் கண்ணுவசரதா
கண்ணுவ நாதா. (ஆ

சரணம்.

மங்கைபாகாவரதாயோகா மார்க்கமதுரேச
கங்கைதிங்கள்சென்னியணி கருணாகரவிச
கருணாகர விசா. (ஆ

திருசங்கு கௌதமரை வணங்குதல் விருத்தம்.

தவமுனிவரர்களேற்றுஞ் சற்குணநிதியேபோற்றி
சிவபிரானருள்பெற்றய்யுந் தேவநற்றேவேபோற்றி
புவனமோர்மூன்றுங்கீர்த்தி பூர்த்தியாய்ப்பெற்றாய்போற்றி
கவலைத்தீர்க்கவந்தன் கழலிணைபோற்றிபோற்றி.

வசனம்.

பவத்தைவிலக்குந் தவத்திற்சிறந்த முனிநாதா வந்தனஞ் செய்கின்றேன் திருசங்கு.

(கௌதமர் வசனம்.) கல்யாண திருசங்குபூபதி.

சத்தியவதி வசனம்.

தவசிரேஷ்டா வந்தனஞ் செய்கின்றேன் சத்தியவதி.

(கௌதமர் வசனம்.) கல்யாண சத்தியவதி.

மேற்படி வசனம்.

திருசங்குபூபதி நீயு முனதுபத்தினியு மென்னிடமடைந்த காரணம் யாது?



திருசங்கு விருத்தம்.

தசினி டன்னோர் கவலையை யகற்றுங்
கவுதம முனிவரே கேண்மின்
மாநிலா தயோத்தி மாநக ராள
மன்னனெனக் தநுச்குச்சக் ததிசர்
வேசனே யில்லாக் குறைகுல குருமுன்
விண்டன னவ்வவர் தம்பாற்
கூடிடா தேகென் றுரைத்தனர் வந்தேன்
குறைதவிர்த் தாளுவீர் கோவே.

வசனம்.

தவசிரேஷ்டா (எழுபிறப்புந்தீயவை தீண்டாப்பழிபிறங்காப் பண்புடை மக்கட்பெறின்) அதாவது இவ்வுலகின்கண் ஒருவன் பிறரால் பழிக்கப்படாத நற்குணநற்செய்கைகளையுடைய ஓர் புத்திரனைப் பெறுவானேயாகில் அவ்வவனுக்கு வினைவசத்தால் [illegible] ஏழுபிறப்பினும் அடையமாட்டா [illegible] மந்திரமன்றோ பிரபு ஆகையால் அடியேனுடைய [illegible] பிபாதும்பொருட்டும் அடியேனுக்குப் பின் அடியேனுடைய பட்டைப் பரிபாலிக்கவும் ஓர் புத்திரனில்லையே [illegible] வியாகூலத் [illegible] பற்றி யெங்கள் சூரியகுலத்திற்கு வழிவழியாய்க் குருவாக [illegible] பட்ட வசிட்ட மஹாரிஷி ஆச்சிரமஞ் சென்றன்னவரிடம் [illegible] தெரிவித்தேன் அதற்கவர் பாலகாகவலையடையாது நீமுனதுபத் தினியும் கௌதமர் ஆசிரமஞ் செல்வீர்களாகில் உங்கள் மனக் குறையெல்லாம் நீங்கிவிடும் சீக்கிரஞ் செல்லுங்களென்று விடை கொடுத்தார் அவருத்தரவைச் சிரமேற்கொண்டிங்கு வந்தோம் [illegible] தாங்கள் கிருபைசெய்து எனக்குச் சந்ததி யுண்டா [illegible] வரந்தந்து ரட்சிக்கவேண்டும் பிரபு.

கௌதமர் வசனம்.

திருசங்குபதி மிகவுஞ் சந்தோஷம் மிகவுஞ்சந்தோஷம் நா [illegible] ருபாயஞ் சொல்கின்றேன் கேட்கின்றையா?

திருசங்கு வசனம்.

முனிசிரேஷ்டா தம்மனுக்கிரகம்போலவே. கேட்கின்றேன்.





கௌதமர் வசனம்.

வேந்தே யென்னுடைய ஆச்சிரமத்தில் சாக்ஷாத் சிவபெருமான் புத்திரனை குமாரக்கடவுளைப்போல அதிக சவுந்தரியமுடையவோர் குழந்தையிருக்கிறது அந்தக் குழந்தையின் சாதகம் மிகவுஞ் சம்பத்துள்ள புத்திரனையும் எல்லாத்தருமங்களையும்பரிபாலிக்கக்கூடியவனையும் பூமண்டலமெல்லாம் ஒருங்காக ஆளும்படியானவனையு மிருக்கிறது ஆதலால் அக்குழந்தையை யானுனக்குத்தருகிறேன் நீபெற்றுககொண்டு சென்று அக்குழந்தைக்கு அரிச்சந்திரனென நாமமிட்டுவளர்த்துப் பட்டாபிஷேகஞ்செய்துனது புத்திர சோகத்தைத் தீர்த்துக்கொள்வாயாக.

திருசங்கு வசனம்.

பிரபு மிகவுஞ் சந்தோஷம் தங்களுத்திரவுபோலவே நடக்குகின்றேன் அக்குழந்தை தங்களுக்கெவ்விதங்கிடைத்தது அக்குழந்தையின் விர்த்தாந்தமென்ன விபரமாய்ச் செல்லவேண்டும்.

உ

பரமபதிதுணை.

## கௌதமர் திருசங்கு மன்னனுக்கு
## அரிச்சந்திரனுற்பவங்கூறல்.

விருத்தம்.

திருமலியுங் கோசலநா டாளும் வேந்தே
செப்புவன்கேள் திசைமுகத்தோன் செம்பொற் பாதம்
மருவிலா திகிர்தக்கன் றனக்கு வாய்த்த
மன்னிவிசக ரணிகௌரி விரத மாண்பா
லிருபத்தேழ் தினமனுட்டித் தேழ்நல்
லெழிலுறுநாட் சேத்திரமா தனையே யீன்றாள்
உருவில்மிக்கம் மாதரில்லோ கணியா ளென்பா
ரோங்குபே ரழகதிக முடையா ளானள்.

பாங்காயப் பெண்களைச்சந் திரனுக் கிந்து
  பகருவான் றக்கனெனல்போன் பார்த்தி பாகே
ளிங்கடையா வென்மாதர் தன்னை யோர்மா
  திரியாப்பா வித்தேசேர்க் கில்வா ழென்றான்
ஆங்கவனு மதனைமறந் தரிவை மாரை
  யழைத்தகன்று தன்னிடம்போ யடைந்து காரார்
பூங்குழல்சேர் கனிமாதை யணைந்து மற்றப்
  பூவையரை வெறுத்தான்போ தனையி னாலே.

அம்மாதர் பிதாவினிட முறைக்க வன்னோ
  னப்போதே சந்திரனை வரவ ழைத்தாங்
கெம்முறையை மறுத்தகினுற் கலைக ளெல்லா
  மீனுற கக்கடவா யெனச்ச பித்தார்
அம்முறையைக் கேட்டவுடன் சோமன் றுக்க
  மடைந்தந்த தரிவையர்தந் தையின்பால் வேண்டிச்
செம்மையாக் கலைவளரக் குறைய வேதான்
  சீர்த்தியாய் வரம்வாங்கி வாழும் நாளில்,

இராகதோ ஷங்களினும் பனிரெண் டாண்டு
  கிளர்வான மாரிகுன்ற வெப்ப மேலா
யுரகமுடிப் பாரின்மிசை யோங்கச் சோம
  னுடல்வெதும்பி நங்கையர்க ளுடனே வானி
விரகமுடன் தேடியுங் காணுமலெந்த
  விதமோவென் றாச்சிரமம் புக்கிச் சீரார்
வரகங்கை நிகர்தடா கத்தைக் கண்டு
  மகிழ்வாக நீராடி வானிற் சென்றான்.

சென்றபின்னர் நித்தியகர் மங்கள் செய்யத்
  திகழ்வாவிக் கரைசேர்ந்தேன் நீர தெல்லாம்
மன்றலுடன் மஞ்சணிற மாகத் தோன்ற
  மதித்தினிமே லிதனினீ ராடு மாதர்
வென்றியா டவராகப் புருட ரெல்லா
  மெல்லியர்க ளாகவென வெகுளி யாலே
கன்றியதோர் மனதுடனே சாப மிட்டுக்
  கடுகியே வக்கணமே வந்தே னிங்கே.



அன்றேநகன் மாலைதனிற் பெண்கள் வேண்ட
  ஆவலுடன் மற்றுமந்த வாவி வந்து
நின்றிரைமோ துங்கரையி லரிவை மாரை
  வைத்துமதி தனியாய்நீ ராட லோடும்
நன்றான புருடவுரு வங்க ளாகி
  நங்கைவடி வம்பெற்றுக் கரையிற் சேர்ந்தான்
நின்றமட மாதரெல்லாங் கண்டு வாடி
  நெஞ்சுலர்ந்து முகுந்தனையே துதிக்க லானார்.

மங்கையர்கள் முறைகேட்டு வந்து கண்ணன்
  மதிதனைக்கண் டதிமோக மாகிச்சேர்ந்தார்
மங்களமா யப்புணர்ச்சி யதனில் யான்சொல்
  மைந்தனவ தரித்தானன் னேனையாங்கு
துங்கமுட னிலைகளின்மே லிடவே செய்து
  தோன்றலுறைக் குஞ்சோமா விடிந்த தேதோ
பொங்கமுட னிவ்வாவி தனில்நீ ராடிப்
  புருடவடி வம்பெறென் றுபுகன்றார் மன்னே.

அந்தமொழி யதைக்கேட்டவ் விதமே செய்ய
  வழகான முன்னுருவ மடைந்தான் சோமன்
விந்தையெலாங் கவுதமனால் நடந்த தென்று
  வினயமிதில் நீராட வேண்டா மென்னச்
சந்திரனுஞ் சம்மதித்தா னவன்றன் காதற்
  றையல்கள் பக்கமடைந் தாங்கள் நாதன்
அந்தமாய் முன்னைவடி வம்பெற் றுனென்
  றுரைத்துமறைந் தார்மாத ரகங்க ளித்தார்.

மாதரகங் களிப்பாக மனவா ளன்பால்
  வந்திருந்தா லவன்றனக்கு வாய்ந்த வெல்லாம்
நீதியன்னோ ருடன்கூடி யிருக்கை சேர்ந்தா
  லுலகெட்ச கமெனுமுன் னுதித்தார் யானும்.
பாதமதைப் பணிந்தேன்மா தவரே கேளும்
  பண்பாய்நீ ரிருங்கார வனத்தி னுற்ற
நீதிலாச் சிரமைக்காப் பாற்று மென்றுச்
  செய்கையெல்லா முரைத்தகன்றார் தெளிவாய்த்தானே

அச்சுதனு ருறைகேட்டு யானு மேகி
யச்சுதனைக் கண்டெடுத்து வந்து சீரார்
மச்சகமும் புகழரிசந் திரனுங் கூடி
முயங்கியே யீன்றதனு லாச ரேறே
இச்சையுட னேயரிச்சந் திரனைப் பே
ரிட்டுவளர்த் துவருகின்றே னெழிலாய் நீயுந்
தச்சணமே பெற்றேகிப் புத்ர சோப
தாபமொழித் தேவாழ்வாய் தகையாய் மாதே. ௨

வசனம்.

மாட்சிமைதங்கிய செந்திருவாழுஞ் சுந்தரக்கோசலை அந்தமாய்ப்புரக்குந் திருசங்குபூபதி யான் சொல்வதைக் கவனித்துக் கேட்பாயாக அதாவது சகலசிருஷ்டிக்குங் காரணகர்த்தாவாகிய பிரமனுடைய சிவந்தபாதத்தினிடமாக யாதொரு குற்றமில்லாமலுற்பவித்த தக்கனுடைய பத்தினியாகிய (சுகரணி) என்பவள் இருபத்தேழுநாள் (கௌரி) விரதமனுஷ்டித்து அஸ்வனி, பரணி, கிருத்திகை, ரோகணி, மிருகசீரிடம், திருவாதிரை, புனர்பூசம், பூசம், ஆயில்யம், மகம், பூரம், உத்திரம், அஸ்தம், சித்திரை, சுவாதி, விசாகம், அனுஷம், கேட்டை, மூலம், பூராடம், உத்திராடம், திருவோணம்; அவிட்டம், சதயம், பூரட்டாதி, உத்திரட்டாதி, ரேவதி, என்ற, இருபத்தேழு நட்சத்திரங்களாகிய மாதர்களைப் பெற்ருள் இவர்களில் ரோகணியென்னு மாதானவள் அரம்பை மேனகை, திலோர்த்தமை, ஊர்வசி, என்ற தேவமாதர்களைப்பார்க்கிலும் அதிக சவுந்தரியமுடையவளா யிருந்தாள் இவ்விதமிருக்குங்கால் மேற்கூறியமாதர்கள் தக்கபருவமடைந்த சமயம் அம்மாதர்களைப் பிதாவாகிய தக்கனானவன் பஹுரூபலாவண்யமுடைய பதினறுகலைகளைப்பொருந்திய சந்திரனுக்கு விவாகஞ்செய்து கொடுத்து ஓ சந்திரனே எனதுபுத்திரிக ளிருபத்தேழுபேர்களையும் பாரபக்ஷமில்லாமல் ஏகபாவமாய்ப் பாவித்துச்சேர்ந்து சந்தோஷமாயிருமென்று கூறி அனுப்பச்சந்திரனானவன் சம்மதித்துப் பெண்களையழைத்துக்கொண்டு தனதிருக்கைக்கு வந்து தக்கன்சொன்னவார்த்தையை மறந்து அழகில்மிகுந்த ரோகணியை மட்டுஞ்சேர்ந்து சரசசல்லாப லீலாவினோதங்களை யனுபவித்துக் கொண்டிருந்தான் இதையறிந்த மற்றுமிருபத்தாறு மாதர்களுஞ் சகிக்காதவர்களாய்



னதுதந்தையாகிய தக்கனிடத்தில்வந்து முறையிட அச்சமயமே அன்னவன்சந்திரனுக் காள்விடுத்து வரவழைத்து ஓ சந்திரனே யான்சொன்னவார்த்தைதக்கி நீமீறிநடந்ததினால் உனது கலைகளெல்லாம் க்ஷீணமாகப்போகக் கடவதென்று சபிக்க அக்ஷணமேதனது சேர்ட்சகலைகளையுமிழந்து வருந்திக் கொண்டிருக்குஞ் சந்திரனையன்னவன்பத்தினிக ளிருபத்தேழுபேர்களும் பார்த்து மிகுந்ததுக்கமடைந்து தங்கள் தந்தையாகிய தக்கனைப்பணிந்து பிதாவே எங்களுக்குள் [illegible]ஷேணை யில்லாமல் எங்களையெல்லாம் ஏகபாவமாய்ப் பா[illegible]த்துக்கொண்டு வரும்படிசொல்லி எங்கள் பர்த்தாவுக்கு பூர்ண கலைகளுண்டாகும்படி செய்யவேண்டுமென்று பிரார்த்திக்க அதைக்கேட்டதக்கன் சந்திரனிடத்தி லுறுதிவாங்கிக்கொண்டு ஒருபட்சம் கலைகள்வளரவும் ஒருபட்சம் கலைகள் குறையவும் வரங்கொடுத்துத் தவிர பௌர்ணமியன்று ரோகணியுடன் கூடிச் சுகித்திருமென்று விடையளித்தனுப்பச் சந்திரன் சந்தோஷித்துப் பெண்களுடன் [illegible] திருப்பிடம் வந்து சிர்த்தியாக வாழ்ந்துவருகிற காலத்தில் நவக்கிரஹதோஷத்தால் பூமண்டலத்தில் பனிரெண்டுவருடம் மழைபெய்யாமல் வெப்பம் அதிகரித்து சந்திரமண்டலத்தையளாவச் சந்திரனைத் சகிக்காதவனாய்ப் பெண்களுடனே ரதத்திலாரோகணித்து நீராட வெண்ணித் தடாகத்தை தேடிவருகையில் தடாகங்களெல்லா நீர் வற்றியிருப்பதைப் பார்த்துத்துக்கித்து மற்றுமெங்கிருமோ வெனதாச்சிரமத்தைக் கண்டுட்புகுந்து கங்காநதிக்குச் சமானமான தடாகத்தைக் கண்டுள்ள மகிழ்வெய்தி மாதரோடுநீராடித் தனதிருப்பிடஞ் சென்றான் அன்னவன் சென்ற பின்னர் யான்காலையில் நித்யகர்ம முடிப்பதற்காக மேற்சொன்ன தடாகக்கரையை யணுகிப்பார்க்குங்கால் தடாக ஜலமெல்லாம் மதுரசனிறமாகப் பரிமளமிருக்க வாசத்துடனே தோன்ற யான் ஆச்சரியமடைந்து ஞானதிருஷ்டியால் ஆங்கு நடந்தவை யெல்லாந்தெரிந்து என்மனமானது வருந்திக் கோபமுண்டாகி இனிமேலித்தடாகத்தில் நீராடு மாதர்களெல்லாம் ஆடவர்களாகக் கடவது ஆடவர்களெல்லாம் மாதர்களாகக் கடவதென்று சாபமிட்டுத்திரும்பி ஆச்சிரமத்துக்கு வந்துவிட்டேன் அப்பாலன்றுமாலையிலேயே அஸ்வனிமுதலிய விருபத்தேழு மாதர்களும் வேண்டச்சந்திரனானவன் அதிக ஆசையுடனே மீண்டுந் தடாகத்துக்கு வந்து மாதர்களையெல்லாங் கரையில்நிறுத்திவிட்டுத் தனியாகநீராடிக் க

ரையே றுங்கால் சோட்ச கலைகளோடுங்கூடிய புருஷவடிவமான இ
நீங்கிப் பெண்ருபமானன் அதைக்கண்ட கவரயினின்றவன்னவன்
பத்தினிகளெல்லாஞ் சொல்லொண்ணாத துக்கமடைந்து சாக்ஷா
த் கிருஷ்ணபரமாத்மாவை நோக்கித்துதித்தார்கள் அந்தத்துதிக்
காகக்கண்ணபிரான் கிருபைகூர்ந்து மாதர்கள் முன்னிலையில் வரு
கையில் ப்ரதமத்தினின்ற சந்திரனை பெண்ணாக்கண்டு மிகுந்த
மோகமாகிப் பக்கத்திலழைத்துக் கொண்டுபோய் சரசல்லாபவி
லாவிநோதத்தோடு கூடினர் அத்தருணமேமங்களமகத்துவான்சொ
ல்லக்கூடிய பாலகனானவன் அவதரித்தான் அப்பால் கிருஷ்ணப
மாத்மாசந்திரனைபெண்ணைப்பார்த்துச் சந்திரா இதோசூரியோ
யமாகுந்தருணமாய் விட்டது ஆகையால் நீவிரைவில் குழந்தையை
யெடுத்துச் சருகிலைகளின்மேற் கிடத்திவிட்டு மீண்டுமிந்தத் தடா
கத்திலேயே நீராடிப்பழைய வடிவத்தைப் பெற்றுக் கொள்வா
யென்றுகூறச் சந்திரனானவன் அன்னவருத்திரவுபோலவே அந்த
டாகத்தில் நீராடி ஆடவருருவம்பெற்று திரும்கையில் கிருஷ்ணபர
மாத்வானவர் சந்திரா இவ்விஷயமெல்லாம் கவுதமனால் நடந்த
ஆனதாலினிமேலிதில் நீராடவேண்டாமென்று மொழிந்து சந்தி
ரனைச் சம்மதிக்கச்செய்து அன்னவன் பத்தினிகளிடத்து வந்து
மாதர்களே யுங்கள் பர்த்தா முன்னையவுருவம்பெற்றுரென்று சொ
ற்றிமறைந்தனர் அவ்வசனத்தைக் கேட்ட மாதர்களெல்லாம் சந்
தோஷமாகித்தங்களுடைய நாயகனிடத்தில் வந்தன்னவன் பாதத்
தைப்பணியச் சந்திரனானவன் அம்மாதர்களிடத்தில் தனக்கு நிக
ழ்ந்தவையெல்லாஞ்சொல்லி ரதத்தி லாரோகணித்துத் தனதிரு
ப்பிடஞ்சென்றனன் பிறகுபரமாத்மாஎன்முன்னம் பிரசன்னமாகி
ர்ட்டனேயான் அன்னவர் பாதத்தைப்பணிந்து நிற்கையில்தவத்தி
ற்சிறந்தகௌதமரே யுமதுசிருங்காரவனத்தி லிடமாகச்சருகி
லின்மேற் கிடத்தியிருக்கிற குழந்தையையெடுத்துக் காப்பாற்று
மென்று அதன்விர்த்தாந்தமெல்லாந் தெளிவாகமொழிந்து போ
னார் அப்பாலன்னவருரைப்படியே யான்சென்று சருகிலைகளின்
மேற்கிடத்தியிருந்த குழந்தையைக்கண்டுசந்தோஷமா யெடுத்து
வந்து சுவர்க்கமத்திய பாதாளமென்ற மூன்றுலகமும் புகழ்ந்த
ய அரியும் சந்திரனுஞ்சேர்ந்து பெற்றதினால் அக்குழந்தைக்கு அ
ரிச்சந்திரனென்ற நாமமிட்டு வளர்த்துவருகிறேன் இதுதான் அக்
குழந்தையினுடைய விர்த்தாந்தம் ஆகையாலக்குழந்தையைத் த



[illegible]னமோராஜனுக்குத் தருகிறேன் பெற்றுக்கொண்டு உன் துக்க
மடைந்து சித்தியாகவளர்த்துப்புத்ரசோகத்தைத்தீர்த்துக்கொ
ள்வாயாக.

## திருசங்கு விருத்தம்.

அருந்தவர்க்கதாகேள் வன்பேயல் வண்புருவ மாமிகைந்த
பெருந்தகையேபிறையணிந்த பெம்மானைப்போற்றியெம்பே ரின்பவாழ்வே
இருந்தவனே தாம்பகர்ந்த நியமவச னந்தாற்கோ தோதை மானேன்
பெருந்[illegible]ம்மகவை யெனக்களித்துப் புகழ்மெய்தப் போற்றினேனே.

## திருசங்குசொல் தரு.

இராமமகிபனை தயாலவென்ற மெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாதவமுனிநாதர்வந்தன் மலரமலரடிசரணஞ்சரணம்

அநுபல்லவி.

கோதிலாதமெய்மைப்போதனே குவலயமீதினிற்ப்ரக்யாதனே
குருவேகுருவே குருவேகுருவே. (மா)

சரணம்.

ஆதவன்றன்குலமேதழைக்க அடியேன்மனத்தினமுங்களிக்க
அருள்வீர் அருள்வீர் அருள்வீர்அருள்வீர். (மா)

பெட்டாயந்தமகவைவிவ்வேளை பிரியமாகக்கொடுத்துப்புகழைப்
பெறுவீர் பெறுவீர் பெறுவீர்பெறுவீர். (மா)

(வசனம்.) மாதவத்திற்சிறந்த முனிநாதா தாங்கள் சொல்லி
வந்த சங்கதிகளியாவற்றையுங்கேட்டு மிக்க சந்தோஷமடைந்தேன்
ஆகையாலந்தக்குழந்தையை யெனக்கீய்ந்து புகழைப்பெறப் பிரா
ர்த்திக்கின்றேன் ப்ரபு.

## கவுதமர் அரிச்சந்திரனை திருசங்குமன்னனிடங் கொடுக்குமபாகம்.

கௌதமர் வசனம்.

அகலிகை பாலகன் அரிச்சந்திரனை யிங்குகொண்டுவா.

(அகலிகை வசனம்.) இதோ கொண்டுவந்தேன் ப்ரபு.





கௌதமர் வசனம்.

பெண்களை அகலிகா இந்திர சம்முன்னம் இறங்கி அயோத்தி யம்புரிக்கோசனை திருசங்குபூபதியையும் அன்னவன் பத்தினியாகி ய சத்தியவதியையும் பார்த்தனையா இவர்களுக்குப் புத்திரனில்லா ததினால் மிகுந்த துக்கமுடையவராய் வசிட்டாச்சிரமஞ் சென்று அன்னவரிடம் முறையிட அவர் நம்மிடமனுப்பியிருக்கிறார். ஆகை யாலிந்தப்புத்திரனை யிவர்களிடங் கொடுத்திவர்கள் புத்திரசோபத் யகற்றுவிக்க வேண்டுமென்றெண்ணுகிறேன் உனதிச்சையென்ன.

அகலிகை வசனம்.

நாதா தங்கள் சித்தம் எப்படியோ அப்படியே எனதுசித்தமு மாகும் இதுவரைவளர்த்த ஓர் ஆசையானது இக்குழந்தையை ப்பிரிந்திருக்க மனமில்லாதிருக்கிறது. ஆனாலுமென்ன மகாதுக்க த்தாலிக் குழந்தை விக்கினமாகத்தானே யிருக்கிறது ஆனதால் அவர்களுக்கே கொடுத்துவிடப் பிரார்த்திக்கிறேன் பிரபு.

(கௌதமர்வசனம்.) திருசங்குபூபதி சத்தியவதி இவ்விருவரு ங்கள் மங்களமாக இந்தப்புத்திரனைப் பெற்றுக்கொள்ளுங்கள்.

## திருசங்கு குழந்தையைப் பெற்றுக்கொண்டு சத்தியவதியிடம் அக்குழந்தையி னழ கைப் புகழ்ந்து சொல்லுதல்.

காதாவந்தனம் என்றவர்ணமெட்டு.

இராகம்-குட்டை-தாளம்-ஆதி

பல்லவி.

என்னசொல்லுவேன் இவனழகைஎன்னசொல்லுவேன்
இவனெழில் என்னசொல்லுவேன்

அநுபல்லவி.

அன்னமேமயிலேபெண்கட் கரசேசத்யவதியே. (என்)

சரணம்.

சந்திரபிம்பமுகமும் அந்தாஞ்சேர்களமும்
தகைசேர்திருமுடியும் யாவர்களு
முவகையார்மார்பும் இவனழகை. (என்)

வண்டுநிகர்விழியும் கண்டமுத[illegible]மாழியும்
வாரிசமலரேயும் செப்பவொ[illegible]ண்ணுவு
தாரம்பொருந்துவாயும் இவனழகை[illegible] (என்)

வசனம்.

மாதே சத்தியவதி பூரணச்சந்திரனைப் போன்ற திருமுகமும் செந்தாமரை மலர்போன்றவாயும் வண்டைநிகர்த்த விழியும் கற்கண்டும் அமுதமும்போன்ற வசனமும்உடைய இந்தப்பாலகனுடைய வடிவத்தைப் பார்த்தனையா இராஜ லக்ஷணக்குறைவ[illegible]இருக்கிறது என்ன ஆச்சரியம்.

சத்தியவதி வசனம்.

ப்ராணேசா தேவஅம்சத்தில் பிறந்தபாலகனுக்கு என்னகுறைவு ஏற்படும் நாம் முன் ஜென்மத்திற் செய்ததவந்தான் இப்பாலகன் நமக்குக் குழந்தையாகக் கிடைத்தது ப்ரபூ.

திருசங்கு வசனம்.

கண்ணாட்டி நீயுரைத்தபடியே முன்ஜென்மத்திற்செய்த தவந்தான் இப்பாலகன் நமக்குக்கிடைத்தான் சீக்கிரத்தில் தவசிரேஷ்டரானகௌதமரிடத்தில் உத்தரவு பெற்றுக் கொண்டு நமது நகரஞ்செல்வோம்வா.

(சத்தியவதி வசனம்.) உத்தரவுபோல வருகிறேன் ப்ரபூ.

## திருசங்குகுழந்தையைப்பெற்றுக்கொண்டு நகரத்துக்கு வரும்பாகம்.

பன்னகசயனு ராஜா என்றமெட்டு.

இராகம்-தோடி. - தாளம்-ரூபகம்.

பல்லவி.

சென்றுவருகின்றேநாதா செந்தாமரைமலர்ப்பாதா

அனுபல்லவி.

நன்றிசேர்பாலனைக்கூட்டி நாங்களுங்கவலைவீட்டிச் (செ)

சரணம்.

தலத்திற்சிறந்தபூமா சற்சனர்கள் அதிநேமா
பவத்தைவிலக்கும்போதா பண்பாய்கிடைதாருநீதா. (செ)



வசனம்.

பவத்தைவிலக்குந் தவத்திற்சிறந்த முனிநாதா பாலகனுடன் நகரத்துக்குச்செல்ல வுத்தரவுகொடுக்கவேண்டும்.

கௌதமர்வசனம்.

திருசங்குபூபதி கவலைமாய்க்கேள் இந்தப்பாலகன் தேவ மசத்திற் பிறந்தவனுகையால் இரண்டுவயதிலேயே சகலசாஸ்திரமும் போதித்திருக்கிறேன் ஆகையா லிவனைக் கொண்டுபோய் ளர்த்துவசிட்டர்மூலமாய் இராஜநீதி போதித்து மகுடாபிஷேகஞ் செய்து சுகமாய்வாழ்வாயாக நீயுமுன துபத்தினியும் பாலகனுஞ் சென்றுவாருங்கள்.

(திருசங்கு வசனம்.) அநேகவந்தனம்ப்ரபூ.

கௌதமர்வசனம்.

கல்யாண மங்களமாகச் சென்றுவாருங்கள்.

திருசங்குசொல் தரு.

நாதனேவருவீரென்னுடன் என்றவர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

நங்கையாளேசெல்லுவோம்வாராய் நமதுநகர்க்கே (ந)

அநுபல்லவி.

மங்கையேசத்யவதியே மகவுடனித்தநியே
மங்களமாகநடந்து வனங்கள்தனைக்கடந்து. (ந)

சரணங்கள்.

மனதின்விசனமெல்லாம் மாதவமுனிவராலே
அனமேமயிலேபொன்னே யகற்றினோமாகையாலே. (ந)
கெண்டைநிகர்விழியாய் கண்டமுதமொழியாய்
ஒண்டொடிமாதேநாமே யுயர்வனங்கடந்தோமே (ந)
அயோத்தியாபுரிப்பதி யதோதெரிவதுபாராய்
மெய்த்தவடிவுடையாய் நடந்துநிகேலேசிராய். (ந)



வசனம்.

ப்ராணசகி நாம் கௌதமாச்சிரமத்திலிருந்து பாலகனுடன் மிகுந்த சந்தோஷமாய் ஆரண்யம் யாவற்றையுங்கடந்து அயோத்தி மாநகரத்துக்குட் பிரவேசித்து நமதரண்மனை முகப்பில் வந்துசேர்ந்தோம் ஆகையால்நாம் வந்த விஷயத்தைச் சேவகன்மூலமாய்மந்திரிக்கறிவித்தெரியும்படி செய்கிறேன்.

(சந்திரமதி வசனம்.) அவ்விதமே செய்யுங்கள் ப்ரபூ.

(அரசன் வசனம்.) ஆரடா ஆசாரவாசலின்கண் சேவகன்.

(சேவகன் வசனம்.) மஹாராஜ் வந்தனஞ்செய்கின்றேன்.

(அரசன் வசனம்.) கல்யாண் சேவகா மந்திரியிடஞ்சென்று யான் வந்திருக்கிறதாகத் தெரிவித்தழைத்துவா.

(சேவகன் வசனம்.) அவ்விதமேதெரிவிக்கின்றேன் ப்ரபூ.

மேற்படி வசனம்.

ப்ரபூ நமதரசரும் மாதாஸ்ரீ சத்தியவதியம்மாளும் அரண்மனை முகப்பில்வந்திருக்கிறார்கள் தங்களிடந்தெரிவிக்கச்சொன்னார்கள்.

சுபுத்தி மந்திரி வசனம்.

சேவகா மிகவுஞ் சந்தோஷம் சீக்கிரத்தில் பெரியமேளகாரர் சின்னமேளகாரர் இவர்களை அழைத்துவா.

(சேவகன் வசனம்.) இதோ அழைத்துவருகிறேன் ப்ரபூ.

சுபுத்தி மந்திரிவாத்திய கோஷ்டத்தோடுவந்து அரசனை வணங்குதல்.

விருத்தம்.

வேந்தர்கள்வேந்தேபோற்றி திருபுகழுடைத்தாய்போற்றி
சாந்தமார்குணத்தாய்போற்றி சற்சனர்நேசாபோற்றி
பாந்தள்தன்முடிமேலுற்றபாரெல்லாஞ் செங்கோலோச்சும்
ஏந்தலேவனசகேருமிணையடி போற்றிபோற்றி.

(வசனம்.) அரசர்க்கரசே வந்தனஞ்செய்கின்றேன் மந்திரி.

அரசன் வசனம்.

கல்யாண் மந்திரி உமதுநன்மதியால் மங்களமாய்வந்துசேர்ந்தேன்.

மந்திரி வசனம்.

அரசே ஈஸ்வரச்செயல் கொலுமண்டபத்துக் கெழுந்த ங்கள்.

அரசன் வசனம்.

நல்லதப்படியே செல்வோம் பெண்ணே சத்யவதிநான் கொலு மண்டபத்துக்குச்செல்கின்றேன் நீபாலகனுடன் அரண்மனைக் செல்வாய்.

(சத்தியவதி வசனம்.) நல்லது ப்ரபூ.

# திருசங்குமகாராஜன் இரண்டாவதுசபை

## திருசங்குசொல் தரு.

பாரசரிதோ வச்ரபாணி என்றவர்மெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

திருவளருங்கோசலையாள் பிரகெம்பிரான்
மருவிலாததிருச்சங்கு மன்னனெய்யரான்
தாரணிபுகழ்ந்திடும்பூச் சக்கரக்குடையான்
ஆரணமெலாமுணர்ந்தோ ணரியதோர்படையான்
பங்கயப்பெண்வாழ்ந்திலங்கும் பாங்குயர்கரான்
சங்கடம்வரினும்பொய் தன்னையேபகரான்
மந்திரிதந்திரிகளுடன் மகிழ்வுடன்தானே
விந்தையாக்கொலு விருக்க விரைந்துவந்தேனே

சபுத்திமந்திரி வசனம்.

அஞ்சினர்வாக்கிலிருந்தம்பு போர்பாய்ந்தமட்டு மிஞ்சினர் மார்புருவிவிம்படக்கும் ஆணையையுடையவேந்தேமந்திரி சபுத்தி வந்தனஞ் செய்கின்றேன்.

(அரசன் வசனம்.) கல்யாண் மந்திரி சமீபத்தில் வீற்றிரும்.

சேவகன் வசனம்.

அரசர்க்கரசே வந்தனஞ்செய்கின்றேன் சேவகன்.

(அரசன் வசனம்.) கல்யாண்சேவகா துவாரத்தின்கண் உசா ரய்க்காவல் புரிவாயாக.



(சேவகன் வசனம்.) உத்தரவு மகாராஜ்.

அரசன் வசனம்.

ஏ ப்ரதான் யானும் எனதுபத்தினியும் புத்திர வாத்சல்யக வசிட்டராச்சிரமஞ் சென்றதுமுதலி துவரை யாதொருகுற்றமில்லா மல்செங்கோல் புரிந்து வந்நீரா?

மந்திரி வசனம்.

அரசே தாங்களெவ்விதமா யாசபுரிந்து வந்தீர்களோ அது போலயானும் யாதொருகுறைவின்றி யாசபுரிந்து வந்தேன் ப்ரபு.

(அரசன் வசனம்.) மிகவுஞ் சந்தோஷம்.

மந்திரி வசனம்.

கோசலாதிபா தாங்கள் வசிட்டராச்சிரமஞ் சென்றது முதலி துவரை நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லப்பிரார்த்திக்கின்றேன்

அரசன் வசனம்,

ப்ரதான் தம்மிடத்தில் விடைபெற்று யானும் சத்தியவதியும் ஆரண்யவழியாய்வசிட்டராச்சிரமஞ்சென்று அன்னவரைவணங்கி ப்பாலகனில்லா தகுறையைமுறையிட அவர்கோசலாதிபரசஞ்சலம டையவேண்டாம் நீ சீக்கிரத்திலெனதமாச்சிரமஞ் செல்வாயா னுன துகுறையெலா மகன்றுவிடுமெனக்கூற அன்னவரிடத்திலு த்தரவு பெற்றுக்கொண்டெனதமாச்சிரமம்வந்து அவ்வரைவணங் கி மேற்கூறியவற்றைச்சொல்ல அன்னவர் பாலகா ளெல்லாவுலகங் களையும் பரிபாலிக்கின்ற சாதகத்தையுடைய அரிச்சந்திரனென்ற ஓர்பாலகன் என்னிடத்திருக்கின்றான் அவனைப்பெற்றுச் செல்கி ன்றையா வென்றுகேட்டனர். ப்ரபு தங்களுத்தரவுபோலப் பெற் றுக்கொள்ளுகின்றேன் அப்பாலகன் விர்த்தாந்தத்தைச் சொல்ல வேண்டுமென்றுகேட்டேன் உடனேயவர் அக்குழந்தையின் விர்த் தாந்தமெல்லாம் சொன்னார் அதையானும் சத்தியவதியுங் கேட்டு சந்தோஷித்து குழந்தையைப்பெற்றுக்கொண்டு அன்னவரைவண ங்கி மங்களமாக இங்குவந்து சேர்ந்தேன் ஆகையால் ஜோதிசங்க மபாதேசிகள் முதலியவரியோர்களை வரவழைத்துத் திரவியசாலை யைத்திறந்து அன்னவர்கள் விரும்பினமட்டும் அள்ளிக்கொண்டு போம்படிசெய்யும்.



57

மந்திரிவசனம்.

அரசே அதிகசந்தோஷம் அவ்விதமேசெய்கின்றேன்.

ஷை வசனம்.

சேவகா நமதரசர் கௌதமரிடம் அரசுக்குரிய சற்குணபுத் திரனைப் பெற்றுவந்தனராதலால் சீக்கிரத்தில் மதயானையின்மீது தானமுரசை யேற்றியறைந்து ஜோதிசங்கமபாதேசிகள் முதலிய வரியோர்களை வரவழைத்துத் திரவியசாலையைத்திறந்துவிட்டு வே ண்டியவற்றை அள்ளிக்கொண்டு போம்படிசெய்.

சேவகன் வசனம்.

அப்படியே செய்கின்றேன் ப்ரபு.

---

வசிஷ்டர் திருசங்கு கௌஷிகமுகப்பகவானை ஸ்தோத்திரஞ் செய்துக்கொண்டு வருதல்.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

கைலயங்கிரியில்வாழ் — காதா
கங்காதாரபார்வதி — சமேதா
மயிலவன்றனையேயருள் — நீதா
மகேச்சுராமுனிவிப் — பாதா
கங்கைதிங்களணியுஞ் — சடையா
காமதகனவொளிமழுப் — படையா

---

(வசனம்.) ஆரடா ஆசிரமவாசலில்கண் சேவகன்.

(சேவகன்வசனம்.) ப்ரபு வந்தனஞ்செய்கின்றேன்.

வசிஷ்டர் வசனம்.

கல்யாண் சேவகா உனதரசனிடஞ்சென்று ஆசிரமவாசலின் கண் வசிஷ்டமகரிஷி வந்திருக்கிறாரென்று தெரிவி.

(சேவகன்வசனம்.) அப்படியே தெரிவிக்கின்றேன்.

சேவகன் வசனம்.

மகா---- ஆசிரமவாசலின்கண் வசிஷ்டமகரிஷி வந்திருக்கின்றார்.

அரசன் வசனம்.

பிரதான் ஆசாரவாசலின்கண் வசிஷ்டமகாரிஷி வந்திருக்கின்றாராம் அன்னவரை எதிர்சென்று அழைத்துவருவோம்வாரும்.

(மந்திரிவசனம்.) இதோவருகின்றேன் ப்ரபூ.

## திருசங்குமஹாராஜன் வசிஷ்டரை வணங்குதல்.

கண்ணிகள்.

வந்தனம்புரிந்தேநாதா மாசிலாதமலர்ப்பாதா
சிந்தையாய்மனமகிழ்ந்து சிறியனுன்மிகப்பரிந்து. (வ)
மாதவமேபுயர்போதா மகிதலத்திற்பிரக்யாதா
ஆதவன்குலத்துதித்த வாசவிதோபுநீதா (வ)
வருதிபோலவேயானே மாமுனிவரிடந்தானே
குருவேமசவைப்பெற்றேன் குறைகளகற்றிவிட்டேன். (வ)

(வசனம்.) குருமகாராஜ் வந்தனஞ்செய்கின்றேன்.

(வசிஷ்டர் வசனம்.) கல்யாண் திருசங்குபூபதே.

(மந்திரி வசனம்.) தவசிரேஷ்டா வந்தனஞ்செய்கின்றேன்.

(வசிஷ்டர் வசனம்.) கல்யாண்.

அரசன் வசனம்.

தவநாதா தங்கள் கிருபையால் சூரியகுலம் விர்த்தியாகும்படியான ஓர்புத்திரனை அடைந்தேன் அதனால் மிகவுஞ்சந்தோஷம் தாங்கள் கொலு மண்டபத்துக் கெழுந்தருளப் பிரார்த்திக்கின்றேன்.

வசிஷ்டர் வசனம்.

கோசலாதிபா கௌதமரிடத்தில் நீகுழந்தையைப் பெற்றுக் கொண்டவிபரம்பாவற்றும் அன்னவர்மூலந் தெரிந்துகொண்டேன் இதோ வருகின்றேன்.

திருசங்கு வசனம்.

குருமகாராஜ் இவ்வாசனத்தில் வீற்றிருந்தருள்.



53

வசிஷ்டர் வசனம்.

பூபாலகா நான்புவித்தோராசனத்தில் வீற்றிருக்கின்றேன் நீ சிம்மாசனத்திலிடமாக வீற்றிரு.

(அரசன் வசனம்.) நல்லது ப்ரபு.

வசிஷ்டர் வசனம்

திருசங்குபதி உன்கேடனதுபுத்திரன் அரிச்சந்திரன்.

அரசன் வசனம்.

குருமகாராஜ் இதோ அழைத்துவரச்செய்கிறேன்.

டை வசனம்.

சேவகா தாதியிடஞ்சொல்லி அந்தப்புரத்தில் வீற்றிருக்கும் பாலகன் அரிச்சந்திரனை அழைத்துவரச்செய்.

## பால அரிச்சந்திரன் வருதல்.

கோட்டு.

| | | | |
|---|---|---|---|
| பதஸரிக | | ஸமக | ரிஸத |
| தரிஸ | ரிஸரி | தரி | ஸரிதப |
| பப | பபப | மம | மமம |

வசனம்.

இச்சபையிலிடமாக வீற்றிருக்கும் கற்றோர்முதல் மற்றெல்லோருக்கும் மைந்தன்வந்தனம் மனமுவந்து தந்தனன்.

மேற்படி வசனம்.

யான் அந்தப்புரத்தினிடமாக எனதுமாதாவாகிய சத்தியவதிமடிமீதே வீற்றிருக்குஞ் சமயம் தாதிவந்து எனது பிதாவாகிய திருசங்கு சக்கரவர்த்தியானவர் அழைத்துவரச் சொன்னாரென்று தெரிவித்தாள் ஆதலாலன்னவர்சமுகஞ் சென்று அழைத்த காரணந்தெரிந்துகொள்கிறேன்





54 மேற்படி வசனம்.

பிதா வந்தனஞ்செய்கின்றேன் பாலகன்.

(அரசன் வசனம்.) கல்யாண் பாலகா.

(பால அரிச்சந்திரன் வசனம்.) பிதா என்னையழைத்த காரணம் உத்தரவாகப் பிரார்த்திக்கிறேன்.

அரசன் வசனம்.

கண்மணி நமதுகுலகுருவாகிய வசிட்டமஹாரிஷி அதோவந்திருக்கின்றார் ஆகையாலுன்னை யிங்குவரவழைத்தேன் சந்தோஷமாயன்னவர் பாதத்தைப் பணிகுவாய்.

---

பாலவரிச்சந்திரன் வசிட்டமஹாரிஷியை வணங்குதல்.

சீராரவையில் வளரென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

வந்தனஞ்செய்தேநான் மைந்தனிதோபுநீதா
சிந்தைமிகமகிழ்ந்து சீராருமலர்ப்பாதா (வ)

ஆதவன்குலந்தனை யாண்டருளுங்குருவே
சோதியேயார்ந்திலங்குஞ் சகிர்தவுருவே (வ)

மாமுனிவரோற்று வரதாமகானுபாவா
காமனையெரித்தமுக் கண்ணனைநிகர்தேவா (வ)

மறைபிரிவண்டுணர்ந்தே மாட்சிசேர்ந்திடும்போதா
பிறைநுதலருந்ததிப் பெண்ணுட்குகந்தநாதா (வ)

---

(வசனம்.) முனிநாதா வந்தனஞ் செய்கின்றேன்.

(வசிஷ்டர் வசனம்.) கல்யாண் பாலகா.

வசிஷ்டர் வசனம்.

திருசங்குபதே மிகவுஞ்சந்தோஷம் மிகவுஞ்சந்தோஷம் உனதுபாலகன் அரிச்சந்திரனை பார்க்கும்போது என்மனப்படியே கல்வி அறிவு ஒழுக்கம் பொறை கண்ணோட்டம்தெரிந்து செயல் முதலியனவகளிற் சிறந்தவனாகத்தோற்றுகிறான் ஆகையால் ஐம்

பத்தைந்து தேசத்தரசர்களும் நின்சமுகத்திலிதோ நிறைந்திருக்கிறார்கள் இன்று நல்லதினமானதால் அரிச்சந்திரனுக்குமகுடாபிஷேகஞ் செய்யவேமென்று நினைக்கிறேன் நின்கருத்தென்ன.

(திருசங்கு வசனம்.) தங்கள் சித்தம் பிரபு.

வசிஷ்டர் வசனம்.

கோசலாதிபா அப்படியானால் சீக்கிரத்தில் நகரை அலங்கரிக்கும்படியாகச்செய்து வேத பாராயணர் மேளகாரர்முதலியவர்களை சங்குவரவழைப்பாய்.

(திருசங்குவசனம்.) ஆக்ஞை பிரபு.

மேற்படிவசனம்.

அடே சேவகர்காள் சீக்கிரம் இவ்வயோத்திநகரை அலங்காரஞ்செய்வதோடு வேதபாராயணர் மேளகாரர் யாவரையும் ஈங்கு அழைத்துவாருங்கள்

(சேவகர்கள்வசனம்.) உத்திரவு மகாராஜ்.

வசிஸ்டர் வசனம்.

பூபாலகா மந்திரிசுபுத்திக்குப் புத்திரனிருக்கின்றனா?

திருசங்கு வசனம்.

ஆம்பிரபு சகலகலைவிற்பனனாகச் சத்தியகீர்த்தியென்ற ஓர்புத்திரனிருக்கின்றான்.

வசிஷ்டர் வசனம்.

அப்படியா மிகவுஞ் சந்தோஷம் அன்னவனை ஈங்குவரவழைப்பாய்.

திருசங்கு வசனம்.

அடே சேவகா மந்திரிபுத்திரன் சத்தியகீர்த்தியை ஈங்கு அழைத்துவருவாய்.

(சேவகன் வசனம்) உத்திரவு மகாராஜ்.



## சத்தியகீர்த்தி வருதல்.

இராகம் - சுருட்டி - தாளம் - ஏகம்.

தில்லானா.

தொம்தொம்தாதிரனா நாதர்தாம்தி தொம்தொம்தாதிரனா
தோம்தாதாரே நாதாதாரே தில்லாநாதிரி தொம்தொம்
தனனன மபதிதபமகரி பமகரிச. (தொ)

தோம்தாதாரே நாதாதாரே தானாதிரனாரே
தில்லாநாதிரிதொம் தில்லாநாதிரிதொம்
தில்லாநாதிரிதொம் (தொ)

சத்தியகீர்த்தி வசனம்.

இவ்வரங்கினிடமாக வீற்றிருக்கும் கற்றோர் முதலிய யாவருக்கும் பாலன் வந்தனம் பசுதமுடன் தந்தனம்.

---

சத்தியகீர்த்தி திருசங்குமகாராஜனை வணங்கும் வசனம்.

மகா உன்னதம் பொருந்திய கோசலைநாட்டை ஓர்குடைநிழலில்வீற்றரசுபுரியும் வேந்தே மந்திரிபுத்திரன் சத்தியகீர்த்தி வந்தனஞ்செய்கின்றேன் அழைத்தகாரணம உத்தரவாகப் பிரார்த்திக்கிறேன்.

திருசங்கு வசனம்.

கல்யாண மந்திரிபுத்திரா அதோபிர்மரிஷியர்கிய வசிட்டப் பிரபூ வீற்றிருக்கிறார் வணங்குவாய்.

(சத்தியகீர்த்தி வசனம்.) உத்தரவு பிரபூ.

மேற்படி வசனம்.

காமக்குரோத லோபமோக மதமாச்சரியங்களை நீக்கிச்சொல்லொண்ணாதவத்திற்சிறந்த மகாநுபாவா வந்தனஞ்செய்கின்றேன் மந்திரிபாலகன் சத்தியகீர்த்தி.

வசிஸ்டர் வசனம்.

கல்யாண் மந்திரிபாலகா நீசகலசாஸ்திரங்களினும் விற்பனனென்று கேள்வியடைந்தேன் அதில் எத்தகைபோன் அமைச்சனெனக் கூறப்படுகிறது.



சத்தியகீர்த்தி வசனம்.

தனதுசேனைக்கு (கருவியுங்காலமுஞ் செய்கையுஞ்செய்யு மருவினையும் வல்லதமைச்சு) என்று கூறப்பட்டிருக்கிறது.

வசிஸ்டர் வசனம்.

மந்திரிபாலகா உனதுபுத்தி நேர்த்தியத்திற்கு மிகவு மெச்சினேன்.

மேற்படி வசனம்.

திருசங்குபூபதே மந்திரிபாலகன் நீகூறியவண்ணமே சகலகலைகளினும் பாண்டித்யமுடையவனா யிருக்கின்றான் நீ அடைந்தபாக்கியமே பாக்கியம் உனது புத்திரனுக்கு மந்திரியாக நியமிக்கலாமா?

(திருசங்கு வசனம்,) தடையென்ன பிரபூ.

வசிஸ்டர் வசனம்.

பூபாலகா அப்படியானால் இருவர்களையும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரண வலங்கிருதர்களாக வரச்செய்வாய்.

(திருசங்குவசனம்.) உத்தரவு பிரபூ.

மேற்படி வசனம்.

மந்திரி எனதுபுத்திரனுக்கும் உனது புத்திரனுக்கும் ஸ்நானஞ்செய்து ஆடையாபரணங்களை அணிந்து அழைத்து வருவாயாக.

(சுபுத்திமந்திரி வசனம்.) ஆக்ஞை பிரபூ.

சேவகர்கள் வசனம்.

மகாராஜ் அயோத்தியாபுரியைப் பூராவாக அலங்காரஞ் செய்தானது ஒவ்வொரு வீதிகளினும் மூன்று முரசும் முழங்குகிறது கொலுமண்டப முகப்பில் மேளகாரர்கள் வந்து மேளஞ்சேவிக்கிறார்கள் இதோ வேதபாராயணர்கள் வருகின்றார்கள்.

(திருசங்கு வசனம்) மிகவுஞ் சந்தோஷம்.

(வேதபாராயணர்கள் வசனம்.) கோசலாதிபா அநேக ஆசீர்வாதம் அநேகஆசீர்வாதம்.

திருசங்கு வசனம்.

வேதியர்களே அநேககோடி நமஸ்காரம் இவ்வாசனங்களில் வீற்றிருங்கள்.

(வேதபாராயணர் வசனம்.) இதோ வீற்றிருக்கின்றோம் மகாராஜனே.

சுபுத்திமந்திரி வசனம்.

கோசலாதிபா தங்கள் புத்திரனையும் எனது புத்திரனையும் உடையாபரண லங்கிர்தர்களாகச்செய்து இதோ அழைத்து வந்தேன்.

(திருசங்கு வசனம்.) ப்ரதான் மிகவுஞ்சந்தோஷம்.

மேற்படி வசனம்.

குருமகாராஜ் நகர்முழுதும் அலங்காரமாகிறது மேளதாளங்களெல்லாங் கொலுமண்டபமுகப்பிற் சேவிக்கிறார்கள் வேதபாராயணர்களெல்லாம் வந்துசேர்ந்தார்கள் எனது புத்திரன் அரிச்சந்திரனும் மந்திரிபுத்திரன் சத்தியகீர்த்தியும் ஸ்நானஞ்செய்து உடையாபரண லங்கிர்தர்களாகி யிதோ வந்திருக்கிறார்கள்.

(வசிட்டர் வசனம்.) மிகவுஞ்சந்தோஷம் அரிச்சந்திரா இங்குவா.

(அரிச்சந்திரன் வசனம்.) இதோவந்தேன் ப்ரபு.

வசிட்டர் வசனம்.

அரிச்சந்திரா நீகௌதமரிடத்தில் அநேக சாஸ்திரங்களைக் கற்றிருந்தாலும் யான்போதிக்கிற இராஜநீதியைக்கவனிப்பாயாக.

(அரிச்சந்திரன் வசனம்.) ஆக்ஞை ப்ரபு.

---

வசிஷ்டர் அரிச்சந்திரனுக்கு அரசநீதிபோதிக்கும் வசனம்.

திருசங்கு பாலகா! பிர்மா, விஷ்ணு, ருத்திரனென்ற மூவர்களிலேயும் பிரிதிவு, அப்பு, தேயு, வாயு, ஆகாயமென்று சொல்லப்பட்ட ஐந்து பூதங்களிலேயும் பெரியவர்கள் அந்தணர்களென்று மனதிலேவைத்துப் பூஜைசெய்வாயாக குருமுதலான பெரியோர்கள் டத்தைகள்தா ஹன்னிடத்திலில்லையே யானாலும் பெரியோர்க



குற்றமென்று சொல்லுகிறகாரியங்களி லொன்றேனு முயற்சிக்காதே யாவரோடும் பகைகொள்ளாமலிருக்க வேணும் பகைகொண்டால் பகையொடுங்காது வளர்ந்தேவரும் ஆகையால் ராஜாவுக்குக் காரியஞ் சித்தியாகமாட்டாது மும்மூர்த்திக்குச் சமானமான ராசாக்களானாலும் மந்திரிசொல்கிற படியே நடந்துகொள்கிறதே பலம் சகலசேனைகளிடத்திலேயும் அன்புவைத்திருந்தால் அதற்குமின்னபலன் வேறில்லை சகலசேனையும் தன்சேனைகளையும் தான் ஒருசரீரமாகவும் எண்ணித்தருமத்தோடு நடத்துகிற இராஜன் வேறே ஒருயாகம் செய்யவேண்டியதில்லை ராஜனுக்கு நல்லவார்த்தையும் சந்தோஷமும் யோசனையும் நீதியும் தருமமும் உண்டாயிருக்குமானால் அவனுக்கொருபோதும் அழிவுவரமாட்டாது பொல்லாதவற்றைத்தள்ளி பொன் னிறுக்கிற தராசுபோலச் சமானமனதோடு இராச்சியபாரம் செய்துக்கொண்டு அன்போடிருந்தால் அவனுக்குச் சத்துராதிகளைச் செயிக்கவேறு ஆயுதம் வேண்டியதில்லை பூமியில் அமிர்தபோல்பிறந்திருக்கிற வேசிகளுடைய காமம்விட்டிருந்தால் கேடென்கிற பேருமில்லை நரகமுமில்லை ஆகையால் இதைச் சிந்தித்துக் கொள்வாயாக.

(அரிச்சந்திரன் வசனம்.) ஆக்ஞை ப்ரபு.

வசிட்டர் வசனம்.

மந்திரிபாலகா உனக்கு அமைச்சியல்புயான் போதிக்கவேண்டியதில்லை அதற்குறிய குணவானாகவே யிருக்கின்றாய் ஆகையால் ஞானங்கள் மாறுபடாது கொண்டுசெலுத்துவாயாக.

(சத்தியகீர்த்தி வசனம்.) உத்தரவு ப்ரபு.

(வசிட்டர் வசனம்.) திருசங்குபூபதே தற்சமயம் நல்லலக்கனம் அரிச்சந்திரனுக்குமகுடஞ் சூட்டலாமா.

(திருசங்கு வசனம்.) சூட்டுங்கள் ப்ரபு.

(வசி-வ-ம்.) திருசங்குபதே மகுடத்தைக்கொடுப்பாயாக.

(திருசங்கு வசனம்.) இதோ கொடுத்தேன் ப்ரபு.

(வசி-வ-ம்.) அரிச்சந்திரா இவ்வரியாசனத்தில்வீற்றிருப்பாய்.

(அரிச்சந்திரன் வசனம்.) இதோ வீற்றிருந்தேன் ப்ரபு.





# வசிட்டர் அரிச்சந்திரனுக்கு

## மகுடஞ்சூட்டுகிற பாகம்.

விருத்தம்.

செங்கதிரின் குலத்துதித்த திருசங்கு
பூமனருள் சேய னான
அவ்வரிச் சந்த்ரனுக்குச் சுபதினத்திற்
றென்மறையோ ரகம் பூரித்துச்
சங்கையில்லா வாசிசொலத் தரணியரெ
லாம்வணங்கத் தபதர் வாழ்த்த
மங்களஞ்சேர் மணிமகுடம் வசிட்டனும்
மாட்சியுடன் சூட்டி னேனே.

வசிட்டர் வசனம்.

அரிச்சந்திரபூபதி சத்தியத்தவராது அரசுபுரிந்து நீடுழிகால ம்வாழ்வாயாக சுபமங்களம் சுபமங்களம்.

மேற்படி வசனம்.

சத்தியகீர்த்தி இதோமந்திரிகளுக் கேற்பட்ட கணையாழியை யுனது திருக்கரத்திற் சூட்டியிருக்கின்றேனையா இன்றுமுதல் ரிச்சந்திரபூபதியும் நீயும்பிராணனுஞ்சடமும்போல நேசித்து அர சுசெய்வீர்களாக.

மேற்படி வசனம்.

திருசங்கு பூபதே இதோவுனது புத்திரனுக்கு மகுடஞ் சூட் டிவிட்டேன் இனிமேல்நடக்கவேண்டிய காரியங்களைநடத்துவாய்.

திருசங்கு வசனம்.

அடேசேவகர்காள் திரவியகளஞ்சியத்தைத் திறந்துயாசக ர்முதலியயாவர்களுக்கும் அவரவர்களிஷ்டப்பிரகாரம் கொடுத்த னுப்புங்கள்.

(சேவகன் வசனம்.) ஆக்ஞை ப்ரபு.

மங்களத் திரு.

மாமதுரையம்பதியிலென்ற மெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - காபி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

வாழி வாழி வாழி வாழி மறையோர்வாழியே
மறையோர்வாழியே மறையோர்வாழியே
மன்னனரிச்சந்திரன்வாழி மற்றோர்வாழியே
மற்றோர்வாழியே மற்றோர்வாழியே

---

திருசங்கு

# அந்தரசுவர்க்கம் அடையும்பாகம்.

திருசங்கு வசிட்டரைநோக்கிச் சொல்லும் வசனம்.

மஹாராஜ் புத்திரனில்லாத கவலையோடிருந்த யான் தங்களனுக்கிரகத்தால் புத்திரனையடைந்து அவ்னவனுக்குத் தங்கள் திருக்கரத்தால் மகுடஞ் சூட்டினதைப்பார்த்து மகிழ்ந்தேன் இனிமேல் அடியேனுக்கு உலகத்தில் வேறே ஆசையில்லாதலால் சடத்துடனே அடியேனைச் சுவர்க்கலோகஞ் சேர்ப்பிவிக்க பிரார்த்திக்கின்றேன்.

வசிட்டர் வசனம்.

ஆ! ஆ! ஆ! திருசங்குபூபதி யென்னயோசனை செய்தாய் நாறுகிய நீ தவபலத்தால் சுவர்க்கம்செல்லக் கருதாது தற்சமயம் சடத்துடன் சுவர்க்கஞ்செல்லக் கருதலாமா அதனைக்கருதாமா.

திருசங்கு வசனம்.

தவசிரேஷ்டா அடியேனுக்குச் சுவர்க்கஞ்செல்லத் தவம்போதாததினால்தான் தங்கள் தவபலத்தினால் அடியேனைச் சடத்துடன் சுவர்க்கஞ் சேர்ப்பிவிக்க வேண்டுமெனக் கூறியதே தவிரத்தானுமற் சொன்னதல்ல பிரபு.

வசிட்டர் வசனம்.

கோசலாதிபா நின்னைச்சடத்துடன் சுவர்க்கஞ்சேர்க்க வென்றாற்கூடாது ஆசையாலிந்த நினைவை விட்டுவிடுவாயாக.



திருசங்கு வசனம்.

முனிநாதா தங்களால் என்னைச்சடத்துடன் சுவர்க்கஞ்சேர்க்கமுடியாதபக்ஷத்தில் தங்களைப்போலொற்ற அறவற சந்யாசியையடுத்துச்சடத்துடன் சுவர்க்கஞ் சேர்ந்துகொள்கிறேன்.

வசிட்டர் வசனம்.

அடா துஷ்டா அடாமூர்க்கா அடாபாதகா என்னவார்த்தை கூறினை குருவாகியவென் சொல்லைமீறலாமா மீறினதால் நீசமய மேசீ புலையனாகக்கடவதென்றுதன்னிலைரேத நானிதோ வென தாச்சிரமஞ் செல்கின்றேன்.

திருசங்கு.

பகவானைநோக்கி வருந்தும் வசனம்

ஆ! ஆ! கைலாநாதா இதற்கென்செய்வேன் தவசிரேஷ்டர்கொடுஞ்சாபங்கொடுத்துசென்றுவிட்டாரே ஆ! ஆ! இதோ என்னுடைய [illegible] லக்ஷணமெல்லாங்குறைந்து நீசவுருவமாய்விட்டதே.

திருசங்கு தன்றுக்குள்யோசிக்கும் வசனம்.

நாயிந்தவுருவத்துடனே யிக்கிருக்கக்கூடாதாகையால் தெ திசையிற் றவமியற்றிக்கொண்டிருக்கிற வசிட்டமஹரிஷிபகைவரான விஸ்வாமித்திரரிடத்திற்செல்வதே நலம்.

திருசங்கு விஸ்வாமித்திரரிடஞ்சென்று அவரைவணங்கும் வசனம்.

தவசிரேஷ்டா வந்தனஞ்செய்கின்றேன் திருசங்கு.

விஸ்வாமித்திரன் வசனம்.

கல்யாண் கோசலாதிப நீ இந்தவுருவம்பெற்றகாரணமென்ன?

திருசங்கு வசனம்.

முனிநாதா யானென் னதுபுத்திரனை அரிச்சந்திரனுக்குமகுடாபிஷேகஞ் செய்தபின்னர் வசிட்டமஹரிஷியை நோக்கி பிரபு எனக்கு இனிமேற் ஜெகத்திலிருக்கப்பிரியமில்லை யாதலால்யென்னைச்சடத்துடன்சுவர்க்கஞ் சேர்ப்பிக்க வேண்டுமெனக்கேட்டேன் அதற்கவர் என்னால்முடியாதென்றார் சுவாமி தங்களால்முடியாதபக்ஷத்தில் தங்களைப்போலொற்ற அறவறசன்யாசிகளால் சுவர்க்கஞ் சேர்ந்துகொள்கிறேனெனக் கூறினேனதற்கவர் கோபங்கொண்டு



[illegible]றுகக் கடவாயெனச்சபித்தார் உடனே நீசவங்கம்பெற்றுத்தங்களை நாடிவந்தேன்.

விஸ்வாமித்திரர் வசனம்.

திருசங்குபூபதி கவலையடையாதே அந்தப் பைத்தியகார வசிட்டனாலென்னகாரியமுடியும் இதோ உன்னைச்சணத்தில்சுவர்க்கஞ் சேர்க்கின்றேன்.

விஸ்வாமித்திரர் திருசங்குபூபதியை விமானத்திலேற்றி
சுவர்க்கத்துக்கு அனுப்புதல்
வசனம்.

திருசங்குபூபதி அதோசுவர்க்கத்திலிருந்து விமானமொன்று தருவித்திருக்கிறேன் அதிலேறிச்சுவர்க்கஞ்செல்வாயாக.

(திருசங்கு வசனம்.) ஆக்ஞை பிரபு.

திருசங்கு விமானத்துடன் சுவர்க்கஞ் செல்லத் தேவர்கள்கோபங்கொண்டு
விமானத்துடன் திருசங்குவைபூமியிற்றள்ளும் வசனம்.

அடாசண்டாளா அடாபாதகா நீசனுடைய நீ சடத்துடன்விமானமேறி இச்சுவர்க்கத்துக்கு வரலாமா இதுனைக்கடுக்குமா இதோ உன்னை இரதத்துடன்பூமியில் விழும்படியாகத்தள்ளிவிட்டோம்.

---

திருசங்கு ரதத்துடன்பூமியில்விழவரும்போது புலம்பும்வசனம்.

ஆ! ஆ! ஆ! தெய்வமே இதற்கென்செய்வேன் தேவர்களெல்லாமொருங்காகக்கூடி என்னை ரதத்துடன் பூமியில் விழும்படியாகத்தள்ளிவிட்டார்களே தவசிரேஷ்டராகிய விஸ்வாமித்திரரல்லவோ எனக்கு இக்கெதிகிடைத்தது ஆகையால் இஃது விஸ்வாமித்திருக் கபயம் விஸ்வாமித்திருக் கபயம்

விஸ்வாமித்திரர் வசனம்.

ஆ! ஆ! ஆ! ஈதென்ன ஆச்சரியம் விஸ்வாமித்திருக்கபயம் விஸ்வாமித்திருக்கபயம் என்ற சத்தவார்த்தை கேட்கிறது நாம் சுவர்க்கத்துக்கனுப்பிய திருசங்குமகாராஜனை தேவர்கள் விமானத்துடன் பூமியில் தள்ளிவிட்டார்கள்போலத்தோனுகிறது ஓ! ஓ! திருசங்குமகாராஜனே பயப்படவேண்டாம் பயப்படவேண்டாம் இதோ உன்னைக் கீழேவிழவொட்டாமல் விமானத்தைத் தாங்கிக்

கொண்டேன் உன்னையாரிவ்விதத்துன்பத்திற் காளாக்கினவர் விபரமாய்க் கூறுவாய்.

திருசங்கு வசனம்.

தவசிரேஷ்டரே தங்கள்வருதிப்போல் இந்தப்புஷ்பகவிமானத்திலேறிச்சுவர்க்கஞ்சென்றேன் ஆங்கு தேவர்களெல்லாம் ஒருங்காகக் கூடிக்கொண்டு அடாமூர்க்கா சண்டாளனாகிய சடத்துடன் சுவர்க்கத்துக்கு வரலாமா நீயென்று கருமாலென்றுகொடுஞ்சினங்கொண்டு சடத்துடன் பூமியில் தள்ளிவிட்டார்கள் ப்ரபூ.

விஸ்வாமித்திரர் வசனம்.

ஆ! ஆ! ஆ! அந்தச்சண்டாளர்கள் உன்னை இவ்விதவவமானமா செய்தார்கள் இதோபார் இந்த அண்டங்களையெல்லாம் பெரியச்செய்து பதினாலுலகங்களுக்கும் இந்திரன் பிரமாமுதலிய தேவர்களுக்கும் எனதுதவபலத்தால் வேறேசிருஷ்டிக்கின்றேன்.

---

விஸ்வாமித்திரர் இவ்விதம் கோபங்கொண்டதைக்கண்ட
பிரமா விஷ்ணு ருத்திரன் இந்திரன்முதலிய யாவருந்
நேரிற் றன்னைவந்து சொல்லுதல்.

வசனம்,

ஓ விஸ்வாமித்திரரே பொறும்பொறும் கோபங்கொள்ளவேண்டாம் யாங்கள் கூறும்வார்த்தையைக்கவனியும் தவபலமில்லாத சண்டாளன் சடத்துடன் சுவர்க்கம்புகுவது நீதியாமா சுதுபக்கத்தெரியாததா தயவுசெய்து இந்தத்திருசங்குமன்னனுக்கு நட்சேத்திரபதவிகொடுத்து ஆங்குவீற்றிருக்கும்படி செய்யும் யாங்கள் சென்றுவருகின்றோம்.

(விஸ்-வ-ர்.) அப்படியே சென்றுவாருங்கள்.

மேற்படிவசனம்.

ஓ திருசங்குமஹாராஜனே தேவர்கள்வருதிப்படி உன்னைநட்சேத்திரமண்டலத்திற்கு அழைத்துச்செல்கின்றேன் கூடவருவாய்.

(திருசங்கு வசனம்.) இதோ, வருகின்றேன் ப்ரபூ.



விஸ்வாமித்திரர் வசனம்.

ஓ திருசங்குமஹாராஜனே இதோ நாம் கோரிய நட்சேத்திரமண்டலத்திற்கு வந்துவிட்டோம் இவ்விடத்திலேயே மங்களமாக எப்போதும் யாதொரு கவலையின்றி வீற்றிருப்பாய் யான்சென்றுவருகின்றேன்.

திருசங்கு வசனம்.

தாதா உத்தரவுபோல இந்தநட்சேத்திர மண்டலத்தில் மங்களமாகவீற்றிருக்கின்றேன் அநேகவந்தனஞ்சென்றுவாருங்கள்ப்ரபூ.

விஸ்வாமித்திரர் வசனம்.

கல்யாண். சுபமங்களம் போய்வருகின்றேன்.

உற்பத்திகாண்டம் முற்றிற்று.

உ

பரமபதி துணை.

# விவாககாண்டம்.

விநாயகர் துதி வெண்பா.

திருவாழு மார்புடையான் செங்கோலான் செம்மை
புருவாக வேவந் துதித்தோன்—கருணைமிகு
மாவரிச்சந்த் ரன்சரிதை வாகுடனே பாடுதற்கு
மாவரன் சேய்தாள் வணங்கு வாம்.

தூண்டுகுஞ்சரமூலவிநாயகனேயென்றமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆதுவாகன நாதாசிற்சகனே கருணாகரனே
அம்பிகையருள் தும்பிமாமுகனே

அநுபல்லவி.

பாகுசேர்மொழி வல்லபைபாகா
பக்தரெக்ஷகா பாங்குயர்வாகா
பரனே ஐங்கரனே யிந்தப் பாருலகதனிற் சீருடனருளுவாய். (ஆ)

சரணம்.

முப்புரமெரி தற்பரன்சுதனே-யெங்குநிறைந்த
மூர்த்தியேசித்தி புத்திகட்கிதனே
மூலனே திருக் கோலனேயுயர்
முத்திகொடுத்திடுஞ் சித்தனேகர்த்தனே
முக்கணுவெட்டுத் திக்கெல்லாம்புகழ்
முருகன்முதல்வர் திருமான்மருகா (ஆ)
பிரணவபீ ஜாட்சரப் பொருளே-அடியேனுடைய
பிணியகற்றியிக் கணமே யாண்டருளே
கருணைவடிவே தூரியமுடிவே
காட்சியுருவே மாட்சிமருவே
கதியேகுளிர் மதியேநிதியே
காரணகுருவே சீரமார்தருவே (ஆ)



எப்புவியி லுங்கீர்த்தி — ப்ரகாசன்-அருணாசலவேள்
சன்றசுப்ரமண்ய — கவிராசன்
இருதயமகிழ் — தாவுணர்பீசன்
இனபன்கல்யாண — சுந்தரதாசன்
எந்தநேரமுஞ் — சிந்தையாத்துதி
ஏகனேயோர்வை — போகனேயோகனே (ஆ)

# அரிச்சந்திரன் சபை.

விருத்தம்.

திருவளருங் கோசலைநா டாள்பெம்பிரான்
ஜெகமெல்லாம் புகழுடையான் தீரசூரன்
குருவசிட்டர் வார்த்தைமற வானற்சாந்தன்
கோதிலரிச் சந்திரன்மா வேந்தர்வேந்தன்
மருவிலா வாழ்நெலாங் கவிகள்பாட
மாதவரா சிகள்கூற நடிகளாட
வரியணையிற் கொலுவமரா வீதோவந்தேன்
அனைவருக்கு மிக்கதெரி சனந்தந்தேனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

மாதுமைமகிழ் நேசனேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சீர்பெருந்திங்கட்குடையினான் — திடப்படையினான்
செழுங் — கொடையினான்
தேசதேசத்துள்ள — ராஜராஜர்தன்னைக்
கூசாமல்வென்றணியோசைத் — தொடையினான். (சீ)

மாசிலமதற்கிந்திரன் — திருதந்திரன்
அரிச் — சந்திரன்
மாசிலாவாளினான் — தேசயர்தோளினான்
கேதாமார்ந்திடும்வாசப்பூந் — தாளினான். (சீ)



மாமணிநிறைமுடியினான் — ஜெயக்கொடியினான்
சொன்ன — வடிவினான்
மாதமுன்னுமழை — காதலுடன்பெய்யக்
கோதிலாமல்லினை — விதப்படியினான். (சீ)

ஆதவன்றிருக்குலத்தினான் — அதிபலத்தினான்
யென்றும் — வலத்தினான்
ஆதிசொல்லொன்றைத — சோதியெங்கும்நிறை
நீதிதனைத்துதி — யோதும்நலத்தினான். (சீ)

வாகுசேர்மதகரியினான் — நடப்பரியினான்
மாவு — பரியினான்
மந்திரிகள்யூகத் — தந்திரிகளுடன்
சந்தோஷமாகவே — வந்தனரியனான். (சீ)

## அரிச்சந்திரன்சொல் தரு.

எனது மனதுக் கேற்றமங்கை யிவளோருத்தியே
என்றவர்ணமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

ராஜாராஜாராஜர்போற்றும் — ராஜகெம்பீரன்
ராஜகெம்பீரன் — நன்னலமிகுதீரன்
நாநிலமேற்றிடும் — படையான்-நவ
ரத்னம்பதித்திடுங் — குடையான்-உயர்
வானோர்புகழ்ந்திடுங் — கொடையான்-வேதம்
வாசித்துத்தேர்ந்திடச் — சடையான்
மகராசன் — சுகபோசன்
மாசிலாக் — கோசலை
மாநாடுடையான். (ராஜ)

ஆறிலொருகடமைவாங்கி — யாண்டிடுஞ்சீமான்
ஆண்டிடுஞ்சீமான் — சனையார்த்திடும்பூமான்
அர்த்தமிகுந்தநற் — பதியான்-சற்றும்
அறிவில்லார்தனை — மதியான்-ஒங்கும்
விந்தைச்சரயுமா — நதியான்-என்றும்
மேலானசற்பத — நிதியான்

விபகாரன் உபகாரன்
விற்பனர் சற்சனர்
வேதியர்சூழ (ராஜ)

சந்த்ரபிம்பநடனமாதர் சாமரைபோட
சாமரைபோட முத்தமிழ்வாணர்பாட

சாரணிதனக்கோ ரிந்த்ரன் மிகு
சம்பூரணனரிச் சந்த்ரன் ஞான்றும்
நேரானரைவெற்றிகொள் தந்த்ரன் வாகு
நீண்டபுயாசல மந்த்ரன்

நிதியோர்கள் மதியோர்கள்
நிறைநிறை புறைகொளு
முறையதாய்வந்தேன். (ராஜ)

அரிச்சந்திரன் சொல் தரு.

ராஜாதி ராஜர்பணி என்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மன்னாதிமன்னர்பணி மகாராஜனரிச்சந்திரன்
உன்னுமாகதிரின்மா புகித்தசுந்தரன்
கன்னவிற்றோளுடையான் ஏற்றும்பின்னமில்வாளுடையான்
ஒன்னலர்கள் மணிமுடி யுரிஞ்சுதாளுடையான்
அங்கசன்போலழகான் அறம்பலசெய்பொய்யழகான்
அங்கண்மாஞாலத்தினிற்பொய் யுறைபவர்க்கிழகான்
பூச்சக்கரக்குடையான்செங்கோ லோச்சுந்திறலுடையான்
மாட்சிமையாய்மலர்மங்கை வாழ்கின்றமார்புடையான்
துஷ்டர்சிரங்கள்கொய்வான் வசிஷ்டருக்கேவல்செய்வான்
அஷ்டதிக்விஜயஞ்செய்தே வெற்றிமலர்புனைவான்
சத்தியகீர்த்தியெனும் மிகுபுத்திசேரமைச்சனும்
மற்றுமுள்ளமந்திரிகுரு மன்னவர்களுடனும்
இந்தச்சிங்காதனத்தே விந்தையாகப்பிரகாசித்தே
சுந்தரமாய்வீற்றிருக்க வந்தேனுனல்லாசிதத்தே



அரிச்சந்திரன் சபைவணக்கம்.

சந்ததமிந்தச்சபைக்கு வென்ற-மெட்டு.

இராகம் - இந்துஸ்தானி - பியாகு - தாளம் - ஏகம்

கண்ணிகள்.

வந்தனந்தந்தேனென்மைந்தன் வந்தனந்தந்தேன்
வந்தனந்தந்தேன்சிறியேன் சிந்தையுவந்தே
மாசபையில்வளர் மதியோருக்கும்
மதியோர்க்கும் நிதியோர்க்கும்
வாகார்மகா தவத்தர்க்கும்
வழுவிலாமறையுணர் மானவர் ஆனவர் வானவர்க்கும்
மானிலமதனிற் கீர்த்திபெற்ற
வாணர்கள் மிகுபாணர்கள் உயர்யாணர்கள்
வாணர்கள் பாணர்கள் யாணர்கட்கும்
மாசிலாக்கல்யாண சுந்தரன்சொல்
வண்டமிழதனையே விண்டுமேமித்ததி.(வந்)

வசனம்.

குறள் (தொட்டனைத்தூறு மணற்கேணி மாந்தர்க்குக்கற்றனைத்தூறு மறிவு) என்ற நீதிவாக்கியத்தின்படியே சகலகலை விற்பன்னராக இச்சபையின்கண் வீற்றிருக்கும் கனதனவான்களனைவர்கட்கும் வந்தனம்.

அரிச்சந்திரன் வழிபடுகடவுள் வணக்கம்.

விருத்தம்.

மாதமும்மாரிபெய்ய மனுநெறிவிளங்கத்தீதில்
லாதவேதங்களோங்க வறமெலாந்தழைக்கவிச்சிம்
மாதனந்தனில்யான்வீற்று மாட்சியாய்ச்செங்கோலோச்ச
நாதனேகூடல்வாழ்வே நற்கதியருள்வாய்போற்றி

அரிச்சந்திரன் தரு.

இராகம் - கமாஸ் - தாளம் - சாபு.

பல்லவி.

மதுரைவாழ்சொக்க தந்தருள்சுந்தரேசா

அனுபல்லவி.

சதுர்மறையும்புகழ் தகைசேர்மீனாக்ஷிமகிழ்
சங்காரபொங்காரவணி கங்காதரா. (ம)

சரணம்.

திரிபுரதகனஞ்செய் சிவமேயெந்தன்பவங்கொய்
தேவர்க்கும்யாவர்க்கும் தினமருளுய்க்கும். (ம)
நன்னகரயோத்தியைச்சூழ் நவகண்டமதனில்வாழ்
நற்றவர்கொற்றவர் மற்றவர்யார்க்கும். (ம)
எந்தன்கரத்திற்பிடித்த ஏற்றமிகுஞ்செங்கோல்சித்த
எப்போதுந்தப்புறு தியல்புடனேங்க. (ம)

வசனம்.

மாட்சிமைதங்கிய பங்கயப்புட்பத்துறை புங்கவனும், வேலை ற்றுயிலும் விஷ்ணுவும், வெள்ளிவெற்புறை வள்ளலும் ஆகியமூன்றுருவங்களும் உமாமகேச்சுரனென்றயிருருவங்களு மோருருவாகிச் சத்தசாகரஞ்சூழ்ந்த இவ்வுலகத்திலும் மற்றெவ்வுலகத்திலும் வியாபித்திருக்குஞ் சுத்தசைதன்யப்பரப்பிர்மமே பகருதற்கரிய இவ்வரியாசனத்திருந்து செங்கோல்புரிந்த எனதுமுதாதைகளாகிய இக்ஷ்வாகு, விகுக்ஷி, புரஞ்சயன், அனேனசு, பிருதுவு, விஸ்வகோதன், சந்திரன், யுவனாசுவன், சாவஸ்தன், பிரகதாஸ்வன், குவலையாசுவன், திடாசுவன், அரியசுவன், நிகும்பன், பெரிஹிணாசுவன், கிரிசாசுவன், சேனசித்து, யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், புருகுச்சன், திரசதசு, அனரண்ணியன், திரியசுவன், திரியகுணன், திரிபந்தன் திருசங்குவென்ற இருபத்தேழு அரசர்களுக்கும் அருள்புரிந்ததுபோல யானுமிவ் வரியாசனத்தினிடமாக வீற்றரசுபுரிய அருள் செய்யவேண்டும்.

---

அரிச்சந்திரன் சொல் கரு.

தேசதேசத்தரசர்க் கரசனென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

இராஜ ராஜ ராஜர் பணியும் ராஜமகாராஜன்
காசினியோர் நேசன் தேசுயர்ந்த போசன்



இவ்வுலகம் புகழுடையான் ஒவ்விலார் பொருதச்சடையான்
செவ்வைசேருந்திடப்படையான் சீராரிச்சந்த்ரநாமவிசயன் (ரா)

பேருவெற்பதைச்சினத்து வீங்குமற்றிரற்றோளான்
தேங்கமழ்மலர்த்தாளான் நீங்கிலாவடிவாளான்
மெல்லியர்சாமரைவீசிட பல்லியமுழக்கமார்ந்திட
நல்லபாவாணர்கொண்டாடிட வேதவேதிய ரெதிரில்விளங்க (ரா)

தீரவீரருமிகு மாவரசர்மதித்திட சேவுகர்கள்துதித்திட
வேவுகாரர்கதித்திட சீர்த்திசேரும்பெலவந்தர்கள்
பூர்த்தியானமதிமந்த்ரிகள் வார்த்தையிற்றேர்ந்ததோர்தந்த்ரிகள்
சிந்தைதேறக் கொலுவமர்ந்திட்டேனே (ரா)

சேவகன் வசனம்.

புடவி கடகடென வுடைபடவடவை சிதறவருபொருதாற்சீறும் தடவிகடகளிற்றி லாரோகணிக்கக்கூடிய ராஜமார்த்தாண்டா சேவகன் வந்தனஞ் செய்கின்றறன்.

அரசன் வசனம்.

கல்யாண்சேவகா ஆசாரவாசலி லுசாராகவீற்றிருப்பாய்.

---

மந்திரி அரசனைவணங்குதல்.

வசனம்.

அண்டமுதலகண்டிதவிண்டல மண்டலமெண்டிசைகுண்டலிகுண்டல தண்டலி கொண்டல்கள் செண்டில டுண் டுண் டுண் டுண் டுண் டுண் டுண் டுண்டென தண்டமுதலிய சிருபறையறைதர மறவொலிசெவிடுற வாய்வழியனலுற சர சர சர வென பர பர பரவெனகதித்தபொன்முடி காவலரோடிட விதித்தநீள் சனைமேவலர் தாவிடமதித்த கண்மலரிவார்சிலை நீடிட எட்டுத்திக்குட்புட்டிட்டப் பரிகளும் வட்டத்துட் பட்டிட்டட்டக்கரிகளும் கெட்டுப்பட்டிட்டட்டக்கிரிகளும் வதரிக்கதறிப் பதரிப்பாரிடுபுவனம் படீர் படீர் படீரெனவாட ஆறுபோலுதிரம் அலைபுரண்டோட அமராடி வென் றுசீரியவீரிய சிம்மாசனத்தில் வீற்றிருக்கும் வேந்தேமந்திரி சத்தியகீர்த்தி வந்தனஞ்செய்கின்றேன்.

(அர-வ-ம்.) கல்யாண சத்தியகீர்த்தி இவ்வாசனத்தில் வீற்றிரும்.

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் எனது பிதாவாகிய திருசங்கு சக்ரவர்த்தியானவர் புகலரிய சதுர்மறையாய் மறைப்பொருளாய் புபகிடத்தாய்ப் பூதமைந்தாய் அகிலமுமாய் மன்னுயிராயவற்றிலனுவாய் அகமாய் மேலாய்ப் பகலிரவென்றறியாத பரம்பொருளாய் அறுசமயப்பகுதி யாகிச் சகலமுமாய் நிட்களமாய் நின்றவனெவனோ அன்னவனுடைய க்ருபாகடாக்ஷத்தால் இவ்வரியாசனத்தினிடமாக வீற்று இக்கோசலை நாட்டை யாதொருகுறைவின்றி இராஜரீகஞ்செய்து மாதவத்தாலென்னை யடைந்து எனக்குவசிட்டரால் மகுடஞ்சூட்டி புத்தியிற்சிறந்த வுன்னை மந்திரியாக நியமித்துச் செங்கோலாக அரசுபுரியும்படி ஆக்ஞாபித்து அந்தரசுவர்க்கமடைந்தனரன்றோ.

(மந்-வ-ம்.) ஆம்-ப்ரபு.

(அரி-வ-ம்.) ஆகையால் யானின்று வைகறையி லெழுந்து நதிக்குச்சென்று நீராடிச் செபதபங்களைமுடித்து அரண்மனைக்குட் பிரவேசித்து அறுசுவையுடனே போஜனமருந்தி அப்பால் தாம்பூலமுட்கொண்டு மங்களமாக விக்கொலுமண்டபத்துக்கு வந்து சபையிலுள்ளோர்க்கும் குருவுக்கும் வந்தனஞ்செய்து சாக்ஷாத் சோமசுந்தரேசரைத் தியானித்து இவ்வரியாசனத்தினிடமாக வமர்ந்தேன் தாமுமிங்கெழுந்தருளினீர் மிகவுஞ்சந்தோஷம் தம்மிடத்தில் நமது இராச்சியவிஷயமான நீதிகளைக் கேட்டுத்தெரிந்துகொள்ளவெண்ணுகின்றேனுமதிச்சையென்ன.

(மந்-வ-ம்.) அரசர்க்கரசே தாங்கள்கேட்குங் கேள்விகளுக்கெல்லாம் பதில்குதூகலமா யெடுத்துரைக்கத் தயாராயிருக்கின்றேன்.



## அரிச்சந்திரன்தேசவிசாரணை.

அகிலப்பிரபஞ்சமுன்னுலேயானென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மானிலமதனில்வேதியர்நடக்கும் வகையதைமதிமந்திரி
தீனமாயெனக்குமனமகிழ்வாகச் செப்புவாய் நீ - மந்திரி

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் கடல்சூழ்ந்த இவ்வுலகின்கண் முதற் குலத்தோராகிய வேதியர்களெவ்வாறு உஜ்ஜீவிக்கவேண்டும்.

(மந்-வ-ம்.) சக்ராதிபா முதற்குலத்தோராகிய அந்தணர்கள் ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல், என்ற ஆறுதொழிலையுந் தவராதுபுரிந்து உஜ்ஜீவிக்கவேண்டும்.

(அரி-வ-ம்.) சத்யகீர்த்தி அன்னவர்களை யவ்விதமே நடக்கும் படிதிட்டஞ்செய்வாயாக.

(மந்-வ-ம்.) ஆக்ஞை.

அரசன்சொல் தரு.

உத்தமக்ஷத்ரியருலகினில்வாழு முறைதனையமதிமந்திரி
புத்திநீக்ஷண்யமாகவேயெனக்கு புகலுவாய்நீமந்திரி

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் மற்றுமிவ்வையகத்தில் க்ஷத்திரிய ரெவ்வாறு நடத்தல்வேண்டும்.

(மந்-வ-ம்.) புவனசக்ரேஸ்பரா இரண்டாவது வர்ணத்தாராகிய க்ஷத்திரியர்கள் ஓதல், வேட்டல், ஈதல், உலகோம்பல், படை பயிற்றல், போர்செய்திட்டல், என்ற இவ்வாறு தொழிலையுங் கைக்கொண்டுவழுவாது வாழவேண்டும்.

(அரி-வ-ம்.) அமைச்சே அன்னவர்களை யவ்வாறே வாழும் படிசெய்வாயாக.

(மந்-வ-ம்.) உத்தரவுபோல்நடக்கச் சித்தமா யிருக்கின்றேன்



அரசன்சொல் தரு.

வையகமதனில்வைசியர்வாழும் வன்மையதனைமந்திரி
வெய்யவன்சீர்குலத்தாசனுன்தெரிய விள்ளுவாய்மதிமந்திரி

(அரி-வ-ம்.) மந்திரி இந்தவையகத்தில் மூன்றுவது வர்ணத் தாராகியவைசியர்கள் எவ்விதம் நடந்துவரவேண்டும்.

(மந்-வ-ம்.) கோசலாதிபா மூன்றுவதுவர்ணத்தாராகிய வைசியர்கள் ஓதல், வேட்டல், வேளாண்மைசெய்தல், வாணிபஞ்செய்தல் நிரைகாத்தல், ஏறுழல், என்ற இவ்வாறுதொழிலும் வழுவாதுபுரிந் துஜ்ஜீவிக்கவேண்டும்.

(அரி-வ-ம்.) ப்ரதான் அவ்விதமே அன்னவர்களை நடக்கும் படிசெய்யும்.

(மந்-வ-ம்.) உத்தரவு ப்ரபூ.

அரசன்சொல் தரு.

பாரினிற்சூத்திரர்நடந்திடும்இயல்பை பண்புளமதிமந்திரி
ருடனெனக்குத்தெரியவித்தருணஞ் செப்புவாய்நீமந்திரி

(அரி-வ-ம்.) ப்ரதான் நான்காம்வருணத்தாராகிய சூத்திரர்க ளெவ்வாறுஜ்ஜீவிக்கவேண்டும்.

(மந்-வ-ம்.) சக்ரேஸ்பரா பசுவோம்பல், பயிரிடல், பொருளீட்டல், இதிகாசமுதலிய புராணங்களோதல், அந்தணர் க்ஷத்திரியர், வைசியரென்றன்மூன்றுவருணத்தாருக்கும் கீழ்ப்படிந்தேவல் செய்தலானஇவ்வாறுதொழிலையும்வழுவாதியற்றி வாழவேண்டும்.

(அரி-வ-ம்.) சத்யகீர்த்தி அன்னவர்களை யவ்விதமேயுஜ்ஜீவிக்கச்செய்யும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை அரசே.

(அரி வ-ம்.) ப்ரதான் யான்கேட்குங் கேள்விகட்கெல்லாம் இனிதுரைத்த வுமதுபுத்தி சாதுரியத்துக்கு மிகவுமெச்சினேன்.

முன்னால் பொதுவிருத்தம்.

இருந்தகாலைபிலியாவர்க்கும் விடைகொடுத்தருளித்
திருந்துமாமுடிமன்னவன் சிலநடனிருப்பப்
பொருந்துநன்னெறிப்புண்ணியதீர்த்தங்களாடி
அருந்தவத்தினரனேகர் வந்தன்னகரடைந்தார்.





# அரசன்சமுகம் யாத்திரை மாதவர்கள் வருகிறபாகம்.

எந்தவுலகமோ யிம்மங்கையென்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதவரனேகர்வந்தாரோ யிந்த மாநிலப்புகழ்கோசலை
மன்னனரிச்சந்த்ரன் முன்னம் (மாத)

அநுபல்லவி.

பாதகந்தீர்த்தொளிர் நதிபலவாடி
பசுபதிதிருவடியிணையைக் கொண்டாடி
ஆதரவாயங்ஙன சத்திரந்தேடி
ஆங்குபுகுந்துபசித்து அயர்வுதணிநசித்து (மாத)

சரணம்.

பந்தமதானதிருச்சடையும் காவிக்கறேய்ந்து
பளபளப்பாவிளங்குமுடையும் மாவுரிவ
ரிந்துகட்டுதலானவிடையும் ஆயாசமதால்
யத்திரைத்தோய்தலானநடையும் சொல்லவேயொண்ணு
விந்தையாங்கரங்களில் விபுதியுடைத்தண்டு
விரல்களிற்றருப்பையின் போதிரம்பூண்டுகொண்டு (மாத)

(மா-வ-ம்.) சங்கரவிபோ சங்கரவிபோ சங்கரவிபோ ஆடா ஆசாரவாசலிற் சேவகன்.

(சேவ-வ-ம்.) ஸ்வாமிகளே வந்தனஞ் செய்கின்றேன்.

(மாத-வ-ம்.) கல்யாண சேவகா உனதிறைவனிடத்திற் சென்று.

முன்னால் விருத்தம்.

சடையுமுண்டமுஞ்சிகையிலுண்டாதகற்றேய்ந்த
வுடையுமாமாவுரிகளுமுடித்தழகிருந்த
விடையுந்தாழ்சிறுபண்டியுமெய்த்திளைத்தோய்ந்த
நடையுவாழ்த்தஞ்சமித்துமுக்ஞமுநாவும்.

மேற்படி விருத்தம்.

நாளுமார்பமுநாமிடைத்திகழ்ந்துறநடங்குக்
தோளுமங்குலித்தருப்பையுந்துலங்குமொண்செவியி

ளுஉம்பாகருண்டலங்களுநான்மறைநெறிமுக்
கோலுமேந்தியகுடைகளுங்குண்டிகைக்கரமும்

(மாத-வ-ம்.) இவ்வவகைளெல்லாங் கொண்டிருக்கிற யாத்தி ரைமாதவர்கள் ஆசாரவாசலின்கண் வந்திருக்கிறார்களென்று தெரிவிப்பாய்.

(சே-வ-ம்.) ஆக்ஞை மாதவர்களே.

(சேவ-வ-ம்.) மஹாராஜ் ஆசாரவாசலின்கண் யாத்திரைமாதவர்கள் வந்திருக்கிறார்கள்.

(அரி-வ-ம்.) சேவகா யாதொருதடையும் புகலாதிங்கு வரச்சொல்வாய்.

(சேவ-வ-ம்.) ஸ்வாமிகளே தங்களைமகாராஜா கொலுச்சமுகத்துக்கு வரச்சொனனார்கள்.

(மாத-வ-ம்) சிவ சிவ சிவ சிவ அப்படியாவிதோ செல்கின்றோம்.

அரசன் யாத்திரைமாதவரை வணங்குதல் விருத்தம்.

பங்கயக் கரத்தில் மான்மழு தரித்த
பாமனை நினைந்துயர் வேள்வி
துங்கமாய்ப் புரியு மாதவ ரேபித்
தொல்லுல கதனில்நற் சீரார்
எங்கள்முன் னவர்க ளியற்றிய தவமோ
யான்செய்த மாதவந் தானோ
மங்கள மாக வேயிவண் வந்தீர்
மலரடி வணங்கினன் மகிழ்ந்தே.

(அரி-வ-ம்.) சுவாமிகளே எங்கள் முன்னவர்களியற்றியதவமோ அல்லது யான்செய்ததவந்தானோ தாங்களிவ்விடம்வந்தீர்கள் தங்களுபயபாதங்களுக்கும் வந்தனஞ் செய்கின்றேன்.

மாதவர்கள் விருத்தம்.

முக்கனித் தேறல் பாய்ந்திடப் பயிர்கள்
முகடுவான் தொட வளர்ந் தோங்கும்
தக்கதோ சலநா டனைத்தையு மோர்பூச்
சக்கரக் குடைநிழல் வீற்றுத்



திக்கெலாம் புகழ மாற்றலர் வணங்கித்
திறையது செலுத்தவே செங்கோல்
பக்குவமாவொஞ் ஞான்றினும் புரியும்
பார்த்திபா வாழிநீ வாழி.

(மாத-வ-ம்.) ஆசீர்வாதம் ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அயோத்திக்கரசே.

(அரி-வ-ம்.) சுவாமிகளே இவ்வாசனங்களின்மேல் வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றேன்.

(மாத-வ-ம்.) அரசேசந்தோஷம் அப்படியே இவ்வாசனங்களில் வீற்றிருக்கின்றோம் நீயுஞ்சிம்மாதனத்தில்வீற்றிருப்பாய்.

அரசன் விருத்தம்.

இந்தவையகத்திற்சிறந்தியிலகிடுநதிகளாடி
வந்தமாதவரேயொன்று வழுத்துவன்கேண்மினீங்கள்
எந்தெந்தத்தேயங்கண்டீ ரெந்தெந்தத்திசைபுகுந்தீர்
அந்தந்தத்தலத்திலென்ன வதிசயங்கண்டீர்சொல்வீர்.

(அரி-வ-ம்.) ஓ தவசிரேஷ்டர்களே தாங்களெந்தத் தேசத்தைக்கண்டீர்கள் எந்தெந்தத் திசைக்குப்போனீர்கள் எந்தெந்தத் தீர்த்தங்களிலேமுழுகினீர்கள் அந்தந்தத்தலத்தினில் என்ன என்ன ஆச்சரியங்களைக்கண்டீர்கள் அவைகளை யெடுத்துரைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

மாதவர் விருத்தம்,

மன்னனே கேளாய் வையக மதனில்
மாசில்கன் னோசிநாட் டகத்திற்
பின்னமில் லாத கண்டகித் தீர்த்தம்
பெட்புட னாடியே யாங்க
ளன்னவ நாட்டிற் கன்னமா புரியி
லதிசய மொன்றது கண்டே
உன்னிடம் கூற வந்தனஞ்சித்த
மொருமையாய்க் கேட்டியே யுரைப்பாம்.

(மாத-வ-ம்.) பூபாலகா கடல்வளைந்தநெடிய இவ்வுலகத்தினிமாகவுள்ள தீர்த்தங்களெல்லாமாடி அப்பால் கன்னோசிநாட்டுக்குந்துகண்டகியென்ற தீர்த்தத்திலமுழ்கி அன்னநாட்டுக்குத்தலைமாந

கரமாகிய கன்னமாபுரியில் ஓர் அதிசயத்தைக்கண்டு அவ்வதிசயத்தை உன்னிடத்திலேயே கூறவேண்டுமென்ற எண்ணத்துடன் இங்குப்பிராப்தமாயினம் மிகவும்மனமகிழ்ச்சியோடு வினவுவாயாகில் அதனைச்சொல்லத் தயாராயிருக்கின்றோம்.

(அரி-வ-ம்.) பவத்தைப்போக்கும் தவத்திற்சிறந்த மாதவர்களே தங்கள் ஆக்ஞைப்படிக்கு குதூகலமாய்க் கேட்கின்றேன் அவ்வதிசயத்தை விபரமாயுரைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

## மாதவர்களரசனிடம் சந்திரவதியின் கேசாதிபாதவர்ணிப்புக்கூறல்.

(மாத-வ-ம்.) கோசலாதிபா கவனமாய்க்கேள்ப்பாயாக மேகத்தைவென்றகருமணலை, ஒதுங்கத்தள்ளி சைவலத்தைக்கோபித்துக் கொன்றைக்காயைத்துரத்தி அகிலின் தூபுகையும், மயிற்சாக்கமும், புழுகும், அணிந்து, இருளானது திரண்டெழுந்தாற்போன்றகூந்தலும், மூன்றாம்பிறையைவென்ற நெற்றியும், அங்கசனங்கைவில்போன்றபுருவமும், ஏனசத்தையும், கருங்குவளையையும், நீலோற்பலத்தையும் சுரும்பினினத்தையும், யமனையும், வேலையும், வாளையும், மாவடுவையும், சாகரத்தையும், கெண்டைமீனையும், விஷத்தையும், மானினத்தையும் வென்றுசெவ்வரிபரந்த கண்களும், பூர்ணசந்திரனையுஞ், செந்தாமரைமலரையும், வென்றதிருமுகமும், ஊஞ்சலையும், வள்ளைக்கொடியினையுங், கத்தரிக்கோலையும், வென்றசெவிகளும், நீர்நிலையையுங், கண்ணாடியையும், வென்றகன்னமும், குமிழமலரையுஞ், சாதிப்புட்பத்தையும், எட்பூவையும், போன்றநாசியும், இந்திரகோபத்தையும், பவளத்தையும், முருக்கமலரையும், போன்றஇதழும், குமுதமலரைவென்றவாயும்; முல்லையரும்பையுங், தரளத்தையு, மயிலிறகினடியையும், போன்றதந்தங்களும், நத்தையுங், கமுகையும்; வென்றகந்தரமும், மந்திரகிரியைமத்தாகநட்டுவாசுகியைத்தாம்பாகச்செய்து அசுரரொருபக்கமும் அமரரொருபக்கமுமாகப்பிடித்துச் சாகரத்தைக்கடையுங்கால் உற்பவித்த அமுதத்தையும், மா, கதலி, பலா, என்றமுக்கனியையும், கரும்பினிரசத்தையும், குயிலையுங், கிளியையும், கற்கண்டையும், சீனியையும் சருக்கரையையுங், தேன்குழம்பையும், புள்ளாங்குழலையும், வீணையையும், வென்றுதீய்த்தபயிர்களும், பட்டமரங்களும், உடம்பினின்றுங்கழிந்த வெள்ளையெலும்புகளும், உயிருண்டாகும்படிசெய்யக்கூடியவசனமும், மூங்கிலையும், கமுகையும், போன்றதோள்களும், மகரயாழைவென்ற முன்கையும், செங்காந்தட்புஷ்பம்போன்ற உள்ளங்கையும், கெளிற்றுமீனை வென்றவிரல்களும், கிள்ளையின்நாசியைவென்றநகங்களும், செந்தாமரை மொட்டையும், தென்னங்குரும்பையையும், சொக்கட்டான்காயையும்; கிண்ணத்தையும், செப்புமுடியையும், கோங்கினரும்பையும், கைத்தாளத்தையும், நீர்க்குமிழியையும், சிமிழையும், பம்பரத்தையும், வெற்பையும், பந்தையும், சக்ரவாகப்பட்சியையும், கலசத்தையும், யானைமருப்பையும், குடத்தையும் போன்றதனங்களும், ஆலிலைபோன்றவயிறும், மகிழமலரைவென்றவுந்தியும், அல்லையையும், படிக்கட்டையும், போன்ற வயிற்றின்மடிப்புகளும், எறும்பினொழுங்கையும். வண்டினொழுங்கையும், திருடர்காற்சங்கிலியையும், காஞ்சிமணியின்காந்தியையும் யானைகட்டுஞ்சங்கிலியையும், சரிகையையும், தாமரைத்தண்டையும், நிகர்க்கும்வயிற்றினுரோமக்கொடியும், பைங்கொடியையும், கரவையும், பூங்கொம்பையும், மாரனுடம்பையும், வகிரிழையையும், கைப்பிடியின்னளவையும், மூன்றாம்பிறைச்சந்திரனையும், மின்னலையும், சிங்கத்தையும், உடுக்கையும், போன்றஇடைகளும், யானைத்துதிக்கையையும், கதலிவாழையையும், வென்றதொடைகளும் ஞெண்டைப்போன்ற முழந்தாளும், எக்காளத்தையும், விராலமீனையும், நிகர்த்தகணைக்காலும், கைத்தாளசை யொத்த பரடுகளும், பந்தைநிகர்த்த, குதிக்காலும், ஆமையோட்டைப்போன்ற புறவடியும், பவளத்தைப்போன்ற விரல்களும் சந்திரனைப்போன்ற நகங்களும் அனிச்சமலரையும், தோகையையும், அசோகமலரையும், தாமரைப் புட்பத்தையும், செம்பஞ்சையும், மாந்தளிரையும் வென்றபாதமும், பெட்டையானையையும், அன்னத்தையும், வென்றநடையும், மயில்போன்றசாயலும், உடையவளாக மா, பலா, கதலி, என்றமுக்கனிகளின் தேன்கள் பாய்ந்து செந்நெல்கள் ஆகாயத்தையளாவும்படி வளரக்கூடிய பழனங்கள்சூழ்ந்த கன்னமாபுரியையாளுகின்ற சந்திரகுல மதிதயனென்பவன் நீண்டநாளாய் சாக்ஷாத் சிவபெருமானைக் கோரித் தவஞ்செய்து இப்பூமண்டலத்திலுள்ள மாதர்களிலும் மாட்சிமைதங்கிய கற்பகத்தருவின்கீழ் சுதர்மமென்னும் பீடத்தில் வீற்றரசுபுரியும் தேவே

ந்திரனுடைய நகரில்வாழும் மாதர்களிலும் அதிகரூபலாவண்யமு ம்அருந்ததியினுடைய பதிவிரதா குணத்திற்குப் பதிமடங்கதிக மானகுணமும் வாய்ந்தசந்திரவதியென்ற நாமம்பூண்ட பெண்கள் நாயகத்தைப் பெற்றிருக்கின்றான் அம்மாதரசை அனேகம் அரசர் கள் தங்கள் தங்களுக்கு மணஞ்செய்ய வெண்ணிவந்து பேசியவர் கட்கெல்லாம் அம்மதிதயராஜன் முன்னமே எம்பெருமான் கூறி யவனுக்கேவதுவை சூட்டுவேனேதவிர மற்றவர்களுக்குக் கொ டேனென்று சொன்ன ஒரு உறுதிவார்த்தையையுங் கேட்டிருக்கி றோம்ஆகையால் அந்தப்பெண்ணணங்கே உன் தோளுக்கிசைந்தவ ளேதவிர வேறுமாதர்க ளொப்பாகமாட்டார்கள் இவைதான் நாங் கள் கண்டவதிசயம் பூபாலகா.

---

## அரசன் சந்திரவதியினுடைய ரூபலாவண்யத்தைக்கேட்டு அத்யந்த சந்தோஷமடைந்து மாதவரிடஞ்சொல் தரு.

---

சாகுஞ்செய்யவா என்ற-மெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஆசைகொண்டேனே யான் ஆசைகொண்டேனே

அநுபல்லவி.

ஆசைகொண்டேனேயதிக ஆசைகொண்டேனே (ஆ)

சரணம்.

மாதவரேநீங்கள்சொன்ன மாதுசந்த்ரவதிமீது
ஆதவன்குலத்துதித்த அரசனிப்போது மிக்க(ஆ)

மேற்படி விருத்தம்.

மாதவரோ நீங்கள் சொன்ன
மாதரசி மேலதிக மோகமானேன்
ஆதலினு லெங்கவித்த் திறுமந்தப்
பெண்ண ணங்கை யடியேனுக்குத்
தீதில்லா மணந்தாங்கள் செய்துவைப்பே
மென்றுமனத் திடமதாக
ஓதினு லென்னிடத்தி லுயிருள்ள
தாகுமிது வுண்மைதானே.



(அரி-வ-ம்.) ஓமாதர்களே தாங்கள் கூறிய பெண்ணரசிமேல் தற்சமயம் யானதிக மோகங்கொண்டு விட்டேன் ஆகையாலப்பெ ண்ணணங்கை யெந்தவிதத்திலுமெனக்கு விவாகஞ்செய்துவைக்கி றோமென்று நீங்கள் மனத்திடமாய்ச் சொன்னால்தான் என்னிட த்தி லுயிரிருக்கிற தாகுமீதுண்மை.

மாதவர் விருத்தம்.

ஆதவன்குலத்தில்வந்த வரசனேகேளாயுதோர்
பேதமில்லாதவந்தப் பெண்ணணங்காளைநீயுங்
காதலியாகக்கொள்ளக் களிப்பாயெங்களினுலாகுஞ்
சேதியைமனமகிழ்ந்து செப்புவாய்செப்புவாயே.

(மாத-வ-ம்.) பருதிகுலாதிப யாதொரு குற்றமில்லாத சந் திரவதியென்னுமாதரசியை நீவிவாகஞ்செய்து கொள்வதற்கு எங் களாலாகும் விஷயம் யாது அதைவிபரமாய்ச் சொல்லுவாய்.

அரசன் விருத்தம்.

மன்னன்மதி தயனீன்ற மடக்கொடியை
யடியேனு மாலை சூட்டக்
கன்னபுரிக் கித்தருணங் கடுங்கானை
லாங்கடந்து கடுகி நீர்போய்
அன்னவனைக் கண்டெந்த னுசையெலா
மொழிந்துமனை மதற் கிணங்கிச்
சொன்னமொழி கேட்டென்பால் வந்திடுவீர்
மனமகிழ்ந்து சுகமாய்த் தானே.

(அரி-வ-ம்.) ஓ மாதர்களே சந்திரதயராஜனீன்ற சந்திரவதி யையான் விவாகஞ்செய்து கொள்வதற்காக அந்தக்கன்னமா புரிக் குத் தாங்கள் வனம் வனாந்திரங்களெல்லாங் கடந்து சீக்கிரத்திற் சென்று அம்மதிதயனைக்கண்டுஎன்னிலைமைகளைச்சொல்லிக்கல்யா ணவிஷயம்பேசி யதற்கவனிணங்கிச் சொல்லுகிற வார்த்தையைக் கேட்டுச் சந்தோஷமாய் வரப் பிரார்த்திக்கின்றேன்.

மாதவர் விருத்தம்.

அவனிமுழு வதுமாளு மரசர்களுக்
கரசேநீ யறையக் கேளாய்

தவபலத்தா லுற்பவித்த சந்த்ரவதி
தனமதையுன் தாரார் மார்பில்
நவமாகச் சூட்டுவிப்போம் யாங்களுமே
யாகையினல் நலியா நெஞ்சக்
கவலைதனை நீயொழித்துக் களிப்பாக
விடையருள்வாய் கடுகி யின்றே.

(மாத-வ-ம்.) அரசே யாதொன்றுக்கும் யோசிக்க வேண்டுவ தில்லையெந்த விதத்திலும் அந்தச் சந்திரமதியின் ஸ்தனபாரங்கள் ரெண்டையும் உனது விந்தைபம்பர்வதம்போன்ற சுந்தரமார்பினிடமாக எந்தவிதமுஞ் சேர்த்துவைக்குகின்றோம் ஆகையால் கவலையை ஒழித்துச் சந்தோஷமாய் விடையளிப்பாய்.

(அரி-வ-ம்.) அனேகவந்தனஞ் சென்றுவாருங்கள்.

## மாதவர்கள் சென்றபின்னர் அரிச்சந்திரன் சந்திரவதியையெண்ணி விரகதுபடைதல் தரு.

என்வருகிறாய்மந்திரியென்ற-மெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - ஆதி.

பல்லவி.

இந்தவிரகமதைநானே இன்று எந்தவிதஞ்சகிப்பேனே

அநுபல்லவி.

மந்தமாருதமிதோ — வந்துவீசுகிறதே
சிந்தையொருவகையாய்த் — தியங்கிமயங்குறதே. (இ)

சரணம்.

சித்தசன்கன்னல் — விற்பிடித்து-அதிற்
செந்தாமரைமலரைத் — தொடுத்து
சற்றுமெண்ணுமற் — கடுகடுத்து-ஐயோ
சாங்கோபசாங்கமாய் — விடுத்து
இத்தருணத்திற்சண்டை — யிட்டேசெய்குறான்கோரம்
மெத்தவருந்துறதே — மேலானவென்சரீரம் (இ)
இந்தநகரையாள — வன்று-யான்
இசைந்தமுதலாகவே — யின்று



எந்தனுக்குரைக்கருந் — சென்று துஷ்ட
எதிரிகளியாவரையுங் — கொன்று
வந்ததல்லாமிதுவரையிலு — மிந்தத்-தொல்லை
எந்தவிதத்திலுமே — மெய்யடைந்ததேயில்லை (இ)

முனிவர்மதிதயனைக் — கண்டு-யான்
மொழிந்தபடியானந்தங் — கொண்டு
கனிவாயன்னவனிடம் — விண்டு-அந்தக்
கன்னிகையைமுடித்தா — லொற்குண்டு
அநினவருமபுகழா — சாட்சியும் புண்யமும்
கனைகடல்சூழிந்தக் — காசினியிற் கண்யமும் (இ)

(அரி-வ-ம்.) ஆ! ஆ! சகெதன்ன ஆச்சரியம்! யாத்திரை மாதவர்கள் சொன்ன சந்திரவதியின்மீது நான்கொண்ட ஆசையினல் ததிபார்த்துக்கொண்டிருந்த செங்கண்மால் புதல்வனுகிய அங்கசனானவன் சங்கையில்லாமல் பங்கயமலர்தொடுத்து அதோ என்மீது விடுத்துச் சண்டைசெய்கிறான் அன்னவனுக்கு துணியாக மன்றல்மிகுந்ததென்றலோ அக்கினிச்சுவாலைபோல் வீசுகின்றது இதற்கென் செய்வேன் ஐயோ யான் அயோத்தியாபுரியை அரசபுரியத்தொடங்கிய நாள்முதல் இதுவரையும் எனது ஆக்ஞாசக்கரமானது சென்று துஷ்டசத்திரிகள் யாவரையும் சங்கரித்துவந்ததேயன்றி இவ்விதமான துன்பம் ஒருநாளும் அடைந்ததேயில்லை அப்படியிருக்க இந்தத்துன்பத்தை எவ்விதம் சகிப்பேன் சகிக்கக்கூடாததாகவேயிருக்கிறது ஒருவாறு யாத்திரைமாதவர்கள் அம்மதிதயனைக் கண்டுயான் சொன்னவாறே சொல்லி அச்சந்திரவதியை எனக்கு விவாகம் செய்துவைக்கும் விஷயத்தில் உலகத்திலிட்டாக எனக்கு அரசாட்சியும் கண்ணியமும் புண்ணியமும் உண்டே தவிர அவ்விதம் செய்யாத பக்ஷத்தில் இல்லாததாகவே முடியும்போலிருக்கிறது தெய்வச்செயல் எப்படியோ வியாகூலம் அடைவதில் என்ன பிரயோசனம் யாத்திரைமாதவர்கள் வரவுக்கு எதிர்பார்ப்போம்.



பரமபதி துணை.

# மதிதயராஜன் சபை.

விருத்தம். 1

மாதவர்கள் ஜெயஜெயன வாசிகூற
  மகுடமுடி மன்னரெல்லாம் வணங்கிநிற்க
கோதிலா மடமாதர் நடனமாடக்
  கோகனகத் தனப்பெண்கள் கவரிவீசப்
பேதமிலாமதியமைச்சர் பக்கம்வாழப்
  பிறங்குமணி யாசனத்தில் வீற்றிருந்தே
நீதிலா வரசுரிமை செலுத்தவீதோ
  நிராகமதிதய மன்னவன் வந்தேனே.

## மதிதயன்சொல் தரு.

இராகம் - கமாஸ் - தாளம் - [illegible]கம்.

கண்ணிகள்.

மன்னவர்கள்மன்னர்பணி   மதிதயராஜன்
கன்னமாபுரியதனைக்   காத்திடும்போசன்
வெற்றிவடிவாள்பிடித்த   வீரகெம்பீரன்
குற்றஞ்சற்றுமில்லாமற்   செங்கோல்புரிதீரன்
தேசதேசத்தரசர்கப்பஞ்   செலுத்திடுஞ்சீமான்
பூசுரர்கடக்கன்பதம்   போற்றிடும்பூமான்
திங்கட்குலத்துதித்த   திடமிகுதீரன்
அங்கண்மாநிலத்திலுள்ள   ரார்க்குமுபகாரன்
அந்தணர்களாசிகூற   வன்புடன்யானே
சிந்தையாய்க்கொலுவிருக்க   விரைந்துவந்தேனே

(மதி-வ-ம்.) மகாவுன்னதம்பொருந்திய இவ்வரங்கினிடமாகச் சகலகலை சம்பன்னுளாக வீற்றிருக்கும் வித்துவான்களுக்கும் மற்றோர்கட்கும் அனேகவந்தனம்.

அரிச்சந்திரராஜன் வழிபடுகடவுள் வணக்கவிருத்தம்.

திங்களுநதியுமோங்குஞ் செய்யதோர்வேணிசூடும்
மங்கையோர்பாகாராகு மான்மழுதரித்தகையா
மங்களமாகவிச்சிம் மாசனமதில்யான்வீற்றுத்
துங்கமாய்ச்செங்கோலோச்சச் சுபமதாயருளிய்வாயே

(மதி-வ-ம்.) ஓ ஜெகரட்சகா மங்கையோர்பாகாமான்மழுதரித்தகையா இச்சிம்மாசனத்திலிடமாக வீற்று எனது முன்னோர்கள் அரசுபுரிந்தது போலாக யானுமரசுபுரிய அருள்செய்ய வேண்டும்.

(சே-வ-ம்.) மகாராஜ் வந்தனஞ் செய்கின்றேன்.

(மதி-வ-ம்.) கல்யாண் சேவகா துவாரத்தின்கண் உசாராக வீற்றிரு.

## மதிமந்திரி அரசனைவணங்குதல்.

விருத்தம்.

கதிமதிவேண்[illegible] நாதனாருளினாலே
விதிமுறைகடவாதிருந்த மேன்மையாசனத்திருந்து
பதியெலாஞ்செங்கோலோச்சும் பூர்த்திபாவரசர்கோவே
மதிமந்த்ரியானுமீதோ வந்தனம்புரிந்திட்டேனே.

(மதி-வ-ம்.) மகா மேன்மைதங்கிய இளஞ்சந்திரனையும் கங்காநதியையும் சடாமகுடத்தில் வைத்திருக்கக்கூடிய யாதொருசிவபெருமான் கிர்பாகடாக்ஷத்தால் இக்கன்னமாபுரியில் வீற்றிவ்வுலகெலாஞ் செங்கோல்புரியும் வேந்தே மதிமந்திரிவந்தனஞ் செய்கின்றேன்.

(மதி-வ-ம்.) கல்யாண் மந்திரி சமீபத்தில் வீற்றிரும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞைபோல் வீற்றிருக்கிறேன் அரசே.

(மதி-வ-ம்.) ஏ ப்ரதான் நமதுராஜ்ய விஷயமாய்ச் சிலசங்கதிகள் உம்மிடத்திற் கேட்கவேண்டுமென் றெண்ணுகிறேனுமதிச் சையாது.

(மந்-வ-ம்.) அதற்குப் பதிலுரைக்கத் தயாராயிருக்கின்றேன் ப்ரபூ.



## மதிதயராஜன் தேசவிசாரணை.

(மதி-வ-ம்.) மந்திரி நமதாசிற் குட்பட்ட எல்லாநகரங்களி லும்பிரமத்தின் அருவுருவம் தோன்றும்படியாயும் பாமரர்முதல் பண்டிதாள்வரை பக்திமிகுந்தும்படியாகவும் அமிக்குமுக்தி க்கேதுவாகிய சரிகை, கிரிகை, யோகஞானமென்னும் வழிகளுக்கு முதற்காரணமாக ஏற்பட்ட ஆலயங்களில் கிரமப்படி பூஜைகளும் உச்சவாதிகளும் நடந்துவருகின்றதா?

(மங்-வ-ம்.) அரசே கவனிக்கவேண்டும் நமது செங்கோற் குட்பட்ட சிற்றூர்முதல் வெந்நாடுகளிலுமுள்ள தேவாலயங்களில் அந்தந்த நேரந்தவராமல் ஆறுகாலபூஜைகள் நிறைவேறுவதுடன் தினவிசேஷம் வாரவிசேஷம் மாதவிசேஷம் பக்ஷவிசேஷம் வருஷவிசேஷமென்னும் உச்சவங்கள்நடக்கும் சம்பிரமத்தை ஆதிசேடனுஞ் சொல்லுவதற் கெளிதில்லையாகின் என்னேர் நாவாற் சொல்லற்பாலதோ?

(மதி-வ-ம்.) பூசை விரதம், நோன்பு-யெக்யம்-ஓமம்-சாந்தி-பிராயச்சித்தம்-அஸ்வமேதம், இராஜசூயமுதலிய மிகவுமுத்கிருஷ்டமான யாகாதிகளை நடாத்தியதனால் முப்பத்துமுக்கோடி தேவர்கள், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகள் கின்னர கிம்புருட கெருட காந்தருவ சித்தவித்யாதரர் நாகர்முதலிய தேவர்கட்கும், பிர்மா-விஷ்ணு-உருத்திரனென்ற மூவர்கட்கும், அவிர்ப்பாகமளித்து நம்குலமானது வாழையடி வாழையாய்ப் பிரவர்த்தித்து வரச்செய்வதுமுதலானபற்பலகாரியங்களை நமக்கு முதற்றெய்வமாக விருந்து நடாத்தும் அந்தணாளர்கள் மேற்கூறிய கிரமப்படி நடந்து வருகின்றார்களா?

(மங்-வ-ம்.) ஹே புவனசக்ரேஸ்பரா நம்முதற்குலத்தாராகிய மறையவர்கள் திரிகாலஸ்நானங்களோடு சந்தியாவந்தன காயத்திரி ஜெப அக்கினி ஹோத்திர ஔபாசன கிர்த்தியங்களை நடாத்தியும் நான்கு வேதங்களையுஞ் சதாஸ்மரிக்கு நாவையுடையவர்களாயுந் தங்கள் முன்னோர்களாலுந் தங்களாலும் விடப்பட்ட தர்மாசனக் கிராமங்களின் ஜீவேகினின்று காலட்சேபஞ் செய்து வாழ்ந்து வருகின்றார்கள்.



(மதி-வ-ம்.) யதிகிரேஷ்டா (விண்ணின்று பொய்ப்பின் விரிநீர் வியனுலகத்துண்ணின் றுடற்றும்பசி) அதாவது உலகத்திற்குத் துணைக்காரணமாகிய மேகங்களானது காலா காலங்களிற்று மழை வருஷிக்காவிடில் விரிவாகிய நீரைக்கொண்ட சத்தசாகரஞ் சூழ்ந்த உலகத்திலிடமாகவுள்ள சர்வஜனங்களும் பசியினால் பீடிக்கப்படுவார்களென்பது நீதியன்றோ ஆனதால் அவ்விதத்தகைமைவாய்ந்த மேகங்களானவை நம்மரசுக்குட்பட்ட நாடுகள்தோறும் மாதமூன்றுமழை வருஷித்து அதினாலே சர்வபிரஜைகளும் மகிழ்வுற்றிருக்கின்றார்களா?

(மங்-வ-ம்.) அரசர்க்கரசே வேதமோதிய வேதியர்க்கோர் மழை, நீதிமன்னர் நெறியினுக்கோர் மழை, காதன்மங்கையர் கற்பினுக்கோர்மழை. ஆக மாத மூன்றுமழை வருஷித்து பூவைசியராகிய வேளாளர் முதலியயாபேர்களும் வேண்டும் பயிர் செய்யப்பெற்று நமது ராஜ்யங்கள் மிகவுஞ் செழிப்புற்றிருக்கின்றது அதினாலே தமது செங்கோல் நீதியும் பிரகாசிக்கின்றது.

(மதி-வ-ம்.) மிகவுஞ் சந்தோஷம் மந்திரி நம்முட்பட்டக்கூடிய சிற்றரசர்கள் யாவருஞ் செங்கோல்புரிந்து தலைணப்படி பகுதிகட்டி வருகின்றார்களா?

(மங்-வ-ம்.) அரசரேறு நமது செங்கோற்குட்பட்ட சிற்றரசர்கள் யாவரும் வைகறையிலெழுந்து நித்யகர்மானுஷ்டானம் முடித்து (அஞ்சாமை ஈகை அறிவூக்கமிந்நான்கும் எஞ்சாமைவேந்தர்க்கியல்பு) என்ற நீதிவாக்கியத்தின்படி அரசபுரிந்து வருவதன்றி நமக்கு ஏற்பட்டபகுதியைச் சரியாகக் கட்டி வருகிறார்கள்.

(மதி-வ-ம்.) ஹே! பிரதான சிரேஷ்டா மூன்றாவது வருணாசிரமத்தாராகிய வைசியாள் அவர்களுக்கு ஏற்பட்ட நியமப்படி நடந்து வருகின்றார்களா?

(மங்-வ-ம்) அரசர்க்கரசே வர்த்தகம் செய்யும் வைசியர்கள் யாவர்கள் கொண்டமுதலுக்குச் சிறிதுலாபஞ் சம்பாதித்தும் ரவுத்தக்க சிலவுசெய்தும் அசத்யர்கள் சத்கெடுக்கினுங் கடன் கொடாமலுஞ் சத்தியத்தையுடையோர்கள் வறியோர்களாக விருப்பினும் அவர்களுக்கு வாக்கு நாணயமாகக் கடன் கொடுத்தும் தித்துவரவு கணக்குகளிற் கிஞ்சிற்றேனும்மோசஞ்செய்யாமலும்

நன்மையான விஷயத்தில் அபரிமிதமாகச் சிலவுசெய்துஞ் சித்தியாக வாழ்ந்து வருகின்றார்கள்.

(மதி-வ-ம்.) அமைச்சே குண்டகர், கோளர், சவர்ணர், நக்ஷத்திரஜீவகர், வப்தர், கும்பகாரர், பாரசவர், கிடாதர், போஜர், சூதர், கூவிரர், மாகிட்டியர், விசன்மர், உக்ரர், சூலிக்யர், மணிகாரர், புளிந்தர், க்ஷத்தர், மிலேச்சர், மாகதர், அர்த்தர், கௌட்டியந்தர், கடகர்ரர், மாலாசிதர், உற்பலர், சண்டாளர், பாருதாயர், வைதேகர், பலதர், அபோகவர், சத்ரியார், ஆவந்தியர், மல்லர், சுதனவர், மைதரர், பலகண்டர், இரசகர், புட்பகர், தக்கர், சுவபசர், குக்பர், காணர், சர்மகாரர், யிரகர், வேணுகர், கனகர், அந்திகர், வர்த்தனசாலிசர், கருமகாரர், தண்டகபோலர், மார்க்கவர், சல்லர், வந்திகர், வாடதானர், கண்டகர், சற்பர், சௌண்டிகர், சாத்வதர், தசியர், பைரவர், ஆஸ்ரைகர், காண்டர், சாமுத்ரர், மாலாகாரர், [illegible]வர்த்தர், நீலகாரர், வருணகார், பிங்களர், நர்த்தகர், மாதங்கர், நடர், திராமிளர், சர்மசீவியர், லோகி, வர்ணவிக்ரதர், [illegible]பாகர், குட்குடர், வேணர், புல்கசர், ஆவிரதர், அபீரர், த[illegible]துவ[illegible]கசர், சைரந்தியர், மைத்திரேயர், பார்க்கவர், காருவர், [illegible]ண்டகோபகர், ஆண்டிகர், சோபிகர், அந்தியாவசாயிகர் யென்[illegible]சொல்லப்பட்ட ௬௪ சாதியர்களும் அவரவர்களுக்கு ஏற்பட்ட[illegible]திப்படி ஆறிலோர் கடமை கொடுத்து அறநெறி வழுவாது வாழ்ந்து வருகின்றார்களா?

(மந்-வ-ம்.) புவனசக்ரேஸ்வரா நான்காவது வருணத்தாராகிய சூத்ரர்கள் யாவரும் பிரமக்ஷத்திரிய வைசியரென்னும் மூவர்க்கு முஞ்படிந் தேவல்செய்து நமக்காறிலோர் கடமைகொடுத்து குறைவின்றி வாழ்ந்து வருகின்றார்கள்.

(மதி-வ-ம்) ஹே பிரதான் யான் வினவிய சங்கைகள்யாவற்றுக்கும் புத்தி தீக்ஷண்யமாகக் குறைவுறாது பதிலுரைத்தவுனது வசனாமிர்தத்தைப் பருகிய யான் தன்யனானேன் ஆயினும் என் மனதினிடமாக சில நாளாகக் கின்றிறது கவலையானது ஏற்பட்டு வருகிறது.

(மந்-வ-ம்.) அரசர்க்கரசே யாதொரு கவலையில்லாமல் யிந்தக் கன்னமாபுரியை நீதியாகச் செங்கோல் புரிந்துவருகிற தங்களுடைய மனதில் கவலையேற்பட வேண்டிய காரணமென்ன அத



னை விவரமாயெடுத்துரைத்தால் அது நீங்கும்படியான மார்க்கத்தைத் தேடுவோம் பிரபு.

மதிதயாராஜன் விருத்தம்.

மந்திரிகேளாயெந்தன் மாதவந்தனிலுதித்த
சந்திரவதியாளுக்குத் தக்கதோர்பருவம்வாய்ந்தும்
முந்தநாளரன்மொழிந்த மொழிப்படிமாலைசூட்டச்
சுந்தரப்புருடனிங்கு தோன்றவுங்காணேனையோ.

(மதி-வ-ம்.) ஹே பிரதான் கவனித்துக் கேட்பாயாக யான் நீண்டநாளாய்ப் பரமசிவனைக் கோரித்தவஞ்செய்து அன்னவர்வரத்தால் பெற்ற மாதுசிகாமணியாகிய யெனது புத்திரி சந்திரவதி யௌவனப்பருவமடைந்தும் யின்னம் விவாகமில்லாமலிருப்பதை நினைக்க நினைக்கத்தான் என்மனமானது வருந்துகின்றது.

மந்திரி விருத்தம்.

கன்னிமாடஞ்செய்யுங் காவலர்சொல்கேளென்பின்
உன்னதத்தவத்தினால்வந் துதித்தசந்திரவதிக்கு
மன்னவன்சீக்கிரத்தில் வந்திடச்செய்வாரத்தன்
கன்னியோர்பங்கன்றாமுங் கவலையைவிடுவீர்போற்றி.

(மந்-வ-ம்.) சக்ராதிபா இதற்காகவா தாங்கள் கவலையடையவேண்டும் கூடியசீக்கிரத்தில் தங்களருந்தவக்கண்மணியாகிய சந்திரவதிக்கு விவாகநடக்கும்படி சிவபெருமான் கிருபைசெய்வார் ஆகையால் கவலையடையாதிருங்கள் பிரபு.

யாத்திரையாதவர்கள் கன்னமாபுரிக்குவருதல்.

எப்போதுவருவாயோஎன்றமெட்டு.

இராகம் - பரசு - தாளம் - ஆதி.

பல்லவி.

போவோம்விரைவில்வருவீர் அந்தப்
புதுமையாயர்கன்றேனி மதிதயமன்னனிடம். (போ)

அநுபல்லவி.

காவலனரிச்சந்த்ரன் பூவலயத்துக்கிந்திரன்
மாவயோத்திகடந்து வனமதனில்நடந்து.(பேர)

சரணம்.

துங்கமிகுந்தநதி பொங்கமாங்கொன்றைமதி
மங்களமாகமுடிவைத்தவன் திருவடிவாழ்த்துதல்
செய்தேபத்திமாமழைபெய்தே நம்வல்வினைகொய்தே
மாதவரேநாமெல்லோரு ஆதாவாகவேயொன்றாய்ப்.(பேர)

(மாத-வ-ம்.) ஆரடா ஆசாரவாசலின்கண் சேவகன்.

(சேவ-வ-ம்.) பிரபூ வந்தனஞ் செய்கின்றேன்.

(மாத-வ-ம்.) அடியானே சேவகா உனதிறைவனாகிய மதிதயனிடஞ் சென்று யாத்திரை மாதவர்கள் வந்திருக்கிறாரென்று தெரிவி.

(சேவ-வ-ம்.) அரசர்க்கரசே ஆசாரவாசலின்கண் யாத்திரை மாதவர்கள் பிரவேசித்திருக்கின்றார்கள்.

(மதி-வ-ம்.) சேவகா யாதொருதடையும் புகலாது உள்ளே வரவிடு.

மதிதயராஜன் யாத்திரைமாதவர்களை வணங்குதல்.

விருத்தம்.

வேதவேதியரேபோற்றி மிகுதவத்தோரேபோற்றி
நீதிலாக்கலைகள்யாவுந் தேர்ந்தமாதவரேபோற்றி
போதமாயருள்மெஞ்ஞானம் புரிந்திடுந்தவத்தோர்க்கெல்லா
நாதவேதாந்தமோன ஞானிகாள்போற்றிபோற்றி.

(மதி-வ-ம்.) தவசிரேஷ்டர்களே வந்தனஞ் செய்கின்றேன் மதிதயன்.

(மாத-வ-ம்.) கல்யாண மதிதயா.

(மதி-வ-ம்.) மாதவர்களே இவ்வாசனத்தில் வீற்றிருக்கப் பிரார்த்திக்கின்றேன்.



(மாத-வ-ம்.) நாங்கள் இவ்வாசனத்தினிடமாக வீற்றிருக்கின்றோம் நீ உனது சிம்மாசனத்தினிடமாக வீற்றிருப்பாய்.

மதிதயராஜன் விருத்தம்.

கன்னிகுடியகர்த்தனை நினைந்துபார்வேன்வி
பின்னைமுற்றிடாதியற்று விப்பிரர்களேநீங்கள்
முன்னமீந்துவந்திணையடி யென்முடிசூட்டி
நன்னயத்துடன்சென்றவர் வந்ததென்னவிவ்வீர்.

(மதி-வ-ம்.) மாதவர்களே சிலநாட்குமுன் னீங்குவந்து என்னுடைய சிரசுக்கு உங்களுடைய பாதங்களைக் கிரீடமாகச்சூட்டிச் சென்ற தாங்கள் மீண்டும் வந்தகாரணமென்கொலோ வறிகிலேன் உத்தரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

(மாத-வ-ம்.) சக்ராதிபா கவனித்துக்கேட்பாயாக சிலநாட்குமுன் உன்னை இச்சபாமண்டபத்திற்கண்டு சென்றவர்கள் இவ்வையகத்தினிடமாகவுள்ள அநேக புண்ணியதீர்த்தங்களிலெல்லா முழ்கி அயோத்தியாபுரிக்குச் சென்று அவ்வயோத்தியாபுரியை ஒப்பற்ற பூச்சக்ரக்குடைநிழலில் அரியாசனத்தினிடமாக வீற்றுநீதியாக அரசுபுரியும் அரிச்சந்திரசக்ரவர்த்தியைச் சபாமண்டபத்திற் கண்டோம் கண்டமாத்திரத்தில் எங்களுக்கு அத்தியந்த சந்தோஷமுண்டாகி உனது நகரின்வளமையும் உனதுசெங்கோலின் றன்மையும் உனது அருந்தவத்திற் செனித்தபுத்திரியாகிய சந்திரவதி ரூபலாவண்யத்தையும் எடுத்துரைத்தோம் அதனைச்செவியுட்கொண்ட அன்னோன்பேரானந்தமடைந்து ஓமாதவர்களே நீங்கள் கூறிய கன்னமாபுரி மன்னன்செல்வியின்மீது அதிக ஆசைகொண்டேன் ஆதலால் நீங்கள் சந்தகிதநிதும் அப்பெண்ணரசியை யெனக்கு விவாகஞ்செய்து வைக்கவேண்டுமென்று வேண்டினன் அவ்வார்த்தையைக்கேட்ட யாங்கள் அன்னவனுக்குத் தைரியங்கூறி அச்சங்கதியை உன்னிடத்திற் சொல்லவேண்டுமென்ற எண்ணத்துடனே யிங்குவந்தோமேதவிர வேறன்று மற்றும்.

(மாத-வ-ம்.) அரசே சத்தசாகரஞ் சூழ்ந்த இவ்வுலகினிடமாக நீதியாக அரசுபுரியும் அநேககோடி அரசர்களைப்பார்த்தோம் அன்னவர்களில் சிவபெருமான் கிருபாகடாக்ஷத்தால் நீ

பெற்ற பெண்கள் நாயகத்திற்கு நாயகன் அந்த அரிச்சந்திரனே யல்லது வேறொருவர் ஒப்பாகமாட்டார்கள் ஆகையால் அவ்வரசனுக்கே உனது புத்திரியை விவாகஞ்செய்து கொடுப்பது மிகவும் நலம் என்ன தெரிவிக்கின்றாய்.

மதிதயாராஜன் விருத்தம்.

அருந்தவத்திற்சிறந்தவரே யுரைக்கக்கேண்மின்
ஆதிசிவபெருமானைற் கருளிச்செய்த
பெருந்தகைசேர் தேவரகசியமொன் றுண்டு
பெட்புடனே யஃதையறிந்துரைக்கவல்லார்
இருந்தரணியுள்ளவர்க ளாராவது
மென்னருமைப்புத்திரிக்குக் கணவராவர்
வருந்தாமல்நீங்க ளின்றவ்வரசையிங்கு
வரவழைத்தாலறிந்துகொள்வேன் வாகாய்த்தானே

(மதி-வ-ம்.) மாதவத்திற்சிறந்த அந்தணர்களே கவனித்துக் கேளுங்கள் எனக்குப் புத்திர சந்தானமில்லாததால் சிவபெருமானைக் கோரித் தவஞ்செய்தேன் அன்னவரெனது தவத்துக்கிரங்கி விடைவாகன ரூடராய்ப் பார்வதிசமேதராகப் பிரசன்னமாகிப் பாலகாவுனக்கு புத்திரனுற்பவிக்கமாட்டான் அரம்பை மேனகை திலோத்தமை ஊர்வசி என்றுசொல்லப்பட்ட தேவமாதர்களைப் பார்க்கினும்மிகுந்த அழகுடையவளாக ஓர்புத்திரிபிறப்பாள் அன்னவள் சரீரத்தில் ஓர்இரகசியப்பொருளிருக்கிறது அஃதையறிந்து எவன்சொன்னானோ அன்னவன்றானுனது புத்திரிக்கு நாயகனாவானென்று சொல்லினர் ஆகையாலந்த இரகசியத்தைத் தாங்களியம்பும் அரிச்சந்திரமஹாராஜன் தெரிந்து சொல்லும்பக்ஷத்தில் என்னருமாரியை வதுவை சூட்டுவதற்கு யாதொருதடையுமில்லை சீக்கிரத்திற்றாங்கள் அவ்வரசனை யிங்குவரவழைத்தால் எல்லா விஷயமுந் தெரிந்துகொள்வோம் வரவழையுங்கள்.

(மாத-வ-ம்.) பூபாலகா மிகவுஞ்சந்தோஷம் மிகவுஞ்சந்தோஷம் தனதெண்ணம்போலவே அரிச்சந்திரனை யிங்கழைத்துவருகின்றோம் நீசுயம்வரம் நாட்டி எல்லா அரசர்களுக்கும் ஓலையனுப்புவாயாக நாங்களிதோ செல்கின்றோம்.



(மதி-வ-ம்.) ஆக்ஞை சென்று வாருங்கள்.

மதிதயராஜன் விருத்தம்.

மந்திரிசொல்லக்கேளாய் மாநிலத்தரசர்க்கெல்லாஞ்
சந்திரவதிதனக்குத் தக்கதோர்சுயம்வரத்தான்
இந்நாள்முதலதாக வேழுநாள்வரைக்குமென்றே
சிந்தையாய்த்தூதுவோலை சீக்கிரமனுப்புவாயே.

(மதி-வ-ம்.) ஏ ப்ரதான் மாட்சிமைதங்கிய ஐம்பத்தாறுதேசத்தையும் ஆளும் அரசர்களுக்கெல்லாம் கன்னமாபுரிக்கரசனான மதிதயராஜன்புத்திரி சந்திரவதிக்கின்றுமுதல் சுயம்வரம் ஏழுநாள் ஏற்படுத்தி யிருக்கிறதென்று தூதர்களிடம் திருபமெழுதி யனுப்புவீராக.

(மந்-வ-ம்.) ஆக்ஞை யரசே.

மந்திரிஐம்பத்தைந்து தேசத்தரசர்களுக்கும்
திருபமெழுதும்வரனம்.

சுபமங்களம் மஹாவுன்னதம்பொருந்திய ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் கன்னமாபுரியையாளும் மதிதயராஜன் எழுதிய திருபமாவது எனது புத்திரி சந்திரவதிக்கு இன்றுமுதல் சுயம்வரம் ஏழுநாள் ஏற்படுத்தியிருக்கிறபடியால் யிங்கு விஜயஞ்செய்யக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

இந்தப்படிக்கு
மதிதயராஜன்.
கன்னமாபுரி.

(மந்-வ-ம்.) அடா தூதா.

(தூத-வ-ம்.) மஹாராஜ்.

(மந்-வ-ம்.) இந்தமனவோலையை ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்குங் காண்பித்துச் சீக்கிரம்வருவாய்.

(தூத-வ-ம்.) உத்தரவு ப்ரபு.

(மதி-வ-ம்.) ஏ ப்ரதான் ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் மனவோலை யனுப்பலானதா.

(மந்-வ-ம்.) ஆம் ப்ரபு.





## சந்திரமதிகன்னிகாமாடசிங்காரசபை.

### அம்பாள் ஸ்தோத்திரம்.

இராகம் - அபூருபம் - தாளம் - ஆதி.

பல்லவி.

சரோஜலோசனி அம்பாள் சலசலோசனி.

அநுபல்லவி.

சரோஜலோசனி அம்பாள்சலசலோசனி (அ)

சரணம்.

மங்களகல்யாணி [illegible]ந்தியவனிவேணி
சங்கரன்பாகத்தமர்ந்த சற்குணக்கேணி (அ)
அதிரூபசுந்தரி வகிலமெலாம்புரந்தரி
துதிபிலெக்தனை பாலவா[illegible] சர்வதிரந்தரி (அ)
பக்தர்க்கருள் பூரணி பவமகற்றுங்காரணி
அத்தனேரம்மனதுவா[illegible] மரியகாரணி (அ)
கல்யாணசுந்தரன்பா[illegible] கவிமாலைபுயகுருடும்
சொல்லவாரிருந்தகட்[illegible] சோதியேபீடும்.. (அ)

(தோழி-வ-ம்.) மாதுஸ்திரி வந்தனஞ்செய்கின்றேன்.

(சந்-வ-ம்.) கல்யாணசகி.

(தோழி-வ-ம்.) அம்மணி எப்போதும் அலர்ந்த செந்தாமரைப்புட்பத்துக்குச் சமானமாயிருக்கக் கூடிய தங்கள் முகமானது இன்றைக்கு வாடியிருக்கிறதே என்னகாரணம்.

(சந்-வ-ம்.) தோழி உன்னிடத்தில் எதனை வெளிக்குரைக்கப் போகிறேன்.

### சந்திரவதிசொல் தரு.

பெண்ஜெனமெடுத்தாலென்ற மெட்டு

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

அவனியிற்பெண்ஜெனன மடைந்தாற்கொஞ்சமாயினும்
மதிஷ்டமல்லவோ வேணும் (அ)

அனுபல்லவி.

பவளவிதழுமாசெண் பகநாசியுந்துய்ய
பதுமமுகமுள்ள பாங்கிபேனினாயினல் (அ)

சரணங்கள்

எத்திசைபுகழ்ஜீவ ரத்தினங்கோத்தமாலை
இயம்பவொண்ணுதகெம்டைச் சரிகையிட்டதோர்சேலை
மற்றுநவமணியால் விசித்திரமானவேலை
மன்னிய காதோலை
முத்தாரக்கொடிதங்க நெத்திச்சுட்டியுயர்ந்த
மோகனமாலைமுதல் மாகனகப்பணிபூண்டு
தந்தையரோதியென்னைத் தகைசேர்மலரணையில்
இனியாயிருந்தாற்சுகக் [illegible]ருமோவாகையினாலே (அ)

தேசதேசத்திலுள்ள [illegible]ரர்கள்பணிபோசன்
சிவனடிதினமற [illegible]மற்றுதிவிஸ்வாசன்
மாசிலாதரசுசெங்கோல் நடத்துமுல்லாசன்
மாமதிதய ராசன்
சன்றனையேகோடி [illegible]ம்மானிலத்திற்றவம்
இன்பமுடனேசெய்ய வியாறுமதாலுற்பவம்
ஆசுறுதானென்றன்னை யறிக்கேனறிந்தும்பிதா
அடைவுடன்மணம்பேசி யன்பாய்முடித்தாரிலையே. (அ)

என்வயதுமங்கைய ரின்பநாதரிடத்து
எழிலுடனேகூடி யிருக்குமுரேசுகித்து
அன்னமேமீ யறியாததோவாவோசித்து
அதனையெல்லாம் வெறுத்துக்
கன்னிகையானதனைக் கருதாதிருக்கவென்றால்
காதன்மென்மேலாகுதே கருத்துமிகநோகுதே
என்னசெய்குவேன்யானே என்னுடலைவிதி
எப்படியோவறியே னேழுகடல்வளையும் (அ)



(சந்-வ-ம்.) தோழி கவனித்து கேள்ப்பாயாக சத்தசாகரஞ் சூழ்ந்த இப்பிரபஞ்சத்தினிடமாக அரிதாகிய மானிடப் பிறவியில் பூர்வவினையால் பெண் ஜெனனமெடுத்தவர்களுக்கு கொஞ்சமாகிலும் நல்லதிஷ்டமிருக்க வேண்டுமல்லவோ?

(தோழி-வ-ம்.) ஆம் அம்மணி நல்லதிஷ்டமிருக்கவேண்டிய வசியந்தான்.

(சந்-வ-ம்.) சிவபெருமான் என்னளவில் இவ்வளவாவது நல்லதிஷ்டமில்லாது செய்திருக்கின்றாரே யென்ன காரணம்?

(தோழி-வ-ம்.) அம்மணி யென்ன இவ்வாறு கூறுகிறீர்கள் மன்னன் மகளாகிய தங்களுக் கென்னகுறை நேர்ந்திருக்கிறது.

(சந்-வ-ம்.) சகி யென்னடி ஒன்றும் தெரியாதவள்போலஇவ்வாறு பாஷிக்கின்றனை கவனித்துக்கேள் பிரபஞ்சத்தினிடமாக மாதர்களுக்கேற்பட்டது பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம் பெண், என்ற பருவம், யேழு இதற்குரியவயதெல்லையாவது ஐந்துவயது முதல் யேழு வயதுவரை பேதைப்பருவம், யெட்டுவயது முதல் பதிநொருவயதுவரை பெதும்பைப் பருவம், பன்னிரண்டு வயதுமுதல் பதிமூன்று வயதுவரை மங்கைப்பருவம், பதினான்கு வயதுமுதல் பத்தொன்பது வயதுவரை மடந்தைப்பருவம், இருபதுவயதுமுதல் இருபத்தைந்துவயதுவரை அரிவைப்பருவம், இருபத்தாறுவயதுமுதல் முப்பதுவயதுவரை தெரிவைப்பருவம், முப்பத்திரண்டுவயது முதல் நாற்பது வயதுவரை பேரிளம்பருவம் ஆகையால் யான் தற்சமயம் பன்னிரண்டு வயதுமுதல் பதிமூன்று வயதுவரையுள்ள மங்கைப் பருவத்தானாயிருந்தும் பிதாவானவர் இதனைத் தெரிந்தும் பிதாவாகிய மதிதய மகாராஜன் தக்க நாயகனைப் பார்த்து விவாகஞ்செய்து கொடுத்ததாயுமில்லை அன்றியும் அதனை யுத்தேசிக்கவுமில்லை அப்படியிருக்க யான் கோமேதகம், நீலம், பவளம் புட்பராகம், மரகதம், மாணிக்கம், முத்து, வைரம், வைடூரியம், என நவரத்தினங்கள் பதித்த கம்மல், சிமிக்கி, மேல் முருகு, பஞ்சகல்சவாளி, கந்து, புலாக்கு, உச்சிட்டு, இராக்கொடி, சடைநாகம், சந்திரப்பிறை, சூரியப்பிறை, மயிர்மாட்டி, நெத்திச்சுட்டி, மகரகண்டி, அட்டியல், பவுன்மாலை, முத்துமாலை, மோகனமாலை சரப்பளி, சந்திரபாணம், கமலசரம். தோள்வளையல். பாசிபக்க





அஷ்டகோணகெளி, அஸ்தகடகம், கங்கணவளை, கணையாளிமோதிரம், ஒட்டியாணம், பாதசரம், தண்டை, பாடகம், கொலுசு, சிலம்பு முதலிய ஆபரணங்களை, கரசரணாதி அவயவங்களில் தரித்து மலர்பரப்பிய இப்பஞ்சணைமீது தனியாக வீற்றிருப்பதினாலென்ன சுகம் அன்றியும் என்போலொத்த மாதர்களெல்லாம் நாயகனை வரித்துச் சரசசல்லாபமாகக் கூடிச் சுகித்து வாழ்கின்றார்களே. யிதெல்லாம் உனக்குத்தெரியாததா இவ்விதமி... மன்னன்மகளாகிய உனக்கு என்ன குறையேற்பட்டிருக்கிறதென்று கேள்க்கின்றதையே இதுநியாயமா?

(தோ-வ-ம்.) மாதஸ்திரி கலைபடையாதிருக்கக்கூடியதே கிரகத்தில் விவாகமாகிவிடும்.

# அரிச்சந்திரமகாராஜன் சபை.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஹைறமலமுதறதோங்கிபிஷ்மாவன்றவர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தானி - தாளம் - ஏகம்.

பல்லவி.

மன்னர்மன்னர்பணி மன்னரிச்சந்திரன்
வந்தேன் வந்தேன் வந்தேன். (மன்)

அநுபல்லவி.

நன்னிலத்தான் பொன்னிலத்தான்
நாலுவேதமுணர் சிலைமுக
ராஜன் ராஜன் ராஜன். (மன்)

சரணம்.

வெண்குடையான்திண்படையான் வீரதீரசூரகெம்பீரன்
விந்தையதாய்மந்திரிமார் தந்திரிகளுடன்சூழவே
வித்வஜனர்பாட மெல்லியர்களாட வேந்தரெல்லாநாட
விப்பிரர்கள்செப்பிடவிச வாசன் வாசன் வாசன். (மன்)

(அரி-வ-ம்) சத்தியகீர்த்தி கன்னமாபுரிக்குச்சென்ற யாத்திரையாதவர்கள் வந்தார்களா.

(சத்-வ-ம்) கோசலாதிபா இன்னும்வரவில்லை.

## வசிட்டர் பகவானைத் தோத்திரஞ்செய்துகொண்டு அரிச்சந்திரன் சமுகம்வருதல்.

சத்தப்ரம மென்றமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

கைலையங்கிரியில் வாழ்நாதா
[illegible]காதரா பார்வதிநேசமேதா
ம[illegible]வன்றனையே யருள்நீதா
மகேச[illegible] பங்கயப்பாதா
கங்கைதிங்களணியுஞ் சடையா
காமதகனு வெள்விடைப்பாகடையா
கருணையங்கடலே பவநாசா
காட்சியார்த்திடு பாமதுநேசா

---

(வசி-வ-ம்.) யாரடா ஆசாரவாசலின்கண் வீற்றிருப்பவன்.

(சேவ-வ-ம்.) ப்ரபூ வந்தனஞ் செய்கின்றேன் சேவகன்.

(வசி-வ-ம்.) கல்யாண்சேவகா அரசன் யாதுசெய்கின்றான்

(சேவ-வ-ம்.) ப்ரபூ கொலுவமர்ந்திருக்கின்றார்.

(வசி-வ-ம்.) அப்படியா உட்செல்லலாமல்லவோ.

(சே-வ-ம்.) தடையென்ன பிரபூ.

(வசி-வ-ம்.) அரிச்சந்திரா சுபமங்களம் சுபமங்களம்

அரிச்சந்திரன் விருத்தம்.

பங்கயன் வலவன்காணுப் பரமனையனையாய்போற்றி
பொங்கமாய்ப்புவனமூன்றும் போற்றுநற்பதத்தாய்போற்றி
செங்கதிர்க்குலத்தாக்கென்றுஞ் சீர்க்கிசைதந்தபரப்வந்த
மங்களமுனிவரேறேவள்ளலே போற்றிபோற்றி.

---

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா வந்தனஞ் செய்கின்றேன்.



(வசி-வ-ம்.) கோசலாதிபா அடுத்தது காட்டும்பளிங்குபோனெஞ் சங்கடுத்ததுகாட்டுமுகம், என்றநீதிக்கிணங்க உனதுமனதினிடமாகக்கிஞ்சிற்று வியாகூலம் யேற்பட்டிருக்கிறதுபோல் முகக்குறிப்பிற்காணப்படுகிறதே காரணமென்ன?

(அரி-வ-ம்.) குருமஹாராஜ் வேறொன்றுமில்லை யாத்திரைமாதவர்களிரண்டு தினத்திற்குமுன்னிங்குவந்து என்னைக்கண்டு கன்னமாபுரி மன்னன் மகளாகிய சந்திரவதியானவள் அதிசயவனமுடையவள் அவளை உனது தோளுக்கிசைந்தவள் என்றுகூறினார்கள் மாதவர்களே அப்படியானால் அந்தப் பெண்ணரசியை எனக்குப் பாணிக்கிரஹம்செய்து வைக்கக்கூடிய முயற்சியைச் செய்புங்களெனக்கூறவே நல்லதென்று சென்றார்கள் இதுவரைக்காண்கிலேன் இதுதான்வியாகூலம்ப்ரபூ.

(வசி-வ-ம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம் மிகவுஞ் சந்தோஷம் சக்ராதிபா உனது ஆசாரவாசலின்கண் சில யாத்திரை மாதவர்கள் நடந்துவந்த ஆயாசத்தால் களைப்போடு வீற்றிருந்தவர்கள் எழுந்து உன்னிடம்வர ஆயுத்தமானார்கள் இதோ வந்துவிடுவார்கள் வியாகூலமடையாதே.

யாத்திரைமாதவர் கன்னமாபுரியிலிருந்து வந்து அரிச்சந்திரனிடம் சொல்லும் வசனம்.

ஆசீர்வாதம் ஆசீர்வாதம் அரிச்சந்திரமஹாராஜனே.

(அரி-வ-ம்.) அனேகவந்தனம் யாத்திரைமாதவர்களே சென்றகாரியம் அனுகூலந்தானா?

(மா[illegible]-வ-ம்.) ஆ! சக்ராதிபா நீகொண்டகருத்தின் படியே அனுகூலந்தான் மதிதயனே தனது புத்திரிவிவாஹத்திற்காக சுயம்வரம் நாட்டிவிட்டான் சீக்கிரம் கன்னமாபுரிக்குச்சுற்றத்தாரோடும் தானைகளோடும் பிரயாணமாகுவாய்.

(அரி-வ-ம்.) ஆக்ஞை பிரபூ.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி சீக்கிரத்தில் கன்னமாபுரிக்கு நம[illegible]தாரையும சேனைகள்முதல் யாவரையும் முன்னமேசெல்படிய[illegible]க ஆக்ஞாபிப்ப தோடு நாமேகுவதற்கு இரதத்தைத் [illegible]ராச்செய்வாய்

(மங்-வ-ம்.) உத்தரவு மஹாராஜ் அடே சேவகா நமது சாரதியிடத்திற்சொல்லி ரதத்தைக் கொண்டுவரச்செய்வாய்.

(சே-வ-ம்) ஆக்ஞை மஹாராஜ்.

## தூதன் வசனம்.

மாட்சிமைதங்கிய கோசலநாடாளும் ராஜசேகரா தூதன் வந்தனம் கன்னமாபுரி மதிதயவேந்த ரனுப்பிய மணவோலை கொண்டு வந்திருக்கின்றேன் இதோ பெற்றுக்கொள்ளுங்கள்.

(அரி-வ-ம்.) கல்யாண தூதா அத்யந்தசந்தோஷம் இதோமணவோலையைப்பெற்றுக் கொண்டேன் சென்றுவா.

(தூதன்-வ-ம்.) அனேகவந்தனம்ப்ரபூசென்றுவருகின்றேன்.

(மங்-வ-ம்.) ப்ரபூ இதோ ரதம்வந்துவிட்டன கன்னமாபுரிக்கிச்செல்வோம் வாருங்கள்.

(அரி-வ-ம்.) நல்லதுமந்திரி குருமஹாராஜ் தாங்களும் கூட வரவேண்டும்,

(வசி-வ-ம்.) கோசலாதிபா இதோ வருகின்றேன் முன்னமே செல்வாய்.

(அரி-வ-ம்) உத்திரவு ப்ரபூ.

## அரிச்சந்திரன் கன்னமாபுரிக்குச் செல்லுகிறபாகம்.

### அரிச்சந்திரன்சொல் தரு.

பதுமலோசனபார்த்தாமாலென்ற-வர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

போவோமங்கள பாகவா(
புவிபுகழுங்கன்னமாபுரி தனக்கேயெல்லோரும்
வேதமுணர்ந்த (ரி)யோ
விந்தையானதோர்மதி மந்திரத்துயர்ந்தோ(ரே)



வாரிதிபோற்பேரிகை முழங்க
மங்கைமார்கள்கவரி பொங்கமதாயிலங்க. (போ)

பரிகள்பூட்டிய ரதமேறி
பாங்காச்சேனையுடனே நீங்காச்சந்தோஷமீறி. (போ)

சரயுநதியையுங் கடந்தோம்
சாற்றுறைவெகுதூரம் சம்ப்ரமாகவந்தோம். (போ)

பாலைநிலமதோ தோனுதே
பத்ரகாளிகோவிலும் பண்பாகவேகாணுதே. (போ)

சென்றுதொழுது வருவேனே
சேனையுடனேமந்த்ரி சிறப்பாயிருப்பீரனே. (போ)

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் நாம் கன்னபுரிக்கிச்செல்வதற்க்காக அயோத்தியிலிருந்து சரயுநதி, கோமதிநதி, மருதநிலம், முல்லைநிலம், இவைகளைக்கடந்து பாலைநிலம் வந்துசேர்ந்தோம் அதோ அம்பாள்பைரவி கோவிலொன்று தோற்றப்படுகிறதுயான் போய்த்தெரிசித்து வருகிறேன் நீசேனைகளோடுஇப்பாலைநிலத்தைக்கடந்து அப்பாற்சென்று வீற்றிருப்பாய்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை பிரபூ.

## அரிச்சந்திரன் காளியைத்

### தோத்திரஞ்செய்யும் பாகம்.

அரிச்சந்திரன்சொல் தரு.

ஆழிசங்கமேந்துங்கையாயென்ற மெட்டு.

இராகம் - தேசிகதோடி - தாளம் - சாபு.

பல்லவி.

அம்பிகைகபாலிசௌரி அந்தரிசுந்தரிசூரி.

அநுபல்லவி.

சம்ப்ரமக்குணசிவ சற்சனர்க்கரு
தாருகவைரிசூலி நாருகவைரிசூ



சரணம்.

அகிலபரிபூரணி யாமளையாரணி
அன்பர்க்கிரங்கும் காரணி. (ஆ)
நாககங்கணிவீரி ரத்னமகுடிசிங்காரி
நவிலொண்ணாத ஒய்யாரி. (ஆ)
மங்களகல்யாணி மாட்சிசேருட்சேணி
மரகதவிழை பூணி. (ஆ)
கல்விபருவ்காரணி கருங்குவளைசேர்க
கல்யாணசுந்தரன் ...ணி. (ஆ)

(அரி-வ-ம்.) ஆ கருணாகரி, ஜயவீரி, திரிபுகல்யாணி, பரிமள வேணி, நாககங்கணி, பராசத்தி, கங்காளி, ம...சுரசம்மாரி, வராகி, பாபவினாசனி, பக்தர்க்கனுகூலி, பைரவி, அனேககோடிசம ஸ்காரம் சம்பூர்ணமாக எனதுசெங்கோல் நீடூழிகாலம் நிலைபெறச் செய்வதோடு யான்தற்சமயம் கோரிச்சேர்கின்ற எந்தமங்கள விஷயமோ அவ்விஷயம் யாதொருவிக்கினமின்றி முடியும்படியாக வரந்தந்தருளப் பிரார்த்திக்கின்றேனென்று வருகின்றேன்.

போது வசனம்.

அரிச்சந்திரன் காளிகாதேவியைத் துதித்து திரும்பிவரும் போது முன்னம்கல்லாயிருந்த ...தைப்பார்க்க அதுபொன்ம யமான தேராகத் தோணவே ஆச்சரியமடைந்து சொல்லுகி றான்.

அரிச்சந்திரன்சொல் விருத்தம்.

தாருகவனிசூரி சந்திரவதனிவீரி
ஆரணிகௌரியோங்கு மம்பிகையகிலலோக
காரணிமுன்யான்கண்ட கற்றேரும்பொற்றேரான
காரணந்தன்னையாகக் கருதிலாச்சரியமன்றோ.

## அரிச்சந்திரன் சொல் தரு.

இராகம் - அசாவேரி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஆச்சரியமே ஆ! ஆ! ஆ! ஈதென்ன



அநுபல்லவி.

மாச்சியுயர்ந்தகன் ... காட்சிதகவுமை
யாச்சிருணசிவியன்னே கண்ணிமுன்னிலையில். (ஆச்)

சரணம்.

கற்றேவிருந்தவை நான்காணப்போம்போது
கற்றேராயிற்றது பொற்றேராத்தோன்றியதும். (ஆச்)

(அரி-வ-ம்.) ஆ! ஆ! ஆ! இஃதென்ன ஆச்சரியம் யான் மந்திரி பிரதானிமுதலியவர்களைப் பாலிலத்தைக்கடந்து அப்பால் வீற்றி ருக்கும்படி ஆக்ஞாபித்து அம்பாள் பைரவியைத் தெரிசிக்கவேண் டுமென்றெண்ணி க்கோவிற்குள்ப் புகுந்த தருணம் கல்லுருவாகத் தோன்றிய தேர், பரி, சிலை, கணை, யென்றனைத்தும் அம்பாளை வ் தோத்திரஞ் செய்து திரும்பிவரும்போது ஏதோ என் கண்ணுக் குப் பொன்மயமாகத் தோற்றுகிறது இதன்காரணம் இன்னதெ னத்தெரியிலேன் ஆகையால் மீண்டும் அம்பாளை வணங்கி இதன் விர்த்தாந்தத்தைத் தெரிந்துகொள்கின்றேன்.

அரிச்சந்திரன் மீண்டுங்காளிகாதேவியைத் துதித்துச் சொல்லும் வசனம்.

ஆ! அம்மணி அடியேன் நின்னைத்தெரிசிக்க வரும்போது உன திருக்கோயின் முன்னம் கல்லுருவாகத் தோற்றிய தேர், பரி, ..., கணை, நான்கும் நின்னைத் தெரிசித்துத் திரும்பிச் செல்லுங் கால் எனது நேத்திரங்களுக்குப் பொன்மயமாகத் தோன்றுகிற ...ரணம் இன்னதெனத் தெரியிலேன் ஆகையால் கிருபை பாலிக்க ...ண்டும் இல்லையேல் இவ்விடம் விட்டகலேன்.

காளிகாதேவி சொல் விருத்தம்.

மற்றடங்தோ ளரிச்சந்த்ர மன்னவனே
இதனுண்மை வழுத்தக் கேளாய்
சுற்றுகடற் புவியாளை தொலைத்தகனும்
வருணனென்முன் தோன்றிப் பொற்றேர்
கற்றேரா வச்சபித்துக் காட்டியிதை
யுலகிலெவ ரேனுங் கண்டாற்
பொற்றேராத் தோணுமெனி லவர்தனக்கே
கொடுத்திடெனப் ...ரனுன் மன்றோ.

இதுவுமது வேறு விருத்தம்.

அந்தணர்முதலாக விதுவரை
வந்துநோக்கினர் மாக்களனேகர்கள்
உந்தன்பார்வையி லுண்மையகிழ்ந்ததால்
சிந்தையாயுடன்கைக் கொண்டுசெல்லவையே.

(காளி-வ-ம்.) பாலகா சத்தசாகரஞ்சூழ்ந்த இவ்வுலகிற்றனையை நீக்கிச்செல்கின்ற வசிஷ்டனுன வருணபகவான் உலகத்திலுள்ளவர்கள் எவர்களுங் கொண்டுபோகாதபடி பொற்றேராக் கற்றேராக நியமித்து என்கண்ணுக்கு முன்னேகாட்டி இதுவரையிலும் இந்தத்தேரைப் பார்த்தபோதில் இக்கல்வடிவுபோய்ப் பழையவடிவாகுமாகில் அவ்வாறாகப் பார்த்தவர்களே இந்தத் தேருக்குரியவர்கள் அவர்களுக்கே நீ கொடுக்கக்கடவாய் யென்று என்வசம் ஒப்புவித்துச் சென்றான் வத்ஸா அவ்வருணன் வைத்துச்சென்ற நாள்முதலின்றுவரையிலும் கல்லாயிருந்து இப்போதுன்னுடைய கிருபைக் கண்ணுற் பார்த்த மாத்திரத்தில் பொன்மயமானதால் நீயேயிந்த ரதத்திலாரோகணித்து மற்றவைகளைக் கைகொண்டு கன்னமாபுரிக்குச் சென்று ம்ருத்திரவதியை வதுவைகுட்டி அயோத்தி சேர்ந்து சிரத்தியாய் வாழ்ந்திருக்கக்கடவை.

(அரி-வ-ம்.) அம்மணி அத்யந்தசந்தோஷம் தனதுத்தரவைச் சிரகில் வகித்தேன் அனேககோடிவந்தனஞ் செய்துவருகின்றேன்.

(பராசத்தி-வசனம்.) கல்யாண் பாலகா.

(மந்-வ-ம்.) கோசலாதிபா இந்தப் பொன்மயமான ரதம், குதிரை, சிலை, கணை, யாவும் தங்களுக் கெவ்விதம் கிடைத்தன மிகவும் ஆச்சரியமாகவிருக்கின்றதே இதன் விர்த்தாந்தத்தைக் கூறவேண்டும் பிர.

பொது வசனம்.

சத்தியகீர்த்தி இந்தப் பொன்மயமான தேர்கிடைத்த விர்த்தாந்தம் சொல்லவேண்டுமெனக்கேட்க அவ்விர்த்தாந்தங்கள் யாவுஞ்சொல்லிக் கன்னமாபுரிக்குச் செல்லுகிறவிதங் காண்க.



ஸ்ரீ அரிச்சந்திரன்சொல் கரு.

தேவாயென்மேற்றயவுசெய்யாயோ என்றமெட்டு.

இராகம் - மத்தியமாவதி - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

வாரீர்விரைந்தென் னுடன் மனமகிழ்ந்து
மதிதயன்நகர்க்கேகும் வழிதொடர்ந்து (வா)
மன்னர்மன்னவர்களே பெரியோரே
மந்திரிமார்களேயென் னுரியோரே (வா)
அம்பாள்பராசக்தியைப்போற்றி யானே
அழகியரதம்பரியும் பெற்றேனே (வா)
கானயாற்றினைத்தையும் கடந்தோமே
கங்காநதிக்கரையை யடைந்தோமே (வா)
இந்தநிகரந்தே யப்பாலே
எதுவோமென்கிலாரு மிக்காலே (வா)
கன்னமாபுரிநகரஞ் கிதேநாமே
கைகிலாசநகராதல் வந்தோமே (வா)

(அரி-வ-ம்) ஏ பிரதானி காம்கானயாற்றையுங் கங்காநதியையுங்கடந்து இதோ கன்னமாபுரிப்பூஞ்சோலைப்பக்கம்வந்து சேர்ந்தோம் ஆதலால் மதிதயனுக்கு நாம்கொலுமண்டபத்துக்கு வருவதாக ஓர் தூதனைமுன்னமேயனுப்பித்துப்பின்னால் செல்வோமா?

(மந்-வ-ம்) அவ்விதமே செய்வோம் பிரபு.

மந்திரி சேவகனுக்குச் சொல் விருத்தம்.

சேவகா சொல்லக்கேள்நீ க்ஷிப்ரகன்னிகாட்டுக்
காவலன்சமுகஞ்சென்று களிப்புடனயோத்திவேந்தன்
ஏவுமாகோத்திரோசிந்து சதுர்மறையவர்களோடும்
மேவியேயாருமிங்கு விரைம்புவாய்விளம்புவாயே.

(மந்-வ-ம்.) அடா சேவகா நீ முன்னமே மதிதயராஜன் கொலுமண்டபத்திற்குச் சென்று நீ சொல்லவேண்டியதாவது அயோத்தியாபுரியாளும் அரிச்சந்திரச் சக்ரவர்த்தி மந்திரிபிரதானிகளுடனும் வசிட்டமகாரிஷி யாத்திரைமாதவர்களுடனும் வருகிறாரென்று தெரிவிப்பாயாக.

(சேவ-வ-ம்.) ஆக்ஞை பிரபு.



பாம்பரித்தனை.

# மதிதய இராஜன்

## இரண்டாவது சபை.

மதிதயராஜன் விருத்தம்.

திருவளர்சமுகனேக்குர் திண்புயன்சிர்த்திமிக்கான்
மருவலர்களைரிமாதர் மடல்வரையெழிலான்யென்றும்
குரு மாழிதவராமாண்பன் கோதிலாக்கன்னிநாடான்
தருமமோருருவான்சந்த்ர நயன்கொலுவமர்ந்தான்மன்றே.

(மதி-வ-ம்.) ஏ பிரதான் ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் வந்துவிட்டார்களா?

(மந்-வ-ம்.) ப்ரபு இன்னும் வரவில்லை வரக்கூடிய சமையந்தான்.

அரிச்சந்திரச் சக்ரவர்த்தியின் சேவகன் மதிதயமகாராஜனிடம் சென்று சொல் விருத்தம்.

மாசிலாக்கன்னிநாடாள் மன்னனேபகரக்கேண்மின்
காசினிபுகழயோத்திக் காவலன்வேந்தரோடும்
பூசுரரோடுந்தங்கள் புத்ரிவிவாகத்திற்கின்
றுரையாய்வருகின்றார் நீருவீர்தெரிகுவீரே.

(சே-வ-ம்.) மஹாவுன்னதம் பொருந்திய கன்னமாபுரியை யாளும் மஹாப்ரபு அனேகவந்தனம் அயோத்தியாபுரிக்கரசராகிய அரிச்சந்திரப்ரபு மந்திரி பிரதானி வகையராப்போர்களுடன் வருகுறார்கள் என்னைமுன்னமே சென்று தங்களிடம் தெரிவிக்கச்சொன்னார்கள்.

(மதி-வ-ம். கல்யாணசேவகா மிகவுஞ்சந்தோஷம்.

மதிதயராஜன் நகிரித்துச் சொல் விருத்தம்.

மந்திரிகேளயோத்தி மன்னவன்வேந்தரோடும்
அந்தணரோடுபீச னருளினல்யான்பயின்ற
சந்திரவதிவிவாகங் கன்னியத்தேசித்திங்கு
சிந்தையாய்வருகின்றா மெதிர்செல்வோம்விரைவில்வாராய்

(மதி-வம்.) ஹே ப்ரதான் கோசலநாட்டுக் கதிபதியாகிய அரிச்சந்திரச் சக்ரவர்த்திவருகின்றாராம் எதிற்சென்று அழைத்துவருவோம்வா.

(மந்-வ-ம்) நல்லது ப்ரபு.

மதிதயராஜன் அரிச்சந்திரனுக்குசொல் விருத்தம்.

குவலயத் துள்ளோர்வாழ்த்தக் கோசலை யாளும்பூப
இவ்விடம்நீர் வருவதற் கியானென்தவ முன்செய்தேனோ
கவனவாம் பரிகள்பூட்டுங் கவின்ரதம் விட்டிறங்கி
உவகையாய் வருவீரெந்த னுடனரண் மனைக்குத்தானே.

---

(மதி-வ-ம்.) மஹாசிறப்புந்தோங்கிய கோசலநாடாளுஞ் சக்ராதிபா வருக வருக வருக.

(அரி-வ-ம்.) வந்தேன் மதிதயவேந்தே.

மதிதயராஜன் வசிட்டரைவணங்கும் விருத்தம்.

தாமரைப்பாதம்போற்றி தவமுனிநாதபோற்றி
சோமனோடருக்குலஞ் சுந்தரனையாய்போற்றி
தாமிங்குவரவேயிந்தத் தலஞ்செய்ததவமோவன்றிச்
சேமமாயடியேனுஞ் செய்தவந்தானோபோற்றி.

---

(மதி-வ-ம்.) குருமகாராஜ் ஆ[illegible] வந்தனம்.

(வசி-வ-ம்.) கல்யாண் மதிதயவேந்தே.

(மதி-வ-ம்.) கோசலாதிபா எல்லோரும் வாருங்கள் கொலுமண்டபஞ் செல்வோம்

(அரி-வ-ம்.) நல்லது அப்படியே செல்வோம் மதிதயவேந்தே.

பொது வசனம்.

இவ்விதமாக மதிதயராஜன் அரிச்சந்திரன் முதலானவரையும் கொலுமண்டபத்திற் கழைத்துப்போய் வீற்றிருக்கச்செய்து அரிச்சந்திரனழகைப்பார்த்து ஆச்சரியமடைந்து யெண்ணுகிற விதங் காண்குக.

(மதி-வ-ம்.) ஆ! ஆ! என்ன ஆச்சரியம்! மாரனையும் உண்மையான குமாரனையும் பழித்தயௌவனம்வாய்ந்த இந்தச்சக்கரவர்த்தியான



வர் சாக்ஷாத் சிவபெருமான் கட்டளையிட்டருளியபடி நமதுபுத்திரியின் கழுத்திலுள்ள மாங்கல்யத்தைக் காண்பாரானால் நாம்செய்த தவந்தான் அன்றியும் நமது புத்திரிசந்திரவதி முன்னாளிலே அரியதவமுடையளானால் இந்த அரிச்சந்திர ப்ரபுவினுடையதோள்களையும் மார்பையுஞ் சேர்ந்துவாழ்வாள் தெய்வச்செயலெப்படியோ அறிகிலம்.

(மாதவர்-வ-ம்.) மதிதயவேந்தே சந்திரவதியின் சுயவரநாளாயத்தினந்தானே.

(மதி-வ-ம்.) ஆம் ப்ரபு.

மதிதயராஜன் அரிச்சந்திரனுக்குச் சொல்விருத்தம்.

கோசலையாளும்பூமா கூறுவன்கேளுமின்று
நேசமாய்மாளிகைக்குச் சென்றுபோசனங்கள்செய்து
ஆசாறுமற்றுயின்று விடிந்தபின்னழகுவாய்ந்து
வாசமோங்கிடுங்கல்யாண மண்டபம்வருகுவீரே.

(மதி-வ-ம்.) கோசலாதிபா இன்று மாளிகைக்குச்சென்று போஜன முதலியவைசெய்து சந்தோஷமாகவீற்றிருந்து நாளையத்தினம் கல்யாணமண்டபம்வந்து சேருங்கள்.

(அரி-வ-ம்.) அவ்விதமே சென்றுவருகுறோம் மதிதயவேந்தே.

பொது வசனம்.

இவ்விதம் அரிச்சந்திரன் மாளிகைக்குச் சென்றபின்னர் மதிதயன் கொலுவின்கண் அரிச்சந்திரனைக்கண்ட தாதியானவள் சந்திரவதியிடஞ்சென்று அன்னவனழகை வியந்து கூறும் விதங் காண்குக.

---

தாதி அந்தப்புரஞ்சென்று சந்திரவதியிடம்
அரிச்சந்திரனழகை வர்ணித்துச்சொல்லுதல்.

---

(தாதி-வ-ம்.) மாதாஸ்திரி வந்தனஞ்செய்கின்றேன்.

சந்திரவதி வசனம்.

கல்யாண் சகி அத்யந்தசந்தோஷத்துடன் ஓடிவந்தனையே அதென்காரண மின்னதெனக் கூறுவாய்.

(தாதி-வ-ம்.) மாதஸ்திரி நான் யென்ன விவரித்துரைக்கப் போகின்றேன் தங்களை விவாகஞ்செய்துகொள்ள விருப்பமுடைய வர்களாய் அனேக அரசர்கள் தங்கள் பிதாவினுடைய சபையின் கண்வந்து வீற்றிருந்தார்கள். அவ்வரசர்களிலே, மாசற்றமைதங்கிய அயோத்தியாபுரியையாளும் அரிச்சந்திரமகாராஜனுடைய திருமு கத்தை யான்பார்த்தபின்பு தங்களிடத்தில் வரமனந்துணிவுகொள் ளாமல் இவ்வளவுநேரம் அன்னவரழகையே பார்த்துக்கொண்டிரு ந்தேனன்றியும் சத்தசாகரஞ்சூழ்ந்த இந்தவேழுலகங்களையும் ஒன் றின்மேலொன்றாகவைத்து அடுக்கத்தக்க நீண்ட "தோள்களும்" இலட்சுமிதேவியினுடைய பிராணனும் மனமும் தாவுதலாய்த் தங் கத்தக்க ஒளிகொண்ட "கண்களும் மார்பும்" யாசகர்கள்சந்தோ ஷிக்கத் தினந்தோறுந் திரவியங்கொடுப்பதான நீண்ட "கைக ளும்" பெண்கள் மனதையெல்லாங் கொள்ளையிடுவதாகும் மற் றும் அரசி நமதிறைவன் சபையின்கண் அந்த அரிச்சந்திரச்சக்கர வர்த்தியைப் பார்த்தபின் மற்றவர்களைநோக்கினல் அந்தகாரத்தை நீக்கிக் கடல்சூழ்ந்த உலகத்தை விளங்கச்செய்கின்ற ஒளியையுடை யசூரியனைக்கண்ட கண்களுக்கு நக்ஷத்திரங்களைப் பார்த்ததாகும் இதுதான் யான்கண்ட அதிசயமாதஸ்திரி.

பொது விருத்தம்.

மூன்றால்.

மின்னேநேரிடையாள்கூறக் கேட்டதும்வேந்தன்பாவை
தன்னையுமறந்தாளிட்ட சிங்கமுங்கலைபுத்தா
என்னையைமறந்தாள்பேசும் வாசகமயர்ந்தாள்வேறு
பின்னையுமிழந்தாள்காதல் பெற்றதொன்றன்றியன்றே.

சந்திரமதிசொல் தரு.

நைனமோரீரே என்றமெட்டு.

பல்லவி.

இராகம் - சுருட்டி - தாளம் - ஆதி.

என்னசெய்குவேன் அடிசகியே (என்)

அநுபல்லவி.

இன்னல்மிகவாகுதே என்மனம்வாடிநோகுதே (என்)



சரணம்.

அங்கைவளைசோருதே ஆசையதுவும்
அணிகள்பொறியுதே முத்தினுற்ப
அணிகள்பொறியுதே மெய்யினின்ற
அணிகள்பொறியுதே அடிசகியே

கூந்தல்மலர்வாடுதே கொம்பிடைதள்ளாடு
கொங்கைவிம்முதே இரண்டுகிண்ண
கொங்கைவிம்முதே களபம்பூசும்
கொங்கைவிம்முதே அடிசகியே (எ

இச்சமயமெனக்கிங் கிப்படியாவதற்கே
யாதுகாரணம் தெரியச்சொல்வாய்
யாதுகாரணம் ஒன்றுமறியேன்
யாதுகாரணம் அடிசகியே. (என்)

(சக்-வ-ம்.) சகிதற்சமயம் நீயெடுத்துரைத்த வார்த்தையை யான்செவிகொடுத்துக் கேட்டமாத்திரத்தில் மங்களமாகச் செங் கையிலணிந்த தங்கவளையல்கள்யாவும் நழுவிவிழுகின்றது அன்றி யும் கூந்தலினிடமாக அணிந்த புட்பங்களெல்லாம் வாடுகிறது மற் றும் இரண்டுருபமும் கச்சைக் கிழித்துக்கொண்டு லட்சையில்லா மல் மீறுகிறது இவ்விதம் உண்டாவதற்குக்காரணம் யென்ன மோ, அறிகிலேன் தெரிவிப்பாய்.

தாதிசோல் விருத்தம்.

மூன்றால்.

மஞ்ஞல்மிகுமலர்வாடல் நற்குயில்கூவுதல்
வளைகடகமும் நழுவுதல்
மதிகளபமுங்கொதித் தல்விருள்வருத்துத
மயங்குதற் றுயில்சோருதல்
அன்றிலிசைபாடுதல் பூவணைவெதும்புதல்
அன்னமுறு சுவைகசத்தல்
கொங்கைவிம்முதற் ...

முங்கா திருத்தற் கடலிடித்திடல்
இதழூறல் வெறிமீறுதல்
இனியபன்னீர்வெதும் பற்றேமல்படருதல்
இலகுபெரு மூச்சுவிடுதல்
தன்றல்வீசற்றுவல் கண்ணீர்வால்விரக
தெரிவையர்க் குப்பகையிதாம்
திங்கள்கிகர்வதனியே மங்களகல்யாணகுண
தேவியே தெரிவைமீயே.

தாதி-வ-ம்.) அதாவது மாது ஸ்திரி மலர்களானது வாடு
துயில்களானது கூவுதல், காத்தினிலணிந்திருக்குங் கடகமுத
பணிகளானது நழுவுதல், சந்திரன், பீதம், கலவை, வட்
, புலி, என்ற களபங்கள் கொதித்தல், இருளானது வருத்
மயக்கமுண்டாதல், இடையிலணிந்திருக்கு மாடையவிழ்தல்,
ற்றிலானது செவிக்கின்பமுறப்பாடல், மலரணையானதுவெதும்
, அன்னமும் கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு,
கார்ப்பு முதலான வறுசுவை பதார்த்தங்களானதுங் கசத்தல்,
பெண்ணுடம்பு தடித்தல், குயம்பருத்தல், சதாகாலமும் நித்திரை
கொள்ளாதிருத்தல், கடலானதுமுழங்குதல், இதழானதூறல், வெ
றியானது மிகுத்தல், பரிமள மிகுந்த பன்னீரானது வெதும்பல்,
ஸ்தனங்களிற் றேமல்படரல், அடிக்கடி பெருமூச்சு விடல், தென்
றலானது சாடல், கண்ணீர் வடிதல் முதலான குறிகளானது விர
கங் கொண்ட மாதர்களுக்கேற்படு மென்பது சாஸ்திரம் ஆதலால
தற்சமயம் நானெடுத்துரைத்த வார்த்தையி னின்றும்தங்களுக்
கே ... மோகமேற்பட்டிருப்பதாகத் தோற்றுகிறதம்மா.

### சந்திரவதிசொல் தரு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இதுதானோ மோகமென்பதுக்
தெரியேனிதுவரை நான்சகியே (இது)



௬ சரணம்.

மதன்கணைகள் ... மென்மே
வந்திதோ தென்றல் ... புலியோ
இதமாக்குயில்கள் ... கூவுதே,
இதோபாரின்றிதுக் ... கேவுதே
கென்னசெய்குவேன் ... அன்னமேதேனே

(சந்-வ-ம்.) சகி பொழுதோ அஸ்தமித்து விட்டது அ
பார் பஞ்சபாணன் அஞ்சாது வஞ்சனையாக மறைந்து எனது
ஞ்சினில் பங்கயமலரைத் தங்கமா யெய்குறான் தென்றலோட
போர் சாடுகிறது அன்றியும் குயிலோ கூவுகிறது எனக்கோ ஓ
விதமயக்கமாய் வருகிறது இதுதானோ மோகமென்று சொல்லக்
கூடியது இதுவரை யானறிந்திலேனே பஞ்சபாணன் துயர் சகிக்
கக்கூடுதில்லையே இதற்கென்செய்வேன்.

போதுமிருந்தும் முன்னால்.

மாரவேள் பகழிவாரி வல்லியிதுடலை முற்றும்
மீறவே திங்கட்செந்தி யெரிக்கவே பெரியதாகி
வீரவே ஏனையாள் றத்த வேட்டைமீ தூறக்கண்ணீர்
சோரவே யமளிமீது சழுன்றுவிழ்ந் தினையசொல்வாள்.

### சந்திரவதி அங்கசதாஷைஞ் செய்தல் தரு.

மறையவரே ... சிந்த ம... ௧.

இராகம் - சாம்...

...கன்.

...ன் குயமதில் ... து
...ங்கின் றதோர் ... ரமதா.
...ாளுனை ... துன்
...மறிவேனுன் ... மதா

லான்றி — ிருப்புக்சனேயிந்தானேற்
ப்வாரோடின்றால் — மன்மதா

கோபத்தா — ெைதிக்குபின்பிழைத்தவா
நிலைவருண்டு — மன்மதா

க்கமாகியெரிந்து — பிழைத்ததுபூதலத்தில்
வயர்செய்வினையே — மன்மதா

நுவமாகவேகின்று — அருபமானயென்மனம்
தனையேயிறுகின்ற — மன்மதா

நவதாய்விளங்கிடும் — பருவிழிகட்குத்தோன்றும்
ுவைப்பிழைக்கறிதோ — மன்மதா

சந்திரவதி முன்னால் விருத்தம்.

சடிமன் அவைப் தார்குழற்பின்னல்கார்
மிடறுதோன்றல் விடமன்அநானமே
உடல்விளர்ப்புவெண் ணீறன்அருவிலாய்
அடர்வதென்னை அரனவன்காண்டியாள்.

(சங்-வ-ம்.) ஏ மன்மதா முன்னம் நின்னுருவத்தை நெற்றிக்
கண்ணு ... க சாம்பவமூர்த்தி யென்றெண்ணி என்னோடு சன்
டைக் ... ங் ஹே மாரா பார் எனது கிரத்திலிருந்
கு ... னைத்தனையோ? அல்லவ்ல இது பின்
எ ... பதை விதேமென்று நினைத்தனே
ெ ... னது திரேகத்தைப்பார்த்.
ெ ... ல்லல்ல இது உடம்பின் ெ
ண் ... ரான்ற வீராதிவீரச
தில் ... ்னும்பேதவ...
பாக ... னை யென் ெ
தனே ... ாது அபப்ர்



## சந்திரவதி சந்திர தூஷணை செய்தல்.

91 சந்திரவதிசொல் தரு.

அங்கமெல்லாம் பஞ்சபாணந்துளைக்குதே யென்றமெட்டு.

இராகம் - பரசு - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

தெள்ளியபாற்கடல் — சீராய்பிறந்தாயே சந்திரா-அதைச்
சிந்தைதனிலெண்ணாது — மறந்தாயே சந்திரா

மெய்யமெல்லாமுந்தன — செய்யகதிர்காயுதே சந்திரா-எந்த
விதம்நான்சகிப்பேன் — மென்மலர்தீயுதே சந்திரா

எந்தன்மீதித்தனை — கோபமதாகுமோ சந்திரா-உன்னை
என்பழிசற்றுக் — தொடாமற்போகுமோ சந்திரா

கைவளைசோருதே — காதலுண்டாகுதே சந்திரா-என்ன
காலமோமங்கையின் — அங்கங்கள்நோகுதே சந்திரா

சங்கரனார்திருச்செஞ் — சடைசேர்ந்தாயே சந்திரா-அந்தத்
தன்மையதில்லாம — லென்னுடனேர்ந்தாயே சந்திரா

அங்கசனுற்ற — வொன்றுவிடுவாயேல் சந்திரா-உனக்
கார்தானிகராவா — ரையோபுவியின்மேல் சந்திரா

பெண்ணென்றெனைச்சற்றும் பேணுறயில்லையே சந்திரா-என்போற்
பெண்ணுடன்நீயும் — பிறக்காததொல்லையே சந்திரா

என்னசெய்தாள்முன்சித்த — மென்பாக்கியம் சந்திரா-மிகு
எந்தெழிலாடவிற் — கிதுவோயோக்கியம் சந்திரா

(சங்-வ-ம்) ஆ!சந்திரா மாட்சிமைதங்கிய சந்தனம் அரிசந்தா
னம், பாரிசாதம்,மந்தாரம், கற்பகம் என்ற பஞ்சதருக்களும் கவுத்
துவமணியும் சங்கநிதி பதுமநிதி யிரண்டும் மஹாலெட்சுமியும்
அமுதமும் பிறந்த பாற்கடலிலிடமாக நீயு முற்பவித்தாய் அன்றி
யும் நீ வாசம்பண்ணுதலோ சிவபெருமானது சடாமகுடம் அப்ப
டிக்கிருக்கிமன்மதனுடைய தேகத்தைக்கொள் ... ன்னைக் கி
... ப ... மல்ல வென்று





பொதுவிருத்தம்.

முன்னால்.

கொலைவனுயிருங் கோதையைச்சந்திரன்
வெல்வனுயிரு மேலவினைச்செயல்
சொல்வனென்று தன்னொளைச்செங்கதிர்ச்
செல்வனுழியந்தேர்மிசை தோன்றினன்.

பொதுவசனம்.

இவ்விதமாகச் சந்திரவதி தாதிகளுடன் அந்தப் புரத்தில்விகசாயமடைந்து கொண்டிருக்குங்கால் சூரியனுதையமாகி விட்டது பின்பு மதிதயராஜன் சுயவர மண்டபத்திற்கு வரும் விதங் [illegible]குக.

---

# சந்திரவதிசுயவரம்.

## மஹாசபை.

அந்தணர்கள்ஜெயஜெயவென்றுகூற
வடவுடைவாளமருகிலங் கவனேககோடி.
மந்திரிதந்திரிகள்சூழ வாணர்பாட
மாதர்களெலாங் கவரிவாகாய்வீச
வித்தையதாயிளம்பிறையைச் சடையிற்சூடும்
விமலனார்திருவாக்கால் யான்பயின்ற
சந்த்ரவதிசுயம்வரமா சபையைநாடிச்
சந்தோஷமாகமதி தயன்வந்தேனே.

(மதி-வம்) ஹேபிரதான் சிரேஷ்டா.

(மந்-வம்) ப்ரபூ.

மதிதயராஜன் விருத்தம்.

வித்தைசேர்சுமதிகேள்யான் விமலனாருளாலின்ற
[illegible]தாந்தேருஞ்சந்த்ரவதி சுயவரத்திலேனை

(மதி-வ-ம்.) ஹேப்ரதான் ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுக்கும் சுயம் வரவோலை கொண்டுபோன தூதன்வந்து விட்டானா?

(மங்-வ-ம்.) ப்ரபூ இன்னும்வரவில்லை வரக்கூடிய சமையந்தான்.

(தூத-வ-ம்.) மகா ராஜ-ராஜகெம்பீர-ராஜமார்த்தாண்ட-ராஜவுத்தண்ட ராஜப்ரபூடீக மக்ராராஜ் வந்தனஞ்செய்கின்றேன்தூதன்.

(மதி-வ-ம்.) கல்யாண் அடே தூதா ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுக்கும் சுயம்வரவோலை கொடுத்துவிட்டனையா?

(தூத-வ-ம்.) பூபாலகா அரிச்சந்திரச்சக்கரவர்த்தி முதலாக ஐம்பத்தைந்து தேசத்தரசர்களுக்கும் சுயம்வரவோலை கொடுத்து விட்டேன் அரிச்சந்திரச்சக்கரவர்த்தி ஓலைகண்டதக்ஷணமே பிரயாணமாகி யிங்குவந்து விட்டனர் மற்ற அரசர்கள்யாவருமிதோ வருகிறார்கள்.

(மதி-வ-ம்.) அத்யந்த சந்தோஷம் அடே தூதா மந்திரியால் வேண்டிய ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொள்வாய்.

(தூத-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

(மதி-வ-ம்.) ஹேப்ரதான் நகரமுழுவதும் பூரண அலங்காரமாகி எட்டுத்திசையும் மங்களமுரச முழங்குகின்றதா?

(மங்-வ-ம்.) மஹாராஜ் நகரமுழுவதும் பூரண அலங்காரமாகியிருக்கிறது எண்திசையும் மூன்று முரசும் முழங்குகிறது ப்ரபூ.

(மதி-வ-ம்.) அப்படியா மிகவுஞ்சந்தோஷம்.

பொதுவசனம்.

இவ்வித அலங்கிர்தத்தோடிருக்குஞ் சமையம் ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் வருகிறவிதம் காண்குக.



சந்திரவதி சுயம்வரத்திற்கு

# அரசர்கள் வருகிறபாகம்.

வடவரைநிகருந்தோளான் வல்லுறைகொண்டவாளான்
புடவியேழ்போற்றும்பூமன் பொற்புயர்மலர்ப்பூந்தாமன்
வடிவுமிக்கோங்குஞ்சந்த்ர வதிசுயவரத்திற்கின்று
குடகநாட்டரசனீதோ குதோகலமாய்வந்தேனே.

(குட-வ-ம்,) யாரடா ஆசாரவாசலிற் சேவகன்.

(சே-வ-ம்.) ஏன் ப்ரபூ.

(குட-வ-ம்.) அடாசேவகா உனதிறைவரிடஞ் சென்று குடக நாட்டரசன் ஆசாரவாசலின்கண் வந்திருக்குறா னெனத்தெரிவிப்பாய்.

(சே-வ-ம்.) ஆக்ஞை மகாராஜா குடகநாட்டரசர் சேனைசனியங்களுடன் ஆசாரவாசலின்கண் வந்திருக்கின்றார் ப்ரபு.

(மதி-வ-ம்.) அடேசேவகா, இன்றுயார்வந்தாலும் யாதொரு தடையுஞ்சொல்லாது உள்ளே வரவிடுவாய்

(சே-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ, குடகதேசாதிபதி மகாராஜா எங்களரசன் தாங்கள் யாவரையும் வரச்சொன்னார்கள்.

மதிதயமகாராஜன் விருத்தம்.

குடகநாடாளுங்கோமா கொற்றவர்பணியுநேமா
கடகளிறதன்மேலூர்ந்து கருதலர்போரைவென்றுந்
திடமிகுபுயாசலாநீர் செம்மணிபதித்தேகாந்தி
புடைகொழுமாசனத்திற் புக்கமாயிருப்பீர்தாமே.



(மந்-வ-ம்.) ப்ரபூவருணனைத்தன்னுடைய பாதாரவிந்தத்தின் கண் வணங்கச்செய்து நீர்வளம், நிலவளம், மலைவளம், முதலி யவைகளிற்சிறந்த பாண்டிநாடாளும் பார்த்திபர் இதோ வருகுறார்.

94

மதிதயராஜன் விருத்தம்.

காண்டவமழகுவாய்ந்த கன்னியர்மிக்கமையல்
பூண்டிடற்கொற்றருபா புவியொருமூன்றுமேற்றும்
பாண்டிநாடதனைச்செங்கோல் பாங்குடன்புரிந்துவாழும்
ஆண்டகைவள்ளால்நீரிவ் வாசனத்திருப்பீர்தானே.

(மதி-வ-ம்.) பாண்டிநாடாள் பார்த்திபாவாரும் இவ்வாசனத்தில் வீற்றிரும்.

(பாண்-வ-ம்.) இதோ வீற்றிருக்கின்றேன் மதிதயமன்னா.

(மந்-வ-ம்.) ப்ரபூ இதோ சோழதேசாதிபர் வருகிறார்.

(மதி-வ-ம்.) வாரும் சோழதேசாதிபா இவ்வாசனத்தில் வீற்றிரும்.

சோழமகாராஜன் வசனம்.

இதோ வீற்றிருக்கின்றேன் மதிதயவேந்தே.

(மந்-வ-ம்.) ப்ரபூ அங்கதேசாதிபர் வங்கதேசாதிபர் மச்ச தேசாதிபர் சிந்துதேசாதிபர் முதலிய அரசர்யாவரும் வருகுறார்கள்.

(மதி-வ-ம்.) வாருங்கள்மன்னர் மன்னர்களே இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(மந்-வ-ம்.) ப்ரபூவேதவேதியர்கள் முனிவர்கள் தபோதனர்கள் யாத்திரைமாதவர்கள் முற்றத்துறந்தவர்களியாவரு மிதோ வருகிறார்கள்.

(மதி-வ-ம்.) வாருங்கள் தவசிரேஷ்டர்களே அநேககோடி வந்தனம் இவ்வாசனங்களில் வீற்றிருங்கள்.

சுயம்வர மண்டபத்திற்கு

# அரிச்சந்திரன் வருதல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதராரிருபுறமுங் கவரிவீச
　மந்திரிதந்திரிசூழ வாணர்பாட
மாதரார்குவளைவிழி வாய்ந்திலங்கும்
　மங்கையர்கள்நடித்திட வார்முரசமார்ப்ப
மாதராதலம்புக ழயோத்தியாளும்
　மகிபன்கோவேந்தர்பணி வாகச்செம்பொன்
மாதராவிடில்முடிக்கும் பூமன்சந்த்ர
　வதிதிருக்கல்யாண மண்டபம்வந்தேனே.

அரிசசந்திரன்சொல் தரு

பதுமலோசன பரந்தாமா என்றவர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வந்தேன்சந்தோசமாகத் 　　　தானே
மங்கையாள்சுயவரமண்டபத்துள்ளே 　　　நானே (வ)
வேதவேதியரெல்லாஞ் 　　　சூழ
வேந்தர்களெல்லாமடி 　　　சேர்ந்தபொன்னடிதாழ (வ)
மங்கைமார்கள்கவரி 　　　யிலக்க
வாகுடனேமங்கள 　　　மாபேரிகைமுழங்க (வ)
வாணரெல்லாங்கவிகள் 　　　படிக்க
மாதர்பதங்கள்பாடி 　　　மாண்புடனேநடிக்க (வ)
ஆடைபலபூஷணம் 　　　அணிந்து
ஆதிசிவனடியை 　　　ஆகம்வைத்துப்பணிந்து (வ)

(அரி-வ-ம்.) யானின்று வைகறையிலெழுந்து ஸ்நானஞ்செய்து காலைக்கடனைமுடித்துப்போஷணமருந்தி தாம்பூலமுட்கொண்டு ஆடையாபரணலங்கிருதனாகி அத்யந்தசந்தோஷத்துடன் இதோ சந்திரவதி சுயம்வரமண்டபத்திற்குச் செல்கின்றேன்.



(மந்-வ-ம்.) ப்ரபு அதோ அயோத்தியா புரியையாளும் அரிச்சந்திர சக்கரவர்த்தி வருகின்றார்.

(அரி-வ-ம்.) அயோத்திக்கரசே இச்சிம்மாதனத்தில் வீற்றிருங்கள்.

(மந்-வ-ம்.) ப்ரபு அதோ வசிட்டமகாரிஷி வருகிறார்.

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா அனேக வந்தனம் இச்சிம்மாதனத்தில் வீற்றிருங்கள்.

(வசி-வ-ம்.) கல்யாண சந்திரதயா இதோவீற்றிருக்கின்றேன்.

மதிதயாராஜன் விருத்தம்.

முன்னூல்.

வேந்தர்வந்தனர் வேதியர்வந்தனர்
மாந்தர்வந்தனர் மங்கையர்வந்தனர்
ஆய்ந்தநீதி யமைச்சருமவ்வவர்ச்
சேர்ந்தசேனையும் சேரவேவந்தனர்.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் இதோ நாமேற்படுத்திய சுயம்வர மண்டபத்திற்கு வந்துவிட்டார்களாகையால் தாதியை விடுத்து எனது புத்திரி சௌபாக்கியவதி சந்திரவதியை ஆடையாபரண அலங்கிர்தஞ் செய்து அழைத்து வரும்படி ஆக்ஞாபிப்பாய்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபு.

சுமதிமந்திரி தாதியிடஞ்சொல் வசனம்.

தாதிகாள் நமதிறைவர் புத்திரி சந்திரவதியம்மாளை ஆடையாபரண அலங்கிர்தஞ்செய்து அழைத்துவருவீர்கள்

(தாதி-வ-ம்.) ஆக்ஞை ப்ரபு.

சந்திரவதியிடந் தாதிசொல் வசனம்.

மாதே அனேகவந்தனம் தங்கள் பிதா தங்களை ஆடையாபரண அலங்கிர்தர்களாகச்செய்து சுயம்வரமண்டபத்திற் கழைத்துவரச்சொன்னார்கள்.

(சு-வ-ம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம்.

## சந்திரவதிசுயம்வரமண்டபத்திற்கு

### வருகிறபாகம்.

சந்திரவதி விருத்தம்.

மந்தரபுயத்தான்கன்ன மாபுரிமன்னனீன்ற
வித்தையாம்பெண்ணாள்வண்டு வேல்மறைநெருங்கண்ணாள்
சந்திரவதியாள்தோழி தன்னுடன்பணிகள்பூண்டு
அந்தமாகவேவந்தாள் கல்யாணமண்டபத்துள்தானே.

சந்திரவதிசொல் தரு.

தாஸ தாஸ தாஸ என்றமெட்டு.

கண்ணிகள்.

சுயம்வரமண்டபஞ்செல்வோம் தோழியேவாராய்-அதி
சுந்தரமாகவேகந்தமாமலர்கள் கொந்தளமீது சூடி
துகில்கொய்துடுத்தி நகைகள்திருத்தி முகைதனவாரணிந்து-இன்
றகமகிழ்வுடனே திகழ்வளைபூட்டி மிகவும்நாந்துணிந்து மா

சோதியாய் ஆதியாய் நீதியாய்
ஜியாதியாய் நீதிவிளைதிய தாய்

துலங்கிடுவோன்றுள் கலங்கிடாதின்று
சுபமுடனேபோற்றி சுபமுடனேபோற்றி
சுபமுடனேபோற்றி போற்றிச் (சுய)

(சந்-வ-ம்.) பிதா வந்தனஞ்செய்கின்றேன்.

(மதி-வ-ம்.) கல்யாண் சந்திரவதி.

மதிதயராஜன் தாதியிடம்சொல் வசனம்.

ஏ தாதி எனதுஅருந்தவப்புத்திரி சந்திரவதிக்கு இந்தச்சுயம்வரமண்டபத்திலிடமாய் நிறைந்திருக்கக்கூடிய அரசர்களின் பெயரையும் ஊரையும் அன்னவர்களின் தன்மையையும் சவிஸ்தாரமாயெடுத்துச் சொல்லிவருவாயாக.

(தாதி-வ-ம்.) அக்ஞை ப்ரபு.



பொதுவசனம்.

சந்திரவதியைத் தாதியர்கள்கைப்பிடித்துக்கொண்டு ஐம்பத்தைந்துதேசத்தரசர்களையும்நாண்பிவித்து வருகிறவிதங்காண்குக.

## தாதிசொல் தரு.

காசிவிஸ்வநாதர் வளர்கைலாதிகர்கோவில் பாராயென்றமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மன்னன்மதிதயனீன்ற கன்னியேசந்திரவதியே
வாராய் நேரே பாராய்
மாட்சிமையாயிந்துறையும் மாசிலாவேந்தன் திருநேர்
மானே குடகக் கோனே
மங்கையேயிவன்வருணன் வந்துதங்கப்பதம்போற்றும்
மன்னன் புகழ் தென்னன்
கொண்டலைநேருங்குழலாய் வண்டுவிழியா யிந்தக்
கோனே சோழனென் பானே
அஞ்சுகமொழியாரப ரஞ்சியேயிவன்குருநாட்
டரசன் வெற்றி முரசன்
மச்சராஜனிவன்சிந்து வள்ளலிவன்காம்போசன்
மயிலே பூங் குயிலே
அங்கதேசவண்ணலிவன் அவந்தியாள்வேந்தனிவன்
அனமே எழிற் சொனமே
பொங்கமாயயோத்தியாளும் புண்ணியவரிச்சந்திரப்
பூமான் இவனே சீமான்

(தாதி-வ-ம்.) மாதுஸ்திரி யானிதுவரையெடுத்துச்சொல்லிவந்தஅரசர்களில் சேற்றையத்தினம் மிகுந்த குதூகலமாய் தங்கள் சமுகம்வந்து யான்வர்ணித்துக்கூறிய அயோத்திக்கரசரிவர்தான்.

(சந்-வ-ம்.) அப்படியா?



சந்திரவதி தாதியிடம்சொல் விருத்தம்.

கங்கையேதோழியேகேள் ஈடியென்பால்நீநேற்றுப்
பொங்கமாய்விரைந்துவந்து புகழ்ந்துமேயெடுத்துரைத்த
துங்கமுந்தேசமோங்குந் தோன்றலாமென்றுயெந்தன்
மங்களநாணைக்காணா வல்லரோ அறிகிலேனே.

(சந்-வ-ம்.) அடிதாதி ஊழ்வினையெப்படியோ இந்த அயோத்திக்கரசர் யெனது திருமங்கிலியத்தை அறிவரோ அறியமாட்டாரோ தெரிகிலேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பாகுசேர்மொழியாளிந்தப் பாவைபர்க்கரசிமுன்வி
வாகமாகாதாளென்று வந்தனனெண்ணியிங்கு
பூகநேர்கழுத்திற்றாலி பூண்டவளாகவென்முன்
ஓசையுற்றேன்றுகின்று னொப்புமோவுலகுக்கம்மா.

(அரி-வ-ம்) ஆ! ஆ! ஆ! என்னஆச்சரியம் இவள் விவாகமாகாதபெண்ணென்று நினைத்திருந்தோம், அப்படிக்கின்றி முன்னேதானே மாங்கல்யந் தரிக்கப்பட்ட பெண்ணாயிருக்கின்றாள். இஃதென்னவிபரீதம்,

அரிச்சந்திரன் விருத்தம்.

அரசர்காள்பகரக்கேண்மி னனைவருமொருங்குதாக
விரசினிலெழுந்திருங்கள் மெல்லிதன்கழுத்திற்றாலி
சரசமாய்த்தானுதித்தோ தகாதகாரியத்தைமுன்று
முரசமுழுமுழங்கச்செய்தான் மதிதயமுதல்வன்றானே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

நின்னுரகம்நிறைநுளன்ற வர்ணமெட்டு.

இராகம் - காம்போதி - தாளம் - ஆதி.

பல்லவி.

அரசரேயாரும் அன்புடனேதேரும் (அ)

அநுபல்லவி.

விரைவாயுவந்து மேலெழுந்திருந்து (அ)

சரணம்.

காவலன்புத்திரி கழுத்தினிற்றாலி
மேவியிருக்கின்ற விந்தைமிகக்கேளீ. (அ)

பொறுத்துமுன்றாலி பூண்டபெண்ணைப்பாரோர்
மறுத்திரண்டாவது மணமுடிப்பாரோ (அ)

மதியில்லார்செய்யும் வாடிக்கையைத்தேடி
மதிதயன்செய்ய மனங்கொண்டான் மீறி (அ)

(அரி-வ-ம்) ஆ! ஆ! ஆ! அரசர்களே இந்த மதிதயராஜன் செய்த மோசத்தைப் பார்த்தீர்களா? முன்னமொருவனுக்கு விவாகஞ் செய்த பெண்ணை யாது காரணத்தாலோ தற்சமையம் இழிகுலத் தாரைப்போல் மற்றொரு விவாகஞ்செய்து கொடுக்க எத்தனித் தான் இதோ பாருங்கள் இந்த மாதினுடைய கழுத்திற் சூரியப் பிரகாசம் போலாக மங்கிலியந் தோற்றப்படுகிறது எல்லோருமெ ழுந்திருங்கள் நம் நகரஞ் செல்லுவோம்.

மதிதயராஜன் விருத்தம்.

மன்னர்காளெழுந்திராது வழுத்துமென்வார்த்தைகேளீர்
கன்னிதன்கழுத்திற்றாலி காவலனிருக்குதென்று
சொன்னசொல்மெய்மைதானோ வென்றுநீர் துரிதமாக
நன்னயமுடனேபார்த்து நவிலுவீர்நவிலுவீரே.

(மதி-வ-ம்) ஓ! அரசர்களே எல்லோரு மெழுந்திருக்காது விற்றிருங்கள் இந்த அரிச்சந்திரச் சக்கரவர்த்தி யெனது புத்திரி யின் திருக்கழுத்தில் ஏதோ திருமங்கிலியந் தோற்றுகிறதாகச்சொ ல்லுகின்றாரே அப்படியுண்டா வென்று நீங்களனைவரும் பாருங் கள்.

(அரசர்கள்-வ-ம்.) மதிதயவேந்தே நாங்களனைவரும்பார்த்தோ ம் உனதுபுத்திரியின் திருக்கழுத்தினில்திருமங்கிலியந் தோற்றவே யில்லை ஏதோ விபரீதமாக இந்த அரிச்சந்திரச் சக்கிரவர்த்தியான வர் திருமங்கிலியந் தோற்றுகிறதென்று சொல்லுகிறார் இதன்கா ரணம் யாதோ அறிகிலம்.



அரிச்சந்திரன் விருத்தம்.

மண்டலமன்னர்காளிம் மங்கையாள்கழுத்திற்றாலி
கண்டிடாரானியம்ப மறைக்கின்றீரில்லையென்றே
விண்டலம்நீங்கிவந்த மின்னெனவிளங்குதீதோ
திண்டிறல்வேந்தவென்சொல் பொய்மையோதேர்ந்திடீரே.

(அரி-வ-ம்) ஏ வேந்தர்காள் யான் இந்தமாதினுடைய கழுத் தினிடமாகத் தாலியானது தெரிகிறதென்று கூற நீங்களனைவ ரும் பார்த்து இல்லையென்று கூறுகின்றீர்கள் அப்படியானால் யான் சொன்னது பொய்யா இதோ மின்னலைப்போன்ற பிரகா சத்துடன் இந்தமாதினுடைய கழுத்தில் திருமங்கிலியந் தோற்று கிறது கூர்ந்து பாருங்கள்.

(மதி-வ-ம்.) கோசலாதிபா கோபங்கொள்ள வேண்டாம் வீற்றிருங்கள் இதன் காரணார்த்தம் மெடுத்துச்சொல்லுகின்றேன்.

(அரி-வ-ம்.) நல்லது சொல்லும் பார்ப்போம்.

(மதி-வ-ம்.) ஓ அரசர்களே இந்தப்பூமண்டலத்தை யாளுகிற அரிச்சந்திரச்சக்கரவர்த்தியானவர் எனது புத்திரியின் திருக்கழுத் தில் திருமங்கிலிய மிருக்கக் கண்டதற்கும் நீங்கள் காணாததற்கும் தேவரகசியம் ஒன்றிருக்கிறது அதனை விபரமாய் இங்ஙன மெடுத் துரைக்கின்றேன் யாவருஞ் செவிகொடுத்துக் கேளுங்கள்.

சந்திரவதியின் திருக்கழுத்திலுற்ற
திருமங்கில்ய பூர்வசரித்திரத்தை மதிதயராஜன்
எடுத்துரைக்கிற வசனம்.

ஓ அரசர்களே யான் புத்திரப்பேற்றைக் கோரிச் சாக்ஷாத் சிவபெருமானைநோக்கித் தவஞ்செய்யுங்கால் அன்னவர் பிரசன்ன மாகிப் பாலகா திருமங்கிலியத்தோடு ஓர் பெண் உனக்கு அவத ரிப்பாள் அந்தப்பெண்ணினுடைய திருமங்கிலியத்தைக் கண்டவன் எவனோ அவன் தான் அம்மாதுக்கு நாயகன் என்றுகூறி மறைந் தனர் பின்னரிம்மாது அவதரித்தாள் இவள் பிறந்த நாள் முதல் கண்ணுடிநிழலிலே இவள் மங்கிலியத்தை யாதும்எனது பத்தினி





சுந்தரரேகையும் பார்த்தோமே யல்லாது இந்தச் சந்திரவதியினு டைய கைக்குத் தெரிவதற்கும் அகப்படாது இஃதுண்மை.

(அரசர்கள் வசனம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம்.

(அரி-வ-ம்.) மதிதயவேந்தே அப்படியானால் குற்றஞ்சொல்வ தற்கிடனில்லை.

(மதி-வ-ம்.) கண்மணி சந்த்ரவதி சாக்ஷாத் சிவபெருமான் கிருபாகடாக்ஷத்தால் இந்த அரிச்சந்திரச் சக்ரவர்த்தியானவர் இர கசியமாயுனது திருக்கழுத்திலுற்ற திருமங்கிலியத்தைக்கண்டனரா தலால்இவர்தானுனக்கு நாயகர்மங்களமாக மணமாலைசூட்டுவாய்.

(சங்-வ-ம்.) ஆக்ஞை பிதா.

## சந்திரவதி அரிச்சந்திரனுக்கு மணமாலைசூட்டுதல்.

விருத்தம்.

திங்களங்கொன்றைகங்கை சென்னியிற்சூடிவெள்ளி
யங்கிரியதனில்வாழும் அரனருளால்மகிழ்ந்து
பொங்கமாயயோத்தியாளும் புரவலன்றனக்கிப்போது
மங்களமாகவேயான் மணமாலைசூட்டினேனே.

### சந்திரவதிசொல் தரு.

வந்தார்வந்தார்வடிவழகரென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மங்களமணமாலையைநானே-யதி வன்மையாய்வீசிடவேதானே
மாசுறுவிசு வாசமாயுயர் கோசலந்தனை யாண்டிடுமெ
மன்னர் புயமீது-விதி
மாட்சி தவராது
வன்னமா யிப்போது-இதோ
வந்து விழுந்தது

கன்னிகாள்-பாது

காத்தனர்சிவபிரான் தான் தான் தான்

(சந்-வ-ம்.) தோழிகாள் சாக்ஷாத்சிவபெருமான் கிருபாகடா க்ஷத்தால் நான்போட்ட மாலையானது நேற்றையத்தினம் என்னி டம் எடுத்துரைத்த சக்கரவர்த்தியின் திருக்கழுத்திலேயே போய் விழுந்தது பார்த்தீர்களா.

(தோழி-வ-ம்.) மஹா சந்தோஷமம்மா சந்திரவதியே.

பொதுவசனம்.

சந்திரவதி அரிச்சந்திரனுக்கு மாலைசூட்டி யிருவரும் வசிட்ட மகாமுனிவரை வணங்கி ஆசீர்வாதம் பெற்றபின்னர் சுபமங்கள மாக வேதவேதியர்களும் மகரிஷிகளும் மேற்கூறிய இருவருக்குங் கலியாணமுடித்து அரசர்கள் யாவரும் மதிதயனிடம் விடைபெற் றுக்கொண்டு தம்தம் தேசத்துக்கேகினர் பின்பு அரிச்சந்திரனுஞ் சந்திரவதியும் அந்தப்புறஞ்சென்ற விதங்காண்குக.

## அரிச்சந்திரன்சொல் தரு.

மாதர்களுக்கெல்லாஞ் சிலாக்கியமே என்ற வர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஏகம்.

கண்ணிகள் ஓரடிப்பதம்.

மையல்கொண்டேனுன் கண்மணி சல்லாபமாக.

வன்னமாமுலையிலே சொன்னஞ்சேர்கலையிலே
நன்னயகிலையிலே மன்னுகண்வலையிலே. (மை)

வடத்திலேயரவபடத்திலே யங்கைத்
தடத்திலேகோவையிடத்திலே மிரு. (மை)

வாகுசேர்கழலிலே மேகஞ்சேர்குழலிலே
தோகைபோனடையிலே மாகனவிடையிலே.

மையல்கொண்டேனுன்கண்மணி சல்லாபமாக
மருவியணைவாய் பெண்மணி. (மை)

(அரி-வ-ம்.) பெண்ணே சந்திரமதி நாம் அந்தப்புறஞ்செல் வோம்வா.

(சந்-வ-ம்.) சுவாமி அப்படியே செல்வோம் வாருங்கள்



பொதுவசனம்.

இவ்விதமாக சந்திரவதியும் அரிச்சந்திரனும் அந்தப்புரத்திற் சென்று சரசசல்லாபமாக அனேகநாளாக் கன்னமாபுரியிலேயிரு ந்து சந்திரவதியிடம் அரிச்சந்திரன் சொல்கிறவிதங்காண்குக.

(அரி-வ-ம்.) பெண்ணே சந்திரவதி நான்வந்து வெகுநாளா யிற்று நமதுநகரஞ் செல்வோம்வா.

(சந்-வ-ம்.) நாதா அப்படியேசெல்வோம்.

பொதுவசனம்.

அரிச்சந்திரனும் சந்திரவதியும் மதிதயராஜன் அவனவன்பத் தினி சுந்தரரேகை யிருவரிடமும் விடைபெற்று அன்னவர்களாற் கொடுக்கக்கூடிய சீர்முதலானதுடன் மந்திரிபிரதானிகள் சூழவ சிட்டமகாரிஷியுடன் அயோத்திமாநகருக்குச் செல்லுகிற விதங் காண்குக.

# அரிச்சந்திரன் அயோத்திக்கு வருகிறபாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆசைரஞ்சிதமேமானே அன்னமேகுயிலேதேனே
நேசியேயிங்குவந்து நீண்டநாளானதாமால்
தேசயிரதத்தேரித் திடமிகுசேனையோடு
கோசலைநாடுசெல்வோம் கூடிநீவருவாய்தானே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

மன்றுயென்றதாயென்ற வர்ணமெட்டு.

இராகம் - காபி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

...ன்னமேதேனே அழகுமிகுந்தமானே
...பான்னேதேமாங்குயிலே பூஞ்சிலையார்மயிலே
...ன்னகர்க்கேநேராய் நாமின்றுசெல்வோம்வாராய். (அ)

பொற்கொடியாளே புகழுடைநடையாளே
அற்புதரதமேறி அயோத்திவழியைக்கோறி
கற்பரசேயடர்ந்தோம் கன்னபுரிகடந்தோம். (அ)

பங்கயப்பெண்ணே பைங்கொடியேயென்கண்ணே
கங்காநதிகடந்தோம் களிப்புடனேவிரைந்தோம்
துங்கமாம்பாலை தோன்றுதேநம்முன்னாலே (அ)

மாசில்மொழியாய் வண்டுவிகர்விழியாய்
கோசலாதேசங் குறுகினோம்பாராய்வாசம்
ஆசையாய்நேராய் அரண்மனைசெல்வோம்வாராய். (அ)

(அரி-வ-ம்.) பெண்ணே சந்திரவதி நாம் கன்னமாபுரியிலிருந்து காடுமலை வனம் வனாந்திரங்களெல்லாங் கடந்து இதோ அயோத்தியாபுரி வந்துசேர்ந்தோம் இதுதான் நமதரண்மனை உள்ளேசெல்வோம்வா.

(சந்-வ-ம்.) இதோ வருகின்றேன் கண்ணாளா.

பொதுவசனம்.

இவ்விதம் அரிச்சந்திரன் அயோத்தியாபுரி சென்ற பின்னர் சந்திரவதி கெர்ப்பினியாகி பத்துமாதமுஞ்சென்று ஓர் குழந்தையைப்பெறவே வசிட்டரால் அக்குழந்தைக்கித் தேவதாசனென்று திருநாமஞ்சூட்டி உபாத்தியாயரிடம் படிக்கவைத்துச் சந்தோஷமாய் இராஜரீகஞ்செய்து வருங்கால் நிகழும் விதங்காண்குக.
சுபமங்களம்.

## விவாக காண்டம்

முற்றுப் பெற்றது.

உ
பரமபதிதுணை.

# இந்திரகாண்டம்.

விநாயகர்காப்பு வெண்பா.

மணிமுத்த வெண்குடையான் மன்னனரிச் சந்த்ரன்
அணிசரிதை பாரி லறையக் — குணமுடனே
வந்திக்கு வந்தருள் மங்கைபா கன்பயின்ற
தந்திமுகன் றாள்காப்ப தாம்.

தரு.

ஆதனைமனடோங்கிசையாளன்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

விகவாரணகணேசா முக்கணவல்லபைநேசா. (மு)

அநுபல்லவி.

பாசாங்குசதரா பக்தர்க்கருள்தற்பரா
பாக்கார்சித்தி மனோகரா. (மு)

சரணங்கள்.

தாமரைமலர்ப்பாதா தாரணியிற்பிரக்யாதா
தருணமவந்தாள் வாய்நீதா. (மு)

அறுதெரகநகனே அழகார்தும்பிமுகனே
ஆதரிப்பாய் வித்தகனே. (மு)

கல்யாணசுந்தரன் அதி கருணைப்பிரகாசசித்தி
கதிதருவா யித்தகி. (மு)





# தேவேந்திரன் சபை.

## தேவேந்திரன்சொல் தரு

தேரீ அம்சனும் அதிபதியே யென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

தேவருலகங் காவல்புரியுந்
தீரவீரசூரமிகுமிந்த்ரன் வந்தேன் (தே)

அநுபல்லவி.

மூவர்பாதம்போற்றியே திருமறை
முறை நிறைநெறியுட னென்னாளும் அருமறை
முறை நிறை நெறியுடனென்னாளும் (தே)

சரணங்கள்.

மாதவர்கள் வாழ்த்திட தவமிகு
விதி நிதி கதியெலா மோங்கிட நலமிகு
விதி நிதி கதியெலா மோங்கிட (தே)
அன்பா யும்ப ரிம்பருந் துதிசெய்
அணி மணி பணி முடிசூடியே ஒளிதிகழ்
அணி மணி பணி முடிசூடியே. (தே)

## தேவேந்திரன்சொல் தரு.

வாராரிதோ வச்சிரபாணி யென்றமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - பியாகு - தாளம் - யேகம்.

கண்ணிகள்.

திருவளரும்விண்ணுலகஞ் செங்கோல்புரிவோன்
மருவிலயிராவதத்தில் வாகாயூருவோன் (தி)

வானவர்களனுதினமும் வணங்கிடுந்தாளான்
மின்விழியாள்பாகன்வரமே மேருநேர்தோளான் (தி)

வச்சிராயுதம்பிடித்த மாமலர்க்கையன்
முச்சகமும்புகழ்படைத்தோன் முனிவிலாமெய்யன் (தி)

சுந்தரஞ்சேரைந்தருக்கீழ் சுதர்மாசனத்தே
சிந்தையாய்க்கொலுவிருந்தேன் சிந்தைகளித்தே (தி)

தேவேந்திரன் போற்றி விருத்தம்.

மங்கையோர்பாகாபோற்றி மறைமுதற்காரணப்போற்றி
செங்கைமான்மழுதரித்த தேவநற்றேவாபோற்றி
மங்களமாயென்செங்கோல் வழுவிடாதோங்கமூன்றுந்
திங்களஞ்சடையாவுந்தன் றிருவடிபோற்றிபோற்றி.

(தே-வ-ம்.) மகாமாட்சிமை தங்கிய வெள்ளியங்கிரியின் கண்
ணீரிற்குளிர்ச்சியும், அக்கினியிற் சூடும் எள்ளின்கண் எண்ணெயும்,
மதுரமாகிய பாலின்கண் நெய்யும், மலரின்கண் வாசனையும், எவ்
வாறு பொருந்தி யிருக்கிறதோ வதுபோலாக வென்றன்னையாகிய
பார்வதிதேவியுடன் கலந்து செஞ்சடையிற் றிங்களணிந்து கரத்
தில் மான்மழுதரித்து வாழும் நாதா அடியேன் ஐந்தருவின் கீழு
ற்ற இச்சுதர்மாசனத்தின் கண் வீற்றுச் செங்கோல்வழுவாது அரசு
புரியக் கிருபைசெய்யவேண்டியதாய்ப் பிரார்த்திக்கிறேன்.

(சே-வ-ம்.) மகாராஜ் வந்தனஞ் செய்கின்றேன்.

(தே-வ-ம்.) கல்யாண் சேவகா.

## எமதர்மராஜன் தேவேந்திரனை வணங்கும் வசனம்.

மகாகௌரவம் பொருந்திய பருவதங்களின் சிறகெலா மரி
ந்தவச்சிராயுதத்தைக் கரத்திலேந்தி சந்தனம், அரிசந்தானம் பாரி
சாதம் மந்தாரம் கற்பகம் என்றுசொல்லப்பட்ட பஞ்சதருவின்கீழ்
சுதர்மாசனத்தின்கண் அயிராணி சமேதனாக வீற்றரசுபுரியும் அம
ரேசா வந்தனஞ் செய்கின்றேன் தென்றிசைக் காவலனாகிய எம
தர்மன்.

(தே-வ-ம்.) கல்யாண் எமதர்மா வீற்றிருப்பாய்.

(எம-வ-ம்.) உத்தரவு மகாராஜ்.

(தே-வ-ம்.) எமதருமா உனக்கு யானிட்ட வருதிப்படி சரி
யாக நடந்து வருகின்றனையா.

எமன் வசனம்.

ஹே; சுதர்மாதிபதி யான் அஷ்ட திசைகளில் தென்றிசையிலி
ருக்கும் வைவச்சுத பட்டணத்துக் கரசனாகி வைவச்சுதராஜனெ
ன்ற நாமத்தை வகித்து நாலாயிரத்து நானூற்று நாற்பத்தெட்டு



பாதிகளையும் ரௌரவாதி யிருபத்தெட்டு நரகங்களையும் கைக்
கொண்டு மகிஷமென்றவாகனத்தி லாரோகணித்துத் தண்டமெ
ன்ற வாயுதத்தைக்கரத்திலேந்தி ஸ்யாமளாவென்னும் மெனது
தேவியுடன் பவனிவருங்கால் பூலோகத்தினிடமாகக் கொடியபா
தகத்தியஞ் செய்கின்ற துஷ்டர்களை நரகத்திலழுத்தியும் தான
தருமாதிகளும் யாகாதிகிருத்தியங்களும் செய்து சாக்ஷாத் ஜெகன்
னாதன் கடாக்ஷம்பெற்ற புண்யாத்மாக்களைப் பொற்கமுடனிங்கி
ருந்தாய்ப் புண்யலோகத்திற்கு அனுப்புவித்துக்கொண்டும் வருகி
றேன்.

ஹே வச்சிராயுதபாணி மேலும் மண்ணுலகத்தின்கண், மா
ர்ஹத்தி, பிதுர்ஹத்தி, சிசுஹத்தி, கோஹத்தி, செய்கின்ற மகா
பாபிகளான பரம சண்டாளர்களைக்கும்பிபாகமென்னும் மெனது
லோகத்திலிருக்கப்பட்ட நரகத்தில் அழுத்தி அநே வாதைக்குட்
படுத்துவதுமன்றி பரஸ்திரீ கமனஞ்செய்கின் சமாபாதகப்
பயல்களான பாமதடியர்களை, எனது லோகத்தில் தகத்தக
மாய்க்காய்ந்துகொண்டிருக்கிறஅக்கினிஸ்தம்பத்தில் இருகக்
ஆலிங்கனஞ்செய்யும்படி ஆக்ஞாபித்துவருகின்றேன் இதுவ
தில் கிஞ்சிற்றுத் வறுவேனாகில் எனது சிம்மாசனத்துக்
லாக மயிர்க்காம்பினாற் கட்டப்பட்ட பர்வதமானது அறு
ன்மீதுவிழ யான் அரியணையுடன் அரியணையின்கீழே
அக்கினியாற்றில் மூழ்கி நாசத்தை யடைவேன் ஆ
இந்திராணிசமேதா இதுவிஷயத்தில் கிஞ்சிற்றும்
நடத்திக்கொண்டும் தமது பாதாரவிந்தத்தில் தற்
கொண்டுமிருக்கிறேன்.

(தே-வ-ம்.) அப்படியா; மிகவுங் குதூகலம்.

வருணன் தேவேந்திரனை வணங்கும் வச

ட்டடங்காத் துட்டர்களாகிய அரக்கர்
ண்டு வற்றிமாலைசூடி மாட்சிமைதங்கிய பஞ்ச
பீடத்தில் இந்திராணி சமேதனாகவீற்று இ
தைப் பரிபாலிக்கும் இந்திரப்பூ வந்தனஞ்செ
திசைக் கிறைவனாகிய வருணன்.

(தே-வ-ம்.) கல்யாண்; வருணா வீற்றிருப்ப

(வரு-வ-ம்.) ஆக்ஞை,

(தே-வ-ம்.) வருணா; உனக்கு யாமிட்ட வாக்ஞைபின்பிரகாரம் வழுவாது நடந்துவருகின்றனையா,

வருணன் வசனம்.

ஹே சுராதிபதி; யானோ அஷ்டதிக்குகளில் பச்சயமதிக்கிலிருக்கும் ஸ்ரத்தாவதிபட்டணத்திற் கரசனாகிவருணனென்ற நமத்தைவகித்து சப்தமேகங்களையும் கைக்கொண்டு பாசமென் ஆயுதத்தைக் கரத்திலேந்தி காளிகையென்னும் எனது பத்தினி சமேதனாக முதலைவாகனத்தி லாரோகணித்து வலம்வருங்கால் பூலோகத்தின்கண் வேதமோதிய வேதியர்க்கோர்மழை, நீதிமன்னர் நெறியினுக்கோர்மழை, மாதர் கற்புடை மங்கையற்கோர்மழை, யென புண்யவான்களிருக்கப்பட்ட இடங்களில் மாதமும்மாரிபெய்துகொண்டும் அரிசிவிற்றிடு மந்தணர்க்கோர்மழை, வரிசைதப்பிய மன்ன[illegible]ர்க்கோர்மழை, புருடனைக்கொன்ற பூவையர்க்கோர்மழை, என மகாபாபிகளிருக்கப்பட்ட யிடங்களில் வருஷமும்மாரிபெய்துகொண்டும் யென்னுடைய ராஜ்ஜிய விஷயத்தில் ஒருகுறைவன்றி நடத்திக்கொண்டும் த[illegible]கள் காலாலிட்ட [illegible]லையைச் சிரமேல்வகித்துப் பாதுகாத்தும் வருகிறேன்.

(தே-வ-ம்.) அப்படியா, மிகவும் சந்தோஷம்.

இந்திரன் வசனம்.

- சேவகா, நமது சமுகத்தினிடமாகச் சுரர், தானவர், [illegible]ம்புரு, சித்தர், வித்தியாதரர், இயக்கர், அரக்கர் சார[illegible]பசாசர், கருடகாந்தருவர்; ஆதித்தன், அம்புலி, அ[illegible], புதன், சனி, வியாழம், வாயு, வருணன், யெமன், [illegible]கன், சமதக்கினி, சனற்குமாரன், பிருகு, அ[illegible]தன், [illegible]த்தம்பன்; காசிபன், பாரத்துவாசன், குற்[illegible] முதலிய யாவர்களும் நிறைந்திருக்கிறார்க[illegible] மற் [illegible]விஸ்வாமித்திர, நாரத ரென்ற மூவரும் அம்பை, [illegible]ர்த்தமை, ஊர்வசி, யென்ற நடனமாதரும[illegible] [illegible]கா தெரியவில்லை அன்னவர்களைச் சீக்கிரம் அழை

[illegible].) உத்தரவு மகராஜ்.

[illegible]) மகாராஜ், இதோ யாவரும் வருகின்றார்கள்.



வசிஷ்டர் பகவானைத் தோத்திரஞ்செய்துகொண்டு இந்திரன் சமுகம் வருதல்.

சுத்தப்ரம்ம பாரத்பராம் யென்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி

கண்ணிகள்.

கைலையங்கிரியில்வாழ் நாதா
கங்காதராபார்வதிச மேதா

மயிலவன்றனையேயருள் நீதா
மகேச்சுராபங்கயப் பாதா

கங்கைதிங்களணிபுஞ்ச டையா
காமதகனாவொளிமழுப்ப டையா

கருணையங்கடலேபவ நாசா
காக்ஷியார்ந்திடுமாமது ரேசா

சர்ப்பாபரணமணிமெய்ப் போதா
சம்போகங்கராபிறைக் யாதா

ஆலமுண்டருளுஞ்செவ் வாயா
அகிலமீதிலடியவர்ச காயா

(வசி-வ-ம்) ஆரடா அமரேசனது கொலுமண்டப வாசலினகண் வீற்றிருப்பவன், அமரேசன் சமுகமெப்படி.

(சே-வ-ம்.) ப்ரபூ, அனேக வந்தனம் தங்கள் வரவுங் கெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

(வசி-வம்.) அப்படியா செல்லுகின்றேன்.

தேவேந்திரன் விருத்தம்.

[illegible]மிருநாதாபோற்றி தாமரைப்பாதாபோற்றி
[illegible]ந்தனையொழித்தாய்போற்றி பரமனையனையாய்போற்றி
[illegible]மயர்காமதேனை ரக்ஷித்தநீதாபோற்றி
[illegible]னமெண்டிசையும்போற்றும் புங்கவாபோற்றிபோற்றி.

(தே-வ-ம்.) பவத்தை விலக்குந் தவத்திற்சிறந்த வசிஷ்டமகாரிஷியே வந்தனஞ்செய்கின்றே னிந்திரன்.

(வசி-வ-ம்.) கல்யாண் சுதர்மாதிபதி.

(தே-வ-ம்.) மஹாரிஷியே இவ்வாசனத்தில் வீற்றிருப்பீர்.

(வசி-வ-ம்). இதோ வீற்றிருக்கின்றேன்.

## விஸ்வாமித்திரர் இந்திரன்சமுகம்வருதல்.

பாரமுப்புரி யென்றமெட்டு.

இராகம் - சங்கராபரணம் - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

பூதலத்தவர்  மீதலத்தவர்
புத்தியுற்றவர்  நற்றவத்தவர்
கோதறப்பணி  மாதவத்துயர்
கோசிகமுனி  தோன்றினேன்

சண்டனுங்கறைக்  கண்டனுங்கமழ்
முண்டகத்திலங்  கெதுண்டவன்றிரு
விண்டுவுமருள்  பண்டுறச்செய்த
விஸ்வாமித்திரன்  தோன்றினேன்

(விஸ்-வ-ம்.) ஆடா கொலுமண்டப முகப்பில் நிற்பவன் தேவராஜன் சமுகமெப்படி.

(சே-வ-ம்.) ப்ரபூதங்கள்வரவுக்கெதிர்நோக்கியிருக்கிறார்கள்.

(விஸ்-வ-ம்.) உள்ளே சொல்லலாமல்லவோ.

(சே-வ-ம்.) தடையன்றிப் போகலாம்.

(தே-வ-ம்.) அனேக வந்தனம் விஸ்வாமித்திரமுனிவரே.

(விஸ்-வ-ம்.) கல்யாண் அமரேசா.

(தே-வ-ம்.) முனிவரேற்றே இவ்வாசனத்தில் வீற்றிருப்பீ

(விஸ்-வ-ம்) இதோ வீற்றிருக்கின்றேன்.



## நாரதர் பகவானை ஸ்தோத்திரஞ்செய்து இந்திரன்சமுகம் வருதல்.

ஸ்மரஹரசிவ யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சந்த்ரசேகரா  சதாசிவாகற்
சம்போகைலாச  வாசா-ஆ  (ச)

அனுபல்லவி.

நந்திப்ருங்கிமுனிவர்  போற்றும்
நளினமலர்ப்  பாதா
கந்தனைப்பயின்றதோர்  முக்
கண்ணுவரநாதா  நாதா
கண்ணுவரநாதா  நாதா-ஆ  (ச)

சரணங்கள்.

மங்கைபாகா  வரதாயோகா
மாட்சிசேர்  மதுரேசா
கங்கைதிங்கள்  சென்னியணி
கருணாகரா  வீசா
கருணாகரா  வீசா-ஆ  (ச)

(நார-வ-ம்.) ஆடா சுராதிபன் கொலுமண்டபத்தின் முன் வீற்றிருப்பவன் அபிராணி மணாளன் சமுகமெப்படி.

(சே-வ-ம்.) ப்ரபூதங்கள்வரவுக்கெதிர்பார்த்திருக்கின்றார்.

(தே-வ-ம்) அனேக வந்தனம் நாரதமகாமுனிவரே.

(நார-வ-ம்.) கல்யாண் சுரபதி.

(தே-வ-ம்.) இவ்வாச  தில் வீற்றிருப்பீர்.

(நார-வ-ம்.) இதோ வீற்றிருக்கின்றேன்.





## அரம்பை வருதல்.

ஆசையாகி வந்தேனிங்கு யென்றமெட்டு.

இராகம் - காபி - அடதாளம்.

கண்ணிகள்.

இந்திரன்சபையைநாடிச் சுந்தரமாக
வந்தனளரம்பையிதோ விந்தையதாக. (இ)

கொண்டலைநிகர்குழலாள் கண்டுமொழியாள்
தொண்டையங்கனியிதழாள் செண்டைவிழியாள். (இ)

ஞெண்டுபோன்றமுழந்தாளாள் செண்டுமுலையாள்
எண்டிசையுமிக்கபுகழ் கொண்டகலையாள். (இ)

சொன்னமேனியாள்குயிலாள் அன்னநடையாள்
வன்னமாமயிற்சாயலாள் சின்னவிடையாள். (இ)

(அர-வ-ம்.) அநேகவந்தனஞ் சுரர்கட்கரசே.

(தே-வ-ம்.) கல்[illegible]ண் மாதே இச்சபையோர்கள் யாவருந் திருப்தியடையும்படியாக ஓர் நல்லபதம்பாடி நடிப்பாய்.

(அர-வ-ம்.) ஆக்னை ப்ரபூ.

### அரம்பைநடனத் தரு.

மாதிவளாரோ யென்றமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

பல்லவி.

அண்டர்கள்கோனே ஒண்டொடி நானே
அதிமோகமானே னணைகுவாய் தானே. (அ)

அநுபல்லவி.

செண்டுதனக்கனிதோ ரெண்டுமிக மீறுதே
தெண்டஞ்செய்தேனிடையிற் கொண்டகலைசோருதே (அ)

சரணங்கள்.

கன்னல்வில்மன்மதன் கடுங்கணைதூவி
என்னுயிரா மனங் கலங்கச்செய்கிறன்பார்

பொன்னகர்தனைநிதம் புரந்திடும்நேமா
பூங்கொடியாளயி ராணிசேர்பூமா (அ)

செங்கையிற்பூட்டிய கங்கணநழுவுதே
சீரார்குயில்கூவுதே திகழுன்றில்கேவுதே (அ)

பங்கயசமுகனே இங்கிதச்சமுகனே
பாவையாமெந்தன்மீது பட்சம்வைப்பாயிப்போது (அ)

(தே-வ-ம்.) அரம்பை மாதே மிகவும் சந்தோஷம் மிகவுஞ் சந்தோஷம்.

(தே-வ-ம்.) அடே சேவகா யிந்த அரம்பை மனமகிழும்படி வேண்டிய ஆடையாபரணங்கள் கொடுத்தனுப்புவாய்.

(சே-வ-ம்.) உத்தரவு மகாராஜ்.

(அர-வ-ம்.) ப்ரபூ தங்கள் வருதிபோல் ஆடையாபரணங்கள் யாவும் பெற்றுக் கொண்டேன் அனேகவந்தனம் சென்றுவருகின்றேன்.

(தே-வ-ம்.) கல்யாண்.

## ஊர்வசி வருதல்.

ஓமதனே மையலானே னென்றமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

ஆவலுடனிந்திரன்சபை யதனைநாடியே
மேவினளூர்வசியாளும் வியந்துபாடியே

மேகலாபரணம்பூட்டி விகசிதமாக
தோகைபோலநடைநடந்து துரிதமதாக

அந்தரமின்போன்றவளை யலறியிலங்க
விந்தைசேர்கரத்தில்வீணை வெருவாய்த்துலங்க

பங்கயமாமலரைவென்ற கொங்கையுடையாள்
சங்கதலித்தண்டைநிகர் துங்கத்தொடையாள்



(ஊர்-வ-ம்.) அமரர்கட்கரசே வந்தனஞ் செய்கின்றேன் ஊர்வசி.

(தே-வ-ம்.) கல்யாண் ஊர்வசி ஓர் பதம்பாடி நடனஞ்செய்வாய்.

(ஊர்-வ-ம்.) உத்தரவு ப்ரபூ.

## ஊர்வசி நடனத்தரு.

என்னுடன் நீபேசாதது ஞாயமோ என்றமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

இந்திரபூபனே வெங்கும்ப்ரதாபனே
இன்பமுடன்வருவாய் அன்பாய்முத்தந்தருவாய் (இ)

அங்கசதீரன் ஐங்கணைதூவி
இங்கென்மேலெய்குறன் என்செய்வேன்பாவி (இ)

அங்கமுமுருகுதே அணிமணிகருகுதே
கொங்கைகள்பீறுதே கோதுகுழல்சோறுதே (இ)

தென்றலுங்க...தே தேமாங்குயிற்கூவுதே
மன்றல்சேரணைமீது மருவத்தியிப்போது (இ)

(தே-வ-ம்.) ஆ ஊர்வசி உனது ஆடல்பாடல்களினல் சொல்லொண்ணு வானந்தமுற்றேன்.

(தே-வ-ம்.) அடே சேவகா ஊர்வசி மனமகிழும்படி வேண்டியவை யளிப்பாய்.

(சே-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

(ஊர்-வ-ம்.) அயிராணிநாதா அனேக வந்தனஞ் செய்கின்றேன் ஊர்வசிசென்று வருகின்றேன்.

(தே-வ-ம்.) கல்யாண்.

## மேனகை வருதல்.

நேரஞ்சென்றுவந்தாயென என்றமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

தேவராஜன்சமுகம் நாடிச்சிந்தையாகவே
மேவினான்மேனகையாளும் வேகமாகவே (தே)

வண்டுகெண்டைநேர்விழியாள் கண்டுமொழியாள்
செண்டுமுலையாள்ப்ரபை கொண்டகலையாள் (தே)

அன்னம்போன்றநடையுடையாள் பின்னற்சடையாள்
கன்னிவாழைத்தொடையாள்வானின் மின்னலிடையாள் (தே)

பாதகிண்கிணிகள்ரெண்டும் பண்பாய்க்கலங்க
கோதிலாதமணிகளின் நற் குணங்கள்துலங்க (தே)

(மேன-வ-ம்.) அபிராணிகேள்வா வந்தனஞ் செய்கின்றேன் மேனகை.

(தே-வ-ம்.) கல்யாண் மேனகா யாவரும் மகிழும்படி ஓர் திவ்யபதம் பாடி நடிப்பாய்.

(மேன-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

### மேனகை நடனத்தரு.

பஹாரிமோரிப்யாரீ ஆயிநஹிமேபகார் யென்றமெட்டு.

இராகம் - இக்துஸ்தான் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

இன்பமாயெனைச் சேர்வாயிந்த்ரபூமனேநீர்தான் (இ

அநுபல்லவி.

தென்புலனிருந்தே தென்றலும்விரைந்தே
அன்புடனேவீசுதே ஆ ஆ (இ

அங்கமுமுருகுதே அணிமுத்தந்தருகுதே
மங்களமாயணைமேல் ஆ ஆ (இ)



வண்டிசைபாடுதே வனோகமுன்றேடுதே
அண்டர்தொழும்பாதனே ஆ ஆ (இ)

வச்சிராயுதனே மங்கையர்க்கிதனே
இச்சைமென்மேலாகுதே ஆ ஆ (இ)

(தே-வ-ம்) அடிமேனகா உனது ஆடல்பாடல்களினால் மிக ஆனந்தங்கொண்டேன் உனக்கென்ன அபேட்சையோ அதைச் சேவகனிடத்திற் பெற்றுச்செல்லுவாய்.

(மேன-வ-ம்.) உத்தரவு ப்ரபூ.

(தே-வ-ம்.) அடே சேவகா மேனகை விரும்பிய தெதுவோ த் தடையன்றி கொடுத்தனுப்புவாயாக.

-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

## லார்த்தமை வருதல்.

பந்தன்றானை யென்றமெட்டு.

ஸ் - தாளம் - சாப்பு.

ண்ணிகள்.

வாருடனடி
மகிழ்வுடனேடி
செம்பொற்கொங்கையாள்
ரமுருசெங்கையாள்
கெண்டைநோக்கினள்
கோதில்வாக்கினு
துங்கவினை
ரங்கட

(திலோ-வ-ம்.) ஆக்ஞை ப்ரபு.

---

## திலோர்த்தமை நடனத்தரு.

மருவிச்சுகங்கொடடா வென்றமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

வாராய்என்னைபாராய்முத்தந்தாராய்ஆசைதீராய் சாமி (வா)
தீரா சூர வீரா மாகெம்பீரா எழில்மாரா கிட்ட (அ
நாதா மலர்ப்பாதா பிரைக் யாதா இன்னம்வாதா சாமி
சாமி உயர் நேமி யிந்தப் பூமி மீதோ காமி கிட்ட

---

(தே-வ-ம்.) ஆ பெண்ணே திலோர்த்தமை இ
வர்களுடைய மனதையும் என் மனதையும் மிக
யாகச் செய்த வுனது ஆடல்பாடல்களுக்
னேன் ஆகையால் உனக்கு வேண்டிய
பெற்றுக்கொண்டு செல்வாயாக.

(திலோ-வ-ம்.) ஆக்ஞைபோ
பூஅனேக வந்தனம்.

(தே-வ-ம்.) கல்யாண்.

தேவேந்திரன் சன
யாவரையும் பார்த்



இராஜரீகஞ்செய்கின்ற அரசர்களில் தாம் ஆளுகிற நாடுநகரங்களி லே பாவங்களுண்டாதற்கும் விரைந்துபற்றுகின்ற துன்பத்திற்கும் இடங்கொடுக்காமல் சத்தியத்துக்கும் நல்லசாஸ்திரவிசாரணைக்கும் அந்தவிசாரணை மனத்திலே பொருந்தின நன்மைக்கும் மிகுந்த யோக்கியர்களெவரோ அவர்களை நீங்கள் தெரிந்து இன்னாரென விரைவிலெனக் கெடுத்துரைக்க விரும்புகிறேன்.

---

### வசிட்டர் விருத்தம்.

முன்னால்.

பாருக்கொருவன் பாதாரசகோதரன்வெம்
போருக்கொருவன் புகழுக்குமறைப்பொருட்கு
நேருக்கும்விடாமனு நூனெறிக்கும்பொறைக்கு
மாருக்குமிக்கா னரிச்சந்திரவாண்டகையே.

---

(வசி-வ-ம்.) அமரேசா கவனிக்கவேண்டும் பிரபஞ்சத்தினிட மாகத் தனக்கொருவரும் நிகரில்லாதவனும் அன்னியர்மனைவிக ளுக்குச் சகோதரனானவனும் வெவ்விதான சண்டைசெய்கிறதில் எதிரில்லாதவனும் கீர்த்திக்கும் வேதாந்தவுணர்வுக்கும் அதினரு த்தப்படியே நடக்கிற ஒப்புக்கும் மோக்ஷமார்க்கத்தையளிக்க வல் ல மனுதர்மசாஸ்திரமார்க்கத்துக்கும் பொறுமைக்கும் சத்தியத் துக்கும் எப்படிப்பட்ட யோக்கியர்களிலுஞ் சிறந்தவன் கோசலை நாட்டுக்கரசனாகிய அரிச்சந்திரனொருவனே தவிர மற்றொருவரை அன்னவனுக்கு நிகராகச் சொல்லமுடியாது.

### விஸ்வாமித்திரர் வசிட்டரைநோக்கிச்சொல் விருத்தம்.

முன்னால்.

வெய்யன்பதகன்பாதாரவிருப்பன்வீணன்
பொய்யனிறையும்பொறையுஞ்சிறிதுமில்புல்லன்
கையன்கபடன்கயவன்றனைநல்லனென்றிவ்
வையன்றிருமுன்னுரைத்தாயீதனியாயமன்றோ.

---

(விஸ்-வ-ம்.) ஓ வசிட்டரோ உலகத்தின்கண் பொல்லாதவனு ம் பாதகனும் பாதாரயிச்சையுள்ளவனும் பயன்படாதவனும் மவ





வொடுக்கமும் பொறுமையும் கொஞ்சமேனுமில்லாத அற்பனும் வஞ்சகனும் கபடனுமான அந்த அரிச்சந்திரனை அமரேசனிடமாக மிகவு நல்லவன் சத்தியமுடையவனென்று சொன்னீரே யாது பயனைக்கருதி உமக்கே யழகாயிருக்கிறதா.

(வசி-வ-ம்.) அடா சண்டாளா யென்னவார்த்தைபகர்ந்தனை.

## வசிட்டருக்கும் விஸ்வாமித்திருக்கும் தர்க்கம்.

மகனே மகனே யென்றமெட்டு.

இராகம் - மோகனம் - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

வசிட்டர் சொல்.

மெய்யனைப் பொய்யனென் றையகோ-நீயிந்த
ஐயன்முன்சொல்லுவ தேதடா-உந்தன்
செய்யதவத்துக்கே தீதடா-அந்த
வையகமீதரிச்சந்திரனை யன்றியே
மெய்யுடையோரெவ ரோதடா.

விஸ்வாமித்திரர் சொல்.

பிரமரிஷிப்பெயர் பெற்றவசிஷ்டரே
கிரமமாய்ப்பேசாத தேனடா-சற்று
மரியாதைக்கே பொருத் தேனடா-அடா
பெருமையுந் தருமமுமுடையவ னென்றக்கால்
பிழையாகவே யுரைப் பேனடா.

வசிட்டர் சொல்.

பொருமையுந் தருமமு மற்றவனவனென்று
பொய்யானவார்த்தைகள் பேசுறாய்-மனம்
நையும்படியாக வேசுறாய்-கோ
தருமந்தவங்கல்வி சற்குணமுடையவர்
தரணியிலுண்டோடா கோசிகா.

விஸ்வாமித்திரர் சொல்.

வெய்யன்திருடன்வஞ்சன் வீணன்கபடன்-கொலை
செய்தற்கஞ்சாததோர் லோபியை-மகா
பொய்யனெவர்க்கும் பச்சைநாவியை-ஆகா
துய்யனெனவேதான் சொன்னநாவிற்புழுத்
துன்றுமடாகொடும் பாவியே.

வசிஷ்டர் சொல்.

செங்கோல்தவராது ரோயோத்தியை
மங்களமாயாளு மன்னனை-என்றும
சங்கையில்சாஸ்த்ர விற்பன்னனை-ஐயோ
பங்கமாய்க்கூறிடும் பாதகாவுன்வாயிற்
பற்றுதோடாதியு மிங்ஙனே.

விஸ்வாமித்திரர் சொல்.

தாசிக்குப்பிறந்ததோர் தோசியானதிருலே
சாற்றிறுயிம்மொழி மூர்க்கனே-வெகு
சிற்றமதாகத் துன்மார்க்கனே-ஒகோ
வேசைகளைத்தின மேவிடும்பயலென்று
விளங்காதோமதிகெட்ட தீர்க்கனே.

இந்திரன் வசனம்.

ஆ! ஆ! ஆ! முனிவர்களே தேவர்களே இஃதென்ன ஆச்சரியம்;ஒருவிதமான விவகாரமின்றி யான்கேட்ட கேள்வியி லிவ்விருவர்களுக்குஞ் சண்டைநேரிட்டுவிட்டது ஆகா, இவர்கள் கோபத்தினால் சுவர்க்க மத்திய பாதாளமென்ற மூன்றுலகமும் யென்னபாடுபடுகின்றது ஆ ஆ சீக்கிரத்திலிவ் விருவர்களுடைய கோபத்தையும் சமாதானஞ்செய்வோம் வாருங்கள்.

இந்திரன்சொல் தரு.

சாசஞ்செய்யவா யென்ற வர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

வாதுசெய்யாதீர் நீங்கள்
வாதுசெய்யா தீர் (வா)



அநுபல்லவி.

வாதுசெய்யாதீர் முனிகாள்
வாதுசெய்யா தீர் (வா)

சரணங்கள்.

அண்டமெல்லாம்நடுங்க யெண்டிசையானையொடுங்க
கொண்டல்போலச்சத்தமிட்டே கொடுஞ்சினமாக இங்கு (வா)

அன்னவனுடவெண்ணைத் தன்னையுணாதிவ்வண்ணம்
சன்னையிடுதலழகோ சாற்றுவீரென்முன் நீங்கள் (வா)

சோதனைசெய்தாலது தோன்றுதவன்குணமது
ஆதலாலொருவர்க்கொருவர் பேதகமாக என்முன் (வா)

(தே-வ-ம்.) ஏ முனிவர்களே, நீங்கள் கோசலைநாட்டுக் காசனாகிய அரிச்சந்திரனது குணநிசயங்களைச்சோதித்தறியாமல் அண்டங்களெல்லாம் நடுங்கவும் அஷ்டகெஜங்கள் பீதியடையவும் கொடுங்கோபங்கொண்டு வாதுசெய்து கொள்வது தகுதியல்ல ஆகையால் கோபத்தை விடுத்து யான் கூறுவதைச் சற்று கவனியுங்கள் அதாவது அந்த அரிச்சந்திரனிடத்தில் உண்டான குணமுதலியவற்றைப் பரிசோதிக்கும்விஷயத்தில் நீங்கள் சொல்லுகிறகுணத்திலே ஒருவர் பக்ஷந் தோல்வையானால் தோற்றவர்கள் தாழ்ந்து செய்யத்தக்க சபதமென்ன சொல்லுங்கள் சீக்கிரத்தில்.

வசிஷ்டர் விருத்தம்.

வேந்தனேயிந்தவிஸ்வா மித்திரனயோத்தியாளு
மேந்தல்தன்னிடத்திற்குற்ற மெள்ளளவேனுங்கண்டாற்
சாந்தமாச்செய்தவெந்தன் றவமிழந்துதலையோட்டி
லேந்தியேமதுவைத்தென்பா லேகுவன்தனித்துத்தானே.

(வசி-வ-ம்.) அமரேசா இந்தவிஸ்வாமித்திரன் அந்த அயோத்தியாபுரிக்காசனை யெனது சிஷன் அரிச்சந்திரனிடத்தில் எள்ளளவாவது யான் சொல்லுவதற்குத் தவறுண்டாகக் குற்றத்தைக் காட்டும்பக்ஷத்தில் அந்தச்சமயமே யெனது தவமெல்லாமிழந்து தலையோட்டிலே மதுவையேந்திக் கொண்டு எமலோகத்துக்குத் தனித்துப் போகக்கடவேன் இது சத்தியம்.

நாரதர் வசனம்.

ஓ விஸ்வாமித்திரரே வசிஷ்டர்கூறிய சபதத்தைக் கவனித்திரா அந்த அரிச்சந்திரனுடைய மனமானது தாம் சொல்லுவதற்கு வேறாகும்பக்ஷத்தில் இப்படிப்பட்ட சபதத்தைச் சொல்லுவாரோ சொல்லார் ஆகையால் உம்முடைய சபதத்தை இந்த அமரேசன்முன்னிலையில் விபரமாகக் கூறுவீராக.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தேவர்கட்கதிபகேள்யான் றிரமாயயோத்தியாளுங்
காவலன்மீதுகுற்றங் காட்டிலனுகியோர்க்கு
மூவர்கள்நிகர்க்குமிந்த முனிசெயித்திடுவானுல்
ஆவலாய்ச்செய்தவத்தி லன்புடன்பாதியீவேன்.

(விஸ்-வ-ம்) அமரேசா அயோத்தியாபுரிக் கரசனான அந்த அரிச்சந்திரனிடத்தில் யான் கிஞ்சிற்றேனும் தவரானவிஷயத்தை ரூபிக்காது இந்த வசிஷ்டர் ஜெயிக்கும்பக்ஷத்தில் நான்செய்த தவத்திற் பாதிகுறையாமற் கொடுக்கிறேனிதுவே சத்தியம்.

(நார-வ-ம்.) ஓ விஸ்வாமித்திரரே இதுவேபோதும் இங்கு நடந்தசங்கதிகளை என்வழக்கப்படி அந்தஅரிச்சந்திரனிடம்போய்ச் சொல்லிவிடாதபடி என்னை யிந்தத்தேவர்கள் காவலுக்குள் வைத்துவிடு வீராக.

(விஸ்-வ-ம்.) ஆ தேவர்களே இந்த நாரதரை எனதுசபதம் நிறைவேறும் வரையில் எங்குஞ் செல்லாதவண்ணம் உங்கள்காவலுக்குள் வைத்திருப்பீர்களாக.

தேவர்கள் வசனம்.

நல்லது முனிவரே யவ்விதமேவைத்திருக்கின்றோம்.

(விஸ்-வ-ம்.) அமரேசா சென்று வருகின்றேன்.

(தே-வ-ம்.) நல்லதுமுனிவரே சென்றுவருவீர்.

(தே-வ-ம்.) ஓ முனிவர்களே அனேகவந்தனம் தங்கள் தங்கள் எதாஸ்தானஞ் செல்லுங்கள்.

(தே-வ-ம்.) நாரதரே இங்குவாரும் வெங்குஞ்செல்லாம லிவ்விடத்திலே வீற்றிரும் நாங்களும் உமக்குக் காவலாகச் சமீபத்தில் வீற்றிருக்கிறோம்.

(நார-வ-ம்.) நல்லது தேவர்காளிதோ வீற்றிருக்கிறேன்.

இந்திரகாண்டம் சம்பூரணம்.

உ

பரமபதி துணை.

# அயோத்தியாகாண்டம்.

விநாயகர்துதி-வெண்பா.

கார்போற் கொடைக்கரத்தான் காமருயர் சூர்குலத்தான்
தார்புனையு மார்பனரிச் சந்திரன்றன்—சீர்சரிதை
அம்புவியில் நாடகமா யன்புடனே கூறுதற்குத்
தும்பிமுகன் றாளே துணை.

இராகம் - நாட்டை - தாளம் - சாப்பு.

பல்லவி.

பாசாங்கு சதரா
பணிபூஷணமதை யணியுமரர்சுதா
குணநிதியேகுக துணைவபொற்பாதா (பா)

அநுபல்லவி.

தேசயருமருவே மாசிலாதகுருவே
ஜெகமேபுகழுங்கற் பகமேயோங்குசிற்
சுகமேயன்பர்க ளகமேவாழ்ந்திடும் (பா)

சரணங்கள்.

ஆறுமுகவன்முன்னம் மாறுமுகமாய்வந்த
வைந்துகர தலத்தோனே
கார்நேர்கரிமுகனே கல்யாணசுந்தரன்பாக்
கனிவாயேற்கும் நலத்தோனே
வாரிசூழ்ந்திடுமிந்தப் பாரினுனைப்பணியு
மைந்தனென் வினை சிந்தையாகவே
யிந்தவேளையு சந்துதீர்த்தருள். (பா)

## கட்டியன் வருகிறபாகம்

கட்டியகாரன் வருகிற விருத்தம்.

அட்டமாதிசையில்வீற்றே யரசுசெய்வேந்தரியாரும்
திட்டமாய்ப்பகுதிகட்டுந் திறலரிச்சந்த்ரமன்னன்

மட்டிலாப்புகழ்சேர்வாசல் வன்மையாக்காவலோச்சுங்
கட்டியக்காரனீதோ கண்யமாய்த்தோன்றினேனே.

## கட்டியன் சொல் நோட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

கட்டியமிகு திட்டமாயுறை கட்டியக்காரன்வந்தனன்
அட்டதிசையுறை துட்டர்சிரமதை
வெட்டுமரிச்சந்த்ரர் மட்டிலாதஜெயக் (கட்டி)

உல்லாசமாகச் சல்லடந்தனை நல்லிடைதனிற் பூட்டியே
வல்லவரென்றெதிர் சொல்லுவர்தங்களைப்
பல்லையுடைத்திடும் நல்லபிரம்புடன் (கட்டி)

ஆதியாகிய சோதியின்பதங் காதலாயென்றும்போற்றியே
மாதிறத்துடனே நீநிலயோத்தியை
நீதியுடனேயாள் கோதிலாதமன்னன் (கட்டி)

## கட்டியன் சபைவணக்கம் தரு.

சபையோர்க்கெந்தன் வந்தனமென்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-சாப்பு.

பல்லவி.

மைந்தனிதோவந்தனம் மனமகிழ்ந்து தந்தனன்

அநுபல்லவி.

கந்தன்றனக்கும் கணநாதனுக்கும்
கங்கையணி தற்பரனுக்கும்
செந்திரு மணாளனுக்கும்
சிந்தையாய்க் கைகூப்பியே (மைந்)

சரணங்கள்

சபையிலுள்ளோர்க்கும் தந்தைதாயர்க்கும்
தாழ்விலாத்தவத் தவருக்கும்
அபயமெனவே வுபயகரங்கள்
அன்புடனுன் கூப்பியே (மைந்)



கற்றவருக்கும் மற்றவருக்கும்
கல்யாண சுந்தரனுக்கும்
இற்றையத் தினமதனில்
இரண்டு கரமுங் கூப்பியே. (மைந்)

(கட்-வ-ம்.) நான்குவேதம், ஆறுசாஸ்திரம், பதினெண்புராணம், இருபத்தெட்டாகமம், முப்பத்திரண்டு தர்மம், அறுபத்துநான்கு கலைஞானம், தொண்ணூற்றாறு தத்துவம், மனுநீதிமுதலிய சகல சாஸ்திரங்களையுமுணர்ந்து இவ்விடமாக வீற்றிருக்கும் கற்றவர், நற்றவர், கொற்றவர், மற்றவரியாவர்கட்கும் கட்டியன் வந்தனம் திட்டமாய்த் தந்தனன்.

## பரதாசாரியனுக்குங் கட்டியனுக்குந் தர்க்க வசனம்.

முன்னால்.

(கட்டி-வ-ம்.) ஸத்து ஸத்து அரோபியா அஜாத் நீங்கள் யார்வோய்நம்முடைய மகாராஜ ராஜபூஜித அரிச்சந்திரச் சக்கரவர்த்தினுடைய அரண்மனைவாசலிலே ஆட்டமென்னபாட்டமென்ன நாட்டமென்ன கூட்டமென்ன கடபிடாவென்ன லொடபிடாவென்ன எள்ளளவாவது அச்சமில்லாமல் மாரிகாலத்திலே மதிச்சுப்போன தவளைகளைப்போலத் தலைதெரிக்கக் கத்துரீங்கோ அச்சாகுப்பாகோ நீங்கள் யார்வோய்.

(பர-வ-ம்.) நாங்களெல்லோரும் உம்முடைய புத்திரசிகாமணியினுடைய விவாகமுகூர்த்தத்துக்கு ஆடிப்பாடித் தேடியோடி நாடிவந்த வித்வாம்சான்வோய்.

(கட்-வ-ம்.) நீங்களெத்தனைபேர் வந்தீங்கவோய்.

(பர-வ-ம்.) இந்தச் சபையில் வந்திருக்கிறவர்களெல்லோரும் எங்களைச் சேர்ந்தபேர்கள் தான்வோய்.

(கட்-வ-ம்.) அடேயப்பா இத்தனைபேருக்கு எங்கேயிருந்து சாப்பாடுபண்ணுவீங்கோ அதோலோய் நீங்கள் வருகிறவழியிலே காடு, செடி, கல், கறடு, பள்ளம், படுகுழி, காடி, புலி, பாம்பு, தேள், பூரான், நட்டுவக்காலி இதுகளிலே யொன்றுமில்லையா.

(பர-வ-ம்.) என்டாப்பா இவ்வளவுகடுமையாக் கேட்குறாய்,

(கட்-வ-ம்.) உங்களத்தனை பேருக்கும் வைகுந்தத்துக்கு வழி காட்டத்தான்வோய்.

(பர-வ-ம்.) எங்களையேண்டாப்பா அப்படிச்சொல்கிருய்.

(கட்-வ-ம்.) ஏவோய் இல்லாவிட்டால் உங்களப்பன் பாட்டன் பூட்டன் ஏதாவது பணஞ்சேர்த்து வட்டிக்கிப்போட்டிருக்குராங்களோ.

(பர-வ-ம்.) அரண்மனைச் சொத்தெல்லாம் தங்கள் பாட்டி கொட்டை நூற்றதோ.

(கட்-வ-ம்.) அடேவோய் நீங்கள் வருகிறவழியிலே ஆறுகுளங்களுண்டா.

(பர-வ-ம்.) ஆம் ஓய் முடிகொண்டான் குடமுட்டி காவேரி, தாம்பிரபரணி, கிஷ்ணுநதி, கொல்லடம், வைகைநதி, பாலாறு இவைகளிருக்கிறது.

(கட்-வ-ம்.) இந்த ஆறுகளிலே தண்ணீரெவ்வளவிருக்கிறது வோய்.

(பர-வ-ம்.) ஒவ்வொரு நதிகளிலும் தொடையளவு, இடுப்பளவு மாரளவு, கழுத்தளவு, வாயளவு இருக்கிறதுவோய்.

(கட்-வ-ம்.) ஏவோய் உங்களுக்கு இன்னும் நாலுவிரற்கடை தண்ணீர் பஞ்சமாவா போச்சு.

(பர-வ-ம்.) ஏண்டாப்பா இவ்வளவு பரிதாபப்படுகிருய்.

(கட்-வ-ம்.) உங்களை யப்படித்தானே யடித்துக்கொண்டு போகாமற் போச்சேயென்ற துக்கந்தான்வோய்.

(பர-வ-ம்.) அடேயப்பா நாங்கள்வேண்டுமானுற் சொல்லாமற் பிறப்பட்டுப் போய்விடுகிறோம் நீயேனிவ்வளவு பரிதாபப்படுகிறுய்.

(கட்-வ-ம்.) அரேபியா பஞ்சகாலத்திலே ஒருத்தர் வீட்டுக்கொருத்தர் வந்தால் பரிதாபமாயிருக்காதா ஒருத்தரா இரண்டு பேரா நாங்குகிறதற்கு இந்தப் பக்கத்திலே யிருக்கிறவர்களெல்லாம் யார்வோய்.

(பர-வ-ம்.) அவர்களும் வித்வாம்சாள் தான்வோய்.



(கட்-வ-ம்.) ஆ! ஆ! ஆ! வித்துவாங்கின மச்சங்களா எத்தனை கருவாடாகும் ஓய்.

(பர-வ-ம்.) என்னடா தட்டுக்கெட்ட குட்டியச்சவரே சாத்திரம் பொய்யானுலும் சாதிபொய்யாது நீயார் கையோரத்து வப்பைக்கூட்டமா.

(கட்-வ-ம்.) அரேபாபு மாருலமுதோடி. பீகேபிகாவலசி உண்டாதி மீரெவருவோய்.

(பர-வ-ம்.) மேமு பாகவதுலைமண்டி.

(கட்-வ-ம்.) ஆ! ஆ! ஆ! ரூபாய்க்கி எத்தனைபடி விக்கிறீங்கோ பாவக்காய் வத்தல் மாதிரியெங்கே காட்டுவோய் பார்ப்போம்.

(பர-வ-ம்.) அடா தன்மதங்கொண்ட தடிப்பயலே என்னடா வர்த்தகஞ்செய்யப் புறப்பட்டு விட்டாய் பாவக்காய் வத்தல் கேட்குறுய்.

(கட்-வ-ம்.) அரேதாத்ரேரி மாவுலவெல்லாம் அரேபாய் கைதோதுமகியாபோலே.

(பர-வ-ம்.) என்னடா தட்டுக்கெட்ட பயலே காலமாறுகப் போகின்றாய் நாங்கள் சங்கீத சாஸ்திரம் பாத காட்டியங்கற்ற வித்வாம்சாளடா.

(கட்-வ-ம்.) ஏவோய் இவ்வளவு சொற்பக்காரியத்துக்கு வாயில்வந்தபடி உளருவானேன் நாங்கள் அரிச்சந்திர மஹாராஜாவீட்டத்திலே ஆடிப்பாடி த்யாகம் வாங்கிக் கொண்டுபோக வந்தோமென்று சொல்லுகிறது தானே நல்லது உங்களுக்குத்தெரிந்த வித்வத்தென்னவோய் நம்முடைய அரண்மனையிலிருக்கிற வித்வாம்சாளைப்போல பாடுவீர்களா, என்னென்ன இராகம் தெரியும் ஓய்.

(பர-வ-ம்.) நாட்டை, நாட்டைக் குறிஞ்சி, நவரோசு, ஜயவந்தி, செஞ்சுருட்டி, குறிஞ்சி, நாதநாமக்கிரியை, சங்கராபரணம், கல்யாணி, கமாசு, காபி, கேதாரம், அடாணு, காம்போதி, எதுகுலகாம்போதி, மோகனம், முகாரி, மத்தியமாவதி, தன்யாசி, கும்பகாம்போதி, அரிகாம்போதி, ரீதிகௌளை, பூபாளம், சஹானு, ஆனந்தபைரவி, தோடி, சுருட்டி, செஞ்சுருட்டி, யூரிகல்யாணி, அமீர்கல்யாணி, இக்தாஸ்தான், தனாசரி முதலிய முப்பத்திரண்டு ராகமும் பாடத்தெரியுமோய்.

(கட்-வ-ம்.) அரேவோய்நம்பளது இப்படியிருக்காதுவோய் ரொம்பக் கப்மாத்தா விருக்கும் ஓய்.

(பர-வ-ம்.) ஏவோய் நீரென்ன ராகங்கேட்டாலும் பாடுவோம்.

(கட்-வ-ம்.) அப்படியானல் சாக்கடைராகம், நாகரிராகம், குண்டுசெட்டிராகம் இதுகளெல்லாம் பாடுவோய்பார்ப்போம்.

(பர-வ-ம்.) இதுகளெல்லாம் எங்கேவோய் பாடம் பண்ணினீர்.

(கட்-வ-ம்.) அரேவோய். அந்த மகாவித்துவானுடைய பேர் பிரசண்டமாருதக் கவிச்சிங்க நாவலர்களைக் கண்டாலோட்டம்பிடிப்பவர் ஓய்.

(பர-வ-ம்.) சபாசு உம்முடைய வித்வத்துக்கு எங்களுடைய வித்வம் சட்லை மகாராஜாவுடைய சமுகத்துக்கு எங்களை யழைத்துக்கொண்டுபோய் பேட்டிசெய்துவையுமோய்.

(கட்-வ-ம்.) ஏவோய் இங்கேதானே யிருங்கள் மகாராஜா கொலுவுக்கு வரக்கூடிய சமயம் ஆனது.

(கட்-வ-ம்.) நல்லதப்பா.

(கட்-வ-ம்.) மஹாராஜ ராஜபூஜித ராஜகோலாகல ராஜகம்பீர ராஜப்ரபுமுக ராஜமார்த்தண்ட கதிர்குலதிலகராகிய அரிசசந்திரச் சக்கரவர்த்தியானவர் கொலுவுக்குவருகிறார் எச்சரிக்கைப் பராக்கு.

---

## கட்டியன்வாழ்த்துதல்தரு.

இராஜாதிராஜர் பணியென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்

மூஷிகவாகனத்தான்யானை முகவன்றன்வாழ்க
தேசார்தென்குழந்தைநகர் செவ்வேள்தினம்வாழ்க.

சுந்தரமேமிகுந்தவுடல் சுந்தரேசர்வாழ்க
சந்ததமீனம்பிகையாள் தளிர்ப்பாதம்வாழ்க.



கார்நேர்வடிவுடையான் ஐங்கருணைபிரான்வாழ்க
சீரார்வனசத்திலுறை செந்திருப்பெண்வாழ்க.

வையகம்புகழுடையான்மகாமாட்சிமைசேர்குடையான்
மெய்யரிச்சந்திரன்காதை மேதினியில்வாழ்க.

நன்னயமேமிலங்குமிந்த நாடகத்தைமகிழ்ந்து
சொன்னவெங்கள்கவியாளை சுந்தரமால்வாழ்க.

அச்சமில்லாமைநச்சான் அகிலந்தனிலார்க்குமச்சான்
வெங்கடசர்மாவென்னும் நிதியுயர்ந்துவாழ்க.

தன்கமலமுகத்தான் கோபால்சாமியய்யங்கார்வாழ்க
சண்முகசுந்தரபூமன் சந்ததமும்வாழ்க.

வேலைசூழ்ஞாலமதில்வாழும் வித்வஜனர்புகழும்
வேலாயுதக்கோனென்னும் மேன்மையதாய்வாழ்க.

நீக்கமிகுகுணத்தான் குருநாதன்சேர்வைவாழ்க
மூக்கையவேள்ராமச் சந்திரன்முருகக்கோன்வாழ்க.

அருள்நிறைமனத்தான் இருளப்பக்கோனார்வாழ்க
குருபரனைத்துதிக்கும் குப்புச்சாமிவாழ்க.

ராஜப்பாட்டுக்கிவனேஉயர் ராஜனெனவுதித்த
மாசிலாச்சுந்தரராஜ மகிபனும்வாழ்க.

ஏராருஞ்சந்த்ரவதிவேஷ மின்பமுடன்பூணும்
வீராச்சாமிநாயுடென்று மேன்மையதாய்வாழ்க.

செஞ்சொல்மிகவுள்ளான் குருசெப்பும்வசனந்தள்ளான்
இஞ்சினமுகிரிசாமி கீர்த்தியதாய்வாழ்க.

இன்பவயோத்திநகராண்ட வேந்தன்காதையிதனை
அன்புடன்படிப்போர்கேட்போர் அனுதினம்வாழ்க.

அருமையாயிதையெழிலச் சிறப்பதிப்பித்த
குருசாமிக்கோன்மகாலிங்கக் கோனுமிகவாழ்க.

---





உ

பரமபதிதுணை,

# அரிச்சந்திரன் சபை.

ஆசிரிய விருத்தம்.

சீர்மேவு திருமா நிலத்துகோ சலநாடு
செங்கோல் செலுத்தி டிகிபன்
தினமுமின மணிதன்னில் முடியாசர் கப்பந்
செலுத்தி பதிர் போற்றுநிரன்
தார்மேவு திடபுய சொன்னமொழி தவறிடான்
சதுர்வேத பாராயணன்
தக்கதொரு சக்ரவர்த்தி பெரும்புறச்
சலதியதா தாபரியான்
பார்மேவு குடிகளி மாதிலொரு கடமைபெரு
பண்பின் விர்த்திக்கான்
பரிநிருக்ஸ் முற்றவ் திருத்தொடுபுத்திரன்
பத்துலைர் ர்த்து கனிரான்
ஏர்மேவு வந்தனை ளாசிபல பாலிக்க
வெழிலுத்தாதகா ராட
இன்பமா யரிச்சந்திர மஹாராஜ அங்கனை
யிதோ கொலுவிருக்க வந்தேன்.

அரிச்சந்திரன் சொல் தரு

இன்னமுங்காலையே மைபக்ரீமுடுதென்றமெட்டு,

இராக-கல்யாணி-தாளம்-ஆதி

பல்லவி.

இராஜராஜர்கள் பணிந்திடும் ராஜ அரிச்சந்திரன் வந்தேனிதோ (ரா)

அநுபல்லவி.

காசினியோர் கோன், ஈசனிஸ்வாசன்
மாகிலமுடையான் மாநிலமுடையான்
திக்கட்டுடையான் பூமியுடையான் உன்னதமுடையான் (ரா)

சரணங்கள்.

தீரவீரசூரன் சீருயர்கெம்பீரன் — செங்கரவில்லுடையான்
செங்கரவில்லுடையான் — திடப்படையான்
செழுங்கொடையான் — மின்னுடையான் (ரா)

மும்மதக்கரியான் செம்மைசேர்பரியான் — மூதறிவுள்ளபோசன்
மூதறிவுள்ளபோசன் — பகைவர்நாசன்
வசிட்டர்சீசன் — மந்தகாசன் (ரா)

மங்கையராடிடவாணர்கள்பாடிட — மாமுரசமுழங்க
மாமுரசமுழங்கக் — கேளார்கலங்க
மாலையிலங்க — நலங்கொள் (ரா)

விந்தையாயித்தின மிந்தச்சிம்மாசனம் — சிந்தையாயானிருக்க
சிந்தையாய்நானிருக்க — யாருந்துதிக்க
மந்த்ரிகதிக்க — மதிக்க (ரா)

---

## அரிச்சந்திரன்செல் தரு.

வாடிவாடி மாதரசேயென் வர்ணமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சீரார்கதிர்குல — கெம்பீரன்
நிரைகடலுலகினுக் — குபகாரன்
தீரன் திடமுள — வீரனதிகவுதாரன்
வேந்தர்கள் — மன் மன் மன் (சீ)

அரனடி தனைமறவா — நேசன்
அழகாரயோத்தி — நகர்வாசன்
அந்தமாகவே — விந்தை மாமதத்
தந்தியூரிதத் — தான் தான் தான் (சீ)

வடவரைதனைநிகர் — புயமுடையான்
வாகுயர்பூச்சக்ரக் — குடையான்
மதியான்நலமிகு — நதியான்சரயு மா
நதியான்தேசுயர் — மால் மால் மால் (சீ)

தேரார்போரினிற் — பின்னடையான்
திருமறைமுறைவழி — நன்னடையான்



சீர்த்தியான் — மனப்பூர்த்தியான்
செங்கோல்சேர்த்தியான் — பெல வேள் வேள் வேள் (சீ)

ஜெயமுறுதாரனரி — யகளங்கன்
திகழரிச்சந்த்ர — னெனுந்துங்கன்
சிந்தைதேர்மதி — மந்திரிகளுடன்
வந்தனன்கொலு — நேர் நேர் நேர் (சீ)

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

பஹாரிமோரிபியாரே யென்ற-மெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வந்தேனரிச்சந்த்ரன் — மண்புவியோர்கட்கிந்த்ரன்

அநுபல்லவி.

மந்திரிகள்நாட — வாணர்கள்பாட
சுந்தர — மாதராட அ-ஆ.(வ)

சரணம்.

மாற்றலர்தாழ — வந்தியர்சூழ
நாற்றிசையோரும் — வாழ அ-ஆ.(வ)

திங்களங்குடையான் — சீர்த்திசேர்படையான்
துங்கமிகு — கொடையான் அ-ஆ.(வ)

திடமிகுகரியான் — ஜெகத்தாருபரியான்
கடமிடுபரி — யான் அ-ஆ.(வ)

அளவிலாநிதியான் — அயோத்தியம்பதியான்
வளமுயர்நதி — யான் அ-ஆ.(வ)

---

## அரிச்சந்திரன்சொல்-தரு.

சுகங்கரங்கரலியா என்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மன்னுதிமன்னனரிச் — சந்த்ரன்
மகிதலத்திந்த்ரன் — மாசிலாதசுசந்த்ரன்

மிருதந்த்ரன் | மாகிரைதசுந்தரன்
பொன்னுல | கம்புகழ்பூமன்
பூஜிதசேமன் | பொற்புமிருந்தாமன்
சிலைக்காமன் | பொற்புமிருந்தாமன்
தன்னிகரில் | மன்னவர்கள்
நன்னயமாய்ப்போற்றிட | பின்னமில்லாதேற்றிட

பீடார் | நாடாழ்
பேதமிலாக் | குணத்தான். (மன்)

தீர வீர சூர | செம்பிரான்
சீராருபகாரன் | செப்பொன்னுஐயாரன
விபகாரன் | செப்பொன்னுஐயாரன்
சீர்த்திசே | ருந்திடப்படையான்
திங்கட்குடையான் | ஜெகம்புகழ்கொடையான்
மின்னுடையான் | ஜெகம்புகழ்கொடையான்
செங்கைவளை | மங்கைமார்கள்
இங்கிதமாயாடிடச் | சங்கைவாணர்பாடிடச்

சாரணர் | ஆரணர்
தான்சூழவின்று | வந்தேன் (மன)

---

அரிச்சந்திரன்சொல்-தரு.

ஜசதமனுசா சரமனுயென்ற இந்துஸ்தான் வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான்பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்

மின்னொளிகுலவிதிபதியி | வீரதீரசூரவேந்தன் வந்தனன்
மெல்லியர்கவரியிலங்க | மிருதுமுரசு-உமுருமுவென

வேந்தர்கள்யாவரும் | தாழ்ந்தேவணங்கவே
வேத கீதம் | வேத கீதம்
மிகவே முழங்க | மிகவே முழங்க
வித்வஜனர்கள் | கவிகள்படிக்க
விந்தைவிந்தை | விந்தை விந்தையாய்



அரிச்சந்திரன் சபைவணக்கம்.

விருத்தம்.

முத்தமிழாம் வாரிதிநீர் முழுவதையும்
புசித்தகவி வாணர் முன்னம்
இத்தருண மதிற்சிறியே னரிச்சந்த்ரன்
சரிதைதனை யியம்ப லுற்றேன்
எத்தனைகுற் றங்களிதி லேற்படினு
மிருந்தவநா டோறுஞ் செய்து
பெத்தபிள்ளை மழலைமொழி யெனப்பிழைகள்
பொருத்தருளப் பிரார்த்திக் கின்றேன்.

---

அரிச்சந்திரன்சொல்-தரு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

தந்தேன் வந்தனஞ் சிறியேன் | தந்தேன்வந்தனம்
தண்டமிழ்க்கடலுண்டுசெந்தமிழ் | விண்டிடுங்கவி வாணர்க்கும்
சபையில்வாழ் சபையில்வாழ் | சபையில்வாழ் பெரியோர்கட்கும்
தந்தைதாயர்தங்கட்கும் | தங்கட்கும்
தங்கட்கும்மருந் | தவருக்குமிதோ. (தந்)

அங்கநதியும்வெண்மை | தங்குமதியும்
தூயசெஞ்சடைநேயமதாக | வேயணிபசுபதியர்க்கும்
சுகுணமார் சுகுணமார் | சுகுணமார்திரு மாலுக்கும்
தோடுநீடுந்துய்யதோர் | துய்யதோர்
அய்யதோர்மல | வருக்குமிதோ (தந்)

வளர்ந்தசோலைகள்சூழ் | தென்குளந்தைநகரில்வாழ்
வள்ளியப்பமா மன்னவன்செய்த | நன்னயத்தவத்துற்றவன்
வரன்சுதன் வரன்சுதன் | வரன்சுதன்பதம் பணிபவன்
மாசிலன்பு | வாய்ந்திடும் வாய்ந்திடும்
வாய்ந்திடுங்கல்யாண | சுந்தரனுக்குமியான். (தந்)

---

(அரி-வ-ம்.) மஹா மேன்மைதங்கிய இச்சபையினிடமாக சிறந்திருக்கும் கல்வி, அறிவு, ஒழுக்கம், தவம், வாய்மை, பொறை,

முதலியவைகளிற் சிறந்த பெரியோர்கட்கும் மற்றவர்கட்கும் மைந்தன் வந்தன மனமுவந்து தந்தனன்.

## அரிச்சந்திரன் வழிபடுகடவுள் வணக்கம்.

### தரு.

இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

மாமதுரையம்பதியில் வாழ்ந்திடுந்தேவா
வாழ்ந்திடுந்தேவா என்றும் வாழ்ந்திடுந்தேவா
மாட்சிசேர்வாகா நீட்சண்யயோகா காட்சியார்தேகா
மண்டலமா விண்டலமே லண்டமுதலாய்
வாழ்த்தியே துதி. (மா)

சந்திரசடாதரா செந் தாமரைப்பாதா
தாமரைப்பாதா செந் தாமரைப்பாதா
தாண்டவாபுகழ் நீண்டவாபணி பூண்டவாசெழுந்
தாதுமலர்க் கோதுகுழல் மாதுவளருமை
தகைமிக வுற்ற. (மா)

மன்றுள்நடனம் அன்றுபுரிந்த வாமதேவனே
வாமதேவனே உயர் வாமதேவனே
மங்களகுண துங்கனேகுளிர் கங்கைசூடிடும்
வஞ்சியப ரஞ்சியுமை கொஞ்சிமருவும்
வரதனே சீரார். (மா)

தமியேனிர்சிம்மா சனமதில்மேவித் தரணியையாழ
தரணியையாழ வாகார் தரணியையாழ
சந்ததம் வரந் தையாகவே தந்தருள்செய்வாய்
சாமிதிட நேமிசிவ காமிபாவும்
சசுதர் னந்தா. (மா)

(அரி-வ-ம்.) மாகஷிமதங்கிய இருக்கு, யசுர், சாமம், அதர்வணம், மென்ற நான்கு வேதங்களின் இரகசியார்த்தமாயுஞ், சர்வான்மாக்களுக்கும் உயிராகியும், மனவாக்கால் நினைத்தற்குஞ் சொல்லுதற்கும் அதீதமாகியும், ஆணவம், மாயை, காமியம், என்னும்மும்மலரகிதமாயும், அகண்டித தேசோமயமாகியும், பலசமயத்தர்களாலுஞ் சென்றடைதற்கரிய நிலைமை யுடையதாகியும், மெல்லாவுலகங்களிலும் நிறைந்த சராசரங்கள்தோன்றி யொடுங்குதற்கிடமாகிய சுத்தசைதன்யப் பரப்பிரமசொரூபமாகியும், தனது திருவருட்சத்தியோ டென்றும் திருவாலவாய் க்ஷேத்திரத்தில் எழுந்தருளிய சோமசுந்தரப் பிரபோ! பகருதற்கரிய இவ்வரியாசனத்திருந்து செங்கோல்புரிந்த எனது மூதாதைகளாகிய இக்ஷ்வாகு, விகுக்ஷி, புரஞ்சயன், அனேனசு, பிருது, விஸ்வகோதன், சந்திரன், யுவனாசுவன், சாவஸ்தன், பிரகஸ்தவன், குவலயாசுவன், அரியசுவன், நிகும்பன், பெரிஹிணாசுவன், கிரிசாசுவன், சேனசித்து, யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், புருகுச்சன், திரசதசு, அனரண்ணியன், திரியசுவன், திரியகுணன், திரிபந்தன், திரிசங்கு, வென்னும் பெயரையுடைய இருபத்தேழு பேர்கட்கும் கிருபை செய்தது போல் யானும் இவ்வரியாசனத்தினிடமாக இருந்து அரசுசெய்ய அருள்புரியவேண்டும் பிரபு.



## அரிச்சந்திரன் சொல் தரு.

டமாகேபதா என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்னர் மன்னர்கள் பணி மன்னனரிச்சந்த்ரன்
திட வாகுடையான்
நயமிகு தேசுடையான்
மதியி னுய ரதிக தந்திரன்
செங்கோலுடையான் எழில் துங்கப்படையான்
எங்குஞ் சீர்த்தியுள்ளான்
வசிட்டரின் வார்த்தைதள்ளான்
தீர வீரசூர கெம்பீரன்
அயோத்திநகரான் பொய் யுகனைப் பகரான்
நல்லறத்தின் மிக்கான்
கோளார்தன் காத்திறசிக்கான்
அங்க ஜுலகெங்கும் ஆள்கையான்

## அரிச்சந்திரன்சொல் தரு.

அதர அதர மதுரமதுர வென்றமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

தேசதேசத்தராசர்க்கரசன்     ஸ்ரீரனரிச்சந்திரன்
பாரதற்கோரிந்திரன்     ஆரணந்தேர்சந்திரன்
செங்கைவர     வயிறுங்குலங்க
மங்கைமார்     கவரியிலங்க
பொங்கமாய்     முரசமுழங்கப்
புத்திமிகு     மந்த்ரிமாருடன். (தே)

வாரிநீரைவாரியோங்கும்     பாரதனிற்பெய்திடும்
மாரியதையொத்திடும்     சீர்கரம்பொருந்திடும்
வன்மையே     மிகவுமுடையான்
ஒன்னலர்போர்     பின்னடையான்
நன்மைசேர்     வாய்மையுடையான்
நான்குதள     கர்த்தருடனே. (தே)

ஆரவாரதீரசூரர்     போரின்றன்மைபேசிட
வீரியங்கொண்டாடி     வேறிறைவர்கேட்டோட
அன்புசே     ரிறையோர்மறையோர்
நன்சொல்லார்     மதியோர்நிதியோர்
வன்புகழ்     சேவகர்வேவுகர்
அருகிலுறக்     கொலுவிருந்தனன். (தே)

---

சேவகன் [illegible]சனை வணங்கும் வசனம்.

இராஜாதிராஜ ராஜமஹாராஜ ராஜமார்த்தாண்ட ராஜகோலாகல ராஜவுத்தண்ட ராஜபிரபுடிக மஹாராஜ் வந்தனஞ்செய்கின்றேன் சேவகன்.

(அரி-வ-ம்.) கல்யாண் அடே சேவகா யானிச்சிம்மாசனத்திலெப்போதமர்ந்தேனோ அதற்கு முன்னுதாகவே இச்சபாமண்டபத்தினிடமாக வீற்றிருக்கக்கூடிய நமதுமுதல் மந்திரியாகிய சத்யகீர்த்தியானவர் இதுவரையில் யெனதுசமுகம் வராதகாரணமென்



னவோதெரிகிலேன் ஆதலால் சீக்கிரம் அவ்னவரை [illegible]வழைத்து வருவாய்.

(சே-வ-ம்) ஆக்ஞை மஹாராஜ்.

(சே-வ-ம்.) பிரபு வந்தனஞ்செய்கின்றேன்.

(மந்-வ-ம்.) கல்யாண் சேவகா யாதுவிசேடம்.

(சே-வ-ம்.) பிரபு நமது மஹாராஜா அவர்கள் சபாமண்டபத்தினிடமாகக் கொலுவமர்ந்திருக்கிறார்கள் தங்களைச் சீக்கிரத்திலழைத்து வரச்சொன்னார்கள்.

(மந்-வ-ம்.) அப்படியா இதோ வருகின்றேன்.

---

## மந்திரி அரசனை வணங்குதல்.

அலைகடலொலியென அடர்பறைமுழங்கிடவென அமரருலகதனில் அதிர்தருமுரசென அணிமணி முடிநிறை அரசர்கள் துதிசெய்கிடவெழுவமைச்சர் நிறைதருபுவிமிசை நெடுவளமிகுபல குடிகள்வந்தடிதொழ நெடுமறையவர்கிதம் பரிவுடனெதிரெதிர் மொழிபகர்ந்திலகிட அதிரதர்சமரதர் பரிகரியெழிலுறு திரளொளிசிவிகைகொடுவரவாசிக்கைபெற சிச்சிம்மாசனத்தி னிடமாக வீற்றிருக்கும் வேந்தே மந்திரி சத்யகீர்த்தி வந்தனஞ்செய்கின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் மந்திரி யானெப்போது இச்சிம்மாசனத்தினிடமாக அமர்ந்தேனோ அதற்கு முன்னுதாகவே யிங்கு வீற்றிருக்கக்கூடியதாம் இதுவரை வராதகாரணமென்ன?

(மந்-வ-ம்.) புவன சக்ரேஸ்பரா? [illegible]முககாரியவிஷய நிலகாரணத்தாலிங்குவரச் சற்று தாமதமாயின மன்னிக்கவேண்டும்.

(அரி-வ-ம்.) அப்படியா மிகவுஞ்சந்தோஷம்.

---



உ

பரமபதிதுணை.

# அரிச்சந்திரன் தேசவிசாரணை.

(அரி-வ-ம்.) ஹே பிரதான் நமது ராஜ்ஜியவிஷயமாக சிலசங்கதிகள் உம்மிடத்திற் கேட்கவேணுமென் றெண்ணுகிறேன் உமது இச்சையாது?

(மந்-வ-ம்.) அரசர்க்கரசே அதற்குயாதொரு குற்றமின்றிப் பதிலுரைக்கத் தயாராயிருக்கின்றேன்.

## அரிச்சந்திரன் சொல்தரு.

அகிலப்பிரபஞ்ச முன்னாலே யென்றமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

அரனருளாலும் அருள்சேர்மனது    மதியதனாலும்மந்திரி
தாரணிமீதுள்ள நவகண்டமதை    யாசுதான்புரிகிறேன்மந்திரி

(அரி-வ-ம்.) ஹே பிரதான் மஹா சிறப்புற்றோங்கிய நான்கு வேதங்களுந் துதிக்கவும் பங்கயமலருறைபிரமனும், பாற்கடற்றுயில் விஷ்ணுவும், முப்பத்துமுக்கோடிதேவர்களும், நாற்பத்தெண்ணாயிரம் ரிஷிகளும், தோத்திரஞ்செய்யவும் பர்வதராஜன் புத்திரியாகிய உமாதேவியார் கண்கள் களிப்படையவும், மற்றும் பதஞ்சலி வியாக்கிரமரென்ற உபயமகரிஷிகள் ஆனந்தசாகரத்தில் மூழ்கவும், பொன்னம்பலத்தாடிய சாக்ஷாத் சிவபெருமான் கிருபாகடாக்ஷத்தாலும், உனதுநன்மதியின்வீக்ஷண்யத்தினாலும், அறுபத்துநான்குலட்சம்யோசனையுள்ள புஷ்கரத்தீவினும், முப்பத்திரண்டுலக்ஷம்யோசனையுள்ள இரவித்தீவினும், பதினாறுலட்சம்யோசனையுள்ள சான்மலித்தீவினும், எட்டுலட்சம்யோசனையுள்ள கிரவுஞ்சத்தீவினும், நான்குலட்சம்யோசனையுள்ள குசைத்தீவினும், இரண்டுலட்சம்யோசனையுள்ள சாகத்தீவினும், இமயமலை முதல் தென்கடல்வரையில் லட்சம்யோசனையுள்ளதாகிய மஹாஉன்னதம்பொருந்திய இச்சம்புத்தீவினிடத்துள்ள கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்விரேபதம், வடபாதம், தென்பாதம், மத்திபகண்டம் என்ற நவகண்டங்களும்

என்றொரு குடையின்கீழாகச் சர்வஜனங்களுஞ் சந்தோஷமடையும்படி நீதிதவறுதரசுபுரிந்து வருகிறேனன்றோ?

## மந்திரி சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

அவனிமுழுவதுதா மாசதுபுரிவது அரனருளன்றியாரே
உவமையில்லாதவென் னுத்தியாலென்றுசொல்வ தெங்ஙனம் [வெனது

(மந்-வ-ம்,) புவனசக்ரேஸ்பரா என்ன இவ்வாறுபாவிக்கின்றீர்கள்.

## முன்னூல் விருத்தம்

பாரெலாம்பகைசெய்தாலும் பராபரன்கருணையுண்டேற்
சாருமோர்துயருமுண்டோ தாயினுமினியவையன்
சீரருளின்றேலெண்ணில் தேர்கரிபரிபதாதி
பேரணியுடையரேனும் பிழைக்குமாறெவன்கொல்தானே.

(மந்-வ-ம்) அதாவது அரசே ஆயிரம் பணமுடியையுடைய ஆதிசேடனானவன் தாங்கிக்கொண்டிருக்கிற இப்பூமண்டலத்திலுள்ளயாவர்களும் பகையானாலும் என்னுக்குளெண்ணெயும் மணிக்குளொளியும் புட்பத்தில்மணமும்போல வெங்கும் நிறைந்திருக்கிற பராபரமூர்த்தியினுடைய கிருபையின்றிற்றாதாயின் அப்பகையை ஊழிப்பெருங்காற்றிலகப்பட்ட காற்றுடிபோலச் செய்துவிடலாமென்றும், அன்னவன்கிருபையின்றில்லாயின் ரத, கஜ, துரக, பதாதியென்ற நான்குவகைச் சேனையினும் மற்றெவ்வகையினும் மேம்பாடுடைய மன்னர்களானாலு மிவ்வுலகின்கண் உஜ்ஜீவிப்பதரிதென்றுங் கூறியசாஸ்திரத்தையுணர்ந்த தாங்கள் அச்சர் வெஸ்வரனது பதமனதகலாதிருத்திய பான்மையால் அஷ்டதிக்கு விஜயஞ்செய்து சகலகண்டகர்களையுஞ் செயித்து வெற்றிமாலைசூடி இவ்வரியாசனத்திலிடமாக வீற்றரசுபுரிந்துவரு



கிறீர்களே தவிரக்கேவலம் புல்லறிவுடைய சிறியோனாலவதென்று சொல்வதுசிதமா ப்ரபு.

(அரி-வ-ம்.) ஏ பிரதான் கவனிப்பாயாக.

## முன்னூல் விருத்தம்.

சுற்றுமின்றெரியுஞ்செம்பொன் மணிமுடிசுடாச்சூட்டி
வெற்றிவெண்குடையினீழல் வேந்தன்வீற்றிருக்குமேனு
மற்றவன் மனமுங்கண்ணும் வாழ்க்கையும்வலியுஞ்சால்பு
...லிசெங்கோலு மாபவரமைச்சரன்றோ.

(அரி-வ-ம்.) அமைச்சசிகாமணி இப்பிரபஞ்சத்தின்கண் யாதொரு அரசனானவன் கோடிசூரியப் பிரகாசத்தைவீசுகின்ற நவரத்னங்கள் பதித்த கிரீடத்தைச் சென்னியிற்புனைந்து வெற்றியைத்தருகின்ற சந்திரவட்டக்குடை நீழலின்கண் கெம்பீரமாக அரியாசனத்தில் வீற்றிருந்தாலும் அவ்விதம் வீற்றிருப்பதொன்றொழிய அன்னவன்நெஞ்சமும் நேத்திரமும் வாழ்வும் புஜபலபராக்கிரமமும் மேன்மையும் குற்றமில்லாத அரசாட்சியும் செங்கோலுமாகக்கூடியவர்கள் மந்திரிகளன்றோ. மற்றும் மந்திரி (அந்தணரொழுக்கமும் அரசர்வாழ்க்கையும், மந்திரமில்லையேல் மலருமான்றில) அதாவது அந்தணரொழுக்கமாய் வாழ்வதற்கு (மந்திரமில்லையேல்) வேதமில்லாதபக்ஷத்தில் யாதொரு பிரயோசனமுமில்லை. அரசர்கள் யாதொருபகையின்றி வாழ்வதற்கு (மந்திரமில்லையேல்) நன்மதி மந்திரியில்லாதபக்ஷத்தில் ஒருவித பிரயோசனமுமில்லையென்பது சாஸ்திரம் ஆதலால் சாக்ஷாத் சிவபெருமானுடைய கிருபாகடாக்ஷமே புனதுருபமாயெனக்கு வாய்ந்திருக்கிறது.

(மந்-வ-ம்.) தங்கள் சித்தம் கோசலாதிபா.

## ...ரிச்சந்திரன்சொல் தரு.

...ந்தன்பாதம் என்ற வர்ணமெட்டு.

இராகம் - தேசிககமாஸ் - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

மதியியர்ந்தமந்திரி மாதமுன்றுமாரிபெய்து
மானிலமெலாஞ்செழித்து மாண்புடனிருக்கிறதா
வழுத்துவாய் வழுத்துவாய் வழுத்துவாய் வழுத்துவாய், (மதி

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி (குறள்) "தானந் தவமிரண்டுந் தங்காவியனுலகை வானம் வழங்காதெனின்" அதாவது இவ்வுலகத்துக்குத் துணைக்காரண வஸ்துவாகிய மேகங்களானவை மாதமூன்று மழை வருஷிக்காவிடில் இப்பிரபஞ்சத்தில் தானம் தவம் என்ற இரண்டறமும் இல்லாமற்போய் விடுமென்பது சாஸ்திரமன்றோ? ஆதலால் அத்தகைய மேகங்கள் நமது நாட்டினிடமாக யாதொரு குறைவின்றி மாதமூன்றுமழை வருஷித்து வருகின்றதா?

## மந்திரிசொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

இராகம் - தேசிககயாஸ் - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

கற்புடையமாதருக்குங் காவலர்க்கும் வேதியர்க்கும்
கணக்காத்திங்கள்மும்மாரி கான்மழைபொழிகிறது
கர்த்தனே கர்த்தனே கர்த்தனே கர்த்தனே. (கற்)

(மந்-வ-ம்.) ஓகைதந்து போர்க்களத்தினுட் புகுந்து மேன்முடுகி வாகைதந்து மீண்டுவருந் தூரகத்தில் ஆரோகணிக்கக்கூடிய அரசே? கவனிக்கவேண்டும், நமது நாட்டினிடமாக நான்குவேதங்களும் மற்றுமுள்ள சகலகலைகளும் சதா பாராயணஞ்செய்யும் அந்தணர்களுக்கு ஓர்மழையும், மற்றும் நீதிதவறாதாகபுரிகிற தங்களுக்கோர்மழையும், அன்றியும் அருந்ததிக்கிச்சமானமான கற்புவாய்ந்து நம் தேசத்தினிடமாக வசிக்கும் மாதர்களுக்கோர்மழையும் ஆகமாதமூன்றுமழை வருஷித்து நமது நாடானது மிகவும் செழிப்புற்றிருக்கின்றது.

(அரி-வ-ம்.) மிகவுஞ் சந்தோஷம் மந்திரி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

இராகம் - தேசிககயாஸ் - தாளம் - ரூபகம்.

அற்புதமிகுசன்னிட்டி லாலயங்கட்கெல்லாமந்திரி
ஆறுகாலப்பூசைகளு மனுதினம்நடக்கின்றதா
அறைகுவாய் அறைகுவாய் அறைகுவாய் அறைகுவாய் (அற்)



(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் நமது செங்கோற்குட்பட்ட நாடுநகரங்களிலுள்ள சிவாலயம் விஷ்ணுவாலய முதலான எல்லா ஆலயங்களிலும் கிரமப்படி பூஜையும் உற்சவமும் நடந்துவருகின்றதா.

## மந்திரிசொல் தரு

ஷை வர்ணமெட்டு.

இராகம் - தேசிககமாஸ் - தாளம் - ரூபகம்.

செங்கோல்தவறாதவேந்தே தேவாலயங்களுக்கெல்லாஞ்
செம்மையாய்சட்காலப்பூசை சீர்த்தியாய்நடக்கின்றது
தெரிகுவீர் தெரிகுவீர் தெரிகுவீர் தெரிகுவீர் (செ)

(மந்-வ-ம்.) அரசர்க்கரசே நமதரசாட்சிக்குட்பட்ட எல்லாத் தலங்களிலும் விளாபூஜை, காலசந்தி, திருக்காலசந்தி, உச்சிக்காலம், சாயரக்ஷை, அர்த்தசாமம் என்ற ஆறுவேளை பூஜைநடக்குந் தன்மையும் மற்றும் தினவிசேடம், மாதவிசேடம், பக்ஷவிசேடம், வருஷவிசேடம், என்றுசொல்லப்பட்ட உற்சவங்கள் நடக்குஞ் சம்பிரமத்தையும் ஆயிரநாவுடைய ஆதிசேடனும் பகருவதற்கெளிதில்லையாயின் என்னோர் நாவாற் சொல்வதற்கெளிதோ.

அரி-வ-ம்.) மிகவும் குதூகலம் அமைச்சே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

கன்னியே நாமென்னசெய்வோம் என்றமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

வேதியர்நாடோறு நான்கு வேதங்கள்மந்திரி
ஓதியே வருகின்றாரா வுரைசெய்வாய்மந்திரி

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் நான்குவேதங்களுக்குந் தலைவனாக விளங்கும் சிவபெருமானது சத்யோஜாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானமென்னு மைந்து திருமுகங்களினின்றும், வரன்முறைப்படி நீங்காத சத்துவ குணத்துடனே வுற்பவித்த முதல்வருணத்தாராகிய அந்தணர்கள் எண்ணுதற்கரிய வேதங்கள்

வேதாகமங்கள் முதலிய பல நூல்களையுந் தாங்களோதலும், ஓதல் வேண்டித்தம்மையடுத்தவற்கு ஓதுவித்தலும், அக்னிஸ்டோமமுதலாகிய யாகங்களை அன்புடனேசெய்தலும், செய்யத்தக்கதானங்களைச்செய்தலும், கொடுக்கிறவர்களிடத்திருந்து அன்னவர்களுக்கு நன்மையாகும்படி பெற்றுக் கொள்ளுதலும், என்று சொல்லப்பட்ட சாஸ்திர சம்மதமாகிய இந்த ஆறுதொழிலையும் எந்நாளுந் தவறாமற்செய்து, மற்றும் அவர்களுக் கேற்பட்டகிரமப்படி சீர்த்தியாகநடந்து வாழ்ந்துவருகின்றார்களா?

மந்திரிசொல் தரு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

அந்தணர் கருமங்குன்றி லவனியி லரசே
சிந்தையா யெவர்தான் வாழ்வார்தெருவீ ரரசே

(மங்-வ-ம்.) கொட்டமிடு மருவலர்களிட்ட கற்கோட்டைகளனைத்துங் கொழுந்தூளாக வட்டமிடும் புரவியிலாரோகணிக்கும் இராஜசேகரா.

முன்னுல் விருத்தம்.

இந்திரன்பதங்கள்குன்று மிறையவர்பதங்கண்மாறு
மந்திரகிலைகள்பேறு மறுகயல்வறுமையாகுஞ்
சந்திரன்கதிரோன்சாயுந் தரணிபிற்றேயமாளும்
அந்தணர்கருமங்குன்றில் யாவரேவாழ்வர்மண்ணில்.

(மங்-வ-ம்.) அதாவது முதல் வருணத்தாராகிய பிராமணர்கள் தாங்கள் செய்யத்தக்க கிரியைகளைச் செய்யாதொழிந்தால் இந்திரனது செல்வங்களுங் குறையும் இராஜாக்கள் வாழ்க்கையும் மாறும் மந்தரமலையினது கிலைகளும்பெயரும் [illegible]டங்களிலும் வறுமை மிகுதியாகும் சந்திர சூரியர்களும் கிலைகெடுவார்கள். பூவுலகமெல்லாம் பொலிவழிந்துவிடும் உலகில் வாழத்தக்கவரொருவருமில்லையென்பது சாஸ்திரம் ஆதலால் மேற்கூறிய அந்தணர்கள் அன்னவர்களுக் கேற்பட்ட ஆறுதொழிலையும் மறவாது புரிவதுடனே, ஸ்நானம், தர்ப்பணம், சுருதி, சம்பந்தமாகச்



செய்யப்பட்ட கருமங்கள் அக்கினி ஹோத்திரம் ஔபாசன முதலிய பலவித வினைகளை யெல்லாம் மன மகிழ்ச்சியுடன் செய்து மற்றுங் குற்றமில்லாமல் விளங்குகின்ற வைதிக கருமங்களைப் பிறருக்குச் செய்வித்தும் இவற்றுடனே விருப்பத்தைச் செய்கின்ற யாகமுதலிய கிரியைகளாலே தேவர்களையும் சிரார்த்தமுதலிய கிரியைகளாலே பிதுர்க்களையும் திருப்தியண்ணியும் மற்றும் உலகத்திலுள்ளவர்கள் அறிந்து நடக்க வேண்டிய நல்ல தருமங்களையெல்லாம் அவர்கள் மனதில் நன்றாய் விளங்கும்படி உபதேசித்தும் எந்நாளும் அவர்களுக்கு வேண்டுங் கெடுதலில்லாத பல உதவிகளுஞ்செய்து நல்லகிருபையுடையவர்களாய் வாழ்ந்துவருகின்றார்கள்.

அரிச்சந்திரன்சொல் தரு.

அவனிதனில் புகழ்தவரா வென்றமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ரூபகம்.

உத்தமச் சத்திரிய ரெல்லா முவகையாய் மந்திரி
வித்தொழிலில் கற்கின்றாரோசொல் விபரமாய் மந்திரி

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி தேவர்கள்முதல் யாவருந்துதிக்கின்ற சிவபெருமானது அழகும் பலமும் பொருந்திய புயங்களினின்றும் இராஜத குணத்தோடு முதித்த அதிவிற்சிறந்த சத்திரியர்களாகிய கங்குலத்தவர்கள் சதுர்வித வைரியங்களை நடத்துந் திறமையோடு விற்படை முதலிய பற்பல ஆயுத பரீட்சைகளிற்றேர்ச்சியுற்றிருக்கின்றார்களா?

மந்திரிசொல் தரு

ஷை வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்

எத்திசை புகழ் நற்குல க்ஷத்திரியராசே
வித்தொழிலிற் பயில்கின்றதை விள்ளுவேனரசே

(மந்-வ-ம்.) சண்டையிற் பொருங்கெடித்தல்நகர்த்து வஞ்சனைக்கை கொண்டெடுத்தறைந்துடைப்பு, கும்பயுக்ர குஞ்சரத்தையுடைய அண்ணலே. தமது குலத்தாராகிய க்ஷத்திரியரென்னும் படைத்தலைவர்கள், மல்வித்தை, வில்வித்தை, யானையேற்றம், குதிரையேற்றம், தேரேற்றம், அஸ்திரப்பரீக்ஷை, சஸ்திரப்பரீக்ஷை, ஆயுதபரீக்ஷை, முதலியனவைகளிற் பூரண பாண்டித்யமுடையவர்களாகி முற்போர் தொடுக்கக்கூடாது வரும்போரை விடக்கூடாதென்ற வெண்ணத்தோடுங்கூட நாம் எப்பொழுது யிங்கழைத்து எதிரிகள்மீது யுத்தத்துக்கனுப்புவீரென்ற வுத்தேசத்துடனெதிர்ப் பார்த்திருக்கின்றார்கள்.

(அரி-வ-ம்.) அப்படியா அமைச்சே அதிகசந்தோஷம். மற்றும் நமது செங்கோற்குட்பட்ட அஷ்டகண்ட சக்ரவர்த்திகளும் நாம் வசிக்கக்கூடிய இக்கோசலைநாட்டுக்குட்பட்ட அங்க, அருண, அவந்தி, பாந்திர, இலாட, யவன, ஒட்டிய, கருச, கலிங்க, கன்னட, காச, காஸ்மீர, காந்தார, காம்போஜ, கிராட, குருகு, குடக, குந்தள, குரு, குலிந்த, கூச்சர, கேகய, கோள, கொங்கண, கொல்ல, சக, சவ்வீர, சாளவ, சிங்கள, சிந்து, சீன, சூரசேன, சோள, சோனக, திராவிட, துருவ, தெங்கண, நிடத, நேபாள, பப்பர, பல்லவ, பாஞ்சால, பாண்டிய, புளிந்த, போட, மகத, மச்ச, மலையாள, மாளவ, யுகந்தர, வங்க, வங்காள, விதற்பமென்று சொல்லப்பட்ட ஐம்பத்தைந்து தேசத்தரசர்களும் அவரவர்களுக்கேற்பட்ட கிரமப்படி பகுதிகட்டி வருகின்றார்களா?

(மந்-வ-ம்.) கடல்வளையுமுலகை யொருகுடைநிழலிலரசுபுரிகாவலா கவனிக்கவேண்டும். நமது செங்கோற்குட்பட்ட ஷட் சக்ரவர்த்திகளும் மற்றும் ஐம்பத்தைந்து தேசத்துமன்னரும் மேன்மைபொருந்திய வேதங்களாலெடுத்துச் சொல்லப்பட்ட யாக முதலிய கருமங்களை நன்றாகச்செய்தும், சுவர்க்கமுதலிய மறுமைப்பயனையுடைய விரும்பித் தானதருமங்களைப் புரிந்தும் வேதங்களுடனே வேதாகமங்களையும் அவற்றினுட் கருத்தைக்கொண்டு விளங்காநின்ற ஸ்மிருதி புராண முதலிய பலநூல்களையும் வாசித்தும், படைபொருள், குடிகள் தங்குவதற்கிடமாயுள்ள நாடு உயர்வாகிய அரண் நட்பு அறிவிற்சிறந்த அமைச்சு என்று சொல்லப்பட்ட இந்த ஆறு அங்கங்களையுமுடையவராகி உலகத்திலுள்ளவர்களைக்



காத்தலான அரசியல் நடத்தியும் தனதாசாக்ஷிக்கு விரோதமான குற்றங்களைச் செய்யும் பகைவர்கள் அஞ்சி வணங்கும்படி யுத்தஞ்செய்தும் யாவருஞ் புகழப்பட்ட அஸ்திர சஸ்திரமுதலிய நானாவித படைக்கொழிலிற் பழகியும் மனு முதலிய நூல்களில் விதித்தபடி மனமகிழ்ச்சியோடு நித்தியம் நைமித்தியம் என்னுமிருவகைக் கருமங்களையுஞ் சிறப்பாகச் செய்தும் நமக்குள்ள பகுதியுஞ் சரியாகக் கட்டிவருகிறார்கள்.

### அரிச்சந்திரன்சொல் தரு.

அகில ப்ரபஞ்ச மென்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

சிறுடனே பூவைசிய ரனைவோரு நஞ்சேக மதனில் மந்திரி
எருழு துவேளாண்மையின்பமாய்ச்செய் துபொருளிட்டோராமந்திரி

(அரி-வ-ம்.) எப்ரதான் ஸ்ரேஸ்டா ஐஸ்வரியம், வீரியம், புகழ், திரு, ஞானம், வைராக்கியம் என்னும் ஆறுகுணங்களையுடைய உலக முதல்வனாகிய கைலயங்கிரி நாதனது தொடைகளினின்றும் இராஜோகுணதமோ குணங்களுடனே தோன்றிய பூவைசியராகிய வேளாளர்கள் உயர்ந்தோர்களாற் புகழப்பட்ட வேதாகமமுதலிய பற்பலசாத்திரங்களை வாசித்தலும், வேதங்களில்விதித்தமுறைப்படி விளங்காநின்ற நெய், பொரி சமிதை முதலியவற்றைச் சொரிந்துசெய்கின்ற பலவகைப்பட்ட கருமங்களைச்செய்தலும், நாற்றிசையினும் புகழ்பரவுதற்குக் காரணமாகிய தானதருமங்களைச்செய்தலும், பூமியின்கண் பயிர்களானவை செழித்துவளரும்படி இன்பமுடனே பொன்னேர்கட்டியுழுதலும், விரிந்த தருமசாஸ்திரப்படி பசுக்கூட்டங்களை யிரக்ஷித்தலும், பலவகைப்பட்ட தானியங்கள் பழிபாவங்களுக் கிடமில்லாமல் வியாபாரஞ்செய்து பொருளீட்டல் முதலாகிய இவ்வாறுதொழிலையும் வழுவாதியற்றி வாழ்கின்றார்களா?

### மந்திரிசொல் தரு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி

பூவுலகினிற் பூவைசியரனைவரும் பொற்புள வொனதரசே
ஆவலாயுழுதுவேளாண்மைசெய்தென்றுமன்பாய்வாழ்கின்றாரசே

(மந்-வ-ம்.) கலக்கடம்மானத்தொனியை முழக்கமன மலைத் தடையார்கால் சாய்க்தோடப் பெலக்கடமா நகக்களிற்றை நடத்தும் ராஜவுத்தண்டா நல்ல தேவாலயம்பூஜை நடப்பதும் நாடோறும்மழைபொழிவதும் நாடியதபோதனர்கள் மாதவம்புரிவதும் நவில் வேதவேதியரெல்லாம் சொல்லரிய யாகாதிகருமங்கள்செய்வதும் தொல்புவி செழிக்குநல்லும் சுபசோபனங்களும் கொற்றவர்கள் செங்கோல்தலங்கு மனுநெறிமுறைமையும் வெல்லரிய சுகிர்தமொடு வர்த்தகங்கொள்விலையும் விற்பனையுமதிகபுகழும் மிக்கவதிகாரமும் தொழிலாளர்ஜீவனமும் வீரணசூரன்வலியும் வல்லமைகள் சகலமும் வேளாளர் மேழியின்வாழ்வினால் விளைவதென்னில், மற்றன்னவர்களின் பெருமையைப் பேசமுடியுமோ இவ்வித கீர்த்திவாய்ந்த பூவைசியாளாகிய வேளாளர்களை (உழுதுண்டுவாழ்வாரே வாழ்வர் மற்றெல்லாந் தொழுதுண்டு பின்செல்பவர்) என்ற நீதிவாக்கியமானது நிலைபெறும்படியாகவே மெய்மையோடு உஜ்ஜீவிக்கின்றார்கள்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

நகரத்தில் யாதேனும் விசேடமிருந்தாலென்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி தாளம்-ஆதி.

வாணிபஞ்செய்கின்ற வணிபர்நம்நாட்டில்
வார்த்தைபிசகாமல் மந்திரி
பேறுதனுடனே வர்த்தகஞ்செய்யும்
பெட்புரைப்பாய் மந்திரி

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி வர்த்தகஞ்செய்யும் வைசியர்கள் அவர்களுக் கேற்பட்ட நியமப்படி நடந்துவருகின்றார்களா?

## மந்திரிசொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

கொண்டதோர்முதலுக்குச் சிறியதோர்லாபங்
குறைவின்றி வைத்தரசே
மண்டலந்தனிலவர் வர்த்தகஞ்செய்யும்
வண்மையென் சொல்வேனரசே.



(மந்-வ-ம்.) அரசர்க்கரசே வர்த்தகஞ்செய்யும் வைசியர்கள் கொண்டமுதலுக்குச் சிறிதுலாபஞ் சம்பாதிக்கும் வரவுக்குத்தக்க செலவுசெய்தும் பற்றுவரவு கணக்குகளிற் பிழைபடவெழுதாமலும் சத்தியவிஷயமான செலவுகளை அபரிமிதமாகச்செய்தும் அசத்தியர்களிடுகொடுக்கினும் கடன்கொடாமலும் மெய்மையையுடையார் தாரித்திராயிருந்தாலும் வாக்கு நாணயமாகக் கடன்கொடுத்தும் கீர்த்தியாக வாழ்ந்துவருகின்றார்கள்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

பகரரியசதுர்த்த சாதியானவரும்
பாங்காயவரவர் தொழில்மந்திரி
அகமகிழ்வுடனே தினந்தினஞ்செய்து
அன்பாயிருக்குறார மந்திரி

(அரி-வ-ம்.) மந்திரி சாக்ஷாத் கைலைநாதனது வேதச்சிலம்புகள் சூழ்ந்து விளங்குகின்ற திருவடிகளில் தபோகுணத்துடனே பிறந்த சூத்திரர்கள் விருத்தியாகத்தக்க நல்வழியிற் பொருளைச் சேகரித்தலும் மேற்கூறிய பிராமணர் முதலிய மூன்றுவருணத்தாராலும் கட்டளையிடப்பட்ட பணிவிடைகளைக் கிரமமாகச்செய்தலும் நிலங்களுடைய வேறுபாடுகளையறிந்து அந்தந்த நிலத்திற்குரிய பயிர்களைச் செய்தலும் தாம்பழகிய தோற்கருவி முதலிய வாத்தியத்தொழில்களை யாவரும் வியக்கும்படிசெய்தலும் எல்லாத் தொழிலினுஞ்சிறந்த நெய்தற்றொழிலைச்செய்தலும் பசுக்கூட்டங்களைக் காத்தலும் என்று சொல்லப்பட்ட ஆறுதொழிலையுங் கைக்கொண்டுஜீவிக்கின்றார்களா?

## மந்திரிசொல் தரு:

ஷை வர்ணமெட்டு.

சாற்றுஞ்சதுர்த்த சாதியானவருந்
தங்கள் தங்கள்தொழில் செய்தரசே
ஏற்றமதாகநம் நாட்டினில்வாழு
மியல்பதைச்சொல்லொண்ணு தரசே.

(மந்-வ-ம்.) அஞ்சினோர் வாக்கிலிருந்தும்போற் பாய்ந்து மட்டுமிஞ்சினோர் மார்புருவி வீம்படக்கும் ஆக்ஞாசக்கரத்தையுடைய வேந்தே நான்காம் வருணத்தாராகிய சூத்திரர்களனைவரும் மேற்கூறிய, பிர்ம க்ஷத்திரிய வைசியரென்ற மூன்று சாதியர்கட்கும் முட்படிந்தேவல் செய்வது முதலான சகல நியமங்களுந் தவறாது புரிந்து வாழ்ந்து வருகிறார்கள்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

வாடி வாடி மாதரசே யென்றமெட்டு.

இராகம்-கமயக்-தாளம்-ஏகம்.

அன்னசத்திரத்தில் தான
மருதிகளுக்கே யளிக்குறார
அதனிலேமைமதனை யிதமாதாகவேதன
மதிவல்லவனே நீ சொல் சொல் சொல்

(அரி-வ-ம்.) அமைச்சசிகாமணி இல்லறம் வானப்பிரஸ்தம் சந்யாசம் அவதூதி என்ற இந்நான்கு ஆச்சிரமத்தாருக்கும் மற்றும் காமக், குரோத, லோப, மோக, மத, மாச்சரியங்களை நீக்கி ஆணவம், மாயை, காமியமென்னும், மும்மலங்களை யகற்றி, இயமம், நியமம், ஆதனம், பிராணாயாமம், பிரத்தியாகாரம், தாரணை, தியானம், சமாதி என்ற அஷ்டாங்கயோகங்களையும் பெற்று மூலாதாரம், சுவாதிஷ்டானம், மணிபூரகம், விசுத்தி, ஆக்ஞை என்னும் ஆராதாரங்களையும் பேதித்து மூலக்கனலையெழுப்பி அதற்கு மேலுள்ள பிர்மநிலையைத்தெரிந்த முத்தர்கள், முனிவர்கள், இருடிகள், தவசிகள் முதலிய புண்ணியாத்துமாக்களுக்கும் மற்றும் ரிக், எஜுர், சாமம், அதர்வணமென்னும் நான்குவேதங்களையுஞ்சதா பாராயணஞ் செய்யும் முதற்குலத்தோர்களாகிய அந்தணர்களுக்கும் இன்னும் எவ்வாச்சிரமத்தாருக்கும் யாதொரு குறைவுமின்றி நீடாது சடத்துக் காதாரமாகிய உணவளிக்கும்படி நந்தேயத்தில் ஆங்காங்கு நியமித்திருக்கும் அன்னசத்திரமாதியாயுள்ள மடம், தடம், கூபம், சாலைமுதலிய தர்மங்களெல்லாம் யாதொரு குறைவின்றிப் பூரணமாய் நடந்துவருகின்றதா?



(மந்-வ-ம்.) உடைதிரைகள் குமுறுகடலொலியு முகிலொலியு மெனவடையலர்கள் செவிகுடையவ திருமொலிமணிமுரசுடைய அரசே தம்முன்னோர்களாலும் தம்மாலும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்ற சத்திரங்களிலும் மடங்களிலும் தேகியெனக் கேட்போர்கட்கெல்லாம் நாஸ்தியென்னுரைக்காமல் நாமேற்படுத்தியபடியே அன்னதானம் நடந்து வருகின்றது.

(அரி-வ-ம்.) ப்ரதான் யான் கேட்ட கேள்விக்கெல்லாம் யாதொரு குறையில்லாமல் பதிலுரைத்த உனது புத்தி நிஷ்டையத்துக்கு மிகவு மெச்சினேன் மற்று நமது சமுகத்தில் நடனமாதர்களை வரவழைத்து இச்சபையோர்களி யாவருஞ் சந்தோஷமடையும்படி நடனம் புரியச்செய்யும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபு.

(மந்-வ-ம்.) அடா சேவகா சீக்கிரத்தில் நமது நடனமாதரை யழைத்துவா.

(சே-வ-ம்.) இதோ விரைவிலழைத்து வருகிறேன்.

(சே-வ-ம்.) ஏ நடனமாதர்களே மகாராஜா வுங்களை யழைத்துவரும்படி உத்தரவு செய்திருக்கிறார்கள் சீக்கிரம் வாருங்கள்.

(நடனமாதர் வ-ம்.) இதோ வருகின்றோம் சேவகரே.

## நடனமாதர்கள் வருகிறபாகம்.

நடனமாதர்கள் விருத்தம்.

திட்டமாய்ப்பணிகள்பூண்டு செழுங்கயல்விழிக்குப்பாங்கா
யிட்டமாய்மையிட்டோர்க்கு மெழிலுடைபுனைந்துமேலே
ஒட்டியாணத்தைச்சேர்த்தாங் குவகையாயிறைவன்முன்னே
மட்டிலா நடனஞ்செய்ய மாதர்கள்தோன்றினாரே.

## நடனமாதர்கள் வருகிற தரு.

தந்திரமாய் தவிர்த்த பாணமாதர் என்ற மெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

செந்திருபோல் திகழ்ந்தன் ; னடமாதர்வந்தார்





அநுபல்லவி.

சிந்தூரமாகியபொட்டு சுந்தரநுதலிலிட்டு
கொந்தார்சடைபின்னலிட்டுக் கந்தரத்திலாரந்தொட்டு (செ)

சரணங்கள்.

தங்கச்சிலம்பெடுத்துப் பங்கயப்பாதந்தொடுத்து
மங்களகீதம்படித்துப் பொங்கமாய்நடிநடித்து (செ)

குங்குமகளபவாச மெங்கினுந்திரேகம்வீச
துங்கமாய்ப்பார்ப்போர்கண்கூசச் செங்கைவளையணிந்துல்லாச ( )

நடனமாதர் அரசனை வணங்குதல் வசனம்.

புவனச்சேர்ப்பார நடனமாதர்களனேககோடி. வந்தனஞ் செய்கின்றோம் எங்களைச் சமூகத்துக் கழைத்த காரணம் உத்தரவாகவேண்டும்.

(அர-வ-ம்.) கல்யாண நடனமாதர்களே உங்கள் நர்த்தனத்தைப் பார்த்துச் சந்தோஷமடைவதற்காக அழைத்ததே தவிர வேறுவிசேடமில்லை ஆனதால் நீங்கள்பாண்டித்தியஞ் செய்திருக்கிற நடனங்களைப்புரியுங்கள் பார்ப்போம்.

(நட-வ-ம்.) உத்தரவு மஹாராஜனே.

மாதர்கள் நடனஞ்செய்யுந் தரு.

பரந்தாமனே ராமனே யென்றமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

ஜெகராஜனே போசனே செந்திருப்பெண்ணேசனே

அநுபல்லவி.

மகபதிநேர் கோமனே
மாசிலாத சீமானே (ஜெ)

சரணங்கள்.

ஜிகர் சுந்தரனே வாகுயர்ந்தசந்திரனே (ஜெ)
பொய்யுரையாப் புண்ணியனே பூதலத்திற் கண்ணியனே (ஜெ)
திரிசங்கு மைந்தனே செம்மையுள்ளோருக்கிதனே (ஜெ)

(அரி-வ-ம்.) ப்ரதான் இம்மாதர்கள்செய்த நர்த்தனம் மிகவும் ஆச்சரியம் ஆகையால் இவர்கள் விரும்பியவண்ணம்வெகுமதி கொடுத்தனுப்பும்.

(மந்-வ-ம்.) உத்தரவுபோல் கொடுக்கிறேன் ப்ரபூ.

(மந்-வ-ம்.) ஏ மாதர்களே இந்த ஆபரணங்களை யெல்லாம்பெற்றுக்கொண்டு அரசனிடத்தில் தெரிவித்துச்செல்லுங்கள்.

(நட-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

(நட-வ-ம்.) பூபாலகா தங்கள் வருதிப்படி வெகுமதி யாவும் பெற்றுக்கொண்டோம் அனேக வந்தனம் சென்றுவருகிறோம்.

(அரி-வ-ம்.) கல்யாண் நடனமாதர்களே சென்றுவாருங்கள்

அரசன் விருத்தம்.

எழுமைப்பிறப்புந்தீவினைவந் தெய்தாச்சிறப்புந்தென்புலத்தார்
முழுதுமுவக்குங்கடன்சால முடிக்குமாண்பும்பெறுதலினல்
பழுதிறவங்கன்புரிந்துமைந்தர் பயந்துமவர்கடங்களுக்குக்
குழுமுமவையின்முந்திருப்ப வறிவுகொளுத்தல்வேண்டுமால்.

(அரி-வ-ம்.) ப்ரதான் சிரேஷ்டா இவ்வுலகத்தினிடமாக தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாபரமென்ற எழு பிறப்பினும் உற்பவித்துழலாநிருக்குந் தன்மை சற்குணபாலர்களாலுண்டாகு மென்று தானெடுத்துக் கூறிய வேதாகமங்களினால் யான்தெரிந்து சாக்ஷாத் பகவானைக்கோறித் தவமியற்ற அன்னவரருளாலுற்பவித்த பாலகன் தேவதாசனுக்கு மநுநீதியின்பிரகாரம் வித்தியப்பியாசஞ் செய்யும்படி உபாத்தியாயரண்டையனுப்பினேமன்றோ.

(மந்-வ-ம்.) ஆம் ப்ரபூ.

(அரி-வ-ம்.) அப்பாலகனிதுவரை எவ்வித நூல்கள் கற்றிருக்கிறானென்பதை அன்னவன் வாக்கினாற் சொல்லக்கேட்டுச் சந்தோஷமடையும்படியாய் நினைத்தேன். ஆதலாலன்னவனைச் சீக்கிரம் இவ்விடத்துக்கழைத்துவரும்படி செய்யும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.



மந்திரி விருத்தம்.

இடமுயர்சேவகாயா னியம்புமோர்வார்த்தைகேளாய்
கடகளிறனையசிற்றக் காவலர்யாரும்போற்றுந்
தடம்புயத்துடையரங்கோன் றவத்தினாலுற்பவித்த
திடமிகுமைந்தன்றன்னைச் சீக்கிரமழைத்துவாராய்.

(மந்-வ-ம்.) அடேசேவகா நமதிராஜ புத்திரன் தேவதாசன் பாடசாலைக்குச் சென்றிருக்கிறான் அன்னவனைச்சீக்கிரம் அழைத்துவா.

(சே-வ-ம்.) உத்தரவுபோல் செய்கின்றேன்.

(சே-வ-ம்.) இளைய மஹாராஜ் தங்கள் பிதா தங்களை யழைத்துவர ஆக்ஞாபித்தார்களாகையா லென்னுடன் வரவேண்டும்

(தே-வ-ம்.) சேவகா இதோ வருகின்றேன்.

## தேவதாசன் வருகிறபாகம்.

தோட்டு.

சரி க க க, ரி க ம ம ம
கமபதபம, பமகரி, ச ச ச
சரிக ரிகம, கமப மபத, பதநி தநிச
சநித நிதப, தபம பமக, மகரி கரிச
சரிக ரிகம, கமப மபத, பதநி தநிச
சநிதநிதப தபமபகம மகரிகரிச. (ச,

### தேவதாசன் சபைவணக்கம்.

சீராரவையில் வளரென்ற மெட்டு.

இராகம் - காபி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

பாலன்யான்வந்தனம் பாங்குடன்தந்தனன்
சிலமிகுந்த வித்தச் சிங்காரச் சபையோர்க்கும் (பா)

சீரார் செஞ்சடையினில் திங்களணிவோருக்கும்
ஏரார் மலர்வாசர்க்கு மிருதிலமளந்தோர்க்கும் (பா)
சந்ததந் தவஞ்செய்தெந் தனையீன்ற வன்னையர்க்கும்
சுந்தரப் பிதாவுக்குந் தொல்புவியாள் மன்னவர்க்கும் (பா)
நாவலர் மிகவுறை நல்முது குளத்தூர்வாழ்
பாவலன் கல்யாண சுந்தரன் பதத்துக்கும் (பா)
எழுத்தணி சொற்பொருள்யாப் பெல்லா முணர்ந்தகள்முன்
வழுத்துமென் பாடலில் மாசுற்றாலுஞ் சமிப்பீர் (பா)

---

(தேவ-வ-ம்.) எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி என்ற, பஞ்ச விலக்கணங்களையு முணர்ந்து இச்சபையினிடமாக வீற்றிருக்கும் வித்வான்களுக்கும் மற்றவர்களுக்கும் என்து குருவாகிய முதுகுளத்தூர், அஷ்டாவதானி, மு. வ. கலியாணசுந்தரம் பிள்ளை யவர்களுக்கும் மைந்தன் வந்தன மனமுவந்து தந்தனன்.

## தேவதாசன் தனது தந்தையை வணங்குதல்.

இராகம் - சுருட்டி - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

மாதவத்தாலென்னையீன்ற நாதா வந்தனம்
காதா வந்தனம் பிரக் யாதா தந்தனன் (மா)
ஆதியா யரூபியாய சோதியைக் கோறிச்
சோதியைக் கோறி மிகு தோத்திரங்கூறி (மா).
சத்தியமே யுருவதா யுதித்த ஐயனே
யுதித்த ஐயனே காந்தி சுதித்த மெய்யனே (மா)
நல்விவேக குருவினிடங் கல்வி யுணர்ந்தேன்
கல்வி யுணர்ந்தே னதனுண்மை யறிந்தேன் (மா)

(தேவ-வ-ம்.) பிதா மஹாராஜ் வந்தனஞ் செய்கின்றேன் பாலகன்.



## அரிச்சந்திரன்சொல்-தரு.

வாடாவெந்தன் வடிவழகனே யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

வா வா மைந்தா வண்மைசேர் முகுந்தா

அநுபல்லவி.

மா வா குயர்ந்திட மாக்ஷிமை சேர்ந்திட (வா)

சரணங்கள்.

பண்டினில் நான்கறைக் கண்டனைமுதுரை
விண்டபடி புகழ மண்டலம் வந்தாய்மகிழ (வா)
எந்தன் குறைநீங்க சிந்தைப் பெயரோங்க
சிந்தையுற்ற கலக்கம் இந்நாளில் விலக்க (வா)
வேதமுத லாகத் தீதிலா தறிவாக
நீதிசேர் குருவிடம் ஓதியதுரை யென்னிடம் (வா)

---

(அரி-வ-ம்.) பாலகா வுன்னை யுபாத்தியாயரிடமாகக் கல்வி கற்கும்படியனுப்புவித்தது முதலிதுவரை நீகற்றுணர்ந்ததை யுன்வாக்கினாற்கேட்டுச் சந்தோஷமடைய இங்கழைத்தனன் விபரமாய்க் கூறுவாய்.

தேவதாசன் வசனம்.

பிதா தங்களுதிரத்திற் ஜெனித்த வெனக்கு வாராதொன்றுளதோ. சகலசாஸ்திரங்களிலுந் தேர்ச்சி யடைந்திருக்கின்றேன்.

அதாவது ரிக், எசுர், சாமம், அதர்வணம் என்ற நான்கு வேதமும் அன்றியும்.

ஆயுள்வேதம், அருத்தவேதம், தனுர்வேதம், காந்தருவவேதம் என்ற உபவேதங்கள்நான்கும்.

வேதாந்தம், வைசேடிகம், பாட்டம், பிரபாகரம்; பூர்வமீமாஞ்சை, உத்தரமீமாஞ்சை என்றுசொல்லப்பட்ட ஆறுசாஸ்திரமும்.

மச்சியம், கூர்மம், வராகம், வாமனம், பிரமம், வைணவம் பாகவதம், சைவம், இலிங்கம், பௌடிகம், நாரதீயம், காருடம்

பிரமகைவர்த்தம், காந்தம், மார்க்கண்டேயம்; ஆக்கினேயம், பிரமாண்டம், பதுமம், என்றுவிள்ளக்கூடிய பதினெண்புராணமும்.

காமிகம்; யோகசம், சிந்தியம், காரணம், அசிதம், தீப்தம், சூக்குமம், சகத்திரம். அஞ்சுமான், சுப்பிரபேதகம், விசயம், நிசுவாசம், சுவாயம்புவம், அனலம், வீரம், இரௌரவம், மகுடம், விமலம், சந்திரஞானம், விம்பம்; புரோற்கீதம்; இலளிதம், சித்தம், சந்தானசர்வோத்தம், பாரமேச்சுரம் கிரணம்; பேதம், வாதுளம் என்ற இருபத்தெட்டாகமமும்.

ஆதுலர்க்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமத்தார்க்குண்டி, பசுவுக்கு வாயுறை, சிறைச்சோறு, ஐயம், தின்பண்டம் நல்கல், அறவைச்சோறு; மகப்பெறுவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல், அறவைப்பிணஞ்சுடுதல், அறவைத்தூரியம், சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதர், கண்ணாடி, காதோலை கண்மருந்து, தலைக்கெண்ணெய், பெண்போகம், பிறர்துயர்காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏறுவிடுத்தல், விலைகொடுத்துயிர்காத்தல், கன்னிகாதானம், என்று நவிலக்கூடிய முப்பத்திரண்டு தருமமும்.

அக்கரவிலக்கணம், இலிகிதம், கணிதம், வேதம், புராணம், வியாகரணம், நீதிசாஸ்திரம், சோதிடசாஸ்திரம், தருமசாஸ்திரம், யோகசாஸ்திரம், மந்திரசாஸ்திரம், சகுனசாஸ்திரம், சிற்பசாஸ்திரம், வைத்தியசாஸ்திரம்; உருவசாஸ்திரம், இதிகாசம், காவியம் அலங்காரம், மதுரபாடனம், நாடகம், நிருத்தம், சத்தப்பிரமம், வீணை, வேணு, மிருதங்கம், தாளம்; அத்திரப்பரீக்ஷை, சத்திரப்பரீக்ஷை; கனகப்பரீக்ஷை, இரதப்பரீக்ஷை, கஜபரீக்ஷை அசுவபரீக்ஷை; இரத்தினபரீக்ஷை, சங்கிராமவிலக்கணம், மல்யுத்தம், ஆக்ருடணம், உச்சாடனம், வித்துவேடணம், மதனசாஸ்திரம், மோகனம், வசீகரணம், இரசவாதம், காந்தருவவாதம், பைபீல்வாதம், கவுத்துகவாதம், தாதுவாதம், காருடம், நட்டம், முட்டி, ஆகாயப்பிரவேசம், ஆகாயகமனம், பரகாயப்பிரவேசம், அதிரிசயம், இந்திரசாலம், மகேந்திரசாலம்; அக்கினிஸ்தம்பம், ஜலஸ்தம்பம், வாயுஸ்தம்பம், திட்டிஸ்தம்பம், வாக்குஸ்தம்பம், சுக்கிலஸ்தம்பம் கன்னஸ்தம்பம், கட்கஸ்தம்பம், அவஸ்தைப் பிரயோகம் என்ற அறுபத்துநான்கு கலைஞானமும்.



நிலம் நீர், தீ, காற்று, விசும்பு என்ற பூதமைந்தும் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம், என்ற, புலனைந்தும், வாக்கு, பாதம், பாணி, பாயுரு, உபத்தம் என்ற கருமேந்திரியமைந்தும் மனம், புத்தி, சித்தம், அகங்காரம், என்ற கரணம் நான்கும் சுழிமுனை, இடை, பிங்கலை, காந்தாரி, அத்தி, சிகு, அலம்புடை, புருடன், குரு; சங்கினி என்ற நாடி பத்தும் ஜாக்கிரம், சொற்பனம், சுழுத்தி, துரியம், துரியாதீதம் என்ற அவஸ்தை யைந்தும் ஆணவம், மாயை, காமியமென்ற மலமூன்றும் சாத்துவிகம், இராசதம், தாமதமென்ற குணமூன்றும் வாதம், பித்தம், சிலேட்டுமம் என்ற, பிணி மூன்றும் அக்கினிமண்டலம், ஆதித்தமண்டலம், சந்திரமண்டலமென்ற; மண்டலமூன்றும் காமம், குரோதம், உலோபம், மோகம், மதம், மாச்சரியம், இடும்பை, அசூயை யென்ற விகாரம் எட்டும் மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாகதம், விசுத்தி, ஆக்ஞை என்ற ஆதாரம் ஆறும் இரத்தம், இரதம், சுக்கிலம், மூளை, தசை, எலும்பு, தோல் என்ற தாது ஏழும் கண், காது, மூக்கு, வாய், குதம், குய்யம் என்ற வாயில் ஆறும் பிராணன், தேவதத்தன், தனஞ்சயன், சமானன், என்ற வாயுபத்தும் அன்னமயம், பிராணமயம், மனோமயம்; விஞ்ஞானமயம், ஆனந்தமயம் என்ற கோசம் ஐந்தும், என்ற தொண்ணூற்றாறு தத்துவமும்

இன்னும் மற்றகலைகளும் ஞானாசாரியார் மூலமாக ஐயமறக் கற்றிருக்கிறேன்.

(அரி-வ-ம்.) சபாஷ் பாலகா?

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி பாலகன் கூறியவை யாவற்றுங் கவனித்தீரா!

(மந்-வ-ம்.) பூபாலகா (தந்தை மகற் காற்று நன்றியவையத்து முந்தியிருப்பச்செயல்) என்ற நீதியையுணர்ந்த தாங்கள் பாலகனை ஆசானிடமாக்கி கல்விகற்கும்படி செய்தீர்கள். பாலகன் (மகன் றந்தைக் காற்று முதவியிவன்றந்தை யென்னோற்றான் கொல்லெனுஞ் சொல்) என்ற மனுநெறியின் இணங்கச் சகலசாஸ்திரங்களையுங் கற்றுக்கொண்டனன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சத்தியகீர்த்திகேளாய் தனயனிங்கெடுத்துரைத்த
வித்தைகளைக்கேட்டுணர்ந்த விரும்பினேற்றுனதர்மம்

பத்தியாச்செய்யவேண்டும் பாரினிரப்போர்தன்னை
அத்திமேல்முரசமேற்றி யறைந்திவண்வரச்செய்வாயே.

(அரி-வ-ம்.) மந்திரி சத்தியகீர்த்தி எனதருந்தவ மைந்தன் தேவதாசன் சிறந்த கல்வி சீக்கிர முணர்ந்ததைதமகோ ரவியுற்றயான் சொல்லொணுப் புளகாங்கிதங் கொண்டேன் ஆதலால் அந்தணர், ஜோகி, ஜங்கம, பரதேசி, சந்யாசி, ஏழையர் முதலியவர்களுக்குத் தானஞ்செய்ய விரும்பினேன் நீர் சீக்கிரத்தில் மேற்கூறியவர்களெல்லா மிங்குவரும்படியாகப் பேரிகை முழக்கச் செய்யும்.

(மந்-வ-ம்.) அவ்விதமே செய்கிறே னரசே.

மந்திரி விருத்தம்.

ஆடாசேவகாநீ யடைவுடனானைமீதிற்
பேரிகையதனையேத்திப் பெட்புடனறைந்தேயெந்த
வூரினும்வாசமாகு முத்தமவறிஞர்தம்மை
நேரதாய்வரவேயிங்கு நிமிஷத்திற்செய்குவாயே.

(மந்-வ-ம்.) அடே சேவகா நமது மஹாராஜா தானஞ்செய்ய எத்தனித்தனராதலால் நீ மதை மதக்களிற்றின்மீது தானமுரசத்தையேற்றி யறைந்து பற்பல நாடு நகரங்களில் வாசஞ்செய்யும் அந்தணர் சந்யாசி, பரதேசி, ஏழையர், முதலியவர்களை யழைத்து வருவாய்.

(சே-வ-ம்.) ப்ரபூ ஆக்ஞையின் பிரகாரம்.

(சே-வ-ம்.) இதனால், அந்தணர், அருகி, சோகி, சங்கமர், பரதேசி சந்யாசி ஏழையர், இவர்களுக்குத் தெரிவிக்கிற தென்னவென்றால் கோசலநாட்டுக்கதிபதியாகிய அரிச்சந்திரச் சக்கரவர்த்தியானவர் தனது புத்திரன் தேவதாசன் பஞ்சவயதிலேயே சகல சாஸ்திர,விற்பனனைதை யுத்தேசித்து நித்தியதான தர்மத்தைப் பார்க்கினும் இன்று விசேடமாய்ச் செய்வதினால் யாவரும் விரைவினில் வந்து சேர்வீர்களாக.



யாசகர்வருகிற தரு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

யாசகர்வந்தாரே சந்தோஷமாய்
யாசகர்வந்தாரே

அநுபல்லவி.

காசினிபோற்றுகழ் கோசலநாட்டினை
மாசிலாதரசுசெய் ராஜனரிச்சந்த்ரன்முன் (யா)

சரணங்கள்.

சேவகன்முரசினால் கூவியவுரைதனை
ஆவலுடனேகேட்டுத் தீவரத்துடனேடி (யா)

(யாச-வ-ம்.) ப்ரபையா ஆசாரவாசலில்.

(சே-வ-ம்.) யாரது எங்குவந்தீர்கள்.

(யாச-வ-ம்.) ஐயா நாங்கள் பரதேசிகள் காசியிலிருந்து இராமேஸ்புரத்துக்குத் தீர்த்தயாத்திரைக்காகச் செல்கின்றோம்இங்கு அரிச்சந்திரச் சக்ரவர்த்தியானவர் அருகிகளுக்குத் தானஞ்செய்வதாகக் கேள்வி யடைந்து வந்தோம்.

(சே-வ-ம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம் இவ்விடத்தில் வீற்றிருங்கள்.

(சே-வ-ம்.) ப்ரபு யாசகர்களனைவரும் ஆசாரவாசலின்கண் வந்திருக்குறார்கள்.

(மந்-வ-ம்.) அப்படியா.

(அரி-வ-ம்.) ப்ரதான்சிரேஸ்டா யாசர்கள் வந்திருக்கிறார்களா?

(மந்-வ-ம்.) அரசே இதோ வந்திருக்கின்றார்கள்.

(அரி-வ-ம்) மிகவுங் குதூகலம் அமைச்சே எனது பத்தினியாகிய அன்னமாபுரிமன்னன் செல்வியானவள் அன்னவளருமைச் சுதனாகிய தேவதாசன் வித்தையின் தேர்ச்சியைக்கேட்டு (ஈன்றபொழுதின்பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோனெனக்கேட்டதாய்) என்ற நீதியின்படி சந்தோஷமடைவதற்காகவும் தானஞ்செய்ய வேண்டியதற்காகவும் தாதியிடங்கூறி யன்னவளை யழைத்துவரச் செய்யும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை மகாராஜ.

(மந்-வ-ம்.) அடி தாதி நீ அந்தப்புரத்திற்குச் சென்று நமதிறைவர் பத்தினியை யன்னவரழைத்துவரச் சொன்னரெனக்கூறி விரைவாக அழைத்துவா.

(தாதி வசனம்.) உத்தரவுபோல் அழைத்துவருகின்றேன் ப்ரபூ.

---

## சந்திரவதி அந்தப்புரத்தில் தனியாகவீற்றிருந்து அம்பாளைத் தோத்திரஞ்செய்தல்

முன்னால் விருத்தம்.

கனத்தாள்வெங் கயமுகனுங் கந்தனுஞ்ரம்
பந்தனும்பா லுண்ட கும்பத்
தனத்தாளே யறம்வளர்த்த கரத்தாளே
திரிபுரங்கள் தணலாய் வேகச்
சினத்தாளே யடியவர்கள் செய்தபிழை
பொருத்திரக்கஞ் செய்யுஞ் செய்ய
மனத்தாளே நின்கமல மலர்த்தாளே
யென்முடிமேல் வைத்தாள் வாயே.

### சந்திரவதிசொல் தரு

ஒருநாள்மருவிய என்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்ரியை[?] காம்போதி-தாளம் ஆதி.

பல்லவி.

அம்பாளுனதிருச் செம்பொற்பாதந்துதிசெய்
யடியாளைக் காத்தருள் வாய்.

அநுபல்லவி.

அம்பரந்தனிற்றுயில் பைம்பொன் வண்ணன் றன்சகோ
தரியேமாஜெகதீஸ் வரியேதிரிபுரையே (அ



சரணங்கள்.

சீலன் றனைபுணர்ந்துக் காமன் றனைச்சிதைத்துக்
கோலப்புரமெரித்துக் குஞ்சரத்தையுரித்து
மாலுடன்வதிர்ந்து மதிசடைபுனைந்து
சிலைமரன்பிறந்துத் தென்கூடலடுத்துச்
சித்தமகிழ்ந்துவர விற்றிடுமாநல்ச
மர்த்தன்மேலுமார்பா வத்தனோடார்வமாய்

மன்றுள் ருத்தட நின்றுயர் வான்வளர்
நின்றேர் யப்புற வன்று நடம்புரி (அம்)

கொங்கலர் மலர்வேணி கொத்தாபரணம்பூணி
மங்களகல்யாணி மாட்சிசேருட்கேணி
துங்கமார்பூரணி துகளறுகாரணி
பொன்கடல்தாரணி புகழ்ந்திடுமாரணி
பொற்புறுங்கமல நற்கணிபுனித
விற்பனியமுதம் கற்கண்டொத்ததேர்பா

விண்டுமேனாடொறுந் தொண்டுசெய்வோர்பவந்
கண்டனஞ்செய்தருள் முண்டகச்சரணி (அம்)

புவனபுரந்தரி புகலொண்ணாச்சுந்தரி
பவமொழிந்தரந்தரி பக்தர்பால்சிரந்தரி
சிவன்மகிழ்நாரி தேருமோங்காரி
நவலங்காரி நாககுமாரி
ரத்தினம்விம்பதி முத்தினமே பதி
நத்துபுலாக்குமுக் குத்தியணியுந் தேவி

நந்நுலா மதனை யுந்திவாழ்கல்யாண
சுந்தரன் சொல் தமிழ் விந்தை மாலை யணி (அம்)

---

(தாதி-வ-ம்.) அம்மணி வந்தனஞ் செய்கின்றேன்.

(சந்-வ-ம்.) கல்யாண் தாதி ஏது விஷயமாயிங்குவந்தனை.

(தாதி-வ-ம்.) மாஹஸ்திரி மஹாராஜா அவர்கள் மந்திரி பிரதானிகளுடனும் பாலகனுடன் கொலுவீற்றிருக்கிறார்கள் தங்களை யழைத்து வரச்சொன்னார்கள்.

(சந்-வ-ம்.) அப்படியா.

### சந்திரவதிசொல் தரு.

இராகம் - காம்போதி - தாளம் - ஆட்ட

பல்லவி.

சகியே மாந் தளிர்நிறச் சரீரச் செந்திருநிக

அநுபல்லவி.

மகிதலம்புகழ் மன்னரெனைச்சபை.
வரவழைத்ததோர் வகைதெரிகிலேனே.

சரணங்கள்.

விந்தைமணியேயு கந்தவாசசனத்
தெந்தன்மணாளர்பொ ருந்தியிருக்கையில்
முந்தநாள்முத லிந்தநாள்வரை
அந்தநல்லவை வந்ததில்லையே. (ச)

(சந்-வ-ம்.) தாதி எனது ப்ராணேசரானவர் கொலுச்சமுகத் துக்கு என்னை மணந்தநாள்முத லிந்நாள்வரை யழைத்ததில்லையே யின்றழைத்த தென்னவோ?

(தாதி-வ-ம்.) மாதுஸ்திரீ தங்களை யழைத்த காரணமெனக் கின்னதெனத் தெரியவாராது.

(சந்-வ-ம்.) உனக்கின்ன தெனத்தெரியவாராதா

---

## சந்திரவதி வருகிறபாதம்.

சந்திரவதி முன்னால் விருத்தம்.

அரியநல்லமுதருந்தினுங் காதலரழைக்கில்
புரிவின்வல்லியினண்ணுவர் புரந்ததாய்தந்தை
உரியமைந்தர்மற்றிவரினுங் கேள்வர்பாலோங்கும்
பிரியமெய்துவர்கற்புடைப் பேரெழிலினரே.

(சந்-வ-ம்.) தாதி கற்பில் சிறந்த மாதர்கள் கிடைத்தற்கரிய மேலான தேவாமிர்தத்தையொத்த போசனத்தைப் புசிக்குங் காலத்திலுந் தங்கள் நாயகர் தங்களை யழைப்பார்களாயினுடனே அவ்வகைப்போஜனத்தையும் விட்டு அவர்களிடத்திற் செல்லவேண்டுமென்றும் அன்றியும் தங்களை மெய்வருந்திப் பெற்ற மாதா பிதா



தாங்களன்புடனே பெற்ற புத்திரர்களாகிய இவர்களிடத்திற் றூங்கள் கொண்டிருக்கும் அன்பைப் பார்க்கிலுங் கணவரிடத்தி லிருந்த வுள்ளன்புடையவராயிருக்கவேண்டுமென் றுஞ்சாஸ்திரம் ஆனதாலிறைவ ரெதுகாரணத்தாக் கழைத்தாற்றென்ன.

சந்திரவதிசொல் தரு.

இராகம் - கமாசு - தாளம் - யேகம்.

பல்லவி.

சேடியே நாம் மன்னர்சபை செல்லலாம்வாடி (சே)

அநுபல்லவி.

எட்விழ்மலரணி யேந்தொழில் மாதர்கொண்ட
ஆடவர் தஞ்சொல் மறுக்கலாகா தாகையால் அடி (சே)

(சந்-வ-ம்.) தாதி இதோ விறைவர் சமுகம்வந்து சேர்ந்தோம் ஆகையால் நீயிங்கு நில் யான் அரசனைவணங்கி யழைத்த காரணமின்னதெனத் தெரிந்துவருகிறேன்.

(தாதி-வ-ம்.) நல்ல தம்மணி.

சந்திரவதி அரசனை வணங்குந் தரு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

புவிராஜனே யுல்லாசனே போற்றினேன் ப்ராணேசனே (புவி

அநுபல்லவி.

குவிந்ததோர் தோளுடைய கோதிலாத தாளுடைய (புவி

சரணங்கள்.

விந்தைமிகு தாரணியும் வேந்தர் முதலோர்பணியும் (புவி
அடியாளை நீரின்று ளழைத்ததென்சொல்வீர் மன்னு (புவி

(சந்-வ-ம்.) பிராணேசா வந்தனஞ்செய்கின்றேன்.

(அர-வ-ம்.) கல்யாண் பிராணசகி சமீபத்தில் வீற்றிரு.

(தேவ-வ-ம்.) அம்மணி வந்தனஞ் செய்கின்றேன்.



(சந்-வ-ம்.) கல்யாண் பாலகா.

(சந்-வ-ம்.) கண்ணாளா அந்தப்புரத்தில் சகி சனங்களுடன் வீற்றிருந்த வென்னைத் தற்சமயங் கொலுச் சமுகத்துக்கழைத்தகாரணம் உத்தரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நமது அருந்தவக் கண்மணியாகிய தேவதாசன் சகல சாஸ்திரங்களிலும் நிபுணனானதை அன்னவன் வாக்கினாற் கேள்வியுற்ற யான் மிகவுங் குதூகலனாகி யாதொரு வறியோர்களுக்குந் தானஞ்செய்ய வுத்தேசித்திங் கழைத்ததேயன்றி வேறல்ல.

(சந்-வ-ம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம்.

## தானஞ்செய்கிற பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கருணைமாபுரியையாளுங் காவலனீன்றெடுத்த
கன்னிகையாளேயெந்தன் காதலுக்கிசைந்தகண்ணே
வன்னமாமயிலேபொன்னே வறியவர்முதலோர்க்கின்று
நன்மையமாகத்தானம் நல்குவோம்வருகுவாயே.

சந்திரவதிசொல் தரு.

கைஜா ஜாத்தடாலா என்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-ஆதி,

பல்லவி.

தானஞ்செய்ய வாராய் பெண்ணே சந்திரவதியே கண்ணே

அநுபல்லவி.

நானிலமும் விரி வானகன்னபுரி
மான்காரன் மன்ன னைவன் மகளே அன்ன (தா)

சரணங்கள்.

மோனநிலையுணர்வோர்க்கும் ஞானபரதேசியர்க்கும்
கானமீதிகை லானதவயோக
மானவரதியர் ஞானபரதேசியர்க்கும் (தா)





பர்சுகநந் தேவதாசன் குலமான்மழு வேந்தேசன்
சில் ல்லருளால் சாலவுங்குருவால்
ஞால தின்மேலே மூலமறை யுணர்ந்ததாலே (தா)

(ச்-வ-ம்.) ப்ராணசகி நாம் மிகுந்த குதூகலமாக வேதியர், மாதவர், சந்நியாசி, ஏழைகள் முதலானவர்களுக்கு உன்மனோபீஸ்டப்படியு மென் தமிப்பிராயப்படியும் முப்பத்திரண்டுவித தர்மமுஞ் செய்வோமா?

சந்திரவதிசொல் தரு.

திருக்கடையூரில் வாசா என்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

கோரி யபடியேதானே சீருடனே செய்வீர்தானே

அநுபல்லவி.

ஆரணமுணர்ந்தோரா பாரிலுள்ளோர்க் குபகாரா
வீர சூர செந்தாரா சூரியகுலத்து தாரா. (கோ)

சரணங்கள்.

நாலுவேதமும் ஆயசாஸ்த்ரம் சீலமாய் நன்னூலின் சூஸ்த்ரம்
பாலருமுணர்ந்ததாலே சாலவுந் தானமென்மேலே. (கோ)

(ச்-வ-ம்.) ப்ராணேசா (குறள்) பழியஞ்சிப் பாத்தூணுடைத்தாயின் வாழ்க்கை வழியெஞ்சலெஞ் ஞான்றுமில்; அதாவது இப்பிரபஞ்சத்தினிடமாகச் செனித்த யாதர்மொருவர் பழியாவத்துக்கஞ்சித் திரவியஞ் சம்பாதித்துப் பிரமச்சாரி, வானப்ரஸ்தன், சந்நியாசி; அந்தணர்; வழியவர்; இரவலர், தென்புலத்தார், தெய்வம், விருந்தினர்; சுற்றத்தார்; யாவர்க்கும் கொடுத்து மீந்ததை தானடைந்துகொள்வாராகின் அவர்களுடைய சந்ததியானது நிலைபெற்றிருக்குமென்பது மனுஸ்மிருதியாதலால் தாங்கள் கோரியபடி சோடசதானமுஞ்செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

(அரி-வ-ம்.) நல்லது கண்மணி.

(யாச-வ-ம்.) மஹாப்ரபூ வந்தனஞ் செய்கின்றோம் யாசகர் முதலிய யாவர்களும்.

(அரி-வ-ம்.) கல்யாண் ஹே யாசகர்களே மனுஸ்மிருதியிற் கூறியபடி இதோ சோடச தானங்களுஞ் செய்கின்றேன் பெற்றுக் கொண்டு சென்றுவாருங்கள்.

(யாச-வ-ம்.) இதோ பெற்றுக்கொண்டோம் அரசே மிகவுஞ் சந்தோஷம் சென்றுவருகிறோம்.

(அரி-வ-ம்.) நல்லது சென்றுவாருங்கள்.

## விஸ்வாமித்திரர் வசிட்டரிடம் சபதங்கூறி மகாமேருவின் சாரலுக்கு வரும்

பாரமுப்புரி நூலும் யென்றமெட்டு.
இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பூதலத்தவர் — பூதலத்தவர்
புத்தியுற்றவர் — போதத்தவர்
கோதறப்பணி — மாதவத்துயர்
கோசிகமுனி — தோற்றினன். (பூ)

சண்டனுங்கறைக் — கண்டனுங்கமல
முண்டகத்திலங் — கொண்டவன்றரு
விண்டுவுமருள் — பண்டுறச்செய்த
விஸ்வாமித்திரன் — தோன்றினன். (பூ)

விஸ்வாமித்திரர் வனச்சாரலுக்குவந்து தனக்குள் ஆலோசிக்கும் வசனம்.

ஆ ! ஆ ! தர்மமே ஒருருவமாக வடிவெடுத்துக் கோசலைநாட்டைப் பரிபாலனஞ் செய்யும் திருச்சங்குபாலனை மெய்யரிச்சந்திரனை இந்திரன்சபையில் வசிட்டன் பகையினலன்றே பொய்யனென்று கூறிவிட்டோம் இதற்கென்னசெய்யலாம்,



விஸ்வாமித்திரர் இவ்விதம் ஆலோசித்துக்கொண்டு இருக்குங்கால் தவமுனிவர்கள் வந்து அவ்வரை வணங்கும் வசனம்.

மாதவத்திற் சிறந்த விஸ்வாமித்திர மகாரிஷியே முனிவர்கள் வந்தனஞ் செய்கின்றோம் தாம் தேவேந்திரன்சபைக்குச் சென்றிருந்ததில் அங்குநடந்த விஷயாதிகளைச் சவிஸ்தாரமாய்ச் சொல்லப்பிரார்த்திக்கின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் முனிவர்களே.

விஸ்வாமித்திரர் தனக்குள் ஆலோசிக்கும் வசனம்.

இந்தமுனிவர்களாலேயே நாம்கொண்ட எண்ணத்தை நிறைவேற்றவேண்டும் ஆகையால் இவர்களிடத்தில் தேவர்கள் சபையில் நடந்த விஷயத்தை உள்ளதைச்சொல்லாமல் நமதுகாரியத்துக்கியன்றவாறு சொல்வோம்.

(விஸ்-வ-ம்.) ஓ முனிவர்களே யான் தேவர்கள் சபையில் சிறந்த தவசிரேஷ்டர்களாற் புகழ்ந்து சொல்லலான ஓர் அருமையான யாகத்தைக் கேட்டு அதைச்செய்து முடிக்கவேண்டுமென்ற அவாவினால் இம்மேருச்சாரலுக்கு வந்தேன் அதற்காகத் தாங்களெனக்குச் செய்யவேண்டிய சகாயமொன்றிருக்கிறது நீங்கள் சம்மதிப்பீர்களாயிற் சொல்கின்றேன்.

(முனிவர்கள்-வ-ம்.) தமது உத்தரவுபோல் நடக்கச்சித்தமாயிருக்கின்றோம் அவ்விஷயத்தைக் கூறும்.

(விஸ்-வ-ம்.) ஓ முனிவர்களே நீங்கள் அயோத்தியாபுரியையாளும் அக்குரான், அந்திமான், அரிச்சந்திரன், கன்னான், சந்திமான், சிசுபாலன், தந்தவக்கிரன் என்ற இடையெழு வள்ளலில் ஒருவனாகிய திருச்சங்கு புத்திரனைக்கண்டு விஸ்வாமித்திரர் ஓர் பெரியயாகம் செய்ய எத்தனித்திருக்கின்றார் அதற்குச் சிறிது திரவியம் வேண்டியதிருக்கிறது ஆகையால் இறந்தார்க்கும் இல்லாதவர்க்கும் இறந்தார்க்கு மில்வாழ்வானென்பான்றுணை யென்ற நீதிக்கிணங்கத் தான்கொடுக்க முடியுமா வென்பதைத் தெரிந்துவரச் சொன்னாரென்று கூறிப் பதிற்கேட்டுச் சீக்கிரம் வாருங்கள்.

(முனி-வ-ம்) அவ்விதமே செய்து வருகின்றோம்.

## முனிவர்கள் அயோத்திக்கிவரும்பாகம்.

(முனி-வ-ம்.) ஆரடா ஆசாரவாசலின்கண் சேவகன் அரசன் என்ன செய்கின்றான்.

(சே-வ-ம்.) சுவாமிகளே அனேகவந்தனம். மஹாராஜா சபாமண்டபத்தின்கண் வீற்றிருக்கின்றார்கள்.

(முனி-வ-ம்.) சேவகா உட்செல்லலாமல்லவோ.

(சேவ-வ-ம்.) சுவாமிகளே தடையின்றிச் செல்லலாம்.

(அரி-வ-ம்.) முனிசிரேஸ்டர்களே வந்தனஞ் செய்கின்றேன் இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(முனி-வ-ம்.) கல்யாண் பூபாலகாஇதோவீற்றிருக்கின்றோம்.

(அரி-வ-ம்.) தவசிரேஸ்டர்களே தாங்கள் அடியேனைக்கோரி வந்த விஷயம் உத்திரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

(முனி-வ-ம்.) கோசலாதிபா அமராசந்திர சூரியரிந்திரனும் செய்வதற்கரிதான ஓர் யாகத்தைத் தவத்திற்சிறந்த விஸ்வாமித்திர மாமுனிவர் செய்வதற்கெத்தனித்திருக்கின்றாராகையாலதற்கு மிகுந்த திரவியம் வேண்டியதிருப்பதால் தம்மால் கொடுக்கமுடியுமா வென்பதைத் தெரிந்து வரச்சொன்னார்.

(அரி-வ-ம்.) ஓ முனிவர்களே தாங்கள் சென்று விஸ்வாமித்திர முனிவரிடத்தில் யாகத்துக்கு வேண்டிய திரவியம் எவ்வளவோ அவ்வளவு கொடுக்கச் சம்மதித்தேனென்று செப்புங்கள்.

(முனி-வ-ம்.) நல்லதரசே சென்றுவருகின்றோம்.

(அரி-வ-ம்.) அனேக வந்தனம் சென்று வாருங்கள்.

(முனி-வ-ம்.) கல்யாண் மஹாராஜனே.



## முனிவர்கள் விஸ்வாமித்திரரிடம் வருகிறபாகம்.

(முனி-வ-ம்.) பிரபூ வந்தனஞ் செய்கின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் முனிவர்களே தாங்கள் சென்றுவந்த விஷயாதிப்பாது.

(முனி-வ-ம்.) தவசிரேஸ்டா தேவரீராக்ஞைப் பிரகாரம் அயோத்திக்குச் சென்று திருச்சங்கு பாலனிடம் யாகத்துக்கு வேண்டிய திரவியங் கேட்டதில் தருகிறதாக வாக்களித்தனன்.

(விஸ்-வ-ம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம் யான் யாகஞ் செய்யும்போது வேண்டிய திரவியம் அன்னவனிடம் பெற்றுக் கொள்ளுகின்றேன் தாங்கள் தங்கள் தங்கள்ஆதாஸ்தானஞ்சென்று வாருங்கள்.

(முனி-வ-ம்.) நல்லது சென்றுவருகின்றோம் அனேக வந்தனம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் முனிவர்களே.

அயோத்தியாகாண்டம் சம்பூரணம்.



உ

பராபரத்துணை.

# வஞ்சவில்லா காண்டம்.

## விஸ்வாமித்திரர் அரசனிடம் வருகிறபாகம்.

### விஸ்வாமித்திரர் விருத்தம்.

மண்டமெம்புகழுங்காதி மைந்தனாயவதரித்தேன்
எண்டிசை துதிவசிட்ட ரிஷியினால்முனிவனானேன்
விண்டலமதனிற்சத்ய வேதனைப்பொய்யனாக்கக்
கொண்டதோரெண்ணத்தோடு கொற்றவன்சபைவந்தேனே.

(விஸ்-வா-ம்.) மஹா மேன்மைதங்கிய பங்கயப்புட்பத்துறை புங்கவன்வழிபிறப்பிறந்த குசனென்பவர்க்கு குசன், குசநாபன், வசுர்த்தன், வசு யென்கிற பெயருடைய நான்கு புத்திரர்கள்; அவர்களில் குசனுக்கு கிமிரசமென்னும் நாடும்; குசநாபனுக்கு அருமையான கௌசாம்பி நாடும், வசுவுக்கு வசுமதியென்னும் நாடும், வசுர்த்தனுக்கு புராணமென்றநாடும், தகப்பன்கொடுக்கப் பெற்று ஆண்டுவருங்கால் மேற்கூறிய நால்வர்களில் கௌசாம்பி நாட்டைப் பரிபாலனஞ்செய்யும், குசநாபனுக்கு நூறுபெண்கள் பிறந்தார்கள். அன்னவர்களை சூளிபுத்திரனான பிரமதத்தனுக்கு விவாகஞ்செய்து கொடுத்தபின்பு நீண்டநாளாகப் புத்திரனில்லாமையால் அன்னவர் ஓர் வேள்விசெய்ய அவ்வேள்வியினிடமாக வெனது பிதாவாகிய காதிமஹாராஜா வவதரித்துச் செங்கோற் கைக்கொண்டு அந்நாட்டைப் பரிபாலித்துவருநாள் அன்னவர் செய்த அருந்தவத்தில் கௌசிகை என்ற ஓர் பெண்ணும் கோசிகனென்ற யானும் பிறந்தோம். அப்பால் கௌசிகையென்ற எனது தமக்கையை இருசிகமாமுனிவருக்கு வதுவைகூட்ட அன்னவர் சாபத்தால் மானதவாவியிலே விழுந்து சாயுச்சியுடனே சேர்ந்தமிசிற கோமதிநதியானாள் அப்பால் யான் என்னுடைய பிதாவால் திருமுடிபுனையப்பெற்று மேற்கூறிய கௌசாம்பிநாட்

டை அரசாண்டுவருகையில் எனக்கு மஹா பராக்கிரமசாலிகளாகிய நூறு புத்திரர்கள் பிறந்தார்கள் அன்னவர்களுக்குப் பல சாஸ்திரங்களும், யானையேற்றம், குதிரையேற்றம், வில்வித்தை, மல்வித்தை, அஸ்திர சஸ்திரப்பரீக்ஷை முதலியவைகளும் போதித்துச் சீர்த்தியாயிருக்குங்காலத்தில் ஒருநாள் குடிகளுக்குக் குடிலம்விளைத்த கோரவிலங்கினங்களைக் கொல்லும்பொருட்டு இரத கஜதுரகபதாதியென்ற நான்குவகைச் சேனைகளுடனும் யென்து புத்திரர்கள் நூற்றுவருடனும் காட்டிற்சென்று வேட்டையாடி விலங்கினங்களைக்கொன்று திரும்புங்கால் அங்கு தவமிழைத்துக்கொண்டிருந்த வசிஷ்டரிஷியானவன் பசியினால்வருந்தும் எங்களைக் கண்ணுற்று காமதேனுவால் போஜனமளிக்கச்செய்தனன். அக்கால் பசிதீர்ந்து எங்களது பசியைத்தீர்த்த அப்பசுங் காமதேனுவை கைக்கொள்ளவேண்டுமென வெண்ணிப் பிடிக்கத்தொடருகையில் அதனது ரோமங்களின்று அனேக வீரர்களுற்பவித்த எனது சேனைகளியாவையுந் துணித்து அக்காமதேனுவுடன் அந்தரத்திற்சென்றனர். அதைக்கண்டெனது குமாரர் நூற்றுவரும் இவ் வசிஷ்டனாலல்லவோ அக் காமதேனுவெனது சேனைகளையழித்து நம்மையும் இம்ஸித்ததெனக் கடுஞ்சினங்கொண்டு அன்னவனோடெதிர்த்துச் சமர்புரிந்தனர். உடனே அவ்வசிஷ்டன் கோபாவேசனாய் தனது விழிக்கனலால் எனது புத்திரராகிய நூற்றுவரையும் பஸ்மீகரிக்கக்கண்ட யான் கடுஞ்சினமுற்று வில்லைவளைத்து நாணையேற்றி அம்புகளைத்தொடுத்து அன்னவன்மீதில் விடுக்குங்காலையில் அவன் தன் அஸ்தத்திலிருந்த தண்டத்தை முன்னூன்றி யெதிர்க்கவென்றனன். தத்ஸமயம் யான் பிரயோகித்த அஸ்திரமுதல் மற்ற யாவையும் கபளீகரித்து எனது பெலத்தையும் ஆக்ர்ஷணம்செய்யும் தன்மையையறிந்த யான் இல்லறத்தில் யாதொரு பிரயோஜனமுமில்லையென மதித்து எனதரசாக்ஷியைமந்திவசமொப்பிவித்து தச்சணமே துறவுபூண்டு வடதிசையைநாடி[illegible] தவத்தைக் கெடுக்கவந்த மேனகைக்குச் சாபமளித்துத் தென்திசையையுற்று அரிச்சந்திரனது தந்தையான திருசங்கு மஹாராஜனுக்கு அந்தரசுவர்க்கப்பதவி யளித்தேன். அப்பேர்க்கொற்ற வென்னால்முடியாதது ஒன்றுளதா. ஆதலின் இந்திரன் சபையிலே நேற்று வசிஷ்டனிடம் மெய்யரிச்சந்திரனைப் பொய்யனாக்குகிறேனென்ற சபதத்தை நிறைவேற்ற இங்கு பிராப்தமாயிருக்கின்றேன்.



(விஸ்-வ-ம்.) ஆரடா ஆசாரவாசலின்கண் சேவகன்.

(சேவ-வ-ம்.) பிரபூ வந்தனம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் சேவகா உன திறைவனிடஞ்சென்று ஆசாரவாசலின்கண் விஸ்வாமித்திர ரிஷி வந்திருக்கிறாரென்று தெரிவிப்பாயாக.

(சேவ-வ-ம்.) இதோ தெரிவிக்கின்றேன்.

(அரி-வ-ம்.) ஹே ப்ரதான் எனதுபிதாவுக்கு அந்தரசுவர்க்கமளித்த மஹாநுபாவனாகிய விஸ்வாமித்திர மஹாரிஷியானவர் ஆசாரவாசலின்கண் வந்திருக்கின்றாராம் அன்னவரை எதிர்சென்றழைத்து வருவோம்வாரும்.

(மந்-வ-ம்.) இதோ வருகின்றேன் ப்ரபூ.

# அரசன் விஸ்வாமித்திரரை

## வணங்கும்பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கருணையங்கடலேபோற்றி கானகவாசாபோற்றி
அருமறைமுடிவேபோற்றி அருள்மிகுநிதியேபோற்றி
திருமலிசடையாய்போற்றி செய்தவஞ்சிறந்தாய்போற்றி
[illegible]விலாத்தவத்தோரேற்றும் வள்ளலேபோற்றிபோற்றி.

## அரிச்சந்திரன்சொல் தரு.

நைநாமோரிரே என்றமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

[illegible]தாவந்தனம் தவமுறும் நாதாவந்தனம் பவமறும் (நா)

அநுபல்லவி.

[illegible]தாமரைமலர்ச்சுகன் மங்கைபாகனொசிகர் (நா)





சரணங்கள்.

எந்தைதனக்கு அன்றன் விந்தைசொர்க்கங்கொடுத்த
எழில்மலர்ப்பாதா யாவரும்பணி
எழில்மலர்ப்பாதா இணையணி யெழில்மலர்ப்பாதா (நா)
பந்தபாசக்கடலைத் தந்திரமாய்க்கடந்த
பக்தியுள்ளோனே ஞானமுணர்
பக்தியுள்ளோனே யோகந்தனிற் பக்தியுள்ளோனே. (நா)

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா வந்தனஞ் செய்கின்றேன்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் பூபாலகா.

(மர்-வ-ம்.) பவத்தைவிலக்குந் தவத்திற்சிறந்த முனிநாதா வந்தனஞ் செய்கின்றேன் சத்தியகீர்த்தி.

(விஸ்-வ-ம்.) கல்யாண்.

(அரி-வ-ம்.) ப்ரபோ சபாமண்டபத்துக் கெழுந்துவரப் பிரார்த்திக்கின்றேன்.

(விஸ்-வ-ம்.) இதோ வருகிறேன்.

(அரி-வ-ம்.) நாதா இவ்வாசனத்தில் வீற்றிருங்கள்.

(விஸ் வ-ம்.) கோசலாதிபா யானென்று புலித்தோலாசனத்தில் வீற்றிருக்கின்றேன் நீயுன்னரியாசனத்தில் வீற்றிருப்பாய்.

(அரி-வ-ம்.) உத்தரவு ப்ரபு.

அரசன் விருத்தம்.

பங்கயமா மலர்ப்பாதா பகரிய
மெய்ப்போதா பாரோர் நூன்றும்
துங்கமிகு பிரக்யாதா துகளிலாத்
தவநாதா சுருதி வேதா
செங்கண்மா ஸானிகராத்தேவதே
வாதாமுந் சிந்தை கூர்ந்து
பொங்கமதா யிங்குவந்த விஷயமதை
யெந்தனுக்குப் புகலுவீரே.

## அரிச்சந்திரன் சொல் தரு.

பன்னகசயனராஜா வென்றவர்ணமெட்டு.

இராகம் - தேசிகதோடி - தாளம் - ரூபகம்

பல்லவி.

சுந்தரமிகுந்தநாதா வந்தனிதஞ்சொல்வீர்நீதா

அனுபல்லவி.

கந்தரத்திலரவணி யுந்திரற்சிவனைப்பணி-யுந் (சு)

சரணங்கள்.

கையிற்கமண்டலமிலங்க மெய்யிற்பஞ்சாட்சரந்துலங்க
செய்யபுலித்தோலுடுத்தி ஐயனையிங்கெனைநத்தி-ஐய (சு)

முன்னவர்செய்மாதவமோ இன்னிலஞ்செய்ததவமோ
பன்னகசாலையிலிருந்தே நன்னயத்தவந்துறந்தே-நன் (சு)

(விஸ்-வ-ம்) தவசிரேஷ்டா தாங்களிச்சிறியேனை நாடி-வந்த காரணம் யாதோ வறிகிலன் இன்னதெனவுத்தரவாகப்பிரார்த்திக்கின்றேன்.

## விஸ்வாமித்திரர் விருத்தம்.

முன்னால்.

என்னனைய முனிவரரு மிமையவரு
மிடையூரோன் றுடைய ராஜற்
பன்னகமு நகுவெள்ளிப் பனிவரையும்
பாற்கடலும் பதும பீடத்
தன்னகருங் கற்பகநாட் டணிநகரு
மணிமாட வயோத்தி யென்னும்
பொன்னகரு மல்லாமற் புகலுண்டோ
விகல்கடந்த புலவு வேலோய்.

(விஸ்-வ-ம்.) இராஜா கவனிக்கவேண்டும் என்னைப்போலொத்த தவசிரேஷ்டர்களுக்கும் மற்றுந்தேவர்களுக்கும் யாதோரிடையூறு நேரிடுமானால் பிரபஞ்சத்தின்கண்ணுள்ள வெல்லாவெற்புகளையும் வெட்கும்படிசெய்யும் வெள்ளியங்கிரியில்வசிக்கும் சிவபெருமானிடத்தும் சத்தசாகரத்தில் மேன்மைதங்கிய பாற்கடலிற் பள்ளிகொள்ளுங் கிருஷ்ணபரமாத்மாவிடத்தும் பிரமலோகத்தில் வீற்றிருக்கும் அன்னவாகனனிடத்தும் விண்ணுலகத்தில் கற்பகத் தருவின்கீழ் சுதர்மமென்னும் பீடத்தில்வீற்றரசபுரியு மிந்திரனிடத்தும் பிரகாசம்பொருந்திய மாளிகைகளையுடைய பொன்னகருக்குச் சமானமாகிய இவ்வயோத்தியாபுரியைப் பரிபாலிக்கக்கூடிய நின்னிடத்துஞ்சொல்லி அவ்விடையூறைநிவர்த்திசெய்து கொள்வதல்லாமல்வேறுபுகலேது ஆதலால் யான் ஓர் பெரியயாகஞ் செய்ய வெத்தனித்திருக்கின்றேனதற்கு வேண்டியதிரவியம் எனதேவலினாலிவணெய்திய முனிவரிடந்தான்கொடுக்கிறதாகச் சம்மதித்தாயன்றோ வதையின்று பெற்றுக்கொண்டு போகவந்தேனே தவிரவேறொன்று.



## அரிச்சந்திரன் விருத்தம்.

அருந்தவமுனிவரேயா னன்றுநம்மேவலார்முன்
பொருந்துநல்வேள்விக்காகப் புகன்றதோர்செம்பொனின்று
திருந்தவேயளிப்பேனுமால் சிந்தையுற்றிவளவென்றே
புரந்தகித்தவனோரான புனிதரேசாற்றுவீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

அடியேனுறிசொல்லி நீவாடி யென்றமெட்டு.

இராகம்-அடாணா-தாளம்-சாப்பு.

பல்லவி.

செந்தாமரைமலர்நிகர்பாதா தவமுனிநாதா (செ)

அநுபல்லவி.

அந்தரம்வாழ்தேவர்களும் இந்தவுலகுள்ளவரும்
நொந்தோமெனக்கூறினிலு கந்தவினைதீர்த்தருளுஞ் (செ)

சரணங்கள்.

சிந்தைமகிழ் வாகநீர்யாகம்
செய்தவிர்ப் பாகம்-சிந்
இந்திரன்முதலோருக்கும் மந்திரமாதவருக்கும்
பந்தமுடனீவதற்கு கந்தபொன்னெவளவதற்கு (செ)
வேள்வியதற் குகந்திடுஞ்செம்பொன்
விளம்பிடில் யான்-வே

வித்தகரேயித்தருணம் சித்தமகிழ்வுற்றிடவே
பத்தியோடிகுவேனின்று பெற்றருள்வதுமிகநன்று. (செ)

(அரி-வ-ம்.) மண், பெண், பொன், என்ற மூன்றாசையை முற்றத்துறந்த முனிபுங்கவரே தாம்புரியும் வேள்விக்கு எவ்வளவு திரவியம்வேண்டும் அதன்விபரம் கூறுவீர்களாக.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

மும்மதக்களிற்றின்மீது முதிர்பெலப்புருடனேறிச்
செம்மையாய்நின்றெறிந்த திண்கவண்சிலைபோந்தூரம்
நம்மிடம்பொருட்சேர்ப்பாயேல் நானிலமதனில்வேள்வி
யிம்மையம்மையிலுங்கீர்த்தி யிசைந்திடமுடிப்பேன்மன்னா.

(விஸ்-வ-ம்.) கோசிலாதிபா கன்னமதம், கோசமதம், கைமதமென்ற மும்மதம்பொருந்திய ஓர் யானையின்மீது வலிமைபொருந்திய வோர் புருடனையேற்றி அவன் கையில் வெள்ளிக்கவண் கொடுத்து மாணிக்கக் கல்வைத்துச் சுழட்டி விட்டெறிந்தால் எவ்வளவுயரம் போமோ அவ்வளவுயரம் திரவியந்தருவாயானால் யான் செய்யவெத்தனித்திருக்கிற யாகம் சம்பூரணமாய் நிறைவேறும்.

அரிச்சந்திரன்சொல் தரு.

இதுவோர் பெரிதீய்ந்திடுவேனென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

முனிநாதனே தா மொழிந்தபடியீகுவேன்

அநுபல்லவி.

புனிதமாகியபதம் பொற்பாக யான்பணிந்தே (மு)

சரணங்கள்.

விண்ணுலகத்தவரும் வியந்திட மாதவஞ்செய்
அண்ணலேயன்பாக வடியேன்பவமதுகொய் (மு)
சேவித்தடிப்போரிடர் தீர்க்குமுதாரனே
மாவித்தகனே திரு மானிகர் செம்பிரனே. (மு)



அவனிதனிலே மூன் றாசையுந் துறந்தோனே
கவனமாய் நீர்செய்வேள்விக் கானசெம்பொன்னும்நானே. (மு)

முனிவரால் விருத்தம்.

உடைப்பெரும்பொருளினை யுலகினூடியல்
கிடைப்பதற்களிக்கினுங் கிளர்சிறப்பினை
லடுத்துவந்தேற்குநர்க் கார்வமீதுறக்
கொடுப்பதொன்றேபல கோடியாகுமால்.

(அரி-வ-ம்.) தவநாதா இவ்வுலகின் கண் யாதாமொருவன் தனக் கீஸ்பர கடாக்ஷத்தாற்கிடைத்த மிகுதியான திரவியத்தை யிலாபங்கிடைக்கும்பொருட்டு, க-உ-ரு-வட்டிக்கிக்கடனாகக்கொடுப்பதைப் பார்க்கினும் அளவில்லாத வறுமையினால் தம்மையடுத்து வந்திறக்கும் யாசகர்கட்கு மனச்சந்தோஷமாகக் கொடுப்பதொன்றே பலகோடியாகுமென்பது சாஸ்திரம் அப்படிக்கிருக்கத் தவசிரேஷ்டராகிய தமக்குவேண்டிய திரவியமெவ்வளவோ அவ்வளவு யான் கொடுப்பேனாகில் அதனாலெனக்கு மென்மேலுந் திரவியம் விர்த்தியாகிவருமேதவிரக் குறைவுறாதாகையால் தாம் வேள்விக்காக குறித்த செம்பொனிதோ தருகின்றேன் திரவியக்களஞ்சியத்துக்கு வாரும்.

(அரி-வ-ம்.) அடே சேவகா நமது பட்டத்து யானையைத் திரவியக் களஞ்சியத்திற்குக் கொண்டுவரும்படியாக யானைப்பாகனிடத்தில் தெரிவிப்பாயாக.

(சே-வ-ம்.) ஐயா யானைப்பாகரே உம்மை மகாராஜா அவர்கள் பட்டத்து யானையைத் திரவியக்களஞ்சியத்திற்குச் சீக்கிரத்திற் கொண்டுவரும்படி ஆக்ஞாபித்தார்கள்.

(யானைப்பாகர் வசனம்.) இதோ வருகின்றேன் நீ முன்னமே செல்வாயாக.

(சே-வ-ம்.) மஹாராஜ் யானைப்பாகர் யானைசகிதந் திரவியக் களஞ்சியத்திற்கு வந்துவிட்டார்.

(அரி-வ-ம்.) ஹே பிரதான் திரவியத்தையெல்லா மொருங்காகக் குவியலிடச்செய்யும்.

மந்-வ-ம்.) இதோ குவியல்செய்தாகிவிட்டது அரசே.

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரமா தவர்க்கரசே வாருட்டனே
தாங்கள்செய்யு மகத்திற் காக
எந்தனிடங் கேட்டதொரு விரணியமி
தோகுவியல் செய்திட் டேனல்
சந்தோஷ முடன்பெற்றுத் தம்மிடஞ்சேர்க்,
துயர்வேள்வி தன்னை யின்று
சுந்தரமாய் முடித்திடவே சோதிமலர்ப்
பதத்துணையைத் துதித்திட் டேனே.

(அரி-வ-ம்.) தவராதா தாங்கள்கூறியவண்ணமே யிதோசெம்பொன் குவியல்செய்திருக்கிறது ஆகையால் இதனைச் சந்தோஷமாகப்பெற்றுக்கொண்டு சென்று தாங்களெண்ணிய யாகத்தைச் சம்பூரணஞ்செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

அங்கண்மகிலத்திலுள்ள வரசர்கட்கரசேகேண்மின்
பொங்கமாய்க்கேட்டதோர்செம் பொன்னெலாமெனக்களித்தாய்
இங்குன்தனிடத்திலேயிஃ திருக்கட்டும்வேள்விக்கேயான்
மங்களமுகூர்த்தமிட்டு வந்துபின்கொடுபோவேனே.

(விஸ்-வ-ம்.) பூபாலகா தற்காலம் நான்விரும்பியபடியே தேவர்களாலுஞ் செய்தற்கரிய யாகத்திற்குத் திரவியக்குவியல் செய்து கொடுத்தாய் ஆகையால் இந்தத் திரவியமுன்னிடத்திலேயே யிருக்கட்டும் யான்சென்று யாகத்திற்கு மங்களமுகூர்த்தமிட்டு வந்து பின்னரெடுத்துச் செல்கின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதவத்திற் சிறந்தமுனி வரர்புலவர்
வறியோர்கள் மறைநான் கோர்ந்த
நீதிலா வந்தணர்கள் திகழ்வித்தை
பயிற்றியதே சிகரின் னோர்க்குப்



பேதமிலா தளித்தபொரு ளளித்தவர்கள்
மறுபடியும் பெறுவா ராகிற்
பாதகம் நரகுறுவ ராகையினாற்
கைக்கொண்டு பாங்காச் செல்வீர்.

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா தங்களைப்போல் தவத்திற்சிறந்த மாதவர்கள், வித்வான்கள்,ஏழைகள்,அந்தணர்,ஆசான் இவர்களுக்குக்கொடுத்த பொருளை மறுபடியுங் கொடுத்தவர்கள் வாங்கிவைத்துக்கொள்வாராகில் அன்னவர்கள் ரௌரவாதி நரகத்தையடைவார்களென்று சாஸ்திரமுறையிடுவதால் இத்திரவியத்தை வைத்திருப்பதற்கு யான் உரியேனல்லேன் தாங்களேகைக்கொண்டுசெல்லவேண்டும் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) பூபாலகா நீ உரைத்தவிஷய நியாயந்தான் ஆகிலும் இன்னொரு உபாயஞ்சொல்லுகிறேன் அதாவது இதோயிருக்கிற திரவியக்களஞ்சியத்தினிடமாக இத்திரவியமுழுமையும் வைத்துப்பூட்டி உனது கணையாழிமுத்திரையு மென்னது ருத்ராக்ஷமுத்திரையும்வைத்து நீ பாதுகார்த்தால் யாதொரு பாதகமுமில்லை அவ்விதஞ்செய்யச் சம்மதமா அல்லவா?

(அரி-வ-ம்.) சம்மதம் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) இராஜா இதோ வெனது திரவியம்வைத்த களஞ்சியத்தினிடமாக நான் ருத்ராக்ஷ முத்திரை வைத்துவிட்டேன் உனது கணையாழி முத்திரையையும் வைப்பாயாக.

(அரி-வ-ம்) இதோ வைத்துவிட்டேன் முனிநாதா.

(விஸ்-வ-ம்) வேந்தே சென்றுவருகின்றேன்.

(அரி-வ-ம்.) அநேக வந்தனம் ப்ரபு சென்றுவாருங்கள்.

விஸ்வாமித்திரர் அரசனிடம் விடைபெற்று வனச்சாரல்
அடைந்து தனியாகவிருந்து ஆலோசித்துப் வசனம்.

ஆ! ஆ! இதென்ன ஆச்சரியம் அளவில்லாத திரவியத்தை யாகத்திற்காக வேண்டுமென்றுகேட்டால் இவ்வரிச்சந்திரனால் கொடுக்கமுடியாது அதினாலே இந்திரன் சபையிற்கூறிய சபதப்படி

பொய்யனென்று ரூபித்துவிடலாமென்றெண்ணி அரிச்சந்திரனிடஞ்சென்று மிருதியான திரவியம் யாகத்திற்காக வேண்டுமென்று கேட்டதில் யாதொருதடையின்றிக் கொடுத்துவிட்டான் இவ்வித தருமசிந்தையுடையவனை நாமெவ்வாறு வெல்லப்போகிறோம் ஆனால் இன்னொருபாயஞ்செய்வோம் இவ்வரிச்சந்திரனுக்கு இவ்வளவு மிகுதியான திரவியஞ் சேர்வதற்குக் காரணங் குடிகள் செய்யும் விவசாயத்தினாலேயேதவிர வேறல்ல ஆதலால் அனேக மிருகங்களையும் பக்ஷிசாலங்களையு நகர்வனமுதலிய செந்துக்களையும்வரவழைத்து கோசலைநாடு முழுதுங் குடிகளிடும் பயிர்களையெல்லாமழிக்கும்படிசெய்தால் குடிகள் நஷ்டமடைந்து இராஜனுக்குப் பகுதிகட்டாதிருப்பார்கள் அப்படிப்பகுதிகட்டாதவிஷயத்தில்இராஜனுக்குப்பொருளிராது அப்படிப் பொருளில்லாதிருந்தால் நமக்குக் கொடுத்தபொருளை யாஜிப்பான் அதன்மூலமாய்ப் பொய்யனுக்குவோமென்று மிருகஜாதிகளை வரவழைக்கிறனிதங்காண்க.

## விஸ்வாமித்திரர்

## மிருகங்களை அழைக்கிறபாகம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

கானகந்தனில் வாழுமிருகங்காள்
வானளாவுந் தருவளர்பக்ஷிகாள்
நானிலத்தில் நகர்கின்றஜெந்துகாள்
தீனனென்முனஞ் சீக்கிரமெய்துவீர்.

(விஸ்-வ-ம்.) ஆ இவ்வனத்தில் வாழ்கின்ற யாளி, சிங்கம், புலி, யானை, புழுகுப்பூனை, கரடி, குதிரை, மான், மரை, மேதி, கடமான், செந்நாய், பன்றி, குரங்கு, முயல், முதலிய, விலங்கினங்களை, மயில், குயில், செம்போத்து, கிளி, அன்னம், அண்டங்காக்கை, காக்கை, காடை, கவுதாரி, நாகணவாய்ப்புள், சக்ரவாகப்புள், அன்றில், நாரை, கொக்கு, கூழைக்கடா, தாரா, நீர்க்காக்கை, பருந்து என்றபக்ஷிகளை, பாம்பு, தேள், அரணை, சுண்டெலி, எலி, பெருச்சாளி என்ற நகருஞ் செந்துக்களே இதோ சீக்கிரத்தில்ஓடிவாருங்கள்.



மிருகங்கள் பக்ஷிகள் நகருஞ்செந்துக்கள் யாவும்
விஸ்வாமித்திரரைவணங்கி அழைத்த
காரணத்தைக் கேட்கும்.

முன்னால் விருத்தம்.

தழைத்தபுல்லுந் தளையுங்கனிகளும்
விழைத்தருந்தி வெருண்டுவெருண்டுகோ.
ளிழைத்துநீள்வனம் வாழ்கின்றவெம்மைநீ
ரழைத்ததேதென் றருள்செய்யவேண்டுமே.

(வ-ம்.) ஓ முனீஸ்வரரே அனேக வந்தனம் தழைத்திருக்கிற புற்களையுங் கனிகளையும் விரும்பித்தின்று பயந்துங் கோபித்தும் எங்கள் சொள்கைகளைச் செய்துகொண்டு நீண்டகாட்டிலே சஞ்சரிக்கின்ற வெங்களை நீர் வரச்செய்தது இன்னதற்காகவென்று சொல்லவேண்டும்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வனத்தில்வாழ்விலங்கினங்காள் வழுத்துவன்கேளுநீரித்
தினத்தில்மெய்யரிச்சந்த்ரன்றன் சீருயர்பாரில்வைகும்
வனப்புறுசோலைகூபம் வாவிவேளாண்மையெல்லாஞ்
சினத்துடனழித்தேயிங்கு சீக்கிரம்வருகுவீரே.

(விஸ்-வ-ம்.) வாரீர் மிருகக்கூட்டங்களே, பக்ஷிகளே, நகருஞ் செந்துக்களே, நீங்கள் கோசலைநாட்டிலுள்ள சோலை, குளம், கிணறு, குடிகளிட்ட வேளாண்மை, நந்தவனம், முதலிய யாவற்றையும் ஒருங்காக அழித்துச் சீக்கிரத்தி லிவ்விடம் வந்துசேருவீர்.

மிருகங்கள் வசனம்.

அப்படியே தங்களுத்திரவின் பிரகாரஞ்[illegible]ன்று வருகிறோம்.



அயோத்திநாட்டின் வளங்களை மிருகங்கள்
அழிக்கும் விதம்.

மாதவனே யென்றமெட்டு.

இராகம்-ஆரபி-தாளம்-ஆதி.

பல்லவி.

அழித்ததுவே    அந்த
அயோத்தியாபுரியைச்சூழ்    நயத்தவளங்கடனை (அ)

அநுபல்லவி.

பழிபிலாக் குடிகள்செய்    பயிர்தனைநாடி
பாரவிலங்கினங்கள்    பாங்குடன்கூடி (அ)

சரணங்கள்.

மாமுனிவரர்தம்    வருநிபோற்சென்று
மாட்டையுந்திடமிகு    வாட்டையுங்கொன்று
நேமமுடனடர்ந்து    நீண்டகாவினையும்
நிலத்தோர்புகழ்    நிகழாவினையும் (அ)

# குடிகள்வருந்தும் பாகம்.

குடிகள்சொல் தரு.

பஞ்சமாபாதகம் ப[illegible]ாதா யென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோ விதற்கென்செய்வோம்    தெய்வமே    இந்த
அவதியடையவிட்டாய்    தெய்வமே
வனத்தில்வாழ் மி[illegible]கங்கள்    தெய்வமே    இங்கு
வலிமையுடனேவந்து    தெய்வமே
நாங்களிட்டபயிரைத்    தெய்வமே    இன்று
நசியச்செய்தழித்ததே    தெய்வமே
இனியெந்த விதஞ்செய்வோம்    தெய்வமே    எங்கட்
கித்துயர்வந்ததென்றே    தெய்வமே





(குடி-வ-ம்.) ஐயோ தெய்வமே இக்கொடுமைக் கென்செய்வோம்.

(தம்புக்கவண்டன்-வ-ம்.) அண்ணமார்களே இக்கழுது கொண்டிருப்பதிற்பிரயோசனமில்லை எல்லோரும் அரசனிடஞ்சென்று தெரிவிப்போம் வாருங்கள்.

(குடி-வ-ம்.) நல்லது தம்பி.

(தம்புக்-வ-ம்) அண்ணமார்களே இதோ ஆசாரவாசலின் கண் வந்துவிட்டோம் இங்கு கட்டியிருக்கும் அசையாமணியை யடியுங்கள்.

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான்கிரேஸ்டா இதென்ன ஆச்சரியம் நம் ஆசாரவாசலின் கண் கட்டியிருக்கிற அசையாமணியானது ஓயாம லடிபடுகிறது இதென்னவிசேஷம்.

(மங்-வ-ம்.) ப்ரபூ என்ன அனீதமோ தெரியவில்லை சென்று பார்த்துவருவோம் வாருங்கள்.

---

அரசனிடம், குடிகள் முறையிடும் விருத்தம்.

மன்னவர்மன்றுகேளும் வனத்தில்வாழ்விலங்கினங்கள்
நன்வயமிருகம்காட்டை நாடியேயாங்கள்செய்த
சென்னெல்கள்முதலாயுள்ள சீருயர்வளங்களெல்லாம்
பின்னமேசெய்ததெந்த விதம்பிழைத்திடுவோநாதா.

---

## குடிகள்சொல். தரு.

ஐயையோ நானென்னசெய்வேண்டாவென்ற வர்ணமெட்டு.

இராகம் - காப்பி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

| | |
|---|---|
| | ராஜனே |
| இராஜாதிராஜ சேகா | காசனே |
| பூசார்புகழும்ப்ர | |
| | ராஜனே |
| நாங்களிட்டபயிரை | ராஜனே |
| வேங்கைமுதல்மிருகங்கள் | |
| | ராஜனே |
| பங்கஞ்செய்ததுமல்லாமல் | ராஜனே |
| எங்களிலனேகரையும் | |

சங்கையறக்கொன்றநின்று ராஜனே
அங்கதற்ககப்படாது ராஜனே

இங்குமுறையிடவந்தோம் ராஜனே
துங்கமிகயோத்திநகர் ராஜனே

இவ்விதமெங்களுக்குற்றால் ராஜனே
எவ்விதமிவட்டமுய்வோம் ராஜனே

இந்தப்படிநடக்க ராஜனே
என்னபிழைசெய்திரோ ராஜனே

செங்கோல்வழுவினீரோ ராஜனே
எங்களிடர்தீர்க்கவேண்டும் ராஜனே

(குடிகள் வசனம்.) பூபாலகா வுமது செங்கோற்குட்பட்ட நாட்டினிடமாக நாங்கள் செய்த பயிர்களையும் மற்றுமுள்ள வாவி, சோலை, கிணறு, நந்தவனம் முதலியவைகளையும் வனத்தில்வாழ்கின்ற விலங்கு, பறவைகளெல்லா மொருங்குசேர்ந்துவந்து அழித்ததுந்தவிர வெங்களையுஞ் சின்னபின்னப்படுத்தியதை யெவ்விதந் தம்மிடத்தெடுத்துரைக்கப் போகின்றோம் இவ்விதம் நடப்பதற்கு தாம் செங்கோல்வழுவினீரோ மற்றெதோ வறிகிலோம்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

டி நீ முத்தங்கொடடி என்ற வர்ணமெட்டு.

இராகம் - உசேனி - தாளம் - சாப்பு.

பல்லவி.

பாங்குயர்குடிகாள் பயப்படாதீர் பயப்படாதீர் பயப்படாதீர்

அநுபல்லவி.

தேங்கமழ்சோலையும் தீங்கிலன்னசாலையும்
ஓங்குநானிலமதனில் உற்றதோர் உற்றதோர் உற்றதோர் (பா)

சரணங்கள்.

அண்ணலென்முன்வந்தே மண்ணதனிலேவீழ்ந்தே
கண்ணில்நீர்பெருகிடக் கதறிடும் கதறிடும் கதறிடும் (பா)

குடிகள்துன்பநோக்கியே மிடியதனைநீக்கியே
படியில்வாழ்வுறுவதென் பாரமே பாரமே பாரமே (பா)



(அரி-வ-ம்.) வாரீர் மருதம், முல்லை, நெய்தல், குறிஞ்சியென்ற நானிலத்தும் வேளாண்மைசெய்யுங் குடிகளே யானுண்மையாகச் செங்கோல் தவறவில்லை மற்றுமுங்களுக்கெவ்வித சங்கடமேற்படினும் அதனை நிவர்த்திசெய்துவைப்பது கடமையன்றோ ஆனதால் இதுவிஷயத்திற் கவலையடையாதீர்கள்.

## அரசன் மந்திரியை வினவும் விருத்தம்.

மந்திரிகுடிகள்விண்ட வார்த்தையைக்கவனித்தீரா
இந்தமாதுன்பமின்னோர்க் கெய்ததற்கியானுமுந்தன்
புந்தியைக்கேட்டுச்செங்கோல் புரிந்ததின்பயனோமற்றும்
எந்தவாறுலோவித்தை யறிகிலேனியம்புவீரே.

(அரி-வ-ம்.) புத்தியிற்சிறந்த சத்தியகீர்த்தி நமது குடிகளியம்பிய வார்த்தையைக் கவனித்தீரா இக்குடிகளுக்கிவ்வித துன்பம் எய்துவதற்கு உமது புத்தியைக்கேட்டு யான் அரசாக்ஷிசெய்யும் பயனோ மற்றெக்காரணமோ அறிகிலேன் இதன் தன்மையை விபரமாகவெடுத்துக் கூறுவீராக.

(மந்-வ-ம்.) புவனசக்ரேஸ்பரா (மண்டலத்தோர்கள் செய்த பாவம் மன்னவரைச்சேரும் திண்டிறல்மன்னர்செய்த தீங்கு மந்திரியைச்சேரும்) என்ற நீதியை யுணர்ந்திருக்கின்றேனே யன்றியுணராதவனல்ல அவ்விதமிருக்க வென்னுடைய புத்தியைத் தாங்கள் கேட்டதினால் குடிகளுக்கு இவ்வித துன்பமுற்றதெனச்சொல்லுதல் உசிதமல்ல மற்றெக்காரணத்தா லுண்டாகியதெனின் யெனக்கொன்றுந் தோற்றவில்லை இதன்காரணம் ஒப்புவமையில்லாத பராக்கிரமத்திற்கே வெளியாகும்.

## அரசன் முன்னால் விருத்தம்.

தொட்டுமன்னன் சுடர்முடிசூடிய
பட்டமேக்கமிவ் வானார்க்கில்லையூண்
அட்டுண்பாரின்றி யாதவரின்மையா,
விட்டுணைக்குறை யெண்புதோரேக்கமே,

(அரி-வ-ம்.) ஆ! ஜெகதீசா எனது செங்கோற்குட்பட்டநாட்டிலும் மற்றெந்நாட்டிலும் வசிக்கும் பிரஜைகள் முதலிய யாவர்களும் மாட்சிமைதங்கிய அரிச்சந்திரமகாராஜன் அயோத்தியாபுரியினிடமாக வீற்றுச் செங்கோற்றனைக்கொண்டு திருமுடிசூட்டிக் கொண்டிருக்குமளவும் அன்னகாரத்துக்கும் அன்னவன்குடையின் கீழ் வாழுங் குடிகளுக்கும் யாதொருவிதமான துன்பமும் ஏக்கமுமில்லையாயினும் ஒருவிதவேக்கமுண்டு அதாவது அவ்வயோத்தியாபுரியில் வசிக்கிறவர்களியாவர்களும் சீமான்களாயிருப்பதினால் (ஐயமிட்டுண்) என்ற நீதிவாக்கியத்துக்கிணங்கப் பிச்சைகொடுத்துப் புசிக்கவறியோர்கள் கிடைக்கவில்லையென்பதேயென்று சொல்லும்படியாக உனதருளினால்நீதிதவாது அரசுபுரிந்து வருகிறயானிவ்விதகன்னகடூரமானவார்த்தையைக் குடிகளிடங்கேட்கவிதித்ததென்கோலோ வறியேன் இதற்கென் செய்வேன்.

அரசன் மந்திரியிடஞ்சொல்லும் வசனம்.

ஏ ப்ரதான் நீசொல்லிய வசன சாதுர்யமெல்லாந்தெரிந்தேன் மற்று மிதற்கியாது செய்வது.

மந்திரி முன்னால் விருத்தம்.

எந்தவேளையினு நொந்தவர் துயர்கேட்
  டிடரிழைந் தவன்றன தேக
மைந்தனே யெனினும் வதைத்திட வொல்கான்
  மாக்களின் சுதநல மின்றிச்
சிந்தனை மற்றோர் பொருளினிற் செலுத்தான்
  தீமொழி கனவிலும் புகலான்
தந்தைபோற் றாய்போ லெவரையுங் காக்குந்
  தன்மைய னேயிறை யாமால்.

(மந்-வ-ம்.) புவனசக்ரேஸ்பரா பூதலம்புரக்கும் புரவலரியல்பாவது யெச்சமயமானாலும் யாதொருகுடிகள் அரசேமிகுந்தகஸ்டமடைந்தோமெனக்கூறினால் அவ்விதகஸ்டத்தை அக்குடிகளுக்குண்டுபண்ணியவன் தான் நீண்டநாளாகத் தவஞ்செய்துபெற்ற ஏகபுத்திரனாயினும் அப்புத்திரனைக் கண்டிப்பதற்குக் கிஞ்சிற்றேனுந்



தாக்ஷண்யமில்லாதிருத்தலுமன்றியுந் தனது மனதைக்குடிகளுடைய சுகத்திலு நலத்திலுஞ் செலுத்திக்கொண்டிருப்பதுந் தவிர மற்றொரு விஷயத்தில் வியர்த்தமாய்ச் செலுத்தாமலுங் கர்ண கடூரமான வார்த்தைகளைச் சொற்பனத்தும் புகலாமலிருந்தும் மற்றும் தனது செங்கோற் குட்பட்ட பிரபஞ்சத்தி னிடமாயுள்ள குடிகளெவரையுந்தனது மாதா பிதாவுக்குச் சமானமாகவெண்ணிரக்ஷித்தலுமென்று சாஸ்திரமுறையிடுவதால் தற்சமயம் வேடுவவீரர்கள் சகிதம் ரதகஜதுரகபதாதி என்ற நான்கு வகைச்சேனைகளோடு நமது குடிகளுக்குக்குடிலம் விளைத்த கோரவிலங்கினங்கள் வாழுங் காட்டுக்குச்சென்று வேட்டையாடி அம்மிருகங்களைச் சங்கரித்து நமதுகுடிகளுக்கு க்ஷேமத்தைக்கொடுத்து நாட்டைரக்ஷிக்கவேண்டியது அவசியம் பிரபூ.

(அரி-வ-ம்.) புத்தியிற்சிறந்த சத்தியகீர்த்தி அவ்விதமாகவே செய்வோம்.

அரிச்சந்திரன்சொல் தரு.

வாடாலவாயிலா வென்றமெட்டு.

இராகம் - தோடி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

மருதமுதலானநான்கு மாநிலம்வாழ்குடிகளே
பெருமிதமாய்நீங்கள்செய்த பெட்புறுநெற்பயிர்களை.

கருதியேமிகவழித்த கான்வாழ்மிருகங்களை
ஒருதிடமாச்சென்றுவாட்டியுங்கட்குய்ப்பேனலங்களே.

ஆகையாலேநீங்களின் றவரவர்களில்லெய்தி
ஏகசித்தமோடேவாண் டிரண்டினுக்குப்பகுதியில்.

ஆகமீதரவணிந்த வாதியானஜோதியை
மாகவனமாய்த்தொழுது வாழ்வீரின்பமாகவே.

(அரி-வ-ம்.) ஹே குடிகளே உங்களுக்கு இடையூறுசெய்த கொடிய விலங்கினங்களைத் தக்ஷணமே வதைசெய்யும்பொருட்டு வேட்டையாடச் செல்கின்றேன் நீங்களிரண்டுஆண்டிற்குளனக்குக் கொடுக்கவேண்டிய பகுதியையெடுத்துக்கொண்டு கடவுளைத்துதித்து வாழ்ந்திருங்கள்.

(குடிகள்-வசனம்.) நல்லது மஹாராஜ்.

(அரி-வ-ம்.) ஹேற குடிகளே தங்கள் தங்கள் யதாஸ்தானஞ் சென்று வாருங்கள்.

(குடிகள் வசனம்.) அனேக வந்தனஞ் சென்று வருகிறோம் பிரபூ.

(அரி-வ-ம்.) கல்யாண் குடிகளே சென்று வாருங்கள்.

ஷை வசனம்.

ஹேற ப்ரதான் நமதுநாட்டினிடமாகக் குடிகளிட்ட பயிர்களை யழித்த விலங்கினங்களைவேட்டையாடி வெல்லும்பொருட்டு நம்மூடன் சகாயார்த்தமாய் வருவதற்குப்பற்பல ருவதங்களில் வாழும் வேடுவர்களை ஆயுதபாணிகளாக வேட்டை நாய்களுடனே இங்கு வரவழையும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை அரசே.

(மந்-வ-ம்.) அடேசேவகா நமது மஹாராஜா வேட்டையாட ஆரண்யஞ் செல்ல வெத்தனித்திருப்பதினால் குறிஞ்சிவன வாசர்களாகிய வேடுவர்களனைவரையும் அதிசீக்கிரத்திலழைத்துவா.

(சேவ-வ-ம்.) இதோ தங்களுத்திரவுப் பிரகாரஞ் சென்று அழைத்துவருகிறேன்.

(சே-வ-ம்.) ஆமடா இந்தக்குறிஞ்சிநிலத்தில் வசிக்கும் வேடு வர்கள்.

(வேடு-வ-ம்.) ஐயாசேவகரே வந்தனஞ்செய்கின்றோந் தாங்களிங்குவந்தகாரணம் யாது.

(சேவ-வ-ம்.) அடாவேடுவர்களே நமது மஹாராஜா அவர்கள் ஆரண்யத்திற்கு வேட்டையாடச்செல்ல வெத்தனித்திருப்பதால் உங்களை ஆயுதபாணிகளாக அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார்கள் சீக்கிரம் என்னுடன் வாருங்கள்.

(வேடு-வ-ம்.) உத்தரவுபோ லிதோவருகின்றோம்.

வஞ்சனைகாண்டம் சம்பூரணம்.

150

உ
பரமபதி துணை.

# வேட்டஞ்செய்காண்டம்

## வேடுவர்கள் வருகிறபாகம்.

வேடுவர்வருகிற விருத்தம்.

சேவகன்வசனங்கேட்டுச் சிறந்திடுங்கச்சைபூண்டு
மெவியபின்னடிபா[illegible]விற்கதையிட்டிருலம்
ஆவலாய்சேர்த்தெடுத்தாங் கார்ப்பரித்தார்ப்பரித்
தாவியே கூவிக்கொண்டு சபையில்வேடுவர்வந்தாரே.

உடுக்கையே நம்பினேனென்றமெட்டு.

இராகம் - காம்போதி - தாளம் - ஆதி.

பல்லவி.

வேடர்வந்தாரோடி விரைவினிற்கூடி

அநுபல்லவி.

காடதனிற்சென்று கவின்வேட்டையாட. (வே)

சரணங்கள்.

வாளுடைகத்தி வளைதடிசத்தி
வில்காம்பத்தி நேர்த்தியாகத்தி. (வே)

நேயமன்முன்பாக நீளிறவனேக
ஆயிரங்கோடி நாடோடி. (வே)

வேடுவர்கள் அரசனைவணங்கும் வசனம்.

இராஜ கோலாகல ராஜபூஜித ராஜமார்த்தாண்ட ராஜவுத்தண் டராஜ்பராமேஸ்வர [illegible]ம ராஜ் வேடுவர்கள் வந்தனஞ் செய்கின் றோம்.

(அரி-வ-ம்.) கல்யாண் வேடுவர்காள்.

(வே-வ-ம்.) மகாராஜ் ஆயுதபாணிகளாக ஆயிரங்கோடி நாட டினை அடியேங்களை இங்குவரவழைத்த காரணம் உத்தரவாகப் பிரார்த்திக்கின்றோம்.





151

அரசன் விருத்தம்.

சிங்க மானைபுலி பன்றி மான்மரை
திரண்டனைந்து திரு நாடெலாம்
எங்க ளும்பரவி வந்து தண்பயிரி
யாவையுங் கெட வழித்ததால்
அங்க வற்றைவதை செய்வதற்குமை
யழைத்தனன் கடிது செல்லுவீர்
உங்களுக் குதவி யாசயாம்வருத
லுண்டு வீரவன வேடர்காள்.

(அரி-வ-ம்.) ஓ வேடுவர்களே நமது திருநாடனைத்துங்குடிகளிட்டபயிர்களையெல்லாம் அழித்துக்கானகத்தில்வசிக்கும் சிங்கம்,யானை,புலி,பன்றி,மான், மரை முதலிய விலங்கினங்களனைத்தையும்வேட்டையாடிவதைசெய்யும்படியாகவுங்களை யிங்குவரவழைத்தேனே தவிர வேறன்று ஆகையால் நீங்களனைவரும் நாய்களுடனே முன்னமேயாரண்யஞ் செல்லுங்கள் யான் (வில், வாள், சக்கரம், மழு, சூலம், தோட்டி, வேல், வச்சிராயுதம், தண்டு, ஈட்டி, கைவேல், இருப்புலக்கை, பெருஞ்சவளம், சிறுசவளம், வளைக்கயறு, ஊசி, முசுண்டி, உளி, கைக்கட்டி, குறுந்தடி, கத்தி, கைவாள், உடைவாள், அரிவாள், கொடுவாள், வட்டம், கழுமுள், நாராசம், பிண்டிபாலம், அம்பு என்ற முப்பதாயுதத்துடன் வேட்டைக்கோலம்பூண்டு ரதகஜதுரகபதாதியென்ற நான்குவகைச் சேனையுடனும் மந்திரிபிரதானிகளுடனும் பின்னால்வருகின்றேன்.

(வேடுவர்கள் வசனம்.) அப்படியா உத்தரவுபோல் முன்னமே செல்கின்றோம்.

(அரி-வ-ம்.) அமைச்சே சீக்கிரத்தில் சேனாசைநியங்களைத் தயாராயிருக்கச் செய்யும் யான் வேட்டைக்கோலம்பூண்டு எனது மனைவியிடந் தெரிவித்துவருகின்றேன்.

(மந்-வ-ம்.) அக்ஞை ப்ரபூ.





# அரசன் சந்திரவதியிடம் வேட்டைக் கேக விடைகேட்கும்பாகம்.

(சந்திரவதி வசனம்.) கண்ணாளா தாங்கள் வேட்டைக்கோலம்பூண்ட காரணம் யாது.

அரிச்சந்திரன் விருத்தம்.

அன்னமேமயிலேமானே ஆசைரஞ்சிதமேதேனே
என்னயான்சொல்லுளிந்த வெழினகர்வளங்கடன்னைப்
பன்னரும்விலங்கினங்கள் பாவியேயழித்ததாலே
மன்னன்யான்வேட்டையாடி மகிழுவிக்கோலம்பூண்டேன்.

(அரி-வ-ம்.) ப்ராண சுந்தரீ யானுன்னிடத்திலெதனை யெடுத்துரைக்கபோகின்றேன் என்னகாலமோ தெரியவில்லை நமதுநாட்டினிடமாகக் குடிகளிட்ட பயிர்களை விலங்கினங்கள் வந்தழித்தென்று அன்னவர்களென்பாலணுகி முறையிட்டார்களாகையால் அவர்களுக்கு க்ஷேமத்தை யுண்டாக்குவதற்காகவே இக்கோலம் பூண்டேன்.

(சந்-வ-ம்.) என்ன ப்ரபூ இவ்விதம்பாவிக்கின்றீர்கள் இவ்விதக் கெடுதி கொடுங்கோல் மன்னவர்களுக்கன்றோ சம்பவிக்கும் இதென்ன விபரீதமாயிருக்கின்றது.

(அரி-வ-ம்.) மாதே யதனை நினைக்கநினைக்கத்தான் என்மனம் மிகவும் வருந்துகின்றது ஆகையால் சீக்கிரம் விடையளிப்பாயாக.

அரிச்சந்திரன்சொல் தரு தர்க்கம்.

மோரிஜா சர்பல்யம்பியாராரே யென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதேவன்வேட்டைக்குப் போய்வாரேன். (அடி மா)

அநுபல்லவி.

நீதிலாத்தேனே செழுமடமானே
கோதிலாதசொன்னமே குயிலன்னமே (அடிமா)

## சந்திரவதிசொல் தரு.

பல்லவி.

மன்னர்மன்னவா கூடவருகின்றேன்

அநுபல்லவி.

பொன்மலர்ப்பாதா புகழ்மிகுநீதா
பின்னமிலாதபோதா ப்ராணநாதா (எந்தன்மன்)

அரசன்.

பொற்புநங்கிளியே பூவுறையளியே
விற்பனியேநீவர வேண்டாமின்று (அடி-மா)

சந்திரவதி.

சுகுணகுணாளா தோகையென்மணாளா
தகுவனம்பார்த்தறியேன் தையலநானே (எந்தன்மன்)

அரசன்.

தேங்கமழ்மருவே செம்மலர்த்திருவே
பாங்கியே நீயிவ்விதம் பகாலாமோ (அடிமா)

சந்திரவதி.

வெற்றிசேர்கோனே மெல்லியாள்நானே
குற்றமாகவே யொன்றுங் கூறலையே (எந்தன்மன்)

அரசன்.

வேந்தனுனிப்போது வேட்டைக்கேகும்போது
எந்திழையாள் நீவர வெண்ணலாமோ (அடிமா)

சந்திரவதி.

முன்னுளெனை மணம் முடித்தபின்னுமேலோர்கூறணம்
இன்னுள்வரையும் பிரிந்திருந்திலனே (எந்தன் மன்)

அரசன்.

குடிகளுக்கவஸ்தை கொடுத்தவிலங்கினத்தை
மிடிசெய்தரைநொடியில் மீள்வேனுனை (அடி-மா)

சந்திரவதி.

எனைத்தனியாக யிவடம் விட்டேக
மனத்துணிவுநீர்கொண்ட வகைதெரியேன் (எந்தன் மன்)

(சந்-வ-ம்.) பிராணேசா அடியாளையும் ஆரண்யத்திற்கு தங்களுடனழைத்துச் செல்லாது இங்கு தனியாக வைத்துவிட்டுச்



செல்வதற்குத் தாங்கள் மனந்துணிந்த காரணமின்னதெனத் தெரிகிலேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு தர்க்கம்.

அன்னமே நானுன்னைத்தேடி யென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பெண்ணேநீபுரிந்தவாது பேசுவதுவேதகாது
கண்ணேயின்றென்னோடுவரக் கருதுவதுவே தகாது (பெ)

## சந்திரவதிசொல் தரு.

கண்ணாளாநீரெனைமணந்த காலமுதலாகநானே
பெண்ணொருநிமிஷமேனும் பிரிந்திருந்தறிகிலேனே (க)

அரசன்,

பிரிந்தறியேனென்றுமாதே பிசகிலாதவார்த்தையிதே
அரியவாரணியந்தசென்றே யரைநொடியில்வாரேனிப்போதே ()

சந்திரவதி.

அரைநொடியில்வருவேனென் றீ ராங்குகளைப்பாளீராளுல்
குறைவில்பணிவிடைகள்செய்யக் கூடவருவேனுன்மாளுள் (க)

அரசன்.

கூடவாரேனென்றுகூறுங் கோதுகுழலுடையமாதே
காடுலவுமரிபுலியைக் கண்டு பயப்படுவாய்நீதே (பெ)

சந்திரவதி.

சொற்றவர்பேணிபாதாகீர் கூடவரும்போதுநீதா
இற்றைநாளெனக்கெய்திடு மிந்தவார்த்தைசரியாகாதா (க)

அரசன்.

சரியலவென்று...த்தமானே சற்குணமாதர்கள்தானே
பிரியநாயக...சொல்தனைப் பேணாதபடிப்பாரோதேனே (பெ)

### அரிச்சந்திரன்சொல்.

முன்னூல் வெண்பா.

கொண்டான்குறிப்பொழுகல் கூறியநாணுடைமை
கண்டதுகண்டுவிழையாமை—கண்டு
வெறுப்பனசெய்யாமை வெஃகாமைநீக்கி
உறுப்போடுணர்வுடையாள் பெண்.

(அரி-வ-ம்.) மாதே இப்புவியின்கண் உத்தமகுலத்திற்ஜெனித்த மாதர்கள் தன்னைச் சர்வசாக்ஷியாக பாணிக்கிரகணஞ் செய்துகொண்ட நாயகன் என்னும் கருத்தை அறிந்து நடக்கலும், நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்பனவற்றைத் தனக்கு நீங்காத ஆபரணமாகக் கொள்ளுதலும் ஒருவரையொருவர் நிந்தித்துப்பேசுவனவற்றைப் பிறர்க்குரைத்துப் பிழைவிளையாமையும், நாயகன் கண்டு வெறுக்கத்தக்கனவற்றில் பிரவேசித்து மனத்துணிவுடன் செய்யாதிருத்தலும், கணவனுக்கு விருப்பமில்லாதனவற்றில் தானும் பிரீதி இல்லாதிருத்தலும் ஆகிய இக்குணங்களையுடையவர்கள் உத்தமஸ்திரீகளென்று சுருதிகளில் கூறுவதை யுணர்ந்துஅவ்வழியே நடந்து வருகின்ற தான் தற்சமயம் எனது கருத்துக்குமாறுதலாக நடப்பது நலமாமா?

சந்திரவதி.

ஆவிநாதனுடல்மனைவியாகுமென்றறைகுதேசுருதி
ஆவிநீங்கினுடல்தான் அம்புவியிலுறுமோசுருதி

---

### சந்திரவதிசொல்.

முன்னூல் விருத்தம்.

ஆவியின்றி யுடலில்லை யுடலின்றி
யாவியில்லை யதுபோற்பத்தா
தேவியெனு மிருவர்கள் சேர்ந்தே
ருருவாஞ் செழுமலருந்தேனும்
மேவியவ ரிருவருமே நள்ளாது
முரண்செய்யில் விளங்கு மெய்யுஞ்
சிவனுமொன் றேயொன்று போராடி
யழிந்தொக்குஞ் செப்புங் காலே.



(சந்-வ-ம்.) பிராணேசா யாதொரு சுத்தசைதன்யமாகியும் ஒப்புவமை யில்லாதாகியும் அணுவுக்குள்ளணுவாயும் விளங்குகின்ற பிரமத்தினது க்ருபாகடாக்ஷத்தால் பிதாமகனால் இப்பிரபஞ்சத்தினிடமாகப் படைக்கப்பட்ட சகல ஜீவராசிகளுக்கும் உயிரில்லாவிடில் சரீரம் நிலைப்பதரிதே சரீரமில்லாவிடில் பிராணனுமவ்விதமே அதுபோலாகப் பர்த்தாமனைவியென்ற இருவரும் ஆவியும் உடலும்போலும் புட்பமுமணமும்போலும் நேசித்திருக்கவேண்டுமென்னும் அவ்விதமில்லாவிடில் ஆவியுமெய்யும் போராடினவிரண்டுமெவ்வித மழிந்துபோமோ அவ்விதமாமென்னும் மனுஸ்மிருதி முறையிடுகிறது அப்படியிருக்க ஆவியாகிய தாங்களாரண்யஞ்சென்று உடலாகிய [illegible]னிங்கு வீற்றிருப்பேனு இதைநன்றாயாலோசித்து வருதி கொடுக்கவேண்டும் ப்ரபூ.

(அரி-வ-ம்,) கண்ணாட்டி குடிகளுக்குக் குடிலம்விளைத்த கோரவிலங்கினங்களை யாரண்யஞ்சென்றதஞ்செய்துவருகிறேன் உனது கற்புத்தெய்வத்தைக்கோறி விடைகொடென்றால் ஆவியாகிய தாங்களாரண்யஞ் செல்லும் விஷயத்தி லுடலாகிய யானிவ்விடத்திற்றனித்திரேனென்று கூறுகின்றனை யிதனை [illegible]ன் நான்றாயாலோசனை செய்யுங்கால் நீயாரண்யம்பார்க்கப் பூரணவாசை கொண்டிருக்கிறதாசத் தோற்றுகிறது ஆகையால் பாலகனோடு கூட வருவாயாக.

(அரி-வ-ம்.) ப்ரதான் எனது பத்தினியும் புத்திரனும் யான் செய்யும் வேட்டையைப் பார்க்க வனத்திற் கென்னோடுகூட வருவதாகச் சொல்லுகின்றார்களாகையால் தாம் சாரதியிடத்திற் றெரிவித்துப் பைரவியால் கொடுக்கப்பெற்ற இரதத்தில் பட்டத்துப் புரவியைப் [illegible]டித் தயாரித்துக்கொண்டு வரும்படிசெய்யும்.

(மந்-வ-ம்.) [illegible]ரசே இரதத்துக்கு மாவேகமுள்ளபரிகள்பூட்டியிதோ வந்திருக்கி[illegible]து.

(அரி-வ-ம்.) [illegible]ராணசுந்தரீ இரதமானது வந்துவிட்டது நாம் ரதத்தின் மீ[illegible]றிச் செல்லுவோம் வா.

(சந்-[illegible]-ம்.) அவ்விதமே வருகின்றேன் நாதா.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி நமது ரதகஜதுரகபதாதியென்ற நால்வகைச் சேனைகளுந் தயாராயிருக்கின்றதா?

(மந்-வ-ம்.) தயாராயிருக்கிற தாசே.

(அரி-வ-ம்.) ப்ரதான் மிகவுஞ்சந்தோஷம் சிற்றாசர் குதிரை விரர், யானைவீரர் அனைவரையும்—புடைசூழ்ந்து வரும்படியாகச் செய்து தாம் பட்டத்துப் புரவியின்மீதாரோகணித்து முன்னமே செல்லும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

அரிச்சந்திரன்சொல் முன்னூல் விருத்தம்.

கரியகாழகம் விரித்துடுத்திவரி
கவசமிட்டுமணி முடிதரித்தே
தரியவெற்றியுடை வாளயிற்கரிகை
யரையழுத்திபயி ரவிதரும்
பெரியபொற்சிலை யெடுத்துவாளிபல
பெய்ததூணிமுது கெய்தவே
தெரிவையற்காசி யுடன்வரக்கடிது
சென்றுதேரிமிசை யேறினன்.

பொது வசனம்.

இராஜனுஞ் சந்திரமதியும் தேர்மீதும் லோகிதனும் மதியூ யும் பரிமீதும் மற்றும் வீரர்கள் முப்பது ஆயுதத்தூடனும் காட் கத்திற்குச் சென்றார்கள்.

## வேட்டைக்குப் புறப்படும் பாகம்.

அரிச்சந்திரன்சொல் த

சந்திரன் வேட்டைக்குப்போர சுந்தரம்பா[illegible]ன்றமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - அடதாள

பல்லவி.

வேட்டையாடக்காட்டில் மேவுவோம் வாரீர்
விந்தையாய்ப் பந்தமாய் அந்தமதாகவே. (வே



அநுபல்லவி.

மேட்டிமையாகநம் நாட்டின் வளங்களைச்
சேட்டைசெய்தழித்த திண்மிருகங்களை. (வே)

சரணங்கள்.

மதிதனிலேசிறந்த மதியோரே
மனோவேகமதில்மிக்க கதியோரே
பதிபுகழ்சிற்சில பதியோரே
பலாட்டிகமுயர்சேனை பதியோரே

மாகூதிமையாகவே மாவிற்கைசேருங்கள்
வாகுடனியாவரும் ஒன்றாகவாருங்கள். (வே)

பாங்கானதோர்பிண்டி பாலங்கத்தி
பரிதிகுந்தங்கர பத்திரஞ்சதகி
வாங்குதடிகண்ட மாசிலாவெஃத்தி
வளரிவட்டங்குணில் வளர்கரம்பத்தி

பண்புபெருஞ்சிங்கப் பற்கள்நாய்தன்னுடன்
பாரமலேவேடரே பரிவாகவென்னுடன் (வே)

## அரிச்சந்திரன்சொல் தரு.

தேசதேசத்தரசரென்ற வர்ணமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ஏகம்

கண்ணிகள்.

வேட்டையாடக் காட்டகத்து
மேவுவோம் நரந்திரர்காள் தவுபரி வீரர்காள்
மாவிறலு தாரர்காள் வெற்றியே சேர்ந்திடுமஸ்திரம்
நற்றகைவாய்ந்திடுஞ்சஸ்திரம் எத்தலமும்புகழ்ந்த்திரம்
இன்பமாயெடுத்து நாமின்றோரான் (வே)

அங்கண்மாநிலம் [illegible]யெங்குந்
தங்கமலே வேடரே சிங்கநேர்யற் சோடரே
எங்கும்புகழ் வேடரே அங்கருமைமிற நாயுடன்
செங்கரமீதுறவில்லுடன் பொங்கமதாகவே யென்னுடன்
அடுத்து அச்சம் விடுத்துவாரீர் அடைவாய் (வே)



நாட்டினிற் குடிகளிட்ட
வீட்ட வளமற்றிட வாட்டமிக வுற்றிட
மீட்டுமவர்கத்திட நாட்டமாச்செய்த பரிசனும்
கோட்டுடைவன்மைக்கரிகளும் தாட்டிகஞ்சேரும்வரிகளும்
தாவமீதுதாவி மாண்டிடவே (வே)

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

கோடகந் தருவி லாழியுங்கரட
குஞ் சரந்தருவி லாழியு
மாடகக் கவரியுஞ் செறிந்துபகி
ரண்ட கோளமு மறைத்திட
மாடவீதியின் கடந்துசெம் பொன்
மதில்வாயில் விட்டகல நண்ணியே
வேடர் சேனையொடு கூடினனமுத
வேலை மைக்கடலின் வீழ்தல்போல்

---

## அரிச்சந்திரன் சொல் தரு.

இராஜ ராஜர்கள் பணிந்திடும் மென்றமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

பல்லவி.

வேட்டமாடிடத் திடமிகு வீரரேவாரீர் விரைவினில்

அநுபல்லவி.

ஈட்டி சூலங்கத்தி தோட்டிகவண்சத்தி
இன்பமுடனெடுத்தே இன்பமுடனெடுத்தே
கையிற்பிடித்தே கடுகடுத்தே கதித்தே (வே)

நாட்டின்வளங்கெட வாட்டியதோர்திட
நால்வாய்க் கரிகளையும் நால்வாய்க் கரிகளையும்
பரிகளையும் நரிகளையும் வரியையும் (வே)

பன்றி மெட்டகத்தை வென்றிசேர் சிங்கத்தை
பாங்குடனுந்தொடர்ந்தே பாங்குடனுந்தொடர்ந்தே
நாட்டைக்கடந்தே வனம்படர்ந்தே அடர்ந்தே (வே)

---

(அரி-வ-ம்.) அடா வேடுவர்களே நீங்களெல்லோரும் விரைவில்வாருங்கள் ஆரணியஞ்செல்வோம்.





## அரிச்சந்திரன் வேட்டையாட அடவிசெல்லுந் ...ரு.

157

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னவிநோதமிதோ பாரீர் நாம்
இன்னிமிஷத்திலே ...கத்திடுவோம் வாரீர் (என்ன)

அநுபல்லவி.

பின்னமிலாதயோ... நன்னகாரதை கத்தி
பீடியரும் செற்ப...ர்களையே யடி
போய...மித்திங்...வுறதே பிடி (என்ன)

சரணங்கள்.

...கா...டையுடையயானைக் கூட்டமொன்றாகக்கூடி
நாட்டில்வசிக்கும் ஆடு மாடுகளையுஞ்சாடி
மீட்டுமதோ தருவின் கோட்டினையொடித்தோடி
...ட்டிண்மையாகநம்மை வாட்டிடமனம்நாடி
தேட்டமுடனெதிர் தியங்கிடகின்று
தாட்டிகமாய்ச்செர்ச் சிக்கிறதின்று (என்ன)

சிங்கத்திரளனேகம் சங்கமாய்க்கூடிநின்று
பொங்குமதமபொழிமா தங்கமிகவேகொன்று
அங்கமாய்க்குடற்பீறித் திங்கா... போட்டகன்று
இங்கிதமா...க வங்கொருபுலிசென்று
மெங்கினுங்கிடை யாதிதுபோலவே
மங்களத்துட னெதிரினிலுலவின (என்ன)

துட்டச்...ங்கொண்டதோ கட்டம்புசிக்கும்பன்றி
முட்டத்துற்றசிவ சிட்டர்புகழ்மானன்றி
கொட்டமிருந்திடுமா ஒட்டகத்தையும்பொன்றி
இட்டப்படிக்கிநாமே கெட்டியாகவேவென்றி
மட்டிலாதுகொண் டோமெனத்தேறி
திட்டமாகமுன் வருகுதேமீறி (என்ன)

(அரி-வ-ம்.) அடா வேடுவர்களே.

(வேடுவர்-வசனம்.) மகாராஜ்

(அரி-வ-ம்.) இதோ பாருங்கள் சிங்கம், மதமா, வேங்கை, சிருத்தை, காட்டெருமை, மான், மரை, எல்லாம் நமது நாட்டினிடமாகக் குடிகளிட்ட பயிர்களையழித்து மிகவும் பூரித்து ஒன்றுடன்ஒன்று போராடிக்கொண்டு வெகுதூரத்திலோடுகிறது.

(வேடுவர்கள்-வசனம்.) ஆம் மகாராஜ் வித்வசிகாமணிகளைக் கண்டு மறைந்தோடு முறுத்தப் பயல்களைப்போலாக அதோவோடுகிறது பிரபு.

—•—

## அரிச்சந்திரன்சொல் தரு.

பஹாரிமோரிபியாரி என்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

வேகமதாகவாரீர் வீர தீர சூரரே (வே)

அநுபல்லவி

வாகுடன்கூடி வாகைபெறநாடி
ஓகையுடன் நீடியே அ ஆ (வே)

சரணங்கள்.

கூட்டமதாயோடுங் காட்டுமிருகங்களை
வேட்டையாடிவீழ்த்தவே அ ஆ (வே)
ஈட்டிசூலங்கத்தி தாட்டிகமாய்ப்பற்றி
வாட்டமிலாமல் நடத்தி அ ஆ (வே)
மந்திரிகாள்மதி தந்திரிகாளதி
விந்தையதா யித்தருதி அ ஆ (வே)

—

அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிகேளாயோங்குமாநகர்தனைக்கடந்து
அந்தரந்தொடுந்தருச்சூழடவிவந்தடைந்தோம்வேட்டை
விந்தையாயாடவேண்டும்விரைவினில்மலைமேற்பாலன்
சந்திரவதியிருக்கத்தனியிருப்பிடஞ்செய்வீரே.



(அரி-வ-ம்.) பிரதான் நாம் அயோத்திமாநகரைக்கடந்துவாராவும் விருக்ஷங்களடர்ந்தகானகம்வந்துசேர்ந்தோம் ஆனதால் சந்திரவதியும் பாலகனும் வீற்றிருக்க மலையினுச்சியின்மீது டேராவடிக்கச்செய்யும் சீக்கிரத்தில்வேட்டையாட ஆரம்பிக்கவேண்டும்.

(மந்-வ-ம்.) அடே சேவகா அதோ தோன்றுகிற மலையினுச்சியின்மீது மாதஸ்திரியும் பாலகனுமிருக்கச் சீக்கிரத்தில் டேராவடிப்பாயாக.

(சேவகன் வசனம்.) ஆக்ஞை ப்ரபூ.

(சேவ-வ-ம்.) மகாராஜ் மலையினுச்சியின்கண் சுந்தரமாய் டேராவடித்திருக்கிறது.

(அரி-வ-ம்.) மாதே சந்திரவதி நீயும் பாலகனுமிதோ மலையினுச்சியிலிருக்கிற டேராவில் வீற்றிருந்து யாங்கள்செய்யும் வேட்டையைச் சந்தோஷமாய்ப் பார்த்துக்கொண்டிருப்பாயாக.

---

## அரசன் வேட்டையாடும்பாகம்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

வந்தார் வந்தார் வடிவழகரென்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வாரும்வாரும் வில்லியரே-வன
வேட்டையாடுவோஞ் சல்லியரே
வாருந்திடமுடன் பாருங்குகைதனைத்
தேரும்விரைவினி லின்னதென்றே
வலையைக்கட்டுங்கள் பெல வாரிருக்குங்கள்
நிலையைத்தெரியுங்கள் தலை நிமிர்ந்துநில்லுங்கள்
உலையாதோடுங்கள் அதோ
ஓடுறுசிச்சிருதே என் என் என் (வா)

அதிபெலமிகுதிட சூரர்களே
கதியுயர்கால்வலி வீரர்களே





பதிதனைவிட்டுமே குதிகொண்டொருபுலி
பதறிப்படைநடு வோடுதேதோ

பாணமெடுத்து வில்லிற் பாங்காத்தொடுத்து
நாணைப்பிழுத்துப் பக்கம் நன்றாயடுத்துப்
பேணிவிடுத்து அதைப்
பெட்புடன் வெல்லுவீர் தான் தான் தான். (வே

கடகரிபிடிநரிமாதங்கம் —அடுபரிமரைதுலைமான்சிங்கம்
வடதிசைதனில்வெகு துடியுடனேவலர்
அடைவாயிருகக் கட்டியதோர்
வலையைநாடியே தாண்டி வாகாக்கூடியே
தொலைவிலோடியே தானே தொடர்ந்துசாடியே
நிலையைத்தேடியே செல்லும்
வழியைப்பற்றியே போம் போம் போம்

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஆர்சொன்னாரிந்தத்துற்புத்தி என்றமெட்டு.

இராகம் - மோகனம் - தாளம் - சாப்பு.

பல்லவி.

வேட்டையாடவாரீர்வீரரே பெல மோடிருந்தானைசூரரே

அநுபல்லவி.

காட்டிற்குடிகள்செய் யீட்டவளமதைச்
சேட்டையாய்வீட்டிய கூட்டமிருகத்தை (வே)

சரணங்கள்.

காட்டையுள்ளேசென்று கலையுங்கள்-மனங்
கன்றும்லேவலை கட்டுங்கள்-வெகு
தாட்டிகமாத்துடி கொட்டுங்கள்-நம்முன்
தாவிடும்விலங்கினை வெட்டுங்கள்-ஆகா
சக்கமாலைநாட்டோ திக்குபுகழ்வேடரே
சடுதியில் சடுதியில் சடுதியிலித்ததி (வே)

கடகரிமந்தையெல்லா மோடுதே-இதோ
கதியுடன்சிங்கங்கள் நாடுதே-தேரும்
திடமுடன்யாளிகள் கூடுதே-நமது
சேனைக்குள்ளேசென்று சாடுதே-ஒகோ



சீக்கிரமெல்லோருஞ் சிந்தையாகப்பாரும்
தீரரே தீரரே தீரரேநொடியினில் (வே)

பந்திபந்தியாகப் பரிகளும்-மலைப்
பாங்கரில்வாழ்கின்ற வரிகளும்-ஆகா
தந்திரமானதோர் நரிகளும்-ஒங்குந்
தருவூடுலவிடு மரிகளும்-எங்குந்
தாவித்திரிகிறதே மேவித்தெரிகிறதே
தடையின்றித்தடையின்றித் தடையின்றிஎல்லோரும் (வே)

(அரி-வ-ம்.) அடடா வேடர்களே சீக்கிரத்தில் பம்பையைமுழக்கி காட்டைக்கலையுங்கள்.

முன்னூல் விருத்தம்.

சிலையெடுத்தபுய மன்னனைத்தொழுது
சென்றுவேடுவர் பரந்துநீ
ளலையெடுத்தமலர் வாவியும்வயலு
மகழுமம்பொழி லடங்கலும்
வலையெடுத்தருகு திகைவளைத்துமணி
வாயொழுக்கியிடை கூவெனக்
கலையுழைத்திரள்கள் கடமைபன்றிபுலி
காடிகோள்கரி கலங்கவே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

வாடிவாடி மாதரசே யென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

வாரீர் வாரீர் வீரர்களே
வனவேட்டையாடுவோர் தீரர்களே
தேருமக்துகை ஒறியாக்ரம
மிறியார்க்குதே என் என் என்
திடமிகுபுஜபல வேடனே
கடகளிறனைய ஜினத்தனே

சேர்க்கையாகவே தீர்க்கமாய்வரு
மாக்குலங்களைக் கொல் கொல் கொல்

நாட்டினிற்குடிகள்செய் பயிரினையே
வாட்டியிங்குன்ற மிருகந்தனையே
தாட்டிகமாய்வாளைத் நீட்டியதனுயிர்
கோட்டியேசிரங் கொய் கொய் கொய்

நரிகரிபரியரி வரியுமிதோ
பரிவுடனே செர்ச்சிக்கிறதே
நாட்டமுடன்மன வாட்டமிலாதுயிர்
வீட்டியதைவதை செய் செய் செய்

(அரி-வ-ம்.) அடாவனசாரர்களே அதியுஷாராகவாருங்க.

## அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-பியாகு-தாளம்-ஏகம்.

நோட்டு.

வேட்டமாடுவோம் வேடரேதிடவீரரேமிருக (வே)

தேட்டமாய் நாட்டுளோர்
வாட்டமிலாதிட்ட வீட்டப்பயிர்கெடத்
தாட்டிகமாய்ச்செய்திக் காட்டினில்வாழ்மிருக. (வே)

(அரி-வ-ம்.) அடா வேடுவர்களே.

நோட்.

சிங்கம்வருகுதகோ திடத்துடன்வாலையடித்துமேதுட்டச்(சி)

துங்கமாய் பங்கமில்
வெங்கணைகடனைச் சங்கையில்லாமலே
அங்கதன்மீதினிற் பொங்கமாய்விடுத்து. (வே)

(அரி-வ-ம்.) அடாவீரர்களே.



நோட்.

வெங்கைவருகுதகோ வேகமாயனேகமானின மருள (வே)

நீங்கிலா தோங்குவேல்
சாங்கோபமாயெடுத் தாங்கவைமேலேறிக்
தேங்கியதனுயிர் நீங்கிடவேசெய்து. (வே)

(வ-ம்.) அடாவேடுவர்களே.

நோட்.

கொலைபுரியானைகும்பதாகப்பிடிக்கூட்டதுடன்வர்தே (கொ)

மலைவிலா தலையுதே
சிலைநாணேற்றியே பெலவாளிதொட்டக்
குலைமலாமாள நலமுடன்செய்தே. (வே)

(வ-ம்.) அடாவேடர்களே.

நோட்.

கந்துகமந்திகரி கடாவரிமறக்கரடிதிரளாய் (க)
விர்தையாய் வந்தெதிர்
சிந்தையிற்றிடம் பொரு ந்தியேநிற்பதை
இந்தக்ஷணமுயி ருய்ந்திடச் செய்துநாம். (வே)

(அரி-வ-ம்.) அடாவேடுவர்களே யிதோபாருங்கள் யான்விட்ட பாணங்களினால் யானை,புலி,மான், மரை முதலிய மிருகங்களின் சிரசுகளும்கால்களும் அற்றுப்போய்த் துடிக்கிறது.

(வேட-வ-ம்.) ஆம் மகாராஜ்.

(அரி-வ-ம்.) ஆகா இதென்ன ஆச்சரியம்.

## சிம்ம வேட்டை.

### அரிச்சந்திரன் சொல்தரு.

விடாதீர்வேடரே யென்றமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிங்கத்திரள்வாரதே தீரரோநம்முன் (சி)

அநுபல்லவி.

பங்கமில்லாதவிப் பார்கள்நடுங்கிடப்
பொங்கமாய்க்கர்ச்சனை புரிந்ததோதிடச் (சி)

சரணங்கள்.

நாட்டிலுல்லாசமாய் நாடியேயாங்குள்ள
மீட்டவளமழித் திங்குநமைவெல்ல (சி)

கொற்றவர்தன்கரங் கொண்டவில்லொடித்து
மற்றுமவர்சிர மாண்பதாய்ப்புடைத்து (சி)

தொட்டவம்பாற்சில தோய்ந்தோடிவிட்டன
திட்டமாயோர்சிம்மஞ் சீறியேகிட்டின (சி)

---

(அரி-வ-ம்.) அடா வேடுவர்களே அதோ பாருங்கள் கூட்டங்கூட்டமாகத் திரண்டுவந்த சிங்கங்களெல்லாம் மந்திரி தந்திரி சிற்றரசர்விட்டகணைகளினால் மடிந்துவிட வதிலோர் சிம்மமானது நம்முன் வெகுவுக்ரமத்துடன் சீறிவருகிறது ஆகையால் சீக்கிரத்தில் வலையைக்கட்டுங்கள்.

(வேடுவர்கள்-வ-ம்.) இதோ வலையைக்கட்டி விட்டோம் அதோ பாருங்கள் மகாராஜ் சிங்கமானது மிகவுங்கெர்ச்சித்து வருகிறது.

### அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-சேதாரம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சிம்மமேமயானே நீ சீறியாக்ரமம்மீறினும்விடேனே (சிம்)



அநுபல்லவி.

மும்மையாமுலகத்திலுஞ் சீர்த்திசேர்
செம்மணிமாடஞ் செப்பமாகவொளிர்
நம்மையோர்வளர் கோசலநாட்டினைத்
தம்மனப்படியே தும்சஞ்செய்தனை (சிம்)

சரணங்கள்.

இட்டவலைமீறி நீ இருமாப்புடனேபெருஞ்சினமீறி
அட்டகஜமனந் தட்டுக்கெடச்சத்தம்
இட்டநிறைவினை விட்டுவிடுவேனோ
நாட்டஞ்செய்யுனைக் கெட்டியாகநின்று
மட்டில்லாப்பாணம்வில் தொட்டுக்கொல்வேனின்று (சிம்)

திடத்தநதோர்வாலையடத்துடன் படபடப்பாயிவ்வேளை
நடத்தலைகலைமயால் அடித்தென்முன்வலி
படைத்தோமெனவே சடத்தோன்போல்வீசி
அடர்ந்ததாலிவ் விடத்திலுன்னுவி
கடத்திடக்கணை விடுத்திட்டேன்தாவி (சிம்)

(அரி-வ-ம்.) அடா வனவேடுவர்களே இதோபாருங்கள் நம்முன்னம் உக்ரமாய் வந்த சிம்மத்தையோர் கணையாற்கொன்று விட்டேன்.

(வேடு-வ-ம்.) பார்த்தோம் மகாராஜ் மற்றும் அதோபாருங்கள் ஓர் வேங்கையானது மிகுந்த சினத்துடன் அனேகவீரர்களை யதாகதஞ் செய்தோடிவருகிறது அதைப்பார்க்க எங்களுக்குப் பயமாயிருக்கிறது.

(அரி-வ-ம்.) அடா வேடர்களே கிஞ்சிற்றேனும் அச்சமில்லாமல் வலையைக் கட்டுங்கள் ஒரே பாணத்தாற் கொன்றுவிடுகிறேன்.

(வேடு-வ-ம்.) நல்லது மகாராஜ்.

(அரி-வ-ம்) அடா வேடுவர்களே எங்கே நம்முன் எதிர்த்து வந்த புலியானது.

(வேடு-வ-ம்.) அதோ பாருங்கள் ஓடுகிறது மகாராஜ்

# புலிவேட்டை.

## அரிச்சந்திரன்சொல்தரு.

உனையேநம்பினேன் பன்னகசயனனென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

புலியேஓடாதே புதற்குள்நாடாதே

அனுபல்லவி.

வலிமையாச்சீறி நலியாமல்மீறி (பு)

சரணங்கள்,

வானிலம்புகழும் நானிலநிகழும்
வான்பயிரழித்து வாகுடன்செழிந்த (பு)

அட்டியின்றிநாடி ஆடுமாட்டைச்சாடி
இட்டமாய்வருந்த இசைத்திவண்வந்த (பு)

அட்டதிசைபோற்று மரசனென்முன்னே
திட்டமாயெதிர்த்துச் செயலற்றுப்பின்னே (பு)

(அரி-வ-ம்.) அடாவேடுவர்களே ஒரேகணையினாலே நம்முன்னம் வந்தபுலியைக்கொன்று விட்டேனாகையால் சீக்கிரத்திலதை யெடுத்துவந்து அதன்தோலையுரியுங்கள்.

(வேட-வ-ம்.) உத்தரவு மகாராஜ.

### அரசன் விருத்தம்.

பாங்குயர்வேடர்காளிப் படர்வனமதனிலேயுற்
றோங்கியமிருகமெல்லா மொழிந்திடவேட்டையாடித்
தீங்கிலாவுவகைகொண்டோஞ் சீக்கிரமிவடம்விட்டு
நீங்கியேமாதுவாழு நீள்வரைசெல்வோம்வாரீர்.

(அரி-வ-ம்.) அடாவேடர்களேநாமிந்த அடர்ந்தவனத்துக்கு வந்துநமது நாட்டினிடமாகக் குடிகளிட்டபயிர்களை யெல்லாமழித்த விலங்கினங்களை வேட்டையாடிச்சங்கரித்து விட்டோம்ஆகையால் விரைவினிலிவ்விடத்தை விட்டகன்று சந்திரவதியிருக்குமலையின் பக்கஞ்செல்லுவோம் வாருங்கள்.



(வேட-வ-ம்) உத்தரவு மகாராஜ்.

(சேவ-வ-ம்) அதோபாருங்கள் மகாராஜ் சிலமிருகங்கள் நம்மைக்கண்டு வெருண்டெங்கேயோ வோடுகிறது.

(அரி-வ-ம்.) வேடர்களே முன்னமே நம்முன்னெதிர்த்தவந்த மிருகங்களெல்லா மிப்போ தோடத்தலைப்பட்டுவிட்டது.

(வேட-வ-ம்.) ஆம் மகாராஜ்

### விலங்கினங்கள் விஸ்வாமித்திரரிடம் முறையிடும் விருத்தம்.

[illegible] தவமுனிவரேதம் வருதியின்படியாமேகிக்
கோதிலாவரிச்சந்த்ரன்றன் கோசலநாடனைத்துந்
தீதுறச்செய்தோமன்னோன் திட்டமாய்வேட்டையாடி
வேதனைசெய்தான்யாங்கள் மீண்டிவண்வந்தோமையா

(வில-வம்.) சரணம் சரணம் விஸ்வாமித்திரமுனிவரே தமதுத்திரவின்பிரகாரம் யாங்கள் கோசலநாட்டுக்குச்சென்று ஆங்குகுடிகளிட்டபயிர்களையு மற்றும் மடம், கூடம், கூபம், ஏரி, பூங்காவனம் முதலியவைகளையெல்லாம் அழித்தோம் அஃதைக் குடிகளாற்கேள்வியடைந்த அந்நாட்டுக்கிறைவனான வரிச்சந்திரன் ரிரதகஜதுரகபதாதியென்ற நான்கு வகைச்சேனையோடு வந்து வேட்டை [illegible] எங்க[illegible]னத்தாரையெல்லாம் மாய்த்ததுமன்றி எங்கள் மீதி [illegible]ணையைத் தொடுத்தான் அன்னவன் கணைக்கிரித்தப்பிப் பிழைத்துத்தம்மிடம் வந்தோம்யாங்கள்பட்ட துன்பமிவ்வளவென்றெடுத்துரைக்கமுடியாது நாதா.

(விஸ்-வ-ம்.) ஆ! ஆ! விலங்கினங்களே நீங்கள் யாதொன்றுக்கும் அஞ்சாதீர்கள் உங்களினத்தாரையுங்கொன்று உங்களையுந்துன்பஞ்செய்த அந்தத்துஷ்டனான அரிச்சந்திரனை அன்னவன்சேனைகளோடு அதஞ்செய்யும்படி யானமார்க்கஞ் செய்கின்றேன் நீங்களுங்களுங்களெதாஸ்தானஞ் செல்லுங்கள்

(வில-வ-ம். உத்தரவு முனிவரே.

விஸ்வாமித்திரர் பன்றியை சிருஷ்டிக்கும் பொதுவிருத்தம்.

விலங்கினமுரைத்த வார்த்தையைக்கேட்டு
வேதமாமுனிவனும் வெகுண்டு
துலங்கவேநன்று நன்றெனநகைத்துத்
துய்யநாசியிற் கரஞ்சேர்த்துச்
சலங்கொளு மனத்தனுகியேயுயர்ந்த
தன்றவப் பெருமையாலிரண்டு
பெலந்திகழ்மருப்புங் கோலமுமுடைய
பீடியர்பன்றியைப் படைத்தான்.

பன்றி விருத்தம்.

மன்னுமாதவத்திற்றேர்ந்த மாமுனீஸ்வரரேபோற்றி
என்னையோர்பொருளாயெண்ணி யிவணழைத்திட்டசங்கை
நன்னயமுடனேயெற்கு நவிலுவீராகுல்யானும்
உன்னதமாகவேயின் றாழியஞ்செய்குவேனே.

(பன்றி-வ-ம்.) சரணம்சரணம் தவமுனிவரே அடியேனையொருபொருட்டாக வெண்ணி யிங்கழைத்த விஷயத்தைச் சொல்லுவீராகுல் வருதிப்படியூழியஞ்செய்ய வுநதியா யிருக்கின்றேன்.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

பன்றியேகேளாய் கோசலைநாடாள்
பார்த்திபன் தானையோடந்தக்
குன்றுசூழ்வனத்தில் விலங்கினமெல்லா
கொன்றவீற்றிருக் கிறுனீயுஞ்
சென்றவன்தானை தேர்கரிதுரக
மனைத்தையுஞ் சினமுடன்றீத்து
வென்றிகொண்டன்றே னிவ்விடம்வருக
வினையது புரிகுவாய்விரைந்தே.

(விஸ்-வ-ம்.) ஆ! மாயவராகமே உன்னையழைத்த காரணப் சொல்லுகின்றேன் கவனித்துக் கேட்பாயாக அதாவது அதோ தோன்றுகிற மலைகளடர்ந்த வனத்திடமாக கோசலநாட்டுக்கிறை



வனுகிய அரிச்சந்திரன் நான்குவகைச் சேனையே னங்களை யெல்லாம் வேட்டையாடிக்கொன்று சு திருக்கிறு னுகையால் நீசென்று மகாவுக்கிரத்து னது நான்குவகைச் சேனையையுந் தும்சஞ் செ அவனை யெந்த விதத்திலாவது இவ்விட மிழுத்துக் வாய்.

பன்றி வசனம்.

முனிவரே தமதுத்தரவுபோலவே செய்கி கின்றேன் முனிநாதா.

விருத்த

வன
மனத்த
யழியை
மனத்து

னத்தையு மழித
றயிடம் வருத்தார்.

(வேடன்
ஓர் அருகுன்ன
றது.

(அரி-வ-ம்
வேட்டையாடி
திரவதியிருக்கு
பன்றி யெதிர்த்
பன்றி.

(வேடன்
த்திற் பதுங்

பாருங்கள் மகாராஜ
கச் சேனைகளையும் பின்
களைகளுக்குங்கெலித்துக்கொ
ராமாய் நம்மையெதிர்த்து வருகி

விபரீதம் எல்லாமிருகங்களையும்
டோமென்று சந்தோஷமாய் சந்
ந் செல்லுகையில் தனிய ார்
ன்று பகர்கின்றனை எங்க தப்

பாருங்களரசே தங் யலது

## பன்றி வேட்டை.

### அரசன்சொல் தரு.

துபார் திண்புவியின்குழு செம்பவென்றமெட்டு.

இராகம் - அம்சஸத்வனி - தாளம் - ரூபகம்

பல்லவி.

ன் கதியுடனெதிர்பன்றிதனைக் (க)

அநுபல்லவி.

கீர்த்திசேர் சூரரே

ந்த மோடிவந்தபன்றி தனைக் (க)

சரணங்கள்.

த்துற்றிருரும்

ர்பன்றிதனைக். (க)

ர வேடுவ

ப பசைசமேனியு

ங்காரம்! என்னகெம்

ஆகா இவ்வளவு தகமை

ததேயில்லை ஒருவாறு மூற்

லோக,ஜெனலோக,மகாலே

று சொல்லப்பட்ட மேலேழுல

தலை, சுதல, தராதல, மகாதல, பாதா

ழேழுலங்களையும் ஒருகொம்பினாலே

தானோ அல்லது ஜெகத்திலுள்ள வுயிர்

டும்யமன் தானிவ்வடிவங்கொண்டுவந்த

யவில்லை இஞ்சிற்றேனும் அஞ்சாது எ

ிற்கிறது.

(வே-வ-ம்.) ஆம் மகாராஜ் இவை

கள்மனந் திகிலடைகிறது.

(அரி-வ-ம்.) அடாவேடுவர்களே

இல் பைபாவிகொடுத்த வில்லினிடமாக

தோரம்பக்கம் மறைவா

ன்றியைக் கண்டுகொண்

என்னவுதாரம்! என்ன

பன்றியை யானிது

ல் பூலோக, புவர்

லோக, சத்தியலோ

ும் அதல, விதல,

று

பெரியவாகுமிது

ல்லாங் கொள்ளயி

ற்றென்னவோதெரி

னதமா யெதிர்த்து

ர்க்கப்பார்க்க வெங்

ோதீர்கள் பாலைகிலத்

கணையைத் தொடுத்து



கணைப்போதில் மாய்த்துவிடுகிறேன் நீங்கள் வலையைக்கட்டி உசாராயிருங்கள்.

(வேடு-வ-ம்.) உத்தரவு மகாராஜ்.

### அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம் - கல்யாணி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

பன்றியேயுன் அக்ரமம் பார்க்குறேன்

பைபாவிகளை மாய்க்குறேன்.

அநுபல்லவி.

குன்றடர்ந்தவிந்தக் கோதிலாக்கானிலே

கோபக்கனலேற்றந்தத் தாவித்திடஙய்வந்த

சரணங்கள்.

கட்டும்வலைதனை மட்டிலாமற்றுண்டிச்

சாலாள் தனைச் சீறி-தகை

கட்டாரிவேற்கரக் தட்டாமற்கொள்வேடர்

கன்றக்குடற் பீறி

வீரக் கழலையுடைய அழகார்வேந்தர்

தாத்தலை சிதறக்கைகா லுதாச்செய்தென் னெதிருற்றிடும் (ப)

கதித்ததோர்பாலை வனத்தவள் தகுந்த

கனகத்தேரெனவே உளம்

மதித்திலாதிதை யெடுத்தென்னுடுமா

ரனெரிய வெனவே

பெலக் கம்பமதைநிகர் கொம்புகள்மறைத்துக்

ாவிற்றுகள் மேவத்தனை தாவித்திகழ் வீறிட்டிடும். (ப)

மண்டலமெல்லாம் புகழ்நவகண்டம்வாழ்

மாற்றலரைச் செயமே உயர்

அண்டர்வியப்புறக் கொண்டபஹது

ரரிச்சந்த்ரன் முன் பயமே-ஒர்

அணுவேனுமிலாத் துணிவதாகவே

திப் புவிசிதாக் கிரிபதரப் படைநடுவந்ததோர். (ப)





(அரி-வ-ம்.) அடா வனசரர்களே பைரவிகொடுத்த வில்லினிடமாகக் கணையைத்தொடுத்து அதன்மீது பிரயோகஞ்செய்தேன் அக்கணையானது நெற்றியில்தாக்க வுடனேநின்றநிலை தெரியாமலெங்கோசென்றுவிட்டன வாருங்கள் எல்லோரும் போய்ப்பார்ப்போம்.

(வேடு-வ-ம்.) நல்லது ப்ரபூ.

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் ஏ வனவேடர்காள் நாமிப்போது எவ்வளவு தூரமோவந்தும் அப்பன்றியைக்காணப் படவில்லைதசைநசையாக எவ்விடத்திலேயோ சிதைந்துவிட்டதுபோலிருக்கிறது யாவருந்திரும்புங்கள் சந்திரவதியும் தேவதாசனுமிருக்கும் டேராவுக்குச்சென்று அன்னவர்களையு மழைத்துக்கொண் டயோத்திக்குச செல்வோம்.

(மந்-வ-ம்.) ப்ரபூ உத்தரவின் பிரகாரம்.

---

## தேவதாசன்

## ஓர்யானைக்கண்டு சந்திரவதியிடங் காட்டுதல்.

---

### தேவதாசன் விருத்தம்.

திங்களுநதியுஞ்சூடுஞ் சிவபிரானருளினாலே
திங்களோர்பத்துந்தாங்கிச் சிருடலீன்றதாயே
அங்கமாயிதோநம்முன்னந் துள்ளியேதாவுகின்ற
சிரங்கமார்மானைப்போலப் பூமியிற்கண்டதுண்டோ.

---

### தேவதாசன் சொல் தரு.

சரசஞ்செய்யவா என்ற வர்ணமெட்டு

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்ன ஆச்சர்யம் அம்மா என்ன ஆச்சர்யம்

அநுபல்லவி.

என்ன ஆச்சர்யமிதோபார் என்ன ஆச்சர்யம் அம்மா

சரணங்கள்.

பொன்மின்பிரகாசம்போல் பொற்புடன்விளங்கமண்மேல்
உன்னதமாய்த்துள்ளியொருமா னேடிவருகுதே அம்மா (எ)

துங்கமருட்பார்வைநேத்ரம் துலங்குவதாலிதற்குசாஸ்திரம்
அங்காரிகையார்விழிநே ராமென்றறைவன அம்மா (எ)

சுந்தரமாயிந்தமானைத் தொடர்ந்துகைப்பற்றினேனே
விந்தையதாய்விளையாடிட விரைவில்வருவேனே அம்மா (எ)

(தேவ-வ-ம்.) மாதா இந்தமானைப் பார்க்கப்பார்க்க என்ன ஆச்சர்யமாயிருக்கிறது சீக்கிரம் விடைகொடுக்கவேண்டும் பிடித்துவருகின்றேன் விளையாடுவதற்கு.

## சந்திரவதிக்கும் தேவதாசனுக்கும் தர்க்கம்.

மாதே போய்வாரேன் வனவேட்டைக் கென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

கண்ணேகண்மணியே கட்டிரத்தினமே (க)

அநுபல்லவி.

வண்ணமான் பிடிப்பதற்கு என்னுலதுகூடாதடா (க)

## தேவதாசன்சொல் தரு.

பல்லவி.

தாயேயெந்தனுக்கு வரந் தந்தருள்வாய் (தா)

அநுபல்லவி.

தூயபுள்ளிமானதனை நேயமாய்க்கைப்பற்றிவாரேன் (தா)

சந்திரவதி.

உன்கையிலகப்படாம லோடிப்போகுமேமானதால் (க)

தேவதாசன்.

ஓடிப்போனாலும்யான்விடேன் உத்தமியேயென்னம்மணி (தா)



சந்திரவதி.

சின்னஞ்சிறுபாலனாவதன் செய்கைதெரியாதுனக்குக் (க)

தேவதாசன்.

செய்கையதற்குற்றவிதஞ் செப்புவாய்விபரமாகத் (தா)

சந்திரவதி.

செப்புவாயென்றபாலகா சீர்கொம்பதாற்குத்துமடா (க)

தேவதாசன்.

கொம்பதனாற்குத்துமெனக் கூறுவதுஞாயமாமோ (தா)

சந்திரவதி.

ஞாயமல்லவென்பதனை நவின்றிடுவாயிப்போதே (க)

தேவதாசன்.

மானேனைத்துயர்செய்திட மன்னன்மகன்விடுவேனோ (தா)

சந்திரவதி.

மன்னனானநின்பிதாவை மான்பிடித்துத்தரச்செய்வேன் (க)

தேவதாசன்

யென்பிதாவுக்குற்றதிற மெனக்கில்லையோகூறம்மா (தா)

சந்திரவதி.

எவ்விதத்திறமுற்றாலு மெந்தன்சொல்மறுக்கலாமோ (க)

(சந்-வ-ம்.) பாலகா உனக்கு எவ்வளவு பலாஷ்டிக முற்றபோதிலும் மாதாவாகியவென்னுடையவார்த்தையைமறுக்கலாமா.

(தே-வ-ம்.) மாதா தாய்சொற்றுறந்தால் வாசகமில்லையென்பதை யானுணர்ந்திருந்தும்.

தரு.

தன்சொல்தடுத்தகுற்றத்தை க்ஷமிக்கவேண்டுமிக்ஷணம் (தா)

(தேவ-வ-ம்.) அருந்தவஞ் செய்தென்னை யீன்றெடுத்ததாயே உனது வார்த்தையைத் தடுத்த குற்றத்தை மன்னிப்பதோடு எந்து பிதாவானவரிவண்வந்தவுடனே இம்மானைப்பிடித்துத் தரும்படி செய்யப் பிரார்த்திக்கின்றேன்.

(சங்-வ-ம்.) அவ்விதமே செய்கிறேன் பாலகா.

(அரி-வ-ம்.) மந்திரீ இதோ சந்திரவதி யிருக்கும் டேராவுக் சமீபத்தில் வந்து விட்டோம் எல்லா சைநியங்களையு மொருங்கு சேர்த்து ஓரிடத்தில் வீற்றிருக்கச்செய்யும்.

(மங்-வ-ம்.) ஆக்ஞை அரசே.

(சங்-வ-ம்.) பிராணேசா வந்தனஞ்செய்கின்றேன்.

(அரி-வ-ம்.) கல்யாண் கண்ணாட்டி நமது குடிகளுக்குத்துயர் விளைத்த கொடிய மிருகங்களை யானும் படைத்தலைவர்களுவனவேடர்கள் யாவரும் வேட்டையாடியதைக் கண்ணுற்று நீயும்பாலகனுங் களிகூர்ந்தீர்களா.

(சங்-வ-ம்.) ஆம் ப்ரபூ.

## சந்திரவதி அரசனை மான்பிடித்துத்தரச்சொல்லுதல்.

### சந்திரவதிசொல்தரு.

மன்னவனேயுந்தனை யென்றமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவரேயிந்தன் மான்தனைத்தரே
பின்னமிலாமற்பிடித்த நள் வீரே.(மன்)

அநுபல்லவி.

கன்னல்கமுகெழில் காட்டும்வயல்சூழ்
கண்யவவோத்தியை களிப்புடனேயாள்
சொன்னமொழிதவறாச் சுகிர்தகுணாளரே
சுந்தரமிருந்திடு மெந்தன் மணாளரே(மன்)

சரணங்கள்.

சொன்னமோமின்னே தூயவனேகஞ்
சோதிக்கதிரோவிதன் சொருசுள்ளதேகம்
என்னேர்நாவினுலிதை யெடுத்துரைக்கப்போமோ
இப்பார்சூழக்குமாதி சேடனுலாமோ(மன்



168

சந்தரசடாதார் தன்னருளாலே
தரணியிலுதித்தநற் தனயனிதன்மேலே
சிந்தைவைத்தாலுயர் தேசதைக்கண்டே
சீக்கிரமாகவே சிந்தைமகிழ்வுகொண்டே.(மன்)

(சங்-வ-ம்.) பிராணேசா நம்மெதிரி லுலாவிக்கொண்டிருக்கும் புள்ளிமானைப் பார்த்தீர்களா?

(அரி-வ-ம்.) கண்ணாட்டி பார்த்தேன்.

(சங்-வ-ம்.) கண்ணாளா இந்தப் புள்ளிமானைப் பாலகன் தேவதாசன் கண்டு ஆச்சரியமடைந்து பிடிக்கச்சென்றனன் பாலகா வுன்னைக்கிட்டகப்படாது உனது பிதாவந்தவுடன் பிடித்துத்தரச்சொல்கின்றேனெனக் கூறினேன் ஆதலாலிதைச் சீக்கிரம் பிடித்துத்தரப் பிரார்த்திக்கின்றேன்.

(அரி-வ-ம்.) ஆ! எந்தனுளஞ்சக்கிசைந்த அன்னமே.

### அரிச்சந்திரன்சொல் தரு.

மன்னா இந்தமானைப்பாருமே யென்றமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

மாதேயிந்த மான் வேண்டாமடி எந்தன்
மாதேயிந்த மான் வேண்டா மடி(மா)

அநுபல்லவி.

நீதில்செழுங்குயிலேதிருச் சித்திரமே நற்றுடியை
யொத்த விடை ரத்தினமே(மாதே)

### சந்திரவதிசொல் தரு.

பல்லவி.

சாமிதயை செய்குவீர்தானே துரைச்
சாமிதயை செய்குவீர் தானே

அநுபல்லவி.

பூமின்மின்னைப் பொருவுமிம்மான்
புத்ரன்விளையாடிடவே யித்தினம்பிடித்தருளச் (சா)

அரசன்.

புத்ரன்விளையாடக்காரார் பூங்குழலினளேவேறோர்
பொருளில்லையோவிம்மானை யருளெனக்கேட்டாய்வீணை (மா)

சந்திரவதி.

மற்றோர்பொருளெல்லாநாதா மானிலம்புகழுநீதா
மாசிலாமைசேர்ந்திடுமோநற் காட்சியதாகுமோதுரைச் (சா)

அரசன்.

பெண்ணேசுகமொழியினளே பெரும்பேதமைக்குணத்தினளே
பெட்புடனேகூறுஞ்சொல் நட்புடனே கேட்பாய்நல் (மா)

சந்திரவதி.

வேண்டாமெனவிளம்புஞ்சங்கை விபரமாயெந்தனுக்கிங்கே
வித்தகரேஇத்தருணஞ் சித்தமகிழ்வாய்க்கூறும் (சா)

(சந்-வ-ம்.) கண்ணாளா சுந்தரம்பொருந்திய இந்தமானைத்தா ங்கள்பிடிக்கக் கூடாதெனக் கூறுங்காரணம் உத்தரவாகப் பிரார்த் திக்கின்றேன்.

அரசன்.

நன்னகரமதைநாடி நாற்றுப்பயிரெல்லாஞ்சாடி
நாசமுறச்செய்திவ்விடம் வாசமுறலாமேமட (மா)

(அரி-வ-ம்.) அடியேபேதா யுனக்கே னிவ்விதமான புத்தி யேற்பட்டது நாட்டினிடமாகக் குடிகளிட்டபயிரை யழித்திங் குறைவதான இம்மானைக் கொல்லும்படி சொல்லாது பாலன்கேட் கின்றான் பிடித்துத்தாருமென்று சொல்லுதழகாமா.

(சந்-வ-ம்.) பிராணேசா அப்படியானால்.

சந்திரவதிசொல் தரு.

மன்னவுந்தன்மனதுபோல வையம்புகழுநேசால
வலிமையுடனிம்மானை நலியச்செய்வீர்தானே. (சா)



(சந்-வ-ம்.) கண்ணாளா தங்கள் சித்தம்போல் இம்மானை வ தைசெய்ய பிரார்த்திக்கின்றேன்.

(அரி-வ-ம்.) நல்லது மாதரசே.

# அரசன் மான்வேட்டையாடுகிறபாகம்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே என்றமெட்டு.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

மானேயுந்தன் வலிமையறிகின்றேன் மன்னவன்யானே. (மா)

அநுபல்லவி.

வானிலம்புகழ்கோசலே மாநாடதில்கிவந்த
ஆனினமுசற்பயிரெல்லா மழித்துவந்த. (மா)

சரணங்கள்.

சிங்க புலியாளிபன்றி சிந்துரமரைகள்யாவும்
பங்கமான்செய்ததறிந்தும் பகைத்துத்தாவும். (மா)

அச்சமில்லாமலென்முன் னாக்ரமித்துவந்ததாலே
இச்சணத்திலாவிபோக்குவே னிப்புவியின்மேலே. (மா)

(அரி-வ-ம்) ஹே பிரதான் இதோபார்த்தீரா இம்மானைச்சந் திரவதியானவள் பாலகன் விளையாடுவதற்குப்பிடித்துத்தரவேண்டு மென்றுவேண்டினள் கூடாதென இதன் உண்மையைக்கூறி ஒரே சரத்தினாற் கொன்றுவிட்டேன் பொழுதோ அஸ்தமிக்க இன்னம் ஐந்துநாழிகையிருக்கும்போலத் தோன்றுகிறது. சீக்கிரம் ரதகஜ துரகபதாதியெல்லாந் தயார்செய்யும் குதூகலமாக அயோத்திக் கேகுவோம்.

(மந்-வ-ம்.) அப்படியே யெல்லாந் தயாராகிவிட்டது ப்ரபூ.

(அரி-வ-ம்.) பிராணசகியேயும் பாலகனும் இப்பல்லக்கின்மீது ஆரோகணித்துவாருங்கள் யானும்மந்திரியும் ரதத்தின்மீது ஆரோ கணித்து வருகின்றோம்.

(சந்-வ-ம்.) நல்லது பிராணேசா.





# பூஞ்சோலை சேருகிறபாகம்.

170

(அரி-வ-ம்.) மந்திரி இதென்ன ஆச்சிரியமாயிருக்கிறது நாம் அனேகவனமெல்லாஞ்சுற்றி வேட்டையாடினேம் நம்மெதிரிற்றோன்றுகிற வனத்தைப்போலச் செழிப்புற்றதாகத் தோற்றப்படவில்லை ஆதலால் அதனைப்பார்த்துச் சீக்கிரமேகலாம்.

(மந்-வ-ம்.) அவ்விதமே ஏகுவோம் ப்ரபு.

(அரி-வ-ம்.) பிரதான் இங்கு இளந்தென்றலானது வீசிக்கொண்டிருப்பது சுபாவம் அதனேடு குளிர்ந்தவாடை வீசுவதென்ன பக்கத்தில் தடாகமிருக்குமென் றெண்ணுகிறேன்.

(மந்-வ-ம்.) ஆம் ப்ரபு சமீபத்தில் கட்டாயம் தடாகமிருக்க வேண்டும்.

(அரி-வ-ம்.) மந்திரி இவ்வதிசயத்தைச் சந்திரவதிக்கும் பாலனுக்கும்காண்பித்து இன்றிராத்திரி இவ்விடத்தில்தங்கி காலையில் அயோத்திக்கேகலா மென்று எண்ணுகிறேன் உமதிச்சையாது.

(மந்-வ-ம்.) என்னுடைய சித்தமும் அவ்விதமே அரசே.

(அரி-வ-ம்.) மந்திரிநமது சேனைசமூகங்கள் யாவற்றுக்கும்படி கொடுத்து போஜனமருந்தச்சொல்லி இவ்விடத்தில் உஷாராகத் தங்கியிருக்கும்படி செய்வதோடு தடாகஞ் சமீபத்திலிருப்பதால் அதில் யான் வீற்றிருப்பதற்கு டேராவடிக்கும்படிசெய்யும்.

(மந்-வ-ம்.) அவ்விதமே சீக்கிரம் தயார்செய்கிறேன் பிரபு.

(அரி-வ-ம்.) அடியே யென் பிராணசுந்தரி பல்லக்கைவிட்டிறங்குவாயாக.

(சந்-வ-ம்.) கண்ணாளா அயோத்திவந்து சேர்ந்தோமா?

(அரி-வ-ம்.) அல்ல! மாதே நாமென்னுளுங் கண்டிராத விசித்ம்பொருந்திய ஓர்வனம் அதோ.தோற்றுகிறது அதன்சிறப்பைப்பார்த்து அப்பாற் செல்வோம்.

(சந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபு.

## அரிச்சந்திரன் சொல் தரு.

கொண்டல்வண்ணு என்ற வர்ணமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

இந்தவனச்சிறப்பென் சொல்வேன். (இ)

அனுபல்லவி.

சுந்தரமிகுமாதே சொகுசாகவேயிப்போதே
கந்தமிகக்கமழ் கின்றதே. (இ)

சரணங்கள்.

தங்கமாயிக்குவிறைந்த தூயநன்மலரெல்லாம்
அங்கசனம்புபோல்த்தோணுதே அங் (இ)

கூவிளங்கனியெல்லாம் கோதையர்கொங்கைபோல்
தீவிரமாய்த்தெரிகிறதே தீவ. (இ)

மாங்குயிலினமெல்லாம் மன்மதன்றனைக்கூவி
நீங்கிலாமலழைக்கிறதே நீங் (இ)

வண்டுகள்சுதிகூட்ட மாங்குயிலிசை[illegible]டக்
கண்டுமயில்களாடுதே க[illegible] (இ)

(அரி-வ-ம்.) கண்ணாட்டி. சந்தனம், அரிசந்தானம், பாரிசா தம், அத்தி, அசோகு, தேக்கு, வேங்கை, மராமரம், மா, பல[illegible] கொய்யா, இலந்தை, முதலியமரங்களும் மல்லிகை, முல்லை,சிவந்தி[illegible] அந்திமல்லி, நந்தியாவட்டை, மனோரஞ்சிதம், முதலியபுட்பச்செடி களுமுடைய இந்தப் பூங்காவனத்தின் சிறப்பை என்னலெடுத்துக் கூறக்கிஞ்சிற்றேனு முடியாது அன்றியும் ஒருவாறு ஆயிரநாவை யுடைய ஆதிசேடனானவனெடுத்துச் சொல்லவெத்தனித்தாலு மவ னலுமேலாது மாதே.

(சக்-வ-ம்.) ஆம் ப்ரபூ மிகவுஞ் சுந்தரமாகத்தானிருக்கிறது.

(அரி-வ-ம்.) பிராணசகிமற்றும் அதோ ஓர்தடாகம் தோ னுகிறது அதனைப்போய்ப்பார்ப்போம்வா.



## அரிச்சந்திரன்சொல் தரு.

இந்தப்பூங்காவினிலே என்றமெட்டு.

இராகம்-சமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அற்புதம்பார்மயிலே இவ் வழகியபொய்கையிலே
மற்றடங்தோள்மதிதயன் மாதவக்குயிலே. (அ)

(அரி-வ-ம்.) பகருதற்கரிய புஜபலபராக்கிரமுடைய மதிதய ராஜன் மாதவத்துதித்தவெனது ஆசைக்கண்ணாட்டி யிந்தச்சுந்தர மிருந்தபொய்கையி லிடமாகவுற்ற ஆச்சர்யங்களைப் பார்த்தனையா!

(சங்-வ-ம்.) என்ன பிரபூ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

பாயுஞ்சேல்மீனதனை உயர் பக்ஷிக்குழாங்கள்முற்றும்
வ[illegible]கள்தனையேதிறந்து வன்மையுடனேசுற்றும். (அற்)

(அரி-வ-ம்.) கண்மணிமாதர்கள் விலோசனத்துக்கு உவமை [illegible]யாருளாகிய கெண்டைமீனெல்லாம் வெடிபாய்ந்துகொண்டிரு [illegible]ப்பதைக்கொக்கு செங்கால்நாரை முதலிய பக்ஷிசாலங்கள் அம் [illegible]மக்ஷத்தைப் புசிப்பதற்கு மேலேபறந்து கொண்டிருப்பதென்ன வுன்னதமாயிருக்கிறது பார்.

(சங்-வ-ம்.) பிராணேசா பார்த்தேன்மற்றும் (ஓடி மீனோடி யொருமீன்வரு மளவும் வாடியிருக்குமாங் கொக்கு) என்றபழ மொழிக்கிணங்கச சில கொக்குகள் அதோகரையின் பக்கத்தில் மறைவாயிருக்கின்றது.

(அரி-வ-ம்.) ஆம் பிராணசகி.

### மேற்படி தரு.

செந்தாமரையிலேமேல் திர ளாகவளைகளின்ற
சிந்தைமணிகருவென்ன மெல்லன்னமேவுகின்ற. (அற்)

(அரி-வ-ம்.) மாதேமற்றும் அதோபார் தாமரையிலைமேல் மிருதியாகச் சங்கினங்களீன்ற முத்துக்களை அன்னங்களெல்லாம் தாமிட்டமுட்டையென நினைத்து அவ்விலையின்மேல் அடையாக வீற்றிருக்கிறது என்னபுதுமை!

(சங்-வ-ம்.) ஆம் பார்த்தேன் ப்ரபூ.

அரசன் தரு.

அங்கரைமீதிலுற்ற தென்னை யார்மதுவைவடிக்கப்
பொங்கமாய்வாளை புசித்துப் பூரித்திருக்குமிக்க. (அற்)

(அரி-வ-ம்.) கண்மணி சீக்கிரமாகப்பார் இந்தவாவிக்கரையி னிடமாக நிற்குந்தென்ன மரங்களெல்லாம் மதுவைச்சிந்த பக்கத்தில் நீருகிலிருக்கும் மச்சங்களெல்லாம் புசித்து மிகவும் பூரித்து ஜலத்தினிடமாகப் படீர்படீரென்று வெடிபாய்கிறது என்ன அலங்காரம்!

(சங்-வ-ம்) கண்ணுற்றேன் கண்ணாளா.

அரசன் தரு.

வண்டினங்கள்மிதிக்க நன் வாய்விழ்வெண்வாரிசம்
தெண்டிரையதிலுதித்த திங்கள்போன்றபாரிசம். (அற்)

(அரி-வ-ம்.) ப்பாணசகி இந்தத்தடாகத்தினிடமாக வுற்ற அல்லிப்பொகுட்டின்மீது வண்டினங்களெல்லாம் மிதித்துத்துவைக்க அதனால் இதழ்கள் விரிதலான அம்மலர்களானது சிராப்தியி லுதித்துவரக் கூடிய சரச்சந்திரனைப்போல் தோற்றுகிறது பார்த்தனையா?

(சங்-வ-ம்.) பார்த்தேன் ப்ரபூ என்னஆச்சரியமாயிருக்கிறது

அரசன் தரு

பாசியலைகளினற் பண்பாகவேயலைவது
மாசில்வடவைப்புகையின் மாதிரியேயானது (அற்)



(அரி-வ-ம்.) கண்ணாட்டி ஆ! ஆ! என்னவென்றெடுத்துரைப்பேன் இதோ பார் இத்தடாகத்தின் ஜலத்தில் மேற்படர்ந்திருக்கும் பாசிக்கொடிகள் அலைகளினால் அசையுந்தன்மை சமுத்திரத்தின் ஜலமானது அதிகரிக்காமலிருக்கும்படியாக அதனுள்வைத்திருக்கப்பட்ட வடவாமுகாக்கினியின் புகைபோலத் தோன்றுகிறது என்ன அற்புதம்!

(சந்-வ-ம்) ஆம் ப்ரபூ மிகவும் உன்னதமாயிருக்கிறது.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி இவ்விதவிசித்திரம் பொருந்திய பொய்கைபோலெவ்விடத்துங் கண்டதேயில்லையாகையாலிதன் கரையிலமைத்திருக்கப்பட்ட கூடாரத்திற் பிரவேசித்து நித்திய கர்மானுஸ்டான முடித்துப் போஜன தாம்பூலமருந்தி இன்றிரவிங்கிருந்து நித்திரைசெய்தெழுந்து காலையில் அயோத்திக்குச் செல்லலாமென நினைக்கின்றேன் உனதபிப்பிராயம் யாது.

(சந்-வ-ம்.) தங்கள் சித்தம் ப்ரபூ.

## அரசன் நித்திரைசெய்யும்பாகம்.

### சந்திரமதிசொல் தரு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம். ரூபகம்.

பல்லவி.

சித்தமகிழ்வாகநித்திரைசெய்குவார் அரிச்சந்த்ரராஜன்
ராஜன் திருநேசன் விசுவாசன் சக்கரேசன்.

அநுபல்லவி.

மத்தகக்களிற் சித்திரகாயம்
மான்கரிதிரட் சிங்கம்
அத்திரியிட்டம் பத்திரிபொட்டகம்
அத்தனையுமின்று வெற்றியுடன்கொண்டு (சி)

சரணங்கள்.

அல்லிகுவளை வல்லிசெந்தாமரை
அழகார்ந்திடு ஆம்பல்
சல்லாபமாய்ப்படர் நல்லவாவிக்கரை
தங்கநிறமாயி லங்குகூடாரத்தில் (சி)



செங்கையாற்றிரு மங்கைமார்சிலர்
சீர்சாமரை வீச
துங்கமணியே யெங்கும்பதித்த
தூயகன்மஞ்சத்தில் நாயகியாளுடன் (சி)

### சந்திரவதி விருத்தம்.

மல்லிகைமாதவிபுன்னைமல்லிநிறை
சிவந்திபிச்சிவனசஞ்சீரார்
முல்லையிவைபரப்பியுயர்முருகார்ந்த
வணையிலெனைமுயங்குநாதா
தொல்லையிருட்டனைக்கிழித்துச்சுடர்கதிரோன்
குணதிசையில்தோன்றினால்
ஒல்லையினிற்றுயினீங்குமுவகையாய்
நன்னகருக்குகந்துசெல்வோம்.

### அரிச்சந்திரன் சொல் தரு.

ஐயோஎன்னருமைக்கண்மணியே என்ற வர்ணமெட்டு.

இராகம் - காப்பி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மன்னாஎன்நாதா மகிதலம்புகழ்நீதா
பொன்மலர்வாவி புதுமைக்கரையில்மேவி
இன்னமுந்தூக்கம் நீ ரின்றுசெய்வதென்னூக்கம் (ம)

எம்பிராணேசா எழில்சேரயோத்திவாசா
உம்பர்வான்மீதே யுடுக்கள்மறைந்ததே
கொம்பில்மருவிக் கூவுதேகரிக்குருவி (ம)

குருதிவேல்வேந்தே குணதிசையிலிருந்தே
பருதியுதித்தே பைம்பொற்கதிர்விரித்தே
இருட்டைப்பாரிலேகச் செய்துவாரானேநேரில் (ம)

ஏந்தலேபார்த்து எழுந்ததேசெம்போத்து
பூந்தடஞ்சூழ்ந்த பொருட்டெலாம்வாயவிழ்ந்த
சாந்தனேபுன்னைசண்பகங் குவளைகொன்னை (ம)

சாதிமல்லிகை தாமரைசிலக்திவகை
மாதவியல்லி மகிழ்ரோஜாசெவ்வல்லி
பாதிரிமாசம் பங்கிமலர்களின்வாசம் (ம)

பரிவுடன்வீசும் பண்பதிளுலோமூசும்
வரிபுலிதந்தி மடங்கல்துரகமந்தி
அரியதோர்வேட்டை யாடியதாலோநாட்டை (ம)

அன்புடன்சேர அகத்திலெண்ணுதுவீர
இன்பமாய்நித்திரை யின்றுகொண்டிரோவரை
வன்புயனேநீர் வாகாய்த்துயினீங்குவீர் (ம)

(அரி-வ-ம்.) பிராணேசா (வைகறைதுயிலெழு) என்ற நீதியையுணர்ந்த தாங்களின்று சூரியனுதயமாகியும் இன்னும் எழுந்திராதகாரணம் காட்டினிடமாக வேட்டையாடிய சோபமோ அல்லது இளந்தென்றலானது புட்பவாசனையை வீசுவதினுலுண்டான உல்லாசமோ மற்றென்னவோ அறிகிலன் சீக்கிரம் எழுந்திருங்கள் அயோத்திசேர்வோம்.

## சந்திரமதி சொல் தரு.

நன்னகரஞ்சேர என்ற வர்ணமெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - ஆதி.

பல்லவி.

நம்பதிக்கேயேக அம்புயனேவாரும்

அநுபல்லவி.

செம்பதுமவாவியில் சிருறம்வேயின்
கொம்பினறவுபாயுங் குறைவில்வளஞ்சேர் (நம்

சரணங்கள்.

மாரனனையருபனே திறற்சாபனே
மானிலத்திற்ப்ர தாபனே
ஆரணியத்தின்மீது அடைவுடனிரிப்போது
தீரமாய்நித்திரை செய்வதுஞாயமோ (நம்

வீரமணிப்பூந்தாளனே என்மணாளனே
மேன்மைமிகுந்த யாளனே



வாரியதனிலிதோ வான்கதிரைவிரித்தே
சூரியனுதித்தனன் தோன்றலேயெழுந்தே (நம்)

வேங்கையாளிகரிசிங்கம் விறன்மாதங்கம்
விரைவாகவின்றுநீர் பங்கம்
பாங்குடனேசெய்த பரிவால்வந்தசோபமோ
ஈங்குநீர்நித்திரை யின்னமுஞ்செய்வது (நம்)

(அரி-வ-ம்.) ஆ! ஆ! இதென்ன ஆச்சரியமாக விருக்கின்றது எனது பிராணேசனை நித்திரையிலிருந்தெழுப்பக் கூடாதென வெண்ணிக் காதிற்கினிமையான சில பாடல்களைப் பாடியும் இன்னும் எழுந்திருக்கவில்லை இஃதென்னகாரணமோ.

(அரி-வ-ம்.) பிராணேசா கீழ்திசையில் பருதியுதித்தனன் எழுந்திருங்கள் இவ்விதம் ஒருநாளும் நித்திரைபுரிந்த தில்லையே.

## அரசன் நித்திரை நீங்கும்பாகம்.

(அரி-வ-ம்.) ஆ என் கண்ணாட்டி.

(ச-ந்-வ-ம்.) என்ன ப்ரபூ பதறியெழுந்திருக்கிறீர்கள்.

(அரி-வ-ம்.) சொல்லுகின்றேன் கண்மணி.

(அரி-வ-ம்.) அடே சேவகா.

(சேவ-வ-ம்.) மகாராஜ்.

(அரி-வ-ம்.) சீக்கிரம் மந்திரியையழைத்துவா.

(சே-வ-ம்.) பிரதான் சிரேஸ்டரே சேவகன் வந்தனஞ் செய்கின்றேன்.

(மந்-வ-ம்.) கல்யாண் சேவகா அதிவிரைவாய்வந்தகாரணம் யாது.

(சேவ-வ-ம்.) பிரபூ மகாராஜா தங்களை அதிவிரைவாக அழைத்துவரும்படி ஆக்ஞாபித்தார்கள்.

(மந்-வ-ம்.) இதோவருகின்றேன்.

(மந்-வ-ம்.) சக்ரேஸ்பராவந்தனஞ் செய்கின்றேன் ப்ரதான்.





(அரி-வ-ம்.) கல்யாண் சத்தியகீர்த்தி.

(மக்-வ-ம்.) ப்ரபூ எச்சமயமும் அலர்ந்தசெந்தாமரைப்புட்பம் போலிருக்குந் தங்கள்முகமானது இத்தருணம் வாட்டமுற்றிருக்கின்ற காரணம்யாது.

## அரசன்மந்திரியிடம் நித்திரையிற்கண்ட கனவை வெளியிடல்.

அரசன் கந்தார்த்த விருத்தம்.

என்னவென்றெடுத்துரைப்பே னிம்மலாமளிதன்னில்
வன்னமாமுகந்தாள்சந்த்ர வதியுடனயர்வாயின்று
நன்னயமாகநித்ரை நான்புரியும்போதாகக்
கன்னுதனுடனே வெய்ய

ஆரிச்சந்திரன் சொல் தரு.

கானகத்தில் நானலைந் தென்றமெட்டு

இராகம் - தேசிகமுகாரி - தாளம் - ரூபகம்.

பல்லவி.

கனவுகண்டேனையோ கவலையாகுதேமந்த்ரி

அநுபல்லவி.

கனமுயலரந்தன்பிதா ககனநாட்டார்மறுக்க
மனமகிழ்வாய்த்தாரகை மாதலத்திலுற்றிருக்கக் (கன)

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி என்னவென் றெடுத்துரைப்பேன் வேட்டையாடிய சோபத்தால் மிகவயர்ந்து இப்பஞ்சணையில் நித்திரைசெய்தேன் அச்சமயம் எனதுபிதாவான திருசங்குசக்ரவர்த்தியானவர் யான் மகுடஞ்சூட்டிக்கொண்ட சமயம் சடத்துடன் சுவர்க்கத்திற்குச்செல்ல ஆங்குதேவர்களெல்லா மறுக்க விஸ்வாமித்திரமகாரிஷியால் அந்தரசொர்க்கமாகிய நக்ஷத்திர மண்டலத்தில் வீற்றிருந்தவர் இன்றெய்திய தாகவுங்கண்டேன்.

(மக்-வ-ம்.) ஆகா இதென்ன ஆச்சரியம் ப்ரபூ பின்னரென்னகண்டீர்கள்

சரணங்கள்.

பின்புவந்துசூதுகின்னா பிபெர்பங்கயம்வரை
இன்பமாய்நிகர்தனத் தேந்திழையாளைவரை
அன்புடனேமுன்னேவினே யாலொருவன்சோரவேதனை (க)

(அரி-வ-ம்.) ப்ரதான் எனது பிதாவானவர் கட்சேத்திரமண்டலத்தில் வீற்றிருந்த பிறகு சாமுத்திரிகாலக்ஷணத்தின் பிரகாரம் அவயவாதிகள் வாய்ந்த ஐந்துமாதர்களைப் பூர்வபுண்ணியத் தொடர்ச்சியால் அன்னவருடன் கூடிச்சந்தோஷமாய் வீற்றிருக்கவுங் கண்டேன்.

(மந்-வ-ம்.) பிறகு.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சேர்ந்தவைந்துமாதரிலோர் தேன்மொழியாளைக்கானே
யார்ந்துதவமேசெய்பவ ரானவொருவர்க்குத்தானே
கூர்ந்துபெற்றருளுமென்னக் கொடுத்திடவின்றுயானே (க)

(அரி-வ-ம்.) மதிசிரேஸ்டா அவ்விதம்பான் ஆசைகொண்டு கூடியிருந்த ஐந்துபெண்களில ஒருத்தியைத் தவத்திற்சிறந்த ஓர் முனிவருக்கு மனச்சந்தோஷத்துடன் கொடுக்கவுங் கண்டேன்

(மந்-வ-ம்.) மற்றும் என்னகண்டீர்கள் ப்ரபு.

## அரசன் தரு.

கொடுத்தவோர்கன்னியன்றி கூடியென்னிடத்திருந்த
மடத்தைகைமாதரிலோர் மங்கையவர்பின்மிகுந்த
திடத்துடனேயடுத்துச் சென்றனள்யான்வருந்த (க)

(அரி-வ-ம்) பூதவல்லவா மனச்சந்தோஷத்துடன் தவசிரேஸ்டருக்கு யான்கொடுத்த கன்னி ஒருத்திதவிர மற்றும் என்னிடமிருந்த நான்குமாதர்களில் ஒருமாது அம்முனிவருடன் தானேபோய்ச் சேர்ந்துகொள்ளவுங் கண்டேன்.

(மந்-வ-ம்.) அப்பால்.



## அரசன் தரு.

மீதமூன்றுமாதரிலோர் மெல்லிதழுடையமாது
ஆதாரவாய்த்தான்புசிக்கும் அன்னமதுகிடையாது
கோதுறத்தன்னங்கமெல்லாங் குன்றியேகிடவிப்போது (க)

(அரி-வ-ம்.) அமைச்ச சிகாமணி தவசிரேஸ்டமுனிவருடன் சென்றபெண்களிரண்டுபேர் நீங்கலாக என்னிடத்திலிருந்தபெண்கள் மூன்றுபேரில் ஓர்பெண் சடத்துக்காதாரமாகப் புசிக்கும் அன்னங்கிடைக்காமல் பசியால் மிகவும் வருந்தி என்னை நீங்கிப்போகவுங்கண்டேன்.

(மந்-வ-ம்.) பின்னர்.

## அரசன் தரு.

மற்றிரண்டுமாதரிலோர் மாமடந்தையென்னைவிட்டு
நற்றாமரைப்பூநிகர் நயனமிரண்டுங்கெட்டு
சித்தமாகவேநொந்து சென்றனள்திடுக்கிட்டு (க)

(அரி-வ-ம்) மந்திரி பசியால் வருந்தித்தன்னால் சென்றமாது தவிர மீதம் இரண்டுமாதரில் ஓர் பெண்கள் நாயகம் தாமரைப்புட்பத்துக்குச் சமானமான உபயநேத்திரங்களும் பங்கமாகிமிகுந்த துக்கத்துடன் என்னைநீங்கிவிடவுங் கண்டேன்.

(மந்-வ-ம்.) மற்றுமியாது கண்டீர்கள்.

## அரசன் தரு.

உத்தமங்கைநால்வர்நீங்க வொருத்தியென்னுடன்கூடி
நத்திவிலகாதுஞான்று நலமாகவுறவாடி
யத்தியாயிருந்தாளிதன் பாங்கறிகிலேன்வாடிக் (க)

(அரி-வ-ம்.) மதிவல்லவா நான் மனச்சந்தோஷமாகக்கூடியிருந்த ஐந்துமாதர்களில் நால்வர்மேற்கூறிய காரணத்தின் பிரகாரம் என்னைநீங்கிப்போக மீதமாயிருந்ததோர் மாதுசிரோன்மணியானவள் இம்மைக்கும் மறுமைக்கும் உறுதியாக என்னுடன் கூடியிருந்து எனக்கு வேண்டிய நலத்தைக் கொடுக்கவுங் கண்டேன்.

(மந்-வ-ம்.) அரசே இதென்ன விபரீதமாயிருக்கிறது.

அரசன் தரு.

ஆரணமெல்லாமுணர்ந்த அன்பனேசென்னிமதி
சிருட்டினேயணியீசன் செயலோவறியேன்மதி
பூரணமாயிதனேர்மை புகலுவாய்நீயித்தருதி (கனா)

(அரி-வ-ம்.) மாட்சிமை தங்கிய அரசாளுவதற்கேற்ற தர்ம சாஸ்திரங்களெல்லாம் புத்திசாதுரியமாக எனக்குப் பக்கத்திலிருந்து போதிக்கக்கூடிய சத்தியகீர்த்தி யான்கண்ட சொற்பனத்தை நினைக்க எனதுமனமானது மிகவும்புண்ணுகிறது இதுயீசன் செயலோ மற்றும் யாதோ அறிகிலேன் ஆனதால் சீக்கிரத்தில் இதன் பயனை யெடுத்துரைக்கவேண்டும்.

## அரசனுக்கு மந்திரி கனவனிலைமைகூறல்.

வசனம்.

சக்ராதிபா தாம் கனவினிடமாகத் திருமணமுடித்ததாகக் கண்டமாதர்களைவரும் ஆதிசத்தி, இச்சாசத்தி, கிரியாசத்தி, ஞானசத்தி, பராசத்தி என்ற பஞ்சசத்திகள் பின்னர் தம்முன் தோன்றிய அருந்தவன் விஸ்வாமித்ர மஹாரிஷி தாம் அன்னவர்க்களித்தவோர்மாதானவள் செல்வத்திற்சிறந்த ஆதிசத்தியாகும் மற்றும் அவ்வருந்தவனுடன் சென்றவோர் பெண்ணானவள் அரசாக்ஷியென்னும் இச்சாசத்தியாகும் இதனை யோசிக்குங்கால் தமது ஐஸ்வரியமும் அரசாக்ஷியும் தம்மை விட்டு நீங்கிவிடும் போற்றோன்றுகிறது.

மீண்டுங் கொடியபசியினால் வருந்தி வனத்தினிடமாகப் போனவோர்மங்கையானவள் துணைவியாகிய கிரியாசத்தியாகும் மேலும் இரண்டு நேத்திரமுந்தெரியாது நீங்கியவோர் நேரிழையானவள் இகபரசாதனத்திற் கேதுவாகிய மகவென்னும் மெஞ்ஞான சத்தியாகும்.

இதன் கருத்தாவது எனது மாதாவாகியுந்தமது பத்தினியாகியுமிராநின்ற சந்திரமதியம்மாளும் சிறப்புற்றோங்கிய தமது செங்கோல் செலுத்துவதற்காகச்செனித்த புத்திர சிகாமணியாகிய தேவதாசனும் தம்மை விட்டுப்பிரிந்து விடுவார்கள் போலுமிருக்கின்றது.

மற்றுந் தம்மைவிட்டகலாதிருந்த வோர் ஏந்திழையானவள் மோக்ஷ சாமிராஜயத்திற் கேதுகரமாய் விளங்காநின்ற சத்தியமென்னும் பராசத்தியாகும் இதனது உண்மையை யோசிக்குங்கால் தம்மைவிட்டு நீங்கியதான ஐஸ்வரியமும் அரசாக்ஷியும் பத்தினியும் புத்திரனும் சுலபமாய்க் கிடைக்கப்பெற்று ஒற்றேருருவமில்லாப் பிரமத்தினது அருளையடைந்து செங்கோலோச்சிச்சுக முடன்வாழ்ந்திருப்பீர்களரசே.

(அரி-வ-ம்.) மந்திரி நீர்கூறிய கனவின்காரணம் யாவுங்கேட்டு வந்தேன் அதில் பத்தினியையும் பாலனையும் பிரிந்து விடுவேனென்று பாதிவார்த்தையாகக் கூறினீரே அதின் விஷயமென்ன.

(மந்-வ-ம்.) ஆம் பிரபு அது உண்மை.

## அரிச்சந்திரன் சொல் தரு.

சிவசிவாயான்பூர்வத்தி-லென்றமெட்டு.

இராகம்-நீலாம்புரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஹரஹராகங்காதரா அம்பிகைமனோகரா
ஆலமிடறணிபு நாதா
உரகபணிமெய்பூண்ட ஓம்சதாசிவபரா
உலகம்படைத்தருள்நன் னீதா. (ஹ)

கனவினிலைமைதன்னைக் கருத்தினில்நினைக்கையில்
கனவிவிடுமெழுகு போலே
மனமதுவுருகுதே மங்கையோர்பாகனே
னைந்தனென்செய்வே னினிமேலே. (ஹ)

தன்னுயிரைப்போலவே தாலமீதினிலுள்ள
சகலவுயிர்களையும் நானே
பின்னமில்லாமலென்றும் பெம்மானேகாத்ததல்லால்
பிழையொன்றுஞ்செய்தறி யேனே. (ஹ)

இந்தஅடவிதன்னில் இன்பமுடனேதங்கி
இன்றுதுயின்றதாலோ அவமே
உந்தச்செயுஞ்சொற்பன முன்னநடுங்கக்கண்டேன்
ஓகோவெவ்விதமுய்வேன் சிவமே. (ஹ)

(அரி-வ-ம்.) ஹே கருணாகரா கைலையங்கிரிவாசா கௌரிம ணேசரா தன்னுயிர் போலவே மன்னுயிரையு மெண்ணி இரக்ஷித் தேனே யல்லால் பிழையாக யான் கொடுங்கோல் புரிந்ததில்லையே அவ்விதமிருக்க யான் இங்கிவ்வித கனவுகாண முன்செய்த பாவ மோ அறிகிலேன் இதற்கென்செய்வேன்.

சந்திரவதி விருத்தம்.

மன்னவர்கள்மன்னவரே வழுத்தக்கேண்மின்
மகிதலத்தையிழந்திடினு மணமேசெய்த
என்னையிழந்திடினுமெந்தன் வயிற்றுதித்த
விளவல்தனையிழந்திடினு மிகல்சேர்போரில்
ஒன்னலர்களெதிரினில் வில்லுடைவாளோடே
யுறுமனத்தின் கேடில்லாதோங்குமுடக்கந்
தன்னையிழந்திடினு முயர்சத்தியத்தைத்
தவறாமலென்றென்றுந் தற்காப்பீரே.

(சந்-வ-ம்.) பிராணேசா யேன் வருந்துகின்றீர்கள் தவத்திற் சிறந்த யாதொரு விஸ்வாமித்திர முனிவரால் தாங்கள் நமது நாடு நகரம் யாவற்றையும் மிழந்து மென்னையும் பாலகன் தேவதாசனை யும் பிரிந்துவிட்டபோதிலும் சத்தியத்தைமட்டும் மறவாது காப் பாத்தி வரும்படி பிரார்த்திக்கின்றேன்.

சத்தியகீர்த்தி அரசனைத்தேற்றும் வசனம்.

அரசர்க்கரசே யெல்லாந்தெரிந்த தாங்கள் பாலனையும் என தன்னையையும் துயருரும்படியாகச்செய்து தாங்களும் விசனக்கட லிலாழ்ந்து கொண்டிருப்பது நலமாமா அன்றியும்.



வெண்பா.

தக்கசகுனஞ்சபதம் சாமுத்திரியஞ்சொல்
மிக்கவசரீரிகளு மென்றைந்தும்—தற்காலம்
கூடினுங்கைகூடும் கூடாதொழிந்தொருகால்
விடினும் விடிவிடும்.

(மந்-வ-ம்.) என்ற சாஸ்திரம் தாங்கள் உணராததா ஆதலால் தாங்கள் மனதை திடப்படுத்திக் கவலைக்குள்ளாகா திருக்கும்படி பிரார்த்திக்கிறேன் வரந்தரவேண்டும் ப்ரபூ.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி வாஸ்தவம்துயருருவதிலென்ன பிரயோசனம் சீக்கிரம் நமது சேனைசைனியங்களை அயோத்திக்குப் பிரயாணமாகும்படி திட்டஞ்செய்யும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

(அரி-வ-ம்.) மாதே நாம் இவ்வாரண்யத்திற்கு வந்து வேட் டையாடிக் குடிகளுக்கு நலத்தைச்செய்தோமென்றமகிழ்ச்சியைப் பார்க்கினும் பதின்மடங்கு துக்கம் கனவினாலேற்பட்டு விட்டது ஈசன் நம்மை எவ்வித கஷ்டத்திற் குள்ளாக்கினும் சரியே வா சீக் கிரம் அயோத்தி சேர்வோம்.

(சந்-வ-ம்.) நல்லது ப்ரபூ.

வேட்டஞ்செய்காண்டம் சம்பூரணம்.

உ

பரமபதி துணை.

# சூழ்வினைகாண்டம்.

## விஸ்வாமித்திரர் வசனம்.

ஆ ஆ என்ன ஆச்சரியம் யான் நேற்றனுப்பிய விலங்கினமனைத்தையும் கொன்ற சங்கதி பிழைத்தோடி வந்த சில மிருகங்களாலறிந்து அவ்வரிச்சந்திரனை இரதத்துடன் அதாகுதஞ் செய்யக்கூடியவலிமை வாய்ந்த ஓர் பன்றியைச் சிருஷ்டித்தனுப்பினேன் அப்பன்றியும் அன்னவன் சரத்தால் நொந்திவ்விடம் வந்து விட்டன இனிமேல் இவ்வித காரணங்களை நடத்துவது உசிதமல்ல வேறுபாயஞ் செய்கிறேன் அதாவது.

(விஸ்-வ-ம்.) பலத்தைவிலக்குந், தவத்திற் சிறந்த, ஜெனகாதியர்க்காய், பனகாபரணன், அண்டர் வியப்புறப், பண்டோர்திங்களில், ஆகமகிழ்ந்தே, யோகமேசெய்யக் கண்மூடியதால், மண்புவி முழுதும், உண்டான அந்தகாரமானது, அன்னவர் கண்விழித்தபின் விந்தையதாக விச், சுந்தரமாதரின், சிகையதில் வந்து நற், றகைபெற வுற்றதோ, ஞாலத்திருளைச், சிலமாயகற்றும், பரிதியின்மீது, கருதியே படர்ந்த, மேகங்கள் தானோ? தண்டேனருந்தத், தாமரைமலர்போல், கொண்டு வீற்றிருக்கும், வண்டின் கூட்டமோ? ஐங்கணைக்கிழவன், தங்கக்காவணமோ, மன்றன்மிகுந்த கொன்றையின்காயோ, மயில்விளையாடிடும் மாட்சிசேர் சோலையோ, தண்டமிழுணரா வண்டர்கள் மனமோ, சீர்சலக்கரையுறுங் கார்மணல்தானோ, மாந்தர்வியப்புறுங் கூந்தற்பனையோ, வென்று கண்டவரதிசயிக்கும்படியாக அடர்ந்து, படர்ந்து, கடைகுழன்று நீண்டு, சுருண்டு, விளங்கக்கூடிய கூந்தலும்,

(விஸ்-வ-ம்.) பஞ்சபாணத்தாற் பாரிலுள்ளோரை, எஞ்சாதெஞ்ஞான்றும், அஞ்சலிசெய்ச் செயும், அங்கசராசன், அங்கைவில்லதனைப் பங்கப்படுத்திக் கொந்தார்சடையோன், சுந்தரநுதற்கண், விந்தையைப்போலச், சிந்தூரந்தீட்டித், தேசுயர் நெற்றியும் தண்கதிர்வீசும் வெண்பிறையதனை, அந்தரத்துற்ற, இந்திரதனுசை



இணையதாக்கு, மிரண்டு புருவமும், தரணியுடுத்திய தடங்கடல்தானோ, அதனுட்பிறந்த, அமுதமிதுவோ, மீனியர் கைக்கொளும்வாளிதுதானோ, பிள்ளைத் துளைத்த வடிவேலிதுவோ, புங்கவன்வாழும் பங்கயமலரோ, வடுவிலாதுற்றமாவடுதானோ, ஆலகாலமோ, நீலோற்பலமோ, என்று கண்டவர் மயங்கும்படியான நேத்திரங்களும், வாருதி சூழும் தாரணியதனில் சீருடன் வாழும், நாரியராடவர், ஐந்தருவுறையும், இந்திரவுலகுவாழ், தேவருமுதலாய், யாவருமெங்கு, அழகு பார்ப்பதற் சமுகாயுற்ற, கண்ணாடிபோன்ற கபோலமும், மாசிலாவாசனை, ஆசதாயுற்ற, காந்திசேர் சண்பகக் கனிமலர் கடிந்து கூர்பெறுங் குமிழைச் சிறியேவிரட்டி, பார்ப்போர் மனதைப் பாங்குடனுருக்கும் நன்னயமான உன்னத நாசியும், நீநிலாவல்லியைக் கோதுறச் செய்து, ஊசலைநாளும்புசனுக் கறைக்கும் செவிகளும்,

(விஸ்-வ-ம்.) மலர்ந்த அல்லிமலர்போன்றவாயும் முத்தினைத் தோகை முருந்தை, முல்லையின் கொத்தினைத், தந்தக் குருந்தினை வென்று, பதுமராகத்தை இதமாய்ப்பிரித்து, செப்பனிட்டதுபோற்றிகழும் பற்களும், தொண்டையின் கனிபோன்ற இதழும், கற்கண்டோ, சக்கரையோ, கன்னல்ரசமோ, கதலிக்கனியோ, கருங்குயிலிசையோ, கனிவுயர்கின்னரியின் காதற்குரலோ, மாயோனிசைக்குங் வேயினிசையோ, சந்ததம் ருசிதருஞ் செந்தேனுமோ, வென்று கேட்போர் சந்தேகமடையும்படியான வார்த்தைகளும், செந்தாமரைமலர்போன்ற முகமும்,

(விஸ்-வ-ம்.) பூகமதனைநேர், வாகுயர்கழுத்தும், ஆரம்பூண்டொளிர் பூரணகும்பமேல் திரமாயணிந்த தாரிதுதானோ, கொங்கைமலைமேலெழுந்து கீழ்வளைந்து நில்லாதுற்ற சூழ்கிளிதுவோ, என்று ஆச்சரியமடையக்கூடிய தோள்களும், பகருதற்கரிய மகரயாழெல்லாம், வெட்கவேவடிவமிக்கவேகொண்ட, முன்கையும்,

(விஸ்-வ-ம்.) தாமரையலரைச் சலத்திடைப்படுத்திக் காந்தண்மாமலரைக் கானகத்தகற்றி, விகசிதம்பொருந்திய அங்கைகளினழகும், சேர்ந்தியாயாடவர் சூத்திரங்கண்டு, அமுதகிலெனும் பெருமிதக்கோவிலைத், திறக்கவேவாய்ந்த திறவுகோல்தானோ, துய்யபவளத்தின் தூயகொம்பிதோ. சித்திரப்பருவச் சினைக்கெளிறிது

வோ, வென்று கண்டோர் மயக்கும்படியாகப் பைங்கிளியின் மூக்கைநேர்ந்திலங்கு நகமுங்கொண்டு விளங்கக்கூடிய விரலும்,

(விஸ்-வ-ம்.) பம்பரம்பந்தைப் பங்கயமலரை, கும்பக்களிற்றின் கொம்பைத்தணந்து, வாரிட்டு, விம்மிப், புடைத்திறுகி, பிளகி, மணிமார்பிட மெலாங்கவர்ந்து, வட்டமிட்டடியிட்டு, நாளுக்குநாள் மேல்வளர்ந்து, பூரித்து, முத்துமாலையிட்டிருமாந்து, பட்டவர்த்தனயானை மத்தகத்தோ டெதிர்த்து, வாதிட்டு, மல்லிகைப்பூச்செண்டினைத் தினம் வாட்டப்படுத்தி, வரையைப்போரிட்டு, மைமத்தர்கண்மனஞ் சூறையிட்டு, மேற்புளகித்து, வச்சிரத்னப் புதாச்செப்பினைத் தோழமைக்கொண்டு, பொன்னினைப் பொடியாகவாவிமீதிற் பொட்டிட்டதென்னவே தேமற்படர்ந்து, செம்பொற்சரிகைவேலையிட்டுப்புனைதரு ரவிக்கையை யிறுக்கிக்கிழித்துப் புறப்பட்டு வாசனைப்பூந்தாரிட்டுவரவரப் பளபளப்பாகியுயர்ந்த தங்கக்கின்னத்தையொத்துச் சந்திரகாவிச்சேலை வல்லவாட்டுக்குட்டதும்பி மன்னுத்திடையினில் தாங்காதெனக் கனத்தோங்கி மன்மதனுஞ் சலாமிட்டு நிற்கக்கூடிய தனங்களும்,

(விஸ்-வ-ம்.) ஆலிலைபோன்ற வயிறும், நீர்ச்சுழிபோன்ற வுந்தியும், மின்னல்போன்ற யிடையும், வாழைபோன்ற துடையும், ஞெண்டுபோன்ற முழந்தாளும், வரால்மீன்போன்ற கணைக்காலும், அன்னம்போன்ற நடையும், மயில்போன்ற சாயலும், உடைய இரண்டுமாதரைச் சிருஷ்டித்துச் சில புத்திகளைப்போதித்து இதோ அன்னவன்பால் விடுத்து என் சபதத்தை நிறைவேற்றுகிறேன்.

---

முன்னால் விருத்தம்.

பேச்சினிற்கிளிபோற்செங்காற் பெயர்ச்சியிற்பெடைபொற்செங்
வீச்சினில்மின்போற்சீற்ற மிருதியாக்முனிவன்விட்ட [கை
மூச்சினிற்பிறந்திரண்டு மோகினிமாதராழி
நீச்சினிநிலைத்தரிற்கு நீலமென்கொடிபோனின்றார்.

---

உ

180

பாமபதிநனே.

# பாணப்பெண்கள் வருகிறபாகம்.

---

தந்திரமாய்த்தளிர்த வென்றமெட்டு

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

செந்திருபோற் றிகழ்பாண மாதர்வந்தார்

அநுபல்லவி.

சிந்தூரமாகியபொட்டு சுந்தரனுதலிலிட்டு
கொந்தார்சடைபின்னலிட்டுக் கந்தரத்திலாரந்தொட்டு (செ)

சரணங்கள்.

தங்கச்சிலம்பெடுத்துப் பங்கயபாதந்தொடுத்து
மங்களகீதம்படித்து பொங்கமாய்நடிநடித்து (செ)

குங்குமகளபவாச மெங்கினும்திரேகம்வீச
தங்கமாப்பார்ப்போர்மலங்க செங்கைவளைகலங்க (செ)

---

பாணப்பெண்கள் வசனம்.

ஐயா அருந்தவமுனிவரே அனேகவந்தனம் தற்சமயம் எங்களையழைத்த காரணமின்னதென் றெடுத்துரைக்கப்பிரார்த்திக்கின்றோம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண் பெண்களே உங்களையழைத்த காரணமுரைக்கின்றேன் சமீபத்தில் வாருங்கள்.

(பாண-வ-ம்.) நல்லது சுவாமி இதோவருகின்றோம்.

(விஸ்-வ-ம்.) பெண்களே உங்களுக்கு நானுவகையானவேதப்பேதமும் சொற்பேதமும் அறுபத்துநாலு கலைக்யானமும் கீதமும் நாதத்தையுடைய வீணையும் இன்னாமுதலாகிய ஞானமும் போதிக்கின்றேன் கற்றுக்கொள்ளுங்கள்.

(பாண-வ-ம்.) சுவாமி தாங்களன்பு கூர்ந்துரைத்த கருணையே தாங்கள் கூறியவைகள் யாவற்றிலும் தேர்ச்சி அடையலானோம்





(விஸ்-வ-ம்.) நல்லதுபெண்களே இன்னமொன்று சொல்லுகிறேன் ஞாபகத்துடன் கேளுங்கள்.

(பாண-வ-ம்.) கேட்கிறோம்சுவாமி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

முன்னால்

பெடைநடைமடவீர்வாவிப் பெருங்கரைதன்னில்வந்த
பணையுடைவேந்தன்பாற்போய் பாடலாலுருக்கிவெற்றிக்
குடையினைக்கொண்மினல்லாற் கவரியைக்கொண்மினன்றேல்
தடம்புயத்தணியும்வெற்றித் தாரினைவாங்கிவாரீர்

(விஸ்-வ-ம்.) மஹா வுன்னதம்பொருந்திய அன்னம்போன்ற நடையையுடைய பெண்களே இவ்வனத்தில் பொய்கைக்கரையில் வீற்றிருக்கும் அரிச்சந்திரனைக்கண்டு சங்கீதத்தினாலும் நர்த்தனத்தாலும் அன்னவனைமயக்கி அவனது பூச்சக்ரக்குடையை வாங்கிவாருங்கள் அதைத்தாவிடில் அவனது மர்மமீதிலங்கும் வெற்றிமாலையைவாங்கி வாருங்கள் அதுவுங்கொடாவிடில் அன்னவனைக்கட்டிச்சேர்த்து முத்தமிட்டுச் சரசசல்லாபமாகக்கூடி வாருங்கள்.

(பாண-வ-ம்.) ஆக்ஞைப்போலச் சென்றுவருகின்றோம்நாதா.

(விஸ்-வ-ம்.) நல்லதுபெண்களே சீக்கிரஞ்சென்றுவாருங்கள்.

## பாணஸ்திரீகள் அரசனிடம் செல்லும் பாகம்

பாணஸ்திரீகள் செல்தரு

ஆம்-அஞ்ஞானி-யென்ற-மெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம் ஏகம்.

பல்லவி.

வாடிசகிவாடி நீவாடி போகலாம்

அநுபல்லவி.

கடிலாதுதவமுனி இஞ்சொற்போலவினி. (வா





சரணம்.

மாநிலாவேந்தன் மதிகுணசாந்தன்
நீதசாரிச்சந்த்ரனிடஞ் சீக்கிரமாக. (வா)

(சேடி-வ-ம்.) சகிநமதுபிதாவாகிய விஸ்வாமித்திர மஹாரிஷி கூறியவண்ணம் வாவிக்கரையில் வந்திருக்கும் வள்ளலிடஞ்செல் வோம்வா.

பொதுவசனம்.

இவ்விதமாக மாதர்களிருவரும் அரிச்சந்திரனிருக்கும் பூஞ் சோலைசென்று அரிச்சந்திரனைக்கண்டு மிகுந்த ஆவல்கொண்டு இரு வரும் சொல்லிக்கொள்ளுகிற விதங்காண்குக.

(பாண-வ-ம்.) சேடி சத்தசாகரஞ்சூழ்ந்த இந்த எழுலகங்களை யுமொன்றின்மேலொன்றாக அடுக்கத்தக்க நீண்டதோள்களும், இல க்ஷ்மிதேவியினுடைய உயிரும் மனமுந்தாவுதலாய்த் தங்கத்தக்க இடங்கொண்ட கண்களும், மார்பும், யாசகர் சந்தோஷிக்கத் தினந் தோறுங் கொடுப்பதான நீண்டகைகளும், மாதர்களுடைய மன மெல்லாங் கொள்ளையிடக்கூடியதாக அழகுவிளங்குமுகமும், அதி மதுளிக்கின்ற வேர்வையும், செம்பவளம்போன்றவாயுமுடைய பூவேரசன் நாம்கோறிவந்த அரிச்சந்திர மகாராஜனே தவிர வேற ல்ல ஆகையால் நாம்சமீபத்திற்சென்று வணங்கிவந்த காரியத்தை த்தெரியப்படுத்துவோம் வா.

பாணப்பெண்கள் அரசனைவணங்குதல்.

பாந்தாமனே ராமனே யென்றமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ஆதி.

பல்லவி.

மலர்ப்பாதனே விநோதனே
வணங்கினோம் நன்னீதனே. (மல)

அநுபல்லவி.

அலர்தூமாலை நிலமபுகழும்
மார்போங்க நாளுந்தோறும். (மல)

சரணங்கள்.

மாரனிகர் சுந்தரனே
மண்புவிக்கோ ரிந்திரனே (ம)

மதியைநிகர் முகத்தோனே
மாகூழிசே ரகத்தோனே (ம

சிலைதிகழும் புயத்தோனே
சீரார்மத கயத்தோனே (ம)

(வ-ம்.) புவன சக்ரேஸ்பரா வந்தனஞ் செய்கின்றோம்.

(அரி-வ-ம்.) கல்யாண் மாதர்காள்.

## அரிச்சந்திரன் பாண்பெண்களை வினவுதல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கொண்டல்நேர் குழலும் வண்டுநேர் விழியுங்
  குமுதமா மதிநிகர் முகமுந்
தொண்டையின் கனிநே ரிதழுமன் மதன்கை
  இலங்குவில் நிகர்புரு வமுங்சற்
கண்டினைக் குயிலைக் கிள்ளையை யமுதைக்
  கடிந்திடுந் தீஞ்சொலு முடைய
பெண்டிகா ளென்முன் வந்ததோர் விஷயம்
  பெட்புடன் விரைவினி லுரைப்பீர்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஒவராமே யெந்தன் துரை யென்றமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

மங்கையரேயென்பால்வந்த வகையென்சொல்வீரே
கங்குலைநிகர்க்குந்திரேகக் கட்டழகோரே

கொண்டலுங்கூந்தற்பனையுங் கொன்றையின்காயும்
தண்டலையுஞ்சைவலமுந் தண்குழற்கேயும்



வாரிகருங்குவளையம்பு வாரிசமவரி
சீரிலங்குங்கூற்றுவிடம் சேல்நிகர்விழி (ம)

திங்கள்முகஞ்சிமின்தனைநற் சிகையனநடை
தங்கமாகவானிற்றோன்றுந் தூயமின்னிடை (ம)

பூங்குயில்குழல்யாள்கிள்ளை பூவேவார்வேட்டருந்தும்
மாங்கனிகற்கண்டைவென்ற வார்த்தைபொருந்தும் (ம)

(அரி-வ-ம்.) ஏ மாதர்களே நீங்கள் யார்? எக்குலத்துதித்தவர்கள்? நீங்கள் வீற்றிருப்பது எந்தஸ்தலம்? உங்கள் நாமதேயம் யாது? இங்கென்னை நாடிவந்த காரணமென்ன? சீக்கிரம் விபரமாகக் கூறுங்கள்.

(பாண-வ-ம்.) ப்ரபூ நாங்கள் நீசகுலத்துதித்தவர்கள் தவத்தின் மிக்க விஸ்வாமித்திரர் வசிப்பதான மலைச்சாரலின்பக்கம் வசிக்கக் கூடியவர்கள் எங்கள்பெயர் பாணப்பெண்கள் இஞ்சிற்றுச் சங்கீதமும் பரதநாட்டியமுந் தெரியவரும் அதனைச் சமுகத்தில் காண்பித்து வெகுமதி பெறலாமென்ற வுத்தேசத்துடன் வந்தோம்.

(அரி-வ-ம்.) அப்படியா பாடலுடனே நர்த்தனஞ்செய்யுங்கள் பார்ப்போம்.

## பாணப்பெண்கள் நர்த்தனப்புரியுந் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஜெகராஜனே போஜனே செந்திருப்பெண்ணோனே (ஜெ)

அனுபல்லவி.

மகபதிநேர்கோமானே மாசிலாதசீமானே (ஜெ)

சரணங்கள்.

மாரநிகர்சுந்தரனே வாகுயாந்ததந்திரனே (ஜெ)
திரிசங்குமன்சுதனே செம்மையுள்ளோருக்கிதனே (ஜெ)

## பாணப்பெண்கள்சொல் தரு.

மருவிச்சுகங்கொடடா என்றமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ஆதி

கண்ணிகள்.

தீரசூர வீர மாகெம்பீர நல்லுதாரா-தீர
நாதா மலர்ப்பாதா பிரக்யாதா வுயர்போதா திரு-நா
பூமா எழிற் சோமா மலர்க்காமாதிட்டநேமா-ஆ-பூ

(அரி-வ-ம்.) ஆ! ஆ! ஆ! என்ன ஆச்சரியம்.

## அரிச்சந்திரன் சொல்தரு.

மாதிவளாரோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

அன்னநடைப்பெண்களே யானந்தமானேனுங்கள்
ஆடல்பாட லதனாலே (அ)

அநுபல்லவி

கன்னியரேயிந்தக் கானகமதிலேநீர்
உன்னதமாகச்சங் கீதமதுணர்ந்தீர் (அ)

சரணங்கள்.

சுதியதுகுறையாமல் சொல்லதுதிக்காமல்
இதமாய்ராகங்கலையா திங்கணமிசைத்தநல் (அ)

ஆடையும்பலபூஷ ணாதிகளும்நானே
பேடையீர்தருவேன் பெற்றேகுவீர்தானே. (அ)

எந்தநாட்டினுமுங்கட் கிணையாவரேது
எந்தனேர்நாவினு லெடுத்தியம்பவாகாது. (அ)

(அரி-வ-ம்.) ஏ மாதர்களே உங்கள்நர்த்தனத்தைக் கட்புலனால் பார்த்தும் வேணுகானத்தைச் செவிப்புலனால்கேட்டு மிகவும் ஆனந்தமுற்றேன் ஆதலால் உங்களுக்கு வேண்டிய ஆடையாபரணங்கள் சேவகனாற் கொடுக்கும்படி செய்கின்றேன் பெற்றுக்கொண்டு எதாஸ்தானஞ் செல்லுங்கள்.



(அரி-வ-ம்.) அடா சேவகா இம்மாதர்கள் விரும்பிய ஆடையாபரணங்களைக் கொடுத்தனுப்புவாய்.

(சே-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

சே-வ-ம்.) ஏ மாதர்காள் இங்குவாருங்கள் தங்களுக்குவேண்டிய ஆடையாபரணங்கள் கொடுக்கிறேன்.

(பாண-வ-ம்.) யாங்களிதனை யுன்னிடத்திற் பெற்றுக்கொள்ள வரவில்லை அப்பாற்போ.

(பாண-வ-ம்.) அரசே தங்களுடைய கிருபையினால் எங்களுக்குவேண்டியமட்டும் ஆடையாபரணங்களிருக்கின்றன ஆகையால் நாங்கள் விரும்பியவற்றைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றோம்.

## அரிச்சந்திரன் விருத்தம்.

ஆடையாபரணமெல்லா மதிகமாயுடையேமென்றும்
தேவேன்புசமாயத்தைச் சிந்திக்கவில்லையென்றும்
மோடியாயுரைத்தபெண்காள் முயன்றுமேயென்பாற்றுங்கள்
நாடியேவந்தவந்த நற்பொருள்யாதுசொல்வீர்.

(அரி-வ-ம்) ஏ பெண்களே யான் உங்களுடைய நர்த்தனத்தைப்பார்த்து ஆனந்தங்கொண்டு ஆடையாபரணங்கள் பெற்றுக்கொண்டு போகும்படி கூறியதற்கு இதெல்லாம் எங்களிடத்திற் சாஸ்தியாகவிருக்கிறது ஆகையால் வேறொருபொருளைக் குறித்து வந்தோமென்று கூறினீர்களே அப்பொருளினை சீக்கிரந் தெரிவியுங்கள்.





## பாணப்பெண்கள் அரசனிடம்
# குடைகேட்கிறபாகம்.

பாணப்பெண்கள் விருத்தம்.

பூதலமெல் லாமரசு புரியரிச்சந்
திரபூமா புகலக் கேளீர்
மாதுமைபா கன்பிரமன் மால்முதலோ
ரதிசயிக்க மௌலி சூடும்
போததன்மே னிழல்செயுநற் பூச்சக்ரக்
குடையதனைப் புன்மை யேம்யாம்
காதலித்தோ மாகையினற் களிப்புடனே
கொடுப்பீரிக் கணத்திற் றானே.

## பாணப்பெண்கள் சொல் தரு.

சகியேநானென்னசெய்வேன் என்றமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ஆதி.

பல்லவி.

குடையையெங்கட்கருள்வீர் கோமானேசீமானே. (கு)

அநுபல்லவி.

தடையேதுஞ்சொல்லாது சந்தோஷமாகவிப்போது. (கு)

சரணங்கள்,

அரியயன்முதலானோ ரதிசயித்திடநீருந்
திருமுடிபுனைகையிற் சீராயதன்மேற்சாரும். (கு)

சொல்லொண்ணாததோராசை தோகையெங்கட்கதன்மேலே
சல்லாபமாயுற்றதாற் சடுதியில் நீரிக்காலே. (கு)

(பாண-வ-ம்.) அரசே கவனிக்கவேண்டும் பர்வதராஜன் புத்திரியாகிய உமாதேவியார் பக்கமேவுஞ் சிவபெருமானும், பங்கயாசனமா மங்கைகாமேவும் பிரமனும், பாற்கடற் பள்ளிபாங்குடன் கொள்ளும் கிரஷ்ணபரமாத்மாவும், ஆச்சரியங் கொள்ளும்படியாகத்தாம் திருமுடிபுனையுஞ் சமயம் அதன்மேனிழலைச் செய்வதான பூச்சக்குடையைக் கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றோம்,

அரசன் மந்திரியிடங் கூறும் வசனம்.

சத்தியகீர்த்தி கவனித்தீரா இம்மாதர்கள் நர்த்தனத்தைப் பார்த்து மிகவுஞ் சந்தோஷங்கொண்டு ஆடையாபரணங்கள் மிகுதியாகப் பெற்றேகும்படி கூற அதனைமறுத்து திருமுடிபுனையும் போது அதன்மேனிழல் செய்வதான பூச்சக்ரக்குடை வேண்டுமெனக்கேட்குறார்கள் என்னதைரியம்.

(மந்-வ-ம்.) இராஜசேகரா இம்மாதர்கள் பூச்சக்ரக்குடையின் தன்மைதெரியாமல் கேட்குறார்கள் ஆதலால் அதன் நியாயத்தை யெடுத்துச்சொன்னாற் சென்றுவிடுவார்கள்.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி மிகவுஞ்சரி.

அரசன் சந்தார்த்த விருத்தம்.

மாங்குயிலனாணவண்டினிசைகோணத்தீய்ந்து
கெட்ட மரங்களெல்லாந்
தீங்கிலாதுயர்ந்துதழைத்திடவான்வாழ்
தும்புரு நாரதர்தியங்கப்
பாங்குடனேநீங்கள்பகர்பாடலைக்கேட்
டகமகிழ்ந்து பணிதாசெந்தன்
பூங்கரத்தாலீய்ந்திடப்பெறுதிகுடைதாருமென்னப்

அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

பல்லவி.

புகலுவது ஞாயமாகுமோ புலைமாதரே
புகலுவது ஞாயமாகு மோ (புக)

அனுபல்லவி.

ஜகமெல்லாம்புகழவே சாதுக்கள்மகிழவே
தகைசேரயோத்தியையாழ் சக்ரவர்த்தியெற்கின்னாள்
தையலீர்மேன் மையுறுங்கதிர்
பெய்முடிநிழல் செய்யவே
சாந்ததாகையால் எந்தல்யான்தரோன்
ஓர்ந்துபேசெல்வீர் எந்நிலைமுகனோ (புக)



(அரி-வ-ம்.) மாமரத்தில் வசிக்குங் குயிலினங்களெல்லாம் நாணமடையவும், புட்பங்களிலுற்ற வண்டினங்களெல்லாம் பீதியடையடையவும், பசுமையில்லாது இலைகளெல்லாங் கருகிப்பட்டுப் போன மரங்கள் யாவுந்தழைக்கும்படியாகவும், இந்திரலோகத்தில் வாழுந்தும்புரு நாரதர் முதலிய சங்கீத வித்துவான்கள் மயங்கும்படியாகவும் நீங்கள்பாடிய கீதத்தைக்கேட்ட யான் அத்யந்த சந்தோஷமாகி ஆடையாபரணங்கள் மிகுதியாகக்கொடுக்க அதை மனமகிழ்ந்து பெற்றுக் கொள்ளாது எனக்கு வழிவழியாக வந்த பூச்சக்ரக்குடையை நீங்கள் கேட்பது ஞாயமல்ல ஆதலால் யான் கொடுக்கக்கூடிய வஸ்துவைப் பெற்றுக்கொண்டு சீக்கிரஞ் செல்லுங்கள்.

பாணப்பெணகள்சொல் தரு.

தகதீரமோரேயிந்திரோகைசேபதில்கையே என்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி காபி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

அண்ணலேமெங்களெண்ணம்போ லருளுவீர்குடை
திண்ணமதாகவே செப்புவீர்நீர்விடை (அ)

(பாண-வ-ம்.) புவனசக்ரேஸ்பரா யாதொரு தடைசெல்லாது தயவுசெய்து நாங்கள்விரும்பிய பூச்சக்ரகுடையைக் கொடுத்தருளக் கோருகிறோம்.

அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதோவிந்தவாது செய்குறீர் அடி
யீனப்புலைமங்கையரேஞானமிலாநங்கையரே

அநுபல்லவி.

தேவலோகமும்நீடிய காதல்கொள்ளவேபாடிய
கீர்த்தியாஞ்சங்கீதங்கேட்டுப் பூர்த்தியாயென்னுளமேவட்டுத்
திடமுடனேபல வுடைபணியீய்ந்திட
வடைவுடனேகொளத் தடையதுகூறியே (ஏ

சரணங்கள்.

காசினியிற்சூர்யகுலக் காவலனிக்ஷ்வாகுமுதற்
கண்யதிருசங்குவெந்தை கடைசியாக
மாகிலிருபத்தேழ்மன்னர்மாமுறையாக்கைகொண்டுமே
மாட்சியாயெனக்களித்த பூச்சக்ரக்குடையுமெந்தன்
மணிமுடிமேனிழல் தணிவிலாதேசெய
அணியுடன்வாய்ந்ததிக் சணமதிலீகென (ஏ)

செப்பொணாதமுற்கூறிய சீர்த்திசேர்குடைக்கீழுற்றுச்
செங்கோல்புரிவதே யெந்தன்திறமையன்றி
எப்புவியும்புகழும் தென்னுக்குளாக்கியமன்று
இச்சங்கையறியாமல்நீர் நச்சுவதுஞாயமாமோ
இப்பொழுதீய்ந்திடும் ஒப்பில்பணிமணம்
ஒப்பியேபெற்றிடுந் தப்பிலிகாணீங்கள் (ஏ)

(அரி-வ-ம்.) அடிமூர்க்கிகாள் நீங்கள் தற்சமயம்யாசிப்பதான பூச்சக்ரக்குடையின் தன்மையின்னதெனத் தெரியவருமா.

(பாணப்பெண்கள் வசனம்.) என்ன ப்ரபூ.

(அரி-வ-ம்.) ஏமாதரே எனது மூதாதைகளாகிய, இக்ஷ்வாகு, விருகூஷி, புரஞ்சயன், அனேனசு, பிருதுவு, விஸ்வகோதன், சந்திரன், யுவனாசுவன், சாவஸ்தன், பிரகதாஸ்வன், குவலயாசுவன், திடாசுவன், அரியசுவன், நிகும்பன், பெரிஹறணாசுவன், கிரிசாசுவன், சேனசித்து, யுவனாசுவன், மாந்தாதா, அம்பரீஷன், புருகுச்சன், திரசதசு, அனரண்ணியன், திரியசுவன், திரியருணன், திரிபந்தன், திரிசங்கு, என்ற இருபத்தேழு அரசர்களும்வழிவழியாக, இக்குடை நிழலிலிருந்தரசுசெய்து, பின்னர் எனக்களிக்கயான்பெற்று, என்னுயிருக்குச் சமானமாகவெண்ணி, முடியின் மீதுவைத்து, மகாமேன்மை தங்கிய, இச்சம்பு தீவினிடத்துள்ள, கீழ்விதேகம், மேல்விதேகம், வடவிதேகம், தென்விதேகம், வடவிரேபதம், தென்விரேபதம், வடபரதம், தென்பரதம், மத்திமகண்டமென்ற, நவகண்டங்களிலுள்ள, அரசர்களின் மணிமுடிகளெல்லாம், என்னிருபாதத்தில் அழுந்தும்படியாக, இவ்வயோத்தியாபுரியிலிருந் தரசாக்ஷி, செய்தவருகின்றேன் ஆனதால் அக்குடைக்குள், ஐக்கியம், யானேயன்றி என் வுக்களைதைக் [illegible]



ந்தனை நீங்கள்மீண்டுங் கொடுக்கவேண்டுமெனக் கூறும் பக்ஷத்தில் கொடிதான துன்பத்தைபடைவீர்கள், அக்குடை போலாகவே ஒருகுடைதருகின்றேன் பெற்றுச்செல்லுங்கள்.

## பாணப்பெண்கள்சொல் தரு.

தகதிரமோரேபிந்திநோகைமேபதில்கையே-என்றமெட்டு.

இராகம் - இந்துஸ்தானி - தாளம் - சாபு.

கண்ணிகள்.

வேறொருகுடை யெங்களுக்குவேண்டாமையனை
சாரமாயிதனைத் தாருநற்றுய்யனே. (வே)

(பாண-வ-ம்.) அரசே அமுதத்தை விரும்பி வந்தவர்கள்விஷத்தைக்கொள்வார்களா, கொள்ளமாட்டார் களாகையால் நாங்கள் விரும்பிய பூச்சக்ரக்குடையையே கொடுத்தருள விரும்புகின்றோம்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

டமாகேபதாவென்றமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

துட்டலண்டிகாள் என்ன செர்ன்னீர்மிண்டிகாள்
அடிசுட்டிகளே பொல்லாதமட்டிகளே
தூரிதமாகப் பரிவுடன்செல்வீர். (து

இந்திரசாலிகாள் மானமில்லாநீலிகாள்
அப்பாலேகிடுவீர் அல்லாக்தூன் பப்படுவீர்
ஏர்க்காதிது மூர்க்கிகளேதான் (து

குடையதனைத்தான் என்றுங்கொடுக்கமாட்டேனென்
அடிகுணகேடிகாள் புத்தியில்லாப்பெருமூடிகாள்
கூறும்வார்த்தை தேரியேசெல்வீர். (து

(அரி-வ-ம்.) அடிநீசமாதர்களே பேதமையென்பது மாதர்க்கணிகலம் என்னும் பழமொழிக்கிணங்க நீங்கள் குடையினுடைய தன்மையையுணராது அதையே கொடுக்கவேண்டுமெனக்கூறுவது

சரியல்ல ஆதலால் யான்கொடுக்கும் அடையாபரணங்களைப் பெற்றுக்கொண்டு உங்களுடைய ஸ்தானத்துக்குச் செல்லுகின்றீர்களா என்ன சொல்கின்றீர்கள்.

### பாணப்பெண்கள் தர்க்கம்.

இராகம் - காம்போதி - தாளம் - ஆதி.

பல்லவி.

தடையின்றிநீருங் குடைதனைத்தாரும். (த)

அநுபல்லவி.

புடவியாள்கோனே அடைவுடன்தானே (த)

அரசன் தரு பல்லவி.

நீரப்பெண்காள்வாது பேசுதல்தகாது. (நீ)

அநுபல்லவி.

யோசனையில்லாது ராஜன்முன்னிப்போது. (நீ)

பாணப்பெண்கள் தரு.

சரணம்.

வாதுசெய்யவிங்கு விரவில்லையன்று
ஆதரவாக்குடை யருளும்விற்பன்று (த)

அரசன் தரு.

சரணம்.

மட்டிகளேகுடை யுமழ்ங்கேகானென்று
அட்டிசுறிடநீ றறியாமனின்று (நீ)

பாணப்பெண்கள்.

கோசலைநாடாளுங் குணமார்சீமானே
தேசமன்னர்போற்றுஞ் சீருயர்பூமானே (த)

அரசன்.

கொடுப்பதைப்பெற்றுக் குணமாயேகுவீர்
அடுத்துநின்றீரே லவதிக்குள்ளாவீர். (நீ)

பாணப்பெண்கள்.

சாதனைசெய்வது தருமோபூபாலா
மேதினியதனில் விளம்புவீர்சீலா. (த)



அரசன்.

மூர்க்கிகளேயென்ன மொழிந்தீரிக்காலே
சீக்கிரமதாகச் செல்லுவீரப்பாலே (நீ)

(அரி-வ-ம்.) அடி மூடமாதர்களே சீக்கிரத்தி லிவ்விடத்தை விட்டுச் செல்லுகின்றீர்களா அல்லவா.

(பாண-வ-ம்.) ராஜசேகரா அவனியாளும் அரசரியல்பாவது யாசகர்கள் கோரியதைக் கொடுக்கவேண்டியது முக்கியமான விஷயம் அவ்விதமிருக்க நாங்கள் விரும்பியவற்றைச் சக்கிரவர்த்தியாகிய தாம் கொடுக்கத்தடைசொல்வது ஞாயமோசவனிப்பிரசுக.

### அரிச்சந்திரன் சொல் தர்க்கம்.

விரசமானவார்த்தை வேண்டாமென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னடிசொல்லச்சொல்ல வாதியம்பிகிற்குறீர். (எ)

அநுபல்லவி.

கன்னல்ரசம்பின்னமாகுங் கானங்கேட்டின்று
உன்னதப்பணியாடையா ஹுதவியேகுமென்று. (எ)

பாணப்பெண்கள் தரு.

பல்லவி.

மகாராஜ ராஜராஜ மகா ராஜகெம்பீரா. (ம)

அநுபல்லவி.

ஜகாசராஜர்பணி தண்மலர்ப்பாதா
அகமகிழ்வாகக்குடை யருளுவீர்நாதா. (ம)

அரசன் தரு.

சரணம்.

கொடுக்கும்வஸ்துப்பெற்றுக்கொண்டு குணமாயேகுவீர்
அடுக்காதமொழிசொன்னல்தெண் டனைக்குள்ளாகுவீர் (எ)

பாணப்பெண்கள் தரு.

சரணம்.

வேந்தர்க்கெல்லாம்வேந்தேநாங்கள் விரும்பியதுதாம்
சாந்தமாகக்கொடுத்தாற்பெற்றுத் தானேயேகுவோம். (ம)

அரசன்.

அச்சங்கொஞ்சமேனுநெஞ்ச — கத்திலில்லாது
கச்சையணிபெண்காள்குடை — கருதலாகாது. (௫)

பாணப்பெண்கள்.

தர்மசாஸ்திரமுணர்ந்த — சக்ரவர்த்திநீர்
வர்மஞ்செய்வதழகல்ல — வாகாயுணர்வீர் (௬)

அரசன்.

வர்மமல்லடிமட்டிகாள் — வள்ளல்கள்தன்மை
மர்மமானவஸ்துவெல்லாம் — வழங்கார்சஞ்நன்மை (௭)

(பாண-வ-ம்.) பூபாலகா (குறிப்பறிந்தீதலேகொடையற்றின்றே ன மறுத்தலேகேட்டபின் வழங்கல்) அதாவதுப்பாபஞ்சத்தினிடமாயாதாமொருவர்விரும்பினவற்றை அன்னவர்முகக்குறிப்பினலறிந்துகொடுத்தலே கொடையென்றும் இல்லையென்றுசொல்வதற்குச்சமானம் கேட்டபின் கொடுப்பதென்றும்சாஸ்திரம் அவ்விதமிருக்கவள்ளலாகியதாம் நாங்கள் விரும்பியவற்றை யெங்கள்முகக்குறிப்பினலறிந்தே கொடுத்திருக்கவேண்டும் அவ்விதமுங்கொடாது கேட்டுங் கொடுக்கமாட்டேனென வாதுசெய்கிறீர் இத்தகமையுடைய தமக்கு வள்ளலென்றபெய ரெப்படிக் கிடைத்தது தாமே வைத்துக்கொண்டீரா உலகத்தோராற் சூட்டப்பட்டதா?

(அரி-வ-ம்.) அடிமூர்க்கிகாள் கவனித்துக்கேளுங்கள்.

அரசன்முன்னூல் விருத்தம்.

கொடுப்பனகொடுப்பதல்லாற் கொடாதவைகொடுக்கமாட்டார்
விடுப்பனவிடுப்பரென்றும் விடாதனவிடவுமாட்டார்
தொடுப்பனதொடுத்துநம்மாற் சொல்வனசொல்லிநங்கட்
கடுப்பனகொண்மினல்லா லகனுவீருங்கள்சாரல்



ஏ மாதரே வள்ளல்களின் தன்மையாவது கொடுக்கத்தக்கவைகளைக் கொடுப்பார்களேயல்லாது கொடுக்கத்தகாதவைகளைக்கொடுக்கமாட்டார்கள் இழக்கத்தக்கவைகளை யிழந்து விடுவார்களேயல்லது இழக்கத்தகாதவைகளை யிழந்துவிட மாட்டார்களானதால் யான் உங்களுக்குக்கொடுக்கத்தக்கதான ஆடையாபரணங்களைச் சம்பூரணமாய்ப் பெற்றுக்கொள்ளாதுகொடுக்கத்தகாத வஸ்துவாகிய பூச்சக்ரக்குடையைக்கேட்பது சரியன்று ஆதலின் இவ்விஷயத்தை நீங்களிருவரும் ஆலோசனைசெய்து அரசநீதிப்படியான் கொடுக்கத்தக்கதான வஸ்துவைக் கேட்டு மரியாதையாகச் சீக்கிரம் பெற்றுக்கொண்டு உங்கள்மலைச்சாரல் செல்லுங்கள் இல்லையேல்பிருந்த கஷ்டத்துக்குள்ளாவீர்கள்.

பாணப்பெண்கள் ஒருவர்க்கொருவர் சம்பாஷணை
செய்துகொள்ளும் வசனம்.

சகி நாம் எவ்விதம் வருந்திக்கேட்கினும் இவ்வரசன் பூச்சக்ரக்குடையைக் கொடுக்கமாட்டான் போலிருக்கிறது ஆகையால் மேருமலைக்குச் சமானமாகிய இவ்வரசனது புயத்தில் அணிந்திருக்கும் வெற்றிமாலையைக்கேட்போமா?

(சேடி-வ-ம்.) அதுவேசரி.

(பாண-வ-ம்.) அரசே பேதைகளாகிய எங்கள் மீதிவ்வளவு கோபங்கொள்வது தகுமா எங்கள்மனம்போலப் பூச்சக்ரக்குடையைக் கொடாவிடினும் வேறொன்றுகேட்கின்றோம் அதையாவது கோபமின்றிக்கொடுத்தருளப் பிரார்த்திக்கின்றோம்.

(அரி-வ-ம்.) அஃதென்ன?





## பாணப்பெண்கள் அரசனிடம் வெற்றிமாலை கேட்கும்பாகம்.

பாணப்பெண்கள் கந்தார்த்த விருத்தம்.

அங்கண்மாஞாலங்காக்கு மாசர்கட்காசேயோக்குந்
திங்களங்குடையாயாங்கள் செப்புமோர்வசனங்கேளீர்
பொங்கமாய்ப்பகைவரோடு போர்செய்துசெயமேபெற்று
மங்களமாகப் பூண்ட.

கந்தார்த்தத் தரு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி.

வாகுவெற்றிமாலையைத் தாரும் எங்கட்கதுமேல்
தாகமென்மே லாகுதுபாரும்.

அநுபல்லவி.

ஆசயவேதமுணர்ந்த மாகனவானேயிப்போது
ஏகமனதாகவேவே றெண்ணமதுநினையாது. (வா)

(பாண-வ-ம்.) அரசர்க்கரசே யாங்கள்சொல்லொண்ணாத ஆசையுற்றுப் பூச்சக்ரக்குடையைக் கேட்டதற்கு அதுவழி வழியாக வந்தது கொடுக்கமாட்டேனென்று சொல்லிவிட்டீர் ஆனதால அதுவேண்டாம் தமது திண்புயத்திலணிந்திருக்கிற வெற்றிமாலையை யாவது கொடுக்கக்கோருகின்றோம்.

(அரி-வ-ம்.) அடி துட்டிகாள்.

அரசன் கந்தார்த்த விருத்தம்.

திட்ட முற்றதொரு வட்டதிக்விஜயஞ்
செய்திடத்திறல தாகவே
கொட்ட மிட்டுவரு துட்டர்தங்களுயிர்
விட்டிடச்சிலை குனித்தமர்
சிட்டர் கட்குமணி யெட்டுனைக்கனைய

முற்றிடாதவருள் செய்துயான்
இட்டமா யணியும் வெற்றிமாலைபெற

## கந்தார்த்தத் தரு.

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

பல்லவி.

ஏர்க்குமோவுங்கட்குலண்டிகாள் பெருஞ்சண்டிகாள்
மூர்க்கமேமிகுந்தமிண்டிகாள்

அநுபல்லவி.

யார்க்குமொவ்வாதவார்த்தை தீர்க்கமாய்விளம்பித்தைப்
பார்க்கில்வெகுவாயென்னிடம் பாடுபடப்போரீர்திடஞ்
செல்லுவீர்செல்லவில்லையேலிந்த வொல்லையிற்பெரும்அல்லலே
செய்குவேனிதோ மொய்குழலுடைத்
தையல்காள்நீவிர் உய்குவீரிது (ஏ)

(அரி-வ-ம்.) ஆ! மூர்க்கிகளே உங்களுக்கு யானெவ்வளவோ எடுத்துச் சொல்லியுஞ் சற்றுங் கவனிக்காது கொடுக்கத்தகாத வஸ்துக்களைக் கேட்டுக்கொண்டு நிற்பது தகுதியல்ல மற்றுந் தற்சமயம் நீங்கள் கேட்கக்கூடிய இவ்வெற்றிமாலையினுடைய தன்மை யின்னதெனத் தெரியவருமா?

(பாண-வ-ம்.) என்ன ப்ரபூ.

(அரி-வ-ம்.) ஏ மாதரே யான் முடிசூட்டிக்கொண்ட பின்னர் ரதகஜ துரகபதாதியென்ற நான்குவகைச் சேனைகளுடன் இந்திரன், அக்கினி, யமன், நிருதி, வருணன், வாயு, குபேரன் என்று சொல்லப்பட்ட அட்டதிக்குப்பாலர்கள் வசிக்கக்கூடிய திசைகளெலாஞ் சென்று அந்தந்தத் திக்கிலுள்ள அரசர்களைச் செயித்துக் கப்பங்கட்டும்படியாகச் செய்து பஹுதூர் அரிச்சந்த்ரனெனப் பெயர்பெற்று அன்றணிந்த வெற்றிமாலை யிதையான் கொடுக்கமாட்டேன் ஆனதால் உங்களுக்குத் தக்கவைகளை யாசித்து என்னிடம் பெற்றுக்கொண்டு சீக்கிரஞ் செல்லுங்கள் இல்லையேல் மிகுந்த சங்கடத்தைத் துன்னாவீர்கள்.



## பாணப்பெண்கள்சொல் தரு.

தகதிரமோரே யிந்திகோகைலைபதில்கையே யென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தானிகாபி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

வேந்தனேயிந்தவாதுநீர் விளம்பலாகுமோ
சாந்தனேயுமக்குச் சம்மதியிதாமோ (வே)

(பாண-வ-ம்.) ப்ரபூ (அழுக்காறவாவெகுளி யின்னாச்சொ ன்றுமிழுக்காவியன்றதறம்) அதாவது பொறாமை, கோபம், ஆசை, கடுஞ்சொல், இவ்வளவுமில்லாமல் மனப்பூர்த்தியாக யாசகர்கள் விரும்பியதைக் கொடையாளர்கள் கொடுக்கவேண்டுமென்பது சாஸ்திரம் அவ்விதமிருக்க நாங்கள் விரும்பினவைகளை யில்லையெனக் கூறிக் கோபங்கொண்டு சினந்து பேசுவது தர்மமா இஃது வள்ளல்களுக்கழகா?

## அரிச்சந்திரன் சொல் தரு.

மட்டடங்காத்துட்டரைக்கொன் றட்டகாசஞ்செய்தணிந்த
வாகுசேர்வெற்றிமாலையின் மாண்புகூறியும்
எட்டாக்கனிக்குமுடவன் கொட்டாவியிட்டகதைபோல்
எங்களுக்கருளுமென்ற துங்கலண்டிகளேயென்ற
னெதிரினில்நின்றிடிற் சதியதுசெய்குவேன்
அதிவிரைவாயுங்கள் பதியதுசெல்லுங்கள் (ஏ)

(அரி-வ-ம்.) அடி மூர்க்கிகாள் மட்டுமீறிய துஷ்டரைச் செயஞ்செய்து அட்டகாசமாயணிந்த இவ்வெற்றிமாலையின் பெருமையை உங்களுக்கெவ்வளவோ திட்டமாகக் கூறியுஞ் சற்றுங் கவனிக்காது எட்டாத ஓர் கனிக்கு இரண்டுகாலுமில்லாத முடவன் விரும்பிக் கிட்டாது கொட்டாவியிட்ட தன்மைபோ லிம்மாலையையாசிக்குறீர்கள் தகுதியல்ல சீக்கிரஞ் செல்லுங்கள்.

பாணப்பெண்கள்சொல் தரு தர்க்கம்.

உமைப்பிரிய வென்றமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

வெற்றிமாலையைக் கொற்றவர்கொடுப்பீர் (வெ)

அநுபல்லவி.

இத்தினமதில் சற்றும் யோசியாது
சித்தம்வருந்திச் சினமேகொள்ளாது (வெ)

அரசன் தரு.

பல்லவி.

கொடுஞ்சூரிகாள் கொடுக்கிலேனானே (கொ)

அநுபல்லவி.

அடுபோரினில் படைவீரர்வென்று
திடமாயணி சீரார்மாலையின்று (கொ)

பாணப்பெண்கள் தரு.

சரணங்கள்.

கோசலைதனைக் குணமாயாள்மன்னா
தூஷணமாகப் பேசாதரம்பன்னா (வெ)

அரசன் தரு.

சரணங்கள்.

மூர்க்கிகாள் நான் மார்க்கிகாள் நீங்கள்
சீக்கிரம்வழி நோக்கியேசெல்லுங்கள் (கொ)

பாணப்பெண்கள்.

செல்லுகின்றோநாம் ஒல்லைதனில்நாதா
அல்லலேசெய் யாதுபோற்பாதா. (வெ)

அரசன்.

குதர்க்கமாக் கொலைநாரிதாம்
எதிர்த்துநின்று பதிர்கூறல்நீது. (கொ)

(அரி-வ-ம்) ஏதுஷ்டிகளே யான் கொடுக்கக்கூடிய வஸ்துவைப் பெற்றுக்கொண்டு மரியாதையாகச் சொல்லுகின்றீர்களா என்ன சொல்லுகிறீர்கள்,



(பாண-வ-ம்.) பிரபு பேதைகளாகிய எங்கள்மீது இவ்வளவு கோபங்கொள்கின்றீர்களே யாசகர்தன்மை யின்னதெனவுமக்குத் தெரியவருமா?

(அரி-வ-ம்.) அடி மூடமாதர்களே யாசகர்தன்மை யாவதென்ன கூறுங்கள் பார்ப்போம்.

பாணப்பெண்கள் முன்னால் விருத்தம்.

இரவலர்தம்மையென்று மேர்தலையம்பக்கேளீர்
நரகயோசுஷத்தைவிற்க கண்ணியவனிகாண்ணோர்
பாசதியவரைத்தாங்கும் பண்பினோர்க்கிவரல்லல்
கரவுளார்க்கிவரென்னி லவர்கதிசமுறலென்னே.

(பாண-வ-ம்.) என்ற நீதிவாக்கியத்தை யுணராமல் தேகியென்றுவந்து கேட்போர்க்கு இச்சையானதைக்கொடுக்காது லச்சைசெய்குநீர் இது நீதியாமா அரசே.

(அரி-வ-ம்.) ஹேலண்டிகளே என்னவார்த்தை பகர்ந்தீர்கள் கவனித்துக்கேளுங்கள் அறத்தின் தன்மையாவது பாத்திரமறிந்து பிச்சையிடு என்பதுபோலாக ஆதுலர்குச்சாலை, ஓதுவார்க்குணவு, அறுசமயத்தாற்குண்டி, பசுவுக்கு வாயிரை, சிறைச்சோறு, ஐயம் தின்பண்ட கல்கல், அறவைச்சோறு, மகப்பெருவித்தல், மகவுவளர்த்தல், மகப்பால் வார்த்தல்; அறவைப்பிணஞ்சுடுதல். அறவைத்தூரியம்-சுண்ணம், நோய்மருந்து, வண்ணார், நாவிதன், கண்ணாடி, காதோலை, கண்மருந்து, தலைக்கெண்ணெய், பிறர்துயர் காத்தல், தண்ணீர்ப்பந்தல், மடம், தடம், சோலை, ஆவுரிஞ்சுதறி, விலங்கிற்குணவு, ஏருவிடுத்தல், விலைகொடுத்துயிர் காத்தல், கன்னிகாதானம் என்ற முப்பத்திரண்டு தர்மமும் அரசர்கள்வழுவாது செய்யவேண்டுமென்று சாஸ்திரத்தி லேற்பட்டது அதற்கிணங்க யான் கொடுக்கும் ஆடையாபரணங்களைப் பெற்றேகாது மறுத்துக்கூறுகின்றீர்களா துட்டிகாள் அப்பாற்செல்லுங்கள்.

(பாண-வ-ம்.) அரசர்க்கரசே பிரதமத்தில் பூச்சக்ரக்குடையைக்கேட்டோம் அஃது வழிவழியாகவந்தது கொடுக்கமாட்டேனென்று கூறினீர் அதைத்தவிர்த்துத் தற்சமயம் வெற்றிமாலையைக் கொடுமென்றால் பகைவரைச் செயித்தணிந்ததானதால் தருகிறதி

ல்லையென விளம்புகிறீர் இவ்விதமான வார்த்தைகள் சம்பாவிப்பது தமக்கே யழகாயிருக்கிறதா? நீரெவ்விதங்கூறினாலும் நாங்கள் வெற்றிமாலையைவாங்காது போகமாட்டோம்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

கற்பகத்தருக்கீழுறை காவலனும்வேண்டரிய
காக்ஷிசேர்ந்திடுநாகலோ கத்தவர்களும்
அற்புதமற்புதமென்ன வட்டதிக்விஜயஞ்செய்தே
அன்றணிவெற்றிமாலையை யின்றெனக்கருளுமென
அரிவைகாள்நீங்கள்ப கருவதுஞாயமோ
பெருவதுகேளுமித் தருணமீதென்னிடம். (ஏ)

(அரி-வ-ம்.) அடி மூர்க்கிகாள், சுரர், தானவர், கேசரர், தும்புரு, சித்தர், வித்யாதரர், சாரணர், பூதர், கின்னரர், கிம்புருடர், நாரதர், சனகன், சமதக்கினி, அகத்தியன், கவுதமன், பாரத்துவாசன் வசிட்டர், இயக்கர், அரக்கர் முதலியவர்கள் சூழ்ந்திருக்கவும், அரம்பை, மேனகை, திலோர்த்தமை, ஊர்வசி யென்று சொல்லப்பட்ட தேவமாதர்கள் நடனஞ்செய்யவும், கற்பகத்தருவின்கீழ் சுதர்மமென்னும்பூடத்தில் அயிராணிசமேதனாக வச்சிராயுதபாணியாய் தேவகுருவாகிய வியாழபகவான் சமீபத்திலிருக்கக் கொலுவமர்ந்திருக்கும் யாதொரு தேவேந்திரனும், மாக்ஷிமைதங்கிய பாதாளவாசிகளும் ஆச்சரியம் ஆச்சரியமென்று சொல்லும்படியாக அஷ்டதிக்விஜயஞ்செய்து நவகண்டங்களையுஞ் செயித்து அன்றுகீர்த்தியாயணிந்த வெற்றிமாலையை பறைதூர் அரிச்சந்திரன் முன்பாகநின்று கட்டாயங் கொடுக்கவேண்டுமெனச்சொல்ல அவ்வளவு திடச்சித்தம்வாய்த்ததா அட்டிகாள் மரியாதையாகச் சென்றுவிடுங்களில்லாதபக்ஷத்தில் கொடுந்தண்டனைக்குள்ளாவீர்கள்.

## பாணப்பெண்கள் தரு தர்க்கம்.

வாடியென்கண்ணே மருவிச்சேரலாமென்றமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

இந்தவிதஞ்சொல்வதனைக் கேற்குமோமன்னா
ஏற்குமோமன்னா யாரு மீடில்விற்பன்னா



## அரசன்சொல் தரு.

மூர்க்கிகளேயேற்காதென்ன மொழிகுவீரிதை
மொழிகுவீரிதை யென் முன்னின்றால் நீதே

பாணப்பெண்கள்.

ஏதுமில்லையாங்களுமக் கீடதாகுமா
ஈடதாகுமா இவ்விதம் இயம்பப்போகுமா

அரசன்.

ஏழைக்குறும்பெங்குகற்றீ ரீனலண்டிகாள்
ஈனலண்டிகாள் மான மில்லாச்சண்டிகாள்

பாணப்பெண்கள்.

வள்ளலென்றுமையடைந்தோம் வாகுயர்பூமா
வாகுயர்பூமா யெமை வையாதீர்கோமா

அரசன்.

மன்னனுங்கொடுப்பதனை வாங்கலாகுவீர்
வாங்கலாகுவீர் வந்த வழியேயேகுவீர்

பாணப்பெண்கள்.

எந்தவேயாங்கேட்டதைநீ ரீய்ந்தாலேகுவோம்
ஈய்ந்தாலேகுவோம் அல்லா லிங்கேவாழ்குவோம்

அரசன்.

கொடுப்பதுகேட்டாலின்று கொடுத்தருள்வேனே
கொடுத்தருள்வேனே குதோ குலமாகயானே

பாணப்பெண்கள்.

நாவிலமான்மன்ன ருட் ஞாயமெதுவோ
ஞாயமெதுவோ அதுபோல் நடக்காதேதுவோ

அரசன்.

சொன்னசொற்றடுத்துப் பேசுந் துட்டரீவிகாள்
துட்டரீவிகாள் என்ன சொன்னீர் மிண்டிகாள்

பாணப்பெண்கள்.

பூதலவேந்தே யுமக்குப் புத்தியில்லையா
புத்தியில்லையா அதனைப் புகலுவீரையா

(பாண-வ-ம்.) கோசலாதிபா (அகழ்வாரைத்தாங்குநிலம்போலத் தம்மையிகழ்வாற் பொறுத்தறலை.)

அதாவது தன்னை வெட்டுவோரைத் தாங்கும் பூமியைப்போலத் தம்மை நிந்திப்பவரைப் பொறுத்தல் முதன்மையான தர்மமென்று முன்னோர்கூறிய நீதியையுணர்ந்த சக்ரவர்த்தியாகிய தமக்கு ஏழைகளாகிய எங்கள்மீ திவ்வளவு கோபமாகுமா? விதிதகுமா?

அரசன் முனிவால் விருத்தம்.

குருவரச னன்னைபிதா முன்னோனெனத்
தொழத்தருமைக் குரவ ரேனும்
பெருமிதங்கொண் டடுக்குமடா திறவென்ப
துணராமற் பிழைசெய் வாரேல்
தருமநெறி யுணர்ந்தமிக்கோ ரவரவர்க்குத்
தக்கதக்க தண்டஞ் சாற்றல்
மருவுதிரைக் கடலுடுத்த மாநிலத்திற்
பண்டை மனுவசன மன்றோ.

(அரி-வ-ம்) ஏ மாதரே உங்களுக்கு யானெவ்வளவோ ஞாயமான விஷயங்களை யெடுத்தியம்பியுங் கவனிக்காது அரசர்களுக்குக் கோபங்கூடாதென மன்னவனென் னெதிரில் நின்று அச்சமில்லாது வாதுசெய்வது தகுதியல்ல யான் சொல்வதைக் கவனமாகக்கேளுங்கள் துட்டிகாள் இப்பிரபஞ்சத்தினிடமாக உற்பவித்த யாதொரு மனிதர்கள் அஞ்ஞானத்தைநீக்கி மெஞ்ஞானம் போதித்த குருவுக்கும், அன்னவர் வசிக்கும் இராச்சியத்தைப் பரிபாலிக்கும் இறைவனுக்கும், தன்னை ஈன்றெடுத்த மாதாபிதாவுக்கும், தன்னுடன் பிறந்த மூத்தோனுக்கும் பயந்து அவர்கள் சொல்லுமேவல்களை விஸ்வாசத்துடன் செய்யவேண்டுமென்றும் மேற்கூறியவர்கள் அடாதகாரியங்களைச் செய்யும்விஷயத்தில் குருவென்றும் அரசனென்றும் அன்னை பிதாவென்றும் மூத்தோனென்றும் கவனிக்காது அவரவர்க்குத் தகுதியான தண்டனை செய்யலாமென்றும் சாஸ்திரங் கூறுகின்றது. அப்படியிருக்க இறையவனாகிய என்



முன்னின்று அடுக்காத வார்த்தைகள்கூறிக் கொடுக்காத வஸ்துவைக் கேட்கும் உங்களைச்சினந்து பேசித் தண்டனை செய்வேனெனச் சொல்வது கூடாதென்றெந்தச் சாஸ்திரத்தில் கூறுகின்றது சீக்கிரம் என்முன்னிலையில் நிற்காது சென்றுவிடுகின்றீர்களா என் கூறுகின்றீர்கள்.

(பாண-வம்.) ப்ரபூ நாங்கள்யாசிப்பவைகளை யெல்லாம் கொடுக்கமாட்டேனென்று சினந்துபேசிக் கோபங்கொள்கிறீர் திரவியச் செலவில்லாததாக ஒன்று கேட்கிறோம் அதற்கென்ன சொல்கின்றீரோ அறிகிலோம்.

(அரி-வ-ம்.) அஃதென்ன கூறுங்கள்.

## பாணப்பெண்கள் அரசனை
## விவாகஞ்செய்துக்கொள்ள வேண்டும்
## பாகம்.

பாணப்பெண்கள் கந்தார்த்த விருத்தம்.

தாரணியெல் லாமரசு புரியரிச்சந்
திரபூமா சாற்றக் கேளீர்
நாரணியாள் சுதன்மார னனைமலர்ப்பா
ணங்கடனை நங்கை யெங்கள்
நோரணிபா யெய்கின்றான் நிமிஷமதி
லுமதுமனம் நெகிழ்ந்தே போங்கும்
வாரணியுங் குயமதனைக் கையாற்பற்றி.

கந்தார்த்தத் தரு.

இராகம்-மோகனந்தாளம்-ஆதி.

பல்லவி.

மருவியணைத் திடவாரும் வருந்துகின்றோம்
மையலதனையே தீரும் (மரு)





அநுபல்லவி.

வெருவிப்பேசாது — விந்தையாகப்போது
மருமலரணைமீது — மன்னவாநீர்கூசாது (மரு

(பாணை-வ-ம்.) அரசே தற்சமயம் அதல, விதல, சுதல, நிதல தராதல, மகாதல, பாதாள, மென்று சொல்லப்பட்ட ஏழுலகங்களையும் ஒன்றின்மேலொன்றாக வைத்தடுக்கினுலுந் தாங்கக்கூடிய உமது திருப்புயங்களை யாங்கள் பார்த்திச்சை கொண்டதினால் ததிபார்த்துக்கொண்டிருந்த செங்கண்மால் புதல்வனாகிய அங்கசராஜன் கரும்புவில்லினிடமாக முல்லை, அசோகு, நீலம், சூதம், அல்லி, என்று சுவிலக்கூடிய பஞ்சபாணங்களையுந் தொடுத்து எங்கள்மீது விடுத்துச்சண்டைசெய்கின்றான் ஆதலால் காமவிகாரமோ சகிக்கமுடியவில்லை தாம் தயவுசெய்து சரசசல்லாபமாகக் கட்டியணைந்து அம்மன் மதனுடையபாணத்திற்குள்ளாகாதுகாப்பாற்றப்பிரார்த்திக்கின்றோம்.

(அரி-வ-ம்.) அடிதுஷ்டிகாள் நீங்கள்யான் கொடுக்கும் வல்லுக்களை மரியாதையாகப் பெற்றுக்கொண்டு போகவந்தவர்களல்ல கவனியுங்கள்.

அரிச்சந்திரன்சொல் கந்தார்த்தவிருத்தம்.

சீதளமார் வனசமலர்ச் செந்திருவை
நிகரான தெரிவையாள் நற்
பாதிமதி யணிபரமன் பதமறவாள்
சந்த்ரமதிப் பாவையாளன்
காதலியன்னவள லதிக்காகினி வாழ்
மாதரெனக் கன்னியா மிச்
சேதிதனை யுணராதே சேர்ந்து
மையல் நீரு மெனச்.

## கந்தார்த்தத் தரு.

இராகம் - மோகனம் - தாளம் - ஆதி.

பல்லவி.

செப்புவதென்னடிமட்டிகாள் பெரும்பட்டிகாள்
ஒப்புமோவீதார்க்குந் துட்டிகாள். (செப்)

அநுபல்லவி.

தப்பிலிகாளிவிதம்சொல்ல எப்படித்துணிந்தீர்நல்ல
மைப்படிகூந்தற்கன்னிகாள் செப்புமீதவிற்பனிகாள்
சாருவீர்மதி தேருவீர்பதில்
கூறிடாதுபுலே நாரிகாள்
சங்கடம் வரும்
பொங்கமாய்ச் சொனேன்
எங்கினும் புகழ்
துங்கனென் முனம். (செப்)

(அர-வ-ம்.) அடிமாதர்காள் யானெத்தனை விதமோ உங்கள் சித்தத்தில் படும்படியாகக் கேழ்க்கத் தகுந்தவைகளைக் கேட்டுப் பெற்றுக்கொண்டு செல்லுங்களெனச் சொல்லியும் அதைக்கவனிக்காது குடையையும் வெற்றிமாலையையுங் கேட்டீர்கள் அதுகொடுக்கத்தக்கதல்லவென்று அதன் தன்மையை யெடுத்துக்கூற அதைத்தவிர்த்து சக்ரவர்த்தியாகிய யென்னைக் காமமீறுது காந்தருவ விவாகஞ்செய்து கொள்ளென்று சொல்லத்தகுமா அன்றியும்.

அறன்வரையானல்லசெயினும் பிறன்மனையாள்
பெண்மைநயவாமை நன்று.

(அரி-வ-ம்.) அதாவது யாதாமொருவன் மிகுந்தபாவங்களையே செய்தாலும் தன்னுடைய பாரியாளன்றி வேறொருமாதரைச் சேராதிருப்பானுனால் சொல்லொண்ணாத நன்மை செய்தவனுவானென்றுகூறப்பட்ட சாஸ்திரத்தை யானுணர்ந்து தர்மசிந்தையுடையவனுகியும்.

### முன்னூல்வெண்பா.

அன்னைதயையு மடியாள்பணியுமலர்ப்
பொன்னினழகும் புவிப்பொறையும்-மன்னும்



வேசிதுயிலும் விறல்மந்திரிமதியும்
பேசிலிவையுடையாள் பெண்.

(அரி-வ-ம்.) அன்னையைப்போன்ற தயையும், அடியாள்போன்ற பணிவிடையும், பூமிதேவியைப்போன்ற பொறுமையையும், கணிகைபர்க்கேற்ற துயிலும், மேன்மைபொருந்திய மந்திரிக்கொப்பான புத்திசாதுரியமும், இலக்குமிக்கொப்பான அழகும்; இவ்வாறுசெய்கையும் பொருந்தியிருந்தவர்கள் தான் பெண்களென்று கூறப்பட்ட மறைமொழிக்கனுவேனு மாறுபாடில்லாத எனது மனையாளாகிய சந்திரமதியன்றி இவ்வையகத்திலிடமாக வுள்ள மாதர்கள் யாவரும் எனதன்னைக் கிச்சமானமாகப் பாவித்திருக்கின்றேன் ஆதலால் வீணுகவென்னோடு வாதாடாது யான் கொடுக்கும் ஆடையாபரணங்களைப் பெற்றுக்கொண்டு உங்களுடைய எதாஸ்தானஞ் செல்லுங்கள்.

## பாணப்பெண்கள் தரு.

நகரத்தில் யாதேனுமென்ற வர்ணமெட்டு

இராகம் - அமிர்கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மன்னவா துரையே மன்மதன்வாளியால்
வருந்துரோம் புவிமேலே
உன்[illegible]மாயெங்கள் கொங்கைபிடித்தணைவீ
ருயானைபிலிக் காலே (மன்ன)

தென்றலுந்தாவுது சிர்குயில்கூவுது
ஜெகம்புகழ்ந்திடும் பூமா
கன்றுமலெங்கள்மனங் கலந்துசேருமிப்போது
கண்ணியமிகுஞ் சோமா (மன்ன)

அன்றிலுங்கேவுதே அங்கமெல்லாம்நோகுதே
அண்ணலே மனமகிழ்ந்து
மன்றல்கமழ்மலர் மாகுழன்மேல்முடித்து
மருவுவீராள் கூர்ந்து (மன்ன)

பாணப்பெண்கள் வசனம்.

கோசலாதிபா இதோ பாரும் மன்மதன் கணை தொடுத்த சமயம் அன்னவனுக்கிணங்க குயிலோ கூவுகிறது அன்றிலோ கேவுகிறது தென்றலோ புலிபோற்பாய்கிறது ஆகையாலிவ்விரக வேதனையை யெங்களாற் சகிக்கமுடியாது தயவுசெய்து சீக்கிரத்தில் கட்டியணைந்து முத்தமிட்டுக் காமவிகாரத்தை யகற்றுமில்லையேல் விரும்பிவந்த மாதர்களைச் சேராத பெரும்பாதகம் தமக்குச் சம்பவிக்கும்.

(அரி-வ-ம்.) அப்படியா கவனியுங்கள்.

முன்னூல் வெண்பா.

எந்தெழில்மிக்கா னிளையானிசைவல்லான்
காந்தையர்கண்கவர் நோக்கத்தான்—வாய்ந்த
நயனுடையின்சொல்லான்கே ளெனினுமாதர்க்
கயலார் மேலாகுமனம்.

(அரி-வ-ம்.) ஏ துஷ்டிகாள் ப்ரபஞ்சத்தின் மாதர்களுடைய குணமாவது தன்னுடைய நாயகனானவன் பாங்கிரி வாசனாகிய சாக்ஷாத் முருகபிரானைப்போல் மிகுந்த யௌவனமும் இளமைப்பருவமும் வீணாகானத்திற்றேர்ச்சியடைந்த நாரதருக்குச் சமானமாகச் சங்கீதப்பயிர்ச்சியும் கன்னியர்களின் விலோசனத்தைக்கவரக்கூடிய நேத்திரமும் கர்ணாமிர்தம்போல் வார்த்தையுமுடையவனாயிருந்தபோதிலும் அம்மாதர்கள் வேறோராடவனைப் பார்க்கும் விஷயத்தில் அன்னவன்மீது இச்சை கொள்வார்களென்பது சாஸ்திரம்.

அதற்கிணங்க நீ ஸ்திரீகளாகிய நீங்கள் உத்தமக்ஷத்திரியனாகிய என்னைப்புத்தியீனமாச் சேரவிரும்புவதில் யான் சம்மதிக்காததால் பாதகம் வருமென்றெந்தச் சாஸ்திரத்திற் கூறப்பட்டிருக்கின்றது அவ்விதம் உங்களெண்ணம்போலவே விரும்பிவந்த உங்களைச்சேராததினால் வரக்கூடிய பாதகத்தையான் எனது மனையாளாகிய சந்திரவதியைத்தவிர வேறொருமாதர்களைச் சேருகிறதில்லையென்றெண்ணியிருக்கிறதால் வரக்கூடிய புண்ணியமானது வென்



றாலும் சரி அல்லது சமமானாலும் சரி அதைப்பற்றி எனக்குக்கவலையில்லை அப்பாற்செல்லுங்கள்.

பாணப்பெண்கள்சொல் தரு தர்க்கம்.

உனையேநம்பினேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

சாமிநீ நில்லாது செய்வது தகாது (சாமி)

அநுபல்லவி

பூமியாளுங் கோமா பெற்புயர்ந்த பூமா (சாமி)

அரிச்சந்திரன் சொல்தரு.

பல்லவி.

துட்டலண்டிகாள் நீர் துடுக்காய்ப்பேசாதீர். (துட்)

அநுபல்லவி.

மட்டித்தனமாக மன்னனென்முன்பாக. (துட்)

பாணப்பெண்கள்.

சரணம்.

சூரியகுலத்தில் தோன்றியவுதாரா
மாரனெய்யுமம்பால் மயங்குறோந்தீரா. (சாமி)

அரிச்சந்திரன்.

சரணம்.

காமனெய்யுமம்பாற் கலங்கினுங்கள்
மாமணவாளர்பால் மகிழ்ந்துசேருங்கள். (துட்)

பாணப்பெண்கள்.

கன்னிகளாமெங்கள் கணவனும் நீரே
துன்னுமனைமீது சுகமாய்ச்சேர்வீரே. (சாமி)

அரிச்சந்திரன்.

கூன்முடவன்கொம்புத் தேனுக்காசைகொள்ளும்
பான்மையாயெதிரிற் பழிவார்த்தைவிள்ளும். (துட்)

பாணப்பெண்கள்.

தென்றலுந்தாவுதே சிறுகுயிற்கூவுதே
மன்றல்செய்துகூடும் மாலிலங்கொண்டாடும் (சாமி)

அரிச்சந்திரன்.

எத்தனைசொல்லியு மேற்காமலிக்காலே
சத்தபத்தைப்போலே சத்தநீர்மேல்மேலே. (நாட்)

பாணப்பெண்கள்.

என்னசெய்வோம்நாதா வெங்கும்பிரக்யாதா
பின்னமாயேசியும் பெட்பாய்ச்சேருஞ்சீதா. (சாமி)

அரிச்சந்திரன்.

இந்த்ரஜாலங்கற்ற வீணத்தோகைமாரே
இந்தத்தலம்விட்டே யிப்போதேகுவீரே. (நாட்)

பாணப்பெண்கள்.

விரும்பும்பெண்களை வெறுத்திடலாகா
அருமறைதேர்ந்தே யபோத்தியால்யோகா. (சாமி)

(பாண-வ-ம்.) ப்ரபு கவனிக்கவேண்டும்.

பாணப்பெண்கள் முன்னூல் விருத்தம்.

பொலிவுறுதா ரம்பாதா ரங்களென்று
பொறித்தகுறி யுளதோதம் பொருளீதென்று
மிலகுபரத் திரவியமீ தென்று மாங்கே
யெழுத்துவெட்டி யிருப்பதுண்டோ வெப்பெண் டோரும்
வலியவர்க்குத் தமதன்றோ கையா லாக
மாட்டாதார் பிறர்மனையாள் மற்றோர் செம்பொன்
கலியிலதி பாவம்வரும் பழிமே லுண்டு
நரகமென்று புகல்வரெந்த நாளுந் தானே.

(பாண-வ-ம்.) அரசே பிரபஞ்சத்தினிடமாகத் தன் மனையாளுக்கோர்குறியும் பிறர்மனையாளுக்கோர்குறியும் எற்பட்டிருக்கிறதா அன்றியும் தனதுதிரவிய மின்னதென்றும் பிறருடையதிரவிய



மின்னதென்றும் அத்திரவியத்துக்கு யெழுத்து வெட்டியிருக்கின்றதாயில்லை ஆகையால் உலகத்தினிடமாயுள்ள எந்தப்பெண்களும் எந்தத்திரவியமும் வலிமையுள்ளவர்க்குச் சொந்தமேயாகும் உம்மைப்போலொத்த கையாலாகாதபேடிகள்தான் இவள் பிறருடையமனையாள் இதுபிறருடைய திரவியம்தீண்டினால்பாவம்வருமென்றுஎண்ணுவார்கள் அரசே.

அரிச்சந்திரன் முன்னூல் விருத்தம்.

தந்தையாகினும்விழைவிற் றன்னுடனே
யொருவயிற்றிற் சார்ந்தோரேனும்
மைந்தராகினுமிகவும் வனப்புடையா
ரெனிலவர்மேல் மடநல்லார்தம்
சிந்தைநாடக்கிடுமென முன்னோர்கள்சொன்ன
மொழியதனைத் தெரிவைகாள்நான்
விந்தையதாயுணர்ந் திருந்தேனவ்விதநீர்
நடக்கவெண்ணும் விபரங்கண்டேன்.

(அரி-வ-ம்) அடிமூர்க்கிகாள் இவ்வுலகின்கண் எழுவகைத்தோற்றத்தில் அரிதாகிய மானிடப்பிறவியில் பெண்ஜெனனமெடுத்தவர்கள் தன்னைப்பெற்ற தந்தையானாலும் உடன்பிறந்த சகோதரரானாலும் தான் அருந்தவஞ்செய்துபெற்ற புதல்வர்களானாலும் மற்ற யாரானாலும் மகா யௌவனபுருஷரா யிருக்கும்பக்ஷத்தில் தன்னுடைய நாயகனை வெறுத்து அன்னோர்களைச் சேருவதற்கெண்ணங்கொள்வார்களென்று நான் சாஸ்திரமூலமா யுணர்ந்திருந்தேனேதவிர யான் ராஜ்யபட்டாபிஷேகத்தை யடைந்து ராஜரீகம்செய்ய ஆரம்பித்தநாள்முதல் இன்னாள்வரையு மென்னுடைய நாட்டினிடமாகவுள்ளமாதர்களுக்கு மேற்கூறிய குணங்கள் கிஞ்சிற்றேனுமில்லாததால் சாஸ்திரம் பொய்மொழியுமாமென வெண்ணியிருந்தேன் தற்சமயம் உங்கள் மூலமாகவே எனது சந்தேகம் நிவர்த்தியாகிவிட்டது மூர்க்கிகாள் பலவிதமான வார்த்தைகளை என்னோடுபேசி வாதாடிக்கொண் டிருப்பது தகுதியல்ல ஒழுக்கமாகச் சென்றுவிடுங்கள்.

பாணப்பெண்கள் சொல்தரு.

மயிலேதாமதமேன் என்ற வர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

சகியோமோகமன்னு சாஸ்த்ரவிற்பன்னு (சகி)

அநுபல்லவி.

தகையுயர்கோமா தடம்புயப்பூமா
பகலவன்குலத்துதித்த பண்புயர்நேமா (சகி)

சரணம்.

ஜகம்புகழ்நாதா தாமரைப்பாதா
அகமகிழ்வாகவேநீர் அணைந்திடுவீர் (சகி)

மாங்குயில்கூவுது மையல்மிகவாகுது
தேங்கமழ்சோலையிலே சேர்வீரிப்போது (சகி)

வாதுகள்கூறாது மங்கையெமைவையாது
கோதிலாதிங்ஙனமே கூடுங்கூசாது (சகி)

---

(பாண-வ-ம்.) அரசே தற்சமையம் யாங்கள் கொண்டமோகத்தைச் சகிக்கமுடியாது போயிருக்கிறது ஆகையால் யாதொருதடையும் புகலாது சரசசல்லாபமாகச் சேரவாரும்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

மாதர்களுக்கெல்லாம் இலக்ஷியம் என்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஏகம்.

ஓரடிப்பசம்.

மாதரேயேன்வாதுசெய்குறீர் நீசக்குலத்து
வண்டுநிறைக்கரு கொண்டலலங்கிர்த
தொண்டையபத்தறு முண்டகமாவனா
வள்ளியாடவர்மனங் கொள்ளைகொளுங்குமிழ்
கிள்ளையுவரியெழு தெள்ளமுதம்பிறை
வாருடன்வென்றகண் மார்குழல்நல்லிதழ்
வதனக்குழைநசி வசனநகமுற
வந்துதித்துமிக விந்தைதரப்பாத
முந்திறத்துடனே சந்ததமுணர்



மாதரேயேன்வாதுசெய்குறீர் நீசகுலத்து
மங்கைகாள்வீணாவே னோகுறீர். (மா)

பாதகவீதப்பட்டிகாள் சங்கையில்லாமல்
பத்தரைமாற்றுதங் கத்தினிற்றர
வத்திரள்மாநவ ரத்தினதிகள்பதி
பாடகசெங்காஞ் சூடகமேகலை
பீடுயர்பற்பல பூடணநீங்கள்செய்
பாதத்தைபுநவில் கருதிக்குறையில
விரதக்கிதமுங் கருதிச்சரதமாய்
பட்டுவஸ்திரங்கள் அட்டியில்லாதிய
இட்டமாகவேகும் பிட்டுவாங்காததோர்
பாதகவீதப்பட்டிகாள் சங்கையில்லாமல்
பட்டிமொழிசொல்லுந் துட்டிகாள் (பா)

சீக்கிரஞ்செல்லுவீர்நீங்கள் வெட்கமேகெட்ட
சித்தானதிகசி னத்துடனேயிலே.
சித்தமதாகவ ளோத்துமேபூமலர்
இட்டமில்லாமலே தொட்டனுகையால்
இட்டமாயெங்களைப் பட்டணமீதிலே
செங்குமுதத்தைநேர் கொங்கைகளதனைநஞ்
செங்கையினுற்பிடித் திங்கிதமாகவே
சேரவாருமென ஆரவாரமொழி
தீரமாய்ச்சொல்லிப சாரிகாள்கில்லாமற்
சீக்கிரஞ்செல்லுவீர்நீங்கள் வெட்கமேகெட்ட
ஜெகஜாலவித்தர சாலிகாள். (சீ)

(அரி-வ-ம்.) அடிமூர்க்கிகாள் கவனியுங்கள்.

---

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

காமமே குலத்தினையும் நலத்தினையுங் கெடுக்கவந்த களங்கம்
காமமே தரித்திரங்க ளனைத்தினையும் புகட்டிவைக்குங் கடாரம்
காமமே பரகதிக்குச் செல்லாமல் வழியடைக்குங் கபாடம்
காமமே யெனைவரையும் பகையாக்கிக் கழுத்தரியுங் கத்திதானே.

---

(அரி-வ-ம்.) ஏ துஷ்டிகாள் பிரபஞ்சத்திலிடமாகக் காமமான துஜாதிநெறியையும் நன்மையையுங் கெடுத்துவிடும்படியான குற்றமென்றும், அன்றியும் வறுமைகளை நிறைத்து வைத்திருக்கும் பொக்கிஷமென்றும், முத்தி மார்க்கத்திற் செல்லாமலடைத்திருக்குங் கதவென்றும், எத்தன்மையோரையும் பகையுண்டாக்கிக் கழுத்தறுக்கத்தக்க கத்தியென்றுஞ், சாஸ்திரத்திற் கூறப்பட்டிருக்கிறது அதனையுணர்ந்த யான் உங்கள்கோரிக்கைக்குடன்படுவேனென நினைக்குதீர்களா? அப்பாற் செல்லுங்கள்.

(பாண-வ-ம்.) என்ன ப்ரபூ இவ்விதமாக பாஷிக்கின்றீர் அப்படியல்ல கவனிப்பீராக.

முன்னால் விருத்தம்.

காமமே சையோகங் காமமே மெய்யோகங்
காமமே அஞ்ஞானங் காமமே மெஞ்ஞானங்
காமமே வேதாந்தங் காமமே சித்தாந்தங்
காமமே மோக்ஷங் காமமே காரணமே.

(பாண-வ-ம்.) அரசே பிரபஞ்சத்திலிடமாகக் காமமே முன்விற்கப்பட்டது காமமில்லாவிட்டால் உலகமில்லை, உலகமில்லாவிட்டால்ஞானமில்லை, ஞானமில்லாவிட்டால் மோக்ஷமில்லை, மேலும் இம்மை, மறுமை இரண்டிற்குங் காமமே முதற்காரணம் இவ்விதமிருக்கத் தாமெதுவோ பிதற்றிப் போகிறீர் தர்மமல்லமையல்மீறுது மருவவாரும்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

சாதியிரண்டொழிய வேறேயென்ற வர்லமெட்டு:

இராகம் - கமாஸ் - தானம் - ஆதி.

கண்ணிகள்.

வாதாவெதாகா துரீர் மங்கையரேயின்று
போதுமானபணிகள்பெற்றுப் போவதுவேநன்று. (வாதா)



## பாணப்பெண்கள்சொல் தரு.

காமமதாமீறுதிதே கலந்தணையவாரும்
தாமதமேசெய்யலாமோ சாமியேசேர்பாரும் (காம)

அரிச்சந்திரன்.

என்னவார்த்தைவீண்டிரடி பினைத்தோகைமாரே
சின்னமலடைவீர்நின்றக்கால் சீக்கிரஞ்செல்வீரே. (வாதா)

பாணப்பெண்கள்.

கொங்கைபிகவிம்முதிதே கோவேசேரும்பாரும்
செங்கையதனைப்பிடித்துச் சேர்ந்தேயாசைதீரும். (காம)

அரிச்சந்திரன்.

மங்கைசந்திரவதியன்றி மாநிலம்வாழ்யாரும்
தங்கையாகுமிதுசத்யந் தையலரேதேரும். (வாதா)

பாணப்பெண்கள்.

காதல்கொண்டமங்கையரைக் கலக்காவிடிற்பூமா
பாதகமல்லவோவேதம் பார்க்கலையோ கோமா (காம)

அரிச்சந்திரன்.

கார்ப்பதுவிரதமென்றுங் கருத்தையறியீரோ
எற்பதிகழ்ச்சியென்பதை யிதுநாள்தெரியீரோ (வாதா)

பாணப்பெண்கள்.

கோதுகுழற்றளருதையோ கொற்றவாவிப்போதே
காதலைசெய்யாமற்சேருந் தடையதுசொல்லாதே. (காம)

அரிச்சந்திரன்.

சொன்னமொழிகேட்காததோர் துஷ்டிகளேயெரும்
இன்னமுநின்றீரானுவிது பெரும்வம்பாகும் (வாதா)

பாணப்பெண்கள்.

மாரனெய்யும்வாளியதால் மயங்கலானேம்நாதா
தாரமாகஎமைநினைத்து தழுவப்பிரைக்யாதா (காம)

அரிச்சந்திரன்.

அஷ்டதிசைபோற்றுகின்ற அரசன்முன்னிக்காலே
இஷ்டப்படிபேசுகிறீர் பெண்ணதுமெமக்மேலே (வாதா)

பாணப்பெண்கள்.

ஆசைமிகவாகுறதே — யண்ணலேயென்செய்வோம்
தேசயர்மஞ்சத்திற்கூடிந் — சேயிழைய மூய்வோம். (காம)

---

(அரி-வ-ம்.) அடி மூர்க்கிகாள் நீச ஸ்திரீகளாகிய நீங்கள் உத்தம க்ஷத்திரியகுலத்தாசனாகிய வென்னைச் சேர விரும்புவது ஞாயமல்ல மரியாதையாகப் பெறத்தக்கவைகளைப் பெற்று உங்களெதாஸ்தானம் செல்லுங்கள் இல்லையேல் மிகுந்த துன்பமடைவீர்கள்.

(பாண-வ-ம்) "உத்தமவசிட்டராலே உன் பிதா புலையனை ன்பெற்றவன் புலையனென்றாற் பிள்ளையும் புலையனன்றோ" அரசே யாதொரு உத்தமமான தவத்திற் சிறந்த வசிஷ்டமகா ரிஷியினது சாபத்தாலுன் பிதாவான திருச்சங்குச் சக்கரவர்த்தியானவர் நீசனென்று கேள்வி யடைந்திருக்கின்றோம் அவ்வித முமது பிதா நீசனென்றால் அவருதிரத்திற் செனித்த தாமும் நீசன்றானே அப்படியிருக்க எங்களைமட்டும் நீசஸ்திரீகளென்று தாம் தூஷிப்பது தகுதியல்லவே சாதிக்கிச்சாதி சேருவதற்குத் தடையென்ன ப்ரபூ.

(அரி-வ-ம்.) ஏ வண்டிகாள் எனது பிதாவான திருசங்குசக்ரவர்த்தியானவர் புலையர் அவருதிரத்திற் ஜெனித்த யானும் புலையனென்றெண்ணியா கொடிய நீசஸ்திரீகளாகிய நீங்கள் என்னைச் சேரவேண்டுமென் றெண்ணிவிந்தது.

(பாண-வ-ம்.) ஆம் ப்ரபூ தடையென்ன.

(அரி-வ-ம்.) ஏ மூர்க்கிகாள் அதன் காரணத்தைச் சொல்லுகின்றேன் கவனமாய்க் கேளுங்கள் எனது பிதாவான திருசங்கு சக்கரவர்த்தியானவர் எனக்கு ராஜ்யபட்டாபிஷேகம் செய்துவைத்தபின்னர் எங்கள் குலகுருவும் பிரம்மரிஷியுமான வசிட்டரை நோக்கிக் குருமஹாராஜ் அடியேனைச் சடலத்தோடு சுவர்க்கஞ்சேர்ப்பிக்கவேண்டுமெனக் கூறினார் அதற் கன்னவர் மறுத்தனர் உடனே எனது பிதா குருவைப்பார்த்து ப்ரபூ உம்மைப்போலொத்த துறவறசன்னியாசிகளாலே நான் சுவர்க்கம்புகுவேனெனக் கூறினர் அவ்வார்த்தையைக் கேட்டதக்ஷணமே வசிட்டமகாரிஷிக்குக் கோபமுண்டாகிக் குருவாகிய என்னுடைய சொல்லை நீ



தடுத்ததினால் மகா பாதகனென்னுமாகிய நீசனாகக்கடவாயென்று சபித்தனர்.

(அரி-வ-ம்.) அக்ஷணமே அன்னவருடைய ராஜதேஜஸ்யெல்லாங் குறைந்து புலையனாகிகாட்டைவிட்டு தெக்ஷண திசையில் தவமியற்றிக்கொண்டிருந்த விஸ்வாமித்திரரைப்போய் தெரிசித்து நடந்தவாற்றைக் கூறினர் அன்னவர் வசிட்டருக்குந் தனக்கு மேற்பட்ட மனஸ்தாபத்தால் மிகவுஞ் சந்தோஷித்து அரசனே உனதென்னைப்போலவே வசிட்டன் அவமானமடையும்படியாக அந்தரசுவர்க்கத்துக்கிதோ அனுப்புகிறேன் என்று வானிலிருந்து மங்கைகொப்பான விமானமொன்று வரும்படிசெய்து அதிலென்து பிதாவை யேற்றியனுப்பவே அவ்விமானத்தோடு சுவர்க்கஞ்சென்றனர் அதனைக்கண்ட தேவர்கள் கோபங்கொண்டு அடாமூர்க்கா நீசனாகிய நீ இச்சுவர்க்கலோகத்திற்கு வரலாமாவென்று விமானத்துடன் பூமியிற்றள்ளினார்கள் அச்சமயம் இரதம் அலைவுபட்டுப் பூமியில் விழவரும்போது மன்னரானவர் விஸ்வாமித்திரருக்கபயம், விஸ்வாமித்திரருக்கபயம் என்றுகூறினர் அவ்விசனமான சப்தம் விஸ்வாமித்திரர் செவியிற்பட்டு விமானத்தைக் கீழேவிழவொட்டாமற் றாங்கிச் சினங்கொண்டு அண்டங்களையெல்லாம் எரியச்செய்து ஈரேழுபதினான்குலகங்களுக்கும், இந்திரன், பிர்மா, விஷ்ணு, ருத்திரன் முதலிய தேவர்களுக்கும் இதோ வேறேசிருஷ்டிக்கிறேனென் றுக்கிரமங்கொள்ளவே இவ்விஷயத்தைத் தெரிந்தமேற்கூறிய தேவர்கள் முதல் யாவரும் பயந்து விஸ்வாமித்திரரிடத்தில் வந்து அன்னவர் கோபம் தணியும்படி நல்வார்த்தை கூறி தற்சமயமே யெனது பிதாவுக்கு நக்ஷத்திரப்பதவி கொடுத்தார்கள் அவ்விதமிருக்க வண்டிகாள் உனது பிதா புலையர் ஆனதால் நீயும் புலையனென்று சொல்ல எவ்விதம் துணிந்தீர்கள்.

---

பாணப்பெண்கள்சொல் தரு.

தங்கமேயொத்தக்காலம் வந்ததெனையென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

காமமீறுதையோவெங்களைக் — கலந்திடவாரும்-மன்னு
காமதன்செய்யலைகாதித்தி — சஞ்சலந்தீரும் (கா)

வாரைக்கிழித்துமீறுமேமுலை மன்னவாபாரும்-வெகு
நேரஞ்செல்லாமற்கையாற்பிடித்து நிமிஷத்திற்சேரும் (கா)

செங்கையணிந்தகங்கணங்கள் நொருங்கிப்போகுதே-மன்னா
அங்கசனெய்ததுங்கப்பாணத்தா லாகம்நோகுதே (கா)

சகம்புகழ்ந்திடும்பகலவன்குலச் சற்குணநேமா-பொல்லா
இகலானமொழிபுகலுவதுமக் கேற்குமோபூமா (கா)

தக்கபஞ்சணையமளிமீதினிற் சார்ந்தின்றுநாதா-உயர்
கொக்கோகப்படிபக்குவமாகக் கூடிடவாதா (கா)

(பாண-வ-ம்.) புவனசக்ரேஸ்பரா இதோபாரும் யெங்கள்மார்பின் கண்விகசிதமாகப்புடைத்திருக்கக்கூடிய தனங்கள் காமம்அதிகமாக அதிகமாகக் கிழித்துக்கொண்டு விம்முகிறது ஆகையாலிதனைத் தமது செங்கைகளினால் விம்மவொட்டாதுபிடித்துப் பஞ்சணையிலடுத்துக் கட்டியணைந்து முத்தமிட்டுக் கொக்கோகசாஸ்திரப்படி சரசசல்லாபமாகச் சேரவாரும் வாதுகூறுவது தகுதியல்ல.

## அரிச்சந்திரன்சொல் தரு.

கண்ணிகள்.

கன்னமாபுரியையாளும் காவலன்மதிதயங்குமக்
கன்னனைநினைந்துதவஞ் கானதிற்செய்
அன்னவர்தத்ருபப்பிர சன்னவரத்தாற்றுவியே
டந்தரையில்வவந்துதித்த சந்த்ரவதியன்றியேமற்
றவனிவாழ்மாதர்க ளெவருமெந்தாயடி
கவனமாயோர்ந்துமே யிவ்விடம்விட்டேகுவீர். (எ)

(அரி-வ-ம்.) அடிமூர்க்கிகாள் கன்னமாபுரிக் கிறைவனாகிய மதிசயராஜன் அருந்தவத்தால் அவனியின் மீது திருமங்கிலியத்தோடுதித்து எனதுமணமாலை பெற்றசந்திரவதியாகிய எனதுபாரியாள் தவிர இவ்வுலகத்துள்ள மாதர்கள்யாவரும் எனதன்னைக்குச் சமானமாகுமெனயான் சொல்லச்சொல்லக்கிஞ்சிற்றேனும்லச்சையில்லாமல்மறுத்துக் காமமீயுது சேரவாருமென்று கூறுவதுசிதமா? சீக்கிரத்திலிங்கு நிற்காது சென்றுவிடுங்கள்.



(பாண-வ-ம்.) கோசலாதிபா தமது பாரியாளாகிய சந்திரவதியம்மாள் திருமங்கல்யத்தோடா உலகத்திலவதரித்தார்கள்.

(அரி வ-ம்.) ஆம் சிவபெருமான் கிருபாகடாக்ஷத்தால் பிரம சிருஷ்டியால் மாங்கல்யத்துடன் தான் அவதரித்தாள்.

(பாண-வ-ம்.) அரசே கவனிக்கவேண்டும் உலகத்தின் கண் யாதாமொருவன் ஓர்பெண்ணுக்குத் தாலிகட்டினால் தான் அன்னவள் அன்னவனுக்கு மனைவியாவாள் என்று சாஸ்திரங்கள் கூறப்படுகின்றது அவ்விதமிருக்கத் தான் தமதுமனைவியாகிய சந்திரவதியானவள் சிவபெருமான் கிருபையால்பிரம்ம சிருஷ்டியால் தாலியோடவதரித்தனள் யான் மணமாலைசூட்டி மனைவியாக்கிக்கொண்டேனென்று கூறுகிறீர் இது தமது புத்திக்கேற்கதலமாயிருக்கிறதா? அன்றியும் பிரம்மசிருஷ்டியால் தாலியோடவதரித்தாளென்றால் அப்பிரமனுக்கு மனைவியாகவேண்டுமேதவிரத்தமக்கு மனைவியாளென்று கூறுவது உசிதமா? இத்தகைமைவாய்ந்த மாதைக்கற்புடையவளென் றெண்ணிச்சேர்ந்து கொண்டிருக்கக் கூடியதாம் எங்களை வேசிகளென்றும் தாசிகளென்றும் உதாசினபாசப்பேசிக் கோபங்கொள்வதுாலமா? வாதாடாது யெங்களைமுத்தமிட்டுக் கட்டியணைந்து சேரும்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

கண்ணிகள்.

சாதிப்புத்திசற்காயலே பாதிவருமெயன்றுமுன்னோர்
சாற்றுமொழிபுங்களிடந் தானின்றுகண்டேன்
பாதகியாள்சந்த்ரவதிப் பாவையாள்கற்புக்குக்குற்றம்
பாஷிப்பதொழுங்காகுமோ யாசிப்பதற்கழகாமோ
பட்டிகளோமகா துட்டிகளோஈன
மட்டிகளோசற்றும் சட்டையில்லாயலே. (எ)

(அரி-வ-ம்.) ஏ துஷ்டிகாள் சாக்ஷாத் சிவபெருமான் திருவரத்தாலுதித்த சந்த்ரவதி கற்புக்குங்குற்றஞ் சொல்லத்தலைப்பட்டுவிட்டீர்கள் இனி நின்றீர்களானால் கொடியதண்டனைக்குள்ளாவீர்கள்சீக்கிரம் ஓடிப்போய்விடுங்கள்.

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

பண்டோரான் பெண்ணமைத்தவ் விருவருக்கும்
மணம்பெற்றிப் பரனிரக்கல்
கொண்டழித்த முறைகடந்த கள்ளவழிப்
புணர்ச்சிசெய்யுங் கொடியோர்தம்மை
மண்டலமே வாய்பிளந்து விழுங்காயோ
வவர்தலைமேல் வானுலாவுங்
கொண்டலே பேரிடியை விழத்தாயோ
யிதுசெய்யிற் குற்றமுண்டோ.

(அரி-வ-ம்.) சாக்ஷாத் ஜெகதீசன் ப்ரதமத்தில் ஆண், பெண், என்ற இரண்டுசாதி உற்பத்திசெய்து வாழையடி வாழையாய் வரும்பொருட்டு நாயகன்மனைவி யென்றமுறையேற்படுத்தி வழுவாது நடக்கும்படிசெய்த தருமசாஸ்திரத்துக்கு விரோதமாகத் தன்னுபகனையன்றி வேறோர் நாயகனைச்சேர வெண்ணும் இவ்வினைச்சாதிலண்டிகள் தலையில் ஆகாயத்திற் சஞ்சரிக்குங் கொண்டலாகிய மேகங்களே பேரிடியை விழும்படி செய்யமாட்டீர்களா அன்றியும் மண்டலமென்ற பெயரைவகித்த பூமாதேவியே உன்வாயைத் திறந்தாவது விழுங்க மாட்டாயா அல்லது நீங்களிக்கொடியமூர்க்கிகளாகிய இம்மாதர்களை பவ்கிதஞ்செய்யும் விஷயத்தில் ஏதாவது குற்றமுண்டா?

(பாண-வ-ம்.) என்ன ப்ரபூ கிழும்மேலும் பார்த்துப் பித்தம் பிடித்தவர்களைப்போலாகப் புலம்புகிறீர்.

(அரி-வ-ம்.) அடி துஷ்டிகாள் அப்பாற் செல்லுங்கள்.

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் இந்தச் சண்டாள மாதர்கள் கூறிய வார்த்தைகளை யெல்லாம் தீர்க்கமாய்க் கவனித்தீராயாண் எவ்வளவோ விபரமாக யெடுத்துச் சொல்லியும் தெரிந்து கொள்ளக் கூடியவர்களாக இல்லை இதற்கியாது செய்யலாம்.

(மந்-வ-ம்.) ப்ரபூ கூறுகின்றேன் சற்றுபொருங்கள்.

மந்திரி பரவைபெண்களிடஞ் சொல் வசனம்.

ஏ மாதர்களே நீங்கள் இறைவர் முன்னம் இந்த விதமான வாதுசெய்து கொண்டிருப்பது தகுதியல்ல ஆதலால் அரசன் கொ



டுக்கும் ஆடையாபரணங்கள் யாவையும் சீக்கிரத்தில் பெற்றுக் கொண்டு உங்களிருப்பிடம் செல்லுங்கள் இல்லாத பக்ஷத்தில் மிகுந்ததுன்பமடைவீர்கள் என்ன சொல்கின்றீர்கள்.

(பாண-வ-ம்.) மந்திரி வரியரோநீர் யெங்களுக்குப் புத்திசொல்லியாங்கள் தெரிந்து கொள்ள வேண்டுவதில்லை அப்பாற் போம்.

மந்திரி அரசனிடஞ்சொல் வசனம்.

ப்ரபூ இந்தமாதர்கள் என்னசொன்னாலுங் கேட்கமாட்டார்கள் போலிருக்கிறது ஆகையால் அடாது செய்பவர்படாதுபடுவர் என்ற வாக்கியத்தின் பிரகாரம் இவர்களுக்குத்தக்க தண்டனைவிதித்து அனுப்புவதே யுக்தமென்று நினைக்கிறேன் அப்பால் தங்கள் சித்தம் ப்ரபூ.

(அரி-வ-ம்.) மிகவும் சரி.

அரிச்சந்திரன்சொல் தரு.

பஹாரிமோரி பியாரி என்றவர்ணமெட்டு
இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

ஓடிப்பிழைத்துப்போங்கள் — உற்றபடுநீலிகாள் (ஓடி)

அநுபல்லவி.

வாடிமனம்நோக — மூட்த்தனமாக
பேடியெனப்பேசுதீர் — ஆ-ஆ (ஓடி)

சரணங்கள்.

மானமில்லாச்சண்டிகாள் — ஈனச்சாதிலண்டிகாள்
கானமுணர்மிண்டிகாள் — ஆ-ஆ (ஓடி)
வானவிசத்ரவதி — காரிகையன்றிமற்ற
நாரியானேயாகும் — ஆ-ஆ (ஓடி)
சொன்னசொல்லைக்கேளாது — மன்னன்முன்நிற்பதேது
பின்னஞ்செய்வேனப்போது — ஆ-ஆ (ஓடி)

(அரி-வ-ம்) ஏ மாதர்காள் யான் கொடுக்கும் ஆடையாபரணங்களைச் சந்தோஷமாய்ப் பெற்றுக்கொண்டு செல்கின்றீர்களா அல்லவா?

பாணப்பெண்கள் முன்னால்

கலித்துறை.

பொல்லாமதப்பயலென்னேரமுஞ் செய்யும்போருமேமைக்
கொல்லாமற்கொல்லுமதியுங் கடலுங்குளிரும்பிறை
யெல்லாந்தொலைந்ததென் றெண்ணினேம்பாவிப்போதுன் மனங்
கல்லாயிருக்குமென்றெவ்வளவேனு முன்கண்டிலமே.

---

(பாண-வ-ம்.) அடா பாவி பலகாலும் செங்கண்மால் புதல்வனாகிய அங்கசராசன்சங்கையில்லாமல் பங்கயமலரை யெடுத்தெங்கள்மீதுதொடுத்துச்செய்யுஞ்சண்டையும் அதற்கிணங்கச்சுந்தரன் முடிமேல் விந்தையாய்த் தங்கும் சந்திரன் தகிக்குந் தணலும் வாருதியென்னும் பேரிகையோசையும் மன்றல் மிகுந்த தென்றலின் வாடையும் உன்னைக்கண்ட மாத்திரத்தில் நீங்கி விட்டதென்றெண்ணியிருந்தோமே தவிர அடா துரோகி உன்மனமானது எங்கள் விஷயத்தில் இவ்வளவு கல்லாயிருக்குமென்று யெண்ணவேயில்லை நீ அரசன்றானே? உனக்கிது நன்றாயிருக்கிறதா? பெண்களாகிய எங்கள் பாவம் உன்னைச் சுற்றாதா? வாது செய்யாதே இது ஞாயமல்ல.

அரிச்சந்திரன் சொல்தரு தர்க்கம்.

சேருமுன்னே சேவல்கூவுதே என்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தானி - காபி - தாளம் - ஆதி.

பல்லவி.

என்னமொழிசொன்னீர் லண்டிகாள் பெருஞ்சண்டிகாள். (எ)

அநுபல்லவி.

இன்னிலமதனிலுள்ள எற்றமிகுதேசம்வாழும்
மன்னவர்கள்மன்னனென்றெனை மதித்திடாமல்



பாணப்பெண்கள் சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ஆதி.

பல்லவி.

இவ்வளவுகோபமாகுமா விஜயகுமா. (இ)

அநுபல்லவி.

கொவ்வைவிதழுடைய கோதையராமெங்கள்மீது
செவ்வைசேர்கோசலையாளுஞ் சீருயர்மன்ன. (இ)

அரிச்சந்திரன்சொல் சரணங்கள்.

கோபமென்னடிமாதரே கொற்றவனுமென்முன்னின்று
பாபவார்த்தைபேசலாகுமோ ஓபட்டிகளே. (எ)

பாணப்பெண்கள்சொல் சரணங்கள்.

சுந்தரமிகுவெரய்யாரா தொல்புவியோர்க்குபகாரா
இந்தவேளைசேர்த்தணையநீ யெண்ணுதவீணே. (இ)

அரிச்சந்திரன்.

பாதகமெல்லாந்திரண்டு பாரவுருவுகொண்டு
பூதலத்துதித்தநீலிகாள் புலைச்சாதிகாள். (எ)

பாணப்பெண்கள்.

ஆவியதுசோருதே யஞ்சொல்தடுமாறுதே
மேவியொருமுத்தந்தாராமல் வேந்தர்கள்வேந்தே. (இ)

அரிச்சந்திரன்.

ஆடல்பாடலுக்கேயாறு மாகமதனில்யெச்சி
பாடகரற்பணிகளியந்திடப் பண்பாய்ப்பெறுமல். (எ)

பாணப்பெண்கள்.

சித்தசன்பாணத்தினாலே சித்தம்நைந்துமென்மேலே
இத்தினம்வருந்துமெங்கள்மே லெண்ணங்கொள்ளாமல். (இ)

அரிச்சந்திரன்.

கர்சணிகொடுசூரிகாள் லச்சைகெட்டவிபசாரிகாள்
இச்செகமெலாம்புகழ்ந்திடு மேந்தலென்முனம். (எ)

பாணப்பெண்கள்.

கொங்கைகளையோமீறுதே கோதருகுழல்சோருதே
பங்கயச்சுமுகபமானே பண்பாகச்சேரும். (இ)

(அரி-வ-ம்.) அடி லச்சைகெட்ட விபசாரிகாள், துன்மார்க்கிகாள் தப்பித்தோடிப்போய்விடுங்கள்.

(பாண-வ-ம்.) அடாசண்டாளா, அடாபாதகா, அடாதுரோகி? அடா வஞ்சகா? நீ அரசன்றுனே? நீநன்முக வாழ்ந்திருப்பாயா? உனதுநாடு பாழாய்ப்போகாதா? உனக்கு வள்ளலென்றபெயருஞ் சக்கரவர்த்தியென்றபெயரும் தகுமா? யெங்களை யிவ்விததூஷணமாகப்பேசலாமா? அன்றியும் விரும்பிவந்த மாதர்களைச் சேரச்செயலில்லாதபக்ஷத்திற் சரீரமெல்லாம்நோகும்படியடிக்கலாமா? அடாபாவி யெங்கள்திரேகமெல்லாம் புண்ணுகநோகின்றதே யெங்கள்பாவ முன்னைச்சும்மாவிடாதடா சண்டாளா.

## அரிச்சந்திரன் விருத்தம்.

நீரமோருருவதாக்ச் செகத்தினிலவதரித்த
வீரச்சேவகரேயிந்த விபசாரமாதர்கூறுங்
கோரமாம்வார்த்தைகேட்கக் கூடுமோகூடாதெந்தன்
கேரினினின்றிடாமல் நிமிஷத்தில்தள்ளுவீரே.

(அரி-வ-ம்.) அடா சேவகர்களே யிந்தக் கொடியசண்டாளிகளைச் சீக்கிரம் இவ்விடத்தில்நிற்கவொட்டாது தள்ளிவிடுங்கள்.

(சேவ-வ-ம். ஆக்ஞைமகாராஜ்.

(சேவ-வ-ம்.) அடியேலண்டிகாள், இதோவுங்களை அடித்துத் தள்ளிவிட்டோம். தப்பித்தோடிப்போங்கள்.

(பாண-வ-ம்.) சகி என்னடிசெய்வோம் பரமசண்டாளனை இவ்வரசன் நமது மனரம்பியம்போல நடக்காவிடினும் சாதாரணமாகப் போகும்படி. சொல்லக்கூடாதா சேவகர்களைவிட்டு அடிக்கவாசொல்லவேண்டும் எனதுதிரேகமெல்லாம் நோகுகிறதே.

(சகி-வ-ம்.) சேடி நாமிங்குநின்று வருந்துவதி லென்னபிரயோசனம் நமது பிதாவினிடஞ்சென்று இக்காரணங்களையெல்லாந்தெரிவிப்போம்.

(சேடி-வ-ம்.) நல்லதுசகி போகலாம்வா.



# பாணப்பெண்கள் விஸ்வாமித்திரரிடம் முறையிடுகிறபாகம்.

பாணப்பெண்கள்சொல் தரு.

பஞ்சமாபாதகம்படாதா வென்றமெட்டு.

இராகம் - அபுருபம் - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

அபயம் அபயம்மையா முனிநாதா-எங்கள்
அங்கமெல்லா நோகுதேதவநீதா

பஞ்சபாதகன்முன் முன்விடுத்தீரோ-உமது
பாலிகளாமெங்களைக் கெடுத்தீரோ

ஐயோவன்னவனசெய்த வநியாயம்-இந்த
அவனிதனில்பிரச்சம் பிரதாயம்

உன்றன்வருதிபோல மெய்ப்போதா-குடை
புதலவனையென்றுரைத்தோம் பிரக்யாதா

மன்னன்மந்திரிமகன் மனைவியுடன்-எங்கள்
மார்கைதொட்டடித்தார் வேகமுடன்

அப்பிப்பிழைத்திவ்விடம் வந்தோமே-எங்கள்
தந்தையேவெகுவாக நொந்தோமே

(பாண-வ-ம்.) பிதாதங்களுத்தரவுபோலக் கொடியபாதகனாகிய அந்த அரிச்சந்திரனிடஞ் சென்றுசங்கீதசாஹித்ய வேணுகானங்களால் அவனைப்பரவசப்படுத்தித் தாம் கூறியவண்ணமே யன்னவனிடங் கேட்டதில் எங்களை புதாசினமாகப்பேசியதுந் தவிர எங்கள் சரீரமெல்லா நோகும்படியாக அடித்துத் துரத்திவிட்டான் எங்களங்கமெல்லாம் புண்ணாகநோகிறதே பிதா.

(விஸ்-வ-ம்.) ஆ! யெனது புத்திரிகளே உங்களை யிந்தக் கொடியசண்டாளன் இந்தவிதத்தவமானஞ்செய்தான் கவலையடையாதீர்கள் அவனுடைய திராணியைச் சற்றுநேரத்துக்குட் பார்க்கின்றேன்.



(விஸ்-வ-ம்.) ஏ முனிவர்களே பரமசண்டாளனாகிய அரிச்சந்திரன்செய்த விட்டேத்தைப் பார்த்தீர்களா எல்லோரும் வாருங்கள் அன்னவனிடஞ் செல்வோம்.

(முனிவர்கள் வசனம்.) இதோ வருகின்றோம்.

(அரி-வ-ம்.) ஏ ப்ரதான் அதோபாரும் அருந்தவத்திற்சிறந்த விஸ்வாமித்திரமஹாரிஷி கொடுஞ்சினமாகவருகுறார் எதிர்கொண்டழைப்போம் வாரும்.

(மந்-வ-ம்.) ஆக்ஞை ப்ரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

காரிடியொப்பவிந்தக் கடுஞ்சினங்கொண்டென்னோடு
போர்செயவருவதற்குப் புரந்தவித்தவன்கஞ்சத்தான்
ஏர்கருமுகிலின்வண்ண னியானலேனெளியனந்தோ
சீர்மலர்ப்பதத்தைதயெந்தன் திருமுடிபுனைந்திட்டேனே.

(அரி-வ-ம்.) ப்ரபு இடியிடித்தாற்போலக் கோபமிகுதியாக என்னுடன் சண்டைசெய்யவருவதற்கு நீலகண்டனை சிவனும், கருங்கடல்வண்ணனை மகாவிஷ்ணுவும், பங்கயமலர்வாசனைபிரமனும், யானல்லேன மிகவும் எளியவன் உமது சரணாரவிந்தமிரண்டிற்கும் வந்தனஞ்செய்கின்றேன் கோபங்கொள்ளவேண்டாம்.

௨

பரமபதி துணை.

# திருமுடியுதைக்கிறபாகம்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

வஞ்சகாபாதகா துன்மார்க்கந்தேர் மடையாபேயா
நஞ்சமோருருவதாககாளிலத்துதித்தவீணே
கஞ்சமாமலர்ப்பதத்தைக்கடுகியேவிடடாவுந்தன்
எஞ்சலில்கிரீடந்தன்னையிதோகாலாலுதைத்திட்டேனே.

(விஸ்-வ-ம்.) அடா கொடிய சண்டாளதரோகியிதோ உன தலையிற் சூட்டியிருந்த கிரீடத்தை யென துகாலாலுதைத்துத்தள்ளிவிட்டேன் அப்பாற்போடா.

## அரிச்சந்திரன் சொல் தரு.

இதுவும் என்தலை விதிவசமா என்ற வர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

பல்லவி.

ஐயோவுன்னருளின் சோதனையோ-தேவா
ஐயோவுன்னருளின் சோதனையோ-சிரா
ரணிமுடியை யிழந்தேன்

அநுபல்லவி.

செய்யபொற்பாதா ஜெகப்பிரக்யாதா
சிறியேனென்குற்றஞ் செய்தேன்நாதா-நீதா
சிறியேனென்குற்றஞ் செய்தேன்நாதா-சிரார்
திருமுடியை யிழந்தேன்

சரணங்கள்.

மலைமகள்பாகா மாட்சிசேரகா
மறந்தேனே குருமொழியோகா-ஆகா
மறந்தேனே குருமொழியோகா-சிரார்
மணிமுடியை யிழந்தேன்



கருதுவோர்நேசா காட்சிக்கைலாசா
கர்மவினையோ மதுரேசா-யீசா
கர்மவினையோ மதுரேசா-சிரார்
கவின்முடியை யிழந்தேன்

(அரி-வ-ம்.) ஆ! கருணாகரா, கங்காதரா, கைலைவாசா, கருணைப்ரகாசா, தற்சமையம் இப்பிரபஞ்சத்தின்கண் ஹுள்ள சக்ரவர்த்திகளும் மற்றவரசர்களும் பார்த்தானைக்கும்வண்ணம் எனது நவரத்தின கிரீடத்தை யிழப்பதற்கு என்ன கொடுவினை புரிந்தேன் யாது குற்றஞ் செய்தேன்.

அரசன் விருத்தம்.

மாதவர்புகழுந்தேவா மாட்சியாயென்சிரத்தின்
மீதணிகிரீடந்தன்னை மிதித்தாலதிற்பதித்த
சோதியார்மணிகள்பட்டுத் துன்பமேவினோக்குமந்தோ
சீதளப்பதம்பிடித்துச் சிறியனுனுபசரிப்பேன்.

அரிச்சந்திரன்சொல் தரு

சுந்தரமிருந்தநாதா வென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

பாதநோகுமேநாதா பாவியென்செய்வேன்புநீதா

அநுபல்லவி.

காதகன்முடியிற்பதி சோதிமணிபட்டித்ததி
சோதிமணி பட்டித்ததி (பா)

சரணங்கள்.

பங்கயமலர்ப்பிரமன் பார்வதிபாகப்பரமன்
செங்கண்மால்திகர்நீதா தேவர்கள்புகழும்போதா
தேவர்கள் புகழும்போதா (பா)

படியிலுன்னோர்புகழும் பார்குயர்மகாநுபாவா
கொடியகோபமுண்டாகக் குற்றமென்னசெய்தேன்தேவா
குற்றமென்ன செய்தேன்தேவா (பா)



வரைகள்சூழ்வளவாசா மாதவத்தோர்கள்நேசா
குருதிகட்டிக்கொண்டதோ கொப்புளமிகவானதோ
கொப்புள மிகவானதோ (பா)

(அரி-வ-ம்.) மாட்சிமைதங்கிய இப்பிரபஞ்சத்தின்கண் இகபரமென்பதையுணர்ந்து மாயை யென்பதை நீக்கிய தவநாதா தாங்கள் கொடுஞ்சினமாக அடியேன் சூட்டியிருந்த கிரீடத்தை யுதைத்துத் தள்ளியதால் அதிற் பதித்திருந்த ரத்னங்கள் தங்கள் பதத்திலழுந்தித் திருவடிகள் நோகுமென்பதையுத்தேசித்து எனது அஸ்தத்தாற்பிடித் துபசரிக்கின்றேன் கோபங்கொள்ளவேண்டாம் ப்ரபூ.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

தந்திரமுயாந்தவிந்தாசாலந் தேர்ந்திட்டமூர்க்கா
எந்தனைக்கிஞ்சிற்றேனு மெண்ணிடதாகமெல்லா
நொந்திடச்செய்தநீயின் நோமெனப்பதத்தைப்பற்றி
வந்தனஞ்செய்ததாலே மனக்கிலேசம்போமோடா

(விஸ்-வ-ம்,) அடாகொடியசண்டாளாபாதகா சகிக்கொண்ணாதகாரியங்களைச் செய்துதற்சமயம் ஏதோநல்லவனைப் போலாக எனதுபாதத்தைப் பிடித்துபசரித்து வந்தனஞ்செய்ததினால் நான் கொண்டகோபந் தணியுமெனநினைத்தாயா?

அரசன் விருத்தம்.

கற்றைநயந்திங்கள்சூடுங்கபாலியையனையதேவா
நற்றவர்த்துயர்ந்தகாதாகாவிலமதனையாளுந்
கொற்றவனுனநாயேன்கொடுஞ்சினமடையத்தாமுன்
குற்றங்களென்னசெய்தேன்கூறுவீர்கூறுவீரே.

## அரிச்சந்திரன் சொல்தரு.

நாதன்வரக்காணும மென்றமெட்டு.

இராகம் - தேசிகமாஸ் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

குற்றமென்னசெய்தேன்நாதா கூறவீர்மலர்ப்பாதா

அநுபல்லவி.

நற்றவர்த்துயர்க்கபோதா நானிலத்திற்பிரக்யாதா (கு)

சரணங்கள்.

ஐயையோசீரிந்தத்தினம் அடக்கிடவொண்ணாச்சினம்
மெய்யனையசக்கொண்டிவிடம் மிதித்தீரெந்தன்கிரீடம் (கு)

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா தற்சமயம் தமதுபய நேத்திரமும் வடவாமுகாக்கினி போலாகச்சிவப்பேறக்கடுங் கோபங்கொண்டு அடியேனுடைய திருமுடியைமலர்போன்ற பாதத்தால் மிதித்துத்தள்ளுவதற்கு என்னகுறைவுசெய்தேன் ப்ரபூ யாதொன்றுஞ் செய்யவில்லையே அதன்விபரந் தெரிவிக்கவேண்டும்.

(விஸ்-வ-ம்.) அடாகொடியமூர்க்கா நீயிங்கு எதற்காக வந்தனை?

### அரசன் விருத்தம்.

நாட்டினிற்குடிகளிட்ட நலமிகுபயிர்கடன்னைக்
காட்டின்வாழ்மிருகக்கூட்டங் களிப்புடனழித்ததென்றே
மீட்டுமாயவன்னோர்வந்தே யென்னிடமுறையிட்டார்கள்
வேட்டையாடவேயிங்கு விரைவுடன்வந்தேனையா.

(அரி-வ-ம்.) முனிநாதா எனதுநாட்டினிடமாகக் குடிகளிட்டபயிர்களையெல்லாம் விலங்கினங்கள் வந்தழித்ததென அன்னவர்களென்பால்வந்து முறையிட அதைக்கேட்டயான் அன்னவர்களுக்கு நன்மையைச் செய்யும்பொருட்டு வேட்டையாட விங்குவந்தேனே தவிரவேறில்லை ப்ரபூ.

(விஸ்-வ-ம்.) அடாமூர்க்கா மிருகங்களை யேன்வதைசெய்தாய்.



### அரசன் முன்னால் விருத்தம்.

எந்தவேளையினு மெந்தவர் துயர்கேட்
டிடரினைப் பவன்றனை தேக
மைந்தனே யெனினும் வதைத்திடவொல்கான்
மாக்களின் சுகமே யன்றிச்
சிந்தனை மற்றோர் பொருளினிற் செலுத்தான்
தீமொழி கனவிலும் புகலான்
தந்தைபோற் றாய்போ லெவரையுங்
காக்குந் தன்மைய னேயிறை யன்றோ.

(அரி-வ-ம்.) நாதா அரசர்களுடைய இயல்பாவது குடிகளானவர்கள் எச்சமயமானாலுஞ் சரியேவந்தே துன்பமுற்றோம் ரக்ஷிக்கவேண்டுமெனச் சொல்லும்பக்ஷத்தில் உடனே அன்னோர்க்குத் துன்பமியற்றினவன் நீண்டநாளாக அருந்தவஞ்செய்து பெற்ற அவ்வரசனுடைய ஏகபுத்திரனானாலுஞ் சரி அன்னவனைத் தண்டிப்பதற்கஞ்சாமலும் குடிகள்சுகத்தையு நலத்தையுங் கவனிப்பதைத்தவிர அடாதகாரியங்களிற் சிந்தையைச் செலுத்தாமலும் கடூரமான வார்த்தைகளைக் கனவிலும்புகலாமலும் தந்தைபோலாகவும் தாய்போலாகவும் பிரசைகளையெண்ணி ரக்ஷிக்கவேண்டுமென்றுஞ் சாஸ்திரமாதலால் எனதுநாட்டினிடமாகக் குடிகளிட்டபயிர்களை யழித்து இவ்வனத்திலெய்திய மிருகங்களை வேட்டையாடிச் சங்கரித்தேன் ப்ரபூ.

(விஸ்-வ-ம்.) அடா துஷ்டா மிருகங்களெல்லாம் நாட்டினிடமாக வந்து குடிகளுக்குக் குடிகெடுவித்ததனால் அதனாற்றான் வேட்டையாடிச் சங்கரித்தேனென்று கூறுகின்றனை அதுசரி என்போன்ற தவசிரேஷ்டர்கள் வசிப்பதற்கு யோக்கியமான இவ்வனம் உன்னை யென்னசெய்தது இதனையேன் அழித்தனை?

### அரசன் விருத்தம்.

மண்டலத்துற்றமேலோர் வஞ்சகர்தங்கள்நேசங்
கொண்டுவாழ்வாரேயாகிற் கொற்றவன்றன்னால்ஞான் றுந்
தெண்டனையடைவார்போலச் சீரியமிருகஞ்சார்ந்த
அண்டர்வாழாச்ரமத்தை யழித்தனன்பொறுப்பீர்போற்றி.

(அரி-வ-ம்) தவநாதா இப்பிரபஞ்சத்தி லிடமாக நல்லொழுக்கத்தையடைந்தமேலோர்கள் காமக்குரோத லோபமோகமதமாச்சரியமென்ற கொடிய நடக்கைகளையுடைய வஞ்சகரை நேசஞ்செய்வாராகில் அவ்வஞ்சகர் ஓர் துர்க்கிர்த்தியஞ் செய்யும்போது அரசனுடையுத் தண்டனை யன்னவர்களு மடைவதுபோலாக வெனது குடிகளுக்குத் துடிக்கும்விளைத்த விலங்கினங்களானவை ஆகாயத்தையளாவும்படியாக வளர்ந்தமரங்கள் சூழ்ந்த இவ்வனத்தினிடமாக வந்திருந்ததால் அம்மிருகங்களை வேட்டையாடிச் சங்கரிக்கும் போது இவ்வனம் அழிந்துவிட்டதே தவிர அழிக்கவேண்டுமென அழித்ததல்ல ப்ரபூ.

(விஸ்-வ-ம்) நல்லது மூர்க்கா பன்றியையேன் பாணத்தை விடுத்துக்காயஞ்செய்தாய் அஃதுன்னை யென்னசெய்தது?

அரசன் விருத்தம்.

புகலொணாத்தவத்தின்மிக்க புங்கவா சொல்லக்கேளும்
இகலுடனெற்றைக்கொம்பால் ரதகஜதுரகத்தோடு
தகைமைசேர்சேனை தன்னைச் சணத்தினிற்கொலக்கண்டேகார்
சிலைபைவிகொடுத்த ஸ்திரத்தினாற்சிதைத்தேனின்றே.

(அரி-வ-ம்.) பவத்தைவிலக்குந் தவத்திற்சிறந்த முனிநாதா கவனிக்கவேண்டும் என்னுடைய ரதகஜதுரகபதாதி யென்ற நால்வகைச் சேனைகளையும் அப்பன்றியானது இரண்டு கொம்புகளாலுஞ் சின்னாபின்னப் படுத்திக்கொல்ல அதைக்கண்ட யான் பாலை நீத்திற் பைரவிகொடுத்த அஸ்திரத்தினால் அதுநின்ற இடங்கூடத் தெரியாதபடி கொன்றுவிட்டேன் அப்படியிருக்கத் தாங்கள்காயஞ்செய்தேனென்று சொல்கிறீர்களே ஈதென்ன ஆச்சரியம் ப்ரபூ.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

நன்றியற்றதோர்பாதகா கவின்றிடக்கேளாய்
இன்றுநானனுப்பிய மிருகங்களையெய்தும்
பன்றிக்குந்துயர்விளைத்தனை பட்டவனமழித்தாய்
உன்றனைக்கருதுத்தர்க ளுலகினிலுண்டோ.



(விஸ்-வ-ம்) அடா கொடியமூர்க்கா நானனுப்பிய விலங்கினங்களையெல்லாங்கொன்றதுந் தவிர பன்றியையும் பாணத்தினலெய்து காயப்படுத்தி யாதும் என்போலுற்ற தவசிகளும் வசிப்பதற்கேதுவாயிருந்த இவ்வனத்தையு மழித்துவிட்டாய் இவ்விதக்கொடுஞ் செய்கையையுடைய பாவியாகிய வுன்னைப்போலாக யானுலகத்திலொருவனையும் பார்த்ததில்லை.

அரிச்சந்திரன்சொல் தரு.

சொன்னபேச்செங்கே என்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மன்னிக்கவேண்டும் நாதா
மன்னிக்கவேண் டும்

அநுபல்லவி.

உன்னதத்தவஞ்செய்தேவா ஒப்பிலாமகானுபாவா. (ம)

சரணங்கள்.

ஆவலாயென்னுடைக நம்மாபழித்திட்டாலுந்
தேவரீர்விடுத்ததென்று தெரிந்தாற்றீங்குசெய்யேனின்று. (ம)

(அரி-வ-ம்.) முனிபுங்கவா எனது நாடுநகர்சோலை முதலியயாவையும் மற்றுமெனது சுற்றத்தாரையும் அற்றுப்போகும்படியாக அம்மிருகங்கள் செய்தாலும் தாங்களனுப்பியதென்று தெரியும் விஷயத்தில் அம்மிருகங்களுக்கு யாதொரு துன்பமுஞ் செய்திருக்கமாட்டேன் ஆதலாற் கருணையங்கடலாகிய தாம் நிரவிசாரியாதென்மீதிவ்வளவு கோபங்கொள்ளலாமா.

(விஸ்-வ-ம்.) அடா பாமசண்டாளா அஃதிருக்கட்டும் எனது புத்திரிகளின் சங்கீத சாஹித்ய வேணுகானங்களைச் செவிகுளிரக்கேட்ட நீயவர்கள் விரும்பியவற்றைக் கொடுக்காது சரீரமெல்லாம் இரத்தம் பீறிட்டோடும்படியாக அடித்தேன் துரத்தினை.

அரசன் விருத்தம்.

தவமுனிவரர்களேற்றுஞ் சற்குணநிதியேஅன்னோர்
உவமையில்வேணுகானமு ளுற்றினார்கேட்டுயானுமொன்

குலியனாயழித்தேன்வேண்டாங் குடைகொடுமெனவென்றார்கள்
இவிடம்விட்டேகுமென்றே யிதமுடன் றூரத்தினேனே.

## அரிச்சந்திரன் சொல் தரு.

கடையூரீசாவென்ன செய்குவேனென்ற வர்ணமெட்டு.

இராகம் - ஆனந்தபைரவி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

தவநாதாதயை — செய்குவீர்-நவ
மாகவருள் — பெய்குவீர் (தவ)

இந்தப்பெண்களென் — னிடம்வந்தார்-இசை
யாகநடம்புரிந் — தார் (தவ)

வேண்டுமானபணி — கொடுத்தேன்இது
வேண்டாமெனத் — தடுத்தார் (தவ)

அடுக்காதமொழிகள் — விண்டார்-பா
வடிக்கத்தியக்கங் — கொண்டார் (தவ)

ஐயோமாதர்தம்மக்க — ளென்றே-தூறிக்
தாற்றீங்குசெய் — யேனின்றே (தவ)

(அரி-வ-ம்.) நாதா அம்மாதர்களென்னிடம் வந்து விநோதமான பரதம் வேணுகானஞ் செய்தார்கள் அதற்கு யான் சந்தோஷித்து ஆடையாபரணங்கள் கொடுத்தேன் அதை வேண்டாமென்று யான்கொடுக்கத்தகாத வஸ்துவாகிய பூச்சக்ரக்குடையைக் கேட்டார்கள் அதன் ஞாயத்தை யெடுத்துச் சொன்னேன்பின்னர் காமமீறுது சேரவாருமென்றார்கள் உடனே யான் கோபங்கொண்டு என் முன்னிற்காதபடி தூரத்திவிட்டேன் தமது புத்திரிகளெனத் தெரியும்பக்ஷத்தில் அவ்விதஞ் செய்யமாட்டேன் அக்குற்றத்தை க்ஷமிக்கப் பிரார்த்திக்கின்றேன்.

## விஸ்வாமித்திரர் விருத்தம்.

முன்னூல்.

கழுத்தரிந்திடுவை பிழைவந்ததென்
றழுத்தமாக வுரைத்தனையாதலாற்



பழுத்தநல்லறி வற்றனைப்பற்றிய
வெருக்கமற்றனை முட்டிடக்கூறிடுய்.

(விஸ்-வ-ம்.) அடா துரோகி கழுத்தையறுத்துவிட்டு ஏனென்றுகேட்டால் கைதவறுதலாய்ச் செய்தேனென்பதுபோல மாட்சிமைதங்கிய புத்தியையுடைய எனது புத்திரிகளின் இசைகளைக்கேட்டும் அன்னவர்களை யேன் தூஷணஞ்செய்தாயென்று வினவினால் தெரியாமற் செய்துவிட்டேன் மன்னிக்க வேண்டுமென்று கூறுகின்றாய் ஈதுனக்குத் தகுமா? அன்றியும் வள்ளல்களுக்கழகா?

## அரிச்சந்திரன் விருத்தம்.

முன்னூல்.

மைகுலாவுகண் மாதரைமோதிய
கைகுறைக்கினுங் கண்ணிணைச்சூலினும்
மெய்குறைக்கினும் வேண்டியவாறுநீர்
செய்குவீரிது திண்ணமதாகுமே.

(அரி-வ-ம்.) முனிசிரேஷ்டா அஞ்சனந்தீட்டிய நேத்திரங்களையுடைய தமது பெண்களையடித்த எனது கரத்தையறுத்தாலுஞ் சம்மதம் அன்னவர்களைச் சினத்துப்பார்த்த வெனது கண்களைத் தோண்டினாலுஞ்சரி அல்லது எனது சரீரமெல்லாஞ் சேதித்தாலுஞ்சம்மதம் உம்முடைய மனதுக்கிசைந்த வண்ணம் எதுவேண்டுமோ அதைச் செய்து நான் செய்தகுற்றத்தை மன்னிக்கவேண்டும் பிரபு.

## விஸ்வாமித்திரர்விருத்தம் முன்னூல்.

கொய்துமாக்களைக் கொன்றதம்பன்றியை
யெய்ததுமிசை கேட்டடித்தினமாய்
வைததுமென்றன் மக்களைமணஞ்
செய்திடும்பொருப்பே யின்றுசெம்மலே.

(விஸ்-வ-ம்.) அடா அரசனே நீமிருகங்களை யெல்லாம் கொன்றதும் பன்றியை அம்பாலெய்து துரத்தினதும் எனது புத்திரிகளுடைய இசைகளைக்கேட்டு அவர்கள் விரும்பியவண்ணம் ஒன்று

ங்கொடாமல் தூஷணஞ் செய்ததையும் நீ அந்தப்பெண்களை விவா
கஞ்செய்து கொள்ளும் விஷயத்தில் பொறுத்துக் கொள்ளுவே
னேதவிற இல்லையேல் க்ஷமிக்கத்தக்கதல்ல.

அரசன்விருத்தம் முன்னால்.

நிலத்தினில்யாரு நெறியலசெய்திடின்
விலக்குமியிவை யென்கவின்விளம்பலைன்
புலைக்குலத்தொடு மன்னர்பொருந்துதல்
நலத்ததோமிகு நற்றவநாதனே.

(அரி-வ-ம்.) தவநாதா இவ்வுலகினிடமாக யாதாமொருவர்
நீதிக்குவிரோதமான துர்க்கிர்த்தியங்களைச் செய்வாராகில் அன்ன
வரை யவ்விதஞ் செய்யக்கூடாதென மறுத்துச்சொல்லக்கூடியதாம்
என்முன்னிலையி லிவ்விதமனீதமான வார்த்தைகளைச்சொல்லுவது
நியாயமா அன்றியும் நீசஸ்திரிகளோடு உத்தமக்ஷத்திரியர் சேருவ
தழகாமா ப்ரபூ தாங்களுஞ் சத்திரியரிஷிதானே.

(விஸ்-வ-ம்.) அடா அரசனே என்னவார்த்தை பகர்ந்தனைம
லைகளிலே சஞ்சாரம்செய்யும் வசிஷ்டமுனிவன் சாபத்தால் நீசனா
கிய திருசங்குபுத்திரனை நீ எனதுபுத்திரிகளை விவாகஞ்செய்து
கொள்ளும்விஷயத்தில் தகாதோயென்ன தெரிவிக்கின்றாய்.

அரசன்விருத்தம் முன்னால்

அற்றைஞான்றெம தையன்வசிட்டனாற்
பெற்றசாபப் பெருப்புலைதீர்த்தனை
இற்றைநாளிங்கெனைப் புலையாக்கநீர்
கற்றதென்ன கனவிராணுமாதவா.

(அரி-வ-ம்.) ப்ரபூ எங்களாசாரியராகிய வசிஷ்டரால் முன்
னம்மெனது பிதாவாகிய திருசங்குச்சக்ரவர்த்திக்கேற்பட்ட நீசத்த
த்துவத்தைத்தீர்த்துரெக்ஷித்ததாம் தற்காலம் அடியேனை நீசனுக்க
வெண்ணியது என்ன காரணம் யான் யென்ன குற்றஞ்செய்தேன்,



விஸ்வாமித்திரர்விருத்தம் முன்னால்.

முன்னமுன்றை முழுப்புலைநீக்கின
மின்னநீக்க லைமக்கரிதன்றியாஞ்
சொன்னவாசகங் கேட்டுச்சுடர்முடி
மன்னர்மன்னவென் மக்களைச்சேருவாய்.

(விஸ்-வ-ம்.) கேளாய் அரசர்களுக்கெல்லாம் அரசனே முன்
னம் உனது பிதாவான திருசங்குமகாராஜன் முழுதும் புலையனா
னதைப் போக்கின யான் தற்சமயம் எனது புத்திரிகளைச் சேருவதி
னால் உனக்கு வரும் நீசத்தன்மைத்தை நீக்குதல் அரிதல்ல ஆகை
யால் என்வார்த்தையை மீறாது எனது பெண்களை விவாகஞ் செய்
துகொள்வாய்.

அரசன் வெண்பா.

முன்னால்.

உற்றபெருஞ்சுற்றம் ஒளியாமனைவியுடன்
பற்றியிகவாழ்கப் பசுவின்வால்-பற்றி
நதிகடத்தலன்றியே நாயின்வால்பற்றி
நதிகடத்தலுண்டோ நவில்.

(அரி-வ-ம்.) நாதா பசுவின்வாலைப்பற்றி நதியைக்கடத்தலா
மே தவிர நாயின்வாலைப் பற்றினால் நதியைக்கடக்க முடியாதன்
றோ அதுபோல் இவ்வுலகின்கண் பிறன்மனையை விரும்பாது பசு
வின் தன்மைபோன்ற உத்தமமனைவியுடன் சேர்ந்து வாழ்ந்தால்,
சமுசாரமென்ற ஓர் நதியைக்கடந்து சொர்க்கமென்ற கரை
சேரலாமேயன்றி நாயின் தன்மை பொருந்திய இப்புலைச்சிகளைச்
சேர்ந்தால் பவமென்ற நதியைக்கடந்து முத்தியென்ற கரைகாண
முடியாதல்லவா இது தங்களுக்குத் தெரியாததோ என்னைப் பரி
க்ஷிக்கக்கூடாது ப்ரபூ.

(விஸ்-வ-ம்) அடா அரசனே நீயிப்போன்ற எனது பெண்
களை நீ விவாகஞ்செய்து கொள்ளாத விஷயத்தில் இதோ கொடிய
சாபமிடுகிறேன் பெற்றுக்கொள்வாய்.

(அரி-வ-ம்.) பிரபூ தாங்கள் கொடுக்கிறசாபத்தைப் பெற்றுக்
கொள்ளுகின்றேன் தங்கள் கோபந்தீர்ந்தால் சரி.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

முன்னால்.

அடிமைநற்குலத் தோகையர்தங்களைக்
கடிமணஞ்செயல் நீதென்றகள்வனே
குடிமைசெய்யுங் கொடும்புலையற்குநீ
யடிமையாவை யறிதிசின்னுனினில்.

(விஸ்-வ-ம்.) அடா உடுக்கைப்போன்ற இடையையுடைய என்னுடைய புத்திரிகளை விவாகஞ்செய்து கொள்ளமாட்டேனென்று சொல்லும் திருட்டுப்பயலே நீ சிலநாளினில் மிழிதொழிலைச் செய்யும் புலையனுக்கு அடிமையாகக் கடவது.

அரசன் விருத்தம் முன்னால்.

வாரிகாய்ந்து கொதித்திடில்மாற்றத்தண்
ணீரியாவர்தரு வரந்தீசியிற்
சீரியாயெனை சிமிகச்சீறிடில்
யாரியாஞ்சலென்பவரையனே.

(அரி-வ-ம்.) முனிசிரேஸ்டா சமுத்திரமானது வெப்பங்கொண்டு கொதிப்புடையதாகும் பக்ஷத்தில் அந்த வெப்பத்தை யடக்குவதற்குக் குளிர்ந்த நீரெங்கிருந்து யார் கொண்டு வருவார்கள் அத்தன்மைபோல் மகா தவசிரேஸ்டராகிய தாம் என்னை மிகவுங் கோபித்துச் சாபங்கொடுக்கத் துணிந்தால் பயப்படாதே யென்று யார் சொல்லுவார்கள் அன்றியும் எங்களுக்குத் தாயும் தகப்பனும் ஆதாரமும் தெய்வமும் நீரென்று யெண்ணியிருக்கின்றேம் ப்ரபூ.

விஸ்வாமித்திரர் விருத்தம்

முன்னால்.

அன்னையென்னை யதந்தையென்னையுன்
முன்னைவாழ்வு முதல்வனுமென்னைமற்
றென்னையிப்படி வெல்பவனிச்சமத்
துன்னையல்லது கண்டிலமுன்மையே.



(விஸ்-வ-ம்.) அடா துரோகி என்னைத் தாயுமென்பாய் அருமையான சகோதரனும் என்பாய் முன்னுள்ள ஐசுவரியமும் அந்த ஐசுவரியத்தைக் கொடுத்த தெய்வமும் என்பாய் என்னையிப்படியுயர்த்திச் சொல்லி வெல்லத்தக்கவனீயே இப்படி வெல்லுவதாகிய சாமர்த்தியம் உன்னிடத்திலே கண்டேனே யல்லாமல் வேறே யாரிடத்திலும் நான் மெய்யாகப் பார்த்திலேன்.

அரசன் விருத்தம் முன்னால்

கண்ணைவேண்டினு மீய்குவேன்காக்கின்ற
மண்ணைவேண்டினும் வாகுடனீய்குவன்
பண்ணைவேண்டிய செஞ்சொற்பறைக்குலப்
பெண்ணைவேண்டிலன் பீடுயர்மாதவா.

(அரி-வ-ம்.) முனிசிரேஸ்டா என் உபயநேத்திரங்களைக்கேட்டாலுந் தந்துவிடுவேன் அல்லது யாளுகின்ற நாடுமுழுமையுந் தாம் விரும்பிய பக்ஷத்திலுஞ் செல்வத்துடனே சேர்த்துக்கொடுப்பேன் இஃதன்றி நீசமாதர்களைச் சேரமாட்டேன் ப்ரபூ.

(விஸ்-வ-ம்.) ஆ! ஆ! ஆ! மிகவுஞ்சந்தோஷம் அரசனே நீ ஆசையில்லாமல் உலகமுழுதும் வேண்டினாலுங் கொடுக்கிறேனென்று சொன்னதே போதும் இனிக்கடல்சூழ்ந்த வுலகமெல்லாம் என்னுடையதாயிற்று.

ஷை விருத்தம்.

மநுவுநாடும் வளநகரும்பெருந்
திருவுமீகுவனென்றனைசெவ்வியோய்
தருவனென்ற மொழிதவறுமேலுன்
னாசளிக்கி னமருமென்கோபமே.

(விஸ்-வ-ம்.) மகா செம்மையான குணத்தையுடையவரசனே உன் வசமாக விருக்கின்ற கோசலநாட்டையும் பெரிதான செல்வத்தையும் தருகிறேனென்று சொன்னாய் இப்படித்தருகிறேனென்றுசொன்ன சொற்பொய்யாமல் உன்னுடைய அரசாக்ஷியை எனக்குக் கொடுத்தால் நான் கொண்ட கோபத்தைத் தணித்து விடுவேன்.





(அரி-வ-ம்.) முனிசிரேஷ்டா தமது புத்திரிகளையும் விரும்ப மாட்டேன் யான் சொன்னசொல்லையும் மாறமாட்டேனாகையால் உண்மையாக என்னு நாடுநகரத்தையும் திரவியத் திரட்சியையும் தமக்குக்கொடுத்தேன் ப்ரபூ.

(விஸ்-வ-ம்.) அரசனே நீ வாக்கினாற்சொல்லுவது உசிதமல்ல தாரைவார்த்துக் கொடுப்பாயாக.

## அரிச்சந்திரன் விஸ்வாமித்திரருக்கு

### நாடுநகரம் யாவையுந் தாரைவார்க்கிறபாசம்.

முன்னால் விருத்தம்.

வையமின்னது மாநகர்மின்னது
வெய்யவாசியும் வேழமுமின்னபொற்
செய்யதேர்களுஞ் செல்வமுஞ்சேவிக்குந்
தையலார்களுந் தானையுமின்னவே.

(அரி-வ-ம்.) ப்ரபூ இதோ தாரைவார்த்துவிட்டேன்.

(விஸ்-வ-ம்.) அரசனே தற்சமயம் நீ எனக்குத் தாரைவார்த்ததினால் கோசலைநாடு எனக்குப் பாத்தியமாயிற்றன்றோ ஆகையால் எனக்குச் சொந்தமான அயோத்தியாபுரியிலிருந்து இந்தவுலகத்தையெல்லாம் ஆள்வதற்கு உன்னுடைய அடையாளத்தைக் கொடுப்பாயாக.

(அரி-வ-ம்.) தவநாதா மகா வாழ்வையுடையதான கோசலைநாடும் அயோத்திநகரும் செல்வமும்மந்திரியும் ரதகஜதுரகபதாதியென்ற நான்குவகைச்சேனைகளும் ஊழிகாலத்தளவும் நீரே ஆளக்கடவீர் இதோ கணையாழியைக் கொடுத்துவிட்டேன் ப்ரபூ.

(விஸ்-வ-ம்.) அரசனே கணையாழிகொடுத்தது சரி உன்னுடைய மாலையும் கடகேயூரமும் உடைவாளும் ஆபரணங்களும் கிரீடமும் உன் நாயகியும்பாலனும் மணிந்திருக்கும் ஆபரணங்களும் வீரகெண்டாமணியும் அவிழ்த்துக் கொடுப்பாயாக.

(அரி-வ-ம்.) இதோ தாங்கள் கூறியவை யாவற்றுங் கொடுத்துவிட்டேன் பெற்றுக்கொள்ளுங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அரசனே ஆபரணமுதலிய யாவுங் கொடுத்தது சரி நீயும் உனது பத்தினியும் புத்திரனும் கட்டியிருக்கிற காந்தி பொருந்திய வஸ்திரத்தை அவிழ்த்துக்கொடுப்பாயாக.

அரிச்சந்திரன் வழிபடுகடவுளைநோக்கிப் புலம்பும் வசனம்.

ஆ சிவமே ஈதென்ன வதியாயம் நாங்கள் கட்டியிருக்கிற வஸ்திரங்களையுங் கொடுத்துவிட்டால் இனி யாரிடத்திற்போய் உடுத்திக்கொள்ள வஸ்திரங்கேட்போம்.

(விஸ்-வ-ம்.) அரசனே என் வருத்தமடைகின்றாய் யானுடுத்தியிருக்கிற காவிவஸ்திரத்தை மூன்றுபங்காகக்கிழித்து இதோ கொடுக்கின்றேன் இதை யுடுத்திக்கொண்டு நீயுமுன்பத்தினி புத்திரனுமுடுத்தியிருக்கிற வஸ்திரங்களைக் களைந்துகொடுப்பாய்.

(அரி-வ-ம்.) முனிநாதா இதோ யானெனது பத்தினி புத்திரன் உடுத்தியிருந்த வஸ்திரங்களைக்களைந்து கொடுத்துவிட்டேன் வந்தனஞ்செய்கிறேன் சென்றுவருகிறேன் ப்ரபு.

(விஸ்-வ-ம்) நல்லது செல்வாய்.

(அரி-வ-ம்.) ப்ராணசுந்தரி இனிநா மிங்கிருப்பதில் யென்ன பிரயோசனம் புத்திரனையும் அழைத்துக்கொண்டு எங்கேயாவது செல்வோம் வா.

(சந்-வ-ம்.) அவ்விதமேசெய்வோம் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) அரிச்சந்திரா யிங்குவருவாய்.

(அரி-வ-ம்.) தவநாதா வந்துவிட்டேன் எதற்காக அழைத்தீர்கள்.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

முன்னூல்.

செந்தேனோடுந்தண்பணை சூழுந்திருநாடா
வந்தோனானுமாமுனிவோரும் வளர்வேள்விக்
குந்தேகன்னியிரந்தபசும் பொனுளவெல்லாந்
தந்தேயப்பாலேகுவை யிதோதடைசெய்தேன்,



(விஸ்-வ-ம்.) மகா ருசியைத்தருகிற சிவந்ததேன் பாய்வதாகிய குளிர்ந்தவயல்கள் சூழ்வதான திருநாட்டை யுடைய அரசனே யான் அனேக முனிவர்களுடன்முன்னேவந்து உன்னைக்கண்டு சிலதிரவியம் யாகத்துக்காக வாங்கிவைத்துப் போனேனல்லவா அந்தத்திரவியத்தைத் தற்சமயங் கொடுத்துவிட்டப்பாற்போவாய்,

அரசன் விருத்தம்.

முன்னூல்.

முன்னமுனக்குச்சொன்ன திறத்தின்மொழிமாறி
யன்னதுகைக்கொண்டிங் கிதிதந்தேனல்லேன்யா
னன்னகரோடுபொன்னுள முற்றுநனிதந்தே
னின்னமுமக்குப் பொன்றரவென்பாலிடமுண்டோ.

(அரி-வ-ம்.) முனிநாதா இதென்னவிபரீதம் கவனிக்கவேண்டும் உமக்குமுன்னே சொன்னவகையிலே சொல்மாறி அந்தப் பொருள்களை என் வசமாக்கிக்கொண்டு இப்போதுவேறே பொருள்கள் யானுமக்குத்தரவில்லை அன்றியும் அந்தப்பொருளுடனே மற்றுமுள்ள திரவியங்களையும் அந்தப்பொருளுடனே மற்றுமுள்ள திரவியங்களையும் எனது நாடுநகரத்தையும் உமக்கு அதிகமாகக் கொடுத்திருக்கின்றேன் அவ்விதமிருக்க தற்சமயம் என்னிடத்தில் அத்திரவியத்தைக் கேட்டால் யானெங்கிருந்து கொடுப்பேன் என்னகதியிருக்கிறது ப்ரபு.

விஸ்வாமித்திரர் விருத்தம்.

முன்னூல்.

தாருடனேசெந் தாமரையாள் சேர்தடமார்பா
யாருடனேயிம் மோசமுரைத்தா யறிவில்லா
யூருடனேமுன் கூறியபொன்னு முடனென்றே
நீருடனேநீ பேசியளித்த நெறியுண்டோ.

(விஸ்-வ-ம்.) பிரகாசம் பொருந்தியமாலையுடனே கூடச்செந்தாமரைத்திருவுஞ் சேர்வதான விசாலமான மார்பையுடைய அரி

ச்சந்திராயாருடனே இந்தமோச வார்த்தைபேசுகிறாய் ஓ புத்தியில்லாதவனே உன்னுடைய நாடுநகர முதலியவைகளை யெனக்குத் தாரைவார்க்கும்போது முன்னமே நீ யாகத்துக்காகக் கொடுத்த திரவியத்தையுஞ் சேர்த்துத்தாரை வார்த்ததையே தவிர அதை விலக்கித் தாரைவார்த்தனையா நன்றாயோசித்துப்பார் அன்றியும் சூரியகுலத்துப்பழைய அரசர்களெல்லாம் சொன்னவார்த்தையைத் தப்பமாட்டார்கள் அந்தநிலைமை உன்னிடத்திற் கிஞ்சித்தேனு மில்லைப் போலிருக்கிறதே.

அரசன் விருத்தம்.

முன்னால்.

நித்தனைப்பிர மனையனையராய் நினைவழிந்த
பித்தனைப் பொருள்வினவினை யெங்கியான்பெறுகோ
வித்தனைத்தினத் தீவதென்றியம் புவையெனின்யா
னத்தனைக்குளின் பொருடரவதி யீவாயே.

(அரி-வ-ம்.) மாட்சிமைதங்கிய நித்தியனான சிவபெருமானையும் பிரமனையும் நிகரான தவசிரேஷ்டா உம்முடையகோபத்தால் நினைவுதடுமாறிய பயித்தியகாரனான என்னைப்பொருள் கேட்குநீர் நான் எங்கேபோய்ச் சம்பாதித்துக் கொடுப்பேன் ஆனாலும் இவ்வளவு நாளுக்குள் கொடுவென்று ஒருதவணை கொடுப்பீரானால் நான் அவ்வளவு நாளைக்குள் செலுத்திவிடுகிறேன் ப்ரபூ.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

முன்னால்.

ஊருநாடுநீண் மலைகளுங்கானமு முழன்றே
யாருநேடிடுப் புண்படுவரவதி யாரிடுவர்
சோரமுன்னநீ கூறுமப்பொருடனைச் சொரிந்து
போடாவுனைத்தடுத்தனன் போகலையாமல்.

(விஸ்-வ-ம்.) அடா புத்தியில்லாதவனே நாடுநகர் மலைவன முதலிய விடங்களிலுன்னோடு கூடவலைந்து வழக்குப்பேசித்திரவிய



த்தை வாங்கிவர என்னிடத்தில் ஆளில்லையாகையால் மகாதிருட்டுத்தனமுள்ள நீமுன்னே கொடுப்பதாகச் சம்மதித்துச்சொன்னதிரவியமுழுமையும் தற்சமயமே கொடுத்து அப்பாற் போகக்கடவை இதோ உன்னைத்திரவியம்கொடாமலப்புறம் போகக்கூடாதென்று தடுத்திருக்கிறேன்.

அரசன்விருத்தம் முன்னால்.

இழைத்ததீவினை பொறுத்தனனரசதாவென்னைத்
தழைத்தவன்பொடுதந்தி யருணகன்றிடுங்காலை
யழைத்தநீரெனக்கவதி யிட்டாள்விடிலைய
பிழைத்திலனிதோ பெரும்புகழ்பெருகுவீர்தாயே

(அரி-வ-ம்.) முனிசிரேஷ்டா ப்ரதமத்தில்நீசெய்தகுற்றத்தைப்பொறுத்தருளுகிறேன் உன்னுடையஅரசாக்ஷியைக்கொடுத்துவிடென்றுசொல்லயான் சந்தோஷமாகத் தாரைவார்த்துக் கொடுத்துவிட்டுப்போகும்போது கூப்பிட்டீர் எனக்கொருகெடுவுகொடுத்து ஒருஆளைக்கூட அனுப்பினால் நான்தவறாமற் பொருள்செலுத்திவிடுகிறேன் ஆதலால் என்மேற்பரிபூரண கிருபைசெய்து ஓர்ஆளனுப்பிப் புகழைப்பெறப் பிரார்த்திக்கின்றேன்.

(விஸ்-வ-ம்.) கேளாயரசனே உனதுவார்த்தைக் குட்படுவாயானால் யான்தவணைகொடுக்கிறேன் அதாவது எமகூடபருவதத்திலாவது காசிக்ஷேத்திரத்திலாவது எனக்குப் பொருள் சேகரித்துக் கொடுக்கவேண்டுமேதவிர மற்றுள்ளவிடங்களில் எனக்குப்பொருள்சேகரித்துக் கொடுக்கக்கூடாது என்னதெரிவிக்கின்றாய்?

(அரி-வ-ம்.) சம்மதம் ப்ரபூ.

(விஸ்-வ-ம்.) அப்படியானால் இருபதுநாட் தவணைகொடுத்திருக்கிறேன் அதற்குள் எனக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தைச் சேகரித்துச் செலுத்துவாயாக.

(அரி-வ-ம்.) ப்ரபூ காசிக்ஷேத்திரம்போய்ச் சேருதற்கே நாற்பதுநாட்செல்லுமே.

(விஸ்-வ-ம்.) கேளாயரசனே அப்படியானால் நாற்பத்தெட்டு நாள் த[illegible] கொடுக்கிறேன் அந்தத்தவணைக்குள் நீஎனக்குக்கொடுக்காது[illegible] திலை பிரமாண மென்னசொல்லுகிறாய்.

அரசன்விருத்தம் முன்னால்.

நிற்பிழைத்திடினக்கி யானருகிதியளிக்குஞ்
சொற்பிழைத்திடிற்குஞற வேமெதனிற்சொல்வல்
கற்பிழைத்தநற்சொற் பாதாரத்தைக்கருதி
யிற்பிழைத்தவனுவனின் னிருதிகொடேனே

(அரி-வ-ம்.) முனிசிரேஷ்டா தமக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தை யான் நாற்பத்தெட்டுநாள் தவணைக்குள் செலுத்தாமற் குற்றவாளி யாகும்பக்ஷத்தில் தந்தாரமிருக்கப் பதிவிரதாதர்மம்வழுவாமல் கணவருக்குப் புகழ்வரச்செய்கிற பிறர்தாரத்தையிச்சித் தபாவிக்குச் சமானமாவேன்.

(விஸ்-வ-ம்.) அரசனே மிகவுஞ்சந்தோஷம் ஆனால் இன்னொருவிஷயமிருக்கின்றது அதாவது நானயோத்திக்குச்சென்று அரிச்சந்திரன்நாடுநகரமுழுது மெனக்குத்தாரை வார்த்துவிட்டானென் றசொல்லும் பக்ஷத்திலனது ஏவற்காரர்களெல்லாம் உனக்குயார் இந்தப்பட்டணமுழுவதும் ஆளக்கொடுத்த வர்களென்று கேட்பார்களாகையால் நீ என்னுடனே அயோத்திக்குவந்து அங்குள்ள ஒவ்வொன்றையும் ஒப்பிவித்து அப்பாற் காசிக்குச்செல்வாய்.

(அரி-வ-ம்.) நல்லதுப்ராபூ இதோ இருப்பதான ரதத்தின்மீது தாங்களும் அதோ அணியணியாகநிற்கிற கரிபரிமீது தமது கூட்டத்தார்களும் ஆரோகணித்துக்கொள்ளுங்கள் அயோத்திசெல்வோம்.

(விஸ்-வ-ம்.) அரசனே இதோ ஆரோகணித்துவிட்டோம்.

பொதுவிருத்தம் முன்னால்.

தேரிலேறிமாமுனிசெலச்சேனை பின்செல்லப்
போரில்வீரனுந்தேவியும் புதல்வனுநடுவே
பாரில்மேனடந்தடிபொரு தடல்பனைபனைக்க
வேரிவாவிவிட்டயோத்தியை நோக்கியேவிரைந்தனர்.



# அரிச்சந்திரன் விஸ்வாமித்திரரை நகரத்துக்கு அழைத்து வருகிறபாகம்.

## அரிச்சந்திரன் சொல்தரு.

இப்பவனம்வரவொண்ணுதே யென்றமெட்டு.

இராகம் - காவேரி - தாளம் - ஆதி.

பல்லவி.

நாதனே வருவீரென்னுடன் தமதுநகர்க்கே

அநுபல்லவி.

பாதிமதிகங்கையணி பரமனைநிகர்தேவா
மாதவமேபுரிவதில் மாட்சிசேர்மகானுபாவா (நா)

சரணங்கள்.

காலமொருமூன் றுணர்ந்த கர்த்தனேயுயர்புண்யா
சீலமிகுஞ்சேனையுடன் சிந்தையமிழ்வாகக்கண்யா (நா)

கந்தங்கமழ்கின்றவிந்தக் கானகந்தனைக்கடந்து
விந்தையதானதேரினின் மீதிலேறியேயுகந்து (நா)

அடியேன்செய்தபிழைக ளனைத்துமின்றேசமித்துப்
படியுளோர்புகழ்ந்திடப் பாங்குடனேசீக்கிரத்தில். (நா)

(அரி-வ-ம்.) ப்ராபூ இதோநகரத்துக்கு வந்துசேர்ந்தோம்.

ரதத்தில் அரசனையன்றிமுனிவர் வீற்றிருப்பதைப்பார்த்து
ஜனங்கள்வருந்தும் பொதுவிருத்தம்.

முன்னால்.

இரதமேன்முனியேறிய தனிதமோவிதமோ
சாதமோவெனுமையத்தார் வந்தவன்சார்ந்தார்
விரதமில்லவகைவிளைந்த வாரேதெனமெலிந்து
கரதலங்களான்முகத் தறைந்தழுதனர்கதறி.

(அரி-வ-ம்.) ப்ராபூ ரதத்தைவிட்டிறங்குங்கள் அரண்மனைக்குட்செல்லலாம்.

(விஸ்-வ-ம்.) நல்லதரசே.





# அரிச்சந்திரன் விஸ்வாமித்திரருக்கு நகரையொப்புவிக்கிற பாகம்.

## அரசன்தரு முன்னூல்.

இராகம் - சஹானா - தாளம் - சாப்பு.

பல்லவி.

ஆண்டனுபவித்துக்கொள்வீர் ஓமுனிநாதா
ஆண்டனுபவித்துக்கொள் வீர்.

அநுபல்லவி.

ஆண்டமுன்னிருபத்தே பூசர்களதன்மீது
அடியேன்சம்பாதித்த வரும்பொருள்ளுறையிது (ஆ)

சரணம்.

மாடமாளிகைசித்ர மண்டபமகச்சாலை
மடங்கள்மஞ்சனச்சாலை நடஞ்செய்நாடகசாலை
ஆடரங்குகள்மணி மேடைகளோடுதாவும்
அன்னசாலைகளும்போ சனச்சாலைகள்யாவும் (ஆ)

சந்ததமுஞ்சிவபூ சனைசெயுமறையிது
சாரும்பொற்பணவளஞ் சேருநல்லறையிது
விந்தைநவரத்னங்கள் விளங்கிடுமறையிது
வெள்ளிக்காசறையது பள்ளிகொள்ளறையிது (ஆ)

ஆனைமுதலுள்ளதாம் அவ்வங்களுஞ்சிறந்த
அஸ்த்ரங்களுடன்பல சஸ்திரங்களும்நிறைந்த
சேனைவகையும்பரி சனத்தொகையொடுமற்றும்
தேருங்கொடிகுடைகள் சேருமிவைகள்முற்றும். (ஆ)

## அரிச்சந்திரன் விஸ்வாமித்திரரை சிம்மாசனத்தின் வீற்றிருக்கச்சொல்லும்விருத்தம்.

மாதவமுனிநாதனேவழுத்திடக்கேண்மின்
காதலாகவிங்குளதெலாங்காட்டியொப்புவித்தேன்
ஆதலாலிந்தவரியணைமீதினிலிருந்து
மேதினிதனையாளுவீர் விந்தையாய்த்தானே,



(அரி-வ-ம்) தவநாதா இவ்வரண்மனைக்குட்புகுந்து தங்களுக் கொவ்வொன்றையுங் காண்பித்தொப்புவித்துவிட்டேன் இதுதான் யான் வீற்றிருந்தரசுபுரியுஞ் சிம்மாசனம் இதிலெழுந்தருளியுலகத் தையாளுங்கள் ப்ரபு.

(விஸ்-வ-ம்.) நல்லதரசனே இதோ வீற்றிருக்கின்றேன்.

(அரி-வ-ம்.) முனிசிரேஷ்டா அனேக வந்தனம் தற்சமயம் இச்சிம்மாசனத்தி னிடமாக ஆரோகணித் திருப்பது போலவே என்றைக்கும் இதிலிருந்து இச்செங்கோலைச் செங்கையிற்றரித்து இந்த அயோத்தியா புரியையும் இதற்குள் ளடங்கிய ராஜ்யங்களை யும் அரசுபுரியப் பிரார்த்திக்கிறேன் யான் காசிமாநகருக்குச் செல் கின்றேன் வருதிகொடுப்பீராக.

(பொ து-வ-ம்) அரிச்சந்திரன் விஸ்வாமித்திரனை சிம்மாசனத் திருத்தி வந்தன வழிபாடுகள் செய்யும் விதத்தைக் கண்ட நகரின் ஜனங்களும் மந்திரி பிரதானிகளும் சுற்றத்தார்களும் புலம்பும் விதங்காண்க.

---

## நகரின்ஜனங்கள் தரு.

நாதன்வரக்காணேனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோ நாமென்ன செய்வோம்
வையகத் தெவ்விதம் உய்வோம். (ஐ)

அநுபல்லவி

தையல் பாகன் சோதனையோ
வெய்ய தோர் முன்வினையோ. (ஐ)

சரணம்.

முனிவராச னிடம் மோசமாகவே நாட்டைக்
கனிவுடனே பரித்துக்கையினிற் கொடுத்தானேட்டை. (ஐ)

தருமமே யோருருவாய் தானிவந்தமன் முன்னோர்
கருமனினைப் பயனோ காசினியிழக்கலானார். (ஐ)

அரசன் அமைச்சர் குடிபடை முதலியவர்களைத்
தேற்றும் விருத்தம் முன்னால்.

எவர்க்கு நல்லவர் திரிபுரமெரியெழச் சிரித்த
சிவர்க்கு நல்லவர் செங்கண்மாலுக்கு நான்முகத்த
னவர்க்கு நல்லவ ரமரர்க்கு நல்லவராவ
ரிவர்க்குநல்லவ ரெனக்குநல் லவர்களே யென்றும்.

ஓ அமைச்சர்களே குடிபடைகளே சுற்றத்தார்களே எனது விதிவசத்தால் இம்முனிவருக்கு நாட்டைக் கொடுத்துக் கடன் தீர்ப்பதற்காகக் காசிக்குச்செல்கின்றேன் என் வருந்துகின்றீர்கள் ஆகையால் யான் சொல்வதைக் கவனியுங்கள் அதாவது இந்த மஹாமுனிவரோ எல்லாருக்கும் நல்லவராய்ச்சிறந்தவர் அன்றியுந் திரிபுர தகனமாகும்படி நெருப்புத்தோன்றச் சிரித்த சிவபெருமானிலுஞ் சிறந்தவர் செங்கண்மாலான விஷ்ணுவினிலுஞ் சிறந்தவர் சதுர்முகனான பிரம்மாவினுஞ் சிறந்தவர் விண்ணுலகவாசிகளான தேவர்களினுஞ் சிறந்தவராதலால் நீங்கள் இம்முனிவருக்கு நல்லவர்களாய் நடக்கும் பக்ஷத்தில் எனக்கு நல்லவராவீர்கள் இதுமுதற்கொண்டு இவருடையவார்த்தையை மீறாது கேட்டு நடந்து சுகமாக வாழ்ந்திருங்கள்.

அமைச்சர் குடிபடைகள் வசனம்.

இராஜசேகரா தங்களுத்தரவுமீறி எப்பவும்நடக்கமாட்டோம் அன்றியும் தங்களுக்கிவ்விதி வர நாங்கள் என்னபாபம் செய்தோமோ அறிகிலம்.

விஸ்வாமித்திரன் தனக்குள் ஆலோசிக்கும் வசனம்.

ஆ! ஆ! ஆ! இவ்வரசனுக்கு என்னதயை, என்ன பொறுமை, என்ன ஒழுக்கம், தருமசொரூபியாக வல்லவோ இவ்வுலகத்தின் கண் அவதரித்திருக்கின்றான் இவன் தன்மை தெரியாதல்லவோ நமதற்பக் குணத்தினால் புத்தியில்லாமல் இந்திரன் சபையில் சிந்தித்துளறி விட்டோம் ஆனாலுமென்ன இன்னொருபாயஞ் செய்யலாம்.

(விஸ்-வ-ம்.) அரசனே இதோ உனதிருகையையும் பிடித்தேன் யான் சொல்வதைக் கவனிப்பாயாக எனக்கு நீ கொடுக்க



வேண்டிய செம்பொன்னையும் நான் விட்டுவிடுகிறேன் எனது புத்திரிகளைக் கலியாணஞ்செய்து கொண்டு சந்தோஷமாக இந்தப்பட்டணத்திலேயே வீற்றிருந் தரசாக்ஷி செய்வாய்.

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

சுவையுணவு தீனிருக்க மலந்தேடி
யோடுகின்ற சுணங்கன் போலும்
குவையதனிற் கிடாதுநல் விடநீங்கித்
திரிகின்ற கோகு போலும்
நவைதீர்தண் ணதிநீ ரருந்தாதங்
கணநீரை நாடல் போலுஞ்
சிவையனைய காந்தையரை வெறுத்தசடர்
வேசையரைச் சேர்வர் மாதோ.

(அரி-வ-ம்) தவநாதா தங்களுபயபங்கயப் பதத்தையும் எனதிருகரங்களாலும் பற்றிக்கொண்டேன் யான் சொல்வதைக் கவனிப்பீர்களாக அதாவது கைப்பு, தித்திப்பு, புளிப்பு, உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு என்ற அறுசுவைப் பதார்த்தங்களுடன் உணவிருந்தபோதிலும் அவ்வுணவைப் புசிக்காது மலத்தை விரும்பியோடுகின்ற நாயைப்போலும் நவரத்தினங்களாலும் பளிங்கினாலும் கட்டப்பட்ட மாளிகையினிடமாகக் கொண்டுபோய் நிறுத்தினாலும் அதனை வெறுத்துக் குப்பைமேட்டைத் தேடியோடுங் கழுதைபோலும் கங்காதீர்த்தம் பன்னீருக்குச் சமானமாகத் தேற்றும் தண்ணீர்முதலியவைகளை அருந்தும்படி செய்தாலும் அதை அருந்தாது ஜலதாரைநீரை விரும்பியோடுகின்றதாராககளைப் போலும் தான் அக்கினிசாக்ஷியாக விவாகஞ்செய்த மனையாளை விட்டு மகா அசடர்கள்தான் வேறேமாதர்களைச் சேர்வார்களே தவிர உத்தமக்ஷத்திரியனாகிய யான் அவ்விதஞ்செய்யத்துணியேன் ஆகையால் உமது கடன்தொகையைப் பெற்றுக்கொள்ள ஓர் ஆளை யென்னுடன் சீக்கிரத்தில் அனுப்பும் யான் காசிக்குச்செல்கிறேன்.

(விஸ்-வ-ம்.) அப்படியாயினுஞ்சரி நீ தற்சமயமே இந்நகரத்தைவிட்டு வெளியேபோய்விடு நாளையத்தினம் ஆளனுப்புகிறேன்.

குழ்வினைகாண்டம் சம்பூர்ணம்.



உ

பரமபதிதுணை.

# நகர்நீங்கியகாண்டம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

சூரனைச்சந் திரனைவென்ற திருமுகப்பொற்
கொடியேகம் புவியா வற்றும்
ஆரணந்தேர் முனிக்களித்து மன்னவர்க்கே
கடனுக்கு ளாளா னேமால்
காரணமாக் கங்கையணி சிவபெருமா
னருளிதுவோ கடன்றீர் வண்ணம்
தோரணவா யிலைக்கடந்து பாலனுடன்
காசிவாழி தொடர்வோம் வாராய்.

அரிச்சந்திரன்சொல் தரு.

கானகத்தில்நானலைந்து என்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

இந்தவிதிக்கென்னசெய்வோம் எந்தவிதநாமுய்வோம்

அநுபல்லவி.

சந்த்ரமயமன்னன்செய்த தவத்தாற்றரணிமீது
வந்தவதரித்தவேந்தன் மங்கையேநாமும்போது (இ)

சரணங்கள்.

அஷ்டலெட்சுமியின் நிலங்கும் அஷ்டகண்டங்களுமிழந்தோம்
மட்டிலாப்புகழைப்பெற்ற மாகோசலைநாடிழந்தோம் (இ)

ஆழிசூழலகோரேற்றும் அய்யோத்திநகரிழந்தோம்
வாழியாகநாமுன்றந்த மாளிகைதனையிழந்தோம் (இ)

திக்குவிஜயம்வலித்தாய்ச் செய்தணிந்ததாரிழந்தோம்
முக்கண்ணன்கணேசன்குகன் முகுந்தன்கோயிலிழந்தோம் (இ)

நால்வகைச்சேனையிழந்தோம் ரத்னப்பணிகளிழந்தோம்
எல்லையாய்மக்களைமந்த இருநிதிமந்திரியிழந்தோம் (இ)

வழிவழியாகவந்த மணிமுடி குடையிழந்தோம்
பழிமொழிசொல்லாமல்நாம் பாராண்டசெங்கோலிழந்தோம் (இ)

(அரி-வ-ம்.) அடியே என் கண்ணாட்டி நமது நாடு, நகர் குடிபடை செங்கோல் முதலிய யாவையுமிழந்து அடுத்ததேசத்துக்குச் செல்லப் பிரயாணமாகினோம் இந்தக் கொடியவினைக்கென்ன செய்வோம்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

என்னசெய்குவோம் பெண்ணே யேதுசெய்குவோம்
உன்னதாரன்றுடிழந்து உருகலானோமே
மனந் சருகலானோமே (எ)

சிந்தைவாடுதே எந்தன் தேகஞ்சோருதே
இந்தவிதம்வந்ததறியேன் ஏக்கெழில்மானே
நாம் பூஞ்செழுந்தேனே (எ)

தேன்போல்மொழியாய் எழிற் சேல்நிகர்விழியாய்
வான்மதியணியீசன்செய் வன்மையீதாமோ
இது சும்மாவும்போமோ (எ)

புவனமாண்டோமே மகா புகழைப்பூண்டோமே
கவலையாகிநாம்வருந்தக் காலகெதியோ
விதிதான்செய்த சதியோ (எ)

அறவழிநாமே பெண்ணே அறமேசெய்தோமே
வறியும்பழந்துணியு தேதுவந்ததறிகிலேன்
இதைச்சிந்தை தெரிகிலேன் (எ)

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நாம் செங்கோல் தவறவில்லை அன்றியும் தருமஞ்செய்ய வழுவவில்லை அவ்விதமிருக்க நாம் நகரமனைத்தையுமிழந்து மீண்டும் கடனுக்குட்பட்டு இந்த நாற்றப்பழந்துணியையுடுத்திக்கொண்டு ஆரண்யம்செல்வதற்கென்ன காரணம்?



(சந்-வ-ம்.) கண்ணாளா (கடப்பாரெவரோ கடுவினையை) உலகத்தின்கண் கொடிதான ஊழ்வினையை யாவராற் கடக்க முடியும் நாம் முன் ஜென்மத்தில் என்ன கொடுவினை புரிந்தோமோ நாடு நகர் யாவையுமிழந்து ஆரண்யம் செல்கின்றோம இதற்கு வருந்துவதினால் என்னபலன்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

ரஞ்சிதமேநடந்து வாராயென்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஏகம்.

பல்லவி.

கண்மணியே காசிசெல்வோம்

அநுபல்லவி:

விணவார்வதியே வியன்சந்த்ரவதியே
தண்பங்கயமங்கையே சற்குணமார்நங்கையே (கண்)

சரணங்கள்.

அன்னமென்னடையாய் அங்கொடியிடையாய்
உன்னிடிற்பயனென்ன உறுதியதாகவே (கண்)

அயில்நிகர்விழியாய் அற்புதவிழியாய்
தயிரியம்விடாமற்றேவ தாசனுடன்வாராயென் (கண்)

கண்ணாகன்ஞாலங் காவல்பூண்டிக்கோலம்
பெண்ணாசேகொள்ளமுப் பிறப்பிலென்செய்தோமோ (கண்)

(அரி-வ-ம்.) கண்மணிவிசனமடைவதினாற் பயனில்லை இதோ தோன்றுகிற பாதைவழியே நாம் காசிக்ஷேத்திரஞ் செல்வோம்.

(சந்-வ-ம்.) நல்லது ப்ரபு.

துடிகள்வருந்தும் பொதுவிருத்தம்.

தொடைதுறந்து முடி-துறந்து பணிதுறந்து
துடிமுரசந்துறந்து தாமந்
குடைதுறந்து வெண்கவரிக் குழாந்துறந்து
கரிபரிதேர்க் குலந் துறந்து

கடைதிறந்து மருசனைந்த காவலன் றன்
றிருமுகத்தைக் கண்டோ ரெல்லாம்
அடையமன மழிந்துருகி யவரவரே
முகத்திலறைந் தழுவ தானார்

அரிச்சந்திரன் விருத்தம்.

கங்கையோடருகுசூடிக் கைலயங்கிரிவாழீசா
மங்கையோர்பாகாவுந்தன் மலரடிமறவாநாயேன்
அங்கண்ஞாலத்தைத்தோற்று மருங்கடனுக்குள்ளா[illegible]
பொங்கமாங்காசிசெல்லப் புன்மையே[illegible]டனே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

இதற்கோ நீயுமென்னை என்றவர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| சிவசிவாவுந்தன்பாதஞ் | சேவித்தபலனிதோ |
| செங்கோலிழந்துமகன் | மங்கையுடன்காசிக்கின்று |
| செல்கின்றேன்செல்கின்றேன் | செல்கின்றேன்செல்கின்றேன் ( |
| அடுத்தோர்களைக்கெடுத்தேனோ | அனியாயஞ்செய்தேனோ |
| அருங்கடனுக்குள்ளானேன் | பெருந்துயர்க்கெல்லைகாணேன் |
| ஆண்டருள் ஆண்டருள் | ஆண்டருள் ஆண்டருள் (சி) |
| மன்னர்களும்மந்திரிகளும் | நன்னயஞ்சேர்குடிகளும் |
| என்னைவளைந்துகொண்டே | பின்னலடையப்பாவம் |
| என்செய்தேன்-என்செய்தேன் | என்செய்தேன்-என்செய்தேன் () |
| ஆலயத்தையிடித்தேனோ | ஆசான்மொழிமறந்தேனோ |
| ஐயனேநகர்துறந்து | வெய்யபரதேசிபோல |
| ஆகினேன்-ஆகினேன் | ஆகினேன்-ஆகினேன். (௪) |

(அரி-வ-ம்.) ஆ ஜெகரெக்ஷகா என்னை யிக்கோலத்துக் குள்ளாக்கலாமா உனது பாதாரவிந்தத்தைச்சதாசிந்திப்பதில்தடைசெய்யவில்லையே, அப்படிக்கிருக்க தற்சமயம் நாடு நகர் யாவற்றையுமிழந்து ஒருவருந் தரிக்கக்கூடாத பழந்துணியை யானும்



எனது பத்தினியும் பாலகன் தேவதாசனும் அணிந்து பாதசாரியாக காசிநகர்க்கேக என்ன குறைவு செய்தேன்.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நாம் அயோத்தியைக்கடந்து இதோ சாயுநதிக்கரை வந்தடைந்தோம் சூரியனுமேற்றிசையை யடையுஞ் சமயமாயிருக்கிறது ஆகையால் அதோ தோன்றுகிற சோலைக்குட் பிரவேசித்து இன்றிரவு தங்கியிருந்து காலையிலெழுந்து காசிமாநக ரத்துக்குச் செல்வோமா.

([illegible]-வ-ம்.) நல்லது ப்ரபூ.

பொது விருத்தம்.

அக்காலத் தமைச்சரெல்லா மடல்வேந்த
னடிபோற்றி யரசே நீமீண்
டெக்கால மெழுந்தருள்வ தென்றுரைக்க
வாங்கவரை யிருக ணோக்கி
முக்காலங் களுமுணரு முனிவருக்கின்
றியானளித்த மூதூர் தன்னில்
எக்கால முமவருவ தில்லையென்று
னமைச்சரெல்லா மோங்கி வீழ்ந்தார்

சிற்றரசர்கள் அரிச்சந்திரனிடஞ் சொல்லும்வசனம்.

பூபாலகா வஞ்சனையே ஒருருவாயுதித்த முனிவனிடம் கோசலநாட்டைத் தாரைவார்த்து எங்களை அன்னவன் செங்கோற்குள்ளாக்கித் தாங்கள் காசிக்ஷேத்திரத்துக்குச் செல்வது சரியல்ல இதோ அந்த முனிவனுடைய சடையைப்பற்றி யிழுத்தும் கால்களைப்பற்றி யிழுத்தும் மற்றும் அன்னவன் மரவுரியை மறைத்து உடுத்திருக்கிற உடையைப் பற்றி யிழுத்தும் க்ஷணத்துக்குள்ளே காட்டுக்குத் துறத்திவிடுகிறோம் தாம் நகரத்துக் கெழுந்தருளும் அனேககோடி வந்தனஞ்செய்கின்றோம்.

(அரி-வ-ம்.) ஆ! ஆ! அரசர்களே என்னவார்த்தை பகர்ந்தீர்கள் ஐயய்யோ இதென்னபாவம் இதோ எனது இரண்டு காதுகளையும் மூடிக்கொண்டேன் என்குடி கெட்டாலும் என் உயிர் போனாலும் தங்கள்வார்த்தைக் கிணங்கேன் நகரத்துக் கேகுங்கள்.

பொது வசனம்.

இவ்விதம் சிற்றரசர்களைப் பார்த்து அரசன் கூறியவார்த்தைகளைச் சோலைக்குள் ஒழிந்திருந்த விஸ்வாமித்திரர் கேட்டு அரசனிடம் வருகிறவிதங் காண்க.

விஸ்வாமித்திரன் வருகிற தரு. ௧

தாண்டவசித்ய ஹரியென்ற வர்ணமெட்டு.

இராகம் - கல்யாணி - தாளம் - ஆதி.

பல்லவி.

வந்தேன்விரைவிலிதோ கோசிகமுனி

அநுபல்லவி.

அந்தரம்வாழும் இந்திரன்முதலோர்யாரும்
விந்தையதாய்ப்பணி கோசிகமுனி. (வ)

சரணம்.

திருச்சங்குராஜனுக்கு அருமையந்தரசொர்க்கம்
துரிதமுடன்கொடுத்த கோசிகமுனி. (வ)

(அரி-வ-ம்,) தவசிரேஷ்டா வந்தனஞ்செய்கின்றேன்.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ வேடர்களாலே மிருகங்களனைத்தையுங் கொன்றதுந்தவிர யானையனுப்பிய பன்றியையும் எய்துகாயப்படுத்தி எனது புத்திரிகளுடைய பாடல்களைக் கேட்டு அன்னவர்கள் வேண்டியவற்றைக் கொடாது தூஷணமாகப்பேசியடித்துத் துரத்திவிட்டாய் அஃதிருக்கட்டும் நீயெனக்குக் கொடுத்த ராஜ்யத்தை என்னிடத்தில் பெற்றுக்கொள்வதற்கு என்ன சொல்கின்றாய்.

(அரி-வ-ம்.) தவநாதா சிறியேன் செய்தகுற்றமுழுதும் நீர் பொறுத்தருளல் வேண்டும் அப்படிப் பொறுத்தருள் செய்யாவிட்டால் உம்முடைய பொறுமைதான் என்ன பயனைத்தரும்? உம்முடைய நீதிதான் என்னபயனைத்தரும் உம்முடைய அறிவுதான் என்ன பயனைத்தரும்? இனி நீர் என்னைக்கொல்கிறதாயிருந்தாலும் என்னைமுழுதும் வெறுத்து விடுகிறதாயிருந்தாலும் உமக்குக் கொடுத்த என்னரசாட்சியை ஒருகாலத்தும்திரும்பவாங்கேன்.



(விஸ்-வ-ம்.) நல்லது அரிச்சந்திரா நீசெய்தகுற்றம் யாவும் பொறுத்துக் கொண்டேன் யான்யாகஞ் செய்வதற்காக நின்னிடத்தில் வாங்கி வைத்துப்போன திரவியத்தைக் கொடுப்பாயோ கொடுக்கமாட்டாயோ?

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

உன்னுடனே யுரைத்தபொருளனைக்கடியே
னுகந்தளித்த வுரிமைச்செல்வம்
தன்னுடனே போனதென வுணர்ந்தேனை
யினுமுனிவாற் றருவலென்றே
நின்னுடனே யானுரைத்த சபதமினி
மாறுவனோ நீயாள்விட்டாற்
பொன்னுடனே மகிழ்ந்தீவேன் பூதலமெ
லாம்புகழும் புனிதரேறே.

(அரி-வ-ம்.) முனிசிரேஸ்டா நான் தமக்குக் கொடுக்கிறேனென்றுசொன்ன திரவியமனைத்தும் உமக்கு அடியேன் சந்தோஷித்துக் கொடுத்த எனக்குச் சொந்தமான நாடுநகரத்துடனே போயினவென்றெண்ணினேன் ஆனாலும்தமது கோபத்துக்கஞ்சித்தருகிறேனென்று சொன்ன சபதவார்த்தைக்கி மாறுவேனென்றுநினைக்கிறீரா? ஒருபோதும் மாறமாட்டேன் ஓர் ஆள்என்னுடன் அனுப்பினால் காசிசென்றவுடன் கொடுத்தனுப்புகிறேன்.

(விஸ்-வ-ம்.) அப்படியா மிகவுஞ்சந்தோஷம் அரிச்சந்த்ரா உன்மனோ பீஷ்டப்படி இதோ ஆளனுப்புகிறேன் அன்னவனை மரியாதையாகவழைத்துக் கொண்டுபோய் நமதுபொருளைச் சீவ்ரக் கொடுத்தனுப்புவாயாக.

(அரி-வ-ம்.) உத்தரவுபோலக் கொடுத்தனுப்புகிறேன் ப்ரபு.

விஸ்வாமித்திரர் சுக்கிரபகவானைத் தன்னிடம்வரவழைத்துப் வசனம்.

ஆ! மகா பராக்கிரமமுடைய அசுரர்கட்கெல்லாங் குருவாகிய சுக்கிரபகவானே யெனக்குதவி செய்யும்பொருட்டு இங்ஙனம் பிரசன்னமாக விரும்புகிறேன்.

(சுக்கிரன்-வ-ம.) அநேகவந்தனம் முனிசிரேஷ்டரே அழைத்தகாரணம் யாது.

விஸ்வாமித்திரர் சுக்கிரனிடஞ் சொல்லும் வசனம்.

கேளும் சுக்கிரபகவானே யான் இந்திரன் சமுகத்தில் அரிச்சந்திரனைப் பொய்யனென்று ரூபிக்கிறேனென வசிட்டனிடஞ் சபதங்கூறியது தமக்குத் தெரிந்த விஷயமே அவ்விஷயமாய் அரிச்சந்திரனிடம் வந்து தந்திரமாக சர்வசம்பாவற்றையும் கவர்ந்து நீங்கவிரமீண்டும் எனக்குக்கடன் காரனுக்கி அக்கடனைத் தீர்க்கும் பொருட்டு அன்னவனைப் பத்தினி புத்திரனுடன் காசிநகர்செல்ல நியமித்திருக்கின்றேன் ஆகையால் நீரும் அன்னவனுடன் காசிமாநகரஞ்சென்று மதயானையின்மீது ஓர் பராக்கிரமமுள்ள புருடனேறிக் கவண்கல்லெறிந்தால் அதுசெல்லுமளவுள்ள திரவியமெவ்வளவோ அவ்வளவு கொடுக்கும் பக்ஷத்தில் பெற்றுக்கொண்டு தாம்சென்ற தற்குள்ள கூலிப்பொருளும் வாங்கிவந்து சேருவீர் அன்றியும் அன்னவன் ஆரண்யத்திற் செல்லும்போது மிகுந்த பசியால் இலைகள் முதலானவை தேடினல் எனக்கு நல்ல சோறுவேண்டுமெனச் சொல்லும் அப்படியே கொடுத்தாலும் என் வயிற்றுக்குப்போதாது ஆதலால் வேண்டாமெனக்கூறும் ஏதாவது சோறுகிடைத்து அன்னவன் புசிக்கும்போது அச்சமயமே எனக்குத்திரவியங் கொடுக்குமுன்பு நீ சாப்பிடக்கூடாதென்று தடுத்துவிடும் மற்றும் அரிச்சந்திரா? விஸ்வாமித்திரருக்குக் கொடுக்கிறேனென்று நீசொன்ன சொற்றவறி கெடுக்க மாட்டேனென்று சொல்லுவாயானல் உன்னரசாக்ஷியை யானிதோ வாங்கித்தருகிறேனென்று மொழியும் அதற்கவன் சம்மதித்தானேயானல் உடனே நம்மிடங்கூட்டிக்கொண்டு வந்து சேரும் அதுபோதும் இவ்வளவு உதவி எனக்குத்தாம் கட்டாயஞ் செய்யவேண்டும் ஏதோவகை தெரியாது அகப்பட்டுக் கொண்டேன் என்ன தெரிவிக்கின்றீர்?

(சுக்-வ-ம்.) நல்லது முனிபுங்கவரே தாம் சொல்லியவண்ணமே எவ்வளவுங் குறையாது முடித்துவருகின்றேன் அவ்வரிச்சந்திரன் எங்கிருக்கின்றான்.

(விஸ்-வ-ம்.) அதோபாரும் சரயுநதிக்கரையில் வீற்றிருக்கின்றான்.



(சுக்-வ-ம்.) முனிபுங்கவரே கண்டுகொ ...ன்றேன்.

(விஸ்-வ-ம்.) நல்லது சென்றுவாரும் சுக்.

அரிச்சந்திரன் சொல்விருத்தம்.

மாதர்கட்கரசேயின்று வளநகர்நாடிழந்து
மேதினிவடிவமாறிச் சோறுஞ்சரயுநதிவந்தோம்
காதிபுத்திராதானஞ்சேர் கடன்றுகைபெறவனுப்ப
ஆதரம்பக்கம்வந்து தோனவுங்காணுதென்னே.

அரிச்சந்திரன் சொல்தரு.

கொண்டல்வண்ணு கோபாலாகண்பாரென்ற வர்ணமெட்டு.

இராகம் - பியாகு - தாளம் - ஆதி.

பல்லவி.

இன்னந்தூதர் வாக்காணுமே (இ)

அனுபல்லவி.

மன்னன்மதிதயன்பெண்ணே மாசிலாவெனதுகண்ணே
என்னகாரணமோ தெரியேன் (இ)

சரணங்கள்.

அறநெறிதுறந்தேமோ அரன்பதமறந்தோமோ
றவோர்போல வீங்குவந்தோம் (இ)
தொந்தரவுசெய்வாரோ தடுக்காய்நமைவைவாரோ
சிந்தைமிகத் தியங்குறதே (இ)
கடன்றுகையைப்பெறவே கௌசிகர்மகிழுறவே
திடமாகக் காசிசெல்லவே (இ)

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நாம் சொல்லுதற்கரிதான நல்வளமிகுந்த கோசலநாட்டைக் கோசிகமுனிவருக்குத் தாரைவார்த்து மீண்டுமன்னவர்க்குக் கடனுக்குள்ளாகி அக்கடனைச்செலுத்தத்தவணைபெற்றுக்காசி நகர்க்கேக இச்சரயுநதிவந்தடைந்தோம் அத்தொகையைப் பெற்றுக்கொள்வதற்கு முனிவர் ஓர்தூதரை அனுப்புகிறேனென்று சொன்னாரல்லவா? இன்னும் அன்னவர்வரவில்

...ா? எவ்விதகுணமுடையவரோ? என்...

...றனா என்பற்பல சங்கதிகளையென்னிவி
கவலையையகற்றுங்கள் சீக்கிரம்தூதர்வந்...

## க்ஷத்ரய்யன் வருகிறபாகம்.

நக்ஷத்ரய்யர் விருத்தம்.

புடவியோரேழுமற்றப் புவனமுநடுங்கவட்டக்
கடகளிறங்கங்குன்றக் கன்மலையாவுஞ்சிந்திப்
பொடிபடவாதிசேடன் பொன்முடிசிதறவேதான்
படபடப்பாகவீதோ பாரிற்சுக்கிரனும்வந்தேன்

### நக்ஷத்ரய்யர் சொல்தரு.

பர்ரமுப்பரியென்ற வர்ணமெட்டு.

இராகம் - சங்கராபரணம் - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

வானோர்க்கெதிரி யானவன்றிட
தானவர்க்கெலாந் தினகற்குரு
ஞானமுனிவர் மேனவீரதர்
நாடுஞ்சுக்கிரன் தோன்றினேன்
வண்ணக்கிட்டியும் அண்ணுந்தாரும்
வாருடன்கையிற் கொண்டுமே
கண்ணிரண்டிடற பெர்றிப்பறக்க
கடுகிச்சுக்கிரன் தோன்றினேன்

(நட்-வ-ம்.) ஆடாயிர்தச்சரயு நதிக்கரையில் மூன்றுபேர்கூடிக்கொண்டுசிவபிரானைநோக்கிப் பிரலாபிக்குறீர்கள் நீங்கள்யார்? உங்கள்பெயரென்ன? உங்கள்ஊரெது? சீக்கிரம் தெரிவிக்கவேண்டும்.



அரிச்சந்திரன் விருத்தம்.

அடவியில்வந்தேயெம்மை யாரெனவினவும்நாதா
திடமுடனயோத்தியாண்ட அரிச்சந்திரனென்பேர்
பிடிநடையாளென்பெண்டுபிள்ளை யிங்குற்றபாலன்
விடையவன்போலிலங்கும் வித்தகனும்பேர்சொல்வீர்

சுக்கிரன் விருத்தம்.

மாசிலாவயோத்தியாண்ட மன்னவாபகரக்கேளாய்
கோசிகமுனிக்குநீயுங் கொடுக்கும்பொன்வாங்கவன்றேன்
நேசமாயனுப்பவந்தேன் நிமிஷத்திலேவாங்குமந்த
வாசவனுலகமேவும் வல்லதோர்சுக்ரன்யானே.

அரிச்சந்திரன் நக்ஷத்ரய்யரைவணங்கும் விருத்தம்.

அருமறையுணர்ந்தநாதந வழுவியசெம்பொற்பாதா
கருணையோருருவாயென்னைக் காக்கவேவந்தநீதா
வானிகர்போதாதாமும் வரும்வழிபார்த்தேன்வந்தா
திருவடிதனக்குக்கோடி தெண்டம்நான்சமர்பித்தேனே

### அரிச்சந்திரன்சொல் தரு.

கன்னியே நாமென்னசெய்வோமென்ற வர்ணமெட்டு.

இராகம் - [illegible] தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

அருமறையாகமமுணர்ந்த வந்தணர்பூமா
அடியவனின்னடிபணிந்தே னுளுவாய்கோமா. (அ)

ஐயனேயுமதுசேவை யதைக்கண்டனனே
ஆதவனைக்கண்டமல ரதுபோலவானேன். (அ)

மூன்றுகாலமுந்தெரிந்த முனிவர்தூதரே
முனிவிலாதெனையாட் கொள்ளுமுநியரீதரே (அ)

மண்டலம்புகழுங்காசி மாநகர்நாடி
மறையவாவெல்லோருஞ் செல்வோம்வாருடன்கூடி. (அ)

காசிசென்றவுடன்கோசிகர் கடன்தருவேனே
கர்த்தனேவாங்கிவருவீர் களிப்பாகத்தானே. (அ)
அவனியாழ்மன்னவனெனக் கமைந்ததைப்பாரீர்
அரன்செயலோமற்றெதுவோ வறிகிலேன்வாரீர். (அ)

(அரி-வ-ம்.) மாட்சிமைதங்கிய பூசுரர்குலத்தில் அவதரித்த நாதா விஸ்வாமித்திர முனிவர்சொற்படி தங்கள்வரவைக் கெதிர்பார்த்திருந்தேன் வந்தீர்கள் அதனாலே யென்வறுமையாவற்றும் நீங்கின அனேககோடிவந்தனம், காசிநகர்க்கேகுவோம் வாருங்கள் ப்ரபூ.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா நீஎன்னை வணங்கினதாலென்னபிரயோசனம் உனதுவழிபடுகடவுளை வணங்கினுல் ஏதாவது சகமுண்டாகும் அஃதிருக்கட்டும் யான்வந்து வெகுநேரமாயிற்று ஆகையால் விஸ்வாமித்திரர் உன்னிடத்தில் கொடுக்கும்படி சிலதிரவியம் என்னண்டை கொடுத்தனுப்பியிருக்குமுர் அதைப் பெற்றுக்கொண்டு ஓர்சீட்டு நின்கைப்படவெழுதிக்கொடுத்தால் சீக்கிரஞ் சென்றுவிடுவேன் என்னதெரிவிக்கின்றுய்.

(அரி-வ-ம்.) ப்ரபூ தவத்திற்சிறந்த விஸ்வாமித்திரமுனிவருக்குநான் திரவியங்கொடுக்கவேண்டுமேதவிர அவரெனக்குக் கொடுக்கவேண்டியதில்லை யென்னைப்பரீக்ஷிக்கக் கூடாதப்ரபூ.

(நட்-வ-ம்,) அப்படியா அரிச்சந்திரா விஸ்வாமித்திரருக்கு நீயாதிரவியங் கொடுக்கவேண்டும் அதுஎவ்வளவு சொல் பார்ப்போம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அதமோநட்சத்ரய்யா சொல்லுவேன்யானைமீது
மாதிடப்புருடனேறி வன்கவணெறியுமுச்சான்
காதிமைந்தனுக்குச்செம்பொன்கடையன்யான்கொடுக்கவேண்டும்
நீதிசேர்காசிசேர்ந்தே நிமிஷத்தில்தருவேன்வாரீர்.



(அரி-வ-ம்.) ப்ரபூ மகாதிடச்சித்தம் பொருந்திய ஓர் வாலிபன் மும்மதம்பொருந்திய யானையின்மீதேறி அன்னவன் எறியுங்கவண்கல்போந்தூரம் கௌசிகமுனிவருக்கு யான் பொன் கொடுக்கவேண்டும். அப்பொன்னைக் காசிசேர்ந்தவுடன் தடையின்றித் தருகின்றேன் கூடவருவீர்நாதா.

(நட்-வ-ம்.) அப்படியா மிகவுஞ்சந்தோஷம் அரிச்சந்திரா அந்தத்திரவியத்தைக் கொட்டுநேக்குதேசகாலமாகிறதுசெல்லவேண்டும்.

(அரி-வ-ம்.) நாதா கௌசிகமுனிவரிடத்தில் யான் நாற்பத்தெட்டுநாள் வாயிதாவில் திரவியங்கொடுப்பதாகச் சொல்லிவந்திருக்கிறேன் அந்தவாயிதாவில் தங்களிடத்திற் கொடுத்துவிடுகிறேன். காசிப்பட்டணம் செல்வோம்வாருங்கள்.

நக்ஷத்ரய்யர் அரிச்சந்திரனைப் பொய்சொல்லச்சொல்லும் விருத்தம்.

சொல்லுவேனரிச்சந்த்ராகேள் சுந்தரமாகப்பேசிச்
செல்லுவோம்காசிக்கென்று சிந்தையாயுரைத்தலுந்தன்
நல்லொழுக்கத்துக்கேற்ற ஞாயமோவடடாபொய்தான்
இல்லையென்றுனுங்கூறு விக்ஷணமேகத்தானே.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா என்னவார்த்தை சொல்லுகிறுய் நீவைத்தஆளா உன்னுடன் காசிப்பட்டணம் வருவதற்குவிஸ்வாமித்திரமுனிவர் உன்னை யெவ்விடத்தில் காண்கின்றேனே அவ்விடத்திலேயே திரவியத்தை வாங்கிவரும்படி ஆக்ஞாபித்திருக்கின்றுர் ஆனதால் தற்சமயம் யாதொரு தடையுமில்லாமல் திரவியத்தைஎன்னிடத்திற் கொடுத்துவிடு அதற்குவகையில்லாதபக்ஷத்தில் இல்லையென்று ஒருபொய்சொல்லு யான்சென்றுவிடுகிறேன்.

அரிச்சந்திரன்நக்ஷத்ரய்யரிடம்பொய்சொல்லுதல்
நீதெனஞாயங்கூறும்முன்னூல் விருத்தம்.

விலங்குபற வையிதுவாகரர் வாக்கொன்றுற்
சிறப்புடையர் விளங்குர் திண்மை
யிலங்குநா வானுறையா தவத்தமுறைப்
பொருலக மிகழ் விலங்கின்

குலங்களினுங் கடையாஞ் சாணமதை
யமுதுவைக்குங் கோலச் செம்பொற்
கலங்களில்வைத் தலையொக்கு மெய்க்குயில்
வாயாற்பொய் களற லன்றே.

(அரி-வ-ம்.) ப்ரபூ என்னவார்த்தை கூறுகின்றீர்கள் இது தங்களுக்கு ஞாயமா? யான் விஸ்வாமித்திரமுனிவருக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தை யில்லையென்று என் பிராணனுக்கு ஆனி வந்தாலுஞ் சொல்லமாட்டேன் இதைத் தாம் நிச்சயமாக எண்ண வேண்டும் அன்றியும் நாதா இப்பூமண்டலத்தினிடமாகச் சராயுச, அண்டச, சுவேதச, உற்பிசம் என்ற நால்வகையோனியில் ஜெனித்ததேவர், மக்கள், விலங்கு, புள், நகர்வன, நீர்வாழ்வன, தாவரமென்று சொல்லப்பட்ட எழுவகைத் தோற்றத்தில் தேவர் நீங்கலாக மற்றது தோற்றத்திலும் மானிடர்கள்வாய் பேசுவதொன்றுலேயே சிறப்புடையவர்கள் அப்படிக்கிருக்கச் சத்தியவசனங்களை மேற்கூறிய வாயினாற் சொல்லாமல் பொய்வார்த்தை சொல்வார்களாகில் இவ்வுலகமெல்லாம் இகழச்செய்யத்தக்க விலங்கின் குலத்தின் கடைச்சாதியான \பன்றியின்சாணத்தை அமுதுவைக்கக்கூடிய பாத்திரமாகிய வாயின்கண் வைத்ததற்குச் சமானமென்று சொல்லப்பட்டிருக்கிற தர்மசாஸ்திரத்தைத் தாம் அறியாதவரா? என்னை யிவ்விதஞ்சோதிக்கலாமா? இது தகுதியல்ல ப்ரபூ.

# குருமீதிலாவணையிடல்.

நக்ஷத்ரய்யர் விருத்தம்.

அரசனையுந்தன்கூட வந்தனற்காசிக்கின்று
வருவதற்கென்னலாகா மறையவனெனவேயென்னைத்
திரணம்போலெண்ணிவிட்டாய் சிவபிரானறியவுந்தன்
குருமீதிலாணைவைத்தேன் கொட்டுவாய்பணத்தைத்தானே.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நேக்கு உன்கூட காசிதேசத்துக்குவரச் சம்மதமில்லை நீ என்னைப் பிராமணனெனவெண்ணி



ய்க்கப் பார்க்கிறாய் ஆகையாலுன் குலகுருவாகிய வசிட்டர்மீது ஆணைவைத்திருக்கிறேன் திரவியத்தைக் கொட்டடாகொட்டு.

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா இதுவுமுன்னருளோ.

அரிச்சந்திரன் விருத்தம்.

அருமறையா கமமுணர்ந்த நட்சேத் ரய்யா
அடியனேன் முனிதனக்குக் கொடுக்குஞ் செம்பொன்
தருவதில்லை யெனச்சொன்ன துண்டோ வேறு
தாழ்வேதும் புரிந்தனனோ தகைசேர் நீதிக்
குருமீதி லாணைவைத்தீர் தரும மல்ல
கோதிலாக் காசிமா நகரஞ் சேர்ந்தாங்
கரியதிர வியந்தருவேன் குருமீ தாணை
யையனே நீக்கியருள் தேக்கு வீரே.

அரிச்சந்திரன்சொல் தரு.

தாயுடன் கூடவெனை என்ற வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயையோகுருமீது ஆணையிடப்போது
அடியெனெக்குற்றஞ்செய்தேன் முனிவர்நாதாநாதா (ஐ)

தவத்திற்சிறந்தவெந்தன் சற்குருமீதிலாணை
சாற்றுவதழகாமோ முனிவர்நாதாநாதா (ஐ)

கோசிகர்தன்கடன் கொடுக்கமாட்டேனென்றேனோ
குருமீதிலாணையிட்டீர் முனிவர்நாதாநீதா (ஐ)

காசிசென்றவுடனே கடன்றனைதருகின்றேன்
கர்த்தனேவாணையைநீக்கும் முனிவர்நாதா[illegible] (ஐ)

(அரி-வ-ம்) ப்ரபூ தங்களுக்கு என்னகுற்றஞ்செய்தேன் காசிசென்றவுடன் விஸ்வாமித்திரமுனிவருக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தைத் தருகிறேனென்று சொன்னேனே தவிற வேறொன்றுஞ் சொல்லவில்லையே அவ்விதமிருக்கத் தாங்கள் கொடுங்கோப





ங்கொண்டு குருமீதி லாணைவைத்து இந்த இடத்திலேயே திரவியத்தைக் கொட்டு என்று கேட்பது தருமமல்ல தயவுசெய்து எனது மெய்மையான குருமீதுவைத்த ஆணையை விலக்கியருள வேண்டும் நாதா.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா இதோ ஆணையை விலக்கிட்டேன் பொருளைக்கொடு.

(அரி-வ-ம்.) ப்ரபூ ஆணையைநீக்கினவுடனே திரவியத்தைக் கட்டால் எங்கிருந்து தருவேன் காசிதேசஞ் சென்றவுடன் கொடுக்கிறேன் கிருபைசெய்ய வேண்டும்.

## கோட்டில்நிருத்தல்.

நக்ஷத்ரயியன்விருத்தம்.

நாட்டிகமாகக்கரசொர்ந்து பொன்தாரேனென்று
மோட்டிமையாகப்பேசு மிண்டனேயுன்னையிந்தக்
கோட்டினில்நிருத்திவைத்தேன் கோசிகமுனிருணத்தை
வாட்டமில்லாமலென்பால் வாகுடனீகுவாயே.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உன்னை இலகுவாகத் திரவியத்தைக் கொடு என்றால் கொடுக்கமாட்டாய் உன்னை யிந்தக்கோட்டில் நிருத்தி வைத்திருக்கிறேன் திரவியத்தைக் கொடுத்து விட்டு அப்பாற் செல்லுவாய்.

### அரிச்சந்திரன் சொல் தரு.

ஆரவாரபாணனேயென்ற வர்ணமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - சாபு.

கண்ணிகள்.

கோட்டினில்வேதியர் காட்டினில்மறிக்குறார்
கோலவிழியாள் பாகனே (கோ)

இமையோரொருவர்க்கும் வெய்யவினைசெய்திலேன்
அப்பனேமிகு யோகனே (கோ)

எந்தனுக்கித்தயா மிந்தவனந்தனி
வெய்தவித்தியோ வரனே (கோ)
வாரிசமலர்தனை நேருந்தன்றிருவடி
மறந்திலேனே பரனே (கோ)

(அரி-வ-ம்.) ஆ காசிநாதா அடியேன் என்ன பாதகஞ் செய்தேன் இவ்வித கஷ்டத்துக் குள்ளாக்கினை உன் பாதார விந்தத்தை க்கனவிலு மறந்திலேனே.

(அரி-வ-ம்.) சுவாமி குருமீதிட்ட ஆணையை விலக்கியருளுமெனவேண்ட அதைத் தவிர்த்துக் கோட்டில் மடிப்பதழகா? சிறியேனென்ன குற்றஞ்செய்தேன் ஒன்றுஞ் செய்யவில்லையே தயை செய்து இதனை விலக்கிவிடும் அனேககோடி வந்தனம்.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா இதோ உன்மனம்போலக் கோட்டைவிட்டு நீக்கிவிட்டேன் பணத்தைக் கொட்டடா கொட்டு.

(அரி-வ-ம்.) ப்ரபூ ஆரண்யத்தின் கண் திரவியத்தைக் கொட்டென்றால் எவ்விதங் கொடுப்பேன்.

# அண்ணாந்தாளிடல்.

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

என்னடாவைத்யகாரா விருடியின்றனைத்தை யானும்
நன்னயமாகக் கேட்டால் ஞானங்கள் பேசலுற்றாய்
வன்னமாநின்கழுத்தில் வன்மைசேரண்ணாந்தாளை
இன்னிமிஷத்திற்பூட்டியிருக்கின்றேன் பொன்னீவாயே.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா மயிலே குயிலே இறகுகொடென்றால் கொடுக்குமா? கொடாது இதோ உன் கழுத்தில் அண்ணாந்தாள் பூட்டியிருக்கின்றேன் திரவியத்தைக் கொடுத்து அப்பாற்செ



அரிச்சந்திரன் விருத்தம்.

வேதியர்குலம்விளங்க மேதினிதனிலுதித்த
நீதிசேர்நாதாவிந்த நிஷ்டூரம்செய்வதென்னோ
பாதகன்கழுத்தைமையோ படீர்படீரெனத்தெரிக்கு
தாதலாலண்ணாந்தாளை வடைவுடனெடுப்பீர்போற்றி.

அரிச்சந்திரன்சொல் தரு.

நாட்டுக்குநாயகமென்ற வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

விண்ணோரெல்லாம்புகழ் விஸ்வாமித்திரமுனிநாதா-என்னை
அண்ணாந்தாள்பூட்டி யடிக்கவுமாகுமோநீதா. (வி)
வேதியர்குலந்தனில் நீதிலாதேவந்தமெய்யா-இந்த
வேதனையென்னாற் சகிக்கமுடியாது துய்யா (வி)
காசிசென்றபோதே கௌசிகர்பொன்தாரேன் நாதா-பர
தேசியெனைத்துயர் செய்யவேண்டாஞ்செம்பொற்பாதா (வி)
புண்ணாகவெந்தன்கழுத்து வலிக்குதேபுண்யா-இந்த
அண்ணாந்தாள்தன்னை யகற்றுவீரிப்போதுகண்யா (வி)

(அரி-வ-ம்.) ப்ரபூ ஏழையான அடியேனை இந்த வனத்தில் அண்ணாந்தாளைப் பூட்டி நிஷ்டூரஞ்செய்வது தருமமா? கருணைகூர்ந்து அண்ணாந்தாளை யெடுத்து விடுங்கள் கழுத்து மிகவும் வலிக்கின்றது சகிக்கமாட்டேன்.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா இதோ அண்ணாந்தாளை யெடுத்துவிட்டேன் திரவியத்தைக் கொடு.

(அரி-வ-ம்.) என்ன ப்ரபூ காசிமாநகரஞ் சென்றவுடன் கௌசிகமுனிவருக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தைத் தருகிறேனென்று பல தடவைகூறியும் அதனைக்கிஞ்சிற்றேனுஞ் செவியுட்கொள்ளாது மீண்டும் மீண்டும் திரவியத்தைக் கொட்டு திரவியத்தைக் திரவியத்தைக்கொட்டு என்றுகேட்குறீர்கள் இது தங்களுக்கு ஞாயமாகத் தோனுகிறதா?





## நெற்றியிற் கல்வைத்தல்.

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

கற்றவமுனி செம்பொன்னை நல்குவாயிப்போ தென்றால்
கற்றதோர் தர்க்கமென்பாற் காட்டுறுயடா வுந்தன்
நெற்றியின் மீதுகல்லை நிருத்தினேனிதோ சொன்ன
சொற்றவறாது ரொக்கந் துரிதமாச் சொரிகுவாயே.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ கற்றவார்த்தையை என்னிடத்திற் காட்டாதே இதோ உன் நெற்றியின்மீது கல்லைவைத்திருக்கின்றேன் சீக்கிரத்தில் திரவியத்தைக் கொடுப்பாய்.

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா இதுவுமுன் சோதனையோ?

### அரிச்சந்திரன்சொல் தரு.

நடக்கக்கால் நோகுதையோ என்றவர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

நெற்றிமீதுகல்லைவைத்து கிட்டொஞ்செய்குநீர்சிமானே
இத்தருணமிங்குசெம்பொ னெங்கிருந்துதருவேனே (நெ)

மாதவரேயந்தணரே மறையோரேஇந்தக்கோபம்
ஏதுங்கெதியில்லாவேழை யென்மேற்கொள்வதும்பாபம் (நெ)

கேவலங்கள்புரிந்தாலுங் கெடுதிகள்செய்தாலுமெய்யா
ஆவியுள்ளமட்டுமையா அடியேன்சொல்மாறேன்துய்யா (நெ)

உத்தமனேநெற்றிமீது வைத்தகல்லையித்தருணம்
சித்தமுவந்தேயெடுப்பீர் தீர்ப்பேன்காசிசேர்க்குமுனம் (நெ)

(அரி-வ-ம்.) நாதா இவ்வுலகினிடமாக உற்பவித்த அந்தணர்களெல்லா மானிடத்தெய்வமென்று மனுதர்மசாஸ்திர முறையிடுகின்றதே அப்பேர்க்கொற்ற குலத்தில் ஜெனித்தநாங்கள் அக்குலத்துக்குரிய ஒழுக்கத்தைக் கிஞ்சிற்றேனுங் கவனிக்காது ஏதுங்கெதியில்லாதவனா யபராதிக்கிற அடியேன் நெற்றியிற்கல்லை வைத்து

த்திரவியத்தைக் கொடு என்று துன்பஞ் செய்வது சரியாமா என்னுற் சகிக்கக்கூடவில்லை தயவுசெய்து நெற்றிக்கல்லை யெடுத்தருள வேண்டும்.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா நீ மிகவும் வருந்திக் கேட்டுக் கொண்டதினுல் உன் நெற்றிமீது வைத்தகல்லை யெடுத்துவிட்டேன் என்னைக் காக்கவைக்காமல் திரவியத்தைக் கொட்டு பார்ப்போம்.

(அரி-வ-ம்.) ப்ரபூ தாங்களறியாத யோசனையுளதா? ஆரண்யத்தினிடமாகத் திரவியங்கேட்டால் எங்கிருந்து கொடுப்பேன்.

## ஒற்றைக்காலில் நிருத்தல்.

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

கற்றையந்திங்கள் சூடுங்கபாலியை நிகர்த்தி லங்கும்
நற்றவமுனிக்குச் செம்பொன் நல்கிடைத் தடையேசெய்யும்
சிற்றறி வுடையபேயா செப்பொணுப் பொய்சொல்வாயா
ஒற்றைக்காலினில் நிறுத்திவைத் தனலுகந் தீவாயே.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உனக்குக் கடன்தொகையைக் கொடுக்க இஷ்டமில்லை போலிருக்கிறது ஆகையால் ஒற்றைக்காலைத்தூக்கு ஒற்றைக்காலில் நில்லு பணத்தைக் கொடுத்து விட்டு வேறு ஜோலிபார்.

(அரி-வ-ம்) ஆ விஸ்வேசா யானிவ்வளவு கஷ்டமடைவதுனக்குச்சம்மதமா யான் என்ன கொடுவினைபுரிந்தேன்.

### அரிச்சந்திரன்சொல் தரு.

மன்னன்வரக்காணுமலென்றவர்ணமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

பல்லவி.

ஒற்றைக்காலில்நிறுத்த, ஓகோநானென்னசெய்வேன். (ஒ)

அநுபல்லவி.

சற்றுநினுந்தயவு தாட்சணியமிலாது. (ஒ)



சரணங்கள்.

நாடுநகரம்யாவும் ஞானமுனிக்களித்துக்
காடடைந்தவென்மீது கடுமையாகக்கோபித்து. (ஒ)

மாதவர்குலந்தனில் வந்தமாமணியேவான்
மாதவமுனிகடன் வழங்கிடேனென்றேனோதான். (ஒ)

நன்னயமிகுநாதா நளினமலர்நேர்பாதா
சொன்னசொல்மாறினேனோ துடுக்காகவைதேனோ. (ஒ)

(அரி-வ-ம்.) ப்ரபூ புல்லறிவுடைய சிறியேனை இவ்விதந்துன்பஞ் செய்யலாமா? என்னுற் சகிக்கமுடியவில்லை இதனை நீக்கியருள வேண்டும்.

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா ஒற்றைக்காலில் நிற்கவேண்டாம் இங்கேவா பணத்தைக்கொட்டு.

(அரி-வ-ம்.) காசிமாநகரஞ்சென்று தருகிறேன் ப்ரபூ

## அரிச்சந்திரனுக்குக் கிட்டிபோடும்பாகம்.

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

காதிதன் மைந்தனுர்தஞ் சபுன்தொகை யிப்போதீயாப்
பாதகா வீணுதிய பழிகாரா வசடாபேயா
காதகா உன்கரத்திற் கட்டினேன் கிட்டிதன்னை
யாதலாற் பணத்தைக்கொட்டி யப்புறஞ் செல்லுவாயே.

(நட்-வ-ம்.) அடா சண்டாளா, பாதகா, வீணு, பழிகாரா, அசடா, பேயா, கோசிகமுனி கடனுக்குத் தடைசொல்வதா உனக்கழகா? இதோ உன்கரத்திற் கிட்டியைக் கட்டியிருக்கிறேன் பணத்தைக்கொட்டிவிட்டு அப்பாற்செல்லடா.





சந்திரவதிசொல் தரு.

ஐயோகோட்சத்ராய்யனேஎன்றவர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயையோமுனிதூதரே இவ்விதஞ்செய்ய
லாகுமோவிது நீதரே.

அநுபல்லவி.

கையினிற்கிட்டியைக்கட்டி மன்னவனின்று
கடிந்துபேசநீர்தட்டி ராஜனையின்று
கடிந்துபேசநீர்தட்டி. (ஐயோ)

சரணங்கள்.

குற்றங்களேதுஞ்செய்தோமோ ஐயரேயும்மைக்
குறையாகப்பேசிவைதோமோ ஓகௌசிகத்ய்யா
குறையாகப்பேசிவைதோமோ. (ஐயோ)

சொற்றவாய்மொழிந்தோமோ கோசிகருட
தொகைதனையில்லையென்றோமோ ஓகௌசிகத்ய்யா
தொகைதனையில்லையென்றோமோ. (ஐயோ)

மாநிலாக்காசிபிற்சென்று கடன்செம்பொன்னை
வழங்குவோம்வாருமீரின்று ஓகௌசிகத்ய்யா
வழங்குவோம்வாருமீரின்று. (ஐயோ)

ஆசரப்பூமியில்நின்று வருந்துமன்னன்
அங்கைக்கிட்டிவாங்குவீரின்று ஓகௌசிகத்ய்யா
அங்கைக்கிட்டிவாங்குவீரின்று (ஐயோ)

---

(அரி-வ-ம்.) பிரபு தங்களுக்கென்ன குற்றஞ்செய்தோம்கோசிகமுனிவர் கடனுக்கேதாவா தடைசொன்னோமா? எனதுகண்ணாளன் கரத்திற்கிட்டியைக் கட்டித் துன்பப்படுத்துகிறீர் இது நியாயமல்ல கிட்டியை அவிழ்த்துவிடும்.

(கட்-வ-ம்.) அடிபோடிபோ பைத்தியக்காரி வீணாகவென்னோடு வாதாடுகின்றனை பொன்னைக் கொடுத்துவிட்டால் உங்கள் வார்த்தைக்கு யெவன்வருவான் அதைப்பேசியாமல் அழுதழாலனு

செய்தால் திரவியத்தை விட்டுப் போவேனென்று நினைக்குறா எட்டப்போடிபோ.

அரிச்சந்திரன் விருத்தம்.

பூசுரர்க்காசேயோங்கும் புண்ணியவருவேசிரார்
காசிமாநகரஞ்சேர்ந்து கடன்தொகைபெறவென்றுதா
கூசிடாதென்கரத்திற் கொடுஞ்சினங்கொண்டுகிட்டி
ஆசுரும்படிசேர்ச்சட்டி யடிப்பதுநாயந்தானே.

## அரிச்சந்திரன் சொல் தரு.

என்னகாரணஞ் சொல்லடியென்ற வர்ணமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - சாபு.

பல்லவி.

இந்தக்கோபமதாகுமா — இதாகுமா

அநுபல்லவி.

சந்ததமும்வேதக் — கினையுணரும்புனித
அந்தணர்குலதிநியே — என்மீதிந்தநிதியே. (இ

சரணங்கள்.

சொன்னசொல்மறந்தேனோ — தடுக்கவுனைவந்தேனோ
என்னகுறைபண்ணினேன் — னிக்கொடுமைசெய்குறீர். (இ)

செங்கைவிரல்நோகுதே — தியக்கமென்மேலாகுதே
இங்கமாவேதியரே — கருணைபரவயாதியரே. (இ)

அடவிதனிலென்னை — யக்கவுசிகர்போன்று
திடமாய்த்தாச்சொல்கிறீர் — சிந்தையோனவேகுறீர். (இ)

என்மேற்கிருபைவைத்து — யினிதாய்க்கிட்டியவிழ்த்து
நன்மறையோரேவிடும் — நாளைபெறப்போர்ந்திடும். (இ



## அரிச்சந்திரன் சொல் தரு.

இவராமே எந்தன்துரையென்ற வர்ணமெட்டு.

இராகம் - செஞ்சுருட்டி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோவென்னகுறைசெய்தேன் — அந்தணரேநான்
கையதனிற்கிட்டிதனைக் — கட்டலானீர்தான்

செங்கைவிரலஞ்சநோகு — தென்னசெய்குவேன்
எங்கும்புகழ்மறையோரேயெவ் — விதநானுய்குவேன்

எழையெந்தமீதிற்சற்று — மிரக்கமில்லையா
தாழ்பணிபுமடியேன்மீது — தயவுவல்லையா

மாமுனிவர்பொன்கொடுக்க — மாட்டேனென்றேனோ
சேமவேதியரேயும்மைத் — திட்டலானேனோ

காசிசென்றவுடன்கௌசிகர் — கடன்தருகின்றேன்
பூசுரரேதயைசெயும்வந் — தனம்புரிகின்றேன்

கிட்டிதனையவிழ்த்துவிடுங் — கிருபைசெய்குவீர்
திட்டமாய்ச்சொன்னசொல்மாறேன் — சிந்தைதேருவீர்

## அரிச்சந்திரன் சொல் தரு.

காதலைக் காணேனேயென்ற வர்ணமெட்டு.

இராகம் - மோகன - தாளம் - ரூபகம்.

பல்லவி.

தூதரேயிவ்விதந் — துயர்செய்தல்தகுதியோ

அநுபல்லவி.

நீதுறவேகிட்டி — செங்கையதனிற்கட்டி. (தூ)

சரணங்கள்.

காசிநகரிற்சென்று — கடன்கொடுக்கிறேனென்று
கௌசிகரிடங்கூறிக் — கூட்டிவந்தவென்னைச்சீறிக். (தூ)

விரலதநோகுதே — வெய்யபுண்ணாகுதே
கிருபைநீர்செய்திடுங் — கிட்டியையவிழ்த்திடுங். (தூ)

குழித்தாளினிற்பணம் கொடுத்திடுவேனிக்கணம்
பொறுத்தென்னையாண்டிடும் புகழ்தூண்டிடும்.

—

## அரிச்சந்திரன் சொல் தரு.

கிட்டிவேதனை சகிக்காதென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மறைவேதியர்குலநீதா கிட்டிவாங்குவீர்முனிநாதா

அநுபல்லவி.

குறையென்செய்திட்டேன் கையினிற்கிட்டி
கோர்த்திறுக்கட்டலானீர் திட்டி (ம

சரணங்கள்.

வேதனையையோ மெய்மேலாகுதே
விரல்களெலாமற்றுப் போகுதே (ம)
வரமடியேன் மீதிப்போது
மனத்துணிந்துசெய் யத்தகாது (ம)
காசிமாநகர் சேர்ந்ததுணை
காதலாக்கொடுக்கின்றேன் றுணை. (ம)

---

(அரி-வ-ம்.) ப்ரபூ இன்றைச்சேனைக் தயவுகாட்சனியபிரா னுவனத்தினிடமாக எனதுகரத்திற் கிட்டியைக்கட்டி இம்சைசெய்து திரவியத்தைக்கேட்குகிறீர்நான் எங்கிருந்து கொடுப்பேன் ஆனால் காசிக்ஷேத்திரஞ்சென்றவுடன் விஸ்வாமித்திரமகாரிஷி உத்தரவின் பிரகாரம் தவணைக்குட்பொன் செலுத்திவிடுகின்றேன் கிட்டியை யவிழ்த்து விடுங்கள் (குறள்) பிறர்க்கின்னா முற்பகற்செய்யிற்றமக் கின்னா—பிற்பகற்றாமேவரும்—இதுதமக்குத் தெரியாததல்லவென துவிரல்களெல்லாம் மிகவும் நோகுகின்றது கிருபைசெய்யும்.

(நட்-வ-ம்.) அடா மூர்க்கா பணத்தைக்கொட்டினால் தான் கிட்டியை யவிழ்த்துவிடுவேன்.



சந்திரமதி விருத்தம்.

மாமுனிகோ சிகர்கடனை வாங்க வந்த
மறையவர்கி காமனியே வருத்தி யக்தோ
நாமுன்பா லுரைத்ததெல்லாஞ் செவிக்கொள்ளாது
நானிலமெ லாம்புகழுங் காசி தேசம்
போர்முனமன் னவர்காத்திற் கிட்டி நீரும்
பூட்டியித்தத் துயர்செய்த லழகதாமோ
சாமிபுந்தன் மலர்ப்பதத்தைப் பணிந்தேன் கிட்டி
தனைவாங்கும் பரிபூர்ணத் தயவு செய்தே

—

## சந்திரமதி சொல்தரு.

இராகம் - தோடி - தாளம் ரூபகம்.

பல்லவி.

இந்தத்துயரஞ்செய்வதாகுமோ எந்தன்துரையை

அநுபல்லவி.

அந்தணர்குல மதனில்வந்த
ஐயனேமகா துய்யனேநீரும் (இ)

சரணங்கள்.

செந்திரவன் மயிலுதித்துச்
செகமெலாமுயர் புழைப்படைத்துத்
தங்கவயோத்தி நகரையாண்ட
சுந்தரராஜ துரந்தரன்றனை (இ)
இரத்தமாறுப் பெருகியோட
வெறிலார் விரல்களெல்லாமாட
கரத்தினில்வெகு சினத்துடன்கிட்டி
கட்டியேயுபம திஷ்டபடியே (இ)
மாதவமுனிகடனைத் தாவே
மாட்டோமென்று சொன்னேமோசுரவாய்
எதிர்குறைகள் செய்தோவுமக்கின்
மெய்ம்புவீர்மிகத் தயங்கிடேவதான் (இ)
கோசிகர்தனக்குகந்த தூதா
கோகனகமா மலர்நேர்பாதா
காசியப்பதிசெல்லும் வழியிற்
கானகந்தனில் மானபங்கமாய் (இ)

(சந்-வ-ம.) அய்யா நக்ஷத்ரப்புண்ணியவானே இதுதர்மமு
ஏனறுநன்றுணர் பிருதுவாகிய சுந்திரங்கட்டியிருக்கிற இட
யை அவிழ்த்துவிடுங்கள் சகிக்கமாட்டார்.

(நட்-வ-ம்.) ஏண்டிவெருணேவாரிக்கிறாய் திரவியத்தைக்கொ
ட்டடி கிட்டியையவிழ்க்கிறேன்.

---

## சந்திரவதி சொல்தரு.

சேருமுன்னேசேவல்கூவுதே என்றவர்ணமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - ஏகம்.

பல்லவி.

நீதிபிதாதாளேசொல்நாதா நீள்முனிநாதா

அநுபல்லவி.

போதலருமலர்ப்பாதா பூதலம்புகழ்புனிதா
வேதியர்குலப்பிரக்யாதா மிகுவேத

சரணங்கள்.

மன்னவன்கரத்திற்கிட்டி வலிமையுடனேகட்டி
இன்னல்செய்கின்றீர்தட்டி ஐயையோமனை

கானகந்தன்னிலின்று கடன்தொகையைக்கொடென்று
ஈனமாய்வைகின்றீர்களன்று ஐயையோதா

இவ்விடத்ததனைத்திற்செம்பொனீய்குவாயென்றகொல்ருவ
எவ்விதந்தருவதிக்கணம் மனுத

---

(சந்-வ-ம்.) ப்ராது பணத்தைக்கொடுத்தால் தான்கிட்
விழ்ப்பேனென்று சொல்வது ஞாயமல்ல தயவுசெய்து வி
யவிழ்த்துவிடும்.

(நட்-வ-ம்.) அடியே இந்திரஜாலக்காரி ஏன்க்குக்
கோபம் வந்துவிடும் அப்புறத்திற்போடி.



## சந்திரவதிசொல் தரு.

சொன்னேனல்லவோ மானேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-பாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

வர்மஞ்செய்வதாமழகோ உயர்
மாதவர்குலத்துதித்த நீதனேபோதனே-மிந்த (வ)

அநுபல்லவி.

தர்மமிதுவோநாதா தாமரைமலர்ப்பாதா
தயவுசற்றுமிலாது நயவஞ்சமாய்ப்போது (வ)

சரணங்கள்.

மன்னவர்பயந்தோட நன்னயஞ்சேர்நாடாண்ட
மன்னன்கரத்திற்கிட்டி பின்னமாகவேகட்டி (வ)

சொன்னசொல்மாறினேமோ துடுக்காகக்கூறினேமோ
தன்னிகரில்லாமெய்யா இன்னிலம்புகழ்துய்யா (வ)

தஞ்சமுமையல்லாது தாரணிதனில்வேறது
வஞ்சகமாகவின்று [illegible]சாதுநீர்களன்று (வ)

---

## சந்திரவதிசொல் தரு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதுறைபிந்தயிம்சை செய்குதீர்-ஐயோ
எந்தனிமனத்தவதி சுந்தரவயிக்குந்தறி (ஏ)

அநுபல்லவி.

காசினிதனிலம்துதிக்குநீதா வாசிலம்புகழ்ம்போதா
சத்தியாமெய்யா பசுமையில்லாதுய்யா (ஏ)

சரணங்கள்.

கத்தின்விரல்காட இரத்தமாருகவோடக்
காவலன்சகிக்கொணுது கலங்கிவாட
கட்டிகேவேபேசி வருத்தமாகவேயேசி
இகோவேரவிழ்ப்பிட்டு மாகோடமுடன்கட்டி (ஏ)

கோசிகமுனிவர்தடன் காசிக்குச்சேர்ந்தவுடன்
கொடுத்திடத்தடையேது அடியிலாண்டோ

மாசிலாவேதங்களோதும் — பூசுரர்குலத்தில்வந்த
வனசமலர்நேர்பாதா — மனத்சம்மதமாகாதா (ஏ)

## சந்திரவதிசொல் தரு.

காதலிக்காணேனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஆதி.

பல்லவி.

மன்னவன்கைக்கிட்டிவாங்கும் மறையோரேபுகழோங்கும்

அநுபல்லவி.

இன்னிலமதனிலுள்ள — மன்னவர்கள்மன்னர்பணி (ம)

சரணங்கள்.

மாதவமுனிநாதா — வனசமாமலரப்பாதா
வாதுசெய்யாதகிருபை — வைத்திக்கணத்தில்காதா (ம)

வையகந்துதிகாசி — மாநகர்சேர்க்கவுடன்
ஐயனேவிரைவினி — லருள்கின்றேமுனிகடன் (ம)

இவ்வளவுகோபம் — எங்கள்மேற்கொள்வதுபாபம்
செவ்வைமறைதேர்துய்யா — சீர்பொருந்திடுமெய்யா (ம)

பாங்கானவிரலெல்லாம் — வீங்குகின்றவேதனை
தாங்கமுடியாதென்று — தவிக்குறுனையோதின்று (ம)

(சந்-வ-ம்.) (குறள்) "இணரெரிதோய் வன்னவின்னாசெயினும் புணரின் வெகுளாமைநன்று" ப்ரபூ, பிரபஞ்சத்திலிடமாக யாதாமொருவன் பெரு நெருப்பானது வந்து தழுவினாற்போன்ற ஓர் துன்பத்தைச் செய்தாலும் அன்னவன்மீது நல்லோர்கள் கோபங் கொள்ளமாட்டார்களென்பது சாஸ்திரம் அவ்விதமிருக்க யாதொரு குற்றமுஞ்செய்யாத எனது கண்ணாளன் கரத்தில் உத்தம வேதியர் குலத்தில் ஜெனித்த தாம் கிட்டியைக் கட்டி வருத்தஞ் செய்வதுதர்மமா? கிருபைசெய்து கிட்டியையவிழ்த்துவிடும்நாதா.

(நட்-வ-ம்.) அடிபோடிபோ பைத்தியக்காரி, எல்லாச் சாத்திரமும் எனக்குத் தெரியும் பணத்தைக் கொட்டடி கொட்டு.



## தேவதாசன் விருத்தம்.

அருந்தவஞ்செய்துபெற்ற அன்னைச்செங்கரத்திற்கிட்டி
வருந்தவேகட்டியிந்த வனத்தினிலடித்தால்ரொக்கம்
சொரிந்திடவரையுமுண்டோ தாதரேகிருபைசெய்து
விரைந்துதைக்கிட்டிவாங்கும் மெல்லடிசரணமையா.

## தேவதாசன்சொல் தரு

தந்தையே வருந்தவேண்டாமென்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம் ஆதி.

பல்லவி.

அந்தணரேதயைசெய்து — தந்தைதகைக்கிட்டியைவாங்கும் (அ)

அநுபல்லவி.

செந்தளிரனையபாதா — முந்தமறையுணர்ந்தா
சிந்தைதனைநாடிகவாடும் — மைந்தனுக்குகந்தாரிடும் (அ)

சரணங்கள்.

எங்கள்மீதினிலேயோ — இவ்வளவுமனஸ்தாபம்
துங்கனேவலிப்பது — சகிர்தமோபாவலாபம் (அ)

மாநிலம்புகழ்காசி — மாநகர்சேர்ந்தபோதே
தீனதயாளாகடன் — தீர்க்கின்றேமப்போதே (அ)

கந்தாவிரல்களெல்லாந் — சொரிகுருதியால்வாடி
நொந்தாழுகின்றார்பாரும் — நொடிக்குள்வந்தனங்கோடி (அ)

(தேவ-வ-ம்.) சுவாமி எனது தந்தையின்கரத்திற் கிட்டியைக் கட்டி இவ்விதந்துன்பஞ் செய்வது தங்களுக்குத் தருமமாயிருக்கிறதா? தயவு செய்து கிட்டியைவாங்குங்கள்.

(நட்-வ-ம்.) நல்ல தடாகிச்சான் இங்கேவாடா உனது பிதா கரத்திற் கட்டியிருக்கிற கிட்டியை யவிழ்த்து விடுகிறேன் உன்னுடைய வாயினால் விஸ்வாமித்திரருக்கு நாங்கள் திரவியங் கொடுக்க வேண்டியதில்லையென்று ரகசியமாக என் காதுக்குட் சொல்லி விடடாகுழந்தை.

(தேவ-வ-ம்.) ப்ரபு என்ன வார்த்தை பகர்ந்தீர்கள்.

தேவதாசன் விருத்தம்.

கோவதைகள் நூறுகொலை செய்யிலொரு வேதன்
வேதியரை நூறுகொலை செய்யிலொரு மாதர்
மாதர்களை நூறுகொலை செய்யிலொரு பாலர்
பாலர்களை நூறுகொலை செய்யிலொரு பொய்யன்.

(தேவ-வ-ம்.) அதாவது நூறுபசுக்களை வதைத்தவன் ஒரு வேதியரை வதைத்த பாவத்தையுடையான் நூறுவேதியர்களைக் கொலைசெய்தவன் ஓர் கற்புடையமாதைக் கொலை செய்த பாவத்தையுடையான் அப்படி நூறுமாதர்களைக் கொலை செய்தவன் ஒரு பாலனைக் கொலைசெய்த பாவத்தையுடையான் அப்படி நூறுபாலர்களைக் கொலை செய்தவன் ஓர் பொய்சொன்ன பாவத்தையுடையான் என்று கூறப்பட்ட சாஸ்திரத்தை யான் உணர்ந்தவனே தவிர உணராதவனல்ல ஆகையால் சந்திரன் சூரியன் தெற்கு வடக்காகினும் கைலாசக் கொடுமுடிதகர்ந்தாலும் சப்தசாகரமுங் கொதித்தெழுந்தாலும் என் தந்தைவாயிற் பொய் பிறந்தாலும் என்வாயிற் பொய்பிறக்காது ப்ரபூ இந்த என்னைத்தந்த விலக்கி எனது பிதாவின்கரத்திற் கட்டியிருக்கிற கிட்டியை வாங்குங்கள்.

(கட்-வ-ம்.) அடா குழந்தை நீ அவ்வளவு சத்தியவந்தனா உன் தந்தைகையிற்கட்டியிருந்த கிட்டியை இதோவாங்கிவிட்டேன் உன் கையில் தனரேகை யிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும் கையை நீட்டடா கண்மணி.

(தேவ-வ-ம்.) ப்ரபூ இதோ கையைநீட்டினேன் பாருங்கள்.

(கட்-வ-ம்.) என்னடா? வல்லானை ஒழிபின்னை நோக்கு அவ்வளவு சாமார்த்தியமா? உனது கரங்கள் அண்டித்தப்போகும்படி இதோ கிட்டியைக் கட்டி விட்டேன் பொன்னைக் கொட்டடா கொட்டு.



தேவதாசன்சொல் தரு.

ஐயோ உன்னருளின் சோதனையோ என்ற வர்ணமெட்டு.

இராகம்-கலியாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

பிரசவித்தவளுமன் சோதனையோ காசி
பிரசவித்தவளுமன் சோதனையோ ஆகா
என்னசெய்வேன் பாலன்

அநுபல்லவி.

தேசயர்பாதா ஜெகப்பிரக்யாதா
தேவிபாகம்வாழ்ந்திடும் நீதா-போதா
தேவிபாகம்வாழ்ந்திடும் நீதா-ஐயோ
செங்கையில் நோகுதே (பி)

சரணங்கள்.

ஐயருந்திட்டி மழுவியகையிற்கட்டி
அடிக்குறுரையையோ அதட்டி ஓங்கி,
அடிக்குறுரையையோ அதட்டி எந்தன்
ஆக்கமெல்லா நோகுதே (பி)

தேவாதிதேவா ஸ்ரீராமகாருபாவா
சிறியேன்றனையித்தரி காவா-ஐயோ
சிறியேன்றனையித்தரி காவா-எந்தன்
திடமெலா மொடுங்குதே (பி)

(தேவ-வ-ம்.) ஆ! காசிநாதா கருணாகரா இதுவுமன் சோதனையோ யான் என்னகுற்றஞ் செய்தேன்.

தேவதாசன் விருத்தம்.

வாருமணி நூதாசெந்தா மரைமலர்ப் பாதாநீதா
குருபரா வடியேனென்ன குற்றஞ்செய் திட்டேன்செங்கை
விரலெல்லா நோகக்கிட்டி விரைவினிற் கட்டியந்தோ
கருடணாடிக்கரைனி ருமக்கிது ஞாயமாமோ.

## தேவதாசன்சொல் தரு.

கன்னியேநாமென்னசெய்வோமென்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மாதவமுனிவர் நாதா — மறைமலர்ப்பாதா
என்றனென்னகுற்றஞ்செய்தேன் — வருத்துவீர்நாதா (மா)
கடுஞ்சினங்கொண்டுகிட்டி — கையினிற்கட்டி
கதறக்கதறவடிக்கலானீர் — கதியாயகீட்டி (மா)
அங்கவேதியர்குலத்தில் — தோன்றியபூமா
சொன்னசொற்றவறினேனோ — சொல்லுவீர்கேமா (மா)
விரல்களைந்துங்குருதிகக்கி — மிகவும்நோகுதே
விரைவினிற்கிட்டியைவாங்கு — மெய்நடுங்குதே (மா)

## தேவதாசன்சொல் தரு.

இவராமேயெந்தன் துரைஎன்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோ-ஐயோ-ஐயோ-அம்மா — என்னசெய்வேனே
கையதனிற்கிட்டிஐயன் — கட்டலானனே
மெய்நடுங்கியெந்தனுள்ள — மிகவும்வாடுதே
செய்யவிரலுள்ளரத்தந் — திறமாயோடுதே
எவ்விதமிதைச்சகிப்பே — னித்தனியானே
இவ்விதத்துயரமடைந்தென்று — மறியேனே
விறுவிறென்றுருதிகட்ட — விரல்கள்நோகுதே
பொறிகளெல்லாஞ்சிதைந்தேமிகப் — புண்ணதாகுதே
வேதியன்றனையேநீங்கள் — வேண்டியிப்போது
ஆதாவாய்க்கிட்டிதன்னை — யவிழ்த்திடவேணும்

(தே-வ-ம்.) பிதா இதோபாருங்கள் தங்கள் கரத்திற் கட்டியிருந்த கிட்டியையவிழ்த்துச் சிறியனை யென்கரத்திற் கட்டிவிட்டார் என்செய்வேன் புண்ணாகநோகுகின்றதே நான் எவ்வளவோ வா



ருந்தியும் மறையவருக்கு மனமிரங்கவில்லை நீங்களாவது அன்னவரை வேண்டிக்கிட்டியை யவிழ்த்துவிடும்படி செய்யுங்கள்.

## அரிச்சந்திரன் விருத்தம்.

கருணையங்கடலே யந்தக் கௌசிகர் ஆதாயானும்
பிரணவப்பொருளைப் போற்றிப் பெற்றபாலகனை நீத்
தருணம்வன்கிட்டி கட்டிச்சங்கடஞ் செய்தல் நன்றோ
சரணஞ்செய்கின்றேன் கிட்டிதன்னை வாங்கிடுவீர் நாதா.

## அரிச்சந்திரன்சொல் தரு.

இன்னமுநாதன்வரக்காணேனென்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயோசிறுபாலனையா — அவதிசெய்யவேண்டாமைய்யா

அநுபல்லவி.

கையதனிற் — கிட்டிதன்னைக்
கதறப்—பதறக் — கட்டினீர்நாதா (ஐ)

சரணங்கள்.

நான்குவேத — முந்தெரிந்த
நாதா—போதா — நன்மலர்ப்பாதா (ஐ)
இந்தவிதக் — கொடுமைசெய்வ
தேதோ—ஓதும் — எழில்மறையோரே (ஐ)
மதலையின்மே — லிந்தக்கோபம்
வந்த—தெந்த — வகைவேதியரே (ஐ)
காசிதேசம் — சென்றயானுங்
கடனை—யுடனே — கண்யாதருவேன் (ஐ)

(அரி-வ-ம்.) ப்ரபு சிறுவன் கரத்திற் கிட்டியைக் கட்டியதினுலென்ன பிரயோசனம் கரம்நோகுதென்று அலறுகிறான் கிட்டியையவிழ்த்துவி

சந்திரவதி விருத்தம்.

கல்லோதா னின்மனது கரையாதோ
வெங்கருக்காய்க் கருணை வாழ்வே
சொல்லிய பாலுகுல மதனைகையிற்
கிட்டிதனைச் சுருக்காக் கட்டி
அல்லல் புரிவது மழகோ வழுகின்றான்
சகிக்கமுடி யாமலந்தோ
ஒல்லையிற்கிட் டியைவாங்கு முத்தமனே
யுமதுபய பாதம் போற்றி.

---

## சந்திரவதிசொல் தரு.

அன்னகர் பூமியென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அந்தணரேயெந்தனருமை மகனுமிதோ
வழுகிறான்கிட்டியை யவிழ்த்திவிடும். (அ)

அனுபல்லவி.

கொந்தலரும்பூம்பாதா கோசிகமுனிநாதா
குவலயமோர்மூன்றும் பிரக்யாதா
செந்தளிர்க்கைவிரல்கள் சிந்தவொத்தமாருகச்
செல்லுதையைபோனீருஞ் சீக்கிரத்தில். (அ)

சரணங்கள்.

இந்தவனந்தனில்யாம் வந்தும்வரவுக்கெதிர்
சிந்தையாய்ப்பார்த்திருந்தோம் வந்திருயர்
சுந்தரனையுஞ்சிறு மைந்தனையுமகா
தொந்தரவுசெய்வது சுகிர்தமோதான். (அ)

பூசார்குலத்தைய்யா பன்னியும் புதல்வையா
போதனேகிருபைசற்று செய்யுமையா
காசிநகரஞ்சென்று மாசிலாமதனைர்
கடன்தொகைதருகிறோம் அடைவுடனே. (அ)



(அரி-வ-ம்.) சுவாமி அறியாத குழந்தைகையிற் கிட்டியைக்க ட்டித்தாங்கள் சுகிருதின்கொண்டிம்சைசெய்வது அழகா? தயவு செய்து கிட்டியை யவிழ்த்துவிடுங்கள்

(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உன்மனம்போலவும் உனது பத்தினிமனம்போலவுஞ் சிறுவன்கையிற் கட்டியிருந்த கிட்டியை அவிழ்த்துவிட்டேன் பணத்தைக் கொட்டடாகொட்டு.

(அரி-வ-ம்.) நாதா காசிமாநகரம் சேர்ந்து தருகிறேன் தயவு செய்யுங்கள்.

(நட்-வ-ம்.) நல்லது பிரயாணமாகுவாய்.

(அரி-வ-ம்.) ஆக்ஞைப்படி.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

மங்கையேமகனேகேண்மின் மானிலத்திருணீக்கிச்
செங்கதிருதயமானுன் சீக்கிரமாகநாமுந்
துங்கவேதியர்குலத்துச் சுருணையைமுந்தக்கொண்டு
மங்களஞ்சேருங்காசி மாநகர்க்கேகுவோமே.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

பாங்குயர் குடிகாவென்ற வர்ணமெட்டு.

இராகம் - உசேனி - தாளம் - சாபு.

பல்லவி.

நடந்துநீவாராய் ரஞ்சிதமே ரஞ்சிதமே-ரஞ்சிதமே. (ந)

அநுபல்லவி.

தொடர்ந்தெந்தனையேகூடி சுதனுடனீயுமோடி
மடந்தைநீயவருந்திடாது வாகுடன்-வாகுடன்-வாகுடன். (ந)

சரணங்கள்.

அன்னமேமாமயிலே சொன்னமேமாங்குயிலே
கன்னியேகலங்கிடாமல் கானிலே-கானிலே-கானிலே. (ந)

கஞ்சமலர்வதனை வஞ்சியேகிஞ்சுகமே
குஞ்சரியேவழியைக் கூடியே-கூடியே-கூடியே. (ந)

ஈசில்வாரணவாசி மாநகரும்காசி
தசமதற்குச்செல்வயே சீக்கிரம்-சீக்கிரம்-சீக்கிரம். (ந)

(அரி-வ-ம்.) மாதேசக்கிரவர்த்தி கண்மணி தேவதாசா வேந்ய ரோமுன்னமேசெல்லுகின்றார் ஆகையால் சீக்கிரம் பயந்தவர்கள் காசிமாநகரஞ்செல்லுவோம்.

பொ-வசனம்.

இவ்வாறு அரசன் சரயுநதியின்பக்கம் அடைக மந்திரி சத்தியகீர்த்தி கூடவருவதைப்பார்த்து அரசன் கூறுதல்காண்க.

அரிச்சந்திரன்சொல் தரு முன்னால்.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

பல்லவி.

என்வருகிறாய்மந்திரி நில்லு சொல்லு
தேசாகினுமுன்பாகிற் சொல்லு

அநுபல்லவி.

வான்சொரிகதுபோலுன் மலர்க்கண்ணீர்சொரிந்தனை
கான்செல்லுமெங்களுடன் காலந்தனைக்கழிக்கிறாய் (ஏ)

சரணங்கள்.

மதிருநியென்னுமந்திரித் தனமும்-சத்
வாய்மையும்பொறையும் விற்பனமும்
தநியதிநெறியும் கனமும்-நனை
நாட்டம்யமிருந்தவ மனமும்
வதியும்நீயில்லாவிட்டால் மாநகராசகதி
சதிரயநடத்துமுனி தனக்காமே மனத்தளர்வு (ஏ)

சீமைநிக்ஞானவை புண்டு-வேறு
வகைகொள்ளாமலுன்பங் கொண்டு
முனிவனால் கண்டு-செங்கோல்
நாத்துரின்திறப்பினை விண்டு
யானவனத்திற்சென்று பாதகத்திடல்போய்
சால்வுநக்குவந்த தலைவிதியென்னசொல்லாய் (ஏ)

க்ஞக்கேற்றபடி காலம்-உலகித்
வேண்டுமோவே சேலம்



அருமையும்விதிசெய்திடின் கோலம்-தன்னை
அகல்வதற்கேதுமுண்டோ மூலம்
குமரியமுதாய்வந்த கஷ்டம்விட்டுப்போகாது
விமலனருளின்னமெவ் விதமாமோதெரியாது (ஏ)

(அரி-தம்) மந்திரி சத்தியகீர்த்தி ராஜ்யத்தையிழந்து கானகஞ் செல்கின்ற எங்கள் கூட நீயேன் வருகின்றாய் அன்றியும் நீ வருவாயாகில் தவசிரேஷ்டரான கோசிகமுனிவருக்குத் துணையாயிருக்கிறார்கள் ஆகையால் நீசென்று அன்னவருக்குத் துணையாக இருந்து ராஜ்யமாளும்படிசெய்து கொண்டிரு எங்கள் வருத்தத்தை என்னுவதால் என்ன பிரயோசனம்.

மந்திரி விருத்தம்.

பார்த்திபாவுடைமைப்பணித்த பங்கயக்கரத்தால்வேறு
பார்த்திபர்முதலோர்தம்மைப் பணியவுமாட்டேனென்னைச்
சேர்த்துமேயழைத்துச்செல்வீர் சித்தமாய்மறுக்கிலித்த
ஆத்தினாற்கரையிற்றானே யடியனேனுயிர்மாய்ப்பேனே.

(மந்-வ-ம்.) புவனசக்கிரேஸ்பரா அடியேன் நவகண்டசக்கரவர்த்தியாகிய தம்மைப் பணிந்தகையால் மற்றவரைப் பணிவேனென் றினைக்குகின்றீரா ஒருபோதும் பணியமாட்டேன் ஆனதால் தயவுசெய்து அடியேனைத் தம்மோடுகூட அழைத்துச் செல்லவேண்டும் இல்லாதபக்ஷத்தில் இச்சரயுநதிக்கரையிலேயே என்னுயிரைவிட்டு விடுவேனே தவிரத் திரும்பவும் நகருக்குச்செல்ல மாட்டேன் இது சத்தியம் இதோ வுமது பாதாரவிந்தத்தில்வீழ்ந்தேன்.

(அரி-வ-ம்.) மந்திரிசத்தியகீர்த்தி என் கவலையடைகின்றனை முந்திருப்பாய்.

அரிச்சந்திரன் விருத்தம்.

வாழ்வினைவளர்ந்தபொழு தென்னின்மிகவாழ்ந்தாய்
தாழ்வினைநிறைந்தபொழு தென்னின்மிகத்தாழ்ந்தாய்
சூழ்வினைநமைக்கடிது சுற்றினவையெல்லாம்
ஊழ்வினைமந்திரி யென்னுடனீவருவாயே.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி நான்வாழுங்காலம் நீயும் வாழ்வடைந்தாய் இப்போது யான் தாழ்வடையுங்காலம் நீயும் அவ்விதமாகவெண்ணிக் கூடவருகிறேனென்கிறாய் வினையின்பயன் எப்படியாகிலுஞ் சரிகூடவருவாயாக.

(மந்-வ-ம்.) நல்லது பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதர்கட்கரசே சேர்மைந்தனே மதியே கேண்மின்
வேதியர் நம்மையேசி விரைந்துமுன் செல்லுகின்றா
ராதலா லதற்றுக்க மடைந்திடா தெந்தன்கூடப்
பாதையைக் கருதிநோக்கிப் பாங்குடன் விரைந்துவாரீர்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

கொடும்பாவி யானென்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

மங்கையே சேயே மதியே        வருவீர்நடந்திக் கதியே

அநுபல்லவி.

பங்கயன்செய்சற்பனையோ        பற்றியமுன்வினையோ
அங்கணுலகையிழந்தோம்        ஆரணியந்தனில்வந்தோம் (ம)

சரணங்கள்.

கற்களொடுமுட்களெல்லாங்        கால்களிற்றைப்பதால்வாடி
துக்கமிகக்கொள்ளாமல்        தொடர்ந்தென்னுடனேஓடி (ம)

சந்த்ரசேகரன்மெய்ப்போதன்        தாண்டவமாடியநாதன்
விந்தைசேர்பதந்துதித்து        வெயிலானதாற்சகித்து (ம)

மாதுலிசாலைகுடிநேசன்        மங்களகுணவிலாசன்
காதலுடன்வாழும்வல்ல        காசிநகருக்குச்செல்ல (ம)

(அரி-வ-ம்.) பெண்மணீ சந்திரமதி, மந்திரிசத்தியகீர்த்தி, குணமணி தேவதாசா வெயிலோ அகோரமாயிருக்கிறது விரைவில் நடந்துவாருங்கள்



## சந்திரமதி சொல்தரு.

நடக்கக்கால்நோகுதையோ வென்றவர்ணமெட்டு.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - சாபு.

கண்ணிகள்.

எந்தவிதமாநடப்பே        னிந்தவனத்தைக்கடப்பேன்
நந்தனே செஞ்சரணம்        சுழுக்கினதேதருணம் (எ)

கற்கள்வெருவாய்க்குத்துதே        கருவேலமுட்டைக்குதே
துக்கமோமென்மேலாகுதே        துய்யபாதங்கள்நோகுதே (எ)

வெயில்மிகவடிக்குதே        மேனியெங்குந்தடிக்குதே
தையல்மனம்வாடுதே        தாகவிடாய்நீடுதே (எ)

பையரவணிந்தநாதன்        பார்வதியாள்சமேதன்
செய்புஞ்சோதனைகளிதோ        திசைதோணவில்லையாதோ (எ)

(சந்-வ-ம்.) கண்மணா வெயிலோ அகோரமாயிருக்கிறது கற்களோ வெருவாய்க்குத்துகிறது பாதமிரண்டும் சுழுக்கிக்கொண்டதால் ரணமாகவலிக்கிறது யான்யெவ்விதம் நடந்துவருவேன்.

## தேவதாசன் சொல்தரு.

இந்தக்கோபமேதாகுமோ என்றவர்ணமெட்டு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோவெப்படிநடப்பேன்        இவ்வனத்தனில்

அநுபல்லவி.

செய்யபாதங்களெல்லாஞ்        சிவந்துகொப்புளிக்குதே
ஐயனேயெந்தன்மனம்        நையுதேஇந்தத்தினம் (ஐ)

சரணங்கள்.

கல்லுமுள்ளுகளெல்லாம்        காலில்தைக்குதே
தொல்லையயன்விதியோ        அல்லாற்காலகெதியோ (ஐ)

தாகவிடையாதுதே        தேகமெல்லாம்வேகுதே
ஓகோநானென்னசெய்வேன்        வேகமதாகவேதான் (ஐ)

(தேவ-வ-ம்.) மிதா அடியோமிகவுந்தகமிறது தாகமோமெமே ன்மேலாகுறது கல்லுமுள்ளுநும் பாதத்திற் றைக்கிறது யானிந்த வனத்திலெவ்விதம் நடந்துவருவேன்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

சிவமேயென்கதியதைப் பாரென்ற வர்ணமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-சாபு.

பல்லவி.

அரனே உன்னருளிதோ பரனே

அநுபல்லவி.

ஒருமகனுமலர்த் திருநகர்தேவியும்
பெருவனந்தனிலித் தருணந்துயருற (அ)

சரணங்கள்.

கங்காதரா கன்னிபங்காவா
பொங்கமிகும் வேரிப்பூந்தாரா
காசினிமுழுதுங் கோசிகர்க்களித்துத்
தேசம்வழிபா தேசிபோலகை (அ)

வினையோமற் றெவர்செய்சோதனையோ
தனைநேரிலா முனிசெய்சற்பனையோ
சங்கராநம்பை கொங்குலவுகொன்றை
திங்கள்திகழ்சடைப் புங்கவாவுயர் (அ)

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா எனதுபக்தியிலும் பார்க்கவும் இவ்வாரண்யத்திலிடமாக இவ்விதகஷ்டமடைவது உனதருளோ?

## அரிச்சந்திரன் சொல்தரு

பஞ்சவர்ணக்கிளியே வாடியென்ற வர்ணமெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - சாபு.

பல்லவி.

பெண்ணாசெவருந் தாதே-யென்ன
பிழைகள்செய்தேமோ புவிமீதே (பெ)



அநுபல்லவி

விண்ணோர்மாடவயோத்தியி லிருந்து
வேலையாட்கோபணிவிடை புரிந்து
வண்ணமாகவேயிருப்பதைத் துறந்து
வனத்திலிவ்வர்துகஷ்டமடைவதை நினைந்து (பெ)

சரணம்.

கோசிகமுனிவர்செய் சூதோ-அல்லால்
குன்றனிலீயோனரு ளிதோ-ஞான்றும்
பேசமுடியாததோர் வினையோ-அந்தப்
பிரமன்முடித்ததோர்சற் பனையோ
மாநிலாதாசிழந்து நாம்பர
தேசிபோலவந்திங்கு தேசாந்
தூசிகன்படத் தான்மிகர்கட
ஆசில்லாமலே யுதமெலிந்திடப் (பெ)

(அரி-வ-ம்.) கண்மணி விதியின்செயலுக் கென் செய்வோம் வருந்தாது நடந்துவருவாய்.

## அரிச்சந்திரன் சந்திரவதியிடம் பாலைநிலத்தின் வியாக்சொல்லுதல்.

முன்னூல் விருத்தம்.

கோடுசூழ்மலையின்சாரல் குறிஞ்சியாம் வனச்சார்முல்லை
நாடுசார் மருதமாகு நற்கடற் சார்வுநெய்தல்
நீடிய கொடுங்கோல்மன்னர் நெடுங்குடைக் கீழ்வாழ்கின்ற
பாடிலாக்குடிகள் போலப் படுநிலம்பாலையாமே.

(அரி-வ-ம்.) கண்ணே மலைசார்ந்த நிலம் (குறிஞ்சி) வனஞ் சார்ந்த நிலம் (முல்லை) நாடுசார்ந்தநிலம் (மருதம்) கடல் சார்ந்த நிலம் (நெய்தல்) கொடுங்கோல் மன்னர் குடைக்கீழ் வாழ்கின்ற குடிகள்போலப் படுநிலமானது பாலையென்பது சாஸ்திரம் அப் பேர்கொற்ற பாலைநிலம் அதோ தோற்றுகிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்.) கண்ணாளா பார்த்தேன் ஈதென்ன ஆச்சரியம்.

சந்திரமதி அரசனிடம் பாலைநிலத்தின் தன்மையைப்பற்றிச் சொல்லு முன்னால் விருத்தம்.

என்றுமமரர்க்கு வினையின்றி யான்முப்புர மெரித்தனலு மும்
வென்றிமதனைப் பொடிபடத்திருநுதற் கனல்விழித்தனலும்
வன்றிரை யெறிந்தெழு கடற்கணடு வைத்தவடவைக்கனலுமுற்
றொன்றுபட வந்துகுடிகொண்டவனுமாறந்தன விருப்பமெழுமே

(சந்-வ-ம்.) ப்ராணேசா பாருங்கள் சாக்ஷாத் சிவபெருமான் எக்காலத்தும் அமரர்களுக்குத் துக்கமில்லா திருக்கும்படி யாகத் திரிபுரத்தை யெரித்த அக்கினியும், அன்னவர் ஜெனகாதியர்க் காசக் கல்லால விருக்ஷத்தின் கீழிருந்து யோகஞ்செய்யுங் காலத்தில் இந்திரன் ஏவலினால் திருமால் சுதனாகிய காமராஜன் அருகில்வந்து கரும்புவில்லிற் பூட்டு பாணத்தைத் தொடுத்துவிட அச்சமயம் அன்னவர் நெற்றிக்கண்ணைத் திறந்து அம்மன்மதனை யெரித்த அக்கினியும், அலைகளுடைய கடல்நீரானது மட்டுமீறாதிருக்கும்படியாக அச்சமுத்திரத்தினுள்ளே வைத்திருக்கக்கூடிய வடவாமுகாக்கினியும், இந்தமூன்றும் ஒன்றாக வந்து கூடிக்கொண்டு எந்தயிடத்திலும் வெப்பம் உண்டாகத் தங்கியிருக்கிறது ஆகையாலந்தப்பாலை நிலத்திலெந்த விதம் யானும் பாலகனும் நடந்து வருவோம்.

அரிச்சந்திரன்சொல் தரு.

மங்கையரேகுண குணநிதியே-நீ
மபங்காமலேயிந்தத் ததியே-எழில்
தங்கமாகியவென்தோள் மேலே-சல்ல
சுகமாயேறிக்கொள்ளிக் காலே
வெங்கனலெரியுமிந்தப்பாலை நிலம்
வேகமாகவேகடந்து வெருநிலம்
பொங்கமாகவேசேருவதே நலம்
பொறுக்கமுடியாதிங்குற்ற சஞ்சலம்.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி உன்னாலிந்தக் கொடிய பாலைநிலை கூட்டிக்கடந்துவர முடியாதாகையால் பாலகனை மந்திரியெடுத்துக்



கொண்டான் நீஎன் தோள்மேலேறிக்கொள் சீக்கிரம் இந்நிலத்தைக் கடந்தப்பாற் செல்வோம்.

சந்திரமதி முன்னால் விருத்தம்.

பூமிதனுமன்மகனு மேறுதல்பொறாமல்
மாமுனிவனுக்குதவளித்த தின்மணித்தோள்
காமநெடுவேலினைய நாயினிகழ்பெண்பா
லாமெளியனேறினரகாழ்ந் தருவன்மன்னே.

(அரி-வ-ம்.) கண்ணாளா என்னவார்த்தை கூறினீர்கள் இலட்சுமிதேவியும் பூமிதேவியும் ஏறிக்கொள்ளுகிறதைத் தாங்கமாட்டாமல் ஒருபெரியகிழவனான முனிவனுக்குண்டாகக் கொடுத்த தேவரீருடைய அழகிய தோள்களிலே நாயைப்போற் பிறாலே யிகழத் தக்க ஓர்பெண்பால் அபலையான நானேறினால் நரகத்திலழுந்தி அழியுபடமாட்டேனோ ப்ரபு பிரமன் இப்போக்கொற்ற வார்த்தை யாகேட்க என்னைப் படைத்தான்.

நக்ஷத்திரயன் விருத்தம்.

வேலைசூழ்ஞாலமாண்ட வேந்தனே பகரக்கேளிப்
பாலையினடக்கவெற்றுப் பராக்கிரமமில்லையேயும்
சாலந்செய்யாமலந்தத் தவமுனிபொன்னைக்கொட்டாய்
சீலமாய்வந்தபாதை தேர்ந்துபான்செல்லத்தானே.

(நக்-வ-ம்.) அடா அரிச்சந்திரா உன்னுடன் இவ்வளவுதாரம் யான் அலைந்து வந்ததுபோதும் எனது காலிரண்டும் மிகவுநோகின்றது அன்றியும் பாலைநிலக்காட்டில் நடந்துவரவெனக்குச் சக்தியில்லையாகையால் முனிவர்பொன்னை யிவ்விடத்திலேயே கொட்டிவிடு யான் வந்தவழியைப்பார்த்துச் சீக்கிரஞ்செல்லவேண்டும்.

(அரி-வ-ம்.) ஸ்வாமி என்ன ப்ரபு இவ்வொரு சமயத்துக்கொவ்வொரு வார்த்தையாய்க் கூறுகிறீர்கள் நடக்கமுடியாத பக்ஷத்தில் பாலைநிலங் கடக்கும்வரை என்தோளின்மேலேறிக்கொள்ளுங்கள்.

(நக்-வ-ம்.) அப்படியானால் சரி





## அரிச்சந்திரன் நக்ஷத்திரய்யரைத் தூக்கிச்செல்லுதல்.

விருத்தம்.

தையலாமுமையாள்பாகா சங்கராகாசிவாசா
கையில்மான் மழுப்பிடித்த கருணையங்கடலேயீசா
வையமாமகனைத்தாங்கி வாழ்ந்தவென்புயத்திலிந்த
ஐயரைத்தூக்கிச்செல்ல வன்றயன்விதியோநாதா.

அரிச்சந்திரன்சொல் தரு.

நாதனைக்காணேனென்றமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

பல்லவி.

இக்கதிவிதியோதலைவி லெழுதினாய்பரசிவமே

அநுபல்லவி.

சிந்தையாகுலமில்லாது செங்கோல்வழுவாமலோங்க
விந்தையாயரசுசெய்தும் வேதியரைத்தோளிற்றூங்க (இ)

சரணங்கள்.

அடியதாடுகின்றதே ஐயோகால்கடுக்கின்றதே
வடிவுறுமேனியெல்லாம் வாதனையாய்நோகின்றதே (இ)

பாரிலுள்ளோர்பார்த்தவைக்கப் பயப்படுமிப்பாலையில்
பாரியாளும்பாலகனும் பதறியழவிக்காலையில் (இ)

பாரஞ்சுமந்துநடக்கப் பாமனேகூடுதில்லை
தீரமெல்லாமொடுங்குறதே திடங்கிஞ்சிற்றேனுமில்லை (இ)

அந்தணர்மாதவர்முதலோர்க் கனியாயஞ்செய்தறியேன்
மூக்குமறைசூத்திர முறைவழுவக்குறியேன் (இ)

சந்திரமதி விருத்தம்.

பாதியந்திங்கள்சூடும்பரன்றன தருளோவல்லால்
மேதினிதனில்யான்செய்த வினைப்பயன்தானோசொலீர்

காதிகாதலனுக்கிப்புங்கடன் றனைப்பெறவேவந்த
வேதியர்தன்னைத்தோளில் விரைந்துநீர் தாங்கலானீர்.

---

## சந்திரமதிசொல் தரு.

ஆனந்தனாருமைக்கண்மணியேயென்றவர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

வேதியனைச்சுமக்கவிதியோ — ஓவேந்தர்கள்வேந்தனே (வே)

அநுபல்லவி.

கோதிலாப்பானு — குலத்திலுதித்த
கோமா-திடதேமா-மலர்த்தாமா — வெழிற்பூமா-மறை (வே)

சரணங்கள்.

கால்களிரண்டுமிகச்சிவந்து — எந்தன்கண்ணாளா நீர்நொந்து
பாலைவனந்தனிற் — கோலமாய்நடந்து
பரிபோலதி-துரிசாகவே — கருணைத்திரள்-கருதாததோர் (வே)
காலகெதியிதுவோவறியேன் — முன்செய்கர்மமோகுறியேன்
ஞாலம்புகழ்கோமா — சீலகுமார
காதா-செழும்பாதா — குணபோதா-பிரக்யாதா-மறை (வே)

---

(சந்-வ-ம்.) ஆ என்பிராணநாதா இதுவுங்காலகதியா? தம்மை மகுடமுடிமன்னர்கள் யாவரும் பணிந்துபோக தற்சமயம் இந்தப்பாலைவனத்தில் வேதியனைச் சுமக்கலானீர்.

(அரி-வ-ம்) கண்மணி லலாடலிகிதத்தை மாற்றமுடியுமா? வியாகூலமடையாதே.

(சந்-வ-ம்.) அரிச்சந்திரா நேக்கு இப்போதெவ்வளவு சுகமாயிருக்கிறது இதுவரை நீ தூக்கிவராவிடில் மிகவுங்கஷ்டமடைந்திருப்பேன் இதோவனது தோளிலிருந்திறங்கிவிட்டேன் இனியெவ்வளவு தூரமானாலும் நடந்துவருகின்றேன்.

---

பொது விருத்தம்

சுட்டடிக்குமத்திட முனக்குமுற்றினு
விட்டெரிகொழுந்தழலி னெய்சொரிவிதம்போற்



கட்டறவிதேள்பணி கருங்குழலிபூர
மட்டறவனைத்துமுனி விட்டனன்வழிக்கே.

---

(அரி-வ-ம்.) கண்ணாட்டி யாம் அரிதானபாலை நிலத்தைக்கடந்துவிட்டோம் சீக்கிரம் நடந்துவருவாய்.

(சந்-வ-ம்.) ஆ! ஆ! கண்ணாளா இதென்னவதியாயம் தேள், நட்டுவக்காலி,செங்குழவி இவையெல்லாமொன்றாகக்கூடிக்கொண்டு காலிற்கொட்டுகிறது அரணை-பூரான்-பாம்பு இவையெல்லாங் கடிக்கிறது என்செய்வேன் எவ்விதமுய்வேன்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

கொண்டலைவென்றகுழ — லுடையாய்-சற்றுங்
கோதில்லாதகொடி — யிடையாய்-சீரார்
முண்டகமாமதி — முகத்தாய்-என்று
முனிவில்லாதநல்ல — வகத்தாய்

தண்டலையேயில்லா — வித்தவடவியிற்
சற்பங்குழலிவல் — லரணைபூரான்தேள்
அண்டியேநம — தழகியபூந்தாள்
அடிக்கடிதிடமாய்க் — கடிப்பதாலின்னாள். (கொ)

---

(சந்-வ-ம்.) கண்மணி யாம்செய்த தீவினைக்கு வருந்துவதி லென்னபலன்.

---

# அரிச்சந்திரன் கோமதியாறடையும்பாகம்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

கடையூரிசா என்னசெய்குவேனென்ற மெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாராய்சந்திர — வதியே — வருந்
காமன்ரதிச் — சதியே — நட (வா)

காரர்குழற்கண் மணி கவின்
காதேயெந்தன்பெண் மணி கூட. (வா)
கொடும்பாலைக்க டந்தோம் கோ
மதியாற்றின்பக்கம் வந்தோம் கூட. (வா)
தேமாவருக்கை கொன்னை உயர்
மாமாதுளைநற் புன்னை கூட. (வா)
சொல்லமுடியர் விண்ணே தொடும்
முல்லைநிலம்பார் கண்ணே கூட. (வா)
செங்கதிரோன் மறைந்தான் சீக்கி
ரமிருள்சூழ்ந்ததே தான் கூட. (வா)
இவ்விடமாயி ருந்தே விடிந்
தேகிடுவோம் விரைந்தே கூட. (வா)

---

(அரி-வ-ம்.) ஆயென் வனிதாரத்தினமே நாம் அயோத்தியா புரியிலிருந்து சரயுமாநதியையும் பாலைநிலத்தையுங்கடந்து இதோ கோமதியாற்றின் பக்கத்திலுள்ள மா, பலா, தென்னை, மாதுளை அசோகுமுதலிய பற்பலவிருக்ஷங்களடர்ந்த முல்லைநிலம் வந்துசேர்ந்தோம் சூரியனோ அஸ்தமனமாகிவிட்டான் அந்தகாரமோ சூழ்ந்தது ஆகையால் இன்றிரவு இச்சோலையினிடமாகத்தங்கி விடிந்தபின்னேகுவோம்.

(சங்-வ-ம்.) நல்லது ப்ரபூ.

---

# அரிச்சந்திரன் சந்திரவதிக்கு

## முல்லைநிலச் சிறப்புச்சொல்லுதல்.

அரிச்சந்திரன் முன்னிலைவிருத்தம்.

முன்னோர்பிருந்தையுடன் முயங்கிநலனுகர்மாயோன்
பின்னுமவ்வேட்கைப் பெரிதாகப்பல்லுருவ
மன்னநின்றவளுருவாம் வனங்கள் பலவளர்வனபீ
தென்னுநெஞ்சுவந்து கலந்திருந்துபரப்பதுமுல்லை.



(அரி-வ-ம்.) கண்மணி இந்த முல்லைநிலம் எவ்விதத்தன்மைபொருந்தியது, இதற்கு அதிதேவதையாரென்றாலோ அக்காலத்தில் க்ஷீராப்தியைக் கடையும்போது உதித்தமகா சவுந்தரியமுடைய பிருந்தை யென்னுமாதை சலந்தரசூரனென்றொருவன் விவாகஞ்செய்து கொண்டு சந்தோஷத்துடனிருந்தான் அவ்விதமிருக்குங் காலத்தில் சாக்ஷாத் கிருஷ்ணபரமாத்மாவானவர் அன்னவள் பேரில் மோகங்கொண்டு அந்த அசுரன் போலவே உருவெடுத்துச் சேர்ந்து கொண்டிருக்குந் தருவாயில் ஓர்நாள் பகவானைத் தன்னுடைய நாயகனல்லவென்பதுதெரிந்து அடாபாவி கற்புடைய என்னை இக்கோலஞ் செய்யலாமாவென்று அநேகவிதமாகத்தூஷித்துப் பின்னும் அடாசண்டாளா இதோ யான் அக்கினிப் பிரவேசமாகப் போகிறேன் அதனால் என்னுடையநாயகன் எவ்விதப்பிரிவாற்றாமையால் வருந்துவாரோ அதுபோலாக நீ இந்தச் சென்மத்திலல்லது மற்றெந்தச் சென்மத்திலாவது உன்பெண்சாதியைப் பிரிந்து என்னுடைய நாயகனைப்போலவே வருந்துவாயென்று சாபங்கொடுத்து அக்கினிப்பிரவேசமாகினள் அப்பால் எம்பெருமானுக்கு அன்னவள்மோகமே அதிகரித்துத் தயங்குங்கால் கைலையங்கிரி வாசனாகிய சிவபெருமான் தனது திரேகத்திலுள் கிஞ்சிற்று அழுக்கையெடுத்து அப்பிருந்தையிறந்த இடத்திற்போட அவ்வழுக்கே துளசிச்செடிகளாக வுற்பவித்தனள் மாதே அவளுருவமாகிய துளசிச்செடிகளதிகரித்து இந்த நிலத்திலிருப்பதாலேயே சாக்ஷாத்கிருஷ்ணபகவான் மனச் சந்தோஷமாக இந்த முல்லை நிலத்துக்குத் தெய்வமானார் மாதே கிருஷ்ணபகவானே இந்த முல்லை நிலத்துக்குத் தெய்வமானால் இந்நிலவளஞ்சொல்லமுடியுமோ?

(மந்-வ-ம்.) ப்ரபூ நீங்கள் யாவரும் இங்கிருங்கள் யானிந்தக் காவனத்திலுள்ள கனிகளில் நல்ல கனிகளாகக் கொண்டு வருகிறேன்.

(அரி-வ-ம்.) நல்லது சத்தியகீர்த்தி.

### மந்திரி கனிகள்கொய்யுந் தரு.

என்ன ஆச்சரியமென்ற வர்ணமெட்டு.

இராகம்-கலியாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

கனிகள்கொய்கிறேன் இதோ கனிகள்கொய்கிறேன்

அநுபல்லவி.

கனிகள்கொய்கிறேனிதோ கனிகள் கொய்கிறேன் (க)

சரணங்கள்.

பொன்னகராண்டவுதாரன் பூமனரிச்சந்திரன்
தன்னரும்பசிதணிக்கத் தகவுடன்றனே-வாழைக் (க)
என்தாய்சந்திரவதிக்கும் எழிற்றேவதாசனுக்கும்
துன்பமிசோயந்தவிர்க்கத் துரிதமாகவே-மாவின் (க)
தூயமுனிவர்நாதன் சொல்லொன்றுமறைவேதன்
ஆபாசங்கடாந்திடவே யாதரவாகப் பல (க)

(மந்-வ-ம்.) அரிசகவந்தனம் ப்ரபு இந்தப் பூஞ்சோலையிலிருக்கிற கனிகளில் நல்ல கனிகளாகப் பார்த்து வேண்டியமட்டுக்கொய்துகொண்டு வந்திருக்கிறேன் யாவரும் அருந்திப் பசியைத்தீருங்கள்.

(அரி-வ-ம்.) நல்லது மந்திரி.

(அரி-வ-ம்.) ப்ரபு என்னது மந்திரியார் கொண்டு வரலான கனிகளில் நல்ல கனிகளை யெடுத்துத் தங்களுக்காகக் கொண்டுவந்திருக்கின்றேன் இதனைப் புசித்துப் பசியைத் தணியுங்கள்.

### சந்திரமதியம்மாள்முன்னால் விருத்தம்.

தவமுனியுகிழத்து நெறிமுன்னுணர்ந்து
தோயுந்தயிர்நெய்பால் சோறிட்டருந்தாமல்
காயுங்கிழங்குங் கனியுமிலையுந்தின்று
வாயும்வயிறும் வளர்க்கிலேன் மன்னவனே.



(சந்-வ-ம்.) அட்டா அரிச்சந்திர னேயும் அந்த விஸ்வாமித்திர முனிவரும் பேசிக்கொண்ட விஷயங்களை யான் முன்னமே தெரிந்து தோய்ந்ததயிர், நெய், பால் ஆகிய இவைகளை நல்ல சோற்றுடனே கூட்டிச் சாப்பிடாமல் காய்களும், கிழங்குகளும், கனிகளும், இலைகளுந்தின்று வாய், வயிற்றை வளர்த்துக் கொண்டிராதுபோனேன் அப்படிக் காய்முதலியவற்றை முன்னே தானே தின்று பசியாறிப் பழகியிருந்தேனேயானால் இப்போதுண்பேன் பழகாததாலென் செய்வேன் சீக்கிரத்தில் ஷட்ரச வர்க்கத்தோடு போசனமளிக்க வேண்டும்.

### அரிச்சந்திரன்சொல் தரு முன்னால்.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

எங்கிருந்தே தருவேன் இந்தஇரவில் எவ்விடம்போய்வருவேன்

அநுபல்லவி.

பொங்கியபாலன்னம் பொறிக்கறிதப்பளம்
புகலுந்தயிர்நெய்முதற் போளிவடையப்பளம் (எ)

சரணங்கள்.

அரசநாடுநகரம் ஆனைதேர்பரிவாரம்
அனைத்துமளித்துப்பாலே வனத்தில்வந்தின்னேரம்
பாதவித்துநாங்கள் பட்டபாட்டின்கோரம்
பார்த்துமிவ்விதக்கோலம் பண்ணினலாகாரம் (எ)

சற்றுமிளம்பசியாதப மில்லார்போலே
சந்தர்ப்பமசந்தர்ப்பந் தனைபெண்ணுமல்பெண்மேலே
குற்றஞ்சொல்லிக்கனிகாய் கூடாதென்றுருக்காலே
கோபஞ்செய்தனைக்கொண்டு வாவென்றபடியாலே (எ)

(அரி-வ-ம்.) காதல் நாடுநகரயாவுமிழந்து காட்டுக்குள்ளாகியே துன்கெதியற்ற வேஷமுமான வெண்ணமிக்க ஆரண்யத்தில்அறு சுவைபதார்த்தங்களுடனே போசனமளிக்கச் சொன்னால் யானெங்கிருந்து கொடுப்பேன் தயவுசெய்து கோபங்கொள்ளாது இந்தக் கனிகளைப்புசியுங்கள் ப்ரபு.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா இந்தவார்த்தையுனக்கே நலமாயிருக்கிறதா? அப்பாற்செல்.

(சந்-வ-ம்.) சுவாமி! யாதொருகல் நெஞ்சராகிய விஸ்வாமித்திரர் நெஞ்சம்போல வலிதாகியதோ உம்முடைய நெஞ்சமும் தயவுசெய்து இக்கனிகளை யருந்திப்பசியைத் தணித்துக்கொள்ளும்.

(நட்-வ-ம்.) நல்லது சந்திரமதி அறிவிலிகளைப்போல யானருகுகளைப்புசிப்ப தற்குப்பூர்வீகவினை யேற்பட்டிருந்ததுபோலிருக்கிறது புசிக்கிறேன் நீவருந்தவேண்டாம்.

பொதுவசனம்.

இவ்வாறு அரசன்முதல்ஐவரும் கனிகளையருந்தித் தாகசாந்தம்செய்து ஆங்குநித்திரைசெய்யுங்கால் விஸ்வாமித்திரமுனிவன் மழைபொழியச்செய்யும் விதங்காண்க.

(விஸ்-வ-ம்.) ஆ! கடற்கதிபனான வருணா தற்சமயம் தயவுசெய்து என்முன்வரவேண்டும்.

(வரு-வ-ம்.) அநேகவந்தனம் முனிசிரேஷ்டரே அழைத்தகாரணம் யாது.

(விஸ்-வ-ம்.) ஓ வருணா! இந்திரன்சபையில் யான்செய்தசபதம் உனக்குத்தெரிந்தது தானே! அச்சபதத்தை நிறைவேற்றும் பொருட்டால் அரிச்சந்திரனிடஞ்சென்று தந்திரமாக நாட்டைக் கவர்ந்து மீண்டுங் கடனுக்குள்ளாக்கிக் காசிக்ஷேத்திரத்திற்குச் செல்லும்படி துரத்தினேன் அன்னவன்றோபார் பத்தினி புத்திரனுடன் சோலையில்நித்திரைசெய்கின்றான் ஆகையாலன்னவனவனை தயடையும்படியாக மழைபொழியச் செய்வாய்.

(வரு-வ-ம்.) உத்தரவுபோலச் செய்கின்றேன்முனிசிரேஷ்டா.

## அரிச்சந்திரன் மழைபொழிவதைக்கண்டு சொல்லுந் தரு

சே நூறன்னே சேவகவுதே யென்றவர்ணமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

பல்லவி.

மழைபொழிகின்றதென் செய்வோம் அடிமாக்குயிலே



அநுபல்லவி.

குழலிவெண்டிங்களணி கோமான்றிருவருளோ
தழைமேழுமேகமுங்கூடித் தணிவிலாது (ம)

சரணங்கள்.

மண்டலமும்விண்டலமும் மைபோலவிருள்மூடிக்
கொண்டுநவகண்டமதிரக் கோதாயிடித்து (ம)

மாமுனிவன்சாற்பனையோ மங்கைபாகன்செய்வினையோ
நாமிதற்கெங்குசெல்லுவோம் நடுவிரவில் (ம)

(அரி-வ-ம்.) ஆ! ஆ! மாதரசே எழுந்திருவீ தென்னவிபரீதம் ஆகாசமும் பூமியும் இருள்மூடிதலாய் அண்டபகிரண்டங்களெல்லாம் நடுங்கிவெடிபட முழங்கிமேகங்கள் நெருங்கிக் கொடிதான பெருங்காற்றுவீசி நவகண்டமு மதிரும்படி மழைகாலூன்றிப் பொழிகின்றது இந்தநடு ராத்திரியில் நாமெங்கு செல்லுவோம்.

(சந்-வ-ம்.) கண்ணாளா ('பட்ட புண்ணிலேபடுங் கெட்டகுடியேகெடும்.) என்ற பழமொழி நம்மளவிற் பொய்க்கா திருக்கிறது புத்திரனோ மழையினால் சரீரமெல்லாநனைந்து நடுங்குகின்றான் ஒருவேளை இவ்வாற்றில் ஜலம்பெருகிவந்தாலும் வரும் அதற்குள்ளாக நாம் இவ்வாற்றைக்கடந்து எவ்விதத்திலும் அக்கரைசெல்லவேண்டும் பிரபு.

(அரி-வ-ம்.) நல்லது கண்மணி.

(அரி-வ-ம்.) பிரபு இதோ பாருங்கள் வானமுழங்குதலாய் விடாமழை பொழிகின்றது சீக்கிரம்வாருங்களிவ் வாற்றைக்கடந்தப்பாற் செல்லுவோம்.

(நட்-வ-ம்.) அடா சண்டாளா இந்த மழையிலெங்கு வரச்சொல்கின்றயினா எம் பொன்னைக் கொட்டடா கொட்டு.

(அரி-வ-ம்.) பிரபு காசிக்குச் சென்று பொன் தருகிறேன் மழையில் நனைந்திங்கு தங்கியிருந்தினு லென்ன பிரயோசனம் எழுந்துவாருங்கள்.

(நட்-வ-ம்.) நல்லது புறப்படு சீக்கிரம்.

(அரி-வ-ம்.) மந்திரி சத்தியகீர்த்தி பாலகனைத் தூக்கிக்கொள்.

(மந்-வ-ம்.) உத்தரவு பிரபு.

அரிச்சந்திரன் விருத்தம்.

வேதியர்குலவிளக்கே மென்கொடியாளேசீரார்
நீதிமந்திரியேயாறு நிகழ்த்துவேனென்றுகேண்மின்
பாதகனெந்தன்பின்னே பாதையைப்பார்த்துபோந்தநல்
கோதிலாநதியைத்தாண்டிக் கொப்பெனக்கரைசேர்வோமே

## அரிச்சந்திரன்சொல் தரு

பஞ்சமாபாதகம் படாதாவென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாரீர்விரைந்தென்னுடன் வருந்தாமல்
வாகாயக்கரைசேர மயங்காமல் (வா)

பாரீர்மேகங்களெல்லாம் வான்படர்ந்து
பழவினையோமழைபெய் திறதடர்ந்து (வா)

ஆற்றுக்குள்ளிறங்கிறேன் மன்னோவாரும்
அக்கரைக்கேகும்வழி யதோதெரும் (வா)

காற்றடிக்குதேமனங் கலங்குறதே
காவிற்பாம்புகளொலாந் கத்துறதே (வா)

வெள்ளமிதோவெருவாய் வருகிறதே
மெல்லடிதனைப்பறித் திழுக்கிறதே (வா)

திங்களணிபரம னருளாலே
சேரிக்கரைவந்தோ மிக்காலே (வா)

(அரி-வ-ம்) மாதே சந்திரமதி நாம் சிவபிரானருளால் வேதியனையும் புத்திரனையுஞ் சத்தியகீர்த்தியையும் அழைத்துக்கொண்டு நதியைக்கடந் திக்கரைவந்து சேர்ந்தோம் இதோ மிருகங்களடர்ந்த காடாகவிருக்கிறது ஆகையால் இவ்விடத்தில் தங்கியிருந்து விடிந்த பின்னேகுவோம்.



விஸ்வாமித்திரன் வசனம்.

அரிச்சந்திரனை இந்த இராத்திரியில் மழையினாற் கஷ்டமடைந்து நதியைக் கடந்து காட்டில் வந்திருக்கின்றானாகையா லன்னவன் மிகவும் அஞ்சத்தக்கதாகச் சில பூதங்களை வரவழைத்தனுப்புகிறேன்.

## வேதாளம் வருகிறபாகம்.

பொது விருத்தம்.

பாதவமுற்றெழு பைம்பொழிறன்னி
லேதமிகுத்தவ ரெய்தியநாளில்
மாதவனேவிய வஞ்சனைபேயும்
பூதமும்வந்து புகுந்தனவன்றே.

வேதாளம் விருத்தம்.

ஆரடாவிவ்வனத்தி லிந்துபேர்வந்திருங்கள்
ஊரென்னபேர்தானென்ன வுற்றதோர்விபரமென்ன
சீரதாய்விரைவிதனைக்குச் செப்புவீரில்லையேல்யானும்
போர்செய்துவிண்டலத்திற் புக்கிடவனுப்புவேனே.

(வேதா-வ-ம்) அடாமானிடர்காள் நீங்கள் யார்? இந்தபெரிந்தவனத்திலிடமாக வந்திருக்கிறீர்கள் உங்கள் பெயரென்ன? உங்களூரெது? இங்குவந்த காரணமென்ன? விபரமாகக்கூறவேண்டும் இல்லையேல் அதனைப்பொருதி உங்களனைவரையும் விண்ணுலகஞ் சேர்த்துவிடுவேன்.

(நட்-வ-ம்) அரிச்சந்திரா இதென்னடா கோரரூபத்துடன் நம்முன்வந்து நிற்கிறது பயமாயிருக்குதேடா.

(அரி-வ-ம்.) பிரபு பயப்படாதீர்கள் வேதாளம்போலக் காணப்படுமென்ன தூரத்திவிடுகிறேன்.





அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தமாவயோத்தியாண்ட வரசனென்றெனையென்றால்
வந்துயேவழிமறித்து வாய்மதம்பேசுகின்றாய்
விந்தைசேர்வேதாளாநீ விரைவினிலகல்வாயன்றேல்
சிந்தையாயெமன்பதிக்குச் சீக்கிரமனுப்புவேனே.

அரிசந்திரன்சொல் தரு.

கோமளி விமலிபுனையென்ற வர்ணமெட்டு.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

| | |
|---|---|
| ஆடாநீயென்முன்னின்று | அதட்டிஅதட்டிப்பேசுரா |
| அறிவில்லாம | லேசுராய் |
| அங்கைவாளை | வீசுறாய் |
| ஆகாதடா | வாகாய்மூடா |
| ஏகாயடா | இந்தச்சமயம் |
| இவ்விடந்தனிலே | நில்லாமல் |
| ஆசாயமளாவுமிந்த | வடவிதன்னிற்குடிகேடா |
| அருகில்வந்து | நிர்மூடா |
| வழிமறித்ததே | கூடா |
| தட்டாவழி | விட்டாபதி |
| நட்டாவில்லை | யானுலிப்போதே |
| ஆக்கினையடைவாய் | கூறினேன் (ஆ) |
| அந்தமாவயோத்திக | ராண்டமன்னனடா |
| அரிச்சந்த்ரனென் | போடா |
| அறிவதனி | லோரடா |
| அட்டிசொல்லா | திட்டமாயும் |
| மட்டிலேநீ | யடிபணிகுவாய் |
| இல்லையே | லவதியையடைவாய் (ஆ) |
| கோசிகர்கடனுக்காகக் | காசிசெல்லுமென்முனம் |
| தோசியேயித் | தினம் |
| கூசிடாதகல் | மனம் |
| கொண்டேயெதிர் | தினடுமீண்டு |
| வண்டத்தனக் | கோட்டிசெய்குறாய் |
| இந்தக்கோலாலுனைக் | கொல்வேன். (ஆ) |

(அரி-வ-ம்.) அடா வேதாளா யாவிருப்பது அயோத்தியா நகரம் திருசங்குமஹாராஜா புத்திரன்யான் என்பெயர் அரிச்சந்திரன் இம்மாது என்பாரியாள், சிறுவன் எனது புத்திரன், அவர் என்னுடைய மந்திரி, இந்தப்புண்ணியவான், யான் விஸ்வாமித்திருக்குக் கொடுக்கவேண்டியகடன் திரவியத்தைப்பெற்றுக்கொள்ள வந்ததூதராகிய நக்ஷத்ராய்யர் மேற்கூறிய கடனைச் செலுத்துவதற்காகக் காசிமாநகரஞ்செல்கின்றோம் நீதர்க்கஞ்செய்யாது அப்பாற் சென்றுவிடு இல்லையேல் இந்தக்கோலினாலுனதுயிரை வானுலகஞ் சேர்ப்பேன்.

---

வேதாளம் விருத்தம்.

மன்னவனே யானென்றுகூறக் கேளாய்
வந்ததோர்கோப மூன்றுலகன்றதின்று
தின்னுதற்கு யாதொன்று மகப்படாமல்த்
தியங்கிவந்தேன் மிகுந்ததோர்பசியினாலே
உன்னருகில் மறைவாகவாடி நிற்கு
முருப்பெருத்த மறையவனைத் தருவாயானால்
நன்னயமாத் தின்றுபசி தீர்வேனென்ன
நவில்கின்றாயிப் பொழுதுராஜகோவே.

---

(வே-வ-ம்.) அரசனே உன்னுள்யநான் கொண்டிருந்த கோபமெல்லாமகற்றிவிட்டேன் தற்சமயம் எனக்குப்பசி யதிகமாயிருக்கிறபடியால் உன்பக்கத்தில் மறைவாகநிற்கும் கொழுத்தமறையவனைக்கொடுக்கும் பக்ஷத்தில் அவனைத்தின்று பசியைத்தீர்த்துக்கொள்வேன் நீங்கள் நால்வரும் சுகமாகக்காசிக்குச் செல்லலாம் என்ன தெரிவிக்கின்றாய்.

(நட்-வ-ம்.) அடா சந்திரா! என்னடா செய்வேன் இந்தப்பூதம் உங்கள் நால்வரையும் நீக்கிவிட்டு என்னைமட்டுந் தின்குறேனென்குறதே உன்னிடத்திற்பணத்தை நான் கேட்கவில்லை இந்தப்பூதத்தைச் சங்காரஞ்செய்துவிடு முனிவர்சொல்லுக்காகவும் உனக்காகவும் வந்துவிட்டேன் நானே ஏழைப்பிராமணன் உனக்குத் தெரியாதா?



(அரி-வ-ம்.) சுவாமி தாங்களேன் பயப்படுகிறீர்கள்.

(வேதா-வ-ம்.) அடா அரசனே பிராமணனைக் கொடுக்கிறதற்கு என்னசொல்கின்றாய்.

---

ஆரிச்சந்திரன் சொல்தரு.

கண்ணிகள்.

என்னடாநான்சொல்லச்சொல்ல எதிர்த்துச்சினத்துநாடுறாய்
எழில்வேதியரைத் தேடுறாய்
இகலுடன்வா தாடுறாய்
ஏண்டாவீணில் மாண்டுபோறாய்
வேண்டாமடா என்மொழியதை
இன்றுமறுக்காதேயடா. (ஆ)

---

(அரி-வ-ம்.) அடாவேதாளாநீவிஸ்வாமித்திரர்தூதராகியநக்ஷத்ராய்யரைப் புசிக்கக்கேட்பது ஞாயமல்ல மரியாதையாக வழியைவிட்டு அப்பாற்சென்றுவிடு.

(வேதா-வ-ம்.) அடா நாய்ப்பயலே இதோ வழியைவிட்டுக்கொண்டேன் நீசெல்கிறதைப் பார்க்கின்றேன்.

---

ஆரிச்சந்திரன்சொல்தரு.

ஆர்சொன்னாரிந்தத்துற்புத்தியென்ற வர்ணமெட்டு.

இராகம் மோகனம்-தாளம் ...

பல்லவி.

அடாவழியைவிட்டுவிடடா
யாரொற்போருக்குப்புறப்

அனுபல்லவி.

அடமூடனேவெகு படபடப்பாய்ப்பேசித்
திடமாகநிற்கின்ற குடிகேடாபெருமூடா. (அ)

சரணங்கள்.

கோடையிடிபோலக் கத்துறாய்-மெத்தக்
குதிக்கக்குதித்தெங்களைச் சுத்துறாய்-மூர்க்கா

வேடிக்கையென்றெண்ணு தேயடா-அந்த
மேலோகமுன்னைச்சேர் பேனடா-துட்ட
மிண்டாகன் மதிகெட்ட
வண்டா திண்டா சண்டா
விரைவினில் விரைவினில் விரைவினில் குடிகேடா. (அ

வாதாடுதல்சரி யல்லடா-நிற்கு
வலிமையிருந்தாலென்னை வெல்லடா-அடே
எதாகிலும்பதிற் சொல்லடா-சும்மா
எதிரேநிற்பதழ கல்லடா-அடே
எட்டியப்பாற் போடா
மட்டிப்பயலே மோடா
இத்ததி இத்ததி இத்ததி குடிகேடா. (அ

ஆரோன்நீதினைத் தாயடா-உந்தன்
ஆண்மைகளிங்குசெல் லாதடா-துட்டா
திருடன்தப்பியே பிழையடா-அல்லாம்
சேதிப்பேனிந்தக்கோ லையடா-என்ன
செப்புகிறாய் மூர்க்கா
ஒப்பிலாத்தூன் மார்க்கா
திருடா திருடா திருடா மாகுடிகேடா. (அ)

(அரி-வ-ம்.) அடா மூர்க்கா அட்டதிக்கு விஜயஞ்செய்துவெ ற்றிமாலை யணிந்தபஹுதார் அரிச்சந்திரனெனக் கேந்திற்றேனுமெ ண்ணுமல் வாதாடுகின்றாய் சரியல்ல வழியை விட்டுவிடுஇல்லையேல் யுத்தத்திற்குப் புறப்படு என்ன தெரிவிக்கின்றாய்.

(வேதா-வ-ம்.) அடாஅரசனே வாதாடாதே பக்ஷணஞ்செய் துவிடுவேன்.

அரிச்சந்திரன்சொல் தரு.

ஆரடியுன்பேருர் கூறடியென்றமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆரெனகினைத்தாய் வேதாளா-என
கண்டமதயாண்டபுகழ் கொண்டவரிச்சந்த்ரனெனே. (ஆ)



அநுபல்லவி.

பாருமுடனவந்து ஆரவாரங்கள்புரிந்து
பாபமாந்தனையேகேட்டாய் எப்பாகமதிகெட்டாய். (ஆ)

சரணங்கள்.

தேசமுழுதுமிழந்து மாசில்லாக்காசிக்குகந்து
செல்லுகிறேன்மறிக்காதே திடமுடா
ஆசறுவுன்னுயிர்தன்னை வாசவனுலகுசேர்ப்பேன்
அடாவழியைவிட்டு விடடாசீயுமிப்போதே. (ஆ)

மண்டலமெலாநடுங்க அண்டங்களெலாங்குலுங்க
மாதிரம்வாழ்யானைகளின் மனங்கலங்க
வண்டத்தனமாகக்கிட்டி திண்டோள்தனையேகொட்டி
வல்லபங்காட்டாதேபோடா எல்லைவிலாக்குடிகேடா. (ஆ

அருமைமதிமனைவி உரிமைச்சேயைத்தந்தாலும்
அந்தணரைக்கொடேனடா அரும்பாவி
வாருமபலமும்மிந்நிதி கருணமதிவிருந்தால்
மன்னனென்னையேதின்று நன்னயமாய்ச்செல்லகன்று (ஆ.

(அரி-வ-ம்.) அடா துஷ்டா அப்பாற் செல்கின்றையா என் னசொல்கின்றனை?

(வேதா-வ-ம்). அடா சிறுபூச்சி உன்னுயிரை இதோ வதைக் கின்றேன் பார்.

அரிச்சந்திரன்சொல் தரு.

என்றுமனதுக்கேற்ற மங்கையென்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாகு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

பூதமேவேதாளாநீயப் புறமோடிப்போடா-அப்
புறமோடிப்போடாபதிற் புலாமலே
புத்தியில்லாததிதார் மிண்டா-இந்தப்
புகலெந்தன்னினுத் தண்டா-ஐயோ
கத்தாதேசொல்லுக்கு ரெண்டா-எந்தன்
காலாலுதைப்பேண்டா வண்டா

கதறுமல் சிதறுமல்
கடுகியே அண்டவுடன்
கால்வேகமாகப் (பூ)

வாதகூறிநிற்பதுனக்கு மார்க்கமல்லடா-மார்க்க
மல்லடாஉந்தன் மனமுங் கல்லடா (வா)

வல்லபங்காட்டாதே நாயே-இந்த
வனத்தினிலுறை பேயே-எந்தன்
சொல்லைத்தடுத்தெதிர்த் தாயே-முனி
ஆதனதனையே கேட்டாயே

அணிப்பெண்டா பிணிப்பெண்டா
அரிதமாய்த் தரணியிற்
சுகம்பெறவென்றால் (பூ)

(அரி-வ-ம்.) அடா சண்டாளா விலைவிலேகுகின்றனையா என்ன சொல்கின்றனை.

(வேதா-வ-ம்.) அடா அரசனே அந்த ஐயனைப் புசிக்காமல் போகமாட்டேனடா உன்னுயிரன்றனைப் பாரடா?

## அரிச்சந்திரன்சொல் தரு.

வந்தார் வந்தார் வடிவழகரென்றவர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

வாடா வாடா பெருமூடா வலிதாகப்போர்புரியக்கேடா
வாடாநீ யெனக்கீடா வனதுயிர்தாடா விரைவினில்வீணுக

வாது செய்யாதே-பெரும்
வம்பு பேசாதே
நீதி தப்பாதே-ஒரு
நிமிஷத் திப்போதே

கோதுக்கஞ்சாதே-புனிக் கொல்லுவேன்
யானிதோ பார்-பார்-பார் (வா)



கோசிகர்தன்கடனுக்காகக் காசிசெல்லென்மனமிகநோக
கொக்கரித்தனை எக்களிப்புடன் இக்கணத்தினில்மிக்கவேதான்

குணமிலாப் பேயே-குதி
குதிக்குதின் றுயே
பிணத்தின்னும் நாயே-என்
பிதற்றுறாய் நீயே.

குதனத்தில்நொந்தாயே இதோ
சாத்திடுவேன்கொல்வேன் தான்-தான்-தான் (வா)

மாநிலமேலமாதேசம் மாமுனிக்கீய்ந்திறைவேஷம்
மாறியொருவகைதேறிவினைவலி கூறிவந்தனனுதலினல்

வலிமைமோ மோடா-ஒகோ
வழுத்தவா யடா
விலிபிதா மோடா-கெட்ட
வினைவினை விடடா
அலையாதே யடா - இந்த
அடவியிலெசாடியிலென் முன் முன் முன் (வா)

(அரி-வ-ம்.) அடா வேதாளா என்ன தெரிவிக்கின்றனை.

(வேதா-வ-ம்.) அடா அரசனே ஐயனைக்கொடுத்துவிடட

## அரிச்சந்திரன் சொல் தரு.

பஜுரிமோரி பியாரி என்ற வர்ணமெட்டு.

இராகம்- இந்துஸ்தான் பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மதிகெட்டமூடா வந்தவழி செல்லடா

அநுபல்லவி.

கதிகொண்டெதிர்க்க சுத்தவீரியதிரத்தை
சதிசெய்வினைதீர்த்து அ - ஆ (மதி

சரணங்கள்.

வாது செய்யாதே வல்லபம் பேசாதே
நீதியில்லாப்பேயே அ-ஆ(மதி

ஆங்காரங்கொண்டு நீங்காமொழிவிண்டு
ஓங்குகிறாய்வெகுண்டு அ-ஆ(மதி)
ஐயனைத்தாவென்று வையமதில்நின்று
நையலானயகனன்று அ-ஆ(மதி)
நாடிழந்தாலும் நகரிழந்தாலும்
பீடார்பெலம்பேர்போமா அ-ஆ(மதி)

(அரி-வ-ம்.) அடாவன வேதாளா மரியாதையாக வந்தவழியைப் பார்த்துச் செல்கின்றாயா? அல்லது இந்தக் கோலுக்கிரையாகுகின்றையா?

(வேதா-வ-ம்.) அடா அரசனே நீ என்னுடைய வனத்துக்கு வந்ததுமன்றித் தூஷணமாகப் பேசலுற்றாய் ஆகையாலுன்னை லேசாகவிட்டு விடுவேனென நினையாதே.

---

## அரிச்சந்திரன்சொல் சிந்து.

என்னடிநான் பெற்றமங்கை என்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

ஏதடா நீ ஞாகவாது எண்ணிடா துப்பிப்போது என்னோ
டெதிர்த்துச்செய்குறாய்நீது வருதும்
என்னள்வந்தப்பாது தள்ளுகிறாயாகாது
ஏதுவாயப்புறம்நீயே ஓங்குமிவ்வனமவாழ்கின்றபேயே

புத்தியில்லாப்பெருமட்டி வெடிசுட்டித்தொடைதட்டியேதோ
புகலுகின்றனையதட்டி நீகேள்
பொல்லாதடாவென்கோபம் செல்லாதுன்பரிதாபம்
பேர்நிறுத்தேனென்றுணர்வாயே பெருங்
கோதாயலைகின்ற நாயே

தட்டரைவெற்றிகொள்திறல் வீரன் மா கெம்பீரன் இந்தத்
தொல்புவிமீதிலுதாரன் என்று
சொல்லிடுவாரென்னையடா எல்லாருணராயோடா
அஞ்சாதேகைபின்கோலாலே என்னை
சொல்கின்றாய் பதிலுக்காலே



(அரி-வ-ம்.) அடா மூர்க்கா மரியாதையாக வழியைவிட்டு அப்பாற் செல்கின்றாயா அல்லவா?

(வேதா-வ-ம்.) அடா அரசனே நீ யென்னோடுகூட யுத்தஞ் செய்வதற்கு தகுதியானவனல்ல ஆகையால் மரியாதையாகத் தனை எனக்குத் தத்தஞ்செய்கிறாயா இல்லையா என்ன தெரிவிக்கின்றாய்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு

இராகம் - கமாசு - தாளம் - ஆதி.

பல்லவி.

என்னடாவேதாளா ஏதிரடுகிறாயித்தகி (எ)

அநுபல்லவி.

பொன்னகரயோத்தியாண்ட போதநீதெனென்றெண்ணுமல் (எ)

சரணங்கள்.

புத்திகெட்டபெருமடா பொறுமையில்லாதகேடா
எத்துவேன்காளாடா எதுபயமில்லையடா (எ)
குறும்புசெய்தேயிக்காலே கொக்கரிக்கிறாய்மென்மேலே
குறும்படாதேயெனக்குச் சொன்னேனேமுன்னேயுனக்கு (எ)
ஜாலமதுசெய்யாதேடா சடுதியிலுன்னைநானடா
கோலாற்பூசைபோட்டேனடா குவலயத்திலிருண்டாயடா (எ)

---

(அரி-வ-ம்.) சுவாமியான் எவ்வளவு புத்தி போதித்தும் கேளாதெதிர்த்த வேதாளத்தை இதோ பாருங்களிந்தக் கோலினாற் பூமிக்குள்ளிருக்கும்படியாகச் செய்துவிட்டேன்.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா உன்னையிதுவரை இலேசாகவெண்ணியிருந்தேன் தற்சமயம் மலைபோலாக வந்தவேதாளத்தைப் பூமியிலிருக்கும்படியாகச்செய்துவிட்டாய் ஆகையால் உன்னோடெனக்குவரப்பயமாயிருக்கிறது திரவியத்தைக் கொட்டு.

(அரி-வ-ம்.) பிரபு காசிமாநகரஞ்சென்று தருகின்றேன்.





# அரிச்சந்திரன் காசியை நாடிப்போதல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மடமயிலாளேயெந்தன் மைந்தனேமந்திரியேகேண்மின்
கொடியதோர்வனத்தில்நம்மைக் கொல்லவேயெண்ணிவந்த
திடமுயர்வேதாளந்தான் தீர்ந்தனவாகையாலே
படிபுகழ்காசிசெல்வோம் பாங்குடனடந்துவாரீர்

## அரிச்சந்திரன்சொல்தரு.

ஆ-ஆ-ஆ-காந்தனுனமந்திரியே யென்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

வா-வா-வா மடமாதரசே மதிமயங்காமல்
ஆயாசமயங்காமல் மிகத்தயங்காமல் (வா

அநுபல்லவி.

கானின்வழிநடக்க பாவியெனைத்தொடர்ந்து
ஆவிதளராமலே தேவியேபேக்காலே
அழுகாமல் பெண்ணே அழுகாமல்
அயரில்அழுகாமல் ஓடி (வா)

சரணங்கள்.

எழுமரிசதியோ கோலகாலசெதியோ
ஞாலத்தனிற்பிறந்தோம் பாலிலத்தில்வந்தோம்
நங்கையாளே காந்தன் நங்கையாளே
இளமங்கையாளே ஓடி (வா)

அன்னநடையினளே மின்னலிடையினளே
கன்னித்தொடையினளே பின்னற்சடையினளே
கண்மணியே இரு கண்மணியே
சீரார்பெண்மணியே ஓடி (வா)

(அரி-வ-ம்.) பெண்ணே சந்திரவதி நாம் கோமதியாற்றின்க் கரையிலிருந்து அநேகவனங்களையும் அநேகமலைகளையும் சோணமாநதி, காளயாறு என்றுசொல்லப்பட்ட அநேகநதிகளையுங்கடந்து இதோ யமுனாநதிக்கரையினிடமாக வந்து சேர்ந்தோம் இனை

யால் நாமெல்லோரும் சற்றுநேரமிங்கு வீற்றிருந்து அப்பாலெழுந்து செல்வோம்.

(சந்-வ-ம்.) நல்லது ப்ரபூ.

## பொது வசனம்.

இவ்விதம் அரசன் முதலிவரும் யமுனாநதிக்கரையில் வீற்றிருக்குந் தருணம் விஸ்வாமித்திரர் அரசனிடம்வந்து பொய்சொல்லச் சொல்கிறவிதங்காண்க.

## விஸ்வாமித்திரர் வருகிறதரு.

தாமவிபோகருணாகரா வென்றவர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

வனந்தனிலே வந்தேன்கோசிகனும்யான்

அநுபல்லவி.

சினமோருருவுடையேன் தினமுந்தவமுடையேன் (வ)

சரணங்கள்.

அயோத்திநகரையாண்ட அரிச்சந்திரன்றனைநாடி
நயத்தமொழியினாற்பொய் நவிலச்சொல்லவேஓடி. (வா)

(அரி-வ-ம்.) முனிசிரேஷ்டா அநேகவந்தனம்.

(விஸ்-வ-ம்.) கல்யாண்.

## அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

எந்தநாயகவுமக்கெமர்கெடும் பிழைபிழைத்தனர்கொலோ
தந்தமாநிதியினிற்சிலகரந்து சிலதந்தவனவோ
டந்தமேவல்தவறிச்சிலர் பிழைத்திதிநுரைத்தனர்கொலோ
வந்தகாரணமெடுத்தினி துரைத்தருள்வருத்தமறவே.

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா என்னைச்சேர்ந்தமந்திரி முதலாயினோர், கொடிதான குற்றங்களைசெய்தார்களோ? அல்லது நான்கொ



டுத்த திரவியங்களிலே சிலவற்றைமறைத்துக் கொண்டு கொடுத்தவையுண்டோ? அல்லது தமது ஏவலுக்குத்தவறுதலாக எதிர்த்துப் பேசினவர்களுண்டோ? மற்றியாதோ? தேவரீரிங்கெழுந்தருளிய காரணம் இன்னதென வுத்தரவாகப் பிரார்த்திக்கின்றேன்.

## விஸ்வாமித்திரன் அரிச்சந்திரனைப் பொய்சொல்லச் சொல்லும் முன்னால் விருத்தம்.

இந்தவெங்கடம்புனைந்துடல் தளர்ந்துயிரிடைந்தனையெனை
நொந்தனன்மனதுநொந்துபடர் சிந்தனைதவிர்த்திடமுனி
தந்தநாடுநகர்தந்ததில்லை தந்ததில்லையென்றமொழிதக்
தந்தநாடுதனில்வந்தரசு கொண்டுநீவாழவாழுடனே.

(விஸ்-வ-ம்.) அரிச்சந்திரா வேறொன்றுமில்லை நீ காட்டிலேவந்து உடம்பு தளர்ந்து மனம்வருந்தினையென்று நான்மனம்வருந்தினேன் ஆகையாலிப்படி வருந்தின துன்பம் என்மனதை விட்டெப்போக முன்னே நீ கொடுத்த நாடும் நான் கொடுத்ததில்லை நகரும் நான் கொடுத்ததில்லை என்று ஒரு பொய் சொல்லிவிட்டு அயோத்திக்குவந்து உன்னரசாட்சியைக் கைக்கொண்டு வாழ்ந்திருப்பாய் என் வீணாகவருத்தமடைகின்றனை.

## அரிச்சந்திரன்பொய்சொல்தல் தீதெனவுரைப்பதற்கு முன்னால் விருத்தம்.

எந்தநல்துயிருமெங்கிளை ஞரின் னுயிருமென்னுயிர்களும்
சந்தினும்முடல்பனைதக்க நாகத்திலிருந்திவிடினும்
முந்தவர்தனாதிந்திட மொழிப்படியளித்தபொருளைத்
தந்ததில்லையெனவுன்றவிவதிர் நின்றனைசெய்தருவதோ.

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா கவனிக்கவேண்டும்எனக்குடைய உதிரம் என்னுடைய வுடைய ஆதிரும் மற்றும் எனைய்கிலைபெற்ற வுயிர்களும் அழிந்தாலும் அன்றியும் எங்களுடம்பு பதைக்க எங்களை நரகத்திலே கொண்டுபோய் அமிழ்த்தினாலும் முன்னே பிராமணர்கள் யாவருமறிய உமக்குக் கொடுத்த பொருள்களைத் தமக்கு முன்னே கொடுத்ததில்லை யென்று பொய் மொழி [illegible]

ளே? "எல்லாம் விளக்கும் விளக்கல்ல சான்றோர்க்குப் பொய்யா விளக்கேவிளக்கு" அதாவது அறனிலே நிறைந்த பெரியோர்களுக்குப் புறத்திருளை நீக்குகிற உலகத்திலாரது விளக்குகளெல்லாம் விளக்குகளாவனவல்ல அகத்திருளை நீக்குகிற பொய்யாமையாகிய விளக்கே விளக்காம் என்று கூறப்பட்ட சாஸ்திரத்தைத் தாம் தெரிந்து கொள்ளாதவரா தெரிந்தும் என்னிடமிவ்வித அசம்பாவிதமான வார்த்தைகளைக் கூறுவதுமக்கழகா இனிமேலிந்த நினைவை விட்டுவிடும்.

(விஸ்-வ-ம்.) அடா அரிச்சந்திரா என் வார்த்தையைத்தடுக்காதே தடுக்கிலோ இன்னும் பலவிதமான கஷ்டங்களேற்படும்.

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா நீசப்பெண்களைச் சேருதலும் பொய்கூறுதலுமன்றி மற்றெவ்விதக் கஷ்டம்வரினுமதையெதிர்பார்க்கமாட்டேன் இது சத்தியம்.

(அரி-வ-ம்.) மாதே சந்திரவதி காசிதேசம் இவ்வளவு கொஞ்சதூரந்தானிருக்கிறது நாமெல்லோரும் இந்ததினைக் கடசெல்லுவோம்.

பொது விருத்தம்.

வெஞ்சினக்கௌசிகன் வேதியன்றனை
வஞ்சினத்தழைத்துடன் வல்லநாவினை
நஞ்சினிற்றோய்த்ததே போலநன்கிலா
நெஞ்சினுக்குறுவினை நிகழ்த்தியேகினன்.

விஸ்வாமித்திரன் அக்கினிபகவானையழைக்கும்விருத்தம்.

இந்திரனவையில்யானு மெண்ணிடாதுரைத்ததானவித்தைசேர்சபதந்தன்னால் மெலிந்தனனதனாலே
சிந்தையாவெவருமேற்றுந் தீக்கடவுளேநீர்தேர்ந்தேயிந்தநல்வேளைதன்னில் இவ்விடம்வருவீர்தேரா.

அக்கினிபகவான் வசனம்.

அநேகவந்தனம் முனிசிரேஷ்டரே அழைத்தகா...



(விஸ்-வ-ம்.) வாரும் அக்கினிபகவானே இந்திரன் சபையில் வசிஷ்டனும் நானும் செய்துகொண்ட சபதந் தமக்குத்தெரிந்த விஷயமே அதனிமித்தம் யான் அரிச்சந்திரனிடம் வந்து நாடுநகர் முதலிய யாவற்றையும் பறித்ததுந்தவிர மற்றும் அனேக கஷ்டங்கள் புரிந்ததிலும் பொய்சொல்லக் கூடாது என்று எனக்குப் புத்திசொல்கிறானே தவிர அவன் பொய்யுரைக்கிறதாயில்லை ஆகையாலன்னவனதோ யாரும் பத்தினி புத்திரன் மந்திரியுடன் காசிக்குச் செல்கின்றான் அவன் செல்லுங் காடுகளையெல்லாம் எரித்தும் அவனையும் நெருக்கிச்சுட விரும்புகிறேன் இவ்வளவுதவி எனக்குத்தாம் கட்டாயஞ் செய்யவேண்டும் என்னதெரிவிக்கின்றீர்.

அக்கினிபகவான் விருத்தம்.

கற்பினின்மிக்கவன்கன்னி நன்னெறிப்
பொற்பினன்மன்னன்யான் சுடவும்போகிலேன்
வெற்பினின்றருந்தவ வெகுளியடக்கினின்
சொற்படிமறுக்கிலேன் சுடுவன்யானுமே.

(அரி-வ-ம்.) முனிவரே சந்திரவதியோ பதிவிரதா தருமத்திற்சிறந்தவள் அரசனோ நன்மார்க்கமான அறநெறியிலே சிறந்தவன் ஆகையால் நான் அவர்களைச் சுடுகிறதற்காகப் போகமாட்டேன் வேண்டும் பக்ஷத்தில் நான் இந்தக்காடுகளையெல்லாம் உம்முடைய சொல்லின்படியே தகிக்குகின்றேன்.

(விஸ்-வ-ம்.) நல்லதப்படியே செய்யும்.

பொது வசனம்.

விஸ்வாமித்திரன் சொற்படிக்கிசைந்து கடவுள் காடுகளையெல்லாம்வளைந்து தகிக்கலானான்.

# அக்கினியாற்றுப் பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாக்குயிலனையமென்சொல் வந்தியேவழுத்தக்கேளாய்
திக்கிலாய்முனியாற்றைக் கடந்தனம்பியோதம்முன்
ஒக்குசலாக்கித்தோன்றும் வனமெலாமொன்றுப்பற்றிப்
பார்த்திடனெறியுதேயப்பாதையெவ்விதங்குச்செல்வோம்.

அரிச்சந்திரன்சொல் தரு.

கொண்டல்வண்ணு கோபாலா என்றவர்மெட்டு.

இராகம்-பிலாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னமாயமிதோ வழியேன்

அநுபல்லவி.

வன்னியயிதோவனைத்து வானம்வரையுயர்ந்து
பின்னமாகத் தகிக்குறதே (என்)

சரணங்கள்.

மாதவமுனிகுதோ மங்கைபாகன்செய்திதோ
மாதரசே மடமயிலே (என)

திக்கனைத்தும்படர்ந்து மிக்கபுகைபடர்ந்து
திக்கெனவேசூழ்ந்து கொண்டதே (என)

அண்டரெண்டம்வெடிக்கக் கண்டவரெலாந்திகைக்க
மண்டுதேபார் கொடுந்தழலும் (என)

எந்தவிதத்தாலிந்த வெந்தழலைக்கடப்போம்
சந்திரவதியே தையலே (என)

(அரி-வ-ம்.) அடி மாதரசே யீதென்ன ஆச்சரியம் நம்முன்னாகதோன்றக்கூடிய வனமுழுமையும் பற்றிக்கொண்டு அண்டம்வரையுயர்ந்து அஷ்டதிக்கினும்பரவினதியதான இந்தநெருப்பு எந்தநெருப்போ தெரியவில்லையே?



(சந்-வ-ம்.) சுவாமி இந்த நெருப்பின் தன்மையை எவ்விதமறிந்து சொல்வேன் ஒன்றுந்தெரியவில்லையே ஐயோ இது எவர் செய்தபாடமோ அறிகிலேன்.

நக்ஷத்திரயன் விருத்தம்.

கண்டவெம்பசியிறைமைன் றுதாவியே
யண்டகோளத்தினை யடர்ந்தசெந்தழல்
மண்டலத்தரசர்தம் மரபிலோருயி
ருண்டலத்தெகில தணர்வைமன்னனே.

(நக்-வ-ம்.) கௌரயரசனே கொடிய பசியினால் கொதித்து அண்டகோளத்தைப் பரவிப்பற்றலான இந்த நெருப்பானது இந்தவுலகத்திலுள்ள அரசர் குலத்திலே ஒரு உயிரைச்சுட்டுத்தின்றாலல்லது வீணைபோகமாட்டாது இது நிச்சயம்.

(அரி-வ-ம்.) ப்ரபு ஈதென்ன விபரீதமாயிருக்கிறது.

அரிச்சந்திரன் விருத்தம்.

சந்திரவதியே சீரார் சற்குண மதியே சேயே
வந்தெதிர் தணலின் றுமன்னவன் யான் வீழ்கின்றேன்
சிந்தையாகுலங் கொள்ளாது செப்பொணுக் காசி தேசம்
அந்தணரோடு சென்றுங் கருங்கடன்றனைத் தீர்ப்பீரே.

(அரி-வ-ம்.) பெண்ணே சந்திரவதி மந்திரி சத்தியகீர்த்திகண்மணி தேவதாசா தற்சமயம் தம்மைச் சூழவருவதான இந்த அக்கினியில் யான்வீழ்ந்து விடுகிறேன் நீங்கள் மூவரும் இந்த மறையவரை அழைத்துக் கொண்டுகாசி தேசஞ்சென்று முனிவருக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்கு வழி செய்தனுப்புங்கள்,

மந்திரி விருத்தம்.

அந்தமாயவனியாளுமரசர் கட்கிடுக்கண்வந்தால்
மந்திரிதீர்க்கவென்றே வழுத்திடுமறைகடேர்ந்த
வெந்தையேயிதோநம்முன் னெறிதணல்தன்னில்வீழ்வேன்
சிந்தையாற்காசிநோக்கி விரைவுடன்செல்லுவீரே.

(மங்-வ-ம்.) அரசர் கட்கரசே பூமியாண்ட வேந்தர்களுக்கு யாதொருதுன்பம்வந்தால் அத்துன்பத்தை மந்திரிகள் தான்தீர்க்க வேண்டுமென்று கூறப்பட்டசாஸ்திரம் தாங்கள் தெரிந்ததுதானே அன்றியும் அக்கினியானது ஒருபிழைப்புசிக்காது விடாதென்ன மறையவர்கூறுகின்றார் ஆனதால் மந்திரியாகிய யானிதோ இவ்வக்கினியில் வீழ்ந்துவிடுகிறேன் தாங்கள் எல்லோருங் காசிக்கே சென்றுங்கள் உத்தரவுகொடுங்கள் பிரபு.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி என்னவார்த்தைபகர்ந்தனை இந்த நெருப்பானது அரசருபிழையல்லது மற்றோருபிழைப் புசிக்காதென மறையவர்கூறிய வசனத்தைக் கேட்டாயன்றோ அவ்விதமிருக்க நீ யிந்த அக்கினியில் வீழ்ந்திறந்தால் யானும் உடனே யிறக்கவேண்டியதுவரும் ஆகையானுன்னுடைய பிழைவிடுகிறது ஞாயமல்லவென் உயிரைவிடுகிறதே மிகவுநலம்.

(மங்-வ-ம்.) அரசே தாங்கள்சொல்வது ஞாயமாயினும் யான் தங்களை விழவொட்டேன் பிரபு.

## அரிச்சந்திரனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்கம்.

ஐயோவீதென்னகாலம் அருக்கினியேயென்றவர்ணமெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

### சந்திரவதி சொல்தரு.

மன்றுவிடையருள்வீர்மங்கை யானே-முன்னம்
வளருந்தழல்விலக்கவாகாய்த் தானே

### அரிச்சந்திரன் சொல்தரு.

மன்னவனாணிருக்குமங்கை யானோ-மிக்க
வார்த்தைசொல்லலாகுமேசெங்கை யானே

சந்திரவதி.

மெருபுயாசனேமெல்லி நானே-இதில்
வீழ்ந்தாற்கொன்றுவிடுமோ என்கோனே

அரிச்சந்திரன்.

மாதேஞர்வேக்குருபிர் வாங்காது-கொடும்
வடவைகிருஞ்சொதி நீங்காது



சந்திரவதி.

கற்பின்ஜலத்தினாலே கண்ணாள-தீயைக்
கன்னியிதோவவிப்பேன் பூந்தாள.

அரிச்சந்திரன்.

பாவையர்கீர்த்திசெய்வ தாகாது-இந்தப்
பாலகனைப்பாதுகாப்பாய் தவறாது

சந்திரவதி.

கலபிடர்பெண்களுக்கு நாதனாலே-யல்லோ
நாதனேயானிறப்பே னுகையாலே.

(சந்-வ-ம்.) கண்ணாள மாதர்களுக்கு நாயகனாலே இன்பமுந்துன்பமும் என்றுகூறப்பட்ட சாஸ்திரங்களை ஆராய்ந்துணர்ந்தவர்கள்சொல்ல யான் கேட்டிருக்கிறேன் ஆகையால் யானிந்த அக்கினியில் வீழ்கின்றேன் கற்புடையவளாயின் தகிக்காது விலகிவிடட்டும் அன்றேல் தகிக்கட்டும்பிரபு.

(அரி-வ-ம்.) நல்லதுகண்மணி.

### தேவதாசன்சொல் தரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

பல்லவி.

அம்மணிகேளாய் எந்தன் அம்மணிகேளாய்

அநுபல்லவி.

அம்மணிகேளாய்நீயெந்தன் அம்மணிகேளாய்

சரணங்கள்.

மக்கட்டனைப்பெறுவது மாதாபிதாதங்கட்கென்று
மிக்கதோராபத்திற்குதவ வேண்டுதற்கன்றோ. (அ)
ஆகையினாலுயரில் வக்கினியில்வீழ்வேனேடி
சோகமாய்நீங்கள்காசி செல்லுவீர்நாடி. (அ)

(தேவ-வ-ம்.) மாதா கவனிக்கவேண்டும் உலகத்தினில் அருந்தவஞ்செய்து புத்திரர்களைப் பெறுவதானது மாதாபிதாக்களுக்கேற்படுகிற இன்பதுன்பங்களுக் குதவியாகவன்றோ? ஆகையால் பூர்வகர்மானுபவம் எப்படியிருந்தாலுஞ் சரி யானிந்த நெருப்பிலே வீழ்ந்திறக்கிறேன் நீங்கள் தப்பித்துக்கொள்ளுங்கள்.

(சந்-வ-ம்.) ஆ பாலகா இன்னும் நின் இவந்தவாயினின்றும் பல்விழுகவில்லை அன்றியும் முலைப்பால்குடித்த மறக்காதிருக்கின்றாய் உனக்கிவ்வளவு துணிவு எப்படியுண்டாயிற்று பாலகா அப்பாற்செல் யான்வீழ்கின்றேன்.

## சந்திரமதி அக்கினியிற் பாயும்பாகம்.

சந்திரமதிசொல் தரு.

அன்னைகர் பூமினன்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

அம்புவியோர்முத — தும்பமொரத்துதி
அக்கினிபகவானே — நின்சரணம். (அ)

அநுபல்லவி.

தும்புவிவேவணியணி — யண்ணல்பதத்தைப்பணி
பருந்தவமுனிவர்க்குத் — தோசமுற்றும்
பைம்பொன்முடியைச்சூட்டிப் — பரங்கரயாளக்கொடுத்துப்
பரதேசிபோற்செல்கின்றோம் — காசிக்கின்று (அ)

சரணங்கள்

செல்லும்வழியதனில் — திக்கனைத்தும்வளர்ந்த
நாரண்டம்வெடிக்க — மிகவார்த்து
அல்லுறவான்வரை — பரமகாரமாயுயர்ந்து
அனலாவெரிக்கலானும் — யாதோதேர்ந்து. (அ)
வேதநெறியையென்றும் — மீறிநடந்தோமாகில்
மேலோர்விருந்தமுத — விகழ்ந்தோமாகில்
பாதகஞ்செய்தோமாகிற் — பத்தியெரிப்பாயல்லால்
பாதகாப்பாயிதேர்நான் — பாய்ந்தேனே. (அ)

(சந்-வ-ம்.) பிரபு நாங்கள் அடியானுக்கு விடைகொடுத்த அனுமதித்தால் அக்கினிகுழித்துபோயின்காசிநகரம்செல்வோமா?

(அரி-வ-ப்.) நன்றுநற் கண்மணி செல்வோம்.

ஊர்நீங்கிய காண்டம் சம்பூரணம்.

பரமபதிதுணை.

# காசிகாண்டம்.

## அரசன் காசிதேசஞ்சேரும்பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாங்குயிலைப் புத்தமுதை வான்கரும்பை
வென்றமொழி மாதேவிகேளாய்
பாங்குயர யோத்தியெனும் பதிகடந்தே
யைவருமாய் வனம்படர்ந்து
நீங்கிலா மலைகளுட னதிகாண்டிக்
கழனிவளர் நிறந்தென்னாடும்
ஓங்குபுகழ் காசிநகர் நற்றனம்பாம்
கயற்கண்ணாய் வந்துபாராய்.

அரிச்சந்திரன்சொல் தரு.

மங்கையரோயிதோ பாராயென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாதாசேமடமயிலே — காசி
மாநகர்தோனுதே — குயிலே (மா

அனுபல்லவி.

காதடர்ந்திலங்கும் — விழியினளே
கற்கண்டைநிகர்த்த — மொழியினளே
பாதிமதிநிகர் — நுதலினளே
பங்கேருகவடி — யானேமா
தங்கக்கொடியிடை — யானேநல் (மா)

சரணம்.

கொண்டலைநேர்குழல் — மங்கையானே
சேரிதில்மலர்க்குழல் — நங்கையானே
கெண்டைநிகர்த்திடுங் — கொங்கையானே

இருவே வருவே தேனே
மருவே தருவே மானே (மா

பிரமன் தலையொன்றைக்கிள்ளியரன் சோர்ந்து
பேதமடையவஃதிங்குவந்து தீர்ந்து
கர்மமகற்றும்வில்வேசனுய்த் தோன்றினர்.
கண்ணே குயிலாய் காமே
பெண்ணே தருவார் வாமே (மா)

(அரி-வ-ம்.) பிராணசுந்தரி சாக்ஷாத் சிவபெருமான் முன்னொருகாலத்தில் பங்கயப் புட்பத்தில் மேவும் பிரமனுடைய ஐந்து சிரசில் ஒருசிரசைக் கிள்ளவே அன்னவருக்குப் பிரமஹத்தி பிடித்தப்பித்தனுகிக் கைகபாலத்தை விட்டெழுந்து உலகமெல்லாந்திருந்தண்டு பின்னரிங்குவந்து அந்தப்பிரமஹத்தி நீங்கி அன்பர்பவங்களை நீக்கும் விஸ்வநாதனுகத் திருவவதாரஞ் செய்தனர் அப்பேர்கொற்ற மகிமைவாய்ந்த காசிமாநகர் அதோ தெரிகிறது உன்னுடைய இரண்டு கரங்களையுங்குவித்து நமது வினைகளெல்லாந் தீரப் பணிவாயடி சொர்ணமே.

(சந்-வ-ம்.) கண்ணாளா இதோ யான் இரண்டு கரங்களையுங் குவித்து நமது வினைகள் தீரும்படி தொழுதேன்.

(அரி-வ-ம்.) ஆ! மாதரசே அதோர்பார் கங்காநதியை என்ன ஆச்சரியம் மும்மதம் பொருந்திய யானைகள் அந்நதியிலிறங்கி வாரிவீசிய சீகரத்தினங்கள் யாவும் பிரகாசத்தையுடைய ஆகாயத்திலிருந்து நட்சத்திரம் உதிர்வதுபோல உதிர்கின்றது அந்தப் பரிசுத்தமான சலத்திலே சஞ்சரிக்கின்ற பட்சிகளெல்லாம் நம்மைக்கண்டு வெருண்டு சிங்காரமாக ஆகாயத்திற்பறந்து செல்கின்றது அலைகளிலெல்லாம் இரத்தினங்களும் முத்துக்களும் புரளுகிறது கரையோரங்களிலெல்லாம் அகில்விருக்ஷங்களும் சந்தனவிருக்ஷங்களும் அசைந்துகொண்டிருக்கிறது தீர்க்க சுழிகளெல்லாம் உனது உந்திச்சுழிக்கிசைமானமாக விருக்கிறது என்ன விசித்திரம்.

(சந்-வ-ம்.) [illegible] மிகவும் விசித்திரமாகத் தானிருக்கிறது.



# காசிநாட்டுச்சிறப்பு.

அரிச்சந்திரன் விருத்தம்.

தஞ்சமர்ந்த நாடோறுமை விட்டயறுறக்கும்
வஞ்சநெஞ்சர் போலலாது வண்டணி குழன்மாதே
பஞ்சலாது நின்றவருடனிறந்த நல்லவர்போற்
கஞ்ச நெல்லுடனுடம்புண்டு கிடப்பனகாணாய்.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி இந்த அவனியின்கண் நகமுஞ்சதையும்போல நேசஞ்செய்துவந்த இருவரில் ஒருவனிறந்துவிட அவனுடனே தானுமிறக்காது உயிருடனிருக்கும் வஞ்சகரைப்போலாகாது தனது தோழனுடனே உயிர்விடும் உத்தமகுணரைப்போலாக அதோ தெரிகிற வயலில் தாமரைமலர்கள் நெல்லுடனேகூட அறுபட்டுக்கிடப்பதை பார்த்தனையா?

(சந்-வ-ம்.) கண்ணாளா பார்த்தேன் "முகநகநட்பது நட்பன்று நெஞ்சத்தகநகநட்பது நட்பு" என்ற சாஸ்திரத்துக்கு மாறுபடாமலிருக்கிறது.

அரிச்சந்திரன் விருத்தம்.

இக்கடத்துமீனருந்திய வன்னங்களெல்லாம்
அக்கடத்துமெய்த்திறிவனை வருந்தியாவுந்
தக்கமக்களிற்றிகழ்ந்த வர்தங்களைத்துறந்து
கைக்குளார்கட்செல் கணிகையரொப்பனகாணாய்

(அரி-வ-ம்.) அடியேன் பிராணசகி ப்ரபஞ்சத்திலிடமாக வள்ளவேசையர்கள் திரவியசம்பன்னனை யுறவுசெய்து அன்னவனுடன் சரசசல்லாபமாகக் கூடியிருந்து அவன்திரவியங்களையெல்லாம் பறித்தபிற்பாடு வேறொருபுருடனைக் கைப்பற்றுவதுபோலாக இதோ தோன்றுகிற தடாகத்திலிடமாக வுள்ள மீன்களையெல்லாம் பறவைகள் புசித்து மற்றும் இல்லாமையால் பக்கத்திலுள்ள வேறுதடாகத்திற் போயிறங்குகிறதைப் பார்த்தனையா.

(சந்-வ-ம்.) பார்த்தேன் ப்ரபு.

## காசிநகர்ச்சிறப்பு.

அரிச்சந்திரன் விருத்தம்.

செந்திருவாழுமார்பன் தின்புயஞ்செம்மைசேருஞ்
சந்திரதயமனின்ற றைதயலேவின் வகாதன்
அந்தமாமங்கையாளோ டமர்ந்துவாழ்காசியென்னும்
விந்தைசேர்நகர்க்குவந்தோம் வினைங்கள் தவிர்ந்தோமின்றே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

காசிவிஸ்வநாதர் வளரென்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வெள்ளியங்கிரியைநிகர் விஸ்வநாதர்கோவில்பாராய்
மின்னே ஆணிப் பொன்னே.

(அரி-வ-ம்.) மாட்சிமைதங்கிய கன்னமாபுரிமன்னன் அருந் தவத்தினுதித்த வென்னு ஆசைக்கண்ணுட்டி பருவதாசன் புத் திரி பாகம்வாழச் சிவபெருமான்வசிக்கும் கைலையங்கிரிக்குச் சமா னமாக அதோ அன்னவர் அவதாரமாகிய காசிவிஸ்வநாதர்கோவி லானது தோற்றுகிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்) பார்த்தேன் ப்ரபு.

## கோபுரச் சிறப்பு.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சித்திரக்கோபுரங்கள் சேணுறத்தெரியுதுபார்
திருவே மலர் மருவே.

(அரி-வ-ம். )கொண்டலையுங், கந்தர்பனையையும்; கொண்ற காலையும் வென்ற கூந்தலையுடைய எனதுபிராணைக்குரி சர்வாங்



ரியாமியாகிய காசிவிஸ்வநாதர்வசிக்கும் ஆலயத்தின்நான்குவாயலி லுங்கட்டி யிருக்கப்பட்ட கோபுரங்களானது வானையளாவிப் பிர காசத்தோடு அதோ தோன்றுகிறதுபார் என்னபுதுமையாக இரு க்கின்றது.

(சந்-வ-ம்.) கண்ணுளா பார்த்தேன் மிகவுஞ் சித்திரமாகத் தோணுகிறது.

## மதிலின் சிறப்பு.

அரிச்சந்திரன்விருத்தம் முன்னால்.

மேவருமுணர்வு முடிவிலா மையினல்
வேதமு மொக்கும்விண் புகலால்
தேவரு மொக்கு முனிவரு மொக்குந்
திண்பொறி யடக்கிய செயலாற்
காவலிற் கலியூர் கன்னியை யொக்குங்
குலத்தாற் காளியை நிகர்க்கும்
யாவையு மொக்கும் பெருமையா லெய்தற்
கருமையா லீசனை யொக்கும்.

(அரி-வ-ம்.) அங்கராஜன் செங்கையிற்பிடித்ததங்கவில்லைப் பழித்தபுருவமும்,இளஞ்சந்திரனைவென்ற நெற்றியுமுடைய எனது ஆசைக்கண்ணுட்டி காசிமாநகரைச் சூழ்ந்திருக்கப்பட்ட கோட் டைமதிலானது யென்ன விசித்ரமா யிருக்கிறது பார்த்தனையா? "மேவருமுணர்வு முடிவிலாமையினல் வேதமுமொக்கும்" கண் மணி எனது நிகரண்யபுத்தியால் அனேக விசித்திரமமைந்தஇம்ம திலின்முடிவு தெரியக்கூடாததினுல் அளவுபடாத நான்குவேதங்க ளுக்குஞ்சமானமாகும் "விண்புகலால் தேவருமொக்கும்" கண்ணு ட்டி இம்மதிலானது ஆகாயத்தை யளாவித்தோன்றுதலால்; விண் ணுலகஞ் சேர்ந்திருக்கும் தேவர்களுக்குச் சமானமாகச் சொல்ல லாம் "திண்பொறியடக்கிய செயலால் முனிவருமொக்கும்" கண் மணி இம்மதிலானது சத்துருக்களை யுத்தஞ்செய்துப் பெலம்பொரு ந்திய இயந்திரங்களைத் தன்னுள்ளடக்கியிருத்தலினுல் மெய், வாய், கண், மூக்குச் செவி. என்ற ஐம்பொறியையும் தவஞ்செய்வதற்

காக அடக்கிநிற்கும் முனிவர்களுக் கொப்பாகும் "காவலிறகலைத் தீக்கினியை யொக்கும்" பிராணசகி இம்மதிலானது இந்நகரத்துக்குக் காவலாகவிருக்ககினால் நாடு காவலாளான அர்க்கையம்மனுக்கொப்பாகும் "சூலத்தாற்காளியை யொக்கும்" கண்மணியகை வரையுத்தேசித்து இம்மதிலில் எவ்விடத்துஞ்சூலங்கள் பதித்திருப்பதினால் மாட்சிமைதங்கிய காளிதேவிக்குச் சமானமாகும் "யாவையுமொக்கும்பெருமையால்" மாதரசே இம்மதிலுக்கு மற்றும் உலகத்திலுள்ள பெருமைபொருந்திய பொருள்களெதுவுண்டோ அதுவெல்லாஞ் சமானமாகும். எய்தற்கருமையாலீசனை யொக்கும்" ஆ! யென்பெண்ணரசி இந்நகரின்மீது சத்துருக்கள் படையெடுத்துவந்தாலும் இம்மதிலைக்கடக்க முடியாதாகையால் பந்தபாசக்கடலைக்கடக்காது காணுதற்கரிதான சாக்ஷாத் சிவபெருமானுக்குச்சமானமாகச்சொல்லலாம் என்னவிசித்திரம்.

(சங்-வ-ம்.) கண்ணாளா பார்த்தேன் என்ன உன்னதமாயிருக்கிறது.

## அகழியின் சிறப்பு.

அரிச்சந்திரன்விருத்தம் முன்னால்.

கண்ணகன்றபே ரகழியி னுழக்கிய கரிகள்
தண்ணந் தாமரைத் தாளெனத் தடக்கையாற்பிலத்தில்
நண்ணுஞ் சேடனை யெடுத்ததின் நடிகையினூறி
உண்ணி வந்தொளிர் மணியினை யுற்கையென்றெறியும்.

(அரி-வ-ம்.) வண்டின் கூட்டத்தையும், செந்தாமரைப் புஷ்பத்தையும், கெண்டைமீனையும், பழித்த நேத்திரத்தையுடைய, எனது ஆசைரஞ்சிதமே சக்கரவாளகிரியைச் சூழ்ந்த பெரும்புறக்கடல்போல் இந்நகரத்தின் கோட்டைமதிலை வளைந்திருக்கிற விசாலம் பொருந்திய அகழியினிடமாகக் கலக்கிக்கொண்டிருக்கிற யானைகள் பாதாளத்தினிடமாக வாசஞ் செய்கின்ற சேடனென்னும் பாம்பைத் தாமரையினுடைய தண்டென நினைத்துத் தனது துதிக்கையினால் மேலேயெடுத்து அப்பாம்பி னுச்சியின்கண் பிரகாசமாகத்தோன்றுகிற இரத்தினத்தைக் கொள்ளிக் கட்டையென்றுந்



இப்பக்கத்திலே விட்டெறிவதைப் பார்த்தனையாவென்ன ஆச்சரியமாயிருக்கின்றது.

(சங்-வ-ம்.) நாதா பார்த்தேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சங்கதிர்செல்லக்கதவு திறப்பதுபார்த்திருப்பான் தின்னம்
தேனே மட மானே

(அரி-வ-ம்.) பங்கயப்புஷ்பத்தையும், பூரணச்சந்திரனையும், வென்ற திருமுகத்தையுடைய வெனது ஆசைக்கண்மணி குணதிசையிலிருந்து ஓருருளையையுடைய தேரில் ஏழு பரிகளைப்பூட்டி அதன்மீது ஆரோகணித்து வரக்கூடிய யாதொரு சூரியனுமிவன் இந்தக் கோட்டைமதிலைக் கடப்பதற்குத் திறமையற்றவனாய் இம்மதிலின் கபாடங்களைத் திறக்குஞ் சமயம் பார்த்திருப்பா னென்பதற்கு யாதொரு சந்தேகமேயில்லை.

(சங்-வ-ம்.) ஆம் பிரபு.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி சூரியனே அஸ்தமானமாகி விட்டான் மாலைக்காலமோ சமீபித்துவிட்டது ஆதலால் சீக்கிரமாக அதோதோன்றுகிற கோட்டைவாசல் வழியாக நகரத்துக்குள் நாமெல்லோரும் பிரவேசிக்கலாமா.

(சங்-வ-ம்.) பிரவேசிக்கலாம் பிரபு.

(அரி-வ-ம்.) மாதரசே கோட்டை வாசலைக்கடந்து நகரத்துக்குள் வந்துசேர்ந்தோமல்லவா?

(சங்-வ-ம்.) ஆம் பிரபு.

## அரசன் நகரத்தைப்பார்த்து ஆச்சரியமடைந்து சொல்.

முன்னால் விருத்தம்.

தேசவ னகரோ வளகையோ வேம
ரொனகற் பகத்தரு விருந்த

வாசவன் பதியோ நாகர் உலகமோ
மண்மகள் மங்கல நாளோ
தேசுறப் புவிக்குப் பேரொளி விளக்குஞ்
செம்மணித் தீபமோ செகத்தின்
மாசறு நகரா முடிக்கள்முன் விரவி
வளரொளி யெனத்திகழ் நகரம்.

(அரி-வ-ம்.) பிராணசகி ஆ! ஆ!! ஆ!!! என்ன ஆச்சரியம் இந்தச் செகத்தினிடமாக இருக்கப்பட்ட நகரங்களாகிய நட்சேத்திரக்கூட்டங்களின் முன்பாக சூரியன் போலப் பிரகாசித்துக் கொண்டிருக்கிற இந்த நகரமானது சங்குசக்கராயுதரான ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா வசிக்கும் வைகுந்தமோ? அல்லது செல்வத்திற் சிறந்தவனாகவும் அஷ்டதிக்குப் பாலர்களில் வடதிசைக்கிறைவனுமான குபேரன் வாழும் அழகாபுரியோ? அல்லது சந்தனம், அரிசந்தானம், மந்தாரம், பாரிசாதம், கற்பகமென்றஐந்து தருக்களின் கீழுற்ற சிம்மாசனத்திலிருந்து அரசுசெய்யும்தேவேந்திரன் வாழும் பொன்னுலகமோ? அல்லது மாட்சிமைதங்கிய பாதாளவுலகந்தானோ? அல்லது சாகரத்தை ஆடையாகவுடுத்திய பூமாதேவியின் திருமங்கிலியமோ? அல்லது இந்தவுலகங்களுக்கெல்லாம் இராக்காலங்களுக்குப் பிரகாசந்தோனும்படியாக அயனால் பத்தி செய்யப்பட்ட அழகுபொருந்திய விளக்குத்தானோ? மற்றெதுவோ தெரிகிலேன் யென்ன விநோதமாயிருக்கிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்.) கண்ணாரப் பார்த்தேன் மிகவும் ஆச்சரியமாகத்தானிருக்கிறது.

## மாளிகையின் சிறப்பு.

அரிச்சந்திரன்சொல் தரு.

சித்திரமாடப்புருந்து திங்களுடத்தேயுமடி
திருவே மலர்த் தருவே



(அரி-வ-ம்.) வள்ளைக்கொடியையும்,கத்தரிக்கோலையும், ஊஞ்சலையும் வென்றகாதும் சந்தனக்கல்லையும்,கண்ணாடியையும்,பழித்தகன்னமும், எள்பூவைவென்றநாசியும், வாய்ந்த யெனதாசைக்குயிலே இதோ பார் சிரப்பதியிலிருந்துதித்து வரக்கூடிய பூரணச் சந்திரனைவலம் நேரற்பல மலையையும் மாவடுவையும், வண்டினங்களையும் வென்ற விலோசனத்தையுடைய மாதர்கள் வசிக்கா நின்ற ஆசாரத்தையுடையவளாயிருக்கக் கூடிய மாளிகையைக் கடக்கக்கூடாமையால் மகரதோரணங்கள் கட்டியிருக்கிற மேல் வீட்டின் சிறிய வாசல்வழியாக நுழைந்து வரவே அன்னவனுடலமெல்லாந் தேய்கிறது என்ன விசித்திரம்.

(சந்-வ-ம்.) ஆம் பிரபு.

## கொடியின் சிறப்பு.

அரிச்சந்திரன் முன்னுரல் விருத்தம்.

தடங்கொள் தாமரைத் தவிசியனுறையுமின்னகரம்
இடங்கொள் பூதலமெலாம் வென்றனமினிவான்
அடங்கவெல்லுதுமென்னவோர் வஞ்சினமுரையாப்
படங்களுற்றியபோன்றன பசியபொற்கொடிகள்.

(அரி-வ-ம்.) முருக்கமலரையும்,பவளத்தையும் வென்ற இதழும், குமுதமலர்போன்ற வாயும், முத்தைப்போன்ற பற்களும், கத்தைப்போன்ற கழுத்தும், அமுதத்தையும், தேமாங்கனியையும், குயிலையும், கிளியையும், கற்கண்டையும், வென்ற வசனமும் வாய்ந்த எனது பிராணசகி இதோ பார் மேல்வீடுகளிற் கட்டியிருக்கப்பட்ட கொடிகளானவை பங்கயமங்கை வாசஞ்செய்யும் பொங்கமிகுந்த இக்காசியம்பதியானது பூதலத்திலுள்ள எல்லா நகரங்களையும் வென்றுவிட்டோம் இனி மேலுந் தெய்வலோகத்தையும் எமக்குக் கீழ்ப்படவெல்லுவோம் என்ற ஓர் சபதவார்த்தையை எழுதித்தொங்கவிடப்பட்டனவாகிய படங்கள்போலத் தோன்றுகிறது என்ன ஆச்சரியம்.

(சந்திரவதி-வ-ம்.) பார்த்தேன் பிரபு.

அரிச்சந்திரன்சொல் தரு.

மாதர்முகம்பார்க்கவேமென் மதிபுங்கண்ணாடியானன்
மாதே அடிபிப் போடு,

(அரி-வ-ம்.) சொக்கட்டான் சாளையையும், வண்ணக்கின்னத்தையும் வைத்திராத்தையும், நீர்க்குமிழியையும், பம்பரத்தையும், கும்பக்குடத்தையும், செம்பொன் மலையையும், வென்ற ஸ்தனத்தையுடைய யெனது பிராணசகி இதோ பார்பளிங்கினாற் கட்டப்பட்ட மேல் மாடிகளில் பந்துகள் விளையாடிக்கொண்டிருக்கிற மாதர்கள் நெற்றியில்வளிந்த திலதமானது விரைவாகப் பந்து விளையாடுவதாலுண்டான வியர்வையினால் அழிந்திற்றழியச் சமீபத்திலிருக்கிற சந்திரனைக் கண்ணாடியாகப்பார்த்து அதைச் சீராகத்திருத்திக் கொள்ளுகிறார்கள் என்ன விநோதம்.

(சந்-வ-ம்.) பார்த்தேன் கண்ணாளா.

## முரசின் சிறப்பு.

அரிச்சந்திரன் சொல் தரு.

சிருயர்முரசினொலி திரைகடலைச்சிருதுபார்
தேனே எந்தன் மானே

(அரி-வ-ம்.) ஆலிலைபோன்ற வயிறும், மகிழமலர்போன்ற வுந்தியும் உடைய எனதாசைக்கண்மணி இந்த நகரத்தினிடமாக நித்தியகல்யாண வாத்தியங்களின் சப்தமும் வேந்தன் அரண்மனை முகப்பில் பரதிதினமும் முழங்குவதான பேரிகையின் ஒலியும் சமுத்திர சப்தத்தைப்பார்க்கிலும் அதிகமாகக்கேட்கிறது பார்த்தனையா? யென்ன விநோதம்.

(சந்-வ-ம்.) பார்த்தேன் பிராணநாயகா.



## சூத்திரர் வீதி.

அரிச்சந்திரன்சொல் தரு.

வருசகமிலாச்சூத்திரர் வாழுகின்றவீதியிது
மயிலே சேரக் குயிலே

(அரி-வ-ம்.) பூங்கொடியையும், மாருடம்பையும், உடுக்கையும் வென்ற இடையையுடைய யெனதாசைரஞ்சிதமே இவினைக் காத்தல், திரவியஞ்சேர்த்தல், பயிரிடல், இதிகாசபுராணங்கள் குறைவில்லாது வாசித்தல், யாசகர்கள் விரும்பிய வண்ணங் கொடுத்தல், தனக்கு மேற்குலத்தோராகிய அந்தணருக்குப் பணிவுதலுடன் அனுகூலமாயிருத்தல், முதலான ஆறுதொழில்களையுடைய நான்காம் வருணத்தாராகிய வஞ்சகம் கபடமில்லாத சூத்திரர்வீதி என்ன அலங்காரமாயிருக்கின்றது பார்த்தனையா?

(சந்-வ-ம்.) ஆம் ப்ரபு மிகவும் அலங்காரமாகத் தானிருக்கின்றது.

## தன வைசியர் வீதி.

அரிச்சந்திரன்சொல் தரு.

வர்த்தகம்நாடெல்லாஞ்செய்யும் வைசியர்வாழ்வீதியிது
மதியே சந்த்ர வதியே

(அரி-வ-ம்.) யானையின் துதிக்கையையும், வாழைத்தண்டையும், பழித்ததொடையையுடைய யெனதுபிராண சுந்தரி கனகரஞ்சிதமுதலிய பஞ்சலோகங்களும் ஆபிகேயூர மகரகுண்டல முதலிய ஆபரணங்களும் ரூபாய் பவுன் என்று சொல்லப்பட்ட நாணயங்களும் கொள்ளல்விற்றல் முதலிய வியாபாரவிர்த்தியினாலே அபரிமிதமாகத் திரவிய லாபஞ்சம்பாதித்து தனது குபேரனைப்போன்றவாழ்வையுடைய தனவைசியர்கள் வீதி என்ன உன்னதமாயிருக்கிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்.) பார்த்தேன் ப்ரபு.

## பூவைசியர் வீதி.

### அரிச்சந்திரன்சொல் தரு.

பொங்குலிச்செல்வம்பெற்ற பூவைசியர்வீதியிது
பொன்னே பெழில் மின்னே

(அரி-வ-ம்.) அலவன் போன்ற முழந்தாளும், அம்புராத்தூணி போன்ற கணைக்காலும் உடையயென தாசைக்கிசைந்த கண்மணி செய்தற்கரிய நவரத்தின கசிதமான மாளிகைகளும் அதனிடத்து வானையளாவும்படியாகக் கட்டியிருக்கும் மேழிக்கொடிகளும் பொருந்திய சிங்காரமான இந்தவீதியானது எவ்வருணத்தார் வீதியென்றுலோ கண்மணி மாட்சிமையும் ஒழுக்கமுமுடைய கங்காகுலத்திலுற்பவித்து அக்குலத்திற்குறிய ஆசாரமனைத்தும் வழுவாததரும சிந்தையாக மானிலத்திலுள்ள யாவர்களும் வியப்புறும்படி வருணனுக் கபயஸ்தங்கொடுத்து காராளரென்று பேர்பெற்ற பூவைசியராகிய வேளாளர்கள் வீதி என்ன விசித்திரமாயிருக்கிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்.) பார்த்தேன் கண்ணாளா.

## அரசர் வீதி.

### அரிச்சந்திரன்சொல்

முன்னால் விருத்தம்.

சீதளப் பளிக்குமாடமேல் மடவார்
செறிதரு புலவியில் வெறுத்த
சிதறு மணிபொன் தராமா லைகைகள்
செல்பவர் காலுறப் பின்னி
மாதர்மேல் மைந்தர் மைந்தர்மேல் மாதர்
மாறிவீழ் தரஅடிக் கடிசெய்
எதமி லரசர் வீதியீ திவா
யேந்தெழிற் சந்திரவதியே.



(அரி-வ-ம்.) மாந்தளிர்போன்ற மேனியும், அன்னம்போன்ற நடையுமுடையாய்கேளினது பிராணகாந்தி குளிர்ச்சிபொருந்திய பனிமருமாளிகையின் மேல்வீட்டில் மாதர்கள் அதியந்த சந்தோஷத்துடன் தங்கள் தங்கள் நாயகர்களிடம் விளைத்த கலவியில் வெறுத்துக் கழட்டியெறிந்த குற்றமில்லாத இரத்தினமாலைகள் பொன்மாலைகள், முத்துமாலைகள் வீதியில் கிடக்க அவைகளை வீதியில் நடந்து செல்கின்ற ஆடவர்களும் ஸ்திரீகளும் அறியாது அதன்மீது மிதிக்க கால்வழுக்கி ஆடவர்கள் மாதர்மேலும் மாதர்கள் ஆடவர்மேலும் விழும்படியாக அடிக்கடி செய்யக்கூடிய வசையில்லாத ராஜவீதி என்ன அலங்காரமாயிருக்கிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்) பார்த்தேன் பிராணேசா.

## அந்தணர் வீதி.

### அரிச்சந்திரன்சொல் தரு.

வேதமொருநான்குமோதும் விப்பிரர்கள்வீதியிது
மின்னே உயர் பொன்னே

(அரி-வ-ம்.) மயில்போன்ற சாயலையுடைய என தாசைக்கண்ணாட்டி சகல ஜீவராசிகளுக்கும் தலைவனாக விளங்கும் சிவபெருமானது சத்தியோசாதம், வாமதேவம், அகோரம், தற்புருஷம், ஈசானம், என்னும் ஐந்து திருமுகங்களினின்றும் எப்பொழுதும் நீங்காத சத்துவகுணத்துடனே உற்பவித்த அந்தணர்கள் வீதியென்ன சிங்காரமாயிருக்கிறது பார்த்தனையா?

(சந்-வ-ம்.) கண்ணாளா நாமிதுவரை பார்த்துவந்த வெல்லா வீதிகளைப்பார்க்கிலும் இந்த அந்தணர்வீதியானது மிகவும் சிறப்பாயிருக்கிறது.

### அரிச்சந்திரன் விருத்தம் முன்னால்.

மடமகள் முகமோ திலதமோ கண்ணே
மிறைமதி மங்கல நாணே
இலகுபூண் முலைமே லாரமோ வுயிர்
விருக்கையோ திருமாட் கினிய

மலர்கொலோ மாயோன் மார்பினன் மணியோ
வைத்தபொற் பெட்டியோ வானோர்
உலகின்மே லிலகோ வூழியி னிந்தி
புரமோ யாதென வுரைப்பாம்.

(அரி-வ-ம்,) கண்ணாட்டி நாமசாண்ட அயோத்தியாபுரியை வித்வசிகாமணிகள் முதலிய பெரியோர்களெல்லாம் இந்த நகர மானது மாட்சிமைதங்கிய பூமாதேவியினுடைய திருமுகமோ? அல்லது அன்னவள் நெற்றியிலணியும் திலதமோ? அல்லது அன்னவள் திருமங்கிலியதாரமோ அல்லது அன்னவள் விகசிதம்பொருந்திய தனபாரங்களின் மேற்பாகும்படியாக அணிந்திருக்கக் கூடியமுத்தாரமோ? அல்லது அன்னவளுயிர் தங்குமிடமோ? அல்லது ஸ்ரீலெட்சுமி தேவிவாசஞ்செய்யுந் தாமரைபுஷ்பந்தானோ அல்லது ஸ்ரீகிருஷ்ண பரமாத்மினுடைய மார்பினிடமாக அணிந்திருக்கும் கௌஸ்துபாபரணமோ? அல்லது அந்த ஆபரணங்களைக் கழட்டிவைப்பதற்காக அமைத்த பெட்டகந்தானோ? அல்லது விண்ணுலகத்துக்கும் பிரமலோகத்துக்கும் மேலாயிருக்கும் வைகுந்தமோ? அல்லது ஊழிகாலத்தில் உலகினுயிர்களெல்லாம் தங்கும் கண்ணபிரான் திருவயிறோ? என்று உபமானமாகச் சொல்வார்கள் அப்பேர்க்கொத்த அந்த அயோத்தியாபுரியும் இந்தக் காசிமா நகரத்துக்குச் சரியாகாதுபோலிருக்கிறது. என்ன ஆச்சரியம்!

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நகரின் சிங்காரமனைத்தும் பார்த்தாயன்றோ.

(சந்-வ-ம்.) ஆம் பிரபு.

(அரி-வ-ம்.) பெண்மணி நமது வல்வினையகலும்படியாக தீர்த்தமாடிக் காசி விஸ்வேசனைத் தெரிசனஞ் செய்வோம் வருவாய்.

(சந்-வ-ம்.) நல்லது பிரபு.

(பொது-வ-ம்,) இவ்விதம் அரிச்சந்திரன் நகரின் சிங்காரமனைத்துஞ் சந்திரமதிக்குக் காண்பித்துப் பின்னவளைவருந் தீர்த்தமாடிக் காசி விஸ்வநாதனைத் தெரிசனஞ்செய்கிற விதங்காணுக.



# காசிவிஸ்வநாதர் தெரிசனம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

இராகம்-கல்யாணி.

முன்னுால்.

அருள்பழுத்த பழச்சுவையே கரும்பேதேனே
யாரமுதே யென்கண்ணே யரியவான
பொருளனைத்துந் தரும்பொருளே கருணைநீங்காப்
பூரணமாய் நின்றவொன்றே புனிதவாழ்வே
கருதரிய கருத்தகமுட் கருத்தாய்மேவிக்
காலமுந்தே சமும்வகுத்துக் கருவியாதி
விரிவினையுங் கூட்டியுயிர்த் திரளையாட்டும்
விழுப்பொருளே யான்சொலும்விண் ணப்பங்கேளே.

அரிச்சந்திரன்சொல் தரு.

ஆதிக்குருவான வென்றமெட்டு.

இராகம்-கமாஸ்-தாளம்-சா.

பல்லவி.

ஓம்பிரணவத்தோங்கிடும் பரனே-அரு
வுருவாயருளாய்-திருநிறை குருவாய்-மருவாய்-சதுர்மறை. (ஓ)

அநுபல்லவி.

பாம்பாபரணா பங்கயச்சரணா
பக்தாவனதா பாஸ்கார்கரணா
பூம்பொழிற்றிகழ் காசியம்பதி
புகழுங்கருணைநிதியே தகையார்பெருவாரிதியே. (ஓ)

சரணம்.

நாடுநகரம் யாவுமிழந்து
நகிலொளுறும்பெருந்துயரமடைந்து
நாடியுந்தனைத் தேடியேவந்தோம்
நாதாதவமுயர்போதா நீகாகுறைபணிகாதா. (ஓ)

மாதவமுனி கடனதாலே
வருத்தமடைகின்றேன் மேலே





சோதியேயந்தக் கடனைத்தீர்த்துத்
துன்பமெல்லாநீக்கிடுவாய் இன்பமேயுண்டாக்கிடுவாய். (ஓ)

கற்றோர்வாழ்முது களத்தூர்வாசன்
கலியாணசுந்தரப்பேர் கொள்தாசன்
சொற்றமிழ்த்தொடை நிதமுமணியுந்
துரையேகருணாகரனே வரைநேர்புயமுளவானே. (ஓ)

---

அரசன்விருத்தம் முன்னால்.

இராகம்-காம்போதி.

வாழையடி வாழையென வந்ததிருக் கூட்ட
மாபினில்யா னொருவனன்றோ வகைதெரியே னிந்த
ஏழைபடும் பாடுனக்குத் திருவுளச்சம் மதமோ
இதுதகுமோ இதுமுறையோ இதுதருமந் தானோ
மாழைமணிப் பொதுநடஞ்செய் வள்ளால்யா னுனக்கு
மகனலனோ நீயெனக்கு வாய்த்ததந்தை யலவோ
கோழையுல குயிர்த்துயா மினிப்பொறுக்க மாட்டேன்
கொடுத்தருளின் னருளொளியைக் கொடுத்தருளிப் போதே

---

## அரிச்சந்திரன்சொல் தரு

காருஞ்சர் வேசாவென்றமெட்டு.

இராகம் உசேனி-தாளம்-சாபு.

பல்லவி.

காசிவாழ்நாதனே செங் கமலப்பாதனே

அநுபல்லவி.

மாசிலாவாரண வாசிகங்கையெனும்
வாரதிசூழ்திருத் திருநகருற்றருள்
வாகனே சிவயோகனே மிகு
வல்லதோர்வினை யெல்லாந்தீர்த்துயர்
நல்வரமது மல்குவாய். (கா)

சரணம்.

அருவேவிகசித வுருவேமணமிகு
மருவேகற்பகதற் றருவேயெங்குநிறை
யாதியே பரஞ்சோதியே உன

தன்பணுகுமென் றன்பமீக்குவாய்
தம்பமெனவுன்னை நம்பினேன். (கா)

மாட்சிசேர்கம லாசுநீதகவுமை
யாட்சியக்தவிசா லாசுநீபுன் மகிழும்
ஆரண பரிபூரண மிகு
அருந்தவமுனிக்குத் தருங்கடனதனல்
வருந்துமென்னையாள் திருந்தவே. (கா)

துங்கமானவெண் டிங்களுடன்குளிர்
கங்கையுங்கமழ் பொங்குகொன்றையணி
தூயனே அம்பர்நேயனே நின்
சுந்தரக்கழல் சிந்தையாப்பணி
எந்தனையேயாள்வாய் சிந்தையாய். (கா)

கலியாணசுந்தான் சொலுங்கிரிமாலைச்
சலியாமலென்றாளும் கலியாதேவாகனி
கர்த்தனே மகாசித்தனே என்மேற்
கருணைசெய்தேயித் தருணமதனிலே
பூரணதயைமிக வருளுவாய்

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா கருணாகரா அடியேன் விஸ்வாமித்திரமுனிவர் மாய்கையிற்சிக்கிய காரணமின்னதென்றறிகிலேன் ஆனதாலந்த முனிநாதர் கடனைத்தீர்த்தாண் டருளவேண்டும்.

# சந்திரவதிதெரிசனம்.

## சந்திரவதிசொல் தரு.

அம்பாளுனதுதிருசெம்பொற்பாதந்துதிசெய்

என்றவர்ணமெட்டு.

இராகம்-காம்போதி- தாளம்-ஆதி.

பல்லவி.

அம்பிகைமனோகரா அமுதார்சந்த்ரசேகரா
ஆதரித்தாண்டருள் வாய்

அநுபல்லவி.

அம்புவிபுகழ்காசி யம்பதிமேவியே
அன்பர்துன்பங்களெல்லா மின்பமுடனகற்றும். (அ)



சரணங்கள்.

பங்கயமலர்ப்பாதா பகரொணாக்குணாதீதா
மங்கையிடம்வாழ்நாதா மாதவத்தபர்போதா
துங்கமான்பிடிகரா சோதியார்தற்பரா
கங்கைவசழ்சடாதரா கரியுரிசங்கரா
சுந்தரநதனுட தந்தையாகவரு
சுந்தரவெங்குதி ராந்தாமுனிவன்
சூதினால் நாடிமுக்
கேதிலர் போலவிப்
போதனை நம்பியே
யாதரவாய் வந்தோம் (அ)

மாலயன்சுரபதி மகிழ்வொடுநிதந்துதி
மூலகாரணகதி முத்தர்க்குதவுநிதி
மோனநற்குருவே முகிழ்மலர்த்தருவே
தேனமுமருவே சிறுயருருவே
திரிபுரமதனையே வெகுகொடியதனிலே
குருநகையாலெறி தாமிகவேபுரி
கொற்றவா மதனைச்
செற்றவா கிருபை
யுற்றவா புலமை
கற்றவா நகையார். (அ)

வெள்ளியங்கிரிவாசா விடையதிலூர்நேசா
பிள்ளையூண்புசியிசா பெட்புயர்பவநாசா
பிரணவலோலா பித்தனேகோலா
தரணியோர்சீலா சம்ப்ரமலீலா
தாண்டவாபன்னகம் பூண்டவாபக்தர்கள்
வேண்டியதுதவிடு ஆண்டவாமகிழ்வாய்
சந்ததஞ் கல்யாண
சுந்தரன் றனது
சிந்தையிற் குடிபு
குந்தமே கொண்டவா. (அ)

### சந்திரவதி சொல்தரு.

அன்னமேகான்தொட்ட என்றவர்ணமெட்டு.

இராகம் - சாமா - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

சந்த்ரசடாதரா சங்கரீயரிதேவர
தையலுமைபாகா தவயோகா திடவாகா
தாண்டவர் புகழ்பூண்டவா பூண்டவா-பூண்டவா. (ச)

அங்கையில்மான்மழு தாங்கமாயேத்திடும்
ஆதிமூலகுருவே திருவுருவே உயர்தருவே
ஐயனே-மகாதுய்யனே துய்யனே-துய்யனே. (ச)

என்கோவிடர்தனை இன்றேபோக்குவாய்
எங்குங்கிறைபரனே நிகமரனே கங்காதரனே
இன்பனே-அன்பர்க்கன்பனே அன்பனே-அன்பனே. (ச)

கல்யாணசுந்தரன் கவிக்கருள்செய்து
கார்த்திடுங்கர்த்தனே பரிசுத்தனே நிறையத்தனே
காரணபரிபூரண பூரண பூரண (ச)

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா கங்காதரா கன்னிபங்காளா யாங்கள் மாதவமுனிகடனால் வருந்துந் துன்பத்தை யகற்றியாள வேண்டும் அனேககோடி நமஸ்காரம்.

---

## தேவதாசன் தெரிசனம்.

தேவதாசன் முன்னால் விருத்தம்.

படமுடியாதினித்துயரம் படமுடியாதாசே
பட்டதெலாம்போதுமிந்தப் பயந்தீர்த்திப்பொழுதென்
னடலுயிராதியவெல்லாம் நீ யெடுத்துக்கொண்டுன்
னடலுயிராதியவெல்லா மூவக்தெனக்கேயளிப்பாய்
வடலுறுசிற்றம்பலத்துள் வாழ்வாயென்கண்ணுளன்
மணியேயென்குருமணியே மாணிக்கமணியே
நடனசிகாமணியே யென்னவமணியேஞான
நன்மணியே பொன்மணியே நடராஜமணியே



### தேவதாசன் சொல்தரு.

அம்பாள்பதியே ஆதியே என்ற வர்ணமெட்டு

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

சம்போஹரனே பரனே தகையுயர்கருணைகரனே. (ச)

அநுபல்லவி.

அம்போருக மாமலர்க்கையனே
அம்புலியோர் தம்பமெனக்
கும்புகும்பதாசவந்து செம்பொனடிபோற்றிடும் (ச)

சரணங்கள்.

கங்கைமதிசென்னியணியுங் காசிவாசா பரமேசா
கன்மவினைதன்னைத்தொண்டர்க்கு நீக்குமீசா கைலாசா
துங்கமாயம்பிகை வாழிடப் பாகா
தூரியாதூரியாதீதங் கடந்தனல் யோகா
பொங்குமுனிகடன்தீர்த் தெங்களை நீகா
நேமா
பூமா செய்த (ச)
காமனைப்பொடி

சீரார்முதுகுளத்தூர்நகர்வாழ்மிகு போசன் விசுவாசன்
தேன்போற்கவிசொல்சுப்ரமண்ய கவிராசன் மகிழ்நேசன்
காராளன்கல்யாண சுந்தரன் பாடும்
கவிமாலையைத்தினம் புயமதிற் சூடும்
ஆரணபூரண வயன்மால் கொண்டாடும்
நீதியே
ஆதியே சோதியே (ச)
நிதில் ஜெக

(தேவ-வ-ம்.) ஆ! விசாலக்ஷி சமேதா கோசிகமுனிகடனால் யாங்களடையும் துன்பம் சொல்வதற்கெளிதல்ல இனிமேற்சகிக்க முடியாது உனது பாதாரவிந்தமே கெதியென இக்காசியம்பதிக்கு வந்தோம் எவ்விதத்திலும் அந்தக்கடனைத்தீர்த்து எங்களையாண்டருளப்பிரார்த்திக்கிறேன்.

## சத்தியகீர்த்தி தெரிசனம்

### சத்யகீர்த்தி சொல்தரு.

இன்னும் நாதன்வரக்காணேன் என்றவர்ணமெட்டு.

இராகம் - காபி - தாளம் - சாபு.

பல்லவி.

அம்பிகைமகிழுமீசா ஆதரிப்பாய்விசுவேசா

அநுபல்லவி.

இம்பர்முதல் உம்பர்துதி
ஏகா-யோகா ஏக்தெழிற்றேகா (அ)

சரணங்கள்.

சத்ததைசதன்யப் பரப்பிரம்ம
சொருபா-அருபா சுப்பிரதீபா (அ)

நம்புமடி யார்க்குதவும்
நாதா-போதா நளினப்பொற்பாதா (அ)

கல்யாணசுந் தரன்போற்றுந்
கன்யா-புன்யா கதியருள்தின்யா (அ).

(சத்-வ-ம்.) ஆ! விஸ்வேசா எனதிறைவர் கோசிகமுனிகடனா லடையுந் துன்பத்தை நீக்கியருளப் பிரார்த்திக்கிறேன்.

பொதுவிருத்தம்.

அம்பெரும்பதியிற்புக்காரமைச் சனங்காடிநண்ணி
யெப்பெரும்பண்டமுங்கொண் டெய்தினவிமைப்பினட்டுச்
செப்பருந்திருவினல்லாடிருக் கையாற்படைத்தவன்னாக்
குப்பனசெய்திருந்தாரிருந்த பின்னிகழ்ந்தசொல்வாம்.

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

மன்னனேகேளாயிந்த மாநகர்வந்தபோதே
பொன்னெனக்களிப்பே னென்னப்புகன்றதைமறந்தாயீயும்
இன்னகர்வளங்கள்பார்த்தா யிறைவனேப்பணியலானுப்
நன்னயரிதுவோசொன்னம் நல்குவாய்நல்குவாயே.



(நட்-வ-ம்.) அடா அரிச்சந்திரா நீ நல்ல யோக்கியன் போல தெரிகிறதே காசிமாநகரஞ் சேர்ந்து கோசிகமுனிகடனைக் கொடுக்கிறதாக என்னைக் கூட்டிவந்தவன் அந்தப்படி கொடுக்காமல் நீயும் உன் ஆம்பிடையாளும் நகர்வளம்பார்க்கிறதும் நீராடுகிறதும் சுவாமிதெரிசனஞ் செய்கிறதுமாகத் திரிகிறாய்வெகு யோக்கிதை திரவியத்தைக் கொட்டடா கொட்டு.

(அரி-வ-ம்.) நாதா கோபங்கொள்ள வேண்டாம் எவ்விதத்தினும் இன்றுகடன் தொகையைச் செலுத்திவிடுகின்றேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னன்மதி தயனின்ற மானேகேளாய்
மாவிலத்தைக் கோசிகமா முனிவர்க்கீய்ந்தும்
அன்னவர்க்கே கடனுக்குள் ளாளாகி
யதைத்தீர்க்கும் வண்ணமிந்த நகர்க்குவந்தோம்
சொன்னபடி பொன்னெனக்குக் கொடடாவென்று
தூதரோ வாதைமிகச் செய்யுகின்றார்
என்னசெய்வே னன்னையறி யாமற்செம்பொ
னிருக்கிறதோ வென்னிடத்தி வியம்புவாயே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சொன்னபேச்செங்கே யென்ற வர்ணமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

தவனையார்சதே பெண்ணே
தவனையாச் சுதே

அநுபல்லவி.

தவமுனிவர்க்குச் செம்பொன்
தருகிறேனென்று சொன்ன (தவ)

சரணங்கள்.

கன்னபுரிமன்னன்பெற்ற காதலியேஎந்தன்மாதே
நன்னயமாகவேகடன் நல்குவதெவ்வாரிப்போதே (தவ)

தூதாய்வந்தறுயர்செய்யுந் துயர்சகிக்கக்கூடுதில்லை
ஆதரவுசொல்லநமக் கன்னமேயிங்காருமில்லை (தவ)

பங்கயமலரில்வாழும் புங்கவனார் தன்விதியால்
அங்கனுலகம்மிழந்தோ மன்னமேயென்செய்வோமிக்கால் (தவ)

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நாற்பத்தெட்டு நாட்தவணைக்குள் காசிமாநகரஞ்சேர்ந்து கடன்தொகையைக் கொடுத்தனுப்புகிறோமென்று தூதராகிய நக்ஷத்ரய்யரை யழைத்து வந்தோம் தவணையோ சமீபித்துவிட்டது தூதரோ துன்பஞ் செய்குறார் இதற்கென்செய்வோம்.

சந்திரவதி விருத்தம்.

மன்னவர்போற்றும்பாதா மகிதலம்புகழும்கீதா
சொன்னசொற்றவறா நேமாசுந்தரமிகுந்தபூமா
கன்னிவேணியனேரான கவுசிகர்கடனுக்காக
இன்னகர்தனக்குவந்து மேவிடலாமோகூறும்.

## சந்திரவதிக்கும் அரிச்சந்திரனுக்கும் தர்க்கந்தரு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

சந்திரவதி பல்லவி.

மன்னவா துரையே நீரும்
மயங்குலாகுமோ கூறும்

அநுபல்லவி.

இன்னகரில் இத்தருணம்
இருடியின் பொருடனக்காய் (ம)

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

பல்லவி.

என்னகாம்செய்குவோம் பெண்ணே
எங்கெழில்மிகுந்த கண்ணே

அநுபல்லவி.

சொன்னமே முனிவரிடம்
சொல்லியதவ ணையார்சே (எ)

சந்திரவதி சரணம்.

சுந்தரனேயிந்தவூரில் சுதனுடனென்னையும்விற்று
சந்தோஷமாய் முனிவர்பொன்னைத்
தான்கொடுத்தனுப்பு மின்று (ம



அரிச்சந்திரன் சரணம்.

பாவையேநற்பூவையேநான் பாலனையுமுனையுமிங்கு
ஆவலுடன்விற்கவெந்த னகமதுசகிக்குமோ (எ)

சந்திரவதி.

சுந்தராபுரந்தராநீர் இந்தவிதஞ்சொன்னீரானால்
அந்தவிஸ்வாமித்ரர்கடன் எந்தவிதந்தீர்க்கப்போறீர் (ம)

அரிச்சந்திரன்.

மானேசெழுந்தேனேயிந்த மாநகரில்யாருக்கேனும்
நானேவிலையாகிபின்னர் நல்குவேன்முனிகடனை (எ)

சந்திரவதி.

நாதாமலர்ப்பாதாபாலன் நங்கையானிருக்கவும்நீர்
எதிலர்போல்விலையாத-லேற்குமோதெரிந்துசொல்வீர் (ம)
மாமயிலேமாங்குயிலே மைந்தனையுமுன்னையும்யான்
நேமமுடன்விற்கிறது நீதியாமேகூறடிதான் (எ)

சந்திரவதி விருத்தம்.

மண்ணுலகாண்டவெந்தன் மணவாளாமலர்ப்பூந்தாளா
விண்ணுலகேற்றும் விஸ்வாமித்திரர்கடனுக்காகக்
கண்ணினீர்தரையில்வீழக் கலங்குதலழகதாமோ
திண்ணமாயென்னைவிற்றுச் சீக்கிரங்கடனைத்தீரும்.

## சந்திரவதி சொல் தரு.

சாமிராடேமங்குனே யென்றவர்ணமெட்டு.

இராகம் - பியாக் - தாளம் - ஆதி.

பல்லவி.

கண்ணாளா என்னைவிற்றுக் கவுசிகர்கடனைத்தீரும்

அநுபல்லவி.

எண்ணுகிறீரென்னமெல்லாம் எண்ணுவதேது-மன்னவா
எண்ணுவதேது தகாது (க)

சரணங்கள்.

சுந்தரனேயிந்தவிதஞ் சொல்லலாகாதே-துரையே
சொல்லலாகாதே தகாதே (க)

காசினியோர்சொல்லும்வகை கருதவும்போமா-மன்னவா
கருதவும்போமா நற்றுமா (அ)

இவன்செயலுக்கென்னசெய்வோம் சிருன்னநேமா-ஆ
சிருன்னநேமா ம்பாற்றுமா (க)

ஐயையோவிதென்னவதி யாயமென்றுதா-அதி
யாயமென்றுதா விநோதா (க)

(சந்-வ-ம்.) கண்ணாளா ஏன் கவலையடைகுறீர்கள் இன்றிற்றே னும் கவலையடையாது இந்த நகரத்தினிடமாக அடியாளையும் மை ந்தன் தேவதாசனையும் யாருக்காவது விற்றுச்சத்தியம் பிசகாமல் கோசிகமுனிகடனைத் தீருங்கள்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

பல்லவி.

உன்னைநான்விற்கமாதே உள்ளமுஞ்சகிக்காதே

அநுபல்லவி.

கன்னபுரிமன்னன்பெற்ற காதலியாரசி-எந்தன்
காதலியாரசி சாசி (உ)

சரணங்கள்.

சொந்தமனையாளைவிற்ற தோஷியென்பாரே-கண்ணாட்டி
தோஷியென்பாரே மேலோரே (உ)

என்னசெய்வேன்தேடக்கிடை யாதசெந்தேனே-தேடக்கிடை
யாதசெந்தேனே சொந்தேனே (உ)

நானேவிலையாகிருணம் நல்கிடுவேனே-கண்ணாட்டி
நல்கிடுவேனே பொன்மானே (உ)

அன்னநடைதன்னைவென்ற அற்புதப்பெண்ணே-கண்ணாட்டி
அற்புதப்பெண்ணே கண்ணே (உ)

(அரி-வ-ம்) ஆ! எந்தன் கண்ணாட்டி இந்த நகரத்தில் யாருக் கேனும் யான் விலையாகி விஸ்வாமித்திரர் கடனைத்தீர்ப்பது சிதமே தவிர உந்தனையும் புத்திரனையும் விற்பது நியாயமாகுமோ என்ன வார்த்தை கூறினை.



## சந்திரவதி சொல்தரு.

திருக்கடையூரில் வாசாஎன்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

தாமசஞ்செய்யாதுமன்ன னையலென்னைவிற்பீரின்றுள்

அநுபல்லவி.

மாமதனேர்ருபனே மாட்சிசேர்பிரஸ்தாபனே
தாமதிகவலைகொள்ளாது சந்தோஷமாகவிப்போது (தா)

சரணங்கள்.

பூதலம்புகழும்பூமா புத்தியிற்சிறந்தகோமா
மாதெனைத்தமக்குத்தாரை வார்த்தோரென்னகூறுவாரோ (தா)

இவ்விதமெண்ணினால்தீரும் எந்தவிதங்கடன்தீரும்
செவ்வையாகவாலோசித்துச் சித்தனையாமற்சகித்துத் (தா)

மேருமலைநிகர்தோளா மெல்லியாள்மகிழ்மணாளா
கோரியதவிலையாச்சே கொற்றவாவேறென்னபேச்சே (தா)

பேரினைமையின்பம்நீடு பெருமைப்புச்சாக்காடு
ஆருங்கருவதனிற்றுனே யமைத்தாடியாங்கோனே (தா)

வருந்தினாலும்வாராது வந்தாலுஞ்சும்மாபோராது
இருவினையென்றுவேதம் மியம்புதற்கேதுபேதம் (தா)

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

பல்லவி.

என்னவார்த்தைசொன்னாய்கண்ணே எந்தனுக்குகந்தபெண்ணே

அநுபல்லவி.

உன்னைவிந்தநகரினில் உத்தமனென்விற்றேனெனில்
கன்னபுரிமன்னர்க்குநான் காரிகையேவேதுரைப்பேன் (எ)

சரணங்கள்.

நன்னயமிருக்கின்றேன நானிலமதிக்கும்பொன்னே
அன்னநடைவாய்க்கமானே அற்புதஞ்சேருஞ்செந்தேனே (எ)

சோலைவளர் மாங்குயிலே சுந்தரத்தோகை மயிலே
கோலமலரோன் விதியோ கோசிகமுனி சதியோ (எ)

ஐயோவெந்தன் மாதரசி அன்புள்ள வெகுசரசி
மெய்யெல்லா மொடுங்குதே வேந்தனுளம் நடுங்குதே (எ)

தெய்வபலத்தாலாகின்ற சித்தியாஞ்சூரியற்சிதன்
மெய்வருந்திறைக்காதலி மேன்மையாகத்தருங்கூலி (எ)

பாரிதனைவிற்றபெரும் பாதகனென்றேயெவரும்
தூருதலாயேசுவாரே தூயமறையுணர்ந்தோரே (எ)

(அரி-வ-ம்.) கண்மணி உன்னையிந்த நகரத்திலிடமாக விலைகூறி விற்பேனாகில் மனையாளைவிற்ற வஞ்சகனென்று என்னைவசை சொல்லமாட்டார்களா? உனக்குத் தெரியாதா?

(சந்-வ-ம்.) கண்ணாளா உலகத்தார் சொல்லும் வசையை நினைத்தால் முனிவர்கடன் தீருவதெவ்விதம் காலதாமதஞ்செய்யாமல் என்னையும் மைந்தனையும் விலைகூறுங்கள்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதர்கட்கரசேயெந்தன் மங்கையே மயிலே மானே
நீதிலாக்குயிலே தேனே சிறந்தவிந்நகரத்துற்ற
வீதியிலுன்னையின்று விலையதுகூறவென்றால்
பாதகனெந்தனெஞ்சம் பதைக்குதேயென்ன செய்வேன்.

## அரிச்சந்திரன் சொல்தரு.

இராகம்-தன்யாசி-தாளம்-சாபு.

பல்லவி.

என்னசெய்குவேனன்னமே அடிசொர்ணமே. (எ)

அநுபல்லவி.

உன்னையின்னகரினில் மன்னனான் விற்றேனெனில்
பின்னமாகவே யாரும் பேசுவாரேயிதற். (செ)



## சந்திரவதி சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

பல்லவி.

பந்தாணீர் மயங்கலாமோ எனதருமை. (ம)

அநுபல்லவி.

இன்னகரிலுமுள்ள விறைவர் துதிக்கவந்தப்
பொன்னகரயோத்தியைப் புரந்தகாவலர்வேந்தன். (ம)

அரிச்சந்திரன் சரணம்.

வந்துகிளர்விழியாளே புத்தமுதங்கற்
கண்டுநேருமொழியாளே
பண்டுநான்செய்தவிதாரு பாவமோமுனிகுதோ
கொண்டபெண்டுனைவிலை கூறச்சொல்கிறாயாதோ. (எ)

சந்திரவதி சரணம்.

வேந்தர்புகழுகிராமானே என்னருமையர்
சாந்தருணந்சேர் பூமானே
காந்தனேயோசியாமற் கவலைகொண்டாலிவ்விதம்
தேர்ந்தமுனிவர்கடன் தீருவதுமெவ்விதம். (ம)

அரிச்சந்திரன்.

ஆதரவொன்றுமில்லையே முனிவருடை
ஆதர்செய்குறர் தொல்லையே
மேதினிதனிலென்ன வினையதுசெய்தேனோ
வேதியர்முதலோரை மெலிவுறவைத்தேனோ. (எ)

சந்திரவதி.

மந்திரபுயாசலனே அகிலமெங்கும்
விந்தைசேர் பிரபலனே
எந்தன் மனம்போலவே இந்தத்தருணம்விற்று
தந்திரக்கோசிகர் தமதுருணமகற்றும். (ம)

அரிச்சந்திரன்.

சோதிவடிவுடையாளே பின்னுதவிட்ட
கோதில்லாதசடை யாளே
மாதுன்னையானவிலையே செய்யமனமில்லையே
காதலியுன்னையன்றிக் கதியேதுமில்லையே. (எ)

சந்திரவதி.

தங்கமிருந்தநேசனே தர்மமேசெய்ச்
செங்கரம்வாய்ந்த பேரசனே
சங்கையில்லாதபொன் தனையீய்ந்திடவேயின்று
எங்களையன்றிக்கெதி யில்லையென்செய்வேனென்ப. (௬)

அரிச்சந்திரன்.

மைப்படிந்திடுங்கண்ணனே எனதுவார்த்தை
தப்பாதுகேட்கும் பெண்ணாரே
செப்பொண்ணாதகோசலை சீர்நாடிழந்ததுபோல்
இப்போதுந்தனைநான்விற் றிருப்பேனே புவியின்மேல் (௭)

சந்திரவதி.

கொஞ்சநஞ்சமாவென்சாமி யாசகஞ்செய்து
எஞ்சாதீய்ந்திடவே பேறு
கஞ்சமலரோன்விதி கடந்திடவும்போகாது
அஞ்சலிசெய்கின்ற வடியாள்வார்த்தைகேளாது (௬)

அரிச்சந்திரன்.

எப்படித்துணிந்துவிற்பேன் எனதுமனம்
ஒப்பியேநிர்வகி பேன்
அற்புதநடையாளே அழகுயருடையாளே
விற்போற்புருவத்தாளே விசித்ராப்பருவத்தாளே. (௭)

(அரி-வ-ம்.) கண்ணாட்டி இந்தச் சண்டாளன் எவ்வாறு மனந் துணிந்து இந்நகரத்தினிடமாக விற்கப்போகின்றேன் என் மனமானது மிகவும் வாடுகிறதே இதற்காகவா உன்னைக் கன்னமாபுரியிலிருந்து விவாகஞ்செய்து அழைத்துக்கொண்டு வந்தேன்.

(சந்-வ-ம்.) கண்ணாளா இனிமேல் பற்பல சங்கதிகளை யோசிக்கிறதிற் பிரயோசனமொன்றுமில்லை விதியின் செயலை ஒருவராலும் வெல்லமுடியாது ஆகையால் தாங்கள் சித்தத்தைத் திடப்படுத்தி என்னையும் புத்திரனையும் விலைகூறிவிற்றுச் சீக்கிரத்தில் முனிவர் கடனைத் தீருங்கள்.

(அரி-வ-ம்.) நல்லது கண்மணி.



(நட்-வ-ம்.) சந்திரா என்னடா முனிவர் கடனுக்கு வழிசெய்யாமல் நீயும் உனது ஆம்பிடையாளும் ரோதனஞ் செய்துகொண்டிருக்கிறீர்கள்.

(அரி-வ-ம்.) நாதா கோபங்கொள்ளவேண்டாம் இதோ எனது பாரியாளையும் புத்திரனையும் இந்நகரத்தில் யாருக்கேனும் விற்று முனிவர்கடனைக் கொடுத்து விடுகிறேன்.

(நட்-வ-ம்.) சந்த்ரா அதுதான் சரி.

# அரிச்சந்திரன் மனைவியை

## விலைகூறும் பாகம்.

அரிச்சந்திரன்சொல் விருத்தம்.

அன்னமே தேனேமானே யாருயி ரனையகண்ணே
சொன்னமே குயிலேயுந்தன் சொற்படி துணிந்துபாவி
சென்னியின் மீதுபுல்லைத் தெரியவே சூட்டியையோ
இன்னகர் தன்னில்விற்க வெண்ணினேன் காலந்தானே.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி இந்தச்சண்டாளன் உன் சிரசின்மீதும் மைந்தன் தேவதாசன் சென்னி மீதும் இதோபுல்லை வைத்து நீசொன்னவாறே விலைகூற எத்தனித்தேன் நடந்துவருவாய்

அரிச்சந்திரன் விருத்தம்.

கோசிகமா முனிகடனு லடைவ
கொடுத்தன்பஞ் சகிக்கமுடி யாமலந்தோ
மாசிலா மனைவிமகன் றன்னையிந்த
மாநகரில் விலைகூற வெத்தனித்தேன்
பூசுரர்கள் முதலாயெக் குலத்தாரேனும்
புன்மையேன் பகர்ந்திடும்பொன்ன தனையீய்ந்து
கூசிடா மல்விலைக் குக் கொண்டேயெந்தன்
குறைகளெல்லாந் தவிர்த்திங்காட்கொள்ளுவீரே.





## அரிச்சந்திரன்சொல் தரு.

என்வருகிறுய் மந்திரி யென்றவர்ண மெட்டு,

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்மனையாளை விலையாகவே செய்வேன்
இன்றுகொள்வீர்கிதியோர் தானே (எ)

அநுபல்லவி.

பொன்மனைமதிக்கர் பொற்பார்முகமுந்தான
தன்மழும்விலைபெற்ற தகைசோகத்தாளான (எ

சரணங்கள்.

மங்குலிலிருண்டதோர் குழலாள்-செய்ய
வசைமலரைவென்ற கழலாள்
அங்கசன்விற்போற் புருவத்தாள்-எழில்
அதிகவிசித்ரப்புரு வத்தாள்
துங்கக்கடலமுதைத்தோற்கச் செய்புமென்சொல்லாள்
அங்கணிலத்திலுள்ள வரிவையருக்குநல்லாள் (எ

(அரி-வ-ம்.) மேகம்போன்ற கூந்தலும் செந்தாமரை மலரை வென்ற பாதமும் மன்மதன்வில்லை நிகர்த்த புருவமும் சித்திரம் போன்றவடிவமும் பாற்கடலிற்பிறந்த அமுதம்போன்றவசனமும் மாநிலத்திலுள்ள மாதர்கள் குணங்களைப்பார்க்கிலும் நல்லகுணமும் உடைய எனது பத்தினியையும் மைந்தன் தேவதாசனையும் விலைசெய்குறேன் இந்நகரத்திலுள்ள தனவான்கள் யாவராவது வாங்கவாருங்கள்,

## அரிச்சந்திரன் சொல்தரு.

கோசலைநாடாண்ட போசன்-என்னும்
குற்றமில்திருசங்கு ராஜன்
ஆசையாய்ச்செய்தவத்தாற் பிறந்தேன்-பெயர்
அரிச்சந்த்ரனெனக்கூறச் சிறந்தேன்
மாநிலந்தனை மனுமுறைப்படியாண்டேன்
ஈஸ்பரன்செயலாலே யிவ்விதக்கோலம்பூண்டேன் (எ)

(அரி-வ-ம்.) மாட்சிமைதங்கிய கோசலைநாடாண்ட யாதொரு குவசையில்லாத திரிசங்குமஹாராஜன் மாதவத்திற்பிறந்து அரிச்சந்திரனெனப் பெயர்தரித்து சாஸ்திரங்கூறியவாறுகொஞ்சமேனு முறைதவராது அரசாக்ஷிசெய்தேன் ஊழ்வினைவலியாலும் சர்வேசுபரன் செயலாலும் இந்தக்கோலம்பூண்டு என்மனைவியையும் மைந்தனையும் விற்க எத்தனித்தேன் ஆதலால் யாரேனும் இவ்விருவரையும் விலைக்கு வாங்கி எனது வறுமையைத் தீர்ப்பீர்களாக.

## அரிச்சந்திரன்சொல் தரு.

இட்டபணிகளெல்லாஞ் செய்வாள்-ஒங்கும்
இசைசேர்வண்டிமிர்மலர் கொய்வாள்
கட்டவிழும்மலரைத் தொடுப்பாள்-இவளை
மாண்பாய்விலைகொள்வோர்க்கே கொடுப்பாள்
அட்டியில்லவார்த்தையிது வடியேனிப்புவியேலே
கஷ்டங்கோசிகமுனிகடனை டைவதாலே (எ)

(அரி-வ-ம்.) ஐயா கனவான்களே இவளென்ன வேலைகளெல்லாஞ்செய்வாள் அன்றியும்வண்டுகள் மொய்க்கு மலர்களைக்கொய்வாள் அதைத்தொடுப்பாள் விலைகொள்வோர்க்குக் கொடுப்பாள் இதற்குயாதொரு சந்தேகமில்லை யாதலால் தற்சமயம் அடியேன் விஸ்வாமித்திர முனிவருக்குக் கொடுக்கவேண்டிய கடனிறுவதற்குள்ள துன்பம் இந்தத்தாதா வைடைவதாலும் மற்றுந்தவனை சமீபித்தபடியாலும் தயவுசெய்து விலைகொண்டு எனது கஷ்டத்தைய கற்றுங்கள்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

மதகுஞ்சரத்தோர்வீர னேயிக்கையில்
வாங்குகவென்கல்லைவத்துத் தேறி
இதமாய்ச்சமுட்டியெரிக் தாலே-வானி
லேகுந்தாம் பொன்னிக் காலே
உதவிறைக்கொடியிடை மிடிநடையேவாய்ந்த
பதவுதிச்சந்த்ர வதிப்பெயர்பண்பாயேந்த (எ)



(அரி-வ-ம்) ஐயா இக்காசிநகர்வாசிகளே இவர்களைவிற்குங் கிரயத்தொகை எவ்வளவென்றாலோ மும்மதம்பொருந்தியயானையின் மீது பாலராஷ்டிகமுள்ள ஓர் சுத்தவீரனேறி வெள்ளிக்கவணில் மாணிக்கக் கல்லைவைத்து எறிந்தால் எவ்வுயரம்போகுமோ அவ்வுயரம் பொன்னாகும் அதற்குக்கொஞ்சமேனுங் குறையாது.

(அரி-வ-ம்.) மாதே யென்செய்வேன் அநேக இடங்களெல்லாம் விலைகூறினேன் ஒருவரும் விலைகொள்ளவரவில்லையே இதுவும் காசிநாதன் கிருபையோ?

(அரி-வ-ம்.) கண்ணாளா கவலையடையாது சூஸ்திரவீதியிலும் வைசியாள் வீதியிலும் விலைகூறுங்கள்.

(அரி-வ-ம்,) நல்லதுகண்மணி.

## அரிச்சந்திரன் சொல்தரு.

தங்கமிருந்தகுல் திரரே-மற்றும்
சுபமாகவாழிச்சேத் திரரே
எங்கும்புகழ்பூவை சியரே-அள
வில்லாததன வைசியரே
இங்குயான்கூறியபொன் யாரானுமென்னிடம்
மிந்தால்யான்சந்தேக மில்லாமலவரிடம் (எ)

(அரி-வ-ம்.) ஐயா சூத்திரர்களே பூவைசியாளாகிய வேளாளர்களே தனவைசியர்களே அடியேன் சொன்ன திரவியத்தொகையை யார்கொடுத்தாலும் யாதொருதடையின்றி எனது மனையாளாகிய இம்மாதையும் இந்தப்புத்திரனையுங்கிரயஞ்செய்வேன்கிருபைசெய்து கிரயம்பெற்று எனது வறுமையைத் தீருங்கள்.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி சூத்திரவீதியிலும் பூவைசியாள் தனவைசியாள் வீதியிலும் விலைகூறினேன் ஒருவரும் வாங்க வரவில்லையே என் செய்வேன்.

(அரி-வ-ம்.) கண்ணாளா? வருந்தாமல் சத்திரியர் வீதியிலும் மறையோர் வீதியிலும் விலைகூறுங்கள்.

(அரி-வ-ம்.) நல்லது பெண்மணி.

### அரிச்சந்திரன்சொல் தரு.

வையம்புரக்குஞ் சத்திரியரே-அவர்க்கு
வாய்த்ததோர் மதிமந்திரியரே
செய்யமறையோது மேலோரே-முன்செய்
திவினையாலித்தப் பாரே
தெய்வபலத்தினல்ம திதயமாராஜன்பெற்ற
திவ்யகுணமுமதி தேசுசுமேபெற்ற (எ)

(அரி-வ-ம்.) ஐயர், பூமியாளும் அரசர்களே ஐயா, அன்னவர்களுக்குப் பக்கத்திலிருந்து நற்புத்திபோதிக்கக்கூடிய மதிமந்திரிகளே ஐயா, ரிக், எஜுர், சாமம், அதர்வணமென்ற நான்குவேதங்களையும் ஓதக்கூடிய அந்தணர்களே எனது ஊழ்வினைவலியினால் கன்னமாபுரியாளும் மதிதயமகாராஜன் அருந்தவத்திற் பிறந்த எனது பத்தினியாகிய சந்திரவதியையும் மைந்தன் தேவதாசனையும் விலைசெய்கின்றேன் யாவராவது விலைகொள்ளுங்கள்.

## காலகண்டர்வருதல்.

விருத்தம்.

மண்டலம்புகழயோத்தி மாநகரதனையாண்ட
திண்டிறலரிச்சந்த்ரன்றன் தேவியைவிலக்குவாங்க
விண்டலவக்னிதேவன் விப்பிரகுலத்திற்கால
கண்டனென்றேபேர்பூண்டு களிப்புடன்தோன்றிவந்தே

### காலகண்டர்சொல் தரு.

அத்தப்பிர்மபாரத்பராமென்ற வர்ணமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

காலகண்டனிதோ வந்தேனே
காதலுடனே சபையிற்றனே
மாதவன்றன்மலரடி துதித்து
மற்றுமவன்மீதுகீர்த்தனம் படித்து



நெற்றிமீதுதிருநாம மின்ன
நீணிலந்தனிலேபுகழ் துன்ன
நீதிசைவயோத்தியாண்ட போசன்
ஸ்ரீராரிச்சந்த்ர மகாராஜன்
மனைவியாளுடன்மைந்தனையு மின்று
வாங்குவேன்விலைக்குநலம் புகன்று

(அரி-வ-ம்.) மகாவுன்னதம் பொருந்திய விண்ணுலகத்தின்கண் அமரேசன்சமுகத்தில் அரிச்சந்திரனைப் பொய்யனென ஆக்கிடுவேனென்று சபதங்கூறி யன்னவனிடம் வந்து கபடமாக நாட்டைப்பறித்து மீண்டுங் கடனுக்குள்ளாக்கி அக்கடனைத் தீர்க்கும்பொருட்டு இக்காசிக்ஷேத்திரத்துக் கனுப்ப அவ்வரிச்சந்திரன் இங்குவந்து கடன் தொகைசெலுத்த வழியில்லாமல் தனதுபுத்திரனையும் மனையாளையும் விற்றுருணத்தை தீர்ப்ப துசிதமென்று தீர்மானித்து அதோ வீதியில்விலைகூறி வருகின்றான் இவ்விதம்வருமெனமுன்னமே தெரிந்த அக்கினிதேவனாகிய யான் இந்நகரத்தின்கண்மறையோர் குலத்திலவதரித்து காலகண்டனெனப் பெயர்பூண்டுவளர்ந்து வந்தேன் இக்கணம் அவ்வரிச்சந்திரன் மனைவியையும் புத்திரனையும் விலைக்குவாங்குவதற்குப் பிராப்தமா யிருக்கின்றேன்.

### காலகண்டனுக்கும் நக்ஷத்ரய்யனுக்கும் நடக்கும சம்பாஷணை.

(கால-வ-ம்.) ஆரடா அவன் தூதாகவந்த கட்டுக்கெட்டபொட்டக்கண் சட்டிநக்ஷத்ராய்யன்

(நட்-வ-ம்.) ஆரடாவன் நம்முடைய நாமத்தைக் கிஞ்சிற்றேனு நெஞ்சிலச்சமில்லாமல் முழுவதுஞ் சொல்லிக் கூப்பிடுகிறவன்.

(கால-வ-ம்.) நான்தானடா நன்றாய்பாரடா பொட்டக்கண்வல்லாரோ பூபிள்ளை.

(நட்-வ-ம்) அத்தானு வாரும் வாரும் வாரும்.

(கால-வ-ம்.) அம்மாஞ்சி வந்தேன் வந்தேன் வந்தேன்

(நட்-வ-ம்) எங்கானும் நீர்வந்த காரியமென்ன.

(கால-வ-ம்) நீரென்னகாரியமா வந்திருக்குறீரோ அந்தக்காரியமாகத்தான் நானும்வந்தேன்.

(நட்-வ-ம்.) அப்படியா மிகவுஞ் சந்தோஷம் யான் சரயுநதிக்கரையிலிருந்து இந்தக் காசிப்பட்டணம்வரையிலும் என்னுடையவன் நமட்டும் அரிச்சந்திரனைப் பலவிதத்துன்பப்படுத்தியும்பொய்சொல்கின்றானில்லை நீதிவானாக விருக்கிறான் இனி உம்மாலியன்றமட்டும் பாரும்.

(கால-வ-ம்.) நல்லது யான் என்னாலியன்றமட்டும் பார்க்கிறேன் கிரையத்துக்கு வாங்கினவுடன் பணம்வாங்கிக்கொண்டதாக ஒப்புக்கொள்ளும்.

(நட்-வ-ம்.) நல்லது அப்படியே ஒப்புக்கொள்கிறேன்.

---

காலகண்டன் விருத்தம்.

பத்தினிதனையும்பெற்ற பாலகன்றனையுமின்று
சித்தமாய்விற்பேனென்று செப்பியநீயார்வாழ்வ
தெத்தலம்பெயரும்யாது வில்லறப்பெண்டைவிற்க
வுத்ததென்விபரமாக வுரைத்திடாயுரைத்திடாயே.

(கால-வ-ம்) அடா நீயார்? இந்தவீதியில் மனைவியையும் மைந்தனையும் விலைகூறிவந்தனை உன் எதாஸ்தானம் யாது? உன் பெயரென்ன? நீ மனைவியையும் மைந்தனையும் விற்க நேர்ந்த காரணம்யாது விபரமாய்க் கூறுவாய்.

(அரி-வ-ம்.) சுவாமி யான் அயோத்தியை யாண்ட திருசங்குபுத்திரன் அரிச்சந்திர னென்பேர் இம்மாது என்மனைவி இவன் யான் அருந்தவஞ்செய்துபெற்ற புத்திரன் என்மந்திரி இவர் யான் காதிமைந்தனாம் விஸ்வாமித்திரருக்குக் கொடுக்கவேண்டிய கடனுக்காக எனதுபாரியாளையும் புத்திரனையும் விற்கிறேன் இவர்மேற்கூறிய கடன்தொகையைப் பெறுவதற்கு வந்தநக்ஷத்திரய்யர்.

(கால-வ-ம்.) ஆ! ஆ! ஆ! அரிச்சந்திரா ஈதென்ன விபரீதம் உலகத்தின்கண் பெண்சாதி பிள்ளையை விற்பாருண்டோ கையிற்காசில்லையென்றால் என்னமோசம் வந்துவிடும் இதற்காக நீமயங்கலாமா? நல்லாயிருக்கிறது.



அரிச்சந்திரன் பொய்சொல்லுதல் பாதகமெனக் காலகண்டய்யரிடம் நீதியுரைத்தல்.

(குறள்) ("யாமெய்யாக்கண்டவற்று ளில்லையெனைத்தொன்றும் வாய்மையினல்லபிற.")

(அரி-வ-ம்.) சுவாமி சாக்ஷாத் சிவபெருமானாலும் அன்னவரருள்பெற்றுப்பொருள்களை உள்ளவண்ணமறிந்து அறிந்தவண்ணம் சொல்ல வல்லவராலும் உலகத்தார் பிழைக்கும் பொருட்டு அருளிச்செய்யப்பட்ட மெய்நூல்களை யான் பார்த்ததில் யாதொருதன்மையாலும் சத்தியத்தைப் பார்க்கிலும் மேற்பட்டவையாகிய பிறவறங்க ளில்லையெனக் கூறப்பட்டிருக்கிறது ஆதலால் சத்தியபங்கமானவார்த்தைகள் கூறமாட்டேன் அன்றியும் விப்ரகுலசிகாமணியாகிய தாங்கள் என்னைச் சத்தியபங்கமான வார்த்தையைக் கூறச்சொல்வது அழகாமா?

(கால-வ-ம்.) கேளும் அரசனே யான் உலகவழக்கத்தைச் சொன்னேன் நீதியுடையவனென்றெனக்குத்தெரியாது அஃதிருக்கட்டும் இவ்விருவர்களையும விற்கும்விலை யெவ்வளவு அதனையெடுத்துரைப்பாய்.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

மதகயமீதுசீரார் வாலிபப்புருடனேறி
யிதமுடன்சுவண்கல்லைத்தாங் கெறிந்திடுமுச்சம்பொன்னித்
ததியினிற்கொடுத்தாலேதாங் தடையிலாதுறுதியாக
முதுமறையவரேவிற்பேன் மொழிசற்றும்பிசகிடேனே.

(அரி-வ-ம்.) கேளும் மறையவர்சிகாமணியே கன்னமதங், கோசமதங், கைமதம் என்று சொல்லப்பட்ட மும்மதம்பொருந்திய யானையின்மீது ஓர் வாலிபபுருடனேறி அவன்கையில் வெள்ளிக்கவண்கொடுத்து மாணிக்கக்கல் வைத்தெறிந்தால் எவ்வுயரம் போமோ அவ்வுயரம் சொர்ம்பொன்கொடுத்தால் யாதொரு தடையின்றிக் கிரையஞ்செய்வேன் சுவாமி.

(கால-வ-ம்.) கேளும் அரசனே நீகூறியபிரகாரம் செம்பொன் குவிக்கிறேன் எங்கே உனது பாரியாளைப்பார்ப்போம்.

(அரி-வ-ம்.) இதோநிற்கின்றாள் சுவாமி.

காலகண்டன் விருத்தம்.

அரசனேகேளாயுந்த னரிவையைப்பார்த்தாற்பூவாழ்
திருமகள்போலவேதான் றெரிகின்றாள்செம்பொனின்று
பெருமிதமாகவிந்தவிலைக்கு நான்பெற்றேனாகில்
திரமுடன்விட்டுவேலைசெய்திடாள் செய்திடாளே.

(கால-வ-ம்.) கேளாய்வேந்தே உனது பாரியாளைப்பார்த்தால்தாமரைமலரில்வாழும்மகாலெக்ஷுமியைப்போலேயிருக்கிறாள் ஆகையாலிவளையான் மிகுந்த திரவியத்தைக் கொடுத்துக்கிரையத்துக்கு வாங்கினால் என் ஆத்துவேலையெல்லாம் இவளாலே செய்யமுடியாது நானோ ஏழைப்பிராமணன் நேக்குத்தகுந்த ஆளல்லோ பார்க்கவேண்டும்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தணராசேயெந்தனுடைய நாயகியாளொன்றும்
விந்தைசேர்மலர்தொடுப்பாள் மெல்லணையலங்கரிப்பாள்
சிந்தையாய்ச்சித்திரங்கள் தீட்டுவாள்கோபங்கொள்ளாள்
நிந்தனைகூறாள்சத்தியநெறி தனைத்தவறாள்சுவாமி.

(அரி-வ-ம்.) கேளும் அந்தணர்சிகாமணியே எனதுபாரியாள் மலர்தொடுப்பாள், சித்திரம் எழுதுவாள், பஞ்சணையலங்கரிப்பாள், கோபத்தை யெதிர்நோக்காள், கடூரமானவார்த்தை பகராள், சத்தியநெறிதவறாள், இன்னும் அனேக அற்புதவேலைகளெல்லாஞ் செய்வாள் சுவாமி.

(கால-வ-ம்.) கேளாயரசனே அந்தவேலைகளெல்லாம் எனக்கு வேண்டுவதில்லை நான் சொல்லக்கூடிய வேலைகளைச்செய்வாளானால் இப்பவே கிரையமுறியெழுதும் பிள்ளாய்.

(அரி-வ-ம்.) பிரபூ தங்களுக்கெவ்வித வேலைகள்செய்யவேண்டும் சொல்லுங்கள்.

(கால-வ-ம்.) கேளாய்வேந்தே நமதாத்தில் தினந்தோறும் நாலுநாழிகை நெல்லுக்குத்தவேணும் மூன்றுநாழிகைசாணி தட்டவேணும் இருநூறுகுடம் தண்ணீர்கொண்டு வரவேணும் இன்னும்



என் ஆத்துக்காரி எவ்வெவ்வ வேலைசொல்கிறாளோ அஃதெல்லாஞ் செய்யவேணும் அப்படிச்செய்வாளானால் நான் கிரையத்துக்கு வாங்கிக்கொள்கிறேன் இல்லையேல்வேண்டுவதில்லை.

(அரி-வ-ம்.) ஆ! ஆ!! ஜெகதீசா எனது பாரியாளிப்போர்க்கொற்ற அரிதானவேலைகளைச் செய்தறியாளே இதற்கென்செய்வேன்.

(சந்-வ-ம்.) பிராணேசா என் கவலையடைகின்றீர்கள்வேதியர் சொல்லக்கூடிய வேலைகளெல்லாம் அடியாள் தடையின்றிச் செய்வேன் சீக்கிரங்கிரையஞ்செய்து கடனைத்தீருங்கள்.

(அரி-வ-ம்.) சுவாமி தங்கள்சித்தம்போல வேலைகள் யாவும் செய்வாள் சுவாமி.

(கால-வ-ம்.) அப்படியானால் கிரையமுறி எழுதும்பிள்ளாய்.

# அரிச்சந்திரன் ஆவணமெழுதும்

## அகவல்.

திருவளர்காசி க்ஷேத்திரந்தன்னில்
மருவிலாவேதியர் மரபினுதித்த
காலகண்டப்பேர்க் கனவானுக்கின்று
கோசலவயோத்தியோர் குடையினிழலில்
அரசுபுரிந்தவண்ணல் புகழ்சேர்
திருசங்குபூமன் சேயனான
அரிச்சந்திரன்யானவ சரிமித்தம்
சரிச்சந்திரமுகத்தையலாமெனது
மனைவிசந்திரவதி யுடன்சீரார்
தனையன்றேவ தாசன்றனையும்
விலையதுகூறி விற்றாயேயானைமேல்
மலைவிலாதேயொரு மானிடனேறி
யெறியுங்கவண்கல் லேகுமுச்சம்
குறைவிலாச்செம்பொன் குவியலைவாங்கி
காதிதன்மைந்தன் கடன்தொகைபெறவே
தூதாய்வந்த நக்ஷத்திரனிடத்தில்

சந்தேகனீதோ யிவ்விலேமுறிக்கி
வாய்த்தசாசுதிதன்மதிதனி துயர்ந்த
மந்திரிசத்தியகீர்த்தியு மாகிலா
அந்தமாய்நக்ஷத்ரய்யருந்தானே.

(அரி-வ-ம்.) சுவாமி இதோ சாசனம் எழுதியானது பார்த்துக்கொண்டு திரவியத்தைக் கொடுக்கப் பிரார்த்திக்கிறேன்.

(கால-வ-ம்.) சேனும் வேந்தே இதோ நூதாரிய நக்ஷத்ரயரிடம் திரவியத்தைத் கொடுத்து விட்டேன் சேட்டுக்கொளூம்.

(அரி-வ-ம்.) நாதா கடன்தொகை பூராவும் பெற்றுக்கொண்டீர்களா?

(நட்-வ-ம்.) பெற்றுக்கொண்டேன் சந்திரா.

(கால-வ-ம்.) அரிச்சந்திரா உனது பத்தினியையும் பாலகனையும் சீக்கிரத்தில் அனுப்பு நான் ஆத்துக்குப்போக வேணும்.

(அரி-வ-ம்.) இதோ அனுப்புகிறேன் சுவாமி.

(அரி-வ-ம்.) பெண்ணே சந்திரவதி நீயும் பாலகன் தேவதாசனும் செல்லுங்கள் என்விதி யிப்படியானது.

## சந்திரவதிபிரிகிற பாகம்.

சந்திரவதி விருத்தம்.

மன்னவர்மன்னுயெந்தன் மணவாளா அரசர்போற்றும்
பொன்மலர்ப்பாதாமேரு புயாசலாபிராணநாதா
கன்னிநானுமைப்பிரிந்து கடல்வளையுலகிலோங்கும்
இன்னகர்தன்னில்வாழ விறையவன்விதித்திட்டானே.

சந்திரவதிசொல் தரு.

கொண்டகணவன் றனுமென்ற வர்ணமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மன்னுவுமைப்பிரிந்து மறையோரில்லத்திருக்க
வாழ்க்காலம்வந்ததோ கண்ணுளாசாமி (மன்னு



சொன்னமொழிதவறாத சுந்தரா-புரந்தரா
சுகிர்தகுணாளவெந்தன் கண்ணுளாசாமி (மன்னு)

அன்னையன்விதியோ அருந்தவன்செய்விதியோ
ஐயோவொன்றுமறியேன் கண்ணுளாசாமி (மன்னு)

பூவுமணமும்போல மேவிநாமிருவோரும்
பூவுலகத்தில்வாழ்ந்தோம் கண்ணுளாசாமி (மன்னு)

ஆவியுமதுவுற்ற வழகியவுடலும்வே
றனதுவேபோலானோம் கண்ணுளாசாமி (மன்னு)

ஆரமுதேமயிலே அன்னமேவாவென்று
அழைப்பதாரினிதேபோச்சோ கண்ணுளாசாமி. (மன்னு)

(அரி-வ-ம்.) ஆ வென் பிராணநாதா அடிமானே, மயிலே குயிலே, அமுதே, கிளியே, பூவையே, என்று விதவிதமாகப் பெயரிட்டழைக்கும் உம்மை இன்று இன்னகரிற் பிரியக்காலம் வந்ததா? பூவும் மணமும் போலவும் ஆவியும் உடலும் போலவும் கூடியிருந்த தங்கள் திருமுகத்தை எப்போது காணப் போகிறேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

இந்துசேர்முகமாதே மினர்விரிமலர்ப்பூங்கோதாய்
மந்தகாசஞ்சேர்மானே மாமரக்குயிலேதேனே
மைந்தனையழைத்துநீயு மாபாவியெனைப்பிரிந்து
சிந்தையாகுலங்கொள்ளாது தேசிகர்பின்னேசெல்வாய்.

அரிச்சந்திரன்சொல் தரு.

ஆசைமன்னவாவென்ற வர்ணமெட்டு.

இராகம் - சங்கராபரணம் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

ஆசைக்குயிலே உயரமுருகுமயிலே ஆசைத்தையலே (ஆ)

அநுபல்லவி.

மீசனருளோவிக் காசியிலுந்தனைப்
பூசரர்க்குவிற்றுத் தேசநுகுன்றிட (ஆ)

சரணங்கள்.

அன்னநடையாய் கொடி
யனையுவிடையாய் கண்மணி (அன்)
என்னகருமுள்ளோர் கன்னியையிற்றவன்
என்னச்சொல்வாரிதற் கென்னசெய்வேனடி (அ)

பச்சைக்கிளியே பாரை
விளக்கும்ஒளியே கண்மணி (பச்)
செச்சையணிந்த கெம்பீரமுந்திரமும்
இச்சமயம்போச்சே யார்க்கும்வசையாச்சே (அ)

தேன்மொழியாளே செழுந்
சேல்விழியாளே கண்ணாட்டி. (தேன்)
நான்மறையுணர்வோ ரானவேதியர்பால்
மானேநீயேகிடத்தானே ஞானுய்வேனோ (அ)

சந்திரவதி விருத்தம்.

ஆசைநாயகரேயார்க்கு மன்பரேவேதசாஸ்திரம்
பேசியபடியேநாமும் பிராணனுஞ்சடமும்போல
நேசமாய்க்கூடிவாழ்ந்தோம் நேர்மையாயிந்நாளிந்தக்
காசியில்வெவ்வேறாகக் காலமும்வந்ததையோ.

## சந்திரவதிசொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

சாந்தன்மணாளா இதற்கியாதுசெய்குவோம் குணாளா (எ)

அநுபல்லவி.

சந்ததம்வாய்மைபொருந்தி யிருந்ததற்
கிந்தவிதிவந்ததாகந்தது இத்ததி (எ)

சரணங்கள்.

திண்டோள் வேந்தனே-ஜெக
மெச்சுஞ்சாந்தனே ஊரோ (இன்)



மண்டலத்தார்வசை விண்டிட்டால்நாமுளங்
கொண்டுநைந்தாற்பல னுண்டோசொல்லுமையோ (எ)

என்ன காலமோ-எவர்
செய்தகோலமோ துரையே (என்)
மன்னுதிமன்னர்தம் பொன்னடிபோற்றியே
உன்னதமுற்றதற் கின்னல்வந்துற்றது (எ)

சுந்தரப் பூமா-சொகு
சார்ந்தமாநேமா கண்ணாளா (சுந்)
எந்தவிதமாநாம் நொந்தழுதாலுமே
வந்தவினை யொழிந்தின்றுபோகுமோ (எ)

(அரி-வ-ம்.) கண்மணி இனிமேற்சிந்தம்வருந்துவதாலென்ன பிரயோசனம் மைந்தனை யழைத்துக்கொண்டு மறையோர்பின்சென்று வருவாய்கலங்காதே.

சந்திரவதி விருத்தம்.

சொன்னசொற்றவறாவேந்தன் சுந்தராபுரந்தராநீர்
கன்னமாபுரியில்வந்து காவலரனையிலென்னை
நன்னயமுடன்மணந்த நாள்முதற்பிரியாவும்மை
கன்னிகைபிரிந்தேயின்னுள் காலமுங்கழிக்கப்போமோ.

## சந்திரவதிசொல் தரு.

மாதவமே இவ்வுருவா யென்றமெட்டு.

இராகம்-சஹானா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

எப்படிப்பிரிவேன்மன்னா இத்தலம்புகழ்விற்பன்னா

அநுபல்லவி.

ஒப்புவமையில்லா தோனே
யும்மைபிரிந்தகில் யானே (எ)

சரணங்கள்.

சுந்தரமிகுந்தநாதா தொன்மறையோரிடம்நீதா
னெந்தவிதம்ஏவல்செய்வே னின்சொற்படியுடனுய்வேன் (எ)

ஆவியும்சடமும்போலே அவனிதனிலேமென்மேலே
மேவிவாழ்ந்தோமோசம்பன்னா மெய்யாருமைவிட்டின்னாள் (எ)

கன்னபுரிதன்னிலின்று கைப்பிடித்தருந்தவின்று
சின்னவேர்பொழுதுநானே சேர்ந்துவாழாதிருப்பேனே (எ)

அரிச்சந்திரன் விருத்தம்.

பொற்கொடியானேவாசப் பூங்குழலுடையபெண்ணே
கற்கண்டைவென்றசெஞ்சொற் காதலியினிமேலாக
திக்கெலாம்புகழுநாமுஞ்செழு மலர்மணமும்போல
மிக்கவேகூடிவாழ்ந்த விந்தையைவெண்ணலாமே.

## அரிச்சந்திரன்சொல் தரு

ஷை வர்ணமெட்டு.

இராகம்-சஹானா-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்கையேநீ மயங்காதே மனதுமிகத்தயங்காதே

அநுபல்லவி.

துங்கவீசன், புரிகின்ற
சோதனைக்கென் செய்வோமென்றன் (ம)

சரணங்கள்.

கற்பினிலுயர்ந்தபெண்ணே காதலுக்கிசைந்தகண்ணே
முற்பவமென்செய்தேமோ முறைதவறிநடந்தேமோ (ம)

ஆசைக்கிசைந்தகண்மணி அற்புதஞ்சேர்ந்தவிண்மணி
கோசிகர்கடனாலே குன்றினேனாமானதாலே. (ம)

பெண்ணினமுதேமயிலே பெட்புறுஞ்சோலைக்குயிலே
எண்ணில்லாதவெண்ணமது என்கொன்றேகிறுமெனது. (ம)

(அரி-வ-ம்.) கண்ணேட்டி நாம் முற்சென்மத்தி லென்னபாதகஞ்செய்தேமோ இவ்விதி வாய்த்தது இதுவிஷயமாய் வியாகூலமடைவதில் என்ன பிரயோஜனம் சித்தத்தைத் திடப்படுத்துவாய் கண்மணி.

(சந்-வ-ம்.) கண்ணாளா? எவ்விதத்தில் எனதுசித்தத்தைத் திடப்படுத்தப் போகிறேன் க்ஷணநேரமாவது என்னைப் பிரிந்திருக்காத தாங்கள் எவ்விதம் பிரிந்திருக்கப் போகுறீர்கள்.



(அரி-வ-ம்.) ஆ என் ஆசைக்கிசைந்த குயிலே அன்புக்கிசைந்தமயிலே உன்னை எவ்வாறுபிரிந்து இந்தச்சண்டாளன் உயிர்தரிக்கப் போகின்றேன் உன்னை யெந்தச்சென்மத்திற் காணுவேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாதரிலுயர்ந்தபெண்ணே மதியவன்பெற்றகண்ணே
தீதிலாமதுரத்தேனே சித்திரவடிவார்மானே
காதிதன்புதல்வரான கௌசிகர்கடனுக்குன்னைப்
பாதகன்விற்றிருக்கையோ பரதேசிபோலவானேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

தருமோடிமானே வாதாடுதலென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னநான்செய்வேனெந்தன்பெண்ணே வெழில்மிருகண்ணே

அநுபல்லவி.

அன்னமேகுயிலேயுன்னை விற்கவோநீதே
துன்னுமறையோர்க்குவிற்றுச் சோர்ந்தேனிப்போதே. (எ)

சரணங்கள்.

முறையல்லவென்றுரைத்த மொய்குழல்மானே
இறையவனுனைப்பிரிந்திங் கிருப்பேனோதேனே. (எ)

சந்தமலரணிந்தோங்குங் கற்புயர்மாதே
இந்தவிதிவருமென்றே யெண்ணிலேன்பேதே. (எ)

செங்கமலமதைவென்ற துங்கவிழியாய்
மங்குலைவென்றகுழலாய் மதுரமொழியாய், (எ)

சந்திரமதி விருத்தம்.

சந்திரவதனப்பூமா தாரணிபுகழுங்கோமா
சந்தாமிருந்தபாதா சுருதிகளுணர்ந்தநாதா
விந்தைசேர்கமலப்பூவாழ் வேதன்செய்வினைக்கினாமுஞ்
சிந்தையாகுலங்கொண்டாக்கால் தீருமோதேருமன்னே.

## சந்திரமதிசொல் தரு.

ஷ வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆசைக்கிசைந்தபிராணநாதா அந்தவிர்ப்பாதா. (ஆ)

அநுபல்லவி.

ஓசைக்கடல்சூழுமிந்த வுலகத்தில்காமே
கோசிகர்கடனதாலே குறைவதானோமே. (ஆ)

சரணங்கள்.

சொன்னமொழிதவறிடாத துரையேசிமானே
முன்னைவினைக்கேசர்கோசல் முறையோபூமானே. (ஆ)

மந்தராபுயாசலனே மகிபாவெங்கோனே
சிந்தையாகுலங்கொள்ளாது தேருவீர்தானே. (ஆ)

கோடிதுன்பம்வந்துற்றாலும் கொற்றவாவாகம்
வாடிடாமலிருப்பதுவே வன்மைசேர்யூகம். (ஆ)

(சந்-வ-ம.) கண்ணாளா விதியின்செயலை யாவராற் கடக்கமுடியும் அதனையெண்ணாது தாங்கோஇவ்விதகலக்கமுற்றால் என்மனமெவ்விதங்கலங்காது ப்ரபூ.

## அரிச்சந்திரன் விருத்தம்.

மாதாசே மடப்பிலே குயிலேமானே
மதியையிகர் முகச்சந்த்ர வதியேயிசன்
சோதனையோ பைவிதியோ முனியன்சூதோ
தொல்லைவினை யோவுன்னை யின்னாளோங்கும்
மேதினியெ லாம்புகழிக் காசிதன்னில்
வேதியர்பால் விற்றுமுனி கடனைத்தீர்த்தே
போலாகினனீ பிரியப்போரா
யென்னசெய்வேன் மாபாவி யினிமேலேயோ,



## அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம் - தேசிகதோடி - தாளம் - சாபு.

கண்ணிகள்.

என்னசெய்குவேனெந்தன் இனியசெந்தேனே
உன்னையின்றுபிரிகுவேனே தானே, (எ)

## சந்திரமதிசொல் தரு.

மன்னர்மன்னவர்பணிமன்னவா சாமி
உன்னடியினிப்பயனுண்டோசொல் நேமி (ம)

அரிச்சந்திரன்.

மைப்படிந்திடுஞ்சோலைமாமரக் குயிலே
இப்படித்துயருறவென்செய்தோ மயிலே (எ)

சந்திரமதி.

பதியெல்லாம்போற்றிடும்பார்த்திபா காமே
விதியவன்புரிகின்றவினைக்கினி செய்வோமே (ம)

அரிச்சந்திரன்.

பவஞ்செய்தாலல்லோவினைபற்று மென்மானே
நவமாயறஞ்செய்தநமக்கித்துன்பமேன் தேனே (எ)

சந்திரமதி.

இச்சென்மத்திற்பிழையேதுஞ் செய்தறியோம்
முச்சென்மத்தென்பவமுமயன்றோமோ குறியோம் (ம)

அரிச்சந்திரன்.

எவ்விதமித்துன்பம் யான்சகிப்பேனே
கொவ்வைவிதழுடைய கே[illegible]லாமானே (எ)

சந்திரமதி.

சுந்தரமிருந்திடுந்துணையே கெம்பீரா
சிந்தையாகுலந்தனைத்தேற்றுவீர் தீரா (ம)

அரிச்சந்திரன்.

ஆவியுமுடலும்போலவனியில் வாழ்ந்தோம்
பாவியனுலித்தப்படியினிற் சூழ்ந்தோம் (எ)

சந்திரவதி.

என்னுதவென்னமெல்லாமென்னியே நெஞ்சம்
புண்ணாகச்செய்யதிற்புவியிலார் தஞ்சம் (பு

(சந்-வ-ம்.) பிராணேசா இஞ்சிற்றேனும் சஞ்சல மடையா, வருந்திகொடுங்கள் வியாகூலமடைந்ததினாலென்ன பிரயோசனம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கன்னலைக்கனியைத்தேனைக் கற்கண்டைக்கடிந்ததிஞ்சொற்
கன்னிகையாளேயெந்தன் காதலுக்கிசைந்தகண்ணே
முன்னம்யான்செய்தபாவமுனி விதோமுனியின்றுதோ
மன்னனுந்தனைப்பிரிந்து வருந்தவுமானதையோ.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஆனந்தனருமைக்கண்மணியே என்றவர்ணமெட்டு.
இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மாமயிலேநானினைப்பிரிய மனம்வருந்துதேயெந்தன். (மா)

அநுபல்லவி.

காமரஞ்சிதமே கட்டாணிமுத்தமே
கண்மணியே குயிலே-அடி
காதலியேயிந்தப் பூதலமதனில் (மா)

## சந்திரவதிசொல் தரு.

பல்லவி.

காதலனேநீர்கலங்கலாமோ எனைக்கலந்தணைந்ததோர் (கா)

அநுபல்லவி.

நீதிபிசகாமல் நீடுலகமாண்ட
திருபனே கோவே-அந்த
நின்மலன்செயலுக் கென்செய்வோநாமினி (கா)

அரிச்சந்திரன் சரணம்.

கொண்டலைப்பழித்தே யெண்டிசையும்புகழ்
கொண்டகுழல் மாதே-அடி



ஒண்டொடியேயிம் மண்டலமீது
பெண்டுதனைநானிலே விண்டுவிற்றேன்காலம் (மா)

சந்திரவதி சரணம்.

செங்கதிர்மாயிற் பொங்கமாயுதித்த
தீரவீர துரையே-செய்ய
பங்கயமலர் தங்கமாய்வாழும்
பாதகன்விதித்த திதெனவெண்ணுது (கா)

அரிச்சந்திரன்.

மன்னவரவையில் கன்னமாபுரியில்
உன்னைமணந் தேனே-அடி
அன்னமேயுயர் சொன்னமேயெந்தன்
அன்பிற்குகந்தபூங் கொம்பேகரும்பேநான் (மா)

சந்திரவதி.

கன்னற்பழனஞ்சூழ் நன்னயக்கோசலைக்
காவலராகிமூர்த்தும் சற்றும்
இன்னலடையாமன்னவா இன்று
என்னைப்பிரிந்திட தன்னிகரில்லாத (கா)

அரிச்சந்திரன்.

பஞ்சணைமீதினிற் கொஞ்சிவிளையாடும்
வஞ்சியேமாதரசே எந்தன்
கிஞ்சுகவபரஞ்சியே பெரும்
கேளிவிலாசியே ஞாலந்தனிலின்று (மா)

(அரி-வ-ம்.) கண்ணேட்டி இந்தச்சண்டாளன் கன்னமாபுரிக்குவந்து அரசாவையின்கண் உன்னைமாலையிட்டு அழைத்து வந்து மறையோரிடம் விற்பதற்காகவா என்மனம்மிகவும் வருந்துகின்றதே.

(சந்-வ-ம்.) அடிசந்தி என்னடி நீயும் உன் ஆம்பிடையானும் முகத்தோடுமுகம் வைத்துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருக்கிறீர்கள் தேசகாலமாகிறது கிச்சானைக் கூட்டிக்கொண்டு வாவா

(சந்-வ-ம்.) ஆ! பிராணேசா மறையவர் இவ்விடத்திலேயே இவ்வளவுகுரூரமாகப் பேசுகிறாரே அவரில்லத்துக்குச் சென்றால்

எவ்விதந் துன்பஞ்செய்வாரோ அறிகிலேன் என் சித்தமானது வருந்துகிறதே என்செய்வேன்.

### அரிச்சந்திரன் விருத்தம்.

மஞ்சுநேர்குழலாய்சீரார்மலர் நிகர்கமுலாயோங்கும்
நஞ்சுநேர்விழியாய்தீந்தேன் நற்கனிமொழியாயந்த
வஞ்சகமுனிவன்செய்யும் வல்வினைக்கென்னசெய்வோம்
நெஞ்சநீநைந்திடாது நெறிமறையவர்பின்செல்வாய்

## அரிச்சந்திரன் சொல் தரு.

அன்னமே நான்தொட்ட என்றவர்ண மெட்டு.

இராகம் - சாமா - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

மாதர்க்கரசியே, காதற்சரசியே
மாற்றுயர்ந்த சொன்னமே மணியினமே-அடியனமே
மயங்காதே-சித்தம் கலங்காதே-சித்தம்
கலங்காதே-கலங்காதே கலங்காதே

சந்திரவதி.

அம்புவியாவையும் சம்ப்ரமமாகவே
ஆண்டதோர்செம்பிரா எழில்மாரா
தீரூரா-ஆருமோ மனந்-தேருமோ
மனந்தேருமோ-தேருமோ தேருமோ

அரிச்சந்திரன்.

வஞ்சகமுனிவன் நெஞ்சாரச்செய்வினைக்
கென்செய்வோமினியே பதுமினியே
செழுங்கனியே-வாடாதே இதுகூடாதே
இதுகூடாதே கூடாதே-கூடாதே

சந்திரவதி.

கன்னமாபுரியிற் கைப்பிடித்தவிது
காறும்பிரிந்திலனே வருந்திலனே
தோகைநானே காலமோ அலங்கோலமோ
அலங்கோலமோ கோலமோ கோலமோ



அரிச்சந்திரன்.

அந்தணர்க்குவிற்ற எந்தனைப்பிரிய
சிந்தைநோகலாமோ தரமாமோ
அறமாமோ தேறுவாய் பதிற்கூறுவாய்
பதிற்கூறுவாய் கூறுவாய் கூறுவாய்

சந்திரவதி.

இந்தவிதநீருஞ் சிந்தைநொந்துரைக்க
எந்தன்காலகெதியோ முனிசதியோ
அயன்விதியோ இன்பனே உயரன்பனே
உயரன்பனே அன்பனே அன்பனே

அரிச்சந்திரன்.

வண்டுவிழியாளே கண்டுமொழியாளே
மாசிலாச்செந்தேனே மடமானே
மிகத்தானே-வருந்தாதே பெண்ணே-வருந்தாதே
பெண்ணேவருந்தாதே வருந்தாதே-வருந்தாதே

சந்திரவதி.

ஐம்பத்தைந்துதேசத் தரசர்கள்போற்றிய
அம்போருகப்பாதா பிரக்யாதா
வரதாதா ஆர்வனே மனந்தேர்வனே
மனந்தேர்வனே தேர்வனே தேர்வனே

அரிச்சந்திரன்.

சந்த்ரபிம்மானனச் சுந்தரியேயிளந்
தத்தையேகண்மணியே மாபெண்மணியே
முத்தின்பணியே தளராதே ஆகந்தளராதே
ஆகந்தளராதே தளராதே தளராதே

சந்திரவதி.

மானேகுயிலேமயிலே யென்றழைக்கும்
வார்த்தையின்றே-போச்சே வீசையாச்சே
யார்க்குமேச்சே வன்னனே-புயத்திண்ணனே
புயத்திண்ணனே திண்ணனே திண்ணனே

அரிச்சந்திரன்.

என்னுதவிதல்லாநீ யெண்ணிமயங்குவ
தேற்குமோடிநங்கையே மலர்மங்கையே

ஐயோவிங்கையே இடையாதே துயரடையாதே
துயரடையாதே அடையாதே அடையாதே

(அரி-வ-ம்.) மாதே சந்திரவதி எவ்வுயிரையும் காக்குமீசன் செயலுக்கென் செய்யலாம் இனியேது துயர்வரினும் மனங்கலங்காமல் தைரியத்துடன் மறையவர்பின் செல்வாய்கண்மணி.

(சந்-வ-ம்.)பிராணேசா இந்தச் சண்டாளி தங்கள் திருமுகத்தை எக்காலத்திற் பார்க்கப்போகின்றேன்.

(கால்-வ-ம்.) அடியே சந்தி நீயும் கிச்சானும் வருகிறீர்களா என்ன சொல்லுகிறீர்கள் அடா கிச்சான் நீ முன்னே செல்லடா.

தேவதாசன் விருத்தம்.

மைந்தனென்மனதுநோக வண்ணமார்சிரத்திற்குட்டி.
அந்தணரழைக்குகின்று னரையைபோவன்னையோடு
எந்தனைவிற்றதுண்டோ வித்ததிதந்தையேதாம்
சிந்தையாகுலங்கொள்ளாது செப்புவீர்ஒப்புவீரே.

## தேவதாசன்சொல் தர்க்கம்.

தாயுடன்கூடவென்னை யென்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

மாதாவோடென்னையிந்த மறையோர்க்குவிற்றீரோதான்
வழுத்துவீர்பிராமாய் ஐயாவே-ஐயா

அரிச்சந்திரன்.

அன்னையோடுன்னைமுனி யருங்கடன்தீர்ப்பதற்காய்
அந்தணர்பால்விற்றதுண்மை தேர்வாயே தேர்வாய்

தேவதாசன்.

பன்னாளாய்நீர்சுமந்த பாரந்தனையிறக்கிட்
பண்புடன்மகிழ்ந்தீரோ ஐயாவே-ஐய



அரிச்சந்திரன்.

எல்லாமீசன்செயலென் றெண்ணியேவருந்தாமல்
இன்பமாய்மறையோர்பின் செல்வாயே செல்வாய்

தேவதாசன்.

இன்பமாய்மறையோர்பின் னேகெனவுரைத்தீரே
என்றுனைமையான்காண்பேன் ஐயாவே-ஐயா

அரிச்சந்திரன்

அனுதினமுநான்வந்து அன்னையுமுன்னையுமே
அப்பனேகாணுவேண்டா அஞ்சாதே-அஞ்சாய்

தேவதாசன்.

அந்தணர்வெகுவாக வடியேன்தனைச்சினந்து
அடித்தாலென்னசெய்குவேன் ஐயாவே ஐயா

அரிச்சந்திரன்.

வேதியருன்னைவெகு மேன்மையாய்வைத்திருப்பார்
வேதனையடையாதே பாலனே-பாலா

(அரி-வ-ம்.) கண்மணி தேவதாசா இந்தச் சண்டாளன் கோசிகர்முனி கடனைத்தீர்ப்பதற்காக உன தன்னையோடு நின்னையும் மறையவர்க்கு விற்றது வாஸ்தவம் ஆகையால் உன்னையும் உன தன்னையையும் நித்தம் நித்தம் வேதியர் வீட்டில்வந்து பார்த்துக்கொள்கிறேன் மனம் வருந்தாது செல்வாய் பாலகா.

(தே-வ-ம்.) பிதா பலநாளாகத் தாங்கியிருந்த சுமையை இன்று இறக்கி விட்டீர்கள் போதும் அடியேன் ஜெனித்த ஜாதகப் பலனானது இக்கோலஞ் செய்து விட்டது சென்று வருகிறேன் பிதா.

(அரி-வ-ம்.) நல்லது கண்மணி சித்தங்கலங்காது சென்றுவருவாய்.

சந்திரவதிவிருத்தம்.

மின்னேரயில்வேற்கையா விகசிதமுடையமெய்யா
நன்னயமிகுந்தபூமா நானிலம்புகழுங்கோமா
பொன்மலர்ப்பாதாசீரார் புண்ணியாமறையோர்பின்னே
மன்னவாசென்றுவாரேன் வருதிதந்திடுவீர்தானே.

## சந்திரவதி சொல் தரு.

காலகண்டையர் வனம்போய் வாரேனென்ற வர்ணமெட்டு.

இராகம்-அபுருவம்-தாளம்-ஏகம்.

பல்லவி.

மன்னுபோய்வாரேன் மதிமயங்காதீர்

அநுபல்லவி.

சொன்னமொழிதவராத சுந்தராபுரந்தராவென் (ம)

சரணங்கள்.

செய்யவாய்திறந்துவிடை செப்புவீர்மனம் ஒப்புவீர் (ம)
அந்தணர்தம்மாளிகைக்கே யடியாளும்பாலனுடன் (ம)
சந்ததமுமைப்பிரியா தையனுமின்னுட்பிரிந்து (ம)
என்னுளுமைக்காண்பேனோ இன்பமதுபூண்பேனோ. (ம)
வஞ்சகமுனிவனுடமனது போலாச்சேயெந்தன் (ம)

(சங்-வ-ம்.) பிராணேசா மனம் வருந்தாது மறையோர் இல்லஞ்செல்ல வருதி கொடுங்கள் ப்ரபூ.

## அரிச்சந்திரன் விருத்தம்.

கற்பினிலுயர்ந்தமானே கவினுயர்மதுரத்தேனே
அற்புதமொழியினாளே யயில்நிகர்விழியினாளே
விற்பனத்தாளேயின்று வேதியரில்லஞ்சென்று
சொற்படியேவல்செய்து சுகுணமாய்வாழ்குவாயே.

## அரிச்சந்திரன்சொல் தரு தர்க்கம்.

இதற்கோர்பு மென்னையேன்ற வர்ணமெட்டு.

இராகம் - கமாச - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

மாதரசேநீயின்று மறையவரில்லஞ்சென்று
வருதிபோலேவல்செய்து மனதின்சஞ்சலவொய்து
வாழ்குவாய் வாழ்குவாய் வாழ்குவாய் வாழ்குவாய் (மா



## சந்திரவதிசொல் தரு.

ஐயோவுமைப்பிரிந்து அழுதுகண்ணீர்சொரிந்து
அந்தணர்வீட்டிற்கேக அடிமையப்படியாக
அமைத்தானோ அமைத்தானோ அமைத்தானோ அமைத்தானோ (ஐ)

அரிச்சந்திரன்

ஆசைக்கிசைந்தமயிலே அழகுயர்பூங்குயிலே
அங்கமெல்லாமுருகியே ஆவியதுகருகியே
அழுகாதே அழுகாதே அழுகாதே அழுகாதே (மா)

சந்திரவதி.

என்னசெய்குவேன்மன்னா இத்தலம்புகழ்விற்பன்னா
எக்காலமுமைக்காண்பேனோ இன்பமிகப்பூண்பேனோ
ஏழைநான் ஏழைநான் ஏழைநான் ஏழைநான் (ஐ)

அரிச்சந்திரன்.

கண்கோணியுழிவ்விதம் கலங்கிறலெந்தவிதம்
காலகண்டர்வீட்டினிற்போய் காலங்களித்திருப்பாய்
காதலி காதலி காதலி காதலி. (மா)

சந்திரவதி.

கன்னபுரியில்வந்து களிப்பாய்மணம்புரிந்து
கைப்பிடித்தமுதல்யானே கன்னியுமைவிலகிலேனே
கண்ணாளா கண்ணாளா கண்ணாளா கண்ணாளா. (ஐ)

அரிச்சந்திரன்.

இந்தவிதவருமென்று எந்தல்நானறிந்தாலன்று
இன்பமாய்மணம்புரியேன் என்னமதிகுறையேன்
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன் (மா)

சந்திரவதி.

நகமுஞ்சதைபோல்நாமே நன்றாகக்கூடிவாழ்ந்தோமே
நாதனேயதைநினைக்க நங்கையென்மனதுமிக்க
நலியுதே நலியுதே நலியுதே நலியுதே. (ஐ)

அரிச்சந்திரன்.

சிந்தைமிகவாடாதே தேன்மொழியிதுகூடாதே
தீவினையென்னசெய்தோமோ தெய்வத்தையிகழ்ந்தோமோ
தேருவாய் தேருவாய் தேருவாய் தேருவாய் (மா)

சந்திரவதி.

எவ்விதம்வேலைசெய்வே ணினிதாகவேநானுய்வேன்
யேதுதுயர்புரிவாரோ இறைந்துமிகவைவாரோ
எந்தலே எந்தலே எந்தலே எந்தலே (ஐ)

(சந்-வ-ம்.) பிராணேசா இந்தச் சண்டாளி தங்களைப்பிரிந்து மறையவரில்லஞ்சேர்ந்து எவ்விதம் வாழ்ந்திருப்பேன்.

(அரி-வ-ம்.) பிராணநாயகி நாம் சத்தியத்தைக் காப்பாற்ற வேண்டியதாதலால் கிஞ்சித்தேனுங் கவலையடையாது மறையோ ரில்லஞ்சென்று அன்னவரேவுகிற வேலைகளைச் சந்தோஷமாகப்பு ரிந்து பாலகனைப் பாதுகாத்துக் காலங்கழித்திருப்பாய் கண் மணி வருந்துவதினு லென்னபிரயோசனம்.

(சந்-வ-ம்.) கண்ணாளா வருதிபோலச் சென்றுவருகிறேன்.

(அரி-வ-ம்.) நல்லது கண்மணி சென்றுவா.

(தே-வ-ம்.) பிதா சென்றுவருகிறேன்.

(அரி-வ-ம்.) நல்லது பாலகா கவலையடையாது சென்றுவரு வாய்.

(கால-வ-ம்.) அடியே வெள்ளாட்டி வாடி சீக்கிரம் அடே கிச்சான் இந்த மூட்டையைக் கொண்டுவாடா.

## சந்திரவதி இராஜனைப்பிரிந்து புலம்பிக்கொண்டு போகுந் தரு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயையோபரதேசியாகினோம் ஆகினோம்
அவனியதனிலின்று பாலகா பாலகா பாலகா. (ஐ)

ஐயர்க்கடிமையாகி யன்னவர்பின்போக
ஆனதேவிதிவசம் பாலகா பாலகா பாலகா. (ஐ)

பாவலரைவைதேமோ பாதகம்புரிந்தேமோ
பார்த்திபரைப்பிரிந்தோம் பாலகா பாலகா பாலகா (ஐ)

கோவதைசெய்தோமோ கூடத்தைபிடித்தோமோ
குன்றினோம்புவிமீது பாலகா பாலகா பாலகா (ஐ)



மையபாவமணிந்து தையலாள்பக்கம்வாழ்
பாமன்செயலீதுவோ பாலகா பாலகா பாலகா (ஐ)

வெய்யமுனிவன்கூதோ வினையினற்பயன்தானோ
வேதியர்மனைக்கேக பாலகா பாலகா பாலகா (ஐ)

(பொது-வ-ம்.) இவ்விதம் வருந்துகிற சந்திரவதியையும் தே வதாசனையும் காலகண்டய்யரழைத்துக்கொண்டு தன் இல்லத்துக் குச்சென்றனர் அவர்களைப் பிரிந்த அரசன் வருந்தும் விதங் காண்க.

(அரி-வ-ம்.) மந்திரி ச[illegible]யகீர்த்தி எங்கே என்னு பத்தினி சந்திரவதியும் பாலகன் தேவ[illegible]சனும்.

(மந்-வ-ம்.) பிரபூ ஈதென்னவிபரீதம் சற்றுநேரத்துக்கு முன்ன தாகக் காலகண்டய்யரிடத்தில் விஸ்வாமித்திரர் கடனுக்காக வென் தன்னையாகிய சந்திரவதி யம்மானையும் வத்ஸன் தேவதாசனையும் கிரயஞ்செய்து அன்னவரில்லத்துக்குச் செல்லும்படியாக விடை கொடுத்துப் பிரிவாற்றுமையால் வருந்திச்சோகத்தில் மூழ்கியிருந் தவர்கள் தற்சமயம் சந்திரவதி யெங்கே! பாலகனெங்கே என்று கேட்குதீர்களே என்னகாரணம் பிரபூ.

## அரிச்சந்திரன் சந்திரவதியைப் பிரிந்துபுலம்புகிற பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பத்தினியரசைச்சேரர் பாலனைப்பிரியலாச்சோ
மித்திரவுருவார்விஸ்வாமித்திரன்மகிழலாச்சோ
சத்தியமுனைமையான்பாகா தற்பராமிருந்தயோகா
எத்தினங்கண்டியோனு மிருதயமகிழப்போறேன்.





## அரிச்சந்திரன் சொல் தரு.

சம்போ ஹரகங்காதரா வென்றவர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோவொருகாலும்பிரியாத மனையாளை
வெய்யபாவியான்பிரிந்தேன் வினையாலிந்தவேளை
மங்கைவிசாலாக்ஷிபாகம்வாழு மீசனே
பங்கயன்மால்தங்கட்குற்ற பாவநாசனே
பன்னகாபரணமணிபானேயாதி யானே
என்னபாவமுன்னாளிற்செய்தேனோ நான்றற்பரனே
காமனைப்பொடியாச்செய்தகாசி விசுவேச
யேமனையுதைத்தபாதசிவனையாள்சர் வேசா
கல்லாலின்கீழ்மகிழ்வுடன்யோ கமதுசெய்தேவா
சல்லாபமாய்விடையேறியெந் தனையேகாவா

(அரி-வ-ம்.) ஆ! காசி நாதாயான் உனது பாதாரவிந்தமே கெதியெனநம்பி இன்னகருக்கு வந்ததற்கு மனைவியையும் மைந்தனையும் பிரியச் செய்தனையே உனக்கிது சம்மதியா?

(மங்-வ-ம்.) என்ன ப்ரபூ இவ்விதம் கவலையடைகின்றீர்கள்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

என்னசொல்வேனான் ஏதுசொல்வேனப்பா
என்குதேயெந்தனுள்ளம் ஐயையோமந்த்ரி
என்குதேயெந்த னுள்ளம் (எ)
கன்னிபங்கன்சதியோ மலவேதன்விதியோ
காலகதியோவறியேன் ஐயையோமந்த்ரி
காலகதியோ வறியேன் (எ)
பத்தினியையும்பிற பாலனையும்பிரிந்து
பரதேசியானேனின்று ஐயையோமந்த்ரி
பரதேசி யானேனின்று (எ)

பாரிலெனைப்போலாகப் பாவியெவருமுண்டோ
பதருதேயெந்தனுள்ளம் ஐயையோமந்த்ரி
பதருதே யெந்தனுள்ளம் (ஏ)
பாதகம்பயந்தோட நீதிலயோத்தியாண்ட
பலனிதுதானோதோனேன் ஐயையோமந்த்ரி
பலனிது தானோதோனேன் (ஏ)
மனைவியைவிலைசெய்த மாபாவியென்றுபெயர்
வழங்கிடவுடலெடுத்தேன் ஐயையோமந்த்ரி
வழங்கிட வுடலெடுத்தேன் (ஏ)

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி யானென்ன சொல்லப்போகின்றேன் எனதுபத்தினியையும்புத்திரனையுப்பிரிந்து எவ்விதம் உயிர் தரிப்பேன்.

(மந்-வ-ம்.) புவனசக்ரேஸ்பரா (கோடிபோய்க் கோடிவரினும் மனங்கோணாமலிருப்பதே கோடிபெறும்) என்று ஆரண்யத்தில் அடியேனுக்கு அனேகவிதமான தேறுதல்சொன்ன தாங்கள் தற்சமயம் இவ்விதத்துயரமடைவது ஞாயமா? அன்றியும் விதியின் செயலையாவரால் விலக்கமுடியும் மயங்காதீர்கள் ப்ரபூ.

(அரி-வ-ம்.) நல்லது மந்திரி.

# நக்ஷத்திரய்யன் அரிச்சந்திரனிடம் தாருசம்பளம்கேட்கும் பாகம்.

நட்சத்ரய்யன்விருத்தம்.

பொன்னகர்தனையொப்பாகும் புகழுடையயோத்தியாண்ட
மன்னனேகேளாய்பாலன் மனைவியைப்பிரிந்தோமென்று
தன்னறிவழிந்தேயாவி தளர்கிறாயல்தலைந்தே
யுன்னுடன்வந்தவெற்கின் ஹென்றுமேன்சொன்னாயில்லை.

(நட்-வ-ம்.) சந்திரா இதென்னடா விபரீதம் ஏதோ பத்தினியையும் பாலனையும் பிரிந்தோமென்று துக்கத்தினால். வாடிக்கொண்டிருக்கிறாயே யல்லது உன்னுடன் அலைந்துவந்த எனக்கு ஒன்றுஞ் சொன்னாயில்லையே.



(அரி-வ-ம்.) சுவாமி நக்ஷத்ரப்புண்யவானே கவனிக்கவேண்டும் அந்தத்திறந்த விஸ்வாமித்திர முனிவரிடத்தில் திரவியமனைத்துங் கொண்டு போய்க்கொடுத்து அனேககோடிவந்தனஞ் செய்தேனென்று சொல்லும்படியாக தங்களுக்கனேக கோடிவந்தனஞ் செய்தேன் ப்ரபூ.

நக்ஷத்ரையர் விருத்தம்.

அரசனேயுன்னைப்போல வதிசம்ப்ரதாயங்கற்றோர்
தரணியிற்கண்டதில்லை தவமுனிகடனைவாங்க
தருமிருவனத்துன்னோடு தாள்நோவவந்ததற்குத்
தாருப்பொன்சீக்கிரத்திற் றருகுவாய்தருகுவாயே.

(நட்-வ-ம்.) அடா சந்திரா நன்றாயிருந்தது நன்றாயிருந்தது உன்னைப்போலிருந்த சம்பிரதாயங் கற்றவர்களை யான் உலகத்திற் பார்த்ததில்லை நான் விஸ்வாமித்திரமுனிகடனை வாங்குவதற்கு உன்னுடன் காடு, மலை, வனம், ஆறு, இவைகளில் உன்னோடு அவஸ்தைபடைந்து வந்ததற்குத் தாருப்பொன் சீக்கிரத்தில் கொடுத்தனுப்புவாய்.

அரிச்சந்திரன்சொல் தரு.

அறிநான்தேவே என்றவர்ணமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-சாபு.

கண்ணிகள்.

இதற்கென்செய்வேனோ இத்தரியானே
எங்கிருந்துதரிவற் களிப்பேனே (இ)
வாருயர்சடைதனில் மதியணிதேவா
மாநகர்காசியில் வாழ்மகாஜீபாவா (இ)
மகனுடன் மனைவியை மறையோர்பால்விற்றேன்
மாமுனிகடன் தீர்த்தும் மனத்துயருற்றேன் (இ)
ஆறணிந்திடும்நாதா அம்மலர்ப்பாதா
அடியேனைச்சோதிப்ப தமகாமோகீதா (இ)
ஐயோ நாதர்செய்யும்வே தனைசகிக்கேனே
ஆதரிப்பாயெந்தனை யன்புடன்தானே (இ)

(அரி-வ-ம்.) ஆ காசிநாதா யாதொரு கதியுமில்லாத மனைவியையும் மைந்தனையும் வேதியரிடம் விற்றுக் கோசிகமுனிகடனைச் செலுத்திய என்னிடத்தில் அன்னவர் தூதராகிய நக்ஷத்ரய்யர் தாகு சம்பளம்வாங்காமல் நீங்கமாட்டேனென்று கூறுகின்றாரே இதற்கென் செய்வேன்.

(சந்-வ-ம்.) சந்திரா என்டா வெற்றே காசிநாதா தோசிநாதா என்று புலம்புகிறாய் விஸ்வாமித்திரருக்கு யான் நாட்டைத் தாரைவார்க்கவில்லை திரவியமுங் கொடுக்கவேண்டியதில்லையென்று ஒரு பொய்சொல்லிவிடேன் யான் கூலி வாங்காமற் கோசலைநாட்டை உன்வசம் ஒப்புவிக்கிறேன்.

---

அரிச்சந்திரன் நக்ஷத்ரய்யனிடம் பொய்சொல்லுதல் பாதகத்திலும் பாதகமென்றுகூறும் முன்னூல் கலித்துறை.

ஆயத்துறையிற்பிறந்து வந்தந்தணர்பால்குடித்து
மாயக்கண்மாதரிடத்தேவளர்ந்து வண்ணானொருநாள்
ஏயப்புலவரிடத்தெட்டுநாள் செட்டியேனென்றுபின்
போயக்கசாலைபுகுந்தனள் காணந்தப்பொய்மகளே.

---

(அரி-வ-ம்.) நாதா பொய்மகளானவள் "ஆயத்துறையிற்பிறந்து" சுங்கத்தினிடமாக வுற்பவித்து, "அந்தணர்பால்குடித்து" இவ்வுலகத்தில் மானிடத் தெய்வமாக விளங்குமுதற் குலத்தோராகிய தங்கள் வம்சத்தார் வீட்டில் பால்குடித்து, "மாயக்கண் மாதரிடத் தேவளர்ந்து" இப்பிரபஞ்சத்தில் தர்மசிந்தனையில்லாத உலோபிகளின் திரவியத்தை அபகரிப்பதற்காக அவதரித்திருக்கும், தாசிகள் வீட்டில் வளர்ந்து, "வண்ணானொருநாள்" அப்பால் பால்யமானவுடன் தேசசஞ்சாரஞ் செய்யவேண்டுமெனவுத்தேசித்துத்தாசிகள் வீட்டைவிட்டு எழுந்துவருங்கால் வண்ணான் வந்தனை வழிபாடுகளுடனழைக்க அன்னவன்வீட்டில் ஓர்நாள் தங்கியிருந்து "ஏயப்புலவரிடத்தெட்டுநாள்" அப்பால் அந்தவண்ணானின்வீடு பிடிக்காமல் அதைவிட்டுப் புறப்பட்டு வருந்தாமல் புலவர்களைக்கண்டு நேசஞ்செய்து அன்னவர்களிடத்தில் எட்டுநாள்வரையும் வீற்றிருக்கையில் "செட்டியேனென்றுபின்" அப்பால் புலவர்களெல்லாரு மொருங்காகக் கூடிக்கொண்டு பொய்மகளின் நடக்கையைக் கண்டுபிடிக்காமல்



நீ எங்களிடத்தி லிருக்கத்தக்கவளல்ல ஆகையா லிவ்விடத்தைவிட்டு நீங்கிப் போவாயெனக்கூறவே அக்ஷணமே புலவர்களைப் பிரிந்துவருங்கால் வழியிற் செட்டியைக்கண்டு அழைக்க அவன் ஏனென்றுகேட்டுப்பயந்து ஓடிப்போய்விடவே "போயக்கசாலைபுகுந்தனள்காணந்தப் பொய்மகளே" அப்பால் அந்தப் பொய்மகளானவள்மிகவும்வருந்தித்தட்டார்தெருவிற்போகும்போது அன்னவர்கள்மிகவும் சந்தோஷமா யெதிர்கொண்டழைத்துத் தாயே நீயேன் வருந்துகின்றாய் எங்களுடைய பட்டறையிலேயே சதாவீற்றிரு உனக்குயாதொருகுறைவு வரமாட்டாது உன்மனம்போலவே நாங்கள்நடக்கிறோமென்றுசொல்ல அதற்கிணங்கிப்பொய்மகளானவள் அவ்விடத்திலேயே வீற்றிருக்கின்றாள் என்பது சாஸ்திரம் ஆதலால் அதையானுணர்ந்து பொய்மகள் பிறந்து, வளர்ந்து, பால்குடித்துச் சிலநாள் வீற்றிருந்தஇடத்தும் எப்போதும் வீற்றிருக்குமிடத்தும் பொய் மிகுதியாக வொட்டாமல் அடக்கி அரசாக்ஷிசெய்த இந்தஅரிச்சந்திரன் தற்சமயம் தமக்குத் தாகுச்சம்பளம் கொடுக்கும்விஷயமாய் பொய்சொல்லுவேனென்று நினைக்குதீரா? ஒருபோதும் பொய்சொல்லமாட்டேன் பிரபு.

---

நக்ஷத்ரய்யன் விருத்தம்.

புரந்தராகேளாய்நீ பொய்புகலுவாயன்றேல்யானும்
பெருந்தவமுனிவர்பொன்னைப் பெற்றிடநடந்துன்னோடு
வருந்தியேவனங்கடன்னில் வந்ததற்காகக்கூலி
திருந்தவேகொடுப்பாயில்லஞ் சீக்கிரஞ்செல்லுதற்கே.

---

(நட்-வ-ம்.) சந்திரா இன்னும் உன்னைக் கஷ்டகாலம் விட்டு விலகினதாயில்லை அதனால்தான் யான் சொல்லக்கூடிய வசனங்களைத் தட்டுகிறாய் நீயெக்கெதியடைந்தால் நேக்கென்ன சீக்கிரத்தில் யானில்லஞ் செல்லவேண்டும் தாகுசம்பளத்தைக் கொடுத்துவிட்டு மஹிமைவிடார்





### அரிச்சந்திரன்சொல் தரு.

சாகுசெய்யவா என்ற வர்ணமெட்டு.
இராகம்-பியாக் - தாளம் - ரூபகம்.

பல்லவி.

கோபங்கொள்ளாதீர் நாதா கோபங்கொள்ளாதீர்

அநுபல்லவி.

சோபமாய்வருந்துமென்மேற் சுகுணசிப்போதா-ஐயோ (கோ)

சரணங்கள்.

அருமறையுணர்ந்தோரே அன்புதனையிருந்தோரே
தருமமாய்த்தாகின்கூலி தான்கூறுவீரே-நாதா (கோ)

அடிமையாவதிவ்வுலகில் யார்க்கேனுமாகினேனே
இடமுடன் தந்தாகின்கூலி செலுத்துவேனே-நாதா (கோ)

(அரி-வ-ம்.) நாதா கோபங்கொள்ள வேண்டாம் பாரிவ்வுலகில் யாருக்கேனும் அடிமையாகியாவது தங்களுக்குத் தாருசம்பளந் செலுத்துகின்றேன் அதன்றனை யெவ்வளவென் றெடுத்துரைக்கவேண்டும் பிரபு.

(கட்-வ-ம்.) பதினாயிரம் பொன் கொடுப்பாயாக.

(அரி-வ-ம்.) அவ்விதமே கொடுக்கின்றேன் வாரும் ஸ்வாமி.

## அரிச்சந்திரன் விலையாகும் பாகம்.

### அரிச்சந்திரன் விருத்தம்.

மந்திரிசத்யகீர்த்தி வழுத்துமேவெனுன்றுகேளாய்
சுந்தரியுமையாள்பாகன் சோதனையிதுவோர்தோனோன்
அந்தணர்க்கொடிக்காக வருந்துயர்புரிவதாலே
எந்தனைவிற்றுச்செம்பொ னீகுவாய்விரைவில்தானே

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி சிவபெருமான் சோதனைக்கென் செய்வோம் தாருத்திரவியத்துக்காக அந்தணர்செய்யுங் கொடுந்துன்பஞ் சகிக்கமுடியாதாகையால் என்னை இந்நகரத்தில் யாருக்கேனும் விற்றுப்பதினாயிரம் பொன்வாங்கிச் சீக்கிரத்தில் இவருக்குக் கொடுக்கனப்புவாய்.

மந்திரி முன்னால் விருத்தம்.

அன்னையாமெம தாண்டகையாகிய
மின்னையானவிலை கூறுதல் நீதியோ
வென்னை நீவிற்றியாக்குச் செலுத்தரும்
பொன்னையீந்திடும் புகழ்வேந்தனே.

(மந்-வ-ம்.) ஆ! ஆ! புவன புரந்தரா என்ன வார்த்தை பகார்ந்தீர்கள் எனக்குத்தந்தையுந் தாயுமான தங்களை விற்பது ஞாயமன்று ஆகையால் அடியேனை இந்தக்காசியம்பதியில் யாருக்கேனும் விற்று இந்தவேதியருக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்தைக் கொடுத்தனுப்புங்கள் இதோ தங்களுடைய பதங்களையும் பற்றிக் கொண்டேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னில்மெய்யென்பதோர் தோயமலைதனைப்பிடித்துத்
தன்னினிர்பெருகவோங்கித் ததிமையச்சேகோய்
வன்மைமோகனைவிற்றிதன் வாய்மையோமறையோர்கூலி
இன்னமாவென்னைவிற்றுச்சீக்கிரஞ்செலுத்துவாயே.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி உன்னைவிற்று மறையவருக்குத் தாகுசம்பளம் செலுத்துவது அழகல்ல அன்றியுஞ் சத்தியத்துக் குப்பங்கமாகும் ஆதலால் கொஞ்சமேனுங் கவலையடையாது விரைவில் என்னைவிற்று வேதியருக்குத் திரவியம்வாங்கிக் கொடுத்தனுப்புவாய்.

(மந்-வ-ம்.) பிரபோ யான் முன் ஜென்மத்திற் செய்தபவமோ அல்லது தற்காலத்தில் எனக்கு யாராவதிட்ட சாபந்தானோ அல்லது அந்தப்பிரமன் விதித்தவிதியோ வசிஷ்டன் தாருக்கூலிக்காக என்னைவிற்றுக் கொடுங்கள் என்கூற அதைமறுத்துத் தங்களைவிற்றுக் கொடுக்கச்சொல்லுகிறீர்கள் இதற்கென்செய்வேன் தங்களை விற்பதற்கெனக் கெப்படிமனந் துணியும்.

(அரி-வ-ம்.) பிரதான் கவலையடைவதினாலென்ன பிரயோசனம் சீக்கிரம் என்னைவிற்று வேதியருக்குக் கூலிகொடுத்தனுப்புவாய்.



(மந்-வ-ம்.) நல்லது பிரபு.

(மந்-வ-ம்.) ஆ! ஈசா இதுவோ முன்னருளோ? இந்தப்பிரபஞ்சத்திலிடமாக உள்ளவர்கள் யாதொரு பொருளை விற்கிறையஞ்செய்ய எத்தனித்தால் ஏதாவது ஓர் அடையாளமிடுவது வழக்கம் அவ்விதவழக்கம்போல் என்னிறைவர் சிரசின்மீது ஓர்புல்லை வைத்து விலைகூறுகின்றேன்.

(மந்-வ-ம்.) ஆ விஸ்வேசா என்னரசர் தலைமீது புல்லிட்டதினைத்துப் புல்லெடுப்பதற்குள்ளாகவேனா தங்கமெல்லாம்நடுநடுங்குகின்றதே யானெந்தவிதம் விலைகூறப் போகின்றேன்.

(மந்-வ-ம்.) இராஜசேகரா தேசதேசத்து மன்னர்கள் யெல்லாம் ஜெயம், ஜெயம், என்று சுற்றிவீற்றிருக்கவும் தவசிரேஷ்டர்களும் அந்தணர்களும் ஆசிகூறவும் அன்றுள் நவரத்னகிரீடம் பூண்டதமது சிரசின்மீது கொடியபாதகனும் சண்டாளனுமாகிய யான் தற்சமயம் விலைகூற எத்தனித்துப் புல்லைச்சூட்டினேன் யாதொருகவலையும் அடையாது என்முன்னே நடந்து செல்லுங்கள்

(அரி-வ-ம்.) மந்திரி இதோ நடந்துவருகின்றேன்.

## மந்திரி அரிச்சந்திரனை விலைகூறும்பாகம்.

மந்திரி சொல்தரு.

தங்கமேயெந்தக்காலமென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மன்னர்மன்னனையிந்நகர்தனில் மந்திரியானே
இன்னமில்லைமல்விற்கவும்வந்தேன் பெருகுவீர்தானே-ஆ (மந்)
தாருக்கூலிக்காய்த்துஷணவார்த்தை தாளாதிக்காலே
வரமுனிவிஸ்வாமித்திரர்தாதர் வழுத்துவதாலே-ஆ (மந்)
எதிரினிவ்வர்தேயாவராயினும் சதாராயிப்போது
பதினாயிரம்பொன்கொடுத்தாலவர்க்குப் பதில்மொழியாது-ஆ (மந்)

ஆதிலாச்சதுர்வேதமோதுந் — தொழுகுலத்தோரே
பூதலமெல்லாமாள்வதாற்புகழ் — பூண்டகலத்தோரே-ஆ (ம)
தனவைசியரேபூவைசியரே — தகைசேர்சூஸ்திரரே
புனிகழுடையாசைவாங்கிப் — புன்மைதீர்ப்பீரே-ஆ (ம)

(மக்-வ-ம்.) ஐயா! விதியின் வசத்தால் ஜீவகாருண்யமுடையவரும் நீதிவழுவாதவரும், எண்பத்துநான்குலக்ஷம் ஜீவபேதங்களிலும், சர்வாந்தரியாமியாய் நிறைந்திருக்கும்பரம்பொருளைச்சதாமறவாதவருமான எனதாசனை விலை கூறுகின்றேன் இக்காசிமாநகரத்திலுள்ளவர்கள் யாவரேனும் விலைகொடுத்து வாங்கி இந்த நக்ஷத்ரய்யரால் நாங்களடையுந் துன்பத்தை நிவர்த்திசெய்யுங்கள்.

(மக்-வ-ம்.) கணிதனூலிற் சிறந்தவர், பேரிலெதிரிட்டவர்களைச் செயிக்கத்தக்கவர், தன்னைவிலை கொள்பவரிடும் வேலைகளை அவாளுனும் பணிந்து செய்யத்தக்கவர் ஆகையால் பிர்ம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்கு வர்ணத்தார்களில் யார் விலைக்குக் கேட்டாலும் விற்க யாதொரு தடையுமில்லை வாங்கவருவீர்கள்.

(மக்-வ-ம்.) ப்ரபூ இவ்வளவு நேரமாகத் தங்களையடியேன்இக்காசிமாநகரில் விலைகூறியும் ஒருவரும் விலைக்குக் கேட்கவில்லையே இதற்கென் செய்வோம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மாசிலாச்சத்யகீர்த்தி மன்னவனென்னையிந்தக்
காசியில்விலைகூறிக் கதறியுமேனென்றியாரும்
பேசுவாரில்லையென்ன பிழைகொலோவறியேனந்தோ
கூசிடாதென்னைநானே கூறுவேன்விலையிப்போதே.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி இந்தக் காசியம்பதியில் நீ இவ்வளவு நேரமாக ஒவ்வொரு தெருவிலும் விலைகூறியும் ஒருவரும் ஏனென்று கேட்பாரில்லையாகையால் என்னை நானே விலைகூறுகிறேன்.

(மக்-வ-ம்.) அவ்விதமே விலைகூறுங்கள் ப்ரபூ



## அரிச்சந்திரன் தன்னைத்தானே விலைகூறல்.

மாதவர் ஆதரான மறையவர்கூலிக்காக
ஏதுமில்லாததாலே யென்னைவிலைகூறுகின்றேன்
கோதிலின்னகர்வாழ்வோரெக்குலத்தவரேனுமின்று
பாதகமென்னைவாங்கிப் படுந்துயகற்றுவீரே.

அரிச்சந்திரன் சொல்தரு.

அருமைமக்கண்மணியைக்காணேனென்ற வர்ணமெட்டு.
இராகம்-தேசிகதோடி-அடதாளம்.
கண்ணிகள்.

மன்னனான் விலையாகு — வேனே-இந்த
மாகாசிநகருளோர் — தானே
வாங்கவாரும் — பாங்காயாரும்-மதி
மயங்குறேன் — பாருமிதோ (ம)

ஏவினவேலைகள் — செய்வேன்-குற்ற
மில்லாமலேயென் அமுய் — வேன்
இந்தக்காலம் — வினையேன்கோலம்-ஏதோ
தெரியேனிஞ் — ஞாலமிசை (ம)

எவ்வருணத்தார — ரூனும்-பண
மீந்திடுவீரேல்மென் — மேலும்
இன்பமுற்றே — துன்பமற்றே-சந்
தேகஞ்சற்று — மில்லாமல். (ம)

மறையவர்காசுதந் — தாக-எந்தன்
மனைமெல்லாம்புண்ணாக — நோக
வைவதாலே — நைந்திக்காலே-வேறு
வகையில்லா — தாகையாலே (ம)

மாதவரெல்லாங்கொண் — டாட-மாற்
றலர்களைதிருறு — நோட
வையமாண்டேன் — மெய்யைப்பூண்டேன்-மறு
மாதனைத் — தின்றிடவேன் (ம)

(அரி-வ-ம்.) ஐயா இக்காசிப்பதியில் வாழ்ந்திருக்கக்கூடிய வர்களே யான் இதோ என் பின்வரும் நக்ஷத்திரியருக்குக் கொடுக்கவேண்டிய திரவியத்திற்காக விலையாகுகின்றேன் எந்தச்சாதியாராகிலும் விலைகொள்ளுங்கள் ஏவினவேலைகளெல்லாம் தவராது செய்வேன் இது சத்தியம்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

இன்னும் காதன்வரக் காணேனென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

என்னைவிலைகூறுகின்றேன் யாவரேனுங்கொள்வீரின்றே (எ)

அநுபல்லவி.

பொன்னகர்நேரிக்காசியில் புகழாய்த்-திகழும்
புனிதரே யடியேன் (எ)

சரணங்கள்.

கோசிகர்தூதர்தாமின் றுகையை-வகையாக்
கொடுத்திட தானே

(அரி-வ-ம்.) மாக்ஷிமைதங்கிய இந்திரலோகத்துக்குச் சமானமான இக்காசியில் வசிக்குந்தனவான்களே கோசிகமுனிவர் தூதர் சம்பளத்துக்காக என்னையானே விலைகூறுகின்றேன் தயவு செய்து கிரையம்பெற்று எனது வறுமையைத்தீருங்கள்.

வேதமோதும்விப்பிரரே மெலிந்தே-நலிந்த
வேந்தனும் யானே (எ)

(அரி-வ-ம்.) ஐயா வேதபாராயணஞ் செய்யக்கூடிய அந்தணர்களே உங்களில் யாரேனும் அடியேனை அடிமைகொண்டு எனது வறுமையைத்தீருங்கள்.

தாணியாளுஞ்சத்திரியரே சமமா-அமையாத்
தலைவிதி யாலே (எ)

(அரி-வ-ம்.) ஐயா அரியாசனத்திலிருந்து வையகமாளுஞ்சத்திரியர்களே எனது தலைவிதியினால் விலையாகுகின்றேன் யாவரேனும் என்னைவிலைகொண்டு எனது துன்பத்தைத்தீருங்கள்.



வர்த்தகஞ்செய்வைசியரே மைந்தன்-நொந்தே
மனமே பொருந்தி (எ)

(அரி-வ-ம்.) ஐயா ஜெகத்தில் கொண்டுமுதலுக்குச் சிறிது லாபம் வைத்து வர்த்தகஞ்செய்யும் வைசியர்களே எனது ஊழ்வினையினால் மனம்வருந்தி அடிமையாகுகின்றேன் யாவராவது அடிமைகொண்டு எனது கஷ்டத்தை யகற்றுங்கள்.

தாங்கிருஞ்சூத்திரரே துடர்ந்தே-படர்ந்த
ஊழ்வினை யாலே (எ)

(அரி-வ-ம்.) ஐயா மேன்மைதங்கிய கங்கையின் குலத்துதித்த வேளாளர்களே அடியேன் காலவினையினால் கிரயமாகுகின்றேன் யாவராகிலுங் கிரையம்பெற்று முனிவர்தூதருக்குத் தருகத்திரவியங்கொடுத்து ரக்ஷிக்கவேணும்.

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா இந்தக்காசியம்பதியில் பிரம்ம க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்கு வீதியிலும் விலைகூறினேன் ஒருவரும் விலைகேட்க வில்லையே இதற்கென் செய்வேன்.

பொது வசனம்.

இவ்விதம் அரிச்சந்திரன் தன்னைத்தானே விலைகூறிவருஞ் சமயம் எமதர்மன் வீரவாகுவேடந்தரித்து மாமிசக்காவடியைத் தூக்கிக்கொண்டு அரிச்சந்திரனைக் கிரையத்துக்கு வாங்கவருகிற விதம் காண்க.

## வீரபாகு வருதல்.

விரபாகு விருத்தம்.

மேதினிபுகழுமந்த விண்ணவர்காலன்யானும்
நீதிசேர்காசிதன்னில் நீசனுயவதரித்துக்
கோதிலாவயோத்திவேந்தை விலைக்குப்பொன்கொடுத்துவாங்க
வீதியில்வீரபாகுவெனப் பெயர்பூண்டுவந்தேன்.

வீரபாகுசொல் தரு.

தந்தானமடி தந்தானமடி யென்ற வர்ணமெட்டு.

இராகம்-கேதாரம்-ஆதி-தாளம்.

சரணங்கள்.

காசிமயானகாவல்புரியுங் காவலன்யானே
காவடியைத்தோளில்வைத்துக் கனமாய்வந்தேனே. (கா)

செத்தமாட்டைக்குறுகையினல் திடமாயெடுப்பேனே
சித்தமகிழ்வாகக்கள்ளு தினமுங்குடிப்பேனே. (கா)

எல்லாச்சாதிப்பிணங்களையும் இக்கோலால்தானே
இன்பமாகக்குத்தியே யென்றுஞ்சுடுவேனே. (கா)

—

வீரபாகு விருத்தம்.

தாரணிபுகழ்பெற்றிந்தத் தலந்தனில்தன்னந்தானே
கோதாய்விலையேகூவி நினைவழிந்தாற்போலவும்
வாரொருபெரும்பாரம் உன்விலைகூறவாய்த்த
காரணமென்னயாவுங் கழறுவாய்கழறுவாயே.

—

(வீர-வ-ம்.) ஓ ஆண்டே இந்தக் காசிமாநகர்வீதியில் தன்னந்தானே விலைகூறிக்கொண்டு வருகிறநீயாரு? உனது பெயரென்ன? நீயெந்தவூரு? தன்னந்தானே விலைகூறுகிறாயே என்னகாரணம்? சொல்லுவாய் ஆண்டே.

(அரி-வ-ம்.) ஐயா யான்வாழ்ந்திருந்தது அயோத்திமாநகரம் எனதுபெயர் அரிச்சந்திரன் விஸ்வாமித்திரர் தாதாகிய நக்ஷத்ரய்யர் தாருச்சம்பளத்துக்காகச் செய்யும் கொடுந்துன்பத்தால் விலையாக எத்தனித்தேன் தாம்யாவர்? தமது பெயரென்ன? தயவுசெய்து கூறவேண்டும்.

—

வீரபாகு விருத்தம்.

திட்டமாயித்தலத்திற் செத்ததோர்பிணங்கள்யாவுஞ்
சுட்டிடும்வெட்டியான்யான் அலைந்துபேர்வீரபாகு
சட்டமாயிட்டவிலை தன்னைநீசெய்வாயானல்
இட்டமாய்வாங்கிக்கொள்வேன் விலைசொக்கூறியம்புவாயே.

—



(வீர-வ-ம்.) ஓ ஆண்டே இந்த ஊரிலே செத்தபிணஞ்சுடுந் தோட்டிதான் என்பேர்வீரபாகு எனக்கு வேலைசெய்ய ஒரு ஆளு வேணும் நான் சொன்னவேலை கேட்டியானல் நீ கேட்டபணம் கொடுக்கிறேன் என்ன சொல்லுகிறாய்.

—

அரிச்சந்திரன் விருத்தம்.

கறைமிடறணியுநீதா கைலைவாழ்போதாமூன்றும்
பிறையுடன்கங்கைசூடும் பினாகநாகாதிநாதா
இறையவாவுன்பொற்பாத மிணைதிதம்பணியுமென்னைப்
பறையனேவிலைக்குக்கேட்கப் பணித்தனைகருணையீதோ.

—

அரிச்சந்திரன் சொல்தரு.

ஐயமென்தலை விதிவசமாமென்ற வர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

பறையன்விலைகேட்கவும் விதியோ-சகா
பறையன்விலைகேட்கவும் விதியோ-என்ன
பாதகங்கள் புரிந்தேன். (ப)

அநுபல்லவி.

கறையணிநாதா கருதொணாநீதா
காலகதியோ பிரக்யாதா-போதா
காலகதியோ பிரக்யாதா-ஆகா
கறையுதே நெஞ்சம். (ப)

சரணங்கள்.

மதிவளர்சடையா மாமழுப்படையா
வல்லமைமிக்கதிரு விடையா-சீரார்
வல்லமைமிக்கதிரு விடையா-ஆகா
வருந்துதே நெஞ்சம். (ப)

இவையல்லாது எனைவருத்தாது
இங்குகொள்வார்காணே ஏப்போது-ஆகா
இங்குகொள்வார்காணே ஏப்போது-ஐயோ
ஏங்குதே நெஞ்சம். (ப)

—

(அரி-வ-ம்.) ஆ! ஜெகவீரகுக்கா இந்தக் காசியம்பதில் ப்ரம்ம க்ஷத்ரிய, வைசிய, சூத்ரரென்ற நான்குவர்ணத்தார்களில் ஒருவரேனுங் தனவான்களில்லையா? பிணஞ்சுடுகிற பறையனுக்கிலசேர்க்க வேண்டும் இதுவுமென்னியாயம்?

வீரபாகு விருத்தம்.

பூதலத்தெவரானாலும் பொன்தந்தால் விலையாவேனென்
றோதியவரசேயிப்போ துன்னமேனையவானாய்
ஆதியாமயன் படைப்பிலாண்பெண்ணென்றிரண்டலாது
சாதிவேறுண்டோ காட்சி தன்னையான் புகல்வேன் கேளாய்.

## வீரபாகுசொல் தரு.

சொன்னேனல்லவோமானே என்றவர்ணமெட்டு.
இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஆதி.

பல்லவி.

சாதிபேதகமுமுண்டோ — இந்தத்
தாரணியிலாண்பெண்ணென்ற காரணமல்லாமல்வேறே (சா)

அநுபல்லவி.

சோதியாபெங்குறை — நாதனருளினாலே
ஆதாரமாய்ச்சொல்கின்றேன் — கோதில்லாமலிக்காலே (சா)

சரணம்.

காராம்பசுவயிற்றில் — கவுதமருற்பவித்தார்
நீரிற்குவியாசர் — செம்படச்சிக்கிப்பிறந்தார் (சா)

சாங்கரென்போர்புலைச்சி — தன்வயிற்றிற்ஜெனித்தார்.
காங்கேயமுனிவருங் — கழுதையுதரத்துற்றார் (சா)

மதங்கர்சக்கிலிச்சிக்கு — மகனாகவேபிறந்தார்
சதமெனமாண்டவியர் — தவளைவயிற்றில்வந்தார் (சா)

வான்மீகரும்வேடச்சி — வயிற்றினிலேஜெனித்தார்
தேன்மொழிவள்ளியுமான் — வயிற்றினிலேஜெனித்தாள் (சா)

மங்கையாருர்வசிக்கு — வசிட்டரிங்பிறந்தார்
பொங்கமாய்ச்சக்கிலிச்சி — போகமனைவிசெனித்தார் (சா)



சம்புகர்நாய்வயிற்றில் — சந்தோஷமாய்ச்செனித்தார்
கும்பத்திலகத்தியர் — குதூகலமாய்ப்பிறந்தார் (சா)

நாரதர்வண்ணாத்திக்கு — நல்மகனுதித்தார்
சீர்கபிலர்பராசர் — பறைச்சிகட்கேஜெனித்தார் (சா)

கலைக்கோட்டுமுனிவரும் — கலையின்வயிற்றுதித்தார்
உலகில்நீபிறந்ததை — புன்னுக்குளாராய்ந்துபார் (சா)

அரிச்சந்திரன் மந்திரியிடத்தில் சொல்லும் முன்னால் விருத்தம்.

குணமிருந்தாலுங் குலமிருந்தாலுங் கொழுந்தமிழின்
மணமிருந்தாலு மதியிருந்தாலு வழுத்திடுவர்
கணமிருந்தாலுமோர் காசம்பெறாத சிங்காரவரைப்
பணமிருந்தாலவர்க் கெல்லாருமஞ்சலி பண்ணுவரே.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி இவ்வுலகின்கண் யாதொருவன் தவம், ஞானம், கல்வி, ஒழுக்கங்கட்குரிய நல்லகுணமுடையவனாய்ப் ப்ரம்ம, க்ஷத்திரிய, வைசிய, சூத்திரரென்ற நான்குவருணத்திலும் முதற்குலத்திலவதரித்து மாசுகலைமைதங்கியசெந்தமிழ்ப்பாண்டித்ய மடைந்து நன்மதியுடைத்தாயி சொல்லுதற்கரிய உத்தமகுணமுடையவர்களை நேசஞ்செய்திருந்தாலு மன்னவனோர்காசுக்குக்கூடப்பிரயோசன மில்லையென்றும் மற்றுமன்னவனுக்குக்கொஞ்சந்திரவியமிருக்கும் பக்ஷத்தில் பூதலத்திலுள்ள யாவர்களும்போற்றிசெய்வார்களென்று கூறப்பட்ட சாஸ்திரத்தை நாம்தெரிந்திருந்தும் திரவியத்தில் மிகுந்த இத்தசீசன் விலைக்குக்கேட்டதைப் பற்றி வருத்தமடைவதிலென்ன ப்ரயோசனம் ஆகையால் இத்தவீரபாகுவுக்கே என்னைக்கிரயஞ் செய்து தாசகூலியைக் கொடுத்தனுப்புவாய்.

(மந்-வ-ம்.) ஆராதிசேகரா இதுவுங்காசிநாதன் கிருபையோ

(நட்-வ-ம்.) சத்தியகீர்த்தியென்ன காலதாமதஞ் செய்கின்றாய்

(மந்-வ-ம்.) சுவாமி இதோ எனதிறைவனைக் கிரயஞ்செய்து திரவியந்தருகின்றேன் சற்றுபொறுங்கள்.

(மந்-வ-ம்.) கேளப்பா வீரபாகுவே எனதிறைவனைக் கிரயம்வாங்கிக் கொள்ளுகின்றாயா?

(வீர-வ-ம்.) வாங்கிக்கொள்கின்றேன் விலைசொல்லாண்டே

(மங்-வ-ம்.) பதினாயிரம் பொன் இந்தநக்ஷத்ரய்யருக்குக்கொடுத்தால் விலைசெய்வேனப்பா வீரபாகுவே.

(வீர-வ-ம்.) அப்படியே தருகிறேன் முறிச்சீட்டெழுதுமாண்டே.

மந்திரி விருத்தம்.

செவ்வைசேர்திங்கள் தும்பை திகழ்சடையுடையநாதா
தெவ்வரைத்திரிதெரித்த தேசிகாகுனக்கையா
கொவ்வைவேரிதழாள்பாகா கொற்றவன்றன்னைவிற்றிங்
கெவ்விதமனம்பொருந்தி யெழுதுவேன்முறிப்போதே.

(மங்-வ-ம்.) ஆ! காசிநாதா கருணாகர, கங்கைச்சடையா? யானெவ்விதம் மனம்பொருந்தி முறியெழுதுவேன் எனதுமனம் வருந்துகிறதே.

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

சந்திரனுக்குடனாந்தனத னுக்கோர்கண்ணானக் கருவிழல்,
இந்திரற்கோபகக் குழியாமியமனுக் கோர்புழுக்காலாயிரவியின்ற,
மைந்தனுக்கொகாற்குறையாம் வசைனுக்கோர்தலைகுறையாய்வா
ழ்வாரென்னில், பந்தமிருமானிடரை விதிவிடுமோ மந்திரிநீபகருவாயே.

(அரி-வ-ம்.) எமிநாதன் தேவமடந்தியில்சந்திரன்சீரபங்கமாகவும் குபேரன் ஒற்றைநேத்திரம் பங்கமாகவும் இந்திரனின்தேறிந்து அரசபுரியும் இந்திரன் உடம்பெல்லாம் யோனிக்கண்பொருந்திய குற்றமாகவும் எமதருமன் இரண்டுகாலும் புழுச்சொரியும்புண்களாகவும் பிரமன் ஓர்தலை குறையாகவும் வாழ்ந்துவருவதாக சாஸ்திரமூலமாக உணர்ந்திருக்கிறோம் அவ்விதமிருக்க இவ்வுலகின்கண்வாழும் புல்லறிவுடைய சிறியோர்களாகிய நாமா விதியின்செயலை விலக்கப்போகின்றோம் ஆகையால் நான் இந்த நீருக்கு விலைபவளைப்பற்றித்தான் கொஞ்சிற்றேனும் வருத்தமடையாது முறியெழுதிக்கொடுப்பாய்.



# மந்திரிமுறிச்சீட்டு எழுதும்

## அகவல்.

கன்னற்சமுனியுங் கமலவாளியும்
உன்னதமாக வோங்குகாசிவாழ்
வெட்டியான் வீரபாகுதனக்குத்
திட்டமாய்க்கோசலை தேசம்புரந்தநற்
சிர்ணையானரிச் சந்திரச்செம்மல்
மந்திரிசத்யகீர்த்தி வரைந்த
விலைமுறியாதெனில் விண்முதல்மூன்று
தலம்புகழ்வேதியர் தாருக்கூலிக்காய்ப்
படிபுகழ்மனது பார்த்திபன்றனையுனக்
கடிமையதாக்கி யன்புடனேயான்
பதினாயிரம்பொன் பண்பதாய்ப்பெற்று
விதிமுறைதவறா வேதியர்க்கீந்தேன்
ஆதலாலிதற்குச்சாட்சி யனுவுந்
தீதிலாக்குணமே திரண்டுருவமைந்து
முச்சகப்புகழு முனிவர்தாதாராம்
நக்ஷத்ரய்யரும் நானுந்தானே.

(மங்-வ-ம்.) கேளுமப்பா வீரவாகுவே இதோ முறிச்சீட்டு எழுதிவிட்டேன் பெற்றுக்கொண்டு இந்தமறையவரிடம் பதினாயிரம் பொன்னையும் கொடுத்துவிடு.

(வீர-வ-ம்.) இதோ கொடுத்துவிட்டேன் ஆண்டே.

(அரி-வ-ம்.) சுவாமி நக்ஷத்திரப் புண்ணியவானே தங்களுக்குச் செல்லவேண்டிய திரவியமனைத்தும் பெற்றுக் கொண்டீர்களா.

(நட்-வ-ம்.) அரிச்சந்திரா பெற்றுக்கொண்டேன் சென்றுவருகின்றேன்.

(அரி-வ-ம்.) சுவாமி தவசிரேஷ்டராகிய விஸ்வாமித்திரமுனிவருக்கு அனேகவந்தனஞ்செய்தேனென்று சொல்லவேண்டும்.

(நட்-வ-ம்.) நல்லதரசனே.

(வீர-வ-ம்.) டா! அடிமையே நாம் சேரிக்குப் போகவேணும் நீ இந்தப்புலாற் காவடியை எடுத்துக்கொண்டு வாடா.

(அரி-வ-ம்.) நல்லதப்பா வீரவாகுவே.





# அரிச்சந்திரன் மாமிசக்காவடி

## சுமக்கும் பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பூவடியார்களேற்றும் புண்ணியாகாசிநாதா
காவடியறைவோன் வின்டு காணுறுந்தோவுந்தன்
சேவடி மறவாவென்னைச் செத்தமாட்டிறைச்சிமேய
காவடிசுமக்கச்செய்தாய் கருணையுமீதோசொல்லாய்.

## அரிச்சந்திரன் சொல்தரு.

எல்லாமுனிருதோ என்ற வர்ணமெட்டு.

ராகம்-அபுருபஉசேனி-தாளம்-ஏகம்

கண்ணிகள்.

கங்கைகொன்றை திங்கள்சூடிக் காசிவள ரீசா
கருணாகரா காலகாலா கதியருள்விஸ் வேசா

மங்கைபாகா வாமதேவ ஈவராதாமலர்ப் பாதா
மாமிசக்கா வடிசுமக்க வைத்தாய்தவ நாதா

வாருவலை யம்புனையு மற்புயங்க ளானே
வலியிருந்த சிந்தையெல்லா மயங்குதேதற் பரனே

காசினியை யோர்குடைக்கீழ் காவல்பூண்டே னன்று
கடையனுக்கா ளாகச்செய்தாய் காதலுட னின்று

தொண்டருளத் தேவிளங்குஞ் சுகுணப்பெரு நிதியே
துர்க்கர்தஞ்ச கிக்கிலேன்யான் சுபமாயாளித் ததியே

கஞ்சமல ரோன்மால்தேடிக் காணாத்திரு வுருவே
காப்பாய்பர தேசியானேன் கற்பகநற் றருவே

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா அடியேன் என்ன பாதகஞ்செய்தேன் தற்சமயம் கடையனுக்காளாக இயற்றினதும் தவிர துர்க்கந்தம் வீசுகின்ற இந்தப்புலாலக் காவடியையும் சுமக்கச்செய்தனை.

(வீர-வ-ம்.) டா! அடிமையே எனதுசேரி கங்கைக்கரையோரத்திருக்கிறது நீபோயி அங்கே என் பெஞ்சாதியிடம் இதைக்கிரமமாய் சுமக்கும்படி சொல்லு நான் கள்ளுக்கடைக்குப் போய்வாரேன்.

(அரி-வ-ம்.) நல்லதப்பா வீரபாகுவே.

அரிச்சந்திரன் மந்திரியிடஞ்சொல் விருத்தம்.

மறையொருநான்குமோர்ந்த மந்திரிவழுத்தக்கேளாய்
குறைவிலாதென்னையின்றாட் கொண்டதோராண்டையான
பறையன்பின்போரேனீபின் பற்றிடாதயோத்திசென்றங்
கிறைவனைந்துதித்தென்னாளு மின்பமாய்வாழ்குவாயே.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி யான் அடிமைகொண்ட ஆண்டை பின்னர் செல்கின்றேன் நீ யென்னுடன் கூடவருவதினாலென்ன பிரயோசனம் சந்தோஷமாக அயோத்திக்குச்சென்று மங்களமாக வாழ்ந்திருப்பாய்.

மந்திரி விருத்தம்.

நதிவளமிகுமயோத்திநக் நகரதனையோங்கும்
விதிமுறைகடவாதாண்ட வேந்தனேயரசர்கோவே
புதியதோர்வார்த்தையென்பாற் புகலவுங்காலமோவித்
ததியிலும்பதத்தில்வீழ்ந்தேன் றடையின்றியழைத்துச்செல்வீர்.

(அரி-வ-ம்.) ப்ரபூ தற்சமயம் தமியேனிடத்தி லிவ்விதவார்த்தைகள் சொல்ல எவ்விதம் மனந்துணிந்தீர் யான் தம்மைப் பிரிந்து வேறெங்குஞ் செல்லமாட்டேன் இதோ வுமது பாதமே கெதியென வீழ்ந்தேன் அழைத்துச் செல்லுவீர்.

(அரி-வ-ம்.) பாலகா நீ யிவ்விதஞ் சொல்வது சரியல்ல வேறெங்காவது சென்று காலங்கழிப்பாயானிதோ செல்லுகின்றேன்.

போது வசனம்.

இவ்விதம் சத்தியகீர்த்தி துக்கமடைய அன்னவனைப் பிரிந்து அரிச்சந்திரன் பறைச்சேரி செல்லுவிதங் காண்குக.

அரிச்சந்திரன் மந்திரியைப்பிரிந்து.
பறைச்சேரிசெல்லுதல்.

அரிச்சந்திரன் விருத்தம்.

அந்தணர்தமைமனைதேனேபருக் தவமழித்திட்டேனே
சிந்தனையென்செய்தேனோ திருமனைருநேரவோங்கும்
மந்திரத்தலைவனான வாகுசேர்சத்யகீர்த்தி
சிந்தைநொந்திடவேசேரி செல்கின்றேன்செல்கின்றேனே,



அரிச்சந்திரன் சொல்தரு.

போரேனிதோ போரேனிதோ வென்றமெட்டு
இராகம்-கேதாரம்-தாளம்-ரூமகம்.

கண்ணிகள்.

செல்லுகின்றேன் செல்லுகின்றேன்      செல்லுகின்றேன்
செல்லுகின்றேன்      செல்லுகின்றேன்சேரி (செ)

நல்லமதி      வல்லோனிதோ
அல்லலுற      வொல்லைதனில் (செ)

சந்ததம்      பிரிந்திடாத
மந்திரி      வருந்தப்பாவி (செ)

அரியபன்றன்      திருவருளோ
உரியோனைக்      கைதவறவிட்டு (செ)

என்னபாவம்      முன்னைநாளில்
உன்னியேயன்னன்      செய்தேனோ (செ)

இன்பமுயர்துன்ப      மென்னோ
டன்பாயேற்ற      அன்பனழச் (செ)

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா எனது உயிர்த்துணைவனும் அமைச்சனுமான சத்தியகீர்த்தியை இன்னணம் துக்க சாகரத்திலழுந்தும்படியாகச் செய்து அன்னவனைப் பிரிந்து பறைச்சேரி செல்கின்றேன் பாதுகாப்பாய்.

(பொது-வ-ம்.) இவ்விதம் அரிச்சந்திரன் மந்திரியைப் பிரிந்து வீரபாகு வாக்கிப்படி பறைச்சேரியை நாடி மாமிசக் காவடியைத் தூக்கிக்கொண்டு செல்லும்போது எமதருமன் மனைவியான சாமளாதேவியானவள் தோட்டிச்சிவேடம் பூண்டு தனது கணவனைத்தேடி வருகிறவிதங்காண்க.

தோட்டிச்சிவருகிற தரு.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

தாட்டிகமாகவோடித்      தன்புருஷனைத்தேடித்
தோட்டிச்சிவந்தாள்      நாடி

அநுபல்லவி.

வாட்டமுடன்கக்கத்தில் வண்ணக்கூடைகள்கொண்டு
பாட்டுமிகப்படித்துப் பரிகாசவார்த்தை விண்டு. (தா)

சரணம்.

மெய்யிற்பணிகள்பூண்டு விழியையுருட்டிக்காட்டி
கையைக்கையைச்சுழட்டிக் கண்டோர்தமைமிரட்டித் (தா)

வாரிச்சிகைமுடித்து நேராய்நடிநடித்து
வேர்வ்வயிற்கெடாதபொட்டு சீருயர்நெற்றியிலிட்டு (தா)

கொங்கைக்குரவிக்கைதொட்டுச் செங்கைக்குவளையலிட்டு
துங்கமலர்களுஞ்சூடிச் சிங்காரமாய்ப்பதம்பாடி (தா)

---

## தோட்டிச்சிதன்புருஷனைத் தேடுந்தரு.

இராகம் - கமாசு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

கண்டீரோவென்கணவன் கருத்தச்சாமியை
கருத்தச்சாமியை யுடல் பருத்தகேமியை (க)

நன்னயஞ்சேர்காசிவாழும் நாயன்மார்களே
நாயன்மார்களே கண்டால் நவிலுவீர்களே (க)

வேலைசெய்யவேயொருஆள் வேண்டுமென்றுதான்
வேண்டுமென்றுதான் ஒடி விரைவினில்வந்தான் (க)

கள்ளுக்கடையெல்லாஞ்சுத்திக் கருதிப்பார்த்தேனே
கருதிப்பார்த்தேனே காணாது வேர்த்தேனே (க)

போனவிடந்தெரியாமற் புலம்புகின்றேனே
புலம்புகின்றேனே பார்த்தாற் புகலுவீர்தானே (க)

---

(தோட்-வ-ம்.) ஐயா ஊருநாயன்மார்களே என்புருஷனைப் பார்த்தீர்களா இங்கே ஒரு ஆளைக்கிரையத்துக்கு வாங்கப்போரே னென்று வந்தான்காணேம்.

(அரி-வ-ம்.) ஆம்மா நான் தான் தங்கள் கணவனுக்கிரயாகு வுக்கு அடிமையானவன் என்னையிந்தக் காவடியைத் தூக்கிக்கொ ண்டுசேரிக்கும்போய் தங்களிடத்திற்கொடுத்துக்கரிசமைக்கும்படி



யாகச்சொல்லென்று சொல்லிவிட்டு அவர் கள்ளுக்கடைக்குச் சென்றுவிட்டார்.

(தோட்-வ-ம்.) அடா யிதென்ன அநியாயம் இவனைப்பார்த்தா ராசாவைப்போலத்தோணுதுபய மகன்பய இவனைக்கிரயத்துக்கு வாங்கியிருக்குறான் நல்லதிருக்கட்டும் டா! அடிமை இது தான் நம்மகுடி. காவடியை யிறக்கிவை.

(அரி-வ-ம்.) இதோ இறக்கிவைத்தேனம்மா.

(அரி-வ-ம்.) அம்மா நான் சும்மாயிருக்கலாகாது ஏதாவது வேலையிருந்தாற் சொல்லுங்கள்செய்கிறேன்.

(தோட்-வ-ம்.) டா! அடிமையே அப்படியானா இந்தக்கன் னுக்குட்டியை அழைத்துக்கொண்டு கரி சமைக்க.

(அரி-வ-ம்.) ஆ! ஈசா எவ்வாறு மனந்துணிந்து இந்தக்கட்டத் தால் இக்கன்றையறுக்கப் போகின்றேன்.

(அரி-வ-ம்.) நல்லதம்மா.

---

# அரிச்சந்திரன் கன்றறுக்கும் பாகம்.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

கொன்றையோடருகுதும்பை குழவியந்திங்கள்சூடி
மன்றலம்பொழில்சூழ்காசி வாழ்ந்திடும்விஸ்வநாதா
வென்றியாயயோத்தியாண்ட வேந்தன்யானேயாசெத்த
கன்றினையறுக்கலானேன் கருணையுநீதேதாவையா.

---

அரிச்சந்திரன்சொல் தரு.

அருமறையாகம மென்றமெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இதுவுமென்றன் தலைவிதியோ எம்பெருமானே
சதியென்செய்தேனோ விந்தத் தாரணியில்யானே
பத்திசெய்யுமடியார்க்கருள் பாலிக்குங்கோனே
கத்தியதாலாவின் கன்றின் கழுத்தையறுத்தேனே





பண்டொருநாள்யானையின்றேல் பாங்காயுரித்தோனே
தொண்டனேயோசெத்தகன்றின் தோலையுரித்தேனே.

அன்பாயென்போடரவம் பூண்டவாதிநாதனே
முன்கால்பின்கால்நான்கையுமே முறித்தேன்போதனே

படையெடாதுபுரமெரித்த பாண்டரங்கனே
குடலெடுத்தேன்மலங்கழித்தேன் குன்றைவில்லோனே

வாமிதனைப்பாகமதாய் வைத்துவாழ்வோனே
தாமதமன்றிமாமிசந் தனையறுப்பேனே

ஐயோகத்திதவறிக்கையி லறுத்துக்கொண்டேனே
செய்யகுருதிவடியுதேயென் செய்குவேன்யானே

அரிச்சந்திரன் விருத்தம்.

அத்தியையுரித்துப்போர்த்தும் அரவினைப்பணியாப்பூண்டுஞ்
சத்தியைப்பாகம்வைத்துந் தலம்புகழ்காசிவாழுஞ்
சித்திசேர்விசுவநாதா செத்தகன்றறுக்கும்போது
கத்தியென்காத்திற்பட்டுக் கலங்கவுங்காலந்தானே.

அரிச்சந்திரன்சொல் தரு.

இந்தவிதி எந்தலையில்என்ற வர்ணமெட்டு.

இராகம்-சாதாமகிரியை-தாளம் ஆதி.

பல்லவி.

ஐயையோவென்செய்வேனீசா அ॰னேகைலாசவாசா

அநுபல்லவி.

தையலுமையாள்பாகா சச்சுதாநந்தாயோகா. (ஐ)

சரணம்.

கன்றைநானறுக்கையில் கத்திதவறிக்கையில்
நன்றாய்விழுந்ததினாலே ரத்தம்வருதேயென்மேலே. (ஐ)

சந்தமுந்தன்பதம் தனைத்துதித்ததற்கிவ்விதம்
சிந்தைவருந்திடச்செய்தாய் சிறந்தவுன்னருள்கொய்தாய். (ஐ)

வருத்தமிகவாகுதே வன்னவிரல்நோகுதே
எரித்தாய்புரத்தையன்று எழியேனைக்காப்பாயின்று. (ஐ)

(அரி-வ-ம்) ஆ! காசிநாதா தற்சமயம் யான் செத்தகன்றை யறுக்கும்போது கத்தியானது தவறிக் கையிலறுத்துவிட்டதே யென்செய்வேன் இரத்தம் கொப்புளிக்கின்றதே.

(தோட்-வ-ம்.) டா! ஆண்டேஏன் அழுதுக்கொண்டிருக்கிறாய்.

(அரி-வ-ம்.) அம்மா யானிந்தக்கன்றை யறுக்கும்போது கரத்தில் வாள்பட்டு கைவிரலறுபட்டதால் இரத்தம் கொப்புளிக்கிறது வேதனை சகிக்கமுடியாமல் வருந்துகிறேனே தவிர வேறொன்று மில்லை.

---

## வீரபாகு கட்குடித்துவருதல் தரு.

கொள்ளையடிக்கவென்ற வர்ணமெட்டு.

கண்ணிகள்.

கொண்டாட்டமாக — ரெண்டு
சுண்டான்கள்குடித்த — தினால்
மண்டைகொண்டுதே — வெறி
பெண்டாட்டிதன்னைக் — காணேன்
டிகிடி-டிண்டி-டிகிடி-டிண்டி-டிகிடி-டிண்டி-டீ.

தென்னமரத்துக் — கள்ளு
ஜெகமெச்சும்பனங் — கள்ளு
என்னைமயக்கு — றதே
வண்ணமயிலைக் — காணேனே
தில்லாடாங்-டாங்குராஜா-தில்லாடாங்-டாங்

பூமியெல்லாஞ் — சுத்துதே
புத்தியதில் — பத்துறதே
சாமியென்னைக் — காணுமலே
தையலென்ன — செய்யுறளோ
டிண்டி-டிகிடி-டிகிடி-டிண்டி-டிகிடி-டிண்டி-டீ

வேலைசெய்யவொரு — பயலை
விலைக்குநான்வாங்கி — னேனே



சாலஞ்செய்துவோடி — னளே
தலைவிதியென்றிருக்கு — றளே
தில்லாடாங்-டாங்குராஜா-தில்லாடாங்-டாங்

---

(வீர-வ-ம்.) ஏ! ஆண்டமாரே, ஆண்டமாரே என்பெஞ்சாரிக் கண்ணைக்கண்டீயளோ.

(தோட்-வ-ம்.) டா! என்கருத்தச்சாமி ஆண்டமாரைக்கேக்கணுமா இங்கேயிருக்கிறேனடா டா! சாமி இன்னேரம் எங்கே போனே.

---

## வீரபாகுசொல் தரு.

உல்லாசக் கண்ணிகள்.

வாடி வாடி வாடி வாடி — பெண்டாட்டிக்-கண்ணே-எந்தன்
வங்கணத்துக்கேற்றதொரு — பெஞ்சாரிக்கண்ணே
உந்தனைநான்காணுமலே — பெண்டாட்டிக்கண்ணே-இந்த
உலகமெல்லாந்தேடினேண்டி — பெண்ஜாதிக்-கண்ணே
கள்ளுவெறியதலைல் — பெண்டாட்டிக்கண்ணே-எந்தன்
கால்கள்தடுமாறுதடி — பெண்ஜாதிக்கண்ணே

---

(வீர-வ-ம்.) குட்டி செத்தகன்னுக்குட்டிக் காவடி தூக்கிகினு ஒரு அடிமை ஆண்டை வந்தானுடீ.

(தோட்-வ-ம்) டா என்கருத்தச்சாமி இவரெந்தவூரு ராஜாவோ இவரைக்கிரையத்துக்குவாங்கினே-டா-சாமி இவரைகன்னுக்குட்டியை அறுக்கச்சொன்னேன் கையிலருத்துக்கொண்டாரு.

வீர-வ-ம்.) டி-போடி இவனுன்னை யேச்சுட்டான்

(வீர-வ-ம்.) டா! அடிமை நான்கள்ளுகுடிச்சுவரிதுக் குள்ளே என்பெஞ்சாரி கன்னுகுட்டியறுக்கச் சொன்னு கையிலறுத்துக் கொண்டியா இதோகாலினலே உதைச்சேன்போ.

---

அரிச்சந்திரன் விருத்தம்.

கலையொருநான்குமாதுங் கமலம்வாழ்யனுந்தேடி
நிலையறியாததேவா திருமலாகாசிநாதா

மலைமகள்பாகாவுந்தன் மலர்ப்பதம்பணியுமென்னைப்
புலையனேமிதிக்கவைத்தாய் புன்மையென்செய்தேன்கூறாய்

## அரிச்சந்திரன் சொல்தரு.

சம்போஹரா வென்றவர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கங்காதரா கருணாகரா காசிவிஸ் வேசா
மங்களகல் யாணகுண மங்கையாள் பாகா (க)

திரிபுரதகனாவிளங் திங்கட் சடையா
அரியயன்காணாத தேவா அரவத்தொடையா (க)

மறையொருநாலுந் துதிதா மரைமலர்ப்பாதா
கறைமிடறணியுந் தேவா கருதொணாப்போதா (க)

பறையன்காலா லுதைத்திடவிப் பாரினில்யானோ
குறையென்செய்தேன் சிதையுதாகங் கூறுவாய்தானே (க)

(அரி-வ-ம்.) அப்பா என்னையடிமை கொண்ட வீரபாகுவே யானிதுவரைசெய்தறியாத வேலையை இன்று செய்யத்தொடங்கினதால் கையிலறுத்துக்கொண்டேனே தவிரவேறல்லஇதற்காக வுனது பாதம்நோக மிதிக்கலாமா இனிமேல் நீயேவக்கூடிய வேலைகளையெல்லாங் குற்றமில்லாமற் செய்கின்றேன் மன்னிக்கவேண்டும்

(வீர-வ-ம்.) டா! அடிமை உன்னைமிதிச்சதினாலென் காலுநோவுது பிடிபாக்கலாம்.

(அரி-வ-ம்.) அப்படியே பிடிக்கிறேனப்பா வீரபாகுவே.

அரிச்சந்திரன் விருத்தம்.

வானிலமூன்றுமேற்று மாநகர்காசிதன்னில்
மானிகர்விழியாளோடு மகிழ்ந்துவாழ்விஸ்வநாதா
பானுவின்குலத்துதித்துப் பாரெலாமாண்டயானின்
றீனன்கால்பிடிக்கலானே னெங்குநீயொழிந்தாய்தானே.



## அரிச்சந்திரன் சொல் தரு.

ஐயோவெந்தன்காமீதா வென்றவர்ணமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

எங்குநீயோடி யொழிந்தாய்.
எழியேனெந்தனை மறந்தாய்
இளமதியணி நாதா
தான் தான் தான் (எ)

வேதியர்தனமனைவை தேனே
விரதமிருந்தழித் தேனே
விண்ணவர்தொழும் பாதா
நான் நான் நான் (எ)

கடையனுக்காளாகி வந்து
கால்பிடிக்கின்றேனு வந்து
காசிவாசநின் கண்ணுற்
பார் பார் பார் (எ)

நின்பாதம்பணிந்ததும் போய்
நீசன்தாள்பிடிக்கச் செய்தாய்
நிந்தைசெய்தேனோ தேவா
சொல் சொல் சொல் (எ)

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா உனது பாதாரவிந்தமே கெதியென நம்பியிருந்த என்னைப் பஞ்சமனுடைய கால் பிடிக்கச் செய்ததோ இஃதுனக்குத் தருமமா?

(வீர-வ-ம்) டா! அடிமை நீ என் காலைநல்லாப்புடிச்சேளன் கால் நோவெல்லாந் தீர்ந்தது.

(அரி-வ-ம்.) இன்னுமேதாவது வேலையிருந்தாற் சொல்லுமப்பா வீரபாகுவே.

(வீர-வ-ம்.) டா! அடிமை யாண்டே கேளுடன் துணியை வச்சி நம்பசாயொரைப்போலே இந்தக் கச்சையை விட்டு இந்தக் கம்பளியைப் போத்தி இந்த முண்டிட்டுவா உனக்கு வேலை சொல்லுறேன்.

(அரி-வ-ம்.) நல்லதப்பா வீரபாகுவே உத்தரவுபோல வணிந்துகொள்கிறேன்.

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா யானெவ்விதமிந்த வுடைகளை மனம்பொருந்தி யணிந்து கொள்வேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

விதியோமுனிசதியோ வென்றமெட்டு.

இராகம்-சஹானா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

விமலாஉயர்அமலா விசுவேசா பரமேசா
வேர்தன்யானிவ் வேடங்கொள்ள
விட்டாய் உமைநேசா

சீரார்மணிமுடியணிந்த சென்னிதனிலானே
திகழும்பழந்துணி வரியச்
செய்தாய் பராபரனே

வாருலையங்கள்பூணு மற்புயத்திற்றனே
வன்கம்பளி போத்திடவே
வைத்தாயின்று கோனே

பிரபலமாய்ச்செங்கோல் நித்தம்பிடித்தகையிற்சிவமே
பிணஞ்சுடுங்கோலதனை யின்று
பிடிக்கச்செய்தா யவமே

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா இதுவுமுன்னருளோ—கேளுமப்பா வீரபாகுவே நீ கூறியபடி யாவற்றையுமணிந்து கொண்டேன் முன்னமே யான் பூண்டிருந்த காவித்துணிகளிதோ விருக்கிறது பெற்றுக்கொள்ளுமப்பா.

(வீர-வ-ம்.) டா! அடிமைஆண்டே என் காணியாச்சியாகிய சுடுகாடு இந்தவூருக்கு ஈசானிய திக்கிலே கங்கைக்கரையோரத்திலிருக்கிறது நீ யங்கேபோயி இரவும்பகலுந் தூ[ங்கா]
ருந்து அங்கே வரும் ஒவ்வொரு சவத்துக்கு[ம்]
துண்டு வாய்க்கரிசி இபமூன்றும் வாங்கிப் [...]
காற்பணமும் முழத்துண்டையும் எனக்கு[...]



மாத்திரம்நீதின்னுக்கொண்டுமோசஞ்செய்யாமல் க[ா]த்துக்
கொண்டிரு இந்தாசவஞ் சுடுங்கோல் கையில் பிடிச்சு[க்கொள்].

(அரி-வ-ம்.) நல்லதப்பா சென்று வருகிறேன்.

## அரிச்சந்திரன் மயானத்திற்குச் செல்லும் [யோ]கம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மலரினில்மணமாபோலங்கு மணியினிலொளியாய்த்தூய
சலமதிற்குளிராய்ச்செய்ய தணலினிற்சூடாய்நின்றே
இலகிடுங்காசிநாதா விறைவனுஞ்சுடலைகாக்கப்
புலையன்போல்வேடம்பூண்டு போகிறேனருள்செய்வாயே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஐயையோமகனைத் தேடியென்றமெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

போரேநான்சுடலைகாவல் புரிந்திடவிசுவேசா

அநுபல்லவி.

வீரவாகுப்பெயர்கொண்ட வெட்டியான்வருதிபோலே
சீரிலாவுடைகள்பூண்டு தீயிடுங்கோல்பிடித்திக்காலே(போ)

சரணம்.

மனைவிமகன்றனையு மறையோர்க்குவிற்றுநொந்து
தனதானமதிமந்திரி சத்யகீர்த்தியைப்பிரிந்து(போ)

எளியோரையடித்தேனோ இருடிகளையிகழ்ந்தேனோ
பழிபாதகஞ்செய்தேனோ பாவலரைவைதேனோ(போ)

கறைமிடறணிதேவா கால்கடுக்கவேநடந்து
பறையர்வாழுஞ்சேரியைப் பாங்குடனிதோகடந்து(போ)

விதுவணிநற்சடையா வீசுதேதுர்க்கந்தம்
இதுதானோசுடலையு மெவ்விதமுய்வேனிப்பந்தம்(போ)

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா இதுதானென்னையடிமைகொண்ட வீரபாகுகூறிய சுடலைபோலக் காணப்படுகிறது யானெவ்விதம் இங்கு தங்கியிருந்து காலங்கழிப்பேன்.

(அ
ந்துகொள்
(அரி
னம்பொரு





# அரிச்சந்திரன் மயானங்காக்கிற பாகம்.

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

சுட்ட வெம்பிணத்தோ டொக்கத்
தொலைந்துவெந் தெரிந்து கொள்ளிக்
கட்டையும் பாடை சேர்ந்த
கழிகளு மெடுத்துக் கூட்டிக்
கொட்டி லொன்றெடுத்து மேனாள்
கொடுஞ்சவங் கொணர்ந்துபோட்ட
கட்டிலொன் றேறிச் செங்கோற்
காவலன் வீற்றிருந் தான்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

சங்கராசங்காதரா வென்ற வர்ணமெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

திங்கள்திகழ்சடையா மழுப்படையா
தேசிகாகாசி நாதா.
மங்கைபாகாவரதா மெய்யன்பர்கள்
வாழ்த்தித்துதிக்கும் பாதா

பூவங்கள்புரிந்தேனே உன்றன்செழும்
பாதத்தைமறந் தேனே
காவலனென்னைவந்து சுடுகாடு
காக்கச்செய்தாயு வந்து

காதிமைந்தன்சதியோ அல்லாலந்தக்
கமலவேதன் விதியோ
யேதுமறிகிலனே எந்தன்மனம்
இடையுதென்செய்கு வேனே

பாடைக்கொம்புகளினே கட்டுவித்த
பரண்மீதேறியிக் காலே
வாடையதால்மெலிந்து இரவுபகல்
வாழலானேன் நலிந்து

மாரனையொத்ததேவா அந்தவெள்ளி
மலைவாழ்மகானு பாவா
தாரணிதன்னிலின்று விரைவினில்
தமியேனைக்காக்க வாவா.

(அரி-வ-ம்.) ஆ விஸ்வேசா அடியேன் என்னபாவஞ் செய்தேன் இவ்விதகோலத்துக் காளாக்கினை,

## அரிச்சந்திரன்சொல் தரு.

மாமதுரையம்பதியில்வாழுமைபாகா வென்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மன்னனென்னைச்சுடலைகாக்க வைத்தாயேபிசா
வைத்தாயேபிசா ஆ-வைத்தாயேபிசா
மதியணிநாதா விதிபுயர்போதா பதிபுகழ்நீதா
மாட்சிகம லாட்சிவிசா லாட்சிமகிழும்
வரதா விஸ்வேசா. (ம)

தேசராஜர்தினமுங்கப்பஞ் செலுத்திடத்தானே
செலுத்திடத்தானே நேராய்ச் செலுத்திடத்தேனே
செங்கோலாகத் துங்கவயோத்திப் பொங்கமாயன்று
நிரமதி காரமுப காரமுடனே
சிர்த்தியா யாண்ட. (ம)

பெண்பிள்ளைமந்திரிதம்மைப் பிரிந்திடச்செய்தாம்
பிரிந்திடச்செய்தாம் ஐயோ பிரிந்திடச்செய்தாம்
பிஞ்ஞகாதொண்டர் அஞ்ஞானநீக்கி மெஞ்ஞானந்தனைப்
பேதமிலா தாதரவா யோதியருளும்
பிபெர் தேவா. (ம)

பொதுவசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் மயானங்காத்து ஆங்குவரக்கூடிய பிரேதங்களைத் தகனித்து வியாபாரூடத்தாவுபோல் காலங் கழித்துவந்தான் இதுநிற்ப இனிமேல் காலகண்டர் வீடுசென்ற சந்திரவதியும் தேவதாசனும் அன்னவர்வருதிப்படி வேலைசெய்து வருகிறார்கள்காணுக.

காசிகாண்டம் முற்றிற்று.

உ

௩௦௧ வேலுமயிலும்.

# மயானகாண்டம்.

பொது விருத்தம்.

வல்லியுமகனுமந்தமறையவன் மனையிற்சேர்ந்து
சொல்லியபணிகளெல்லாஞ் சோர்வறச்செய்துபின்னர்
எல்லியோர்சாமமென்ன வெழுந்திருந்தேவல்முற்றி
யல்லிருசாமஞ்சென்றுலளித்த கூழுண்டுறங்கி.

## சந்திரவதிசொல் தரு.

நாட்டுக்குநாயகமாகவயோத்தியிலென்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

தேசமெல்லாம்புகழ்மாசிலயோத்தியில் வாழ்ந்தேன்-இன்று
பூசாரக்காளாகியன்னவரில்லம் புகுந்தேன்

மல்லிகைமுல்லைமலர்மிகச்சூடிய சிரமே-இன்று
சொல்லொணுக்குப்பைசுமந்திடலானதெந் தாமே

பட்டாடைமேகலாபரணம்புனைந்திட்ட மருங்கே-இன்று
கெட்டபழந்துணிசுற்றவுமான நொருங்கே

பங்கயமாமலர்தன்னைப்பழித்தபொற் கரமே-இன்று
பங்கமடையவேநெல்லுக்குத்தவிட்டாய் பாமே

ஆடகக்கிண்கிணியார்வமாய்ப்பூட்டிய பதமே-இன்று
காடுமேடுஞ்சாணிக்காயலைந்தெய்த்தது நிதமே

வண்ணக்கிண்ணத்திற்பாலன்னம்வாகாய்ப் புசித்தேனே-இன்று
உண்ணவேகூழுக்குப்பில்லாமலே யுலைந்தேனே

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா இந்திரன்வசிக்குஞ் சுந்தரநகரும் குபேரன்வாழும் அழகாபுரியும் பார்த்தால் ஆவல்கொள்ளக்கூடியாதொரு அயோத்தியா புரியினிடமாக நவரத்தினகசிதமான மாளிகையின்கண் அறுசுவைப் பதார்த்தங்களுடன் புசித்து இலகின்

ால், பூத்தொடுத்தல், வீணைவாசித்தல் முதலான பற்பலதொழில் களைப் புரிந்து கொண்டிருந்த யான் தற்சமயம் வேதியர்வீட்டில் வந்து ஓர்நாளுஞ் செய்தறியாத வேலைகளாகிய நெல்லுக்குத்தல், சாணிதட்டல் முதலிய தொழில்களைச்செய்து கேவலங் கூழருந் துதற்குக் கூட உப்பில்லாமற் கஷ்டமடைய என்னபாவஞ் செய் தேன்.

சந்திரவதி விருத்தம்.

பன்னகாபரணம்பூண்ட பரமனார்பக்கம்வாழு
நன்னயக்கிளியேதேனே நவிலொணுத்திருவேயெந்தன்
அன்னையேயுந்தன்பாத மனுதினம்பணிந்திடாப
என்னபாதகங்கள்செய்தே னிக்கதியாக்கிவைத்தாய்.

சந்திரவதிசொல் தரு.

பெண்ஜெனனமெடுத்தாலென்றமெட்டு.

இராகம்-சாவேரி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னபாதகஞ்செய்தேன் அன்னையேவிசாலாட்சி
யிக்கதியாக்கி வைத்தாய் (என்)

அனுபல்லவி.

கன்னபுரியரசர் காதலாய்ச்செய்தவத்தாற்
காசினிதனில்வந்த மாசில்சந்திரவதியான் (என்)

சரணங்கள்.

மன்னர்மன்னர்கள்பணி மகாராஜதுரந்தரர்
மாட்சிமையுற்றவிந்த மண்புவிக்கோரிந்திரர்
கன்னவிற்றேருடைய காசியாமரிச்சந்திரர்
கருதரிய தந்திரர்

என்னைமணந்தமுதலிருவரும் பூமணம்போல்
இன்பமுடனேகூடி யிருந்தோமேயவனிமேல்
நன்னயமாகுமுந்தன் நகராமிக்காசிவந்து
நாதனவரைப்பிரிவ நாளும்பாலனும்வருந்த (என்)



(சந்-வ-ம்.) சர்வ..க்கருணையங் கடலாகிய சிவபெருமானிட ாகம் வாழும் அம்பிகா யாதொரு கன்னமாபுரிக்கிறைவனுகிய தயமஹாராஜன் அருந்தவத்திலுதித்து இராஜாதிராஜராக வ ாத்தியாபுரியைப் பாரிபாலித்த அரிச்சந்திர பூபதியைமணந்து களமாக மைந்தனையீன்று சுகமுடன் வாழ்ந்து கொண்டிருந்த ன் உனது நகராகிய இக்காசியம்பதிக்கு வந்து மறையோர்க் மையாகி மணவாளனைப் பிரிந்து புத்திரனும் நானும் துன்பம ய என்னபாதகஞ் செய்தேன்.

சந்திரவதி முன்னால் வெண்பா.

கீடுந்தலைகீழ்கால் மேலாகிநின்றாலும்
கூடும்படியன்றிக் கூடாதால்—ஓடி
வருந்தாமனுள்ளபடி வந்திடக்கண்டாறி
இருந்தாலோ நெஞ்சேயினி.

(சந்-வ-ம்.) ஆ! மனமே இவ்வுலகின் கண் துன்பத்தை நீக்கி இன்பமடையும்படி தலைகீழும் கால்மேலுமாக நின்றாலும் ஆண்கா லந்தானேயாகும் அப்படிக்கிருக்க நீயேன் வருந்தமடைகின்றாய் தேறியிருந்தாலல்லவோ நலம்.

(கால-டி-வ-ம்.) ஏ ஆத்துக்காரரே நம்மாத்து உள்ரேழியிலே அழுகைச் சத்தங்கேட்கிறதே என்ன?

(கால-ர்-வ-ம்.) அடியே காலகண்டி சந்திரவதியுங்கிச்சானும் முன்னிருந்த நிலைமையையுந் தற்கால மடைகிற கஷ்டத்தின் தன் மையையும் நினைத்து அழுதுகொண்டிருப்பார்கள் போக்கென்ன.

(கால-டி-வ-ம்.) ஏங்காணும்நீர்பட்டுக்கி..ந்தீரேநான்மந்தை மாட்டின்பின்னாலே திரிந்து சாணமெடுத்து மூட்டைகட்டி விற்ற காசு என்கையிலிருந்ததை அநியாயமாகக் கொடுத்து இந்த அழு மூண்டையையுஞ் சிறுபயலையும் விலைக்குவாங்கலாமா ஒருவேலை யுஞ் செய்யுறாளில்லையே.

(கால-ர்-வ-ம்.) அடியேகாலகண்டி கோபங்கொள்ளாதேகிச் சானையும் சந்திரவதியுமிங்கே அழைத்துவா தக்கவேலையிடுகிறேன்

(கால-ர்-வ-ம்.) அடியேசந்தி வெற்றே அழுதுக்கொண்டிருக் கிறாயே இங்கேவாடிவா.

(சங்-வ-ம்.) அம்மணி இதோவருகிறேன்.

(கால-ர்-வ-ம்.) அடியேசக்தி என்டி வெற்றே அழுகிறாய் காலகண்டி என்னைத் திட்டுகிறாளில்லியோ வீட்டுவேலைகளெல்லாஞ் சரியாகச்செய்யடி போடி போ.

(கால-ர்-வ-ம்.) அடேகிச்சான் இங்கேவாடா.

(தேவ-வ-ம்.) இதோ வந்தேன் சுவாமி.

# தேவதாசன் வேலைசெய்கிற பாகம்.

காலகண்டன் விருத்தம்.

பாலனேபகரக்கேளாய் பாங்குடனிக்கணத்திற்
சாலவேயெந்தன்சோமன் தன்னைநீயெடுத்துக்கொண்டு
ஞாலத்தோர்புகழுங்கங்கை நதியினையடுத்துமிக்கச்
சீலமாய்த்தோய்த்துக்கொய்து சீக்கிரம்வருகுவாயே. 1

(கால-ர்-வ-ம்.) அடாகிச்சான் சீக்கிரத்தில்சீனது சோமனையெல்லாம் எடுத்துக்கொண்டு கங்கா நதிக்குச்சென்று நன்றாகத் தோய்த்துக் கொண்டுவா.

தேவ-வ-ம்.) நல்லது சுவாமி இதோதங்களுத்தரவு போல வேஸ்டிதோய்க்கச் செல்கின்றேன்.

(தேவ-வ-ம்.) ஆகாசிநாதா அடியேனை உத்தமக்ஷத்திரியகுல மன்னன் தவத்தில் இவ்வேலைகள் புரியவா உற்பவிக்கச்செய்தனை.

## தேவதாசன் வேஸ்டி தோய்க்குந்தரு.

நாதன்வரக்காணேனே யென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ஏகம்.

பல்லவி.

அந்தணர்வேட்டி தனைவைக்க          லாயேனைவிதிவசமே

அநுபல்லவி.

மைந்தநானுமிப்போது          வருந்தமதையென்னுறை. (அந்)



சரணங்கள்.

தங்கமாய்த்துணையிலாது          சங்கடத்தைப்பாராது
பொங்கமாகவேநடந்து          கங்கையாற்றங்கரைவந்து. (அந்)

நதியணிபரமேசா          நண்பர்கள்பவநாச
பதிபுகழ்காசிவாசா          பார்த்தருள்விசவேசா. (அந்)

வைகறையிலெழுந்து          மனதுமிகவுவந்து
கைகளிரண்டுநோக          கால்களின்றுளைவாக. (அ)

(தேவ-வ-ம்.) சுவாமீ இதோ வேஸ்டிகளையெல்லாம் நன்றாகத்தோய்த்துக்கொண்டு வந்திருக்கிறேன்.

(கால-ர்-வ-ம்.) நல்லது அதோவிருக்குங் கொடிப்பிரம்பில்மடித்து உலரும்படி போட்டுவிட்டுவாடா.

(தேவ-வ-ம்.) நல்லதுசுவாமி.

(கால-வ-ம்.) அடேகிச்சான் நமது தோட்டத்திற் கட்டியிருக்கிற மாடுகளை அவிழ்த்துப் போய் புற்கள் மிகுதியாயுள்ளஇடத்தில் மேய்த்துக்கொண்டுவாடா.

(தேவ-வ-ம்.) உத்தரவுபோலவே மேய்த்துவருகிறேன் சுவாமி

## தேவதாசன் மாடுமேய்க்குந் தரு.

இன்னும் நாதன்வரக்காணேனென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-சாபு.

பல்லவி.

மன்னவன்மகனும்யானே          மாடுமேய்க்கலாகினேனே.

அநுபல்லவி.

இன்னகரந்          தன்னில்வந்து
ஏங்கித்-தேங்கி          இருவினையாலே. (ம)

சரணங்கள்.

நஞ்சைபுஞ்சை          வரப்பெல்லாம்
நாடி-தேடி          நாதனே வாடி. (ம)

வேதியர்          வருதிபோல
விளைந்தே-வளைந்தே          வியர்வையால்மெலிந்தே. (ம)

நான்முகன்          தேடியுங்காணு
நாதா-போதா          நாண்மலர்ப்பாதா. (ம)

(தேவ-வ-ம்.) ஆ! விசாலாக்ஷிபாகா அந்தணர் வீட்டின்மா(டு)
களை மேய்க்கமன்னன் மகனுகிய யான் என்ன கொடுவினை புரி(ந்)
தேன்.

(தேவ-வ-ம்.) சுவாமி மாடுகளை யெல்லாம் அவிழ்த்துக்கொ(ண்டு)
போய் நன்றாக மேயும்படியாகச் செய்து கட்டுத்துறையி(ற்)
கட்டிவிட்டேன்.

(கால-ர்-வ-ம்.) நல்லதடா கிச்சான் உனது தாயாரை யிங்கு
வரச்சொல்.

(தேவ-வ-ம்.) அம்மணி ஐயருன்னை யழைக்கின்றார்.

(சந்-வ-ம்) சுவாமி வந்தனம் அழைத்தகாரணம் யாது.

# தேவதாசனைக் காட்டுக்கு அனுப்புகிறபாகம்.

காலகண்டன் விருத்தம்.

சந்திரவதியேகேளுன் றனயனைக்கானகத்துக்
கித்தநற்க்ஷணமேயேகி யெழில்காரைமுசுட்டைமுன்னை
வித்தையாஞ்சமித்துத்தெற்பை விரைவினிற்சேகரித்துச்
சுந்தரமாகவிங்கு சுருக்கினில்வரச்செய்வாயே.

(கால-ர்-வ-ம்.) அடிசந்தியான் மந்திரகிரியைசெய்யவேண்டி
யிருப்பதால் உனது புத்திரன் தேவதாசனை ஆரண்யத்துக்கனுப்
பிதெற்பை, சமித்து, முன்னை, முசிட்டை, பிறண்டை, காரை இவ்
வளவும் சீக்கிரத்தில் கொண்டு வரும்படி செய்வாயாக.

சந்திரமதிவிருத்தம்.

கறைமிடற்றண்ணல்பாதங் களவிலுமறவாதேற்று
மறையவராசேயெந்தன் மைந்தனரணியஞ்செல்லச்
சிறியவனதலாற்யான்சென்று சாமான்கள்சேர்த்துக்
குறைவில்லாதிங்குவாரேன் கொடுத்திடும்வருதிதானே.



## சந்திரவதிசொல் தரு.

அன்னகர்பூமினன்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

பல்லவி.

மறையவரசேயான் வனஞ்சென்று வருகிறேன்
வருதிகொடுத்தருளும் மனதுகந்தே

அநுபல்லவி.

இறைவனைப்பணிபோதா வெழிதுறுமலர்ப்பாதா
குறை லாச்செல்வம்பெற்ற குணநாதா
சிறுவ ரண்யஞ்செல்லத் திடமானவனல்லச்
சீரார்மேதினியெங்கும் பிரக்யாதா (ம)

சரணங்கள்.

சிங்கங்கரடிதந்தி வெங்கட்புலிகள்யுத்தி
எங்குங்கொர்ச்சிதத்துடன்பத்தி பத்தி
பொங்கமாகமேவிடும் பூங்கானஞ்சென்றிடும்
புதுமைவழிதோணுன்யா வர்க்குமுத்தி (ம)

---

(சந்-வ-ம்.) சுவாமி துஷ்டமிருகங்கள் வாசஞ்செய்யும் ஆரண்யத்துக்குச் சிறுபாலனை எனது மைந்தன் எவ்விதஞ் சென்று வருவான் ஆகையால் யான்சென்று வேண்டிய சாமக்கிரிகைகள் சேகரித்துவருகிறேன் விடைகொடுத்தருளும்,

(கால-ர்-வ-ம்.) சந்தி நல்லயோசனைசெய்தனை நீ ஆரண்யத்துக்குச் சென்றால் வீட்டின்வேலை யார்செய்கிறது என்மகன் சிறுவனென்று சொல்கிறையே நம்மாத்துக்குவந்து கூழுண்டு பிரமதடியன்போலிருக்கிறனே அவனைத்தானே போகச்சொல்.

---

## சந்திரவதி சொல் தரு.

கரவொட்டியாலென தோரவென்றமெட்டு.

இராகம்-தோடி-தாளம்-ஆதி.

பல்லவி.

மாதவரே மைந்தனையா. (மா)



அநுபல்லவி.

வேதியர்பூமா மிகுபுகழ்நேமா
காதலாக்கானகஞ்சென்று நீதிலாமல்வரவே. (மா)

சரணங்கள்,

தெற்பைசமித்துச் சீராய்ச்சேகரித்து
அற்புதமாய்க்கொண்டுவர விற்பனமிகுந்த (மா)
காரானைபன்றி கடிகலைகளன்றிப்
பாரரவம்வாழுகின்ற கோரவனம்போய்வர (மா)
மங்கையுநானே மகிழ்வுடன்தானே
பொங்கமுடன்சென்றுவாரேன் துங்கமாய்விடைதாரு (மா)

---

(சந்-வ-ம்.) சுவாமி இப்பாலகன் சிறுவனென்பது தங்களுக்குத் தெரியாததல்ல ஆகையால் வருதிகொடுக்கவேண்டும் யான் ஆரண்யஞ்சென்று வருகிறேன்.

(கால-ர்-வ-ம்.) ஏண்டி சந்தி தினந்தோறும்வனஞ் சென்று சாமக்கிரிகைகள் சேகரித்து வந்தவனை இன்றேன் அனுப்பிவிக்கத் தடைசெய்து நான் போய்வருகிறேனென்று கூறுகின்றாய் என்ன காரணம்?

(சந்-வ-ம்,) சுவாமி இதுநாள்வரை அயலகத்துப்பாலர்களோடு ஆரண்யஞ்சென்றுவந்தானே தவிரத்தனியாகச்செல்லவில்லையென்று தாம் தனியனாகச் செல்லச்சொல்வதினால் யான் சென்று வருகிறேனென்று கூறுகின்றேனே தவிர வேறல்ல

---

காலகண்டர் விருத்தம்.

பாலன்வனஞ் சென்றுவரத் திடவானல்லப்
  பாங்குடனே நானேகி வேண்டுஞ் சாமான்
சீலமுடன் சேகரித்து வருவே னென்றே
  சிந்தையுவந் துரைக்குமிந்த சாலி வீட்டின்
வேலையெல்லா மெவர்செய்வா ரென நினைத்தாய்
  மேன்மைபெறு மயலகத்து மைந்தர் கானஞ்
சாலவே செல்லுகின்றாரவர்களோடு
  சந்தோஷ மாயனுப்பத் தடையு முண்டோ.

---

(கால-ர்-வ-ம்.) சந்தி உன்மகனைத் தனியாகப்போகச் சொல்லவில்லை அடுத்தாத்து சேசு, சுப்பு, ராமு, இவனெல்லாம் வனத்துக்கு வழக்கம்போலப் போகிறார்கள் அவர்களுடன் அனுப்புவதற்குந் தடைசொல்வையோ?

(சந்-வ-ம்.) சுவாமி அவர்களைக் காணேமே.

(கால-ர்-வ-ம்.) இதோ வந்திடுவார்கள்

(சந்-வ-ம்.) நல்லது சுவாமி.

சந்திரவதி விருத்தம்.

மாதவத்தா னதித்தவெந்தன் மாமணியே
வாரமுதே மகனே கேளாய்
ஆதரவா யடிமைகொண்ட வந்தணருந்
தனையடகு முசட்டை முன்னை
கோதிலாப் பிரண்டையுடன் காரையிலை
கொண்டுவரக் கொடுங்கா னக்கிப்
போதேக விடையளித்தார் போதினரை
வோன்விதிக்கென் புகலு வேனே.

சந்திரவதிக்கும் பாலகனுக்குந் தர்க்கம்.

இராகம் - தனுசாரி - தாளம் - சாபு.

கண்ணிகள்.

சந்திரவதிசொல் தரு.

ஐயருத்தபோ லென் பாலா-பெருட
ஆரண்யஞ்சென் றுவருவாய் சீலா

தேவதாசன்சொல் தரு.

டை வர்ணமெட்டு.

ஆரணியஞ்செல்லென்றுயென் தாயே-யான்
அறியாச்சிறுவனல்லோவென் தாயே

சந்திரவதி.

வேதியரிடமிதையுரைத் தேனே-அவர்
வெகுண்டாரடாசெழுஞ்செந் தேனே



தேவதாசன்.

எந்தவிதஞ்செல்லுவேனன் தாயே-மனப்
எங்கிப்பதருதையோவென் தாயே

சந்திரவதி.

மனம்பதருமலேயென் மகனே-வனம்
வாருடன்சென்றுவாடாவித்த கனே

தேவதாசன்.

அரசன்சுதனெய்வந்த தென்தாயே-இந்த
அவதியடைவதற்கோ வென்தாயே

சந்திரவதி.

விதியின்செயலதனையட பாலா-நாம்
விலக்கமுடியுமோடாகுண சீலா

தேவதாசன்.

தவஞ்செய்துபெற்றதோரென் தாயே-வனம்
தனியாயெவ்விதஞ்செல்வேனென் தாயே

சந்திரவதி.

அய்லாத்துமைந்தருடன்செல் வாயே-சென்று
அடருவகைகள்சேர்த்துவரு வாயே

தேவதாசன்.

வயறுபசிக்கிறதேயென் தாயே-கஞ்சி
வார்த்தனுப்புவாயிப்போவென் தாயே

(தே-வ-ம்.) அம்மணி ஐயருத்தரவையும் தன்வருதிலையும் மறுக்காது அயலகத்துப் பாலர்களுடன் ஆரண்யஞ்செல்கின்றேன் தற்சமயம் மாடுமேய்த்து வந்த அசௌகரியத்தால் வயிறேரியகவும் பசிக்கிறது ஆகையால் கிஞ்சிற்று கஞ்சிவார்த்தனுப்புவாய்.

சந்திரவதி சொல் தரு.

பாலாவென்னகாலம்வந்ததடாஎன்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோமகனேயிதற்கென் செய்குவேனேசெய்குவேனே
ஐயரிடஞ்சென்று வெய்யபசிக்கருள்
செய்யுமெனக்கேட்டால் வைகுவர்சினமாய் (ஐ)

## தேவதாசன்சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

அம்மாவயிறேமிகவும் பசிக்கிறதே பசிக்கிறதே
ஆதிவருணருஞ் சாதமில்லையென்றால்
பாதகன்பசிக்கோ சேறுவுசொல்லுவாய் (அ)

சந்திரவதி.

பாலாநீயிவ்விதம் பகரவுமாச்சே ஆச்சே
பாதகிவயற்றி லாதாவாய்வந்த
கோதிலாதகுண சாதகனேயெந்தன் (ஐ)

தேவதாசன்.

தாயேஒருகாசாவது தருவாயே தருவாயே
சங்கரனைக்கோரித் தங்கமகஞ்செய்து
மங்களமாய்ப்பெற்றுப் பொங்கமாய் வளர்த்த (தா)

சந்திரவதி.

கண்ணேகண்ணின்மணியே கரும்பேகனியேஆகனியே
காசினியிழந்திப் பூசுரன்மனையில்த்
தோசிபுகுந்தேனே காசேதுகையினில் (கண்)

தேவதாசன்.

பூந்திலட்டுபோளி கடையினிற் கண்டேன் கண்டேன்
பொன்னடிஅதித்தேன் அன்னையே நீசென்று
சன்னயமாய் வாங்கி யென்னிடமீய்குவாய் (பூந்தி)

சந்திரவதி.

தேடக்கிடையாதவெந்தன்செழுந்தேனேசெழுந்தேனே
திட்டமாயோர்செம்புத் துட்டுக்கையில்லாமல்
கிட்டவுமாகுமோ எட்டியே கடைக்கே (தே)

தேவதாசன்.

பசியாற்கனேப்பாலதிறு லெனக்கம்மா எனக்கம்மா
பச்சரிசியாவ திச்சணமய்யர் பால்
அச்சமின்றிவாங்கிப் பக்ஷமாயீய்குவாய் (பசி)

சந்திரவதி.

செந்தேனமுதம் புசித்ததிருவாயால் திருவாயால்
சேயேபச்சரிசி யீய்குவாய்யென்றையே
தூயவேதியரிற் றீயர்கல்குவரோ (செ)



தேவதாசன்.

அம்மாபச்சரிசி தாராவிடிலன்பாய் அன்பாய்
அறியதோர்சிறு குறுணையாவது
மறையோர்பாற்பெற்றுச் சிறியனுக்கீய்வாய் (அம்)

சந்திரவதி.

வண்ணக்கிண்ணத்திற்பாலன்ன மூண்ணுமகனே
மாதவரோவெகுபாதகர் பாரியோ
நீறுஅநெஞ்சின ளேதுங்கொடாளோயோ (வண்)

(சந்-வ-ம்.) கண்மணி மா, பலா, கதலி என்ற முக்கனிகளும் அழகியதங்கக் கும்பாளிலிடமாகப் பாற்சாதமும்புசிக்கிற னது திருவாயால் தற்சமயம்ஐயரிடத்திற்பச்சரிசியாவது கொய்குருணையாவதுபசியைத்தணிப்பதற்கு வாங்கித்தருவாயம்மாவென்றுகேட்கின்றையே என்செய்வேன்பாலகா நம்மையடிமைகொண்ட வேதியரோ மகா கோபி அன்றியு மன்னவர் பத்தினியோ அவரைப் பார்க்கிலு மிருந்தகோபி அதிகாலையில் நினக்குக் கூழ்வார்த்து மாடுமேய்க்கும்படியாக வனுப்பினவர்கள் சாமப்போதாவதற்குள்ளாக மீண்டுஞ் சாதமளிக்க மாட்டார்களாகையால் நீ விரைவிலயலகத்துப் பாலர்களுடன் ஆரண்யஞ்சென்று தெற்பைமுதலிய சாமான்கள் சேகரித்து வருவாயாகில் ஐயர் பத்தினி சாதமளிப்பாள் பசியைத் தணித்துக்கொள்ளலாம் வருந்தாதே.

(தேவ-வ-ம்.) அம்மணீ மானம், குலம், கல்வி, வன்மை, அறிவுடைமை, தானம், தவம், முயற்சி, தாளாண்மை, தேனின் கசிவந்த சொல்லியற்பாற் காமுறுதல், பத்தும், பசிவந்திடப் பறந்து போம், என்பதற்கிணங்க எனது பசியினால் நம்மை யடிமை கொண்ட வேதியரின் குணமும் அன்னவர் பத்தினியின் குணமும், அறிந்தயான், ஏது எதோ பிதற்றிவிட்டேன், ஆகையால் ஆரண்யஞ் செல்லும் வழியில் தடாகங்களாவது எறிகளாவது இருந்தால் தண்ணீரள்ளிப் புசித்துப் பசியைப்போக்கிக் கொள்கிறேன்விடை தருவாய்.

(சந்-வ-ம்.) பாலகா அயலகத்துப்பாலர்கள் வந்தவுடன் அன்னவர்களுடன் செல்வாய்.

(தேவ-வ-ம்.) நல்லதம்மணீ.

## அயலகத்துப்பாலர்கள்வருகிற தரு.

இராகம்-கன்னடம்-தாளம்-ஆதி.

பல்லவி.

அந்தணர்தன்மைந்தர்கள்வந்தார் வனத்திற்கேக

அநுபல்லவி.

புந்திமகிழ்ந்துகாமம் போட்டேயொய்யாரமாக (அ)

சரணங்கள்.

கோதில்பட்டுச்சோமனைக் கொய்தேயிடையிற்கட்டி
வேதமுணர்காலகண்டர் வீடதனையேகிட்டி (அ)

கோலமலர்கடனைக் கொண்டையதனிற்சூடி
சாலவேயனைவருஞ் சந்தோஷமாகக்கூடி. (அ)

---

(சுப்-வ-ம்.) அடா சேசு, ராமு, வெங்கு எல்லோரும் வாருங்கோடா நம்ம காலகண்டதாத்தா இருக்காரொலியோ அவராத்துக்குப்போய் அங்கேயிருக்கிற கிச்சான் பயலையுங் கூட்டிக்கொண்டு காட்டுக்குப்போவோம்.

(சேசு-வசனம்.) ஆமடா போவோம்வாடா.

(சுப்பு-வசனம்.) தாத்தா

(கால-ர்-வ-ம்.) ஏண்டா வல்லாரோழிபிள்ளைகளா தூங்குகிற என்னை எழுப்பிறியள்.

(சுப்பு-வசனம்.) தாத்தா நம்மாத்துக்கிச்சான் காட்டுக்குவாரானோஇல்லையோ கூப்பிடுகிறதற்காக வந்தோம் என் கத்தபத்தை போலக் கத்திவைகுறீர்.

(கால-ர்-வ-ம்.) உள்வீட்டு ரேழியிலே யிருக்கிறான் கூட்டிப் போங்கடா.

(சுப்புவசனம்.) தூங்கமுஞ் சிவராட்டுத்தாத்தா நாங்கள்கூப்பிட்டால் வரமாட்டான் நீர்தானே கூப்பிட்டனுப்பியும்.

(கால-ர்-வ-ம்.) அடியேசந்தி,

(சங்-வ-ம்.) சுவாமீ.

(கால-ர்-வ-ம்.) அசலாத்துக்கிச்சாங்களெல்லாம் இதோவந்துவிட்டாங்களில்லையோஉன்மகனைக்காட்டுக்கனுப்பத்தடையென்ன?



(சங்-வ-ம்.) சுவாமி இதோ அனுப்புகிறேன்.

(கால-ர்-வ-ம்.)என்னமோஅனுப்புகிறேன் அனுப்புகிறேனென்று சொல்லிக்கொண்டிருந்தா லெப்போ அனுப்புகிறது.

(சங்-வ-ம்.) சுவாமி அனுப்புகிறதற்கு யாதொருதடையுமில்லை அடியாள்கொஞ்சந்தூரஞ்சென்று வழியனுப்பிவருகிறேன்.

(கால-ர்-வ-ம்.) நல்லதடிசந்தி சீக்கிரமனுப்பிவருவாய்.

(சங்-வ-ம்.) நல்லது சுவாமீ.

---

### சந்திரவதி விருத்தம்.

மாதவத்ததித்தவெந்தன் மைந்தனேபகரக்கேளாய்
வேதியர்மனையைவிட்டு வெளிப்படும்போதிலேயா
காதகோர்சகுனமெல்லாங் காணவுமானேன்காவான்
மீதடர்வனத்துக்கெந்த விதமுனையனுப்புவேனே.

---

## சந்திரவதிசொல் தரு.

இராகம் - பைரவி - தாளம் - சாப்பு.

பல்லவி.

அப்பாவென்மகனே அபசகுனம்நேருதடா

அநுபல்லவி.

செப்பொன்னுத்தவத்
சிறுயர்கண்மணியே
எப்படிக்கானகம்
என்செய்வேன்
தாலேயித்திட்ட
நீயும்
சென்றுவருவாயோ
விண்மணியே (அ)

சரணங்கள்.

இல்லம்விட்டுவெளி
யிடமேபாயுதடா
நல்லதல்லத்தன்ப
ஞேர்கள்
பேறுகையிற்காக
இது
நல்கிடுமென்றுமுன்
நவில்வாரடா(அ)

பக்கத்திலொத்தைக்
பாங்காகக்கேட்குதடா
வக்கிரமாயோடி
வாராளொதிரி
குாலதுமோங்கியே
அதோ
வொற்றைப்பிராமணன்
லடா (அப்).

வண்ணக்கூடையெண்ணெய் கொண்டொருவாணியன்
வாரானெதிரிலடா அதோ
எண்ணெய்த்தலையாள் தைம்பெண்ணொருத்திநம்மை
யெட்டிப்பார்க்கின்று ளடா (அப்)

பூனையதோயிட மாகவேகுருக்கே
போகுதுபாராயடா இதோ
லானபயன்றீதேயா மெனமேலோ
ரறைகுவாரென்று மடா (அப்)

விறகுகொண்டொரு பறையனெதிரில்
விரைந்துவாரானடா அந்தக்
கறைமிடற்றண்ணல் சோதனையோவிது
கருத்தில் தோணுதடா (அப்)

(சங்-வ-ம்.) கண்மணீ உன்னைக்கானகத்துக் கனுப்புஞ் சமயம் துற்சகுனங்களேற்படுகிறதே என்செய்வேன்.

(தேவ-வ-ம்.) அம்மணீ யாதொரு மனிதர்கள் அவரவர் காரியத்திற்கும் விலங்கு பறவைகள் அது அது இரைதேடுவதற்கும் நடைக்காகச் செல்லாமலிருக்குமா நீ வெனதைப்பற்றிக் கவலையடைகின்றனை.

## சந்திரவதி பாலகனுக்குப் புத்திசொல்லுந் தரு

கண்ணேயென் கண்மணியேயென்ற மெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-அடதாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அப்பாவாடாவென் மகனே-உயர்
ஆரமுதேசிறு பாலகனே
செப்புமொழி யதனை-உந்தன்
சிந்தையிற்றேருவா யிங்கிதனே

வல்லவினையால் நாமே-இந்த
மாதவரில்லம்புகுந் தோமே
எல்லையில்லாத தொல்லை-யாம்
இங்கடைகின்றோ மீதார்க்குமில்லை



ஆகையாலென் பாலா-நீ
ஆரண்யஞ்சென்றுற் குணசீலர்
வாருடன்தெற்பை கொய்து-இங்கு
வரும்வரைபாலரைப் பிரியாதே

துள்ளித்திரிபுள்ளி மானைக்-கண்டால்
தொடர்ந்துபிடிக்கவே யெண்ணாதே
பள்ளஞ்சுனைதனைக் கண்டால்-ஆழம்
பார்த்திடலாமென்று நண்ணாதே

சிங்கம்புலியானை தனைக்-கண்டால்
சீறியேவெல்லப்பக்கஞ் சேராதே
எங்கும்புதரி ருக்கும்-அதில்
ஏறிவிளையாடச் சாராதே

காஞ்சிரங்காய தனைத்-தேசிக்
காயெனப்பறித்துமே தின்னாதே
வாஞ்சையுருந் தோழருனை-மெத்த
வைதாலுநீயதை யுன்னாதே

சீக்கிரந்தெற்பை முதற்-சாமான்
சேகரித்தோடி வருவாயே

(சங்-வ-ம்.) கண்மணி தற்சமயம் யான்கண்ட துற்சகுனங்களால் உன்னை ஆரண்யத்துக்கனுப்ப என் மனமானது பதைக்கின்றது ஆகையால் நீவனத்துக்குச் சென்று வரும்வரையிலும் தோழமார்களைப் பிரியாமலும் சிங்கம், புலி, மான் இவைகளைக் கண்டால்பின்பற்றிப் பிடிக்கச்செல்லாமலும் பாம்புகள் வசிக்கக்கூடிய தெற்பைப்புதரின்மீது ஏறிவிளையாடாமலும் பள்ளம் சுனை இவைகளைப்பார்த்தால் ஆழம் பார்ப்போ மென்றெண்ணி யதிலிறங்காமலும் காஞ்சிரங்காயைத் தேசிக்காயெனப் பறித்துத்தின்னாமலும் தோழமார் கொடுங்கோபமாகவைதாலு மதையெண்ணாமலும், அதிசாக்கிரதையாகத் தெற்பைமுதலிய சாமான்கள் சேகரித்துச்சீக்கிரம் வந்துசேர்வாய் நீவரும்வரையில் வழிமேல் விழியை வைத்துப் பார்த்துக்கொண்டே யிருப்பேன்.

(தேவ-வ-ம்.) நல்லதம்மணீ.

## தேவதாசன்சொல் தரு.

கருணைக்கரா கருணாநிதேயென்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-ஆதி.

பல்லவி.

அம்மணிவிடையருள்வாய் மகிழ்வாய்
ஆரணியஞ்சென்று தோழருடன்வாரேன். (அ)

அநுபல்லவி.

அம்மையேபார்பங்க னடியவர்தங்கள்
தம்மலரடிதனையே நீபோற்றி. (அ)

சரணங்கள்.

ஆகாச்சகுன மதைக்கண்டித்தினம்
ஆகம்கோகாது அன்பாயிப்போது. (அ)

வாகுடனேகொய்தில் வளர்தெற்பைகொய்து
வேகமாய்த்தோழர் சேகரமாய்வாரேன். (அ)

(தேவ-வ-ம்.) அம்மணி ஏதோ துற்சகுனங்கள் கண்டோமென்ற வருத்தத்தைவிட்டுச்சந்தோஷமாகச்சாக்ஷாத்சிவபெருமானைத் தியானித்து வனத்துக்குச் சென்றுவர விடைதருவாய்.

(சந்-வ-ம்.) கண்மணி மங்களமாகச் சென்றுவருவாய்.

(சந்-வ-ம்.) கேளும் அந்தணர்மைந்தர்காள் எனதருந்தவமைந்தனை நீங்கள்கெதியெனவே யுங்கள்பின் ஆரண்யத்துக் கனுப்புகிறேன் ஆகையா லிவனைப் பாதுகாத் தழைத்துச்சென்று தெற்பைமுதலிய சாமான்கள் சேகரித்துமீண்டும் என்னிடம் ஒப்புவிக்கக் கோருகிறேன்.

தோழர்கள் வசனம்.

(தேவ-வ-ம்.) நல்லதம்மா.

(சந்-வ-ம்.) பாலகா சென்று வருகின்றையா.

(தேவ-வ-ம்.) அம்மணி சென்றுவருகின்றேன்.

## தேவதாசன் விருத்தம்.

அந்தணர்மக்காள்கேளும் அன்னைதன்வருதிபோல
எந்தனைப்பாதுகாப்பதே யுங்கள்கடமையாமால்
கந்தனைப்பயின்றமுக்கட் கடவுளைத்தியானஞ்செய்தே
இந்தநற்க்ஷணமேகான மேகுவோமேகுவோமே.



## தேவதாசன் சொல்தரு.

கானகத்திரானலைந்ததென்றமெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஆரணியந்தெல்வோம்வாரீ ரண்ணமாரேதோழர்களே

அநுபல்லவி.

தாரணியெலாம்புகழுஞ் சதுர்மறையவருக்கே
தீரமுடன்தெற்பைகொய்து சீக்கிரம்வருவதற்கே. (ஆ)

சரணங்கள்.

கங்கைமதிசென்னிருடுங் …ாசிநாதன்துதிபாடி
செங்கதிரோனெழுமுன்னே சேர்ந்துநாமெல்லோருங்கூடி (ஆ)

ஐயோவெனக்குப்பசி யதிகமாகையினாலே
ஐயமீர்நீங்களென்னை ஆதரிப்பீரிக்காலே (ஆ)

(தேவ-வ-ம்.) தோழமார்களே சாக்ஷாத் சிவபெருமானுடைய ஸ்தோத்திர கீர்த்தனம் பாடிக்கொண்டு நாழிகையாகுமுன்னே ஆரண்யம் செல்வோம் வாருங்கள்.

(தோழ-வ-ம்.) நல்லதடாகிச்சான் நடந்து வா.

(தேவ-வ-ம்.) இதோ நடந்து வருகின்றேன்.

(தோழ-வ-ம்.) ஏண்டாகிச்சான் நீராஜபுத்திரன் போலிருக்கின்றாயே நீயெந்தவூர் உனதுபிதா பெயரென்ன? உன்தாயார் பெயரென்ன? நீயும் உனதுதாயும் காலகண்ட தாத்தாவுக்கு அடிமையானகாரணம் என்ன?யிதெல்லாம் வகை விபரமாகச்சொல் பார்ப்போம்.

(தேவ-வ-ம்.) தோழமார்களே சொல்லுகிறேன் கவனித்துக் கேளுங்கள்.

(தோழ-வ-ம்.) நல்லதடா கிச்சான்.

## தேவதாசன்

### தோழர்களிடந் தன் வாலாறுகூறுந் தரு

ஐயோயினியென்செய்வேன் முனிநாதா என்றமெட்டு.

இராகம்-தனுசரி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அந்தணர் மைந்தரே அண்ணமாரே-எனக்
கன்புள்ளதோழரே அண்ணமாரே

எங்கள் தலைவிதியை அண்ணமாரே-ஐயோ
என்னவென்றுசொல்வேன் அண்ணமாரே

தந்தைபேரரிச்சந்திரர் அண்ணமாரே-பெற்ற
தாய்பேர்சந்திரமதி அண்ணமாரே

கோசலைநாடாண்டோம் அண்ணமாரே-அந்நாள்
கோசிகமுனிவந்தார் அண்ணமாரே

வேள்விக்காய்ப்பொன்கேட்டா ரண்ணமாரே-பதில்
விளம்பாமற்கொடுத்திட்டா ரண்ணமாரே

வாங்கிவைத்துமேபோனா ரண்ணமாரே-பின்னர்
வந்தார் கோபமதாக அண்ணமாரே

கொடியநீசப்பெண்களை அண்ணமாரே-அன்னோர்
கொற்றவனேசேரென்று ரண்ணமாரே

மறுத்துமேயெந்தன்பிதா அண்ணமாரே-உயர்
மாநிலமெல்லாமீய்ந்தா ரண்ணமாரே

பெற்றமுன்வைத்தபொன்னை அண்ணமாரே-அவர்
பிழைபடவேகேட்டா ரண்ணமாரே

காசிதேசத்தில்வந்து அண்ணமாரே-எம்மைக்
காலைகண்டற்கேவிற்று அண்ணமாரே

மாமுனிகடன்தீர்த்தார் அண்ணமாரே-மந்தி
மந்திரியுடன்சென்றார் அண்ணமாரே

எங்குசென்றார்களோ அண்ணமாரே-வே
தியர்பால்யாங்களடைந்தோம் அண்ணமாரே

கஷ்டம்ரெம்பவேசெய்து அண்ணமாரே-பெருங்
காட்டுக்குங்கள்பின்னாலே அண்ணமாரே



அன்னமிடாமலே அண்ணமாரே-என்னை
அனுப்பிவைத்தாரின்று அண்ணமாரே

தந்தைதாயெந்தனக்கு அண்ணமாரே நீங்கள்
தானென்றெண்ணியேவந்தேன் அண்ணமாரே

(தேவ-வ-ம்.) தோழர்களேயான் சொல்லியவை யாவற்றும் ன்றாகக் கவனித்தீர்களா?

(தேவ-வ-ம்.) ஆமடாகிச்சான் நீபிறந்தபின்னால் தான் உங்க ள்மாதா பிதாவுக்கு மிகவுஞ்சுகம் போயிருக்கிறது.

(தேவ-வ-ம்.) அண்ணமார்களே யென்செய்வேன் இக்கொடி யசண்டாளனாகிய யான் பிறந்தபின்னர் தான் எனதுமாதாபிதா இக்கதியடைந்தது.

(தோழ-வ-ம்.) நல்லதடா கிச்சான் நடந்துவா.

## தேவதாசன்சொல் தரு.

நடக்ககால் நோகுதையோ வென்றமெட்டு.

இராகம்-காதநாமகிரியை--[illegible]-ஆதி.

பல்லவி.

ஐயையோயெவ்விதநானே அடவியில் நடப்பேனே (ஐ)

அநுபல்லவி.

செய்யபாதம்நோகுதே தேகமாகம்வாடுதே (ஐ)

சரணங்கள்.

கங்கையணிபரமேசா காசிநகர்விசுவேச..
வெங்கனல்போலேவயிறு மிகப்பசிக்குதேயீசா (ஐ)

கற்கள்வெகுவாய்க்குத்துதே கள்ளிகளின்முள்ளுதைக்குதே
தற்பரனேவுமைபாகா தனையன்றனையேநீகா (ஐ)

அண்ணமாரேதோழர்களே அந்தணர்தன்மைந்தர்களே
புண்ணியரேசற்றிருந்து போவோமப்பாலெழுந்து (ஐ)

(தேவ-வ-ம். தோழர்களே யானென்செய்வேன் இந்தக்கொ டியகானகத்தில் எனது பாதங்களிற் கள்ளிகளின் முள்ளைதைப்பதி

றும் கூர்மையா புள்ளகல்லுகள் குத்துவதினாலும் நடக்கக்கூடவில்லை அன்றியும் பசியோமிகவும் அதிகமாகிக் களைப்பாய் வருகிறது ஆகையால் கொஞ்சநேரம் அதோதோன்றுகிற விருக்ஷத்தின் கீழவிருந்து அப்பாற்செல்லுவோம்.

(தோழ-வ-ம்.) அடேகிச்சான் இன்னுங்கொஞ்சந் தூரந்தானிருக்கிறது நாம் நாடிவந்த வனம் சீக்கிரம் போவோம் வா.

(தேவ-வ-ம்.) நல்லது தோழர்களே.

(தேவ-வ-ம்.) தோழர்களே இதுதானோ நாம் நாடிவந்தவனம்.

(தோழ-வ-ம்.) ஆமடா கிச்சான் இதுதான் நாம் நாடி வந்தவனம் எங்களுக்கு வேண்டிய சாமான்கள் இவ்வனத்திலிடமாகச் சேகரிக்கிறோம்நீயு முனக்கு வேண்டிய சாமான்கள் சேகரிப்பாய்.

(தேவ-வ-ம்.) நல்லது தோழமார்களே.

## தேவதாசன்சொல் தரு.

காசிநாதா விநாயன்னருளோவென்றமெட்டு.

இராகம் ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

சம்போஹரா கயிலைவாசா
சங்காரவேணியில் திங்களணிந்தவா
கங்காதராமலை மங்கையோர்பாகா (சம்

வினையோமற்றெவர்செய் சோதனையோ
வேதியர்க்காகவே நீதருதமுன்னை
ஆதரவாய்வெகு காதலாய்ப்பறித்தேன் (சம்

காரைமுசட்டைபறிக் கின்றேன்
கந்தமலர்கனிறை யிந்தவனந்தனில்
சிந்தைமிகவும்வாடி வந்தவிதியையெண்ணி (சம்

வயிறுபசியால்வாடிச் சிவமே
மாசிலாப்பிரண்டையுந் தேகயருஞ்சமித்தும்
ஆசதாயொடித்துமே யீசாவொன்றாகச்சேர்த்தேன் (சம்

(தேவ-வ-ம்.) ஆ! காசிநாதா உனதுகிருபையால் வேதியர்க்காக தாரை, பிரண்டை, முன்னை, முசட்டை, சமித்து. இவைச்



களைச் சேகரித்து அடர்ந்த இந்த ஆலவிருக்ஷத்தின்கீழ்வந்து சேர்ந்தேன் தெற்பை யெங்கிருக்குதோ அறிகிலேன் என் செய்வேன்.

(தோழ-வ-ம்.) அடே கிச்சான் யெங்களுக்கு முன்னையே இவ்வாலவிருக்ஷகீழுக்குவந்தாட்டையே யெல்லாச்சாமானுஞ்சேகரஞ் செய்தனையா?

(தேவ-வ-ம்.) தோழர்களே தெற்பைதவிர மற்றச் சாமானெல்லாஞ் சேகரித்துவிட்டேன்.

(தோ-வ-ம்.) அடேகிச்சான் போதாயிட்டதாகையால் நாங்கள்சேகரித்திருக்கிற தெற்பைப் புல்லில் ஆளுக்குக்கொஞ்சந் தருகிறோம் வாங்கிக்கொண்டுகூடவா.

(தேவ-வ-ம்.) தோழர்களே அதுசத்தியபங்கம் ஆகையால் யான்சென்று தெற்பைகொய்து வருகிறேன் வருகிகொடுங்கள்.

## தேவதாசன்சொல் தரு.

உனையே நம்பினேனென்ற மெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆலமரந்தின்கீ ழன்புடனிருப்பீர்

அநுபல்லவி.

சிலவந்தணர்தஞ் செல்வர்களேநீங்கள். (ஆ)

சரணங்கள்.

தெற்பையின்புதர் தெரிகிறதனோ
அற்புதமாய்க்கொய்து அன்பாய்வாரேனிதோ. (ஆ)
வாய்மைக்கேபங்கம் வருமாகையாலே
நேயர்களேயொரு நிமிஷமிக்காலே. (ஆ)

(தேவ-வ-ம்.) தோழர்களே இந்த ஆலவிருக்ஷத்தின் நிழலில் சற்றுநேரமிருங்கள் சீக்கிரத்தில் தெற்பைகொய்துவருகிறேன் அப்பாலெல்லோரும் நகரத்துக்குச்செல்வோம்.

(தோ-வ-ம்.) நல்லதடாகிச்சான் சீக்கிரத்தில் தெற்பை கொய்துவரவேண்டும் இல்லையேல் நாங்கள் சென்றுவிடுவோம்.

(தேவ-வ-ம்.) தோழர்களே இதோசீக்கிரத்தில் வருகிறேன்.

## தேவதாசன் விருத்தம்.

சுந்தரியுமையாள்பாகா சோமனைத்தரித்தநாதா
சிந்துரத்தனையுரித்த தேவரற்றேவாவோங்கும்
சுத்தமார்காவும்வேங்கை காடியுமிகவேயுள்ள
விந்தமாவனத்திற்றெர்ப்பை யெங்குநான்தேடிக்கொய்வேன்.

## தேவதாசன்சொல் தரு.

மனைவியை விலைசெய்குறேனேயென்ற மெட்டு.

இராகம்-நாதநாமகிரியை-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

இந்தக்கானகந்தனில் தானே-தெற்பை
யெவ்விடந்தேடிக்கொய் வேனே
யேங்குறேனே ஒங்கினானே
பாங்கி-லிருக்குதென் றெண்ணினேனே (இந்)

வேங்கைமத்தகக்கரி சிங்கம்-வித
ரீதமாயோசையிட் டெங்கும்
மிகவேதங்கும் வகையாலெங்கந்
தகை-யற்றுப் பதறுதையோ (இந்)

காசினியாவையுந் துறந்து-கால
கண்டய்யர்க்கடிமை புகுந்து
கனமிழந்து வனம்வந்து
இனம்-பிரிந்தமான் போல்வாடுறேன் (இந்)

சந்த்ரசேகராகாசி வாசா-அந்தத்
தையல்பாகாவிசு வேசா
தவர்நேசா பவநாசா
கவலை-யைத்தீர்த்தாள் வாயீசா (இந்)

(தே-வ-ம்.) ஆ! கருணாகரா காசிவாசா சிங்கம், புலி, காடி, யானை, இத்யாதி மிருகங்கள்வாழும் இந்தக்கொடிய வனாரண்யத்தின் கண் தெற்பைப்புல்லை யெங்கேதேடிக் கொய்வேன்.



## தேவதாசன்சொல் தரு.

இதற்கோபியுமெனையென்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

என்னசெய்குவேனையோ இந்தவனத்திற்றெற்பை
எங்கெங்குந்தேடியேவாடி வெந்தன்மனம்மிகவாடி
ஏங்குறேன் ஏங்குறேன் ஏங்குறேன் ஏங்குறேன் (எ)

கால்கள்ரெண்டும்நோகிறதே கடும்பசியாகிறதே
சூரியோன்மேற்குநந்தானே கவலைமிகக்கொண்டேனே
காலமோ காலமோ காலமோ காலமோ (எ)

சிங்கம்புலியாரவாரம் செவியிற்படவென்றிரம்
சிதைந்திங்கொடுங்கிறதே தேகமெலாநடுங்கிறதே
தெய்வமே தெய்வமே தெய்வமே தெய்வமே (எ)

வேதமுணர்மறையோரே விரைவினில்வாவென்றாரே
வெகுநேரமானதென்று வெகுண்டாற்பதிலென்னென்று
விள்ளுவேன் விள்ளுவேன் விள்ளுவேன் விள்ளுவேன் (எ)

ஆலவிருக்ஷத்தின்கீழ் அந்தணர்தன்னைநீர்கண்டு
அன்பாயிருக்கச்சொன்னேனே அகன்றாரோவில்லையோதானே
அறிகிலன் அறிகிலன் அறிகிலன் அறிகிலன் (எ)

(தேவ-வ-ம்.) ஆ! விஸ்வேசா இந்தவனத்திடமாக எவ்விடத்திலும் தெற்பைப்புல்லையான் தேடியுங்காணப்படவில்லை பசியோ மிகவும் உண்டாகிறது கால்களிரண்டுமோ நோகிறது சிங்கம் புலி யானை இவைகளின் சத்தங்களைக்கேட்கக் கேட்கவெனது மனமோ வாடுகின்றது சூரியனோ மேற்குதிக்கில் போகிறது அன்றியும் ஆலமரத்தின்கீழ் யிவ்வேதியர் மைந்தரை யிருக்கும்படி சொல்லிவந்தேன் அன்னவர்களிருக்கிறார்களோ அல்லது சென்று விட்டார்களோ தெரியவில்லை மற்றும் அடிமைகொண்டவந்தணரோ விரைவில் வரும்படி கூறினர் என்செய்வேன் இதுவுமுன்னருளோ.

(தேவ-வ-ம்.) சாக்ஷாத் கருணைக்கடலாகிய காசிநாதன் கிருபையால் அதோ தெற்பைப்புதரைக் கண்டு கொண்டேன் இதோ கொய்யச்செல்கிறேன்.

# தேவதாசன்
# தெற்பைகொய்யும் பாகம்.

## தேவதாசன்சொல் தரு.

எல்லாமுனி குதோவென்ற வர்ணமெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

கங்கைமதிசென்னியணி காசிவிசுவேசா
மங்கையிடப்பாகமதில் வைத்தபரமேசா

மன்னன்மகனுய்ப்பிறந்து மறையவர்க்குத்தானே
தன்னயமாய்த்தெற்பைகொய்ய நாடுரேனெங்கோனே

ஐயோபுதரதனைப்பார்க்க வாதிசிவபரனே
செய்யமேனிநடுங்கியுளந் தியங்குறதேயரனே

மைந்தனென்றே யென்னையந்த மாதவருந்தெரிந்தே
இந்தக்கொடுங் கானத்துக் கேவினார்விரைந்தே

(தேவ-வ-ம்.) கருணாகரா என்னை அடிமைகொண்ட வந்தணர்பாலகனென்று தெரிந்தும் இந்தக்கொடுங் கானகத்துக்குத் தெற்பைகொய்ய வனுப்பினர் இந்தத்தெற்பைப் புதரைப்பார்க்குங்கால் என்மனமோ மிகவும்வருந்துகிறது என்செய்வேன் உனதுபாதமேகெதி யெனத்தெற்பை கொய்யப்போகின்றேன் காத்தருளவேண்டும்.

விருத்தம்.

கன்னலுஞ்செந்நெலோங்குங் கழனிசூழ்காசிவாசா
அன்னையாமுமையாள்பாகா அத்தியையுரித்தநாதா
நன்னயப்புதரிற்றெற்பை நான்கொய்யக்கிட்டும்போதாங்
கென்னமோவிருந்துசிறு தென்செய்வனென்செய்வேனே.



## தேவதாசன் சொல் தரு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னசெய்வேன் — யேதுசெய்வேன்-பிசாவின்வேசா
என்னசெய்வேன் — இதற்கேதுசெய்வேன் (எ)

பையரவம்போற்புரிற் — பாங்காய்க்கீறுதே
பதறுதே-மனந் — கெதறுதே-ஐயோ (எ)

மாதம்பத்தும் தாங்கிபெற்ற — மாதாவே-யம்மா
மயங்குறேனே-இங்கே — தியங்குறேனே-ஐயோ (எ)

செங்கரத்திற்பொங்கரவந் — சினமுடன்தானே
தீண்டினதே-வினை — மீண்டினதோ-சிவமே (எ)

(தேவ-வ-ம்.) ஆ! காசிநாதா.

### விருத்தம்.

கங்கையோடருகுதும்பை கதிர்மதிசடையிற்சூடும்
மங்கையோர்பாகா மாதுலனருயர்காசிவாசா
பொங்கமாயந்தணர்க்குப் பூந்தெற்பைகொய்யும்போது
இங்கெனையாவந்தீண்ட வென்பவமுன்செய்தேனோ

## தேவதாசன் சொல் தரு.

சம்போஹா கெங்காதரவென்றமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கையிற்பையரவந்தீண்டக் — காலகதியோ
தையலுமைபங்காமுனி — தான்செய்தசதியோ (கை)

சந்த்ர சடாதர சங்கரா — சம்போபொற்பதா
கந்தனைப்பயின்றதோர்முக் — கண்ணுவற்புதா (கை)

சென்னிமிசைவிஷமேறுதென் — செய்வேனீசனே
என்னையாள்வதுனதுகட — னிமயவாசனே (கை

கால்கையெல்லாஞ்சோருதேபற் — கட்டுதேநாதா
மாலயன்தேடியுங்காணு — மாட்சிசேர்நீதா (கை)



செய்யவாயினுரைதள்ளுதே — ஜெகம்புகழ்போதா
ஐயோநெஞ்சிற்கோழைவந் — தடைக்குதேசதா (கை)

அன்னைபிதாமுன்னுள்நித — மன்புடன்தானே
உன்னைவேண்டிப்பெற்றதிதற் — கோகைலாசனே (கை)

நாட்டையாளப்பிறந்தநானின் — ஞானிற்றய்யா
காட்டில்வந்திறக்கவுந்தன் — கபடமோமெய்யா (கை

வழிமேல்விழிவைத்திருப்பாள் — மாதாவிஸ்வேசா
அழிவேனேயிதனைக்கேட்டா — லன்பர்கள்நேசா (கை)

(தேவ-வ-ம்.) ஆ! காசிநாதாகருணாகரா உன்பாதாரவிந்தமே கெதியென இவ்வனத்துக்குவந்து அந்தணர்க்காகத் தெற்பைகொய்த அடியேன் கரத்தில் அரவந்தீண்டக் காலகதியோ? அல்லது முனிவன் சூதோ? அல்லது உனது திருவருள்தானோ? அறிகிலன்கால் கைகளெல்லாஞ்சோருகிறது விஷமோதலைக்கேறுகிறது பற்களோ கட்டுகிறது, வாயினிடமாக நுரைதள்ளுகிறது, நெஞ்சிலோ கோழைவந்தடைக்கிறது அந்தணரோ விரைவில் வரும்படி கூறினர் யெனது மாதாவோ நான் வரும்வழியில் விழிவைத்துயெப்போது வருவேனென்று யெதிர்பார்த்துக் கொண்டிருப்பாள் தோழர்கள் ஆலமரத்தி லிருக்கின்றார்களோ? சென்று விட்டார்களோ? யென்ன செய்வேன் யெனைக் காத்தருள வேண்டியதுனது கடமையே.

(சுப்பு-வ-ம்.) அடே சேஷு ராமு வெங்கு நம்மிடம் விடைபெற்றுக்கொண்டு தெற்பை கொய்வதற்குச் சென்ற சிச்சான் பயல் யிவ்வளவு நாழிகை ஆகியும் வராத காரணமென்னவோ தெரியவில்லை அன்னவனைத் தேடிப்பார்த்து அழைத்துக்கொண்டு சீக்கிரம் அகத்துக்கு போகலாம் வாருங்கள்.

(சேஷு-வ-ம்.) நல்லதடா சுப்பு

தோழர்கள் தேவதாசனைக்கண்டு சொல்லும்வசனம்.

ஏண்டா சிச்சான் காலகண்ட தாத்தாவுக்கு தெற்பைகொய்வதற்கு யெங்களிடம் விடைபெற்றுக்கொண்டுவந்த நீதற்சமயம் கண்ணீர்விட்டு அழுது இவ்விடத்தில் மயக்கமாகப் படுத்துக்கொண்டிருக்கின்றனையே யென்னகாரணம்?

(தேவ-வ-ம்.) தோழர்களே சொல்லுகிறேன் கேளுங்கள்.

## தேவதாசன்சொல் தரு.

என்னசொல்வேன் தோழர்களேயென்றமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோவெந்தன் காமித்து
அன்பாய்த்தெற்பை கொய்யும்போது
ஆடரவமேசீறித் தான் தான். தான்.

மெத்தவேசின மாய்த்தீண்டி.
விட்டபின்றாற் சிவனைவேண்டி.
வீழ்ந்தேனைந்தப்பூமி மேல் மேல் மேல்.

இரத்தமோ பெருகிறதே
யேழையாவி குருகிறதே
என்னசெய்வேன்பாவி நான் நான் நான்.

விடந்தலைக்கே யேறுறதே
மிகவுங்களைப் பாருறதே
வேதனைபொருக்கேனே ஆ ஆ ஆ.

---

(தேவ-வ-ம்,) தோழர்களே அடியேன் தங்களிடத்தில் விடைபெற்றபின்னர்சமீபத்தில் தெற்பைப்புதரைப்போல் ஓர் செடிதோன்றினது அதைப்போய்ப் பார்த்துத்திகைத்துப் பகவானைத்துதிசெய்து இவ்வனமெல்லாந் தெற்பைக்காகவலைந்து - அப்பாவிதோதெரிகிற புதரைக்கண்டு சந்தோஷங்கொண்டு தெற்பைகொய்கையில்ஓர் பெரியநாகமதிலிருந்து மிகவுங்கோபங்கொண்டு சீறியெனதுகரத்தில் தீண்டினது தீண்டவே விடமானது தலைக்கேறி பூமியில் வீழ்ந்துவிட்டேனிதோபாருங்கள் காதினிடமாக இரத்தம்வருகிறது யென்செய்வேன் ஆவி நீங்கிவிடும்போலிருக்கிறது.

(தோ-வ-ம்.) அப்பா தேவதாசா தற்சமயம் நீபடும் பரிதாபத்தைப் பார்க்கப்பார்க்க யெங்கள்மனமோ வருந்துகிறது உனதன்னையோ யெங்களிடத்தில் உன்னை அடைக்கலமாகப் பாதுகாத்து வரும்படியாகக் கூறினாள்யிதற்கென் செய்வோம்.

(தே-வ-ம்.) தோழமார்களே வினைவசத்தால் யெனதுகரத்திலரவந்தீண்டலாயின நீங்களேன் வருந்துகின்றீர்கள்.



(தேவ-வ-ம்.) அண்ணமார்களே நெஞ்சிலோ கோழைவந்தடைக்குகிறது பேசுவதற்கோ செயலில்லை நான் இறந்து விடுவேன்போலிருக்கிறது நீங்கள் ஏன் இருக்குகின்றீர்கள் நகரத்திற்குச் செல்லுங்கள்.

(தோ-வ-ம்.) அப்பா தேவதாசா உனக்காயிந்த விதிவரவேனும் நாங்கள் யெந்தவிதமாகவுன்னை யிவ்விடத்தில் தனியாக விட்டுப்போவோம் உனதன்னைக்குச் சொல்லவேண்டிய சங்கதிகளிருந்தாற் சொல்வாய்.

---

## தேவதாசன்சொல் தரு.

அனுதினாந்தேவேயென்றவர்ணமெட்டு.

இராகம்-யமுனைகல்யாணி-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்னசொல்லுவேனே யித்தியானே
என்தோழமார்களே யேங்குறேன்தானே. (எ)

மாயமாய்க்காட்டினுன் மகனுமேஐயோ
மாயலானனென்று வழுத்துவீரய்யா (எ)

இந்தக்கானகத்துக்கே யெந்தனைத்தேடி
வந்திடாதுசெய்வீர் வந்தனங்கோடி (எ)

மறுஜெனனமவள்தன் வயிற்றினில்வந்து
உறுதியாய்ப்பிறப்பேனென் றுரைப்பிருகந்து (எ)

---

(தேவ-வ-ம்.) அண்ணமார்களே நான் என்னச்சொல்லப்போகின்றேன் தாங்கள்சென்று எனது மாதாவிடத்தில் உனது மகன் ஆரண்யத்தில் அந்தணர்க்காக தெற்பை கொய்யும்போது கரத்தில் அரவந்தீண்டி மாயமா யிறந்துவிட்டான் மறுஜென்மத்தில் உறுதியாகவந்து உனது வயிற்றிற் பிறக்கிறதாகவும் தன்னைத்தேடி கானகத்திற்கு வாராதிருக்கும்படியாகவும் சொன்னானென்று சொல்லுங்கள்.

(தோழ-வ-ம்.) நல்லதப்பா.

தேவதாசன் விருத்தம்.

திங்களணிபிசனுமை யுடனேவாழ்கச்
செங்கண்மால்செந்திருவைச் சேர்ந்துவாழ்கப்
பங்கயன்பாரதியுடனே கூடிவாழ்கப்
பண்புபெருங்குருவசிட்டர் கற்பின்மிக்க
மங்கையருந்ததியுடனே குலவிவாழ்க
வாட்டடக்கையெனதுபிதா சத்யம்வாழ்கத்
தங்கமாய்மாதாவின் கற்புவாழ்கச்
சோதியேபதவி சுகமாய்த்தந்தாளே.

(தோழர்-வ-ம்.) என்டா சேசு தேவதாசன் ஏதோ புலம்புகிறுண்டா கிட்டப்போய்க் கேளடா.

(சேசு-வ-ம்.) அப்பாதேவதாசா,

(சேசு-வ-ம்.) அடே சுப்பு ராமு என்னடா தேவதாசன் ஒன்றும் பேசுகிறுனில்லே இறந்துபோனுன் போலிருக்கிறது.

(சுப்பு-வ-ம்.) ஆமடா இறந்துதாண்டா போனுன் இதற்கென் செய்கிறதடா.

(சேசு-வ-ம்.) நாய் நரி கழுகு காகம் தின்னாதிருக்கும்படியாக இலைகுழைகளால் இவனைமறைத்துவிட்டு நாம் சேகரித்த சாமான்களையெல்லாம் ஆலமரத்தடியிற் போயெடுத்துக்கொண்டு பொழுது போவதற்கு முன்வனத்தைக் கடந்து நகரத்துக்குச் செல்வோம் வாங்கடா இவனைப்பார்க்கப் பார்க்க மிகவும் கிலேசமாயிருக்கிறது.

(சுப்பு-வ-ம்.) அதுதாண்டா சரி.



# சந்திரவதி கானகஞ்சென்றபாலகன் வாராததுபற்றி வருந்தும்பாகம்.

சந்திரவதிவிருத்தம்.

பூரணச்சந் திரவதனப் பொற்கொடியா
ரிடப்பாகசபுணரி சூழுந்
தாரணியோர் புகழ்காசிஸ் தலவாசா
வெவராலுஞ்சாற்றெரு ணுத
வாரணந்தோ ரந்தணர்க்கா யடகுமுதற்
சாமான்க ளன்பாய்ச் சேர்க்க
வாரணியஞ் சென்றமக னைடவுடனின்
னின்னும்வரக் காணேனேயோ.

## சந்திரவதிசொல் தரு.

பாலாவென்ன காலம்வந்ததோடா வென்றவர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆரணியஞ்சென்றமகன் வரக்காணேன்-வரக்காணேன்
அந்தணர்க்காகவே விந்தைபாகத்தெற்பை
சிந்தையுடன்கொய்யத் தந்திபுலிதங்கும் (ஆ).

பசியாற்களைப்பாகி மிகவயர்ந்தானே அயர்ந்தானே
பாதைதெரியாமற் பேதகமாய்மன
வாதையுற்றுனேமற் றேதோநேரஞ்சென்றும் (ஆ)

பையப்பையபாதிவழியில்வாரானே வாரானே
பாங்கானதோழரை நீங்கித்தனியாக
வேங்குநின்றானேநற் கோங்குமரங்கள்சூழ் (ஆ)

மாதவர்தம்மைமந்தர்கள்முந்தி வந்தாரோ-வந்தாரோ
வாராதவனுடன் சேரவேவாராரோ
காரியுமைபாகா தீரமுடனின்று (ஆ)

ஆசாரக்குணங்கள்கண்டுஞ்செல்லென்றேனே-செல்லென்றேனே
அங்கையில்மான்மழு துங்கமாயேந்திடுந்
சங்காரமாதேவா திங்களஞ்சடையா (ஆ)

## சந்திரவதி சொல் தரு.

அன்னகர் புரியென்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ரூபகம்.

பல்லவி

கானகஞ்சென்றவென் கண்மணிரின்னும்வரக்
காணேனேயென்செய்குவேன் பரமசிவமே

அநுபல்லவி.

மான்மழுக்கரநீதா மாதவத்துயர்போதா
மங்கைபாகாவரதா மலர்வேதா
தான்தொழுந்தவிர்ப்பாதா தாண்டவாசதாசிவா
சம்போசிவசங்கரா ஜகநாதா (கா)

சரணம்.

துங்கமிருவிடையா கங்கைதிங்கள்சடையா
சுந்தரஞ்சேருங் கொன்றைத்தொடையா
பொங்கமிருந்திலிங்கம் புலிகரடிமாதங்கம்
எங்குஞ்சங்கமாகவே வாழ்ந்திலங்கும் (கா)

துட்டமிருகங்கள்பின் பற்றித்திரிகின்றானோ
தோழரைப்பிரிந்தானோ சொக்கினானோ
மட்டடங்காயோகிகள் வாழிருப்பிடஞ்சேர்ந்து
வணங்கியேநிற்கின்றானோ ஐயோநொந்து (கா)

மாலைக்காலமானதே வேலைக்குட்சூர்போனதே
மதிப்ணிந்திடுந்தேவா மகானுபாவா
காலமொருமூன்றுணர் கௌசிகர்சற்பனையோ
கருணாகரனேவந்தன் சோதனையோ (கா)

(சங்-வ-ம்.) ஆ! காசிநாதா எனதருந்தவமைந்தன் தேவதாசனை அந்தணர்க்குத் தெற்பைபழுதலிய சாமான்கள் சேகரித்து வருவதற்காகக் கெட்டசகுனங்களை யான்கண்டும் ஆரண்யத்துக்கு அனுப்பினைத்தேன் சூரியன் மேற்கடலடைந்தும் இன்னும் வரவில்லையே யென்செய்வேன் ஒருவாறு பசியினால் நடக்கமுடியாமல் மெதுவாக நடந்து பாதிவழியில் வருகின்றானோ அல்லது அந்தணர் மைந்தர்களைப் பிரிந்து வழிதெரியாமல் தியங்குகின்றானோ மற்றேதுவோ தோன்றவில்லை அன்னவன் வரும் வழியையாவது போய்ப்பார்க்கிறேன்.



(சங்-வ-ம்.) விஸ்வேசா அதோ அயலகத்தப்பாலர்கள் கூட்டமாக வருகிறதாகக் காணப்படுகிறது அக்கூட்டத்தில் எனது புத்திரன் வருகிறதாகத் தோன்றவில்லையே ?

(சங்-வ-ம்.) வாருங்கள் அந்தணர் மைந்தர்களே.

தோழ-வ-ம்.) வந்தோம் அம்மணி.

---

சந்திரவதி விருத்தம்.

மங்களமறையோர்மக்காள் வாடியபசியால்நொ
சிங்கமால்யானைவாழுஞ் சீருயர்வனமதற்கே
யுங்கள்பின்வந்தவெந்த னொருமகனெங்கேகாணோம்
பொங்கமாயதையெனக்குப் புகலுவீர்புகலுவீரே

---

## சந்திரவதிசொல் தரு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதி

பல்லவி.

எங்கேயுங்கள்பின்வந்த என்தவப்பாலன் (எ

அநுபல்லவி.

மங்களமறையோர்தம் மைந்தர்களேசொல்லுங்கள் (எ

சரணம்.

அந்திநேரமும்வர லாச்சுதேஐயோ
அந்தணர்மைந்தரே அன்புடன்சொல்லுங்கள். (எ)

பையப்பையநடந்து வாரானோ-ஐயோ
பாங்குயர்வேதியர் பாலர்காள்சொல்லுங்கள் (எ)

(சங்-வ-ம்.) அப்பா ஐயமாரே உங்கள் பின்னால் ஆரண்யத்துக்குவந்த என்மகனெங்கே சொல்லுங்கள்.

(தேவ-வ-ம்.) அம்மணி உன்மகனிதோ வந்திடுவான் அழாதே

(சுப்பு-வ-ம்.) அடே சேசு நீதாண்டா சொல்லவேணும்.

(சேசு-வ-ம்.) அடே சுப்பு நேக்கு வயிற்றைப்பற்றி யெரிகிறது நான்சொல்லமாட்டேன்.

(சாமு-வ-ம்.) அடே கப்பு சேசு குழந்தையிதோ வருகிற னென்று சொல்லுகிறபோதோ விக்கவிதமாகப் பரிதபிக்கிறளே குழந்தையிறந்து விட்டானென்று சொன்னால் இவளும் இறந்து விடுவாள்போலிருக்கிறது ஆகையால் நாமெல்லோரு மொரே முகூர்த்தமாய் உன்மகன் ஆரண்யத்தில் பாம்புகடித்து இறந்துபோனானென்று சொல்லிவிட்டு ஒடிப்போய்விடுவது சுலபமாகத் தோனுகிறதடா.

(சேசு-வ-ம்.) அதுதாண்டா சரி.

(சந்-வ-ம்.) அப்பா அந்தணர்மைந்தர்களே ஏதுஎதோகூடிப் பேசுகிறீர்களே உண்மையைச் சொல்லுங்கள் என் மகனெங்கே.

(தோழ-வ-ம்.) அம்மணி உன்மகன் தேவதாசன் ஆரண்யத்தில் பாம்புகடித்து இறந்துவிட்டான்.



---

## சந்திரவதிமகனிறந்த சேதிகேட்டுப் புலம்புகிற பாகம்.

---

### சந்திரவதிசொல் தரு.

இராகம்-சாமா-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அப்பா மகனே நாகம்
ஐயோ மகனே நாகம்
அடவியிற்றீண்டினதோ
மகனே மகனே நாகம் (அ)

செப்பரியவெண்பாலா
ஒப்பிலாக்குணசீலா
விற்பனவேதியர்க்குத்
தெற்பைபரிசொப்பும்பேர்து
மகனே-மகனே-நாகம்
அடவியிற்றீண்டினதோ (அ)

மன்னர்தனைப்பிரிந்து
உன்னோடம்பியிருந்த
அன்னை.நானலறிடச்
சின்னஞ்சிறுவயதில்
மகனே-மகனே-நாகம்
அடவியிற் றீண்டினதோ (அ)

ஆதிசிவனருளால்
மாதம்பத்துஞ்சுமந்து
கோதிலாதேபெற்ற
பாதகிவயிறெரிய
மகனே-மகனே-நாகம்
அடவியிற்றீண்டினதோ (அ)

கொவ்வைக்கனிவாயனே — கொற்றவர்தன்சேயனே
இவ்விதிவருமென்று — எண்ணிலேனான்பாவி
மகனேமகனேநாகம் — அடவியிற்றீண்டினதோ (அ)

தீரவுதாரனே — வீரகெம்பீரனே
மாரனேசொரூபனே — மாட்சிசேர்ப்ரதாபனே
மகனேமகனேநாகம் — அடவியிற்றீண்டினதோ (அ)

சந்திரவதி விருத்தம்.

இறந்தையோமகனேபாம்பா லிருள்வனமதனிலென்னை
மறந்தையோமறையோர் செய்தவக்கண்மையாற்பூவாசை
துறந்தையோகொன்றைசூடுந் தூயவன்செம்பொற்பாதஞ்
சிறந்துநீசேர்ந்தாயோவென் செய்குவேனினிமேலப்பா.

## சந்திரவதிசொல் தரு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

என்னநான்செய்வேன்டா — லோகிதா
எப்பிறப்பில்க்காண்பேன்டா — லோகிதா

என்னிருகண்மணியே — லோகிதா
இன்னமுதேயெந்தன் — லோகிதா

உன்னைப்பிரிந்துநானும் — லோகிதா
உலகிலிருப்போனடா — லோகிதா

கண்ணேயென்கண்மணியே — லோகிதா
கற்கண்டேசெந்தேனே — லோகிதா

அருந்தவஞ்செய்துபெற்றேன் — லோகிதா
அரவுக்கிரைகொடுத்தேன் — லோகிதா

உன்தந்தையைப்பிரிந்து — லோகிதா
உன்னைநம்பியிருந்தேன் — லோகிதா

மன்னவர்வந்தென்னை — லோகிதா
மகனெங்கேயென்றுகேட்டால் — லோகிதா

என்னசொல்லுவேன்டா — லோகிதா
என்மனங்கருகுதே — லோகிதா

முன்னோவிதிப்பயனோ — லோகிதா
முனிவன்செய்சோதனையா — லோகிதா



சந்திரவதி விருத்தம்.

என்னுநயிரேவிளங்கரும்பே விணைநேரில்லாச்செழுங்குயிலே
மன்னர்செய்தபெருந்தவத்தில் வந்தமணியேமணிவிளக்கே
பான்னேபசியால்வருவையென்றே பொற்பார்கரத்திற்கூழேந்தி
என்னலகற்றியிங்கிருந்தேனிறந்தா யெனக்கேட்டேன்பாவி.

## சந்திரவதி சொல்தரு.

வேண்டித்தவம்புரிந்தேனென்ற வர்ணமெட்டு.

இராகம் - கமாஸ் - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

ஐயோமகனேபாலா — அற்புதக்குணசீலா
உய்வேனோபூமிமேல் — உந்தனைப்பிரிந்தினிமேல் (ஐ)

நீரில்லாக்குளமானேன் — நெல்லிலாப்பதரானேன்
பாரிலுந்தனையென்று — பார்க்கநான்போறேனடா (ஐ)

மதியில்லாவிண்ணானேன் — மறைகாணாப்பயிரானேன்
சதிசெய்தெந்தனையின்று — தயங்கிடவிட்டாயடா (ஐ)

இலையில்லாமரமானேன் — இறையில்லாநாடானேன்
நிலையில்லாவீடானேன் — நீநிசேரென்மகனே (ஐ)

கன்றில்லாப்பசுவானேன் — கதிர்காணாமலரானேன்
கன்றியேயென்மனது — கலங்கியழவுமானேன்டா (ஐ)

முன்செய்தவினைதானோ — முனிசெய்தகபடந்தானோ
மன்னவரைப்பிரிந்தும் — மகனேயுனையுமிழந்தேன் (ஐ)

(சங்-வ-ம்.) கண்மணி கொடும்பசியினால் மிகவும்வருந்தி ஆரண்யத்துக்குச் சென்றவன் சீக்கிரத்தில் வந்துவிடுவாயென்று ஐயர்பத்தினியிடத்தில் கூழ்வாங்கி வைத்துக்கொண்டு நீ வருகிற வழியைப்பார்த்துக்கொண்டிருந்த யான் காட்டில்பாம்பு கடித்திறந்தாயென்று கேட்க என்னபாதகஞ் செய்தேனோசெல்வமே உந்தனை எந்தப் பிறப்பில் பார்க்கப்போகிறேன் உனது பிதாவைப்பிரிந்த என்னை நட்டாற்றில் விட்டனையே இதற்கென்செய்வேன் எவ்விதமுய்வேன்.

(சங்-வ-ம்.) ஐயோ (அந்தணர்மைந்தர்களிடத்தில்) பாலகன் எந்த இடத்தில் இறந்தானென்று கேட்கவில்லையே நிற்கின்று கனோபோய்விட்டார்களோ கூப்பிடுவோம்.

(சங்-வ-ம்.) ஐயா அந்தணர் மைந்தர்களே?

(தோழ-வ-ம்.) அம்மணி.

சந்திரவதி விருத்தம்.

அங்கண்மாஞாலந்தன்னில ரன்பதமறவாதேற்றுங்
துங்கமாதவர்குலத்திற் றோன்றியசெல்வர்காள்நான்
உங்கள்பின்னனுப்பிவித்த வுத்தமக்குணஞ்சேர்பாலன்
எங்கனமிறந்தானத்தை யியம்புவீரியம்புவீரே.

(சங்-வ-ம்.) அப்பா அயலகத்துப்பாலர்களே உங்களிடமாக அடைக்கலமென்று ஒப்பிவித்து ஆரண்யத்துக்கு அனுப்பின என துமகன் தேவதாசன் எவ்விடத்திலிறந்து கிடக்கின்றான் அதைக்கு றிப்பிட்டுச் செல்லுங்கள்.

(தோ-வ-ம்.) அம்மணி கவனித்துக்கேட்கவேண்டும் நாங்கள் வருகின்ற வழியினிடமாகநிற்கிறஆலவிருக்ஷத்திற்குப் பக்கத்திலி ஞ்சிற்று வடக்குத்திசையில் தெற்பை படர்ந்து முளைத்திருக்கின்ற மேட்டுக்குத் தென்புறத்தில் உன்மகன் தேவதாசன் இறந்துகிடக் கின்றான் அன்னவனை நாய், நரி, கழுகு, காகம், தீண்டாதவண்ணம் இலைகளாலுங் குழைகளாலும் மறைத்துவைத்திருக்கின்றோம் தெரி ந்துகொள்வாய் நாங்கள் எங்களில்லத்துக்குச் செல்கின்றோம்.

(சங்-வ-ம்.) நல்லது சென்றுவாருங்கள்.

சந்திரவதி விருத்தம்.

அந்தரத்தை யிழந்துவந்த பின்போனு
நான்மார்ப வறையக் கேள்ாய்
சிந்தைசெறி வனமதற்கு வேதியர்கள்
பாலருடன் விரைந்து போன



எந்தன்மகன் கொடுவரவா விறந்தானு
மென்ன செய்வே னினிமேலையோ
சிந்தையா யவனைபெடுத் தடக்கவுந்தன்
திருவுளத்தை யின்னதெனத் தெரிகிலனே.

சந்திரவதிசொல் தரு.

கந்தநாதா கருணைசெய்வாயென்ற மெட்டு.

இராகம்-பியாகு-தாளம்-ஆதி.

பல்லவி.

உத்தரவு தாருமையனே.(உத்)

அனுபல்லவி.

பத்துமாதநான்சுமந்து பெற்றமகன்வனந்தனில்
செத்துவிட்டா னைகயினுலே (உத்)

சரணம்.

கானகந்தனைநாடி கண்மணிபாலனைத்தேடி-
யானெடுத்துத் தகனஞ்செய்ய.(உத்)

அந்தணர்குலதீபனே அவனிபுகழ்பூபனே
இந்தவேளை தயவுசெய்தே.(உத்)

(சங்-வ-ம்.) என்னையடிமைகொண்ட ஆண்டவனே அயலகத் துப்பாலர்களுடன் கானகத்துக்குத் தெற்பை முதலியசாமான்கள் சேகரித்துவரத் தாங்களனுப்பிய எனதுபாலகன் தேவதாசன் ஆங் குதெற்பைகொய்யும்போது பாம்புகடித்திறந்து விட்டானும் அன் னவனை நான்போய்க் கண்டெடுத்து அடக்கஞ்செய்து வரவுத்தர வுதரவேண்டும்.

காலகண்டன் விருத்தம்.

ஐயையோ வெனதுபொரு ளெவ்வளவும்
விருதாவா யாச்சென் செய்வேன்
செய்யமறை யவனென்னைப் பிரித்துவிட
வோவினைத்தாய் திருடி யிந்த
வையகத்தில் விலைப்பட்ட மைந்தனுக்கோர்
தாயுமுண்டோ வழுத்தா யந்த
தூயவன் மேகவிடை தரமாட்டேன்
நகமாயிங் குறுவாய் தானே.

(கால-ர்-வ-ம்.) ஐயையோஐயையோ என்பணமெல்லாம்போச்சே வயிறெரியுதே வயிறெரியுதே அடிசண்டாளி நீயும்ஓடிப்போகவல்லவோ நினைத்துவிட்டாய் உலகத்தில் விலைப்பட்டபிள்ளைகளுக்குத்தாயேது அன்றியும் அனேகநாளாக நானும் காலகண்டியும் சம்பாதித்ததிரவியத்துக்குச் சேதமேதவிர உனக்கென்னடிகுறைவு எங்கேயும் ஓடிப்போய் விடாமல் என்பக்கத்திலே வீற்றிருடி.

சந்திரவதி விருத்தம்.

ஐயனே யுமக்கடிமை யானது
மடவிதனி லிறந்தா னென்றால்
வையமிசை நொந்துபெற்ற வயிறுமிகக்
கொதியாதோ மங்கை யாகம்
நொய்யாதோ வாகையினால் நொடிக்குள்ளே
சென்றவனை யெடுத்த டக்கி
வெய்யவனு ருதிக்குமுன்னே வருவனிவண்
விடைதவிரீர் விரைவாய்த் தானே.

(சங்-வ-ம்.) சுவாமிதங்கட்கடிமை யென்பதற்குக் கிஞ்சிற்றேனுஞ் சந்தேகமுண்டோ ஆனாலும் கொடிதான வனாந்திரத்தினிடமாக என் கண்காணாது இறந்துவிட்டானென்று சொல்லக் கேட்டால் பத்துமாதஞ்சுமந்து பெற்றபாவியான எனதுவயிறுகொதிப்புக்கொள்ளாதா? இதுதங்கட்குத் தெரியாததா? ஆகையாலன்னவனையிந்தயிருளில் தேடிக்கண்டுபிடித்து அடக்கஞ்செய்து அருணுதயமாவதற்குள்ளாக இவடம்வந்து சேருகிறேன் தயவுசெய்து வருதி கொடுத்தருளவேண்டும்.

காலகண்டன் விருத்தம்.

பேதையேபலவாறாகப் பிதற்றுருய்சேச்சீயுந்தன்
சூதெல்லாமறிவேனந்தச் சுரஞ்செல்லவுறுதிதாரே
னாதலால்வீட்டின்வேலை யனைத்தையுமொருவினாடிப்
போதினில்வருந்திடாது பொற்புடன்செய்குவாயே,



(கால-ர்-வ-ம்.) அடியே சந்தி உனது கபடசித்தமும்கள்ளத்தனமும் பாசாங்காகப் பேசுவதும் எனக்கு நல்லாய்த்தெரியும் ஆகையால் நீ வனத்துக்கேக விடைகொடுக்க மாட்டேன் வீட்டிலுள்ள எல்லா வேலைகளையுஞ் சீக்கிரஞ் செய்யடிசெய்.

(சங்-வ-ம்.) சுவாமி வஞ்சகம், கள்ளம், பொய் முதலிய துற்குணங்களுடையவள் நானல்ல தங்கட் கென்ன வேலைசெய்ய வேண்டுமோ அஃதெல்லாமிதோ செய்கிறேன் அதன் பின்னாலாவது உத்தரவு கொடுக்கவேண்டும்.

(கால-ர்-வ-ம்.) அஃதிருக்கட்டுமடி நம்மகத்திலிருக்குங் குடத்தையெடுத்துக்கொண்டு குளத்திற்குப் போய் ஜலந்திரட்டிவாடி.

(சங்-வ-ம்.) நல்லது சுவாமி.

## சந்திரவதி வேலைசெய்கிறபாகம்.

தண்ணீரெடுக்குந் தரு.

தண்ணீர்குடமெடுக்கத் தாழவொண்ணுதென்ற மெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோகோவிசுவேசா அப்பணிபரமேசா
வையம்புகழுங்காசி வளரீசா
அன்பர்கள் துதிநாதா அரியதவமெய்ப்போதா
என்புகல்வேனிதற்குக் குணநீதா
மண்ணுலகாளவந்த மகன்றனையிழந்திந்தத்
தண்ணீர்க்குடமெடுக்கத் தலைவிதியோ

(சங்-வ-ம்.) சுவாமி தங்களுத்தரவுபோலத் தண்ணீரெடுத்துக் கொண்டுவந்து விட்டேனிதோ பாருங்கள் இனி யென்ன வேலை செய்யவேண்டும்.

(கால-ர்-வ-ம்.) அடிசந்தி தண்ணீரெடுத்துவந்ததுசரி முத்தம் பெருக்கடி.

(சங்-வ-ம்.) உத்தரவு சுவாமி.





## முத்தம் பெருக்குதல்.

### சந்திரவதிசொல் தரு.

காசிநாதாவிதுவுன் னருளோவென்ற வர்ணமெட்டு

இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

முத்தம்பெருக்கவிட்டாய் சிவமே
பத்துமாதஞ்சுமந்து பெற்றமகனுநல்வ
னத்திலிறந்திடச்சி னத்தவந்தணர்க்காய் (மு)

என்னபவங்கள்புரிந் தேனோ
சென்னெற்பழனஞ்சூழ்ந்த கன்னபுரியரசர்
பின்னமிலாதளித்த வன்னாள்முதலின்னாளாய் (எ)

வேதமுணர்ந்த மறையோரே
ஆதாவுடன்வீட்டுத் தீதிலாமுத்தமெல்லாம்
காதலாய்க்கூட்டிவிட்டேன் மாதுநானுமிப்போது (வே)

(சங்-வ-ம்.) சுவாமி இதோ முத்தமெல்லாம் பெருக்கிவிட்டேன்

(கால-ர்-வ-ம். நல்லதடி சந்தி கூட்டிய முத்தங்களுக் கெல்கெல்லாம் சாணந்தெளியடி.

(சங்-வ-ம்,) உத்தரவுபோலத் தெளிக்கின்றேன் சுவாமி.

### சாணிதெளிக்குந் தரு.

வேறொருகுடை வெங்கட்குவென்ற வாணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - தாளம் - சாபி - சாப்பு.

கண்ணிகள்.

சம்போஹராசதாசிவா சந்திரசேகரா
அம்பொருகப்பொற்பாதாமீனம்பாள் மனோகரா (ச)

தங்கச்சட்டியாலுந்தூக்காத் தையலேயானே
மங்கியசாணிச்சட்டிதூக்கவைத்த தென்பரனே (ச)

சந்தனம்பன்னீரைக்கரைத்துந் தான்தெளித்தேனே
இந்தத்துற்கந்தச்சாணிநீரிப்போ திறைத்தேனே (ச)

(சங்-வ-ம்.) சுவாமிதங்களுத்தரவுபோலச் சாணந்தெளித்தாய் விட்டது.

(கால-ர்-வ-ம.) நல்லதடி சந்திவிசித்திரமாகக் கோலம்போடு.

(சங்-வ-ம்,) உத்தரவு சுவாமி.

## கோலமிடுகிற தரு.

பஞ்சமாபாதகம்படாதாவென்றமெட்டு.

இராகம்-தனுசாரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாலன்றனையிழந்தும் — பரசிவமே-இதோ
கோலமிடவுமானேன் — முன்பவமே

சுண்ணப்பொடியானதால் — தற்பரனே-எந்தன்
வண்ணவிரல்கள்நோகு — திங்கரனே

கோலம்வீடெல்லாமிட்டேன் — மகிழ்வாக-சுவாமி
சீலமுடனனுப்பும் — வனமேக

(சங்-வ-ம்.) சுவாமி தாங்கள் கூறியவண்ணமே வண்ணமாய்க் கோலமிட்டானது பாருங்கள்.

(கால-ர்-வ-ம்.) மிகவும் நலம் திருவிளக்கேற்றிவையடி.

(சங்-வ-ம்.) நல்லது சுவாமி.

## திருவிளக்கேற்றுந் தரு.

ராஜாதிராஜர்பணியென்ற வர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம் யேகம்.

கண்ணிகள்.

ஒருமகன்றனைநான் — தருவோங்குவனத்திழந்தும்
திருவிளக்கேற்றிவைத்தேன் — செம்மையாகவுகந்து

அவனியிலுள்ளவர்க்கே — யநியாயங்கள்செய்தேனோ
தவமுனிவோர்கடனைத் — தாழ்மையாய்வைத்தேனோ

விந்தையுயர்தோளா — விசாலாக்ஷிமணவாளா
கந்தமேமிகுந்ததோர்பங் — கயமலர்த்தாளா



(சங்-வ-ம்.) சுவாமி திருவிளக்கேற்றியானது.

(கால-ர்-வ-ம்.) நல்லது சந்திரோமிழியே குவித்திருக்கிற நெல் முழுமையுஞ் சீங்கிரம் குத்தடி.

(சங்-வ-ம்.) வருதிபோலவே யிதோ குத்துகிறேன் சுவாமி.

## நெற்குத்துகிற தரு.

வானரங்கள் கனிகொடுத்து என்றமெட்டு.

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

ஆதிபரம்பொருளேயெழி — லம்பிகையின்பதியே
வேதியர்க்குநெல்லுக்குத்த — விட்டனையித்ததியே

மன்னவரைப்பிரிந்ததன்றி — மகனுமிறந்தானே
என்னசெய்வேனுனிமே — லெங்குநிறைவோனே

அங்கைரெண்டுமுலக்கைபற்றி — ஐயோஐயோ-அரனே
வெங்கனலா யெறிகிறதே — வினையோவிதுபரனே

(சங்-வ-ம்.) சுவாமி நெல்லுக்குத்தியானது.

(கால-ர்-வ-ம்.) சரி நன்றாக அரிசிவேறு குறுணைவேறு தவிடு வேறாகப்புடைத்து விடடிசந்தி.

(சங்-வ-ம்.) நல்லது சுவாமி.

## குத்தியநெல்லைப் புடைக்குந் தரு.

குங்குமம் பன்னீரென்ற மெட்டு.

இராகம் - எதுகுலகாம்போதி - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

மன்னர்மனைந்துமகிழ்ந்து — பிடித்தகையாலே-இன்று
இந்நகர்வந்துநெற்குத்திப் — புடைக்கவுமானேன்

மல்லிகைமுல்லைமலர்கள் — தொடுத்தகையாலே-இன்று
சல்லடைகொண்டுசலித்திட — லாகினேன்சிவமே

ஐயமோயானரிசிபுடைத்து — வைத்தேன்பாரும்-அந்த
வெய்யவனமதற்கேகிடவே — விடைதாரும்

(சந்-வ-ம்.) சுவாமி தங்களுத்தரவுபோல் அரிசிவேறுகுறுணை வேறு தவிடுவேறு இதோபுடைத்துவைத்து விட்டேன் அகத்தின் வேலை யிவ்வளவுதானே இனிமேலாவது ஆரண்யஞ்செல்ல வருதிகொடுக்கவேண்டும் குழந்தையை யெடுத்தடக்கிவிட்டு விடியுமுன்வந்து சேருகிறேன்.

(கால-ர்-வ-ம்) நல்லதடி சந்திவிடியுமுன் உனதுகுழந்தையை யெடுத்தடக்கி யிவ்விடம்வந்து சேருவையா? அங்கேதானே யிருந்திடுவையா?

(சந்-வ-ம்.) சுவாமி தங்களுத்தரவுபோலவே இவ்விராத்திரி விடிவதற்குமுன்னமே குழந்தையை யெடுத்தடக்கி யிங்குவந்து சேருகிறேன் சந்தேகம் வேண்டாம் வருதிகொடுத்தனுப்பும்.

(கால-ர்-வ-ம்.) அப்படியானாற் சென்றுவருவாயடி சந்தி.

(சந்-வ-ம்.) அனேகவந்தனஞ் சுவாமி சென்றுவருகிறேன்.

## சந்திரவதி குழந்தையைத் தேடி வனத்துக்குச் செல்லும்பாகம்.

விருத்தம்.

கன்னலங் கழனி சூழ்ந்திடு மந்தக்
காசினி யிழந்த தோர் துயரும்
மன்னவர் பிரிந்த வருத்தமு மோங்கு
மறையவர்க் கடிமையாய்ப் புகுந்த
இன்னலு மகனைப் பார்த்துநான் தவிர்த்திங்
கிருந்தனற் காசிவிஸ்வேசா
அன்னவ னரவா லடவியிலிறக்க
வமைத்தனை யிதுவுமுன் னருளோ.

சந்திரவதி சொல் தரு.

சேருமுன்னே சேவல்கூவுதேயென்றமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

என்னசெய்வேனே துசெய்குவே ... வீசாவிஸ்வேசா (எ)



அநுபல்லவி.

பன்னகாபரணநாதா ... கருணைக்குணநீதா
அன்னை விசாலாக்ஷிதன்பாகா ... அதியோகா (எ

சரணங்கள்.

உன்னகர்தன்னில்வந்து ... மன்னவரையும்பிரிந்து
தன்னயஞ்சேர்பாலகனையும் ... நானிழந்தேன் (எ

வேதன்விதித்தவிதியோ ... மேனாள்வினையின்சதியோ
காதகமுனிவன்செய்சூதோ ... கருணையிதோ (எ

கண்மணிமகனையின்று ... கானகமதனிற்சென்று
திண்ணிருளிலெங்குதேடுவேன் ... சிந்தைவீடுவேன் (எ

(சந்-வ-ம்.) ஆ காசிநாதா கன்னற் பழனங்கள் சூழ்ந்த கோசலநாட்டை யிழந்த வருத்தமும் உன்னகராகிய இக்காசியம்பதிக்கு வந்து எனது பிராணேசரைப் பிரிந்த துன்பமும் "மக்கள் மெய்தீண்டலுடற் கின்பமற்றவர் சொற்கேட்டலின்பஞ்செவிக்கு" என்ற நீதிவாக்கியத்துக்கிணங்க என தருந்தவ மைந்தன் தேவதாசனால் விலக்கிச் சற்று மகிழ்வாயிருந்தேனே நீ இது பொறும லன்னவனையின்றிரவியத்திற் பாம்புகடித்து இறக்கும்படியாகச் செய்தனையே இதுவு முன்னருளோ நின்னைக்கருணையங் கடலென யாவருங் கூறுகின்றார்களே அப்படிக்கிருக்க என்மீது கருணையில்லாததென்ன காரணம்? யான் என்ன குற்றஞ்செய்தேன்?

சந்திரவதிவிருத்தம்.

பாதியம்புலிசேர்வேணிப் பரன்றனதருளினாலே
ஆதவன்குலந்தழைக்க வவனியிலுதித்ததோரென்
மாதவமைந்தாவுன்னை வனந்தனில்வந்துகாணத்
தீதிலாவழிதோணாது தியங்குரேன்மயங்குரேனே

சந்திரவதி சொல் தரு.

இன்னம்நாதன்வரக்காணேனென்ற மெட்டு.

இராகம்-பைரவி-தாளம்-சாப்பு.

பல்லவி.

வழியெதோ தெரியலையே
வழியதுசொல்வாரிலையே

அனுபல்லவி.

எழியவ னொந்தனுக்கு
இப்போ-ஒப்பில் இருளிற்றுனே (வழி)

சரணங்கள்.

விந்தைபெருங் காசிவிசு
வேசா-யீசா மேலாங்கைலாசா (வழி)

காட்சியாகவே படர்ந்த
காவே-பூவே கானகமேக (வழி)

கும்புகும்பா யிங்குவாழுங்
குயிலே-மயிலே குழந்தையைக்காண (வழி)

மல்லிலாது தாவியோடு
மானே-நானே மயங்குகின்றேனே (வழி)

பாதகியான் பெற்றெடுத்த
பாலா-சீலா பாங்காயென்முன்னே (வழி)

(சந்-வ-ம்.) ஆ காசிநாதா நகரைக்கடந்து நகரின் பக்கத்துள்ள சோலைக்கு யிந்தவிருளில் வந்து சேர்ந்தேன் ஆரண்யஞ்செல்லுவதற்கு வழியோ தெரியவில்லை அல்லது இது தான் வழியென்று சொல்வதற்கும் ஒரு மனிதனையுங்காணேனும் என்ன செய்வேன் ஆ! இச்சோலையில் வசிக்கும் குயிலே, மயிலே, தருக்களே, புஸ்பங்களே, மானினங்களே, நீங்களாவது கானகஞ் செல்லும் பாதையைச் சொல்லமாட்டீர்களா? ஐயோ பாலகா உன்னை வந்து காணுதற்கு வழிதெரியாமற் றியங்குகின்றேன் ஆ! தற்சமயம் தோன்றலான மின்னொளியினால் இங்கோர் பாதைதெரிகிறது இவ்வழியேசெல்வோம்.

சந்திரவதி விருத்தம்.

கண்ணினுண்மணியேபாகே கற்கண்டேமகனேயிப்போ
விண்ணின்மீனொளியினாலும் விமலனாருளினாலும்
வண்ணமாம்வழியைக்கண்டு வழியதுபிசகிடாமல்
தண்ணிலாக்கொடியபாலைதன்னை நான்சேர்ந்திட்டேனே.



சந்திரவதிசொல் தரு. 234

என்னபாவஞ் செய்தேனோசிவமே என்றமெட்டு.

இராகம்-ஆனந்தபைரவி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

என்னநான்செய்குவேன் மகனே
யேகவெளியாய்த்தெரிய தடா (என்)

உன்னையேகாணுமலே சுதனே
உள்ளமிகவேகரியு தடா (என்)

முன்னையூழ்விதிதானோவல்லா திந்த
முனிவன்செய்கின்றவன் சதியோ (என்)

பன்னகாபரணன்றன் செயலோ
பங்கயனும்விதித்த விதியோ (என்)

கள்ளிபின்முள்ளுகளே யெந்தன்
காலதனில்தோதைக்கு தடா (என்)

வள்ளலேசெல்லும்வழி தெரியாமல்
மனதுமிகவும்பதைக்கு தடா (என்)

கருங்குழலிசெங்குழலி தேன்கள்
கதிக்கவேபாட்டிற்கொட்டு தடா (என்)

அரணைபூரான்மற்றவை யெல்லாம்
ஐயையோபதத்திற்றட்டு தடா (என்)

(சந்-வ-ம்.) கண்மணி மின்னொளியினாற் காணலானவழியைத் தொடர்ந்து கொடிதான இப்பாலை நிலத்துக்கு வந்தேன் இங்கே யோ அரணை, பூரான், தேள், கருங்குளவி, இவையெல்லாம் பதத்திற் கொட்டுகிறது அன்றியும் கள்ளிகளின்முள்ளுதைக்குகிறது என் செய்வேன் இன்னும் எவ்வளவுதூரம் இருக்கிறதோ வனம் தெரியவில்லையே ஆ! பன்னகாபரணம் பூண்டபரமேசா வெய்யதான இத்தப்பாலை நிலத்தில் நடக்க என்ன பாதகம்புரிந்தேன்.

சந்திரவதி விருத்தம்.

பார்த்தவர் கண்ணும் நினைத்தவர் மனமும்
பசையறத் தீய்த்திட லான
நேத்திபார் பாலை நிலந்தனை யிரவால்
நீந்தினேன் பாலகா வீங்கு
நேத்திர மதனால் நோக்கிடுங் காலை
நிலைபெரும் வழிதனைக் காணேம்
ஆர்த்திடு மிருகம் வாழுமிவ் வனத்தி
லய்யனே யெங்குனைக் காண்பேன்.

சந்திரவதிசொல் தரு.

பாலாவென்னகாலம்வந்துதேடாவென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

எங்கேயென் றுதேடுவேன் — பாவியிப்போதேஇப்போதே
இந்தவிருளினில் — சிந்தைதிடமாகச்
சுந்தரம்சிறுந்த — மைந்தனேவுந்தனை (எங்)

பள்ளமேடுபடுகுழிகளிற்றுனே — களிற்றுனே
பாதைதெரியாமற் — காதுகிடந்து
வாதையடைகுறேன் — நாதன்சோதனையோ (எங்)

கல்லும்புல்லுங்கரடுங்காலிற்குத்துகிறதே — குத்துகிறதே
கங்குல்பகலாகத் — திங்கள்பத்துந்தாங்கிப்
பொங்கமுடன்பெற்ற — தங்கனேயிங்ஙனம் (எங்)

மகனேநீயுமாண்டவனாநிது — தானோஇதுதானோ
மறுவனத்தானோ — சிறுமையுடையும்
அறிவைகானதை — யறிகிலேனடா (எங்)

பார்க்கப்பயமாகவிங்கே — யிருக்கிறதேஇருக்கிறதே
பாங்காகவின்னொளி — யோங்கித்தெரியாமல்
தீங்குறமேகங்கள் — நீங்காதுகூடுதே (எங்)



(சந்-வ-ம்.) பாலகா பார்த்தவர்களுடைய நேத்திரத்தையும் மனதையும் ஈரப்பசையில்லாமல் தீய்த்து விடலான பாலைநிலத்தை இரவானபடியால் கடந்து இவ்வனத்துக்கு வந்து சேர்ந்தேன் இங்கேயோ கல்லுங்கரடுகளும் புற்களுங் காலிற்குத்துகிறது வழியோ தெரியவில்லை வான்முழுதும் மேகங்களாக விருந்து விட்டது நட்சத்திரங்களின் பிரகாசம் கொஞ்சந் தெரிந்து கொண்டிருந்தது அதுவும் இப்போது தெரியவில்லை எங்கு பார்த்தாலும் பள்ளங்களும் மேடுகளும் குழிகளுமாக விருக்கிறது. நீ இறந்தவனோ மிருதானோ? வேறோ? அறிகிலன் இதற்கென் செய்வேன் இந்தவனத்தினிடமாக யான் எந்தவிதத்திலும் பிரவேசித்துன்னைத்தேடி பார்க்கின்றேன்.

## சந்திரவதிவனத்திற்குட்பிரவேசித்துக் குழந்தையைத் தேடும்பாகம்.

சந்திரவதி விருத்தம்.

மையிருட்படியுமிந்த வனத்தினிலேயாக்கிநிற்கும்
கொய்மலர்த்தருவினங்காள் கொடிவிலங்கினங்காள்புட்காள்
பையுடையரவம்புற்றிற் பாங்குடனிருந்துசீறிக்
கையினிற்றீண்டமாண்ட கண்மணிதனைக்காணீரோ.

சந்திரவதிசொல் தரு.

கானகத்தில் நானலைந்தென்ற வர்ணமெட்டு.

இராகம்-தேசிகமுகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

ஐயையோ மகனைத்தேடி — யலைகின்றேன் கானகத்தில்

அநுபல்லவி.

கையில்மான்மழுவேந்திடுங் — காசிநாதா விசுவேசா
தையலாண்டியாகவந்து — தயங்கிமிகவுநொந்து (ஐ)

சரணங்கள்.

சண்பகமேமாதவியே — சந்தனமேகற்பகமே
பண்புடனென்பெற்றெடுத்த — பாலகனைக்கண்டீரோ (ஐ)





மாமரமேகோங்ககிலே — மந்தார[illegible]
பூமியாளப்பிறந்தவென் — புத்திரனைக்[illegible] (ஐ)

பாதிரியேபூவரசே — பாரிசாதமே நாங்கிலே
காதகியாளேர்தனுட — கண்மணியைக்காணீர்களோ (ஐ)

வேங்கையேயிலந்தையே — வெப்பாலையே பலாவே
தேங்கமழ்மகிழேயெர்தன் — செல்வனைநீர்காணீர்களோ (ஐ)

மாதங்கமேசிங்கமே — வரிப்புலியேகலையே
கோதங்கமிலாதவெந்தன் — குணமணியைக்காணீரோ (ஐ)

அஞ்சுகமேமாங்குயிலே — அன்னமேமாமயிலே
செஞ்சொலுவுடையவெந்தன் — சேயனைநீர்காணீர்களோ (ஐ)

(சந்-வ-ம்) ஆ! இவ்வனத்திலிடமாக வுற்ற சண்பகம், பாரிசாதம், சந்தனம், பாதிரி, மந்தாரை, புன்னை, கோங்கு, நாங்கில், வேங்கை யென்றவிருகூங்களே சிங்கம், புலி, யானை மானென்று சொல்லப்பட்ட மிருகங்களே அன்னம், மயில், கிளி,யென்றுகூறுவதானபக்ஷிஜாலங்களே எழியாள் அருந்தவஞ்செய்து பெற்றபாலகன் தேவதாசன் இங்குவரக்கண்டீர்களா? என்ன வொன்றும் பேசுகிறீர்களில்லை.

சந்திரவதி விருத்தம்.

முப்புரமெரித்தநாதா முனிவர்கள்தொழும்பாதாவென்
அப்பனேகைலைவாசா ஆருயிர்ப்புதல்வன்றன்னை
இப்பெருவனத்தில்வந்தே யெங்கினுமலைந்தலைந்து
செப்பொணாவருத்தமுற்றுத் தேடியுங்காணேன்ஐயோ.

சந்திரவதி சொல் தரு.

சந்த்ரனெங்கேயோ வென்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

காணேனே — காணேனே மகனைக்காணேனே
காணேனே — காணேனேகாணேனே
கங்காதராவிளங் — திங்கள்திகழ்சடைச்
சங்கராபொன்மலை — மங்கையிடப்பாகா (கா)

என்செய்வேன் இனியென்செய்வேன் என்செய்வேன்
என்செய்வேன் என்செய்வேன் என்செய்வேன்
மீசாகாசிவிசு வேசாவன்பர்பவ
நாசாவெள்ளிமலை வாசாபரமேசா (கா)

நையுதேமனம்நையுதே நையுதே
நையுதேநையுதே நையுதே
நாதனேயெங்கும்பிரக் யாதனே-மாசிலாப்
போதனேவரப்ர சாதனேநீதனே (கா)

பாவிநான்மகாபாவிநான் பாவிநான்
பாவிநான்பாவிநான் பாவிநான்
பஞ்சாயுதனயன் தஞ்சமென்றேகிதம்
அஞ்சலிசெய்திடும் செஞ்சரணவிங்கு (கா)

---

(சங்-வ-ம்.) ஆ! கைலைவாசா இவ்வனத்தினிடமாக எனதுபாலகனை யெவ்விடத்துந் தேடியலைந்தும் காணவில்லையே இனியெங்கு தேடிக்காணப் போகின்றேன் என்மனம் வாடுகிறதே.

(சங்-வ-ம்.) கண்மணி அந்தணரிடத்தில் விடையடைந்து ஆரண்யத்துக்கு வாவழிதெரியாமற் திகைத்து மின்னிவொளியால் பாதையைக்கண்டு அவ்வழியே இவ்வனத்துக்கு வந்து இங்குள்ள மர, மிருக, பக்ஷிகளை, நின்னைக் கண்டதுண்டா வென்று கேட்டேன் ஒன்றும்பதிலியம்பவில்லை என் செய்வேன் இக்கானகத்தினிடமாக வின்னுமுன்னைத் தேடுகின்றேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு

போரேனிதோ போரேனிதோ வென்றவர்ணமெட்டு.

இராகம்-அமீர்கல்யாணி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேடுகின்றேன் தேடுகின்றேன்-தேடுகின்றேன்
தேடுகின்றேன் தேடுகின்றேன்-மகனை (தே

கூடிவழி வாடிமனம்
நாடியிதோ வோடிவோடித் (தே

புடவைதனைச் செடிகிழிக்கத்
திடமாய்ப்பின்னிக் கொடியிழுக்கத் (தே



331

சிங்கம்புலி சங்கமாகப்
பொங்கமுடன் தங்குங்காட்டில் (தே

மின்னிவொளி தன்னிலாகப்
துன்னியேவிற் பன்னுவன்னைத் (தே

படவரவின் விடமதனல்
அடவியுயிர் விடவிதியோ (தே

பிரமன்மாலுக் கரியோனை
விரிசடைச்சங் கரன்செயலோ (தே

(சங்-வ-ம்.) கண்மணி இவ்வாரண்யத்தின் கண் எனது புடவையை செடிகள் கிழிக்கவும் கொடிகள் பின்னிப்பின்னி இழுக்கவும் ஒவ்வோரிடங்களிலும் உன்னைத்தேடிப் பார்த்துங் காண்கிலேனே நீயெவ்விடத்திலிருக்கின்றாயோ தெரியவில்லையே.

## சந்திரவதிசொல் தரு.

ஆ, எந்தனருமைக் கண்மணியேயென்ற வர்ணமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

பாலகனேயிதற்கென்னசெய்வேன் மனம்பதறுதேயடா (பா)

அநுபல்லவி.

ஆலவிருக்ஷமும் ஐயோதோன்றவில்லை
ஆகாவென்றென்று மடைந்திலேனித்தொல்லை
ஞாலமீதெவர்செய் மாயமோமற்றேதோ
நானேவறியேனேகமழ் தேனேமாசிமானேசிறு (பா)

சரணங்கள்.

மாதங்கம்வேங்கைகரடிசிங்கம் கலைமானினம்பன்றி
நீதுறுவொட்டகஞ் செந்நாய்நரியாளி
சேர்ந்தொன்றாகக்கூடிச் செய்கின்றமாகோரம்
காதகியான்கேட்டுக் கலங்கிடக்கால
கதியோமுனிசதியோவயன் விதியோவிது அதிபாவியான் (பா)

மாகமேல்மேகங்கள்கூடுதடா மதிமயங்குதேயடா
யேகமாயிடியிடிக்குதே யப்பா,
இருளினிற்பாதை யேதெரிகிலையே

நாகங்களின்சிற்றம் — நான்பொறுக்கேனே
நாதனுயர்போதன்பிரக் — யாதனுடசோதனையோ (பா)

(சங்-வ-ம்.) பாலகா அந்தணர் மைந்தர்கள் உன்னை ஆலமரத்தின் பக்கத்தில் இலைகுழைகளால் மறைத்து வைத்திருக்கிறதாகச் சொன்னார்கள் அவ்வால விருக்ஷமுமிங்கு காணப்படவில்லை அன்றியும் இவ்வனத்தினிடமாக வாசஞ்செய்யும் சிங்கம், புலி, கரடி, யானை, செந்நாய், முதலிய மிருகங்களின் கோரச்சத்தமோ சகிக்கக்கூடாததாக விருக்கிறது ஆகாயத்திலோ மேகங்கள்களிந்து இடிக்கிறது பாதையோ தெரியவில்லை என்ன செய்வேன் உன்னை எங்குதேடிக் காண்பேன்.

(சங்-வ-ம்.) ஆ! காசிநாதா பிணமிருக்கிற விடத்தில் நாய், நரி, கழுகு, காகம், பேய், முதலியவைகளுங் கூடிக்கொண்டிருக்குமெனப் பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன் அதற்கிணங்க அதோஒரிடத்தில் நாய், நரியாவும் கூட்டமாகவிக்கிறது ஆகையாலங்குசென்று மெனதுபாலனைத் தேடிப்பார்க்கின்றேன்.

## சந்திரவதிசொல் தரு.

பாலனிறந்தவிடமிதுதானோ வென்றமெட்டு.

இராகம்-சஹானா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

கங்கைதிங்களணியுங்காசி — நாதா-அந்தக்
கன்னிபங்காளாசெம் — பொற்பாதா

மைந்தன்றனையேயிங்கு — தேடுகின்றேன்-மிக்க
மனவருத்தமதனால் — வாடுகின்றேன்

கண்ணுற்கண்டிடவருள் — செய்வாயே-எந்தன்
கவலையதனையின்று — கொய்வாயே

ஆலமரமென்பது — மிதுதானோ-மகன்
அன்பாகச்சேர்த்த — சாமானிதுதானோ

தெற்பைபுதரென்பது — மிதுதானோ-பாலர்
சிருடன்சொன்னகுறிப் — பிதுதானோ

நாகமிருந்தபுத்து — மிதுதானோ-நதனை
நாடிக்கடித்தவிட — மிதுதானோ



எல்லாமிவ்விடங்கண்டும் — விச்வேசா-ஐயோ
என்குழந்தையைக்காணேன் — சர்வேசா

(சங்-வ-ம்) ஆ காசிநாதா இவ்விடத்தில் அந்தணர் மைந்தர்கள் குறிப்பாகச் சொன்ன ஆலவிருக்ஷத்தையும் தெற்பைப்புதரையும் எனது மைந்தன் சேகரித்த சாமான்களையும் யான் கண்ணுற்று மெனது பாலனைக்காணேனே.

## பேய்கள் வருகிறபாகம்.

இராகம்-தன்யாசி-தாளம்-ஆதி.

பல்லவி.

பேய்கள்வந்துதே — அடவியிற் — பேய்கள்வந்துதே

அநுபல்லவி.

பேய்கள்வந்துதே — தீயுரும்வாயோடு
பாயமதாகவே — சேயனருகினிற் (பே)

சரணம்.

ஒல்லையதனில்வெள்ளைப் — பல்லைக்காட்டிக்கொண்டு
நல்லசதையைப்பிச்சு — எல்லோருந்தின்போமென்று (பே)

(பேய்-வு-ம்.) ஆ! ஆ!! ஆ!!! ஆ!!!! ஆ!!!!! அடாமக்களா? இங்கே ஏதோமானிடவாடை யடிக்குதுடோ சுத்திப்பாருங்கடோ ஈ

(குட்டிப்பேய்வசனம்.) ஆகட்டுமிள்ளா ஆத்தோ.

## சந்திரவதியைப்
## பிசாசுகள் விரட்டுகிறபாகம்.

சந்திரவதி விருத்தம்.

பாலகாவுந்தனுக்குப் படர்வனம்வீடோபட்சி
சாலம்வாத்தியமோகாற்று சாமரமோவுதிர்ந்த
கோலமாரிலைகளெல்லாம் குலவுபஞ்சணையோசீயு
சாலவேவதுபினுமீங்கு தகவுடன்செய்கின்றாயோ.





## சந்திரவதிசொல் தரு.

என்னசெய்வேனென்ற வர்ணமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கண்ணேயெந்தன்கண்மணியே பாலா
காரிசெய்யுஞ்சோதனையோ பாலா
பெண்ணொருத்தியென்னசெய்வேன் பாலா
பேய்கள்வந்துசுற்றுறதே பாலா

## தாய்ப்பேய் சொல் தரு.

கொந்தகைவிருஹா ரென்றமெட்டு

இராகம் - காபி - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

இக்குவந்ததாரடிநீ இந்தநிசிநேரத்திலே
பொங்கமுடன்நாங்கள்தின்று பூரிப்படைந்திடவே

## சந்திரவதி சொல்தரு.

மன்னர்செய்தமாதவமே பாலா
விளங்கேபேய்கள்தாக்குறதே பாலா
பொன்னேயுயர்பூங்கரும்பே பாலா
பூதமெல்லாங்கிட்டுதேடா பாலா

## குட்டிபேய் தரு.

ஆச்சுத்தவென்ற வர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

சப்பைக்கறிவேணுமே
தலைக்கறிவேணுமே குமட்டுக்கறிவேணுமே
குலைக்கறிவேணுமே

## சந்திரவதி தரு.

பாலா
கொற்றவனேஎன்மகனே குறுகுதடாபாலா
கொல்லெனப்பேய் வித்தகனேபாலா
வெற்றிசேரும் வருகுதடாபாலா
வேதாளங்கள்

## குட்டிப்பேய் தரு.

துண்டக்கறிவேணுமே
... கறிவேணுமே மிரக்கறிவேணுமே

சந்திரவதி தரு.

| | |
|---|---|
| பையப்பையப் | பூதமெல்லாம்பாலா |
| பார்க்குதடா | யெட்டியதோபாலா |
| கையதனைத் | தொட்டிழுக்கப்பாலா |
| கரும்பேய்கள் | சற்றுதடாபாலா |

குட்டிப்பேய் தரு.

| | |
|---|---|
| யீரக்கறிவேணுமே | இடைக்கறிவேணுமே |
| உரக்கறிவேணுமே | உந்திக்கறிவேணுமே |

சந்திரவதி தரு.

| | |
|---|---|
| உந்தனைநான்காணுதற்கே | பால்ா |
| உள்ளமிருவாடுரேண்டா | பாலா |
| கொத்துகொந்தாய்டாகிலிகள் | பாலா |
| கூடியிதோநெருங்குதடா | பாலா |

குட்டிபேய் தரு.

| | |
|---|---|
| தொண்டைக்கரிவேணுமே | தோளுக்கறிவேணுமே |
| கொண்டுபோகவேணுமே. | கூத்தாடவேணுமே |

சந்திரவதி விருத்தம்.

கணவர்சொற்றடுத்தேனுகில் கற்பினைக்கடந்தேனுகில்
துணையெனவந்தபேர்க்குத் துன்பமேசெய்தேனுகில்
இணையிலாப்பேய்காணீங்க ளெந்தனைப்பிடித்தேயிந்தக்
கணமதிற்கொல்வீரன்றேற் கடுகியேயப்பாற்செல்வீர்.

(பேய்-வ-ம்.) அடே அப்பா இந்தப்பெண்ணரசி யினுடைய கற்பின் சுவாலையானது நம்மைத்தகித்துவிடும் போலிருக்கிறது ஆகையாலிவளைப் பிடித்துத் தின்னமுடியாது அப்பாலோடிப் போய் விடுவோம்.



# சந்திரவதிகுழந்தையை யெடுத்துப் புலம்புகிற பாகம்.

## சந்திரவதிசொல் தரு.

ஐயோமகனேயென்னசெய்வேண்டாயென்றமெட்டு.

இராகம்-கல்யாணி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

வாடாவெந்தனிரு கண்மணியே-பெரு
மாதவத்தால்வந்த விண்மணியே
தேனேகனியே திரவியமே-மிகத்
தித்திக்கும்பாகே செம்பங்கயமே
காடோவுனக்கின்று வாச்சுதடா-அந்தக்
காரிமனம்போலே யாச்சுதடா
பாம்புகடிக்க விறந்தாயோடா-பாவி
பட்டபாடெல்லாம் வீணானதடா
நானினியெவ்வண்ண முய்வேண்டா-உயர்
நாயகமேபதிற் கூறுயடா
உந்தாதைதன்னைப் பிரிந்தேண்டா-மகனே
உன்னையேநம்பி யிருந்தேண்டா
என்வாயில்மண் தனைப்போட்டாயடா-ஐயோ
எப்போதுனைப் பார்க்கப்போறேனடா

## சந்திரவதிசொல் தரு.

கண்ணேயென்கண்மணியேயென்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ஏகம்

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்வேன் ஆரமுதேயடாலோகிதனே
நையுறேன்கண்மணியே நாதனுஞ்செய்கின்றசோதனையோ (ஐ)
வெய்யோன்குலமணியே விற்பனனேமிகுவற்புதனே
பையரவாலிறக்கப் பாதகஞ்செய்தேனோகாதகியான் (ஐ)



மாபாவியானேனடா மாணிக்கமேபச்சைமாகதமே
கோபமென்மீதினுண்டோ கொற்றவனேயருளுற்றவனே (ஐ)
விண்ணாடுசென்றாயோடா வேதமுணர்ந்தருணசாரகனே
எண்ணாதவெண்ணிமனம் ஏங்குதடா தயங்குதடா (ஐ)
காவலரீன்றெடுத்த கண்மணியேயுயர்விண்மணியே
பூவுலகாளவந்த புத்திரனேயெந்தன் ரத்தினமே (ஐ)

## சந்திரவதிமுன்னால்விருத்தம்.

நிறையோசை பெற்றபறையோசை யற்று
நிரையாய் நிறைந்த கழுகின்
சிறையோசையற்ற செடியூடிறக்க
விதியா ரிழைத்த செயலோ
மறையோர்விரக்க வளநாடனைத்தும்
வழுவா தளித்த வடிவே
இறையோனளித்தே மகனே யுனக்கு
மிதுவோ விதித்த விதியே.

(சந்-வ-ம்.) யாதொரு வேதமுணர்ந்த முனிவன் யாசிக்க வளம்பொருந்திய கோசலைநாடனைத்தையும் தானஞ்செய்த கூறிய வேலாயுதத்தையுடைய பார்த்திபர் பெற்ற பாலகா நிறைந்த சப்தத்தைக் கொண்ட வாத்தியங்களின்முழக்கமிலலாமல் நிறைந்திருக்கிற கழுகுகளினுடைய சிறகடித்துக் கொள்ளுகிற சத்தத்தினைக் கொண்ட செடிகளுக்குள்ளே நீயிறக்க பிரமதேவன் விதித்தவிதியா கண்மணி உனக்கா இக்கதிவாய்க்க வேண்டும்.

## சந்திரவதி விருத்தம்.

நன்னகர்நாடிழந்தும் நவிலொணாத்துன்பப்பட்டுஞ்
சொன்னசொற்றவறிடாத துரைதனைப்பிரிந்தும்பாலா
உன்னையேசதமென்றெண்ணி யுயிருடனிருந்தேன்மாண்டா
யன்னையானினிமேலிந்த வவனியிலிருக்கப்போமோ.

## சந்திரவதிசொல் தரு.

என்னசெய்குவேனென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அப்பப்பாமகனேயெந்தன் அருமைப்பாலகனே
இப்புவியிலுன்னையிழந் திருக்கவும்போமோ
உயிர் தரிக்கவு மாமோ (அ)

காலகதியோஅந்தக் கௌசிகன்சதியோ
பாலனேயிந்தப்பார்வனந்தனிற் பாம்பாலிறந்தாய்
ஆவி தேம்பித் துறந்தாய் (அ)

செந்துவர்வாயாஅதி தீரனேஐயா
சிந்தைநைந்துவாடுமெந்தனைத் திரும்பிப்பாராயோ
முத்தம் விரும்பித் தாராயோ (அ)

வன்னமாமயிலேசோலை வாழ்ந்திடுங்குயிலே
என்னபாவமுன்செய்தேனோ யேங்கிடலானேன்
நேய ரோங்கிட லானேன் (அ)

சோதியைக்கோதிமிகு தோத்திரங்கூறி
பூதலத்திலுன்னைப்பெற்ற புகழுதம்போச்சே
யாரும் இகழ்வு மாச்சே (அ)

கற்பகத்தருவே எழிற் காந்தியார்மருவே
விற்பனவிவேகமுள்ள வேந்தனல்சுதனே
திட வேளில்வேள் மதனே (அ)

(சங்-வ-ம்.) கண்மணி நாடுநகரம் யாவுமிழந்தும் சொன்ன சொல் தவராதமன்னராகிய நினதுபிதாவைப்பிரிந்தும் அந்தணர்க் கடிமைபுகுந்து சொல்லொண்ணுத் துன்பமடைந்தும் அவையெல்லாம் எண்ணுது "பெறுமவற்றுள்யாமறிவதில்லை யறிவறிந்த மக்கட்பேறல்லபிற" என்பதற்கிணங்க உன்னையே சதமெனவெண்ணியிருந்ததற்கா என்னைத்தனியாகவைத்து இவ்வனத்திலிடமாக வந்திறந்தனை இனிமேலும் நானிந்தப் பூமியின்கண் உயிருடனிருக்கவா வேண்டும்.

---



342

சந்திரவதி விருத்தம்.

கற்பகக்கொழுந்தேனே கற்கண்டேயினியபாகே
விற்பனவிவேகமுள்ள வேந்தனார்மகனேயாதித்
தற்பரனருளோவந்தத் தாமரைமலர்வாழ்வேதன்
சற்பனைதானோவிந்த த்தருவனத்திறக்கலானாய்.

## சந்திரவதி சொல் தரு.

அன்னமேநான் தொட்டாட்டஎன்ற வர்ணமெட்டு.

இராகம்-சாமா-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயோவென்பாலனே அன்புயர்சீலனே
அடவிதனையடுத்தாய் உயிர்விடுத்தாய்மண்ணிற்படுத்தாய்
ஆறுமோமனந்தேறுமோ மனந்தேறுமோமனம் தே-தே-தே

இந்தவிதிக்கோடா வீரைந்துமாதமாய்
என்னுடல்தாங்கிப்பெற்றேன் துயருற்றேன்கெதியற்றேன்
என்செய்வேன்மகனே என்செய்வேன்மகனே எ-எ-எ

கட்டிக்கரும்பே கற்கண்டேயமுதேநான்
காணுவதெப்போது வருந்தாதுநீயுமோது
கண்மணிஉயர்விண்மணி உயர்விண்மணி வி-வி-வி

மைந்தனெங்கேயென்று மன்னன்வந்துகேட்டால்
மாதென்சொல்வேன்மகனே மதிமுகனேஅருளகனே
மலங்குதேசித்தங்கலங்குதே சித்தங்-க-க-க-க

பொன்னகர்க்கின்றுநீ யென்னையிங்கேவைத்துப்
போகக்காலம்நேர்ந்துதோ மனம்வந்துதோசித்தம்நொந்துதோ
புகலுவாய்மகனே புகலுவாய்மகனேபு-பு-பு

எல்லாமிழந்தநீ யிருந்தாற்போதுமென்
றெண்ணியிருந்தேனே அன்னைநானேமண்ணிற்றனே
யேங்குறேன்மகனே யேங்குறேன் ஏ-ஏ-ஏ-ஏ

(சங்-வ-ம்.) பாலகா பெற்றதாயென்ற எண்ணம் சற்றேனுமில்லாமல் என்னை யிங்கு தனியாகவைத்துவிட்டு நீ பொன்னுலகஞ்செல்லலாமா? இது நீதியா? அன்றியும்அன்றியும்புனது பிதாவா

னவர் என்னிடம் வந்து புத்திரனெங்கே யென்றுகேட்டால் மறுமொழி என்னசொல்லுவேன் கண்மணி.

சந்திரவதி விருத்தம்.

தரணியோர்மூன்றுமுள்ளோர் சந்ததம்வந்தேற்பூந்
சரணமேவணங்கவோர்பூச் சக்கரக்குடைக்கீழ்ச்செங்கோல்
திரணியமாகவோச்சு திருதுபர்தன்மகனேநிற்கிம்
மரணம்வந்தெய்துமென்று மாதாவுமறிகிலேண்டா.

## சந்திரவதி சொல் தரு.

தங்கமேயெந்தக்காலம் வந்திதனையென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மகனேயுந்தனுக்கிந்தமரணம் வருமென்றறியேண்டா
பகலவன்குலமணியேமுனஞ்செய்பவமோ வறியேண்டா-ஐயோ()

மன்னவன்செய்துமாதவந்தனில் வந்தசீமானே
பொன்னேமணியேபுனத்தின்கிளியேபொற்பார்புமானே-ஐயோ()

கரும்பேயரும்பேகதியேமதியே காவினற்குயிலே
சுரும்பேசுடரேசுடரினொளியே தோகையார்மயிலே-ஐயோ (ம)

தங்கமேயிளஞ்சிங்கமே தாவில்கற்பகத்தருவே
அங்கணுலகமெங்கினும்பரி மளித்திடுமருவே-ஐயோ (மக)

வேலைகடைந்தகாலம்பிறந்த மேன்மையமுதமே
கோலமாம்பொய்கையதனிலேயிதழ்குவியாக்குமுதமே-ஐயோ(ம)

அன்னையானுந்தனருகினில்வந்தே யழுவதிப்போது
சொன்னமேகேட்கவில்லையோவதனைச் சொல்வருந்தாது-ஐயோ(ம)

வஞ்சக்கோசிகமாமுனிவன்றன் மனதுபோலாச்சே
எஞ்சாதீசனைவேண்டியின்னநா ளின்றபலன்போச்சே-ஐயோ (ம)

(சந்-வ-ம்.) அப்பா தேவதாசா பத்துமாதஞ்சுமந்து பெற்ற தாயாகியநான் உன்னருகில்வந்து வருந்திக்கூப்பிடக் கூப்பிடப் பேசுகிறாயில்லையே யான்கூப்பிடுவது செவிக்குக் கேட்கவில்லையா?



அல்லது சிறுவனெனத்தெரிந்தும் காட்டுக்கனுப்பினாளே இவளுடன் நமக்கென்னபேச்சிருக்குற தென்ற கோபத்தை வகித்தவனாக உறங்குபவன் போலிருக்கின்றாயா?

சந்திரவதி விருத்தம்.

செந்துவர்நிகர்த்தவாயுந் தெள்ளமுதனையசொல்லும்
சந்திரபிம்பம்போன்ற சம்ப்ரமமுகமுந்தீதில்
சுந்தரவடிவும்வாய்ந்த சுகுணனேயினிமேலுன்னை
யெந்தச்சென்மத்திற்கண்டென்னிருதயமகிழப்போறேன்

## சந்திரவதிசொல் தரு.

சேருமுன்னேசேவல்கூவுதேயென்றமெட்டு.

இராகம்-தேசிககமாஸ்-தாளம்-யேகம்.

பல்லவி.

எந்தச்சென்மமுந்தனைக்காண்பேன் ஆ-என்மகனே

அநுபல்லவி.

சுந்தரமிகுந்தபாலா சுபகுணம்வாய்ந்தசீலா
ஐந்திரண்டுமாதந்தாங்கியே யன்பாய்ப்பெற்றேனே (எ)

சரணங்கள்.

உன்னைநம்பியிருந்தேனே வுலகமதைவிட்டியானே
என்னைத்தனியாகவேவிட்டே யிறந்திட்டாயே (எ)

அம்போருகக்கையனே யந்தளிர்நிகர்மெய்யனே
தம்பமெனக்காரினிமேலே தாணியிலே (எ)

இந்தவிதிவருமென்றே யெண்ணிலேன்பாதகியென்றும்
மைந்தனேநானென்னசெய்குவே னெவ்வாறுய்குவேன் (எ)

மாற்றுயர்ந்ததங்கமே வலிமையுள்ளசிங்கமே
சாற்றொணாத்துயரத்தாலிங்கு தயங்குறேண்டா (எ)

கண்ணுக்குளொளிர்மணியே காட்சியுற்றவின்மணியே
வண்ணமலர்வாழுமளியே வாகார்கிளியே (எ)

(சங்-வ-ம்.) பாலகா கொடிய சண்டாளியாகிய யான் உன்னை யெந்தச்சென்மத்திற்பார்க்கப்போகின்றேன் இவ்வுலகின்கண்ணெவ்வாறுன்னைப் பிரிந்துய்வேன் ஐயோகண்மணி உனக்கா இந்த விதி வரவேண்டும்.

சந்திரவதி விருத்தம்.

முன்னையூழ்வினையோவந்த முனிவன்செய்கபடந்தானோ
மன்னனுநானுஞ்செய்த மாதவக்குறையோயாதோ
நன்னயமகனேகாசி நாட்டினிலுனையிழந்தே
யன்னையான்கொடியபாவி யாகினேனாகினேனே.

## சந்திரவதி சொல்தரு.

வாவாவாவெனக்கூவியென்றமெட்டு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி

ஆ ஆ ஆ எந்தனருமைமகனே பாவியானேண்டா
பாவியானேண்டாவீணாய்ப் போனேண்டா.

அநுபல்லவி.

மாதாமரைமலர் மீதினில்மேவுகின்ற
வேதனுமோர்ந்துவெகு சூதாகவேயிழைத்தவிதியிதுவோ
மகனேவிதியிதுவோ முனிசெய்சதியிதுவோ (ஆ)

சரணங்கள்.

சொற்றவரும்வந்தெனை நற்றவஞ்செயதுமேயான்
பெற்றமகனுமெங்கேபொற்றொடி யென்றாலென்னகூறுவேண்டா
என்னகூறுவேண்டா மனந்தேறுவேண்டா (ஆ)

வன்னி வழிமறிக்க மன்னவன்விழப்போக
அன்னைநான்வீழ்வேனென்று சொன்னநற்செங்குமுதவாயோனே
செய்யவாயோனே ஆகந் தாயோனே (ஆ)

பாவியென்வயிற்றினில் ஆவலுடன்பிறந்து
பூவுலகிலடைந்த கேவலம்போதுமெனப்பட்டாயோடா
மகனேபட்டாயோடா உயிர்விட்டாயோடா (ஆ)



(சங்-வ-ம்.) பாலகா கொடியசண்டாளியாகிய யென்வயிற்றிற் பிறந்து இப்பிரபஞ்சத்தினிடமாக விதவனாயடைந்த கஷ்டம் போதும் இனிமேலு மடையவாவேண்டுமென்ற வுத்தேசத்தைக் கொண்டா இவ்வனத்தில்வந்திறந்தனை ஐயோகண்மணி நாடுநகரம் யாவுமிழந்து ஆரண்யத்தில் வரும்போது அக்கினிபகவான் வழியைமறித்துக்கொள்ளவும் மன்னவர் அவ்வக்கினியில் விழப்போகையில் பாலகனாகிய யானிருக்கும்போது நீங்கள்வீழ்வதுசரியல்லவென் றுரைத்த வுனது செய்யவாயினால் அன்னையாகிய வெனது மன மகிழ வொருவார்த்தை சொல்லலாகாதா?

சந்திரவதி விருத்தம்.

வெம்பியபசியால்நொந்து வேதியர்வருதிபோலை
கும்பதாய்மிருகம்வாழுங் கொடுவனத்திங்குவந்து
அம்புயக்கரத்தாற்றெற்பை யறுத்திடும்போதிப்புத்தில்
பம்பியேநாகஞ்சீறிப் பதட்டமாய்த்தீண்டலாச்சே.

## சந்திரவதி சொல்தரு.

சுந்தரேசா யெந்தனையாள்வாயென்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - காபி - தாளம் - சாப்பு.

கண்ணிகள்.

ஐயோபாம்புதீண்டவும் விதியோவிதியோ
அடுத்துனைக்கடுகடுத்துநஞ்சுடைப் படத்திறைச்சீ
ஐயா-மெய்யா அந்தளிர்க்கையா (ஐ)

வையகந்தனிலெப்போது காண்பேன்காண்பேன்
மகனேமாமதிமுகனேநல்லரு ளகனேசீருயர்
வாகா-யோகா வாரிதிரூழும் (ஐ)

கண்ணேகண்ணின்மணியே கனியேகனியே
கதியேபூரணமதியேசொல்லெர் ணிதியேசோதியார்
காசி-நாதன் கருதிச்செய்சதியோ (ஐ)

வள்ளல்தவத்தால்வந்தமாங் குயிலேகுயிலே
மருவேகற்பகத்தருவே வண்ணமாருருவேயன்னையான்
வாடி-நாடி வருந்தநோன்வாராய் (ஐ)

சந்திரவதி விருத்தம்.

நாய்நரிபேயின் கூட்ட நடுவினி லுன்னைக்கண்டு
வாய்திறந்தரற்றிமெத்த மயங்கியேதியங்க லுற்ற
தாயெனைநோக்கிநீயுஞ் சந்தோஷமாகவேசெவ்
வயயினைத்திறந்தோர்வார்த்தை வழுததவுமாகாதோடா

சந்திரவதிசொல் தரு.

இவராமேயெந்தன் துரையென்ற மெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாலாவுன்வாய்திறந்தோர்வார்த்தை பகரலாகாதோ
பரதேசியெனைநீயுமேறிட்டுப் பார்க்கப்போகாதோ

மைந்தனேநீயிந்தவனத்தில் வந்திறந்தாயோ
உந்தனன்னைசிந்தைவாடுதற் குறுதிகூறுயோ

அருந்தவத்திலேபெற்ற வாசைக்கண்மணியே
கருங்கடல்சூழுலகிலெப்போக் காண்பேன் விண்மணியே

கண்ணேபனிமதியேநிதியே கற்பகத்தருவே
வண்ணமிகுமயிலே குயிலே மாசிலாமருவே

நாய்நரிபேய்நின்னைச்சூழ்ந்து நண்ணவும்விதியோ
காய்சினமேகொண்டவந்தக் கௌசிகன்சதியோ

சந்திரவதிவிருத்தம்.

ஆலமுண்டோன்றன்செம்பொ னடியினைமறந்திட்டேனோ
வேலனையனையரூபவேந்தன் சொற்றவறினேனோ
தாலமீதெழியோர்தம்மைச் சலனமாய்வைதிட்டேனோ
பாலனேயுன்னைப்பெற்றும் பாதகிமலடியானேன்.

சந்திரவதிசொல் தரு.

வாயை நீ திறந்தென்ற வர்ணமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மைந்தாநானுன்னைப்பெற்றும் மலடியானேண்டா
இந்தவிதியோகாண யான்வளர்த்தேண்டா



கற்பகக்கனியே எந்தன் கண்ணேநின்னைநான்
எப்பிறப்பினில் கண்டு இன்பங்கொள்வேன்தான்

வாலைவயதில்நீ பாரை மடியக்காலமோ
மூலமறைதேர் அந்த முனிசெய்கோலமோ

அற்புதக்கிளியேயுன்னை யன்னையானிழந்து
இப்புவிதனில்வாழ்ந்தால் ஏற்குமோதுணிந்து

பாற்கடலிலே யுதி பனிமிகுமதியே
வேற்கரங்கொளும் அந்த வேள்நிகர்நிதியே

சந்திரவதி அகவல்.

இராகம்-ஆரபி.

திருவுறைமார்பன் செல்வனையனைய
ஒருவனவெந்தனுத்தம மகனே
உந்தையுயானு முள்ளங்களித்து
இந்தநற்றாணியி லிரவியின்மரபு
மலைபினுச்சியில் வைத்ததீபம்போற்
றலைமையாய்விளங்கச் சந்ததியிலையென
அரியயன்தேடியு மறியாப்பாதன்
திரிபுரதகனஞ் செய்தமுதல்வன்
கொன்றையுங்கங்கையுங் குழவித்திங்களும்
மன்றலஞ்சடையில் வைத்தபரசிவன்
தன்னைநினைந்து தவமதுபுரிய
அன்னவருயர்வரமதனை லெனக்குக்
கருப்பந்தரித்த கனமுயர்முதலாம்
விருப்புறுந்திங்களில்மேனிபூரித்தே
இருந்தேனிரண்டாந்திங்களிலென்னிடை
திருந்தவேபருத்தத் திடமுலையிம்ம
மாதமோர்மூன்றில் மதிமுகம்வெழுத்துச்
சீதளக்கொங்கைச் சிறுநுனிகருத்துப்
பசியநரம்புகள்பாங்கா யோடி
யிசையுமெய்சற்றினைத் திடலானேன்
நான்காந்திங்களில் நல்கியமசக்கையா
லோங்கியுணவையொழுத்தேனைந்தாம்

திங்களிலெந்தன் தேகம்புடங்கொளுந்
தங்கம்போலத் தளதளப்பாயின
அடிவயிறெல்லா மாறுமாதம்
திடமுடன்கனத்துச் சிறப்பாயுற்றது
ஏழாந்திங்களிலினிய பாற்சாதந்
தாழ்விலாதருந்திச் சந்தோஷமுற்றேன்
நேமமாயெட்டாமாத நிறையதாயச்
சீமந்தம்யாவருஞ் செய்திடப்பெற்றேன்
வன்மையாயொன்பதா மாதஞ்சிற்றுண்டி
இன்பதைவெறுத்துத் தியக்கமெய்தினேன்
பத்தாமாதம் பண்புடனிடுப்பு
மெத்தவேவலித்து விம்முதலான
கொங்கைகளிற்பால் கொப்புளித்தொழுக
மங்களதினத்தில் வழங்குநல்லோரையில்
அங்கணிலத்துளோ ரனைவரும்புகழச்
சிங்கமேயுன்னைச் சீருடன்பெற்றேன்
பின்புன்தந்தை பிறங்கவேசாதகம்
அன்புடன்சோதிட ராலேகணித்துச்
சக்கரைவழங்கிச் சதுர்வேதியர்க்குத்
தக்கசோடசதானஞ் செய்துனக்கு
ஆடையுடுத்தி யணிபணிபூட்டிப்
பீடுயர்முரசம் பேரிகைமுழங்க
உலோகதாசனென் றுயர் பெயர்சூட்டி
இலகவேயுன்னை யெடுத்துவளர்த்துச்
சற்குருவிடத்திற் சகலகலையுங்
கற்கவேசெய்து களிப்புடன்கேட்டு
வாழுநாளூழ்வினை வலியால்முனிக்கி
ஆழிசூழுலக மனைத்துமளித்து
கடனுக்குட்பட்டுக் காசியிலடைந்து
விடமதையனைய வேதியர்க்கடிமையாய்
அடைந்தரிச்சந்திர வண்ணலைப்பிரிந்து
மிடைந்துபற்பல வேலைகள்செய்தும்
அன்னைநானின்முக மதனைப்பார்த்தே
யின்னாள்வரையுமிருந்தே னெவர்செய்



வஞ்சமோகோசிகமா முனிசூதோ
கஞ்சமலரோன் கற்பனைதானோ
அடர்வனம்வந்துவா ளரவந்தீண்டப்
படர்விடமேறியிப் பதியிலிறந்தாய்
எந்தனுக்காதர வாரிப்புவியில்
மைந்தனேமாதவ மகனேயென்கண்ணே

## சந்திரவதி குழந்தையைமயானத்திற்குத் தூக்கிச்செல்லுகிற பாகம்.

சந்திரவதி விருத்தம்

உன்னுடன்யானிறந்திடுவே னெனத்துணிந்தா
லுனையெடுத்திங்கடக்குதற்கோ வுரியாரில்லை
பொன்னளித்துநம்மைவிலை கொண்டவந்தப்
பூசுரன்மாகோபிபெண்டீர் பொல்லாப்பாவி
அன்னவர்களுமதிபோல் விடியுமுன்ன
மங்கணுகாதிருந்தாலோ துன்பம்ரொம்ப
வென்னசெய்வேன் நீயசுடுகாட்டுக்கேக
வெழுந்திருடாவித்தருண மிராசகோவே.

சந்திரவதி சொல் தரு.

ஐயோவினியென் செய்வேன்முனிநாதா வென்றமெட்டு

இராகம் - தஞ்சரி - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

சுடலைக்குப்போவதற்கே
சுபமாகவெழுந்திராய்
விடியுமுன்செல்லாவிடில்
விபரீதமாகவே
மங்குல்கவிர்ததினால்
வழியோதெரியவில்லை
எந்தவழியைக்கண்டு.
ஏகுவேனுன்னைக்கொண்டு

என்மகனே-நீயுஞ்
பாலகனே
மறையோரே-வெகு
பேசுவாரே
நிகத்தானே-செல்லும்
சீமானே
ரத்தினமே-ஐயோ
முத்தினமே





நாய்நரிபேயெல்லாஞ்
நாடிப்பூதங்கள்பின்னே
யீமமெங்கிருக்குதோ
எவ்வளவுதொலையோ
பிணப்புகைவீசுதே
பிளக்குஞ்சத்தங்கேட்குதே
கொழுந்துவிட்டெரியுதே
கூடிச்சண்டையிடுதே
இதுதான்சுடலைகண்டேன்
இறங்குவாய்தோளைவிட்டே

சுற்றுதேடா-உன்
பற்றுதேட
வறியேண்டா-அ
குறியேண்ட
யென்மகனே-த
வித்தகனே
யென்மகனே-நாய்க
பாலகனே
கண்மணியே-சிரா
விண்மணியே

(சந் - வ - ம்.) பாலகா கொடிய ஆரண்யத்தி லிருந்த
மயானத்துக்கு வரவழிதெரியாமல் நாய், நரி, கழுகு, பேய், இவை
யெல்லாம் பின்பற்றி வருத்தஞ் செய்யத்திகைத்து காடு, மேடெல்
லாம்நடந்து சிவபெருமான் கிருபையால் இம்மயானம் வந்துசே
ந்தேன் தோளைவிட்டுக் கீழேயிறங்குவாய் கண்மணி.

பொது வசனம்.

இவ்விதம் சந்திரவதி காலகண்டையரிடம் உத்தாரவுபெற்று
ஆரண்யஞ்சென்று தேவதாசனைத் தேடிக் கண்டெடுத்துத் தோ
ளில்வைத்துக்கொண்டு மயானம் வராளுள் இனிமேல் அரிச்சந்தி
ரன் சுடலை காவல் புரிவதும் அச்சமயம் மந்திரி தேடிவந்து
கண்டுகொள்வதும் சந்திரவதி குழந்தையைத் தகனஞ்செய்வதும்
இருவருக்கும் தர்க்கம் நடப்பதும் காணுக.



# அரிச்சந்திரன் சுடலைகாவல்

348

## புரியும் பாகம்.

### அரிச்சந்திரன்சொல் தரு.

சிவமேயென்கெதியதைப்பாரென்றவர்ணமெட்டு.

இராகம் - முகாரி - தாளம் - சாப்பு.

பல்லவி.

விதியோ கோசிகமுனி சதியோ

அநுபல்லவி.

பதிமனைவிபாலன் கிதிமிகவிழந்தும்
சதமெனவேயிர்ந்த் திசுடலைகார்க்க (வி)

சரணங்கள்.

பெலமார்சிகை விரிதலைப்பேய்கள்
நலமாய்ப்பிணக் தினவந்தநாய்கள்
பெருத்திருக்குமிவண் வருத்தம்வெகுவாக்.
கருத்திலிலடைந்தே திருத்தமாயிருக்க (வி)

சம்போசிவ சங்கரதேவா
அம்போருகப் பாதனேமூவா
தாணியதனையே பரியாசனத்தாற்று
நெறியாயாண்டயான் பறையனுக்காளாக (வி)

கங்கையணி காசிவிஸ்வேசா
மங்கைபாகம் வைத்தசர்வேசா
கருதரிதாகிய பரமேசாவுந்தனற்
நிருநகரில்வந்தித் தருணம்நீசனுக (வி)

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா யாதொருகுற்றமில்லாமல் கோசலைநாட்டையாண்டயான் அன்னாட்டையிழந்ததுந் தவிர உன்நகராகிய இக்காசியம்பதிக்கு வந்து பத்தினி புத்திரனிருவரையும் விற்று பறையனுக்காளாகி நீசவங்கத்தைப்பெற பிரமன் விதியோ அல்லது கோசிகமுனிவன் சதியோ அறிகிலேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சேருமுன்னே சேவல்கூவுதே யென்றவர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ரூபகம்.

பல்லவி.

காலகெதியிதுவோயீசா     காசிவிஸ்வேசா (கா)

அனுபல்லவி.

சீலமுள்ளநகர்நாடு     தேர்பரிபதாதியோடு
பாலனுமிழந்துமேயின்று     இப்பரனுற (கா)

சரணங்கள்.

சேய்மனைவிதன்னுடனே     சேர்ந்திருந்ததற்கிவிடம்
பேயுடன்பேயதாய்வாழப்     பிழையென்செய்தேன் (கா)

செங்கோல்பிடித்திருந்த     செங்கரமதனிலிந்த
வெங்கோல்பிடித்திடவுமே     வேந்தனெனது (கா)

இறையவரெல்லாருந்தான்     யேவல்செய்யவேவாழ்ந்தயான்
பறையனுக்காளாகவின்னாள்     பவமென்செய்தேன் (கா)

சுத்தகந்தவாசமேற்ற     தூயவனுனிங்குற்ற
செத்தபிணவாடையேற்கவும்     தீவினைதானோ (கா)

## அரிச்சந்திரன்சொல் தரு.

கற்குதன் ஹாமுஜே யென்றவர்ணமெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சிவமேயுந்தன்பொற்பாதஞ்     சேவித்தபலனிதோ
தேவிசேயையும்பிரிந்து     தீயிடுஞ்சுடலைவந்து
சேர்ந்தனன்-சேர்ந்தனன்     சேர்ந்தனன்-சேர்ந்தனன் (சி)

மானிலமதனில்வாழும்     வயவேந்தரெந்தனுடும்
வருதிகேட்டதும்போக     மன்னனீசனுக்காளாக
வைத்தாயே-வைத்தாயே     வைத்தாயே-வைத்தாயே (சி)

பளிங்கிமாமாளிகைமேல்     பாங்காயுற்றதற்கேயின்னாள்
பரணிதின்மீதிருக்கப்     பாதகஞ்செய்தேனோமிக்க
பாவியான்-பாவியான்     பாவியான்-பாவியான் (சி)



கோதில்லாவின்னகரத்தார்     கொண்டுவரும்பிரேதத்தை
குறைவில்லாமற்சுடவும்     தொழும்புகையென்மேற்படவும்
கோலமோ-கோலமோ     கோலமோ-கோலமோ (சி)

வாய்க்கரிசிமுழத்துண்டு     வாகுடன்காற்பணங்கொண்டு
மயானகாவல்புரிந்து     வாவேசெய்தாய்நினைந்து
வஞ்சமோ-வஞ்சமோ     வஞ்சமோ-வஞ்சமோ (சி)

(அரி-வ-ம்.) ஆ! காசிநாதா உனது பாதாரவிந்தமே கெதியென நம்பியிருக்கும் அடியேனை இவ்விதகஷ்டத்துக்குள்ளாளாக்கலாமா

## அரிச்சந்திரன்சொல் தரு

பீசாயிது தர்மமா என்றவர்ணமெட்டு.

இராகம் - நாதநாமக்கிரியை - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

யென்னபாதகஞ்     செய்தேன்-ஜெக
தீசாயெவரை     வைதேன் (யென்)

(அரி-வ-ம்.) ஐயே! காசிநாதா, விஸ்வேசா, கங்காதரா, கருணாகரா, கயிலைவாசா, நீலகண்டா, மாதேவா, நாகபூஷணா, திருநேத்ரா, சந்திரசேகரா, சத்ருதாந்தா, காமதகனா, ஜின்மயசொருபா, நடராஜா, கமலப்பதநாதா, ஆவாதசாந்தநாயகா மங்கைபாகா, சதாசிவா, சுந்தரேசா, ஜெகதீசா யான் யென்ன பாதகஞ்செய்தேன் எவரைவைதேன் இக்கெதி யாக்கினை.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சீலமார் ராஜாங்கம்     போய்-அலங்
கோலதீசாங்க     மாக (யென்)

(அரி-வ-ம்.) ஹே விஸ்வேசா சாமுத்திரிகாலக்ஷணத்திற்கு மாறுபடாத தாமரை மலர்போன்ற பாதமும், மாமிசம்போலச் சிவந்த கால் நகங்களும். எலும்புகள் தெரியாமலிருக்கிற கணுக்காலும், பூச்செண்டைப்போல மிருதுவாயுங் குண்டாயுமுள்ள குதிக்காலும், சிருத்தாங் குண்டாயும் ரோமம் மூடிக்கொண்டிருக்கிற கண்டைக்காலும், பெரிதாய் இரண்டும் சமமாக மாமிச மூடிக்கொண்டி

ருக்கிறமுழங்காலும்,யானைத்துதிக்கைபோன்றதுடைகளும்,தவளை இடுப்பைபோன்ற இடையும்,சிம்மத்தின் இடையதுபோன்ற ஆசனமும்,வனசமலரின் இதழைப்போன்று வலதுபக்கத்தில் திரும்பி இருக்கிற உந்திச்சுழியும்,குற்றமில்லாத வயிற்றின் மடிப்பும், பக்கங்கள் கொழுத்து மிருதுவாய் இடது பக்கத்திலிருந்து வலதுபக்கத்துவரை சுழி உள்ளரோமங்களும், எடுப்பாயும் விசாலமாயும் கெட்டியாயும் புஷ்டியாயுமுள்ள மார்பும் யானை கும்பஸ்தலத்தை போலும் உயர்ந்து சதை இல்லாமல் வலதுபக்கத்திருந்து இடது பக்கத்திற்கு வருமடிப்புகளும், ரோமங்களும் உடையதோள்களும் வேர்வைவிடாமல் விசாலமாய் உயர்ந்து சுகந்தமாய்விசேஷ ரோமம் உள்ளனவாகிய கக்ஷங்களும், கொழுத்து எலும்புகள் காணப்படாமல்ரோமங்கள் உள்ளமுதுகும், குண்டதாயும்யானைத் துதிக்கையைப்போலவரவரச்சிருத்து நீளமாய்முழங்கால்வரையும் நீண்டு இரண்டுஞ்சமமாய் இருக்கிற மணிக்கட்டுகளும், காந்தியும் விசாலமுமுள்ள உள்ளங்கைகளும், தோல்மடிப்பு களில்லாத கை விரல்களும், சங்கம்போன்றகழுத்தும்,நன்றாய்ச் சதை பிடித்திருக்கிற மோவாயும் நீண்டுசுருத்து மிருக்கிறமீசையும் சிவப்புநிறம் பொருந்திய வாயும், நீண்டதாயுள்ள மூக்கும், யானையின் விலோசனம்போன்ற கண்களும்,பூரணசந்திரன் போன்றமுகமும், மூன்றும் பிறையைப்போன்ற புருவங்களும், ஊங்கைப்போல் துனியாயிருக்கிற காதுகளும், குடைபோலுவட்டமான சிரசும், உள்ளயெனது ராஜ லெட்சணங்களெல்லாம் இழிவுற்று ஈசனுடைய அங்கம்போலாக யென்னவினை செய்தேன்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

நாடாண்டி ருந்ததும்போய்சுடு
காடாண் டிருக்கவுமே (யெ)

முன்னால் விருத்தம்.

விழுந்தவஞ்சிறை வண்டினமிதிப்பமெல்லரும்பு
கிழிந்துவார்தருதேறலுங் கிளர்சினைப்பலவின்
பழங்கனிந்துவீழ்தேறலும் பழனங்கடோரும்
வழிந்துபாய்தலின்வாஞற வளர்வனசென்னெல்,

---



(அரி-வ-ம்-) பொன்மயமான சிறகுகளையுடைய ப்ரமரமென்னும் வண்டினங்களானவை மேல்விழுந்து மிதித்தலினால் மெல்லிதானபூஞ்செடிகளிலுள்ள அரும்புகளானவை இதழ்கள்கிழிந்து அவைகளிலிருந்துஒழுகுகின்றதேனும்மிகுந்தபிரகாசமாய் விளங்கிக் கொண்டிருக்கிற கிளைகளுடைய பல்மரங்களின் பழங்களானவை கனிவதினால் அவைகளிலிருந்து வடிகின்றதேனும் ஆறுகப்பெருக்கெடுத்து வயல்களிற்போய்ப் பாய்தலினால் செந்நெற்பயிர்களானவை ஆகாயத்தைத் தொடும்படியாகவளர்ந்து செழிப்புறக்கூடிய கோசலநாட்டைக் கீர்த்தியர்கயான் ஆண்டிருந்ததைத் தவிர்த்து இக்கொடிய மயானத்தைக்காத்துக் கொண்டிருக்க யென்னதீங்குசெய்தேன்.

---

## அரிச்சந்திரன் சொல்தரு.

துங்கக்கிரீடமே போய்-கரி
தங்குந்துணிகஞ் கொள (எ)

(அரி-வ-ம்.) ஓ ஜெகதீசா எனதுபிதாவாகிய திருசங்குசக்ரவர்த்தியானவர் மங்களதினத்தில் எனக்குச்சூட்டிய நவரத்னங்கள் இழைத்த கிரீடத்தையிழந்து தற்சமயம் கரிமயமானபழந்துணியைச் சிரசில் புனைந்துகொள்ள என்ன கொடுவினைபுரிந்தேன்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு.

செங்கோல்பிடித்த கையில்-சவஞ்சு
டுங்கோல்பிடித் திடவே (எ)

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

வெள்ளமும்பறவையும் விலங்கும்வேசியர்
உள்ளமும் ஒருவழியோடகின்றவன்
தள்ளரும்புகழரிச்சந்திரப் பெயர்
வள்ளல்வள்ளுறைய யில்மன்னர்மன்னனே

(அரி-வ-ம்.) ஓ கருணாகரா ஆற்றுவெள்ளமும், பக்ஷிகளும், மிருகங்களும் விலைமாதர்களுடை நெஞ்சமும், ஒரேவழியிலே செல்லும்படியாகச் செங்கோல்புரிகிறவன் உறைமுடிக்கொண்டிருக்கிற வேலாயுதத்தையும் வள்ளன்மையையும் அளவில்லாத கீர்த்தி

யையுமுடைய அரசர்களுக்கெல்லாமரசனான அரிச்சந்திரச் சக்கரவர்த்தி ஒருவன் தானென்றுஉலகிலுள்ளோர் வியந்துரைக்கும்படியாக அரசுபுரிந்து எனதுகரத்திற் பிடித்திருந்த செங்கோலையிழந்ததற்சமயம் இறந்த பிரேதங்களைச் சுடக்கூடிய இந்தக் கட்டையைப் பிடிப்பதற்கு நான் என்னவல்வினைபுரிந்தேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு

பொன்னாவம்பூண்ட  தோளில்-மாசு
மன்னுங்கம்பளி  போர்த்த  (ஏ)

(அரி-வ-ம்.) யேகாசிநாதா அடியேன்இராஜ்யபட்டாபிஷேகத்தையடைந்து சீர்த்தியாக அரசுசெய்து வரும் நாளில் ஓர்நாள் சில மாதவர்கள் அனேகயிடங்களுக்கு யாத்திரை சென்று அயோத்திக்கு வந்து என்னைச் சபாமண்டபத்திற் கண்டார்கள் யான் அவர்களை வணங்கி ஐயாவேதியர்களே எங்குஎங்கு சென்று எந்த எந்தத்தீர்த்தமாடினீர்கள்என்ன அதிசயத்தைக்கண்ணுற்றீர்களென்று வினவ அதற்கவர்கள் அநேக இடங்களுக்கு யாத்திரை சென்று கன்னோசி நாட்டையடைந்து கண்டகி என்னுந் தீர்த்தமாடித்திரும்பிவருங் கால்கன்னமாபுரியில் ஓர் அதிசயத்தைக் கண்ணுற்று உமது சமுகம்வந்தோம் என்றார்கள் நல்லது அவ்வதிசயம் என்னவென்று வினவினேன் அதற்கம்மாதவர்கள் அந்தக் கன்னமாபுரியையாளுகிற சந்திரகுலத்து மதிதயமகாராஜன் அருந்தவஞ்செய்து ஓர் புத்திரியைப் பெற்றிருக்கிறான் அம்மாதைப்போல இவ்வுலகத்திலும் அவ்வுலகத்திலும் இல்லையாதலால் அக்கன்னிகை உனக்குத்தான் உரியவள் இதுதான் அதிசயம் என்றார்கள் அதைக்கேட்டயான் அன்னவர்களிடத்தில் அப்படியானால் தாங்களே சென்று மதிதயனிடம் எனக்கு அம்மாதைக்கேட்டு விவாகம்செய்து வையுங்களென்று சொன்னேன் அதற்கம்மாதவர்கள் சம்மதித்துக் கன்னமாபுரிசென்று மதிதயனைக்கண்டு பேசுகையில் யென்னை அழைத்து வரும்படியாக அன்னவன்சொல்ல அதைக்கேட்டுமாதவர்கள் என்னிடத்தில்வந்து தங்களை மதிதயராஜன் அழைத்து வரச்சொன்னானென்று கூற யான் சந்தோஷித்து அக்ஷணமே ரதகஜதுரகபதாதியென்ற நான்குவகைச் சேனையோடு கன்னமாபுரியைநோக்கி மருதம் முல்லையென்ற நிலங்களைக் கடந்து பாலைநிலத்தில்



வருகையில் அந்நிலத்திற்கு இறைவியாகிய பகவதி, நித்தியகல்
யாணி, சவுந்தரி, காளி, திரிநேத்திரி, யாமளை, புவனபுரந்தரி,
கௌரி என்ற திருநாமங்களையுடைய அம்பாள் பைரவியினுடைய
ஆலயந்தோன்றவுடனே யான் தேரைவிட்டிறங்கித் தனியாகச்செ
ன்று அவ்வாலயத்தின் முன்பாகக் கல்லாயிருந்ததேர் குதிரை,
அம்பு, வில் நான்கையும் பார்த்து வுட்பிரவேசித்து அம்பாளை ஸ்
தோத்திரம் செய்து திரும்பிவரும்போது முன்னமே கல்லாகயி
ருந்தவைகள் என் கண்ணுக்குப் பொன்மயமாகத் தோற்ற ஆச்சரி
யமடைந்து யிந்த வுண்மையைத் தெரிந்துகொள்ளாது இவ்விட
த்தைவிட்டுப்போகிறதில்லையெனச்சித்தத்தைத் திடப்படுத்திப் பை
ரவியைத் தோத்திரஞ்செய்தேன் அம்பாள் யென்முன் பிரசன்ன
மாயினாள் உடனே அம்பாள் பாதத்தை வணங்கிக் கற்றேர்பொ
ற்றேரானகாரணம் யென்னயென்று வினவ அதற்குப் பாலகா
மண்ணாசையை யொழித்து விண்ணுலகம் செல்லும் வருணனெ
ன்பவன் பொன்மயமா யுற்ற இவை நான்கையும் என்முனங்
கொண்டு வந்து வுலகத்தில் யாரும் கவர்ந்துகொள்ளாதபடி கல்
லாகச்சபித்து யெனக்குக் காட்டி யாராவது இதைப் பார்க்குஞ்
சமயம் அன்னவர் கண்ணுக்குக் கல்லுருவம் போய்ப் பொன்னு
ருத்தோன்றும் பக்ஷத்தில் அவர்களுக்கே இதைக் கொடுத்துவிடு
என்று கூறிச் சென்றான் அன்னவன் சென்றது முதல் இதுநாள்
வரையிலும் கல்லாகவே இருந்தது தற்சமயம் உனது பார்வை
யால் பொன்மயமாய்விட்டது ஆகையால் யிதை நீயே கொண்டு
போவென்று சொல்ல வுடனே அம்பாளைப் பிரார்த்தித்து அக்
தப் பொன்ரதத்தில் ஆரோகணித்துக் கணைகளை அம்புறாத்தூணி
யிற் சேர்த்து வில்லைப்பக்கத்தில் வைத்துக்கொண்டு கன்னபுரி
சென்று யீஸ்பரவரத்தால் உதித்த சந்திரவதியின் திருமங்கிலி
யத்தின் வுண்மையைக்கண்டு விவாகம்செய்து திரும்பி அயோத்
திக்கு வந்து சுகமாக வாழ்ந்திருந்தேன் அப்போர்க்கொற்ற அம்
பாள் பைரவியாற் கொடுத்ததான அம்புகளடங்கிய அம்புறாத்தூ
ணி அணிந்த யெனதுதோளில் தற்சமயம் பழங்கம்பளியைப் போ
ரத்திக்கொள்ள என்ன கொடும்பாவம் செய்தேன்.

## அரிச்சந்திரன் சொல் தரு.

இங்கிதம்கேட்ட  காதாற்-பேய்கள்
தங்கிதம்கேட்க  வின்று  (ஏ)

(அரி-வ-ம்.) காசிநாதா வயிறு குழியவாங்கல், அழுமுகங் காட்டல், புருவமேறல், தலை நடுங்கல், கண்ணூடல், மிடறுவீங்கல், பையப்போலே வாயைத்திறத்தல், பல்லைக்காட்டல், ஆகியகுற்றங் களில்லாமல், வெள்ளை, காகுளி, கீழோசை, வெடிகுறல், குழறு நாசி, ஆகிய இசைக்குற்றங்களை நீக்கி ஓரிடத்திலே நின்று இரட்டித்துச்சொல்லும் அளவு கடந்து மிகவீண்டொலித்தல் இளைத்து நெடுமூச்சுவிட்டுத் துடித்தல் என்றபாடல் தொழிற்குற்றங்கள்முத வியன வெல்லாம் விட்டு யெழுதினசித்திரம் போலிருந்து இழுமெனுமருவி யோசை மத்தளவோசை வெண்கலத் தொனி சங்க நாதம் வண்டின்குரலாகிய இசைக்குணங்களும் மூங்கிலினின்று உதிரும் இலைபோலவும் மீன் கொத்திக்குருவி மீன்மேல்விழுதலைப் போலவும் பாடுதலின் குணங்களும் மந்திரம், மத்தியம், தாரம், துள்ளல், தூங்கல், மெலிதல், மிருதல், ஆகிய நாதகீதங்கள் தப்பாமல் கேட்டவர்களெல்லாம் இஃதென்ன புதுமையென்று கூறும் படியாகப்பாடக்கூடிய வித்வசிகாமணிகளின் சங்கீதங்கேட்ட என் னிரு செவிகளும் தற்சமயம் ஊழிகாலத்துப் பேரிடிபோலச் சப்தம், போடும்பேய்களின் தொனியைக்கேட்க என்ன குற்றம் செய்தேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஆதியிலும்பறையனல்லமென்றமெட்டு.

இராகம்-நீலாம்புரி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

அம்பிகைபாகாதற்பரா சம்போஹராகருணாகரா
நம்புவோர்க்கருள்கங்காதரா சிவசங்கரா
நம்புவோர்க்கருள்கங்கா தரா (அ)

வேரில்லாமரமானேன் நீரில்லாக்குளமானேன்
ஆருமற்றசந்யாசியானேன் உனைநம்பினேன்
ஆருமற்றசந்யாசி யானேன் (அ)

அரசில்லாநாடானேன் உரமில்லாக்கடமானேன்
ஐயோயென்னபாதகஞ்செய்தேன் அருளில்லேன்
ஐயோயென்னபாதகஞ்செய் தேன் (அ)



மணமில்லாமலரானேன் துணையில்லாப்படையானேன்
கணையில்லாத்தூணியாகினேன் உனைக்கருதிலேன்
கணையில்லாத்தூணியாகி னேன் (அ)

பத்தினிபாலனைவிற்றேன் மெத்தவுந்துயருற்றேன்
சத்தியகீர்த்தியைப்பிரிந்தேன் எத்தினங்காண்பேன்
சத்தியகீர்த்தியைப்பிரிந் தேன் (அ)

(அரி-வ-ம்.) ஓ காசிநாதா யான் ஒருவாறு எனது மனைவியையும் புத்திரனையும் பார்க்கவேண்டுமென் றெண்ணினால் எனது எஜமானாகிய வீரபாகுவின்டம்உத்தரவுபெற்றுக்காலகண்டைய்யர் மனையிற்போய்ப் பார்த்துக்கொள்வேன் மற்றும் எனதுயிர்த்தோழனும் மந்திரியுமாகிய சத்யகீர்த்தியை யான் எந்த இடத்தில் எப்போது தேடிக் காணப்போகின்றேன்.

பொது வசனம்.

இவ்விதமாக அரிச்சந்திரன் மிகுந்த துக்கத்துடன் மயானங் காத்துக்கொண் டிருக்கும்பொழுது மந்திரி அரசனைத் தேடிவருகிற விதங்காண்க.

## மந்திரி அரசனைத்தேடி வருகிறபாகம்.

மந்திரி விருத்தம்.

கன்னியாமுமையாள்பாகன் கனிந்துவாழ்காசிநாதா
பொன்னகர்நேரயோத்திப் புரவலன்றனைப்பிரிந்திங்
கின்னகர்வாழுவென்று லென்மனஞ்சகிக்குதில்லை
யன்னவர்தன்னைத்தேடி யடைவுடன்செல்கின்றேனே

## மந்திரிசொல் தரு

இராகம்-எதுகுலகாம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஐயோயினியென்செய்வேன் அண்ணலையெங்குகாண்பேன்
அப்பனிந்திடு மீசனே (ஐ

அனுபல்லவி.

செய்யதாமரைப்பாதா  திரிபுரைமகிழ்நாதா
கையில்மானேந்துநீதா.  காலகாலவிநோதா
வையமதனையே  மெய்யதாயாண்ட
ஐயனைவிலகி  நையவும்விதியோ (ஐ)

சரணங்கள்.

பவமதுபுரிந்தேனோ  பாவலரைவைதேனோ
குவலயத்துள்ளோர்க்கென்ன  கொடுமைகளிழைத்தேனோ
தவமுனிசதியால்  தக்கநாடிழந்து
தாங்கொணாருணத்தால்  தகையாயிங்குவந்து
கவலையினால்மறை  யவர்க்குமனைவியை
தவணையில்விற்றுமு  னிவர்கடன்றீர்த்தவ
தாரன்புஜபல  வீரன்வதனவ
சீரனரிச்சந்திர  ஓரனைப்பிரிந்தேன் (ஐ)

(மந்-வ-ம்.) ஆ! காசிநாதா இதுவுமுன் சோதனையோ அறிகிலன் என திறைவர் பறையனுக்கடிமையாகிச் செல்லுஞ் சமயம் யானுங்கூடச் செல்லவரக்கூடாதென்று தடுத்தார் அந்த வார்த்தை சொல்லக் கூடாதென்று அன்னவர் பாதத்தில் விழ்ந்துமூர்ச்சையானேன் ஒருநாளும் அடியேனைப் பிரியாத மன்னரானவர் எதை நினைத்தாரோ என்னைப் பிரிந்து சென்று விட்டார் போனுமிருக்கிறது யான் எங்குதேடுவேன் என்றுகாணப்போகின்றேன்.

(மந்-வ-ம்.) நடந்த விஷயத்தைப் பற்றி நினைத்துத் துக்கப்படுவதினாலென்ன பலன் எந்த விதத்திலும் தேடிக்கண்டு கொள்வதே உசிதம் இதோ தேடிச்செல்கின்றேன்

## மந்திரிசொல் தரு.

பஞ்சமாபாதகியானேனென்ற மெட்டு.

இராகம்-காபி-அடதாளம்.

கண்ணிகள்.

யெங்கேயென்றுதேடுவேன்  விஸ்வேசா-மன்னன்
யெவ்விடம்போனாரோ  சர்வேசா
திங்களணிந்தவேணி  ஜெகதீசா-உந்தன்
திருவருளிதுதானோ  பவநாசா



(மந்-வ-ம்.) ஓ! சரச்சந்திரனைச் சிரமீதணிந்த காசிநாதா என திறைவனை எவ்விடந் தேடுவேன் எப்போதுகாணப்போகின்றேன் என்மனமானது மிகவும் பதறுகின்றதே.

(மந்-வ-ம்.) சீ மதிகெட்ட மனமே ஏன் இல்லாத இடங்களெல்லாந்தேட முயல்கின்றாய் இது சரியல்லவே முன்பு தாசருக்குப் பொன்கொடுக்க உன்னரசனையாரிடம் வித்தனையோ அம்மகானுபாவனிருக்குமிடமாகிய சேரியிற்போய்த்தேடுவையாகில் ஒருக்கால் உன்பிதாவையொத்த மன்னனைக்காணலாம் அதைவிட்டு ஏன் நாயைப்போல் அங்குமிங்கும் உழன்றுதிரிகிறாய் வேண்டாம் அங்ஙனேசெல்.

## மந்திரிசொல் தரு.

சேரியெங்கிருக்குதோ  கைலாசா-அதைக்
தெரிந்துகொண்டேனில்லையே  பவநாசா
பருந்துமேற்பறக்குதே  பவநாசா-தோலைப்
பற்றியிழுக்குதே  ஜெகதீசா
இதுதானோபறைச்சேரி  உமைநேசா-இங்கு
இறைவருமிருப்பாரோ  கைலாசா
சேரியெல்லாந்தேடுறேன்  விஸ்வேசா-என்ன
தீவினைசெய்தேன்முன்னம்  சர்வேசா
இவ்விடத்திலுமையோ  பவநாசா-வேந்தன்
இல்லையேயென்செய்குவேன்  ஜெகதீசா
சுடலையெங்கிருக்குதோ  கைலாசா-வடீ
தோன்றிடவுங்காணேனே  உமைநேசா
நன்னகர்ப்புறம்வந்தேன்  விஸ்வேசாஈமம்
நாடியேசெல்கின்றேன்  சர்வேசா
நரிகளூளையிடுதே  கைலாசாபெல
நாய்கள்ஊளையிடுதே  ஜெகதீசா
செத்தபிணம்வேகுதே  ஜெகதீசா-இதோ
தீயிடுமயானமும்  பவநாசா
சுந்தரவேந்தனைநான்  உமைநேசா-இங்கே
சுற்றியேபார்க்கின்றேன்  கைலாசா

ஆ! காசிநாதா எனது இறைவனை ஒவ்வொரு இடங்களிலும் தேடியலைந்துபார்த்தும் காணாது மிகுந்த துக்கமடைந்து இதோ இம்மயானத்திற்கு வந்து சேர்ந்தேன் இங்குஒருவரையுங் காணோம் இதற்கென் செய்வேன் இம்மயானத்தைச் சுற்றிப்பார்க்கின்றேன்.

(அரி-வ-ம்.) ஆ! ஆ! யீதென்ன ஆச்சரியம் யான் விதியை நினைத்துத் துக்கமடைந்து கொண்டிருக்குஞ் சமயம் யாரோ ஒருவன் இந்த அர்த்தராத்திரியில் வாய் பேசாமல் மயானத்தில் வந்துலாவுகின்றான் யாரென விசாரிக்கின்றேன்.

(அரி-வ-ம்.) அடா நீயாவன் இந்த அர்த்தராத்திரியில் இம்மயானத்துக்கு வந்த காரணமென்ன? உன் ஊரெது? உன் பெயர் யாது? சீக்கிரஞ்சொல் இல்லையேல் எனது கரத்திலிருக்கும் கம்பினால் உன்னை அடிப்பேன் என்னதெரிவிக்கின்றாய்?

மந்திரி விருத்தம்.

என்னையாரெனவினவும் யீமகாவலனேகேளாய்
பொன்னகரயோத்தியாண்ட பூபாலன்மந்த்ரியானே
அன்னவர்தன்னைக்காணு மாசையாலிங்குவந்தேன்
பின்னையாதொன்றுமில்லைப் பிழைபொறுத்தாளுவாயே.

(மந்-வ-ம்.) அப்பாயீமகாவலா கோபங்கொள்ள வேண்டாம் கவனிப்பாய் அயோத்தியையாண்ட அரிச்சந்திரச் சக்கரவர்த்தியினுடைய மந்திரி யான் அன்னவரைக் காணவேணுமென்ற ஆசையினால் இந்த மயானத்தை நாடிவந்தேன்

(அரி-வ-ம்) அடாமூர்க்கா,இஃதென்ன விபரீதவார்த்தைகூறுகின்றனை உனதரசனாகிய அரிச்சந்திரச் சக்கரவர்த்தி இம்மயானத்திற்கு எதற்காகவந்தான் உன்னைப்பார்க்கில் தலைப்பிள்ளைகளின் மண்டையோட்டைக்கவர வந்த மாந்திரிகனைப் போலத்தெரிகிறது உள்ளதைச் சொல்லுகின்றாயா? அல்லவா?

(மந்-வ-ம்.) அப்பா சுடலைகாவலா சத்தியச்சித்தத்தையுடைய எனது அரசனாகிய அரிச்சந்திரச் சக்ரவர்த்தியை நீ தூஷணமாகப் பேசாதே என்னை நீ எவ்விதம் ஏசினாலுஞ்சரியான் எனதிறைவனை தேடிவந்தேனே தவிரவேறொரு விஷயத்தைக்கோறி வந்தவனல்ல



(அரி-வ-ம்.) அடா நீ சொல்லக் கூடிய அரிச்சந்திரனென்பவன் யார்? அவன் இங்குவந்த காரணம்யாது? அவைகளையெல்லாம் சவிஸ்தாரமா யெடுத்துச் சொல்வாய்.

மந்திரி விருத்தம்.

கோசிகர்கடனையெந்தன் கோனும்பின்னகர்க்குவந்து
தேசுறுபெண்டைவிற்றுச் செலுத்தினார்தாரகர்கூலி
ஆசதாய்க்கேட்டார்யானு மரசைத்தோட்டிக்குவிற்று
மாசிலாதளித்தேன்பின்னர் மயங்கினேன்பிரிந்திட்டாரே.

(மந்-வ-ம்.) அப்பா யீமகாவலா எனதரசனாகிய அரிச்சந்திர சக்கரவர்த்தியானவர் ஊழ்வினையால் நாடுநகரம் யாவையும் கௌசிகமுனிவருக்குத் தாரைவார்த்து மீண்டும் அன்னவர்க்குக் கடனுக்குட்பட்டு அக்கடனைத் தீர்க்கும்பொருட்டாக இக்காசியம்பதிக்கு வந்து பத்தினியையும் புத்திரனையும் காலகண்டையருக்கு விற்று முனிவர்கடனைச் செலுத்தவே அதைப்பெற்ற நாதராகிய நக்ஷத்திரையர்தான் தொடர்ந்துவந்ததற்காகத் தாருபொன் கேட்டுவருத்த உடனே அரசர் வருதிப்படி அன்னவரை நீசனையவீரபாகுவுக்குவிற்று பதினாயிரம்பொன் வாங்கிக்கொடுக்கவே அதைப்பெற்று நாதாகன்றார் பின்னர்தோட்டி வருதிப்படி தொடர்ந்துவந்த என்னை வரவேண்டாமெனத் தடுத்துச் சேரிக்குச் சென்றனர் ஆகையால்அன்னவர் பிரிவைச்சகிக்காதவனாகக் காணவேணுமென்ற ஆசையோடு பறைச்சேரிமுழுவதும் தேடிக்காணாது ஒருவாறு இம்மயானத்திலிருப்பாரென்ற உத்தேசங் கொண்டு வந்தேன்.

(அரி-வ-ம்.) ஆ! ஆ! இவனைப்பார்க்கும் விஷயத்தில் மந்திரி சத்தியகீர்த்தியைப்போல் காணப்படுகிறது இன்னும் விசாரிப்போம்.

(அரி-வ-ம்.) சரி இவ்விதத்துக்கத்தை யடைந்த சண்டாளனை நீ எதற்காகத் தேடிவருந்துகின்றாய்.

(மந்-வ-ம்.) அப்பா யீமகாவலா எனதிறைவனை வார்த்தை வித்யாசமாகப் பேசாதே.

(அரி-வ-ம்.) அடா நீ யிவ்வளவு பரிதாபமாக உனதிறைவனைத்தேடுகின்றனையே காணிலென் செய்வாய்.

(மங்-வ-ம்.) கேளாயீமகாவலா வழக்கம்போலத் தொண்டுழி யஞ் செய்வேன்.

(அரி-வ-ம்) உனதரசனைக்கட்டாயம்பார்க்கத்தான் வேண்டுமோ

(மங்-வ-ம்.) ஆம் அவசியம் பார்க்கத்தான் வேண்டும்.

(அரி-வ-ம்.) அப்பா சத்யகீர்த்தி யாதொரு பறையனுக்கா ளாகி யுன்னைத் தனியாகவிட்டுப் பிரிந்துவந்த அரிச்சந்திரனை இந் தச் சண்டாளன்நிற்கும் அலங்கோலத்தைப் பார்த்தனையா?

மந்திரி விருத்தம்.

ஐயையோவரசேயும்மை யம்பிகைமனையாளுந்தான்
மெய்யதாநாட்டையாண்ட மேன்மையைத்தவிர்ந்தேயாகம்
நையுதனுடனேபொல்லா நாய்நரிபேய்வாழிந்த
வெய்யதோர்சுடலைகார்க்க விந்தையாய்ப்பணித்திட்டானே.

(மங்-வ-ம்.) ஆ! அரசே ராஜாதிராஜராகிய தாம இவ்வித அல ங்கோலத்துடன் சுடலை கார்க்கவா லலாடத்திற் பிரமன்விதித் தான்.

அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-சுருட்டி-தாளம்-ஆதி.

பல்லவி.

ஆ ஆ ஆ எந்தன் அருமைமந்திரியேதுயரடையாதே
துக்கம்அடையாதே மனம்இடையாதே (ஆ)

அநுபல்லவி.

வாகுசேர்குழலுமை பாகன்செய்யுஞ்சோதனை
யாகுமிதமதிவி வேசனேயிதற்கென்னசெய்வோமடா
பாலகாயென்ன செய்வோமடா (ஆ)

சரணங்கள்.

இந்தவிதினைக்கு வந்துசேர்ந்திடுமென்ன
மைந்தனேஒருபோதும் சிந்தைதனிலேயெண்ணி
அறியேனடா மனதிலெண்ணியறியேனடா
இதனைமுன்னந் தெரியேனடா (ஆ)



கோதேஇல்லாதவெந்தன் காதலியைச்சேயுடன்
வேதியரிடம்விற்றுக் காதகனென்மயானம்வந்தேனடா
உந்தனையெண்ணி நொந்தேனடா
பாலாநொந் தேனடா (ஆ)

பாலகா நாடு, நகர், குடிபடையாவும் இழந்ததுந்தவிர கட னுக்குள்ளாகி அக்கடன்தீரும்வண்ணம் இந்தக்காசிநகருக்குவந்து வேதியரிடம் மனைவியையும் குழந்தையையும் விற்று தாருத்திரவி யத்துக்காக நீசனுக்கடிமையாகி உன்னைப்பிரிந்தஎன்னையடிமை கொண்ட வீரபாகுவின் ஏவலால் கொடிதான இந்தமயானத்தைக் கார்க்கவந்த பாதகனானஎன்னை நீ தேடிவந்து கண்டு ஏன்இவ்வித துக்கமடைகின்றாய் துக்கமடைவதினாலென்னபலன் விதியின்செ யலையார் தான் கடக்கவல்லவர் வருந்தாதே.

(மங்-வ-ம்.) ஆக்கினை ப்ரபு.

# சந்திரவதி மயானத்தில் குழந்தையை வைத்துத் தகனஞ்செய்கிறபாகம்.

சந்திரவதி விருத்தம்.

அப்பனேயென்னிரு கண்மணியேகேளா
யந்தணர்பால்விடையடைந்து கங்குல்கூடிக்
கப்பியதோர்வனந்தனில் வந்துன்னைத்தேடிக்
கண்டெடுத்துத்தோளில்வைத்தே நெஞ்சம்நொந்து
செப்பரியசுடுகாடு வந்துசேர்ந்தேன்
தீயிடுதற்கேற்பட்ட கட்டையோடு
சுப்பல்முதற்சாமான்கள் சேர்த்துவாரேன்
சுந்தரமாயிங்கிருப்பாய் துரைச்சிம்மேறே.

(சங்-வ-ம்.) பாலகா உன்னைத்தகனஞ்செய்வதற்கு வேண்டிய சாமான்கள் சேர்த்துவரச் செல்கின்றேன் யான் வரும்வரையிலிவ் விடத்திலிருப்பாய்.





## சந்திரவதிசொல் தரு.

காசிநாதாவிது வுன்னருளோவென்ற வர்ணமெட்டு.

இராகம்-ஸ்ரீராகம்-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஸ்ரீசோகாசிவாழ் விசுவேசா
இந்தவிருளதனில் நொந்துசாமான்கள்சேர்க்கச்
சிந்தையுடன்செல்கின்றேன் மைந்தனைக்கார்த்தருளும் (ஸ்ரீ)

எறிந்தகட்டைக ளெடுத்தேனே
இப்பதியுள்ளவர்கள் செப்பமாய்ப்புடமிட்டே
யொப்பியேயிட்டதோர்தீ கப்பிமிகவேபற்றி (எ)

கரிந்தவிருட்டி பொருக்கின்றேன்
கரியதனையுரித்துப் புரமதனையெரித்த
அரனேவுயர்பன்னகா பரனேதற்பரனே. (க)

சிறியசுள்ளிகள் குவித்திட்டேன்
செங்கையில்மழுவுடன் துங்கநன்மான்பிடித்த
சங்கராவேணியிற் றிங்களணிந்தநாதா (சி)

## சந்திரவதி விருத்தம்.

பாலகாவுன்னையிங்கு பாங்குடன்வைத்தேயேகிச்
சாலவும்விருட்டிகட்டை க்ஷணத்தினிற்சேகரித்துச்
சீலமாய்வந்துசேர்ந்தேன் தீயிடவேண்டுதற்காய்க்
கோலமாம்புடமுமிதோ கோதையானமைக்கின்றேனே.

(சந்-வ-ம்.) கண்மணி உன்னையிங்கு தனியாகவைத்துச்சென்ற யான் பிணங்களைச் சுட்டுமீந்த கட்டை, சுப்பல், முட்டை இவைக ளெல்லாஞ் சேகரித்துக் கொண்டுவந்தேன் இதோ நின்னைத் தக னிக்கவேண்டியதற்காகப் புடமமைக்கின்றேன்.

## சந்திரவதி சொல் தரு.

பாங்காய்ப்புடம மைத்தேனிங்கே
பாதகிகொடியதோர் கீர்த்தியெனவெனைப்
பூதலமுன்னோர்வசை யோதிடவேயப்பா (பா)

புடத்திற்படுக்க வருவாயே
புத்திரனேநவ ரத்தினமேபெற்ற
வித்தகனேநீயுஞ் சித்தமுவந்தேயிந்தப் (பு)

கட்டைமீதுன்னை வைத்தேன்கண்ணே
கல்லையுமண்ணையுங் காசரிசிக்கிக்கதி
யில்லாமலேயிதோ யிட்டேன்செவ்வாய்தனில் (க)

முட்டையுங்கட்டை யுமுன்மேனி
முழுதுமொரேதன்மையாய்ப் பழிபிறங்காமகனே
யழுதுவெகுவாகவே பழுதுறுதடுக்கின்றேன் (மு)

வருவீரோடியே மணவாளா
மாதவத்தாலேபெற்ற நீநிலாமகனையிப்
போதுசுடவேயுமக் கேதுவேலையுற்றாலும் (வ)

சந்திரவதி விருத்தம்.

வள்ளலேயுந்தனுடை மைந்தனுமரவுதீண்டித்
துள்ளியேயிறந்தான்காட்டிற் றேகைநான்கண்டெடுத்து
விள்ளருமயானம்வந்து விந்தையாய்ப்புடமமைத்துக்
கொள்ளிவைத்திடப் போகின்றேன்சீக்கிரமானேவருகுவீரே.

(சந்-வ-ம்.) ஆ! என் பிராணநாதா உமதருந்தவத்தால் ஜெனித்த பாலகன் தேவதாசன் கானகத்தில் அரவின்விடத்தாலிறக்க அன்னவனை யான் தேடிக்கண்டெடுத்து இம்மயானம் வந்து இம்மயானத்திலெறிந்து மீந்தகட்டைகளால் காஷ்டமடுக்கிக்கொள்ளி வைக்கப் போகின்றேன் ஆகையால் தாம் எங்கிருந்தபோதினுமிச்சமயம் இங்குவந்து சேரப்பிரார்த்திக்கின்றேன்.

சந்திரவதிசொல் தரு.

கொள்ளிவைத்திட்டே னிதோமகனே
கொற்றவனேயரு ளுற்றவனேமறை
கற்றவனேயுன்னெஞ்சிற் பெற்றதோர்பாவியுநான் (கொ)

அனலெரியுதே பற்றியப்பா
ஐயோவுனதிருச் செய்யமேனியில்வைத்த
துய்யகட்டைகள்மீதும் வெய்யவிருட்டிமீதும் (அ)



(சந்-வ-ம்.) ஐயோ பாலகா உனதுதேகமெல்லாம் அனல்பற்றி யெரியுதே இனி எந்த ஜென்மத்தில் உன்னைப்பார்க்கப் போகின்றேன்.

சந்திரவதி விருத்தம்.

தனக்கொருநிகரில்லாது தரணியையாண்டமன்னன்
மனக்குறையகற்றுவித்த மாதவமகனேயப்பா
எனக்குநீகருமஞ்செய்வா யென்றிருந்ததற்கோயின்னாள்
உனக்குநான்கருமமெந்த னூழ்வினையாற்செய்தேனே.

(சந்-வ-ம்.) பாலகா இப்பிரபஞ்சத்தினிடமாகத் தவஞ்செய்து புத்திரர்களைப்பெற்று வளர்ப்பதானதுமாதா பிதாக்களுடைய அந்தியகாலத்தில் கொள்ளிவைத்தல்முதலானகடன்கள்செய்வதற்காகவென்று சொல்வார்கள் அப்படியிருக்க எனதுஊழ்வினையானது மாதாவாகிய நான் உனக்குக் கொள்ளிவைக்க யேற்பட்டது இதுவுமீசன் செயலே.

## அரிச்சந்திரனுக்கும் சந்திரவதிக்கும் தர்க்க பாகம்.

(அரி-வ-ம்.) மந்திரி யீதென்ன வாச்சரியம்! இந்த அர்த்தராத்திரியில் யாரோ திருட்டுத்தனமாகக் காஷ்டமடுக்கிக் கொள்ளி வைக்குறாப்போலே காணப்படுகிறது யான் போய்ப்பார்த்து வருகின்றேன் நீரிவ்விடத்திலிரும்.

(மந்-வ-ம்.) உத்தரவு ப்ரபூ.

அரிச்சந்திரன் விருத்தம்.

ஆரடிதிருடிமூர்க்கியாக்கி நீவாழ்வதெந்த
ஊரடிகட்டியெந்தனுத்தர வில்லாதிங்கே
ஒரியைப்போலவேவந்துயர் புடந்தனையமைத்துப்
பேரிடிபோலரற்றிப் பிணந்தனைச்சுடவுமானாய்.



## அரிச்சந்திரன்சொல் தரு.

தேசதேசத்தரசர்க் கரசர்என்ற மெட்டு.

இராகம்-கமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

என்னடிநான்கேட்ககேட்க வேதும்பேசாதிருக்குறாய்
பேதைநாய் போற்குலைக்குறாய்
வேதனையே வெறுக்குறாய்
எனக்கதைக் கூறுவாயடி
உனக்கிது ஞாயமாமோடி
யிம்மாவில் எய்தலாமோமூடி. (எ)

காவல்நானிருக்கும்போது கள்ளமாகவண்டியே
மெள்ளவேவந் தொண்டியே
கொள்ளிவைத்தாய் மிண்டியே
கண்ணியமாமோ துட்டியே
பெண்ணிலியான சுட்டியே
எண்ணாதேதேனே மட்டியே
எழுந்திருந்தும் விழுந்தழுவதேனடி. (எ)

## அரிச்சந்திரன்சொல் தரு.

கோமளி விமளியென்ற வர்ணமெட்டு.

இராகம்-சமாசு-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

மாயமோகினியேபொல்லா டாகினியேகூறடி
வாகாயென்சொல் லோரடி
மங்கைநீ யெவ்வூரடி
மார்க் கமுடன்
தீர்க்க மதாய்ச்
சீக்கி ரத்தில்
செப்புவாயடி இல்லையேல்
தெண்டிப் பேனடி. (மா)

அச்சங்கொஞ்சமேனு நெஞ்சகத்துறுதநீலியே
யகிலத்திந்த்ர ஜாலியே
யடங்காக்கொடு சூரியே



ஐயோ வென்ன
செய்வே னினித்
தெய்வ மேயென்
றழுவதேனடி அதையெனக்
கறைகு வாயடி. (மா)

(அரி-வ-ம்.) அடியேமூர்க்கி, என்னவொன்றும் பதிற்சொல்லாகின்றாயில்லை.

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா யீதென்னவநியாயம் யாரோவொருவன் வாடிபோடியென்று பேசுகின்றான் இதற்கென்செய்வேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

பஹாரிமேரி பியாரிஎன்றவர்ண மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

மதியில்லாதபாவாய் வந்தவழியேசெல்வாய்

அனுபல்லவி.

எதிரினில்நிற்காது இவிடம்விட்டிப்போது
பதில்வார்த்தைகூறாது அ-ஆ-ப.(மதி)

சரணம்.

சாமவேளைநாடி நேமமுடனோடி
யீமம்வரலாமோடி அ-ஆ-யீ.(மதி)

களவிற்சாமான்சேர்த்தாய் அளவாய்ப்புடமமைத்தாய்
தளவுபற்காட்டியார்த்தாய் அ-ஆ-த.(மதி)

தாலமதில்வீழ்ந்து ஓலமிட்டேநொந்து
ஜாலஞ்செய்யாதெழுந்து அ-ஆ-ஜா.(மதி)

பின்னஞ்செய்வேன்வந்தால் கன்னிநீயாகையினால்
மன்னன்பொருத்தே னிக்கால் அ-ஆ-ம.(மதி)

கண்ணேகண்ணேயென்று வண்ணமாகப்புகன்று
கண்ணீர்வடியாநின்று அ-ஆ-க.(மதி)

(சந்-வ-ம்.) ஆ விசாலாட்சிபாகா என்செய்வேன் இந்த அர்த்தராத்திரியில் யாரோஒருவன் தூஷணமாகப் பற்பல வார்த்தைகளைப் பேசுகின்றானே இவன்யாரோ தெரியவில்லையே.

## அரிச்சந்திரன் சொல் தரு.

எனதுமனதுக்கேற்ற மங்கையென்ற வர்ணமெட்டு.

இராகம் - இந்துஸ்தான் - பியாகு - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

எங்குநீயிருந்துவந்தா யிங்குநீலியே
இங்குநீலியேமகா விந்த்ரசாலியே
இட்டமுடன்வழி தொடர்ந்து-சற்றும்
எண்ணுமல்லிரவில் நடந்து-வெகு
திட்டமதாகவே யடர்ந்து-மூர்க்கி
தெம்புடனென்காவல் கடந்து
தேறியோடி நீறிநாடித்
தேடியே வாடியே
சிந்தைதிடமாய் (எ)

சாமவேளையிமந்தனிற் சாரலாமோடி
சாரலாமோடி இது ஈயுமோகுடிகேடி
தாட்டிகமானதோர் லண்டி-இந்தத்
தாரணிமீதினுத் தண்டி-பிரு
சேட்டைசெய்யாமலே மிண்டி-பதிற்
செப்புவாய்சீக்கிரஞ் சண்டி
திகையாமல் வகையாகச்
செப்பாது கிற்பையேல்
தெண்டிப்பேனடி (எ)

(சங்-வ-ம்.) ஆ! காசிநாதா இதுவு முன்னருளோ?

## அரிச்சந்திரன் சொல்தரு தர்க்கம்

உனையே நம்பினென்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

எந்தன்காவல்மீறி வந்தநீயாரடி
எந்தனுக்கதனைச் சிந்தையாய்க்கூறடி (எ)



## சந்திரவதிசொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

ஐயையோவிதென்ன வநியாயகாலம்
தையலுமைபாகா ஐயனேநல்யோகா (ஐ)

அரிச்சந்திரன்.

கொஞ்சமேனுமச்சம் நெஞ்சத்திற்கொள்ளாது
வஞ்சியேநீயிங்கு வரலாமோ ஓது (எ)

சந்திரவதி.

காசிவளரீசா கூசிடாதுநீசன்
பேசவும்விதியோ கோசிகன்சதியோ (ஐ)

அரிச்சந்திரன்.

ஆவலதாயிமம் மேவியதுமன்றி
கேவலமாயேசும் நாவதைத்துணிப்பேன் (எ)

சந்திரவதி.

சுடலைகாவலா தோகையெந்தன்மீது
அடல்கொள்வதுனக் காகாதடுக்காது (ஐ)

அரிச்சந்திரன்.

பிள்ளைதனைத்தூக்கி நள்ளிருளிலெய்திக்
கள்ளத்தனமாகக் கொள்ளிவைக்கலாமோ (எ)

(அரி-வ-ம்.) அடியேகள்ளி கொஞ்சமேனும்நெஞ்சமஞ்சாது எனதுகாவல்மீறி இங்குவந்து கொள்ளிவைத்த நீயாவள்?

## சந்திரவதி விருத்தம்.

கள்ளியுமல்லக்கூளி காளியுமல்லவையா
வெள்ளியங்கிரியான்றன்னை வேண்டியேபெற்றெடுத்த
பிள்ளையுமரவினாலே பெரும்வனத்திறந்தானிங்கு
நள்ளிருடனிலெடுத்தே நான்வந்தூட்டேன்போற்றி

(சங்-வ-ம்.) அய்பாயான் கள்ளியுமல்ல கூளியுமல்ல எனதருந்தவமைந்தன் வனத்திற்பாம்புகடித்திறந்தனன் ஆனதால் அன்னவனையிங்கெடுத்துக் கொண்டுவந்து காஷ்டமடுக்கிக் கொள்ளிவைத்தேன் மன்னிக்கவேண்டும்.

## அரிச்சந்திரன் சொல்தரு.

அட்டாவழியைவிடடா என்றமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-ஆதி.

பல்லவி

ஆர்சொன்னரிந்தத் துற்புத்திபெண்பா
லானாலுமே நீசமர்த்தி (ஆ)

அநுபல்லவி.

தேருதலாயிந்தக் கூரிருடன்னிலே
ஓரியைப்போலிங்கு நாரியேவந்திட (ஆ)

சரணங்கள்.

அச்சமில்லாக்கொலை காரியே-எந்தன்
ஆக்ரமமானகாவல் மீரியே-புடம்
இஃஷ்ணமேதா னமைத்துமே-அதில்
ஏற்றிச்சவமதை வைத்துமே-கொள்ளி
இட்டமதாயிட்டாய் மட்டிலண்டியுனக்
கேற்குமோ-எற்குமோ-எற்குமோ-குடிகேடி. (ஆ)

இந்த்ரஜாலந்தெருங் கள்ளியே-ராவி
லீமமெய்தலாமோ துள்ளியே-இந்தத்
தந்திரமெங்குகற்று யடி-நடுச்
சாமநேரமானதே யடி-மூர்க்கி
சாத்துவேன்கோலினால் சடுதியில்சுதந்தரக்
தாடி-தாடி-தாடி மாகுடிகேடி. (ஆ)

---

(அரி-வ-ம்.) அடி துஷ்டி உனக்கு யார் இவ்விதத்துற்புத்தி போதித்தவர்கள் சீக்கிரத்திற் சவத்திற்கேற்பட்ட சுதந்திரத்தை கொடுக்கின்றையா அல்லவா?

(சந்-வ-ம்.) அப்பா சுடலைகாவலா யாதொரு ஐவேசில்லாத யான் உனக்கெவ்விதஞ் சுதந்திரங்கொடுப்பேன் தயவுசெய்து சிறுவனைத்தகனிப்பாய்.

---

## அரிச்சந்திரன்சொல் தரு தர்க்கம்.

இந்தவிதஞ்சொல்லுவ துனக்கென்ற வர்ணமெட்டு.

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சீச்சியப்பாற்சவத்தைத்தூக்கிச்செல்லுவாய் நீபோ
செல்லுவாய்நீயேபதிற்செப்பாமற் பேயே (சீ)



## சந்திரவதி சொல் தரு.

ஷை வர்ணமெட்டு.

யீமகாவலாவிவ்வித மேசலாகுமா
யோலாகுமா யீ துணக்குத்தகுமா (யீ

அரிச்சந்திரன்

இந்தராவிலென்மயானமெய்தலா மோடி.
எய்தலாமோடி யதை யியம்புவாய்மூடி (இ)

சந்திரவதி.

தஞ்சமில்லையாதலினால் தனியாய்வந்தேனே
தனியாய்வந்தேனே குற்றஞ் சமிப்பாய்நீகோனே (த)

அரிச்சந்திரன்.

கள்ளியேநீயெந்தன்காவல் கடந்ததேதடி
கடந்ததேதடிகவு ளிப்பா யோதடி (க)

சந்திரவதி.

காவலிங்ஙனமுண்டென்று கருதிலனனே
கருதிலனனே ஐயோ காதகியானே (கா)

அரிச்சந்திரன்.

ஜாலமெல்லாமெங்குகற்றாய் சண்டாளநாரி
சண்டாளநாரி வெகு சமர்த்துடன்கோரி (ஜா)

சந்திரவதி.

தருமமுண்டுதயவுசெய்து தகனஞ்செய்வாயே
தகனஞ்செய்வாயே எந்தன் தனயன்தன்னையே (த)

அரிச்சந்திரன்.

வாய்க்கரிசிதுண்டுபணம் வழங்கிலையானே
வழங்கிலையானே உந்தன் மகனைச்சுடுவேனே (வ

சந்திரவதி.

யேதுங்கெதியில்லாததோ ரேந்திழையா
யேந்திழையானே யெவ்விதந் தா

அரிச்சந்திரன்.

வாதுசெய்யவோநீயிங்கு வந்தனைமூர்க்கி
வந்தனைமூர்க்கி வகையில்லாத் துன்மார்க்கி (வா)

(சந்-வ-ம்.) அப்பா சுடலைகாவலா யாதொரு ஐவேசில்லாத யேழையாகிய என்னைக்கோபமாகப் பேசுவது தருமமா?

## அரிச்சந்திரன்சொல்சிந்து தர்க்கம்.

என்னடிநான்பெற்ற மங்கையென்ற வர்ணமெட்டு.

பாதிச்சாமத்திங்குநாடி குடிகேடி-திருமூடி-கொள்ளி
பத்தவைவந்ததலா மோடி-ஆகா
படுபாதகிகொடுசாதகி பதையாத்திட விதையத்துடன்
பாசாங்குசெய்வதுமேது சற்றுங்
கூசாயலெற்கதை யோது

சந்திரவதி சொல்.

பாதகிகாதகியென்று ஐயோவின்று நீகவின்று-பாவி
பதாச்செய்குறுய் கனன்று-உந்தன்
பாலனிறந்ததினுலே கோலமாயிப்புவிமேலே
பாவைகொண்டுவந்துவிரைவாய் நீயைப்
பாங்காகவேவைத்தேன் தெரிவாய்

அரிச்சந்திரன் சொல்.

அச்சங்கிஞ்சிற்றுமில்லாது யிந்தவாது நீயிப்போது-கூற
லாலேநீதெய்துந்தப் பாது-ஒகோ
அகிலத்திக்கிரசாலியே யரிவையரிற்பெருநீலியே
அப்புறஞ்செல்லுவாய் பரிந்து-அல்லா
லடிப்பேன் கோலினுல் விரைந்து

சந்திரவதி சொல்.

க்குகந்தபடிபேசிச் சற்றுங்கூசி டாதேயேசி-னுயே
மாவுனக்கு யோசி-அப்பா
பவரவில்லை யாதவினுலேவல்லை
ப்பாய் தானே-உந்தன்
தேனே



அரிச்சந்திரன் சொல்.

காற்பனமோர்முத்துண்டேற்பாடுண்டு நீயுங்கொண்டு-வந்தாற்
காட்டம்வைப்பேன்சொன்னேன் விண்டு-எந்தன்
காவலைமீறியேவந்து பாவாயாகமேநொந்து
கள்ளத்தனமாய்ப்பே சாதே-மற்றே
ருள்ளத்துக்கேபொருந் தாதே.

சந்திரவதி சொல்.

யேதுங்கெதியில்லாநானே காவலோனே இவைதானே
கிருந்துகொண்டுவரு வேனே
இவ்விதம்நீ சொல்லுவதே யேற்காதிப்புவமீதே
யிதனைச்சிந்தையிற் பொருத்திப்-பாரா
யேந்தலேயிகூணைந் திருத்தி

அரிச்சந்திரன் விருத்தம்.

என்னையாட்கொண்டவந்த வெசமானுமனமுவந்து
சொன்னதோர்வருதிபோலச் சுவந்திரம்வாங்கவிங்கு
மன்னனானிருக்கும்போது மாயமாய்க்கொள்ளிவைத்தாய்
இன்னல்செய்வேன்பொறுத்தேனே குவாய்பிணத்தைக்கொண்டே

(அரி-வ-ம்.) அடி மாதே என்னை யடிமைகொண்ட வீரபாகுவின் வருதிபோல் பிணத்துக்குறிய சுதந்தரம் வாங்க இங்கு யான் காவல்புரிந்து கொண்டிருக்கும்போது நீ திருட்டுத்தனமாக இங்குவந்து கொள்ளி வைத்ததற்குன்னை மிகவும் துன்பஞ்செய்வேன் ஆகினும் அக்குற்றத்தை மன்னித்தேன் சீக்கிரத்தில் சவத்தைத் தூக்கிக்கொண்டு அப்புறஞ்செல்வாய்.

(சந்-வ-ம்.) அப்பா சுடலைகாவலா கிஞ்சிற்றேனுந் தயவுதாட்சணியமில்லாமலும் ... தக்கியன்றபடி பேசாமலும் கடின வார்த்தையாடி காட்டமடுக்கித் தீயிட்ட குழந்தையைத்தூக்கிட்டு போகச் சொல்லுகின்றனையே உனக்கிது தருமமா?





# அரசன் காஷ்டத்தைக் காலாலுதைக்கும் பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

நாட்டிநகாவல்மீறிச் சுருக்கினிலிங்குவந்தான்
ஒட்டமாய்க்கொள்ளிதன்னை யிட்டமன்றிவீண்வா
றிட்டுமேபேசலுற்றுப்பிக்கணஞ் சவத்தைதூக்கி
யெட்டியேசெல்வாய்மூர்க்கி யிதோகாலாலுதைத்திட்டேனே

## அரிச்சந்திரன் சொல் தரு.

அப்பப்பாமகனேயென்றவர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

என்னசெய்குவேன்பாலா யேதுசெய்குவேன்
உன்னைத்தோட்டிகாலினாலே யுதைக்கலானதே
எழில்-லோங்கு சீமானே

பாதகியானேன்இந்தப் பாரினில்யானே
பற்றுதேடாவெந்தன்வயிறு பண்புளமகனே
தூங்கப்பங்கய முகனே

மலைவன்விதியோ அந்த மாமுனிசதியோ
புலையன்காலினாலுதைத்தான் புகழ்பெருஞ்சுதனே
ஆலிப்-பொன்னிகர் மதனே

உருகுதேநெஞ்சம் கடல் உலகிலார்தஞ்சம்
பருதியின்குலத்துதித்த பாங்குயர்நேமா
சற்றுந்-நீங்கிலார் சோமா

(சங்-வ-ம்.) கண்மணி உனது பிதாவினது பாதத்தில் மகுடமுடி மன்னர்களுடைய சிரசானது பதிந்தது போகத் தற்சமயம் உன்னைச் சுடலைகாக்கும் நீசனானவன் பாதத்தா லுதைக்க விதியோ? அல்லது முனிசதியோ? அறிகிலேன் இதற்கென்செய்வேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

இராகம்-தாளம்-

பல்லவி.

எவளடிநீ — யிங்குவந்தவள்
எவ — ளடிநீ (எ)

அநுபல்லவி.

பவளநல்லதழ்ப் — பாலாபாலாவென்று
பதாறதேறிட்டுப்பார் — பார்-பார்-பார் (எவ)

சரணம்.

தேநுதலுடன் — சோரமாய்க்காவல்
மீறியேன்வந்தாய்-சொல் — சொல்-சொல்-சொல் (எ)

கள்ளத்தனமாய்த் — தள்ளித்தாண்டியே
கொள்ளியேன்வைத்தாய்போ — போ-போ-போ (எவ)

தரையைப்பார்த்துக் — கரைவதைவிட்டு
விரைவாயெழுந்துநில் — நில்-நில்-நில் (எவ)

## அரிச்சந்திரன்சொல் தரு.

மன்றுநிமன்னனரிச்சந்திரன் என்றமெட்டு.

இராகம் - இந்தஸ்தான் - தாளம் - ஏகம்.

கண்ணிகள்.

சொல்வதைக்கேளாமலே — தாண்டி
சோகமாய்த்திட்டி — துடிப்பதேனோசுட்டி
எனைக்கிட்டி — துடிப்பதேனோசுட்டி
செல்லுவாயப்புறம் — நீயே
சீக்கிரம்நாயே — ஜெகமிசழும்-பேயே
சிந்திப்பாயே — ஜெகமிகழும்பேயே
ஒல்லைதனில் — நில்லாதின்று
செல்லாயேற் — றுன்மார்க்கியே
அல்லல்செய்வேன் — மூர்க்கியே
அஞ்சிடேன் — நெஞ்சினில்
அன்புடனே — யானே (சொல்)

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா என்செய்வேன் இந்தப்பஞ்சமனானுடன் வாகாமத் தொந்தரைசெய்கின்றானே.



## அரிச்சந்திரன்சொல் தரு.

ஹைறதல முதாவென்றவர்ணமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

எந்தன்வருநியில்லாமலே — நீயேன்
வந்தாய் வந்தாய் — வந்தாய்
நிந்தனையாய்ப் — பைந்தொடியே
நீதமிலாமொழி — பேதமாப்பேச
லுற்றாய் — உற்றாய்

நொந்தபேயே
காரணம்
கெஞ்சிடாது

துஞ்சியமைந்தனைத் — தூக்கியே

துட்டியே பொல்லாத — மட்டியே சீக்கிரம்
அட்டிசொல்லாமலே — யெட்டியப்பாலே
செல்வாய்-செல்வாய் — செல்வாய் (எ)

(அரி-வ-ம்.) அடி மூர்க்கி என்ன யான் கேட்பதற்கெல்லாம் பதிற் கூறுகின்றனை யில்லை.

(சந்-வ-ம்.) ஐயோ பாலகா இதுவென்னடா வதீதம்.

## அரிச்சந்திரன்சொல் தர்க்கம்

மகனே மகனே என்ற வர்ணமெட்டு.

இராகம்-மோகனம்-தாளம்-சாபு.

கண்ணிகள்.

பாலாபாலாவென்று — தாலமதனில் வீழ்ந்தே
ஓலமிட்டழுவதும் — யாதடி-இந்தச்
சாலங்களிங்குசெல் — லாதடி
காலாலுதைத்ததாற் — கண்மணிமகனுக்கு
குன்றவுமானதோ — வோதடி.





## சந்திரவதிசொல் தரு.

ஷைவர்ணமெட்டு.

வாடிபோடிகுடி கேடியென்றேசுடு
காடாள்தோட்டியும்பேச லாச்சே-மனம்
வாடிமிகவுநைந்து போச்சே
தேடக்கிடையாததோர் சின்மயசொரூபமாங்
தெய்வமுமுனிவன்பல் காச்சே

அரிச்சந்திரன்.

தோட்டியென்றேநாவை நீட்டியேபேசுறுய்
தாட்டிகமாகவே மூர்க்கியே-வெகு
மேட்டிமைசேர்மனத் தீர்க்கியே
சேட்டைசெய்யாமலுன் செல்வன்றனேயேதூக்கிச்
செல்லுவாய்வழிதனே நோக்கியே.

சந்திரவதி.

மூர்க்கியெனப்புலையன் ஆக்ரமமாய்க்குலம்
பார்க்கமற்பேசவு மானதே-எந்தன்
ஊக்கமெல்லாங்குன்றிப் போனதே
சேர்க்கையாய்நிமதி சென்னியிற்சூடிடுஞ்
சிவபிரானருளிலா தானதே.

அரிச்சந்திரன்.

பாதிமதியணிபு நாதனைப்பூசித்தாற்
தீதுகளெய்துமோ சொல்லடி-பொல்லாக்
.ாதகிநின்மனங் கல்லடி
.தனைவார்த்தைகள் சாற்றுதேதூற்றுதே
.ாலிவப்புறஞ் செல்லடி

சந்திரவதி.

.லடியெனநீசன் சொல்லவுந்தூரத்தவும்
.ல்லாததோர்கால கதியோ-மிக்க
.லல்செய்கோசிகன் சதியோ
.லமர்குழலினு எம்பிகைபாகம்வா
ழையனேபங்கயன் விதியோ

அரிச்சந்திரன்.

விதியையுங்கதியையுஞ் சதியையும்நோகின்ற
சதிகாரக்கள்ளிநீ யாரடி-துட்டி
பதையாமலேமிட்டுப் பாரடி
அதிவிரைவாகவே பதிலுரையாதிருந்
தாலடிப்பேன்கோலால் தேரடி.

(அரி-வ-ம்.) அடியேசண்டாளி மூர்க்கி சீக்கிரத்தில் சவத்தைத் தூக்கிக்கொண்டப்புறஞ் செல்கின்றையா? இல்லையா? என்ன தெரிவிக்கின்றாய்.

(சந்-வ-ம்.) அப்பா தேவதாசா, கண்மணி, சீராளா, வாடியென்றும் போடியென்றும் கள்ளியென்றும் மயானங்காப்பவன் பேசத்தலைவிதியோ.

அரிச்சந்திரன்சொல் தரு.

அந்தரத்தலைகின்ற பேய்தானோ-பிணை
மதனைத்தின்னவந்த நாய்தானோ-அலலால்
சிந்தைதிடத்த டாகினிதானோ-மிக்க
சீருயர்மந்த்ர மோகினிதானோ-ஐயோ
சீராளாவென்றுமே கூறியேயழுகுறாய்
திருடி திருடி திருடி யேறிட்டுப்பார். (ஆ)

(சந்-வ-ம்.) அடாபாதகா வெட்டியான்குலத்திற் ஜெனித்த நீ எனதுபுத்திரனைக் காலாலுதைத்ததுமன்றி பலவாறுகத் தூஷணைஞ்செய்வது தருமமா?

அரிச்சந்திரன்சொல் தரு

வெட்டியானென்றுமே யேசுறாய்-வெகு
விதமாகவாய்மதம் பேசுறாய்-பேதாய்
முட்டுண்டுகுனிவது மார்க்கமா-எற்
முனிவுவந்தாற்கொல்வேன் திர்க்கமா
முன்னேநீநில்லாதே பின்னென்றுஞ்சொல்லாதே
மூர்க்கி-மூர்க்கி-மூர்க்கி இவ்விதமாக. (ஆ)

(அரி-வ-ம்.) அடியே அவ்விடமிருந்து தயாகச் சென்றுவிடு.

(சந்-வ-ம.) அப்பா சுடலைகாவலா ஏழையாகிய என்மீதுகிஞ்சிற்றேனுந் தயைசெய்யயாது இவ்வளவு கோபங்கொள்வது உசிதமா.



அரிச்சந்திரன்சொல் தரு

ஆடி யுன்பேருர்கூறடி யென்றமெட்டு.

இராகம்-காம்போல்-தாளம்-ஆதி.

பல்லவி.

ஏதடிவீண்வாது செய்குறாய்-எந்தன்
மீமமதையின்றுநாடி சாமவேளைவந்தமூடி. (ஏ)

அநுபல்லவி.

சாதனைக்கள்ளியேபொல்லாக் காதகத்துட்டியேமகா
காதகியேவிம்மிவிம்மி ரோதனங்கள்செய்துகொண்டு. (ஏ)

சந்திரவதிசொல் தரு.

டை வர்ணமெட்டு.

பல்லவி.

நீதியிதுவாமோ காவலா-ஐயோ
நிந்தனையாயுந்தனுவில் வந்தபடிபேசுகிறாய். (நீ)

அநுபல்லவி.

பாதிமதியணிவேணி நாதனுமுவந்தேயிந்தப்
பூதலமதனிற்சா(?)றி பேதகம்வகுத்தமறை. (நீ)

அரிச்சந்திரன்.

ஆவனுடன்காவல்மீறி மேவியேகொள்ளியைவக்க
அதிசம்ப்ரதமாயங்கற்ற சதிகாரியே
தானித்தாவிக்கூவிக்கூவிச் கேவலமாயெனையெண்ணி
சாதிபேதகங்களெடுத் தோதியேபரிதவிக்கிம் (ஏ)

சந்திரவதி.

ஞாதியுமற்றேநாமற்ற பாதகியெனப்பலகா
லோதியுமென்னுதவிடி வாதமதாக
ஆதவன்குலந்தழைக்க மாதவத்தினாலேவந்த
கோதிலாப்பாதகன்றனைப் பாதமதாலெத்திவிட்டாய் (நீ)

அரிச்சந்திரன்.

என்னைவிலைகொண்டவந்த உன்னதவாண்டைமகிழ்ந்து
சொன்னதோர்வருதிபோல உன்னிடமானை
நன்னயமாய்ச்சுதந்தரம் வன்னமுடன்வாங்கிடாமல்
என்னசொன்னாலுமுன்மகன் தன்னைத்தகனிக்கேன்போடி. (ஏ)

சந்திரவதி.

கங்கையணிகாசிநாதன் கொங்குலவுமலர்ப்பாதன்
மங்கைபாகனுயர்போதன் தங்கவரதன்
மங்களநகரமதில் பொங்கமில்சுடலைகாக்கும்
மடையாவஞ்சியென்மன மிடையவேசெய்தனுற்றாய் (ஏ)

அரிச்சந்திரன்.

மடையன்கடையனென்று தடையில்லாமலேயேசுங்
குடிகேடியேவஞ்சாத படுநீலியே
கடல்சூழ்புவியிலுன்போற் றிடமுள்ளார்யாருமில்லை
நடநடவப்புறத்திற் சுடலைதன்னைக்கடந்து (ஏ)

சந்திரவதி.

படபடப்பாகவேதான் கடுவிடம்போலேசீறி
சுடலைவிட்டப்புறத்தில் நடநடென்றே
கொடுமைசெய்யாதிவனைச் சுடக்கருணைபுரிவாய்
சுந்தரஞ்சேருந்தன்பாதம் இந்தவேளையிற்பணிந்தேன் (நீ)

(அரி-வ-ம்.) அடியேமூர்க்கி இச்சங்கதியை எனது எஜமானாகிய வீரபாகு கேட்பாராகில் மிகவுங் கோபங்கொண்டு உன்னைத் தண்டிப்பதோடுங் கூட என்னையும் பலவாரேசுவாராதலால் நீபிணத்திற்குரிய சுதந்தரமாகிய காற்பணம் முழத்துண்டு, வாய்க்கரிசி இவைகளைக்கொடுத்து சுடப்பிரிய மிருந்தால் சுடுவாய் இல்லையேல் இங்குநில்லாமல் சீக்கிரத்திலோடிப்போய் விடுவாய்.

சந்திரவதிமுன்னால் விருத்தம்.

பொருளுடை யேன்றமருடையே னுலைந்தப்
புத்திரனைத் தோண்மீது வைத்துப்போந்திவ்
விருளிடையிற் சுடலையில் வந்தெய்தவேனோ
வெறிந்த குறைக்கட்டை யிலேற்றவேனோ
தெருளுடையா யறமுடையாய்வினையேனீன்ற
சிறுவனையான் சுடக்கருணை செய்வாய்தயா
வருளுடையா யாதார மற்றோர்க்குன்ற
னடியினையே தஞ்சமென வீழ்ந்தேன்யானே.



(சந்-வ-ம்.) அப்பா தரும நீதியறிந்த சுடலை காவலா திரவியமும், உறவினருமுடையவளானால் இந்த அர்த்தராத்திரியில் ஒண்டியாக இக்குழந்தையைத் தோள்மீது சாத்தித் தூக்கிக்கொண்டு இம்மயானம் வந்து எரிந்தவிர்ந்து கிடக்கின்ற குறைக்கொள்ளிக் கட்டைகளை அடுக்கி அதன்மேலேற்றித் தீவைப்பேனா இதை யோசியாமல் என்னிடம் பிணத்துக்குறிய சுதந்திரங்கேட்டால் ஏழையாகிய யான் எங்கிருந்து கொடுப்பேன் உனது பாதமிரண்டையு மிதோபணிந்தேன் தயவு செய்து பாவியான்பெற்ற பிள்ளையைத் தகனிக்கக் கிருபைசெய்வாய்.

அரிச்சந்திரன் முன்னால் விருத்தம்.

பொன்னனையாய் விடுவிடுயான் புலையனென்னிற்
புலையனுமல்லேன் புலையற்கடிமை கண்டாய்
என்னடிநீ தீண்டுவது தகாதுநீதா
னிப்பொருட் கியானுரியனலே னென்னையாள்வோன்
சொன்னபணங் கர்லுண்டு கொள்ளியாடைத்
துண்டமு மொன்றுண்டு தந்துசுடுதியன்பா
யன்னவன்றன் படியாக வெனக்குத்தந்த
வரிசியுனக்கியானளிப்போ னறிகுவாயே.

(அரி-வ-ம்.) ஆ! மாதே என் காலைவிட்டு விடு இந்தச்சுடுகாட்டுக்குச் சொந்தமான பறையனென்று நீ என்னை நினைப்பாயானால் அந்தஎஜமானனே பறையனானல்லேன்நானோ அந்தப்பறையனுக்கடிமையானவன் என்காலைத் தொடுகிறதுனக்குத்தகாது இந்தப்பொருளுக்குச் சொந்தமானவனல்லன் ஆகையால் என்னையடிமையாக்கி[illegible]வன் சொல்லியிருக்கிற காற்பணமுழத்துண்டு வாய்க்கரிசி என்ற மூன்று இதில் எனக்குச் சொல்லவேண்டிய தான வாய்க்கரிசியை வேண்டுமானால் நீ இனாமாக எடுத்துக்கொண்டு எஜமானுக்குச் சேரவேண்டிய காற்பணமும் முழத்துண்டையுங் கொடுத்துவிட்டு உன்புத்திரனைச் சுட்டுக்கொள் இது தானென்னாலன்ற வுபகாரம் என்ன தெரிவிக்கின்றாய்?

(சந்-வ-ம்.) அப்பா சுடலைகாவலா உனக்கெவ்வளவோ உண்மையான சங்கதியை எடுத்துச் சொல்லியும், மீண்டும்காற்பணமும்

முழத்துண்டும் கொடு என்றுகேட்கின்றாய் அனாதியாகிய யான் எவ்விதங்கொடுப்பேன் வாதாடாது தயவுசெய்து பாலகனைத்தக னிப்பாய்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

எந்தனுண்டையான்தோட்டி தான்-எனக்
கிந்தவாய்க்கரிசிமட்டு நான்-அடி
உந்தனுக்கேகொடுப்பேன் துண்டுங்-காசும்
உதவாவிடிற்பிள்ளையைக்கொண்டு நீ
இந்தவிடத்திலுகந்துமே நிற்காமல்
ஏகுவாய்-ஏகுவாய் ஏகுவாய்-குடிகேடி (ஆ)

(அரி-வ-ம்.) அடிமாதே காற்பண முழத்துண்டுங் கொடுத்து உனது புத்திரனைத் தகனிக்கப் பிரியமிருந்தால் தகனிப்பாய் இல்லையேல் விரைவில் குழந்தையைத் தூக்கிக்கொண்டப்புறஞ் செல்வாய்.

## சந்திரவதி விருத்தம்.

யீமகாவலனேகேளாயெனக் கிந்தவையகத்தில்
சேமமாஞ்சுற்றமில்லை நிதியில்லையாகையாலே
காமனையனையவெந்தன் கண்மணிமகனைநீயுந்
தாமதமாகிடாமற்ற கனிப்பாய்தயவுசெய்தே.

## அரிச்சந்திரன்சொல் தரு.

சம்ப்ரதாயமான நீலியே-பெருஞ்
சண்டாளியே ஜெகஜாலியே-இல்லைத்
தம்பமெனக்குரம் பாடியே-எந்
தனையேய்க்கவந்தாய் நிர்மூடியே-கண்டந்
தன்னில்தோன்றுந்தாலியை இன்னகரில்விற்று
தருவாய்-தருவாய் தருவாய்-மாகுடிகேடி (ஆ)



## அரிச்சந்திரன் விருத்தம்.

நிதியில்லைப்பதியுமில்லை சேமமாஞ்சுற்றமில்லை
கெதியில்லையென்றுமெத்தக் கெஞ்சிடுமாதேநீயும்
அதிசம்ப்ரதாயநீலியா மெனமதித்திட்டேனித்
ததியினுன்கழுத்தின்தாலி தன்னையேவிற்றுத்தாராய்.

# சந்திரவதி தனது திருமங்கிலியத்தை அரிச்சந்த்தோட்டி கண்டானென்று புலம்புகிறபாகம்.

## சந்திரவதிசொல் தரு.

அன்னமே நான் தொட்ட என்றமெட்டு.

இராகம் - சாமா - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

காசிவிசாலாட்சி கங்கணக்கையாட்சி
கங்காதசரிசூரி வுயர்நாரிநாககுமாரி
காலமோ அலங்கோலமோ அலங்கோலமோ
கோலமோ கோலமோ

நானிலம்வாழ்மன்னர் தானறியாத்தாலி
யினான்காணவிதியோ காலகதியோ-முனிசதியோ
நங்கையேமலைமங்கையே மலைமங்கையே
மங்கையே மங்கையே

இறைவனையன்றியே யுறவோர்காணுத்தாலி
பறையன்காணலாச்சே புகழ்போச்சேமற்றோர்க்கேச்சே
இங்கையேகண்ணன்தங்கையே கண்ணன்தங்கையே
தங்கையே தங்கையே

வாட்டிறல்சேரெந்தன் மன்னன்கண்டதாலி
தோட்டியோகாணவைத்தாய் அறம்வளர்த்தாய்சிவன்பாகத்தாய்
வாரணிதனபூரணி தனபூரணி
பூரணி பூரணி

(அரி-வ-ம்.) ஆ! காசிவிசாலாக்ஷி, கருணாகரி மன்னர் மன்னருடன் கன்னமாபுரிக்கு வந்து நன்னயமாக வென்னை மணந்த மணவாளனாகிய யாதொரு அரிச்சந்திர பூபதியைத் தவிர மற்ற உறவினர் முதலிய யாவருக்குந் தெரியாத எனது திருமங்கிலியமானது கொடிய சண்டாளனாகிய யிந்த நீசன் கண்ணுக்குப் புலப்பட்டதானது உந்தன் திருவருளோ மற்றெதுவோ வறிகிலேன் அன்றியும் சாக்ஷாத் சிவபெருமான் யெனது தந்தையாகியமதிதய மகாராஜனுக்குக்கருணையோடுகொடுத்த திருவரமானது யிக்கரத்தின்கண் பொய்யாகப்போகுமோ மற்றி யாதுகாரணமோதெறிகிலேன் யிதற்கென் செய்வேன்.

அரிச்சந்திரன் விருத்தம்.

கழுத்தினிற்றாலினீசன் காணவும்விதியோவென்று
வழுத்தியேயாற்றனுற்ற மங்கையேநீயாரிங்கு
கொழுத்தியமைந்தன்யாருன் கொற்றவன்பெயருமென்ன
அழுத்தமாயிதெல்லாமெற் கறிவிப்பாய்தெரிவிப்பாயே

(அரி-வ-ம்.) அடிமாதே ஏதோயான் உனது திருமங்கிலியத்தைக் கண்டேனென்று என்னைநிந்தித்துச் சிவபிரானைச்சிந்தித்து மிகவும்வருந்துகின்றாய் நீயார்? இந்தப்பாலகன்யார்? உனது நா… கன்பெயரென்ன? விபரமாய்க்கூறுவாய்.

## சந்திரவதி அகவல்.

இராகம்-ஆரபி.

மங்கையேயுந்தன் வரலாறெல்லா
மிங்கெனக்குரைப்பா யென்றுமேகேட்ட
யீமகாவலனே யியம்பிடக்கேளாய்
மின்வாழ்கன்ன புரிதனையாளுஞ்
சந்திரகுலத்துச் சந்திரதயனும்
சுந்தரரேகையுஞ் சோதியைக்கோரிச்
செய்தநற்றவத்தால் திகழ்தாலியோடு
வையகமதனில் மாண்டபுடனுதித்துக்
கோசலநாட்டையோர் குடையதன்கீழே
மாசிலாதாண்டமன் திருசங்குவும்



சத்தியவதியுந் தவத்தோரருளாற்
பெற்றதோர் குலப்பெம்மானை
மெய்யரிச்சந்திர வெந்தனைமணந்திச்
செய்யமகனைச் சீருடன்பெற்றேன்

(அரி-வ-ம்.) மந்திரி சத்தியகீர்த்தி கேட்டையா?

(மந்-வ-ம்.) ப்ரபூ முழுதுங்கவனிப்பீர் இதன்மாயம் இன்னதெனத்தோன்றவில்லை.

(அரி-வ-ம்.) நல்லதப்படியே கவனிக்கின்றேன்.

## சந்திரவதி அகவல்.

இராகம்-தன்யாசி.

அப்பாவிவன்றனக் கரியகுருவினை
லொப்பிலாலோகதாச னென்றுபேர்
இட்டயோத்தியதி லியல்புடன்வாழுநாட்
கஷ்டகாலமோ கருமந்தானோ
வஞ்சக்கோசிக மாமுனிதூய
நெஞ்சினன்போல நிருபன்முன்வந்து
வேள்விக்குப்பொன்தர வேண்டுமென்ன
நீள்குடையரசர் நிமிஷத்திலீய
வாங்கிமீண்டும் வைத்திருவென்றே
நீங்கியிடர்பல நிகழ்த்தியேயெங்கள்
நன்னகருந்திரு நாட்டையும்பறித்துப்
பொன்தாவென்னப் புகன்றிடவரசர்

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி யிதென்ன விபரீதமாயிருக்கிறது கவனித்தீரா?

(மந்-வ-ம்.) மஹாராஜ் பதரவேண்டாம் இன்னுங்கவனிப்போம்

### சந்திரவதி அகவல்.

இராகம் - முகாரி.

திகைத்துக்காசியிற் சென்றவுடன்பொன்
றுகைதருவேனெனச் சொல்லுமுனிவா
தூதனெனவேதான் மறையோர்குலப்
பாதகன்றன்னைப் பாங்குடனெங்கள்பின்
அனுப்பினானன்றே னனுவளவேனு
மனுநெறிதவறா மன்னவர்கையிலும்
பாலகனிவன்றன் பங்கயக்கரத்திலும்
காலனைப்போலக் கடுஞ் சினங்கொண்டு
கிட்டியைக்கட்டியே கேடுகள்புரிய
மட்டில்லாத்துன்பம் வனத்தினிலடைந்து
கன்னலங்கமுனிருழ்க் காசியெனுமித்
தொன்னகரினுக்குத் துரிதமாய்வந்தோம்

(அரி-வ-ம்.) மந்திரிகவனித்தையோ?

(மந்-வ-ம்.) பொருங்கள் ப்ரபூ.

### சந்திரவதி அகவல்

இராகம்-எதுகுலகாம்போதி.

வந்தபின்கங்கைமாநதி தோய்ந்து
விந்தைசேரும் விஸ்வேசனைப்போற்றிக்
கன்னல்வேளனையவிக் காதலன்றனையும்
என்னையும்விலையே வெகுநிடன்கூறிக்
காலகண்டர்க்குக் கனமுடன்விற்றுக்
கோலமுனிவன் கடனைக்கொடுத்து
அரசனுமந்த்ரியும் மருந்துயர்கொண்டு
விரைவிலாதெங்கோமேவினர்காணேன்.

(அரி-வ-ம்.) சத்தியகீர்த்தி! இப்பாலகன் தேவதாசனென்
தற்கும்இவள் சந்திரவதியென்பதற்கும்யாதொரு சந்தேகமேயில்

(மந்-வ-ம்.) ப்ரபோ ஒருவாறு விஸ்வாமித்திரனுடைய மா
கையாக விருக்கினு மிருக்கும் யேன் பதறுகின்றீர்கள்.



### சந்திரவதி அகவல்.

இராகம்-தன்யாசி.

பின்னர்யாமந்தணர் போகம்புகுந்து
சொன்னதோர்பணியைத் தொழுதுமேசெய்து
வருகையிலோர்நாள் மாதவரிவனை
யருகினிலழைத்தே யடவியிற்சென்று
தெற்பைநீகொய்து சீராய்வாவென்ற
சொற்றவராது துணைவர்களோடு
சென்றங்கரவு தீண்டவேமாண்டான்
நின்றதோர்பாலர்கள் நீங்கியென்னிடம்
வந்துரைத்தார்கள் வனமதற்கேகி
வெந்துயரடைந்து மிகவேதேடிக்
கண்டுநானெடுத்துக் கங்குலிலிங்கு
கொண்டுவந்தேநீக் கொளுத்திடலானேன்
இனியாகிலுமென்னிருந்தவப்பாலனை
யனியாயஞ்செய்யா தடக்குவீர்சரணம்.

## அரிச்சந்திரன் குழந்தைதையை யெடுத்துப் புலம்புகிற பாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

செங்கதிர்மரபின்றேடு ஜெகத்தினிலழிந்துபோச்சோ
வெங்கலியனையவிஸ்வாமித்திரன் மகிழலாச்சோ
அங்கண்மாநிலங்களெல்லாம் ஆண்டிடப்பிறந்தபாலன்
சிங்கம்வாழ்காட்டிற்பாம்பு தீண்டியேயிறக்கவையோ.

### அரிச்சந்திரன் சொல் நிரு.

இராகம்-காபி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

ஐயோமகனேபாம்பாலிறந் தாயோ
அரன்பதம்புன்டையோ அன்னையைவேண்டையோ (ஐ)





தையலுமையாள்பாகன்தன் செயலோ
தவமுனிவன்சதியோ சதமகன்றன்விதியோ (ஐ)
ஆவலாய்வின்னுலகமடைந் தாயோ
அப்பனேஐயனே ஒப்பிலாத்துய்யனே (ஐ)

வையகத்தாசைதனைமறந் தாயோ
மாசிலாப்பாலகனே மதிநிகர்சுமுகனே (ஐ)
வெய்யோன்குலமழிந்துபோன [illegible]
மேதினியிலின்றோடு விற்பனையேயுன்னோடு (ஐ)

(அரி-வ-ம்.) கண்மணி! சூரியகுலம் அழிந்ததா? கோசிகன் எண்ணம் நிறைவேறினதா? மாதவஞ்செய்[illegible]வுன்னை எக்காலத்திற் காணப்போகின்றேன்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

என்னசெய்குவோம் என்றவர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

அப்பனே மகனே மல [illegible]புயமுகனே
எப்போதுனைக் காணப்போறேன்
இப்புவிமீது ஐயோ யான்வருந்தாது (அ)

கதிர்குலமணியே அழ கார்ந்தவிண்மணியே
மதியணிபிசன்செயலோ மடிந்தனையேனே
கொடும் வனந்தனிற் றுனே (அ)

செந்தளிர்க்கையா அருள் சேர்ந்திடுந்துய்யா
உந்தனைப்பயின்ற தாய்க்கோர்
உறுதிகூறயா என்னைத் திரும்பிப்பாராயா (அ)

சிறுயர்பாலா எந்தன் செல்வனேசிலா
தாரணியிலெவர்கள்செய்த சதியோஅறியேன்
முன்னை விதியோ குறியேன் (அ)

அஞ்சுகமொழியாய் உய ரமுதநன்விழியாய்
நஞ்சரவால் வனத்தில்மாள
நான்புரிபவமோ நின்தாய் தான்செய்தவமோ (அ)

(அரி-வ-ம்.) பாலகா நவகண்டங்களையுஞ் செங்கோல்செலுத்தப்பிறந்த நம்மைமகாகடின சித்தான மறையவர்க்கு விற்ற கொடிய சண்டாளனுச்சே இவனோடு பேசுவதனாலென்ன பலனிருக்கிறதெனனினைத்தா என்னுடன் வார்த்தை யாடாதிருக்கின்றனை கண்மணி அவ்வித வருத்தத்தைச் சிந்தையில் வசிக்காது சந்தோஷமாக ஒருவார்த்தை கூறுவாய்

## சந்திரவதி தன்னுடைய கணவனைக்கண்டு புலம்புகிறபாகம்.

சந்திரவதிசொல் தரு.

பாலாவென்ன காலம்வந்துதோடா என்றமெட்டு.

இராகம்-செஞ்சுருட்டி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

மன்னவுமக்கிந்தவிதிவாலாமர் வரலாமா
வாரிதிசூழிந்தத் தாரணியாவையும்
ஓர்குடைகீழில் சீரமாயாண்டதோர் (மன்)

தங்கநிறவங்கமெல்லாமங்கலர்ச்சே மங்கலர்ச்சே
சத்தியவாக்குடை புத்தயனைபரி
சுத்தனேமூன்றுல கத்தவரும்புகழ் (மன்)

ரீதியாகவேபாராண்டபலனிதுவோ பலனிதுவோ
நித்தன்மன்றில்நட னத்தனென்றும்பிர
சித்தன்பார்வதிபா கத்தனைப்போற்றியே. (மன்)

ஐயோகுறல்மாறிபின்றுபேசலாலச்சே போலாச்சே
அம்புயக்கையனே செம்பொனல்மெய்யனே
சம்ப்ரமத்துய்யனே எம்பிரானேசனே (மன்)

என்னைமணந்தென்ன சுகம்பெற்றீர்கோனே பெற்றீர்கோனே
என்னகர்தன்னிது நன்னயமிக்கதோர்
கன்னபுரிக்கன்று மன்னருடன்வந்து (மன்)



(சந்-வ-ம்.) ஆ! என்பிராணநாதா அந்தணரிடத்தில் கோசிகர் கடனுக்காக என்னையும் புத்திரனையும் விற்று மனக்கவலையோடு திரும்பிவந்ததாம் சண்டாளனுக் கடிமையாகி இந்தச்சுடலையைக் காத்துக்கொண்டிருக்க நேர்ந்ததென்னவோ?

அரிச்சந்திரன் விருத்தம்.

மன்னவரவையின்முன்னாள் மங்கலநாணைக்கண்டு
நன்னயமாலைசூட்டி நான்மலர்க்கரப்பிடித்தாங்
கன்னியேயுன்னையிந்தக் காசிநகர்தனில்விற்றேன்
பின்னும்நீயென்னைக்கண்டு பிதற்றியேயாற்றலாமோ.

(அரி-வ-ம்.) மாதே ரதகஜ துரகபதாதிகளென்ற நான்குவகைச்சேனைகளோடு கன்னமாபுரிக்கு வந்து மன்னவர் நிறைந்த சபையின்கண் உனது திருமங்கல்யத்தைக் கண்டு பாணிக்கிரகஞ்செய்து கைப்பிடித்த யான் அதனைக்கிஞ்சிற்றும் எண்ணாது கடனுக்காக வேதியரிடம் விற்றேன் அப்படிக்கிருக்க தற்சமயம் மகனிறந்தவியாகூலத்தை மறந்தவளாக யானடைந்திருக்கிற கோலத்தை நோக்கிப் பிரலாபித்து உற்றகாரணத்தை வினவுகின்றனை அதனாலுனக்கென்னபலன்.

சந்திரவதி விருத்தம்.

மன்னவாகற்பின்மிக்கமாதர் கடனுக்குத்தெய்வம்
இன்னிலமதனிற்கொண்ட விறைவரையன்றியுண்டோ
இன்னவையெல்லாமோர்ந்த வேந்தல்நீரிந்தவார்த்தை
என்னிடமனமுவந்தின்றியம்ப வுங்காலந்தானோ.

(சந்-வ-ம்.) கண்ணாளா ப்ரபஞ்சத்தினிடமாகக் கற்புடைய மாதர்களுக்குக் கணவனே தெய்வமாகும் கணவரைப் பணிந்தவர் பதவி பெறுவார்கள் கணவரை யிகழ்ந்தவர் நரகமடைவார்கள் இது தமக்குத் தெரியாததல்ல. ஆனதால் தாம்கொண்ட கோலத்தைக் கண்டு பிரலாபிக்கிற அடியாளிடம் உற்றது சொல்லப்பிரார்த்திக்கிறேன்.

(அரி-வ-ம்.) கண்ணாட்டி கவனித்துக் கேட்பாய் உன்னையும் புத்திரனையும் அந்தணர்க்கு விற்றுப்பிரிந்த பின் விஸ்வாமித்திரர்

தூதராகிய நக்ஷத்ரய்யர் நம்முடன் அயோத்தியிருந்து காசிக்ஷேத்திரம் வரை வந்ததற்காகத் தரகு கொடுக்கவேண்டுமென மிகவுந் துன்பஞ் செய்தார் அதனை மறுக்காது இம்மயான காவலனாகிய வீரபாகுவுக்கு அடிமையாகிப் பதினாயிரம் பொன்வாங்கி அன்னவர்க்கீய்ந்தனுப்பிய பின்னர் அடிமைகொண்டோன் உத்தரவின் பிரகாரம் இந்தச்சுடலைக்கு வந்து காவல்புரிந்து வாய்க்கரிசியினால் மந்திரிதனமைக்கும் அன்னமுண்டு சரீரம் வளர்த்து வருகின்றேன்.

(சந்-வ-ம்.) ஐயோ ப்ராணேசா இந்தக் கெதியா நாம் அடையவேண்டும்.

(அரி-வ-ம்.) மாதரசே "விதியினால் வருவதல்லாமல் வேதத்தோர் தங்கள் மதியினால் வாழ்வதொன்றில்லை" ஆதலால்தற்சமயம் விதியின் செயலை யாவராற் கடக்கமுடியும்.

(சந்-வ-ம்.) வாஸ்தவம் ப்ரபூ புத்திரனைத்தகனஞ் செய்யுங்கள் விரைவிலந்தணரில்லஞ் செல்லாவிடில் மிகவுங் கோபிப்பார்.

அரிச்சந்திரன் விருத்தம்.

மங்கையேயுரைக்கக்கேளாய் மாசறியாயெனையாட்கொண்ட
துங்கவாண்டையுமேவிண்ட சொல்லதைமீறொணாதால்
மங்களமறையோர்பக்கம் வாகுடன்சென்றேகாசும்
பொங்கமாந்துண்டும்வாங்கிப் புனிதமாய்வருகுவாயே.

(அரி-வ-ம்.) மாதே சந்திரவதி என்னையடிமை கொண்டவ்வாகுவின் வறுதியையான் மீறுவேனாகில் சத்தியபங்கம் வந்துநேரிடுமாதலால் நீகாலதாமதஞ் செய்யாது அந்தணரிடத்திற் சென்று காற்பணமும் முழத்துண்டும் வாங்கிக்கொண்டு சீக்கிரம் வருவாய்.

(சந்-வ-ம்.) ப்ரபூ கானகத்திலிறந்த பாலகனை யெடுத்தடக்கி வரவருதிகொடுக்க வாதுசெய்த அந்தணர் எந்தவிதம் காற்பணமும்முழத்துண்டும் கொடுக்கப்போகின்றார் இதற்கென்செய்வேன்.

(அரி-வ-ம்.) மாதரசே எவ்விதத்திலும் காற்பணமும் முழத்துண்டும் அந்தணரைப்பணிந்து வாங்கி வந்தாலொழியப் புத்திரனைத் தகனிக்க வேதுப்படமாட்டாது.



(சந்-வ-ம்.) நல்லது ப்ரபூ தமது வருதிபோலே காலகண்டய்யரிடஞ் சென்றுகாற்பணமும் முழத்துண்டும் வாங்கிவருகிறேன் வரும் வரைபுத்திரனைப் பத்திரமாகப் பார்த்துக்கொள்ளப் பிரார்த்திக்கின்றேன்.

(சந்-வ-ம்.) மாதே நீசீக்கிரம் வராவிடிற் சுடுகாட்டைச் சுற்றிப்பார்க்கப் போய்விடுவேன்.

(சந்-வ-ம்.) சீக்கிரம் வந்து சேருகிறேன் ப்ரபூ.

(அரி-வ-ம்.) நல்லது சென்று வருவாய்.

## சந்திரவதி காலகண்டய்யரிடம் காற்பணமும் முழத்துண்டும் வாங்கச்செல்லும் பாகம்.

சந்திரவதி விருத்தம்.

ஆதவன்குலத்துதித்தவண்ணலுஞ் சொன்னவண்ணங்
கோதிலாத்துண்டுங்காசுங் கொடுத்தாலமைந்தன்றன்னை
யாதரவுடனடக்கவந்தணர் வீட்டைத்தேடிக்
காதகிமயானம்விட்டுக் கடுகியேசெல்கின்றேனே.

சந்திரவதிசொல் தரு.

விஸ்வேசாவுந்தன்பாதமென்றமெட்டு.

இராகம்-[illegible]ாசு-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

சம்போசிவாகைலாசா சங்கராபரமேசா
தாண்டவாபவநாசா தையல்பாகாவிஸ்வேசா
தற்பரா தற்பரா தற்பராதற்பரா (ச)

ஓருந்துண்டுங்காசுஞ் ஜெகமெலாம்புகழ்வீசுந்
திருமறையோர்பாற்றானே சிந்தையாய்வாங்கிடானே
செல்கின்றேன் செல்கின்றேன் செல்கின்றேன்செல்கின்றேன் (ச)

மகனிறந்ததுமன்றி மணாளனுமனங்கன்றி
வருந்திச்சுடலைகாக்க மங்கைநானதைப்பார்க்க
வைத்தையே வைத்தையே வைத்தையேவைத்தையே (ச)

இந்தவினையெங்கட்டு எய்துதற்குந்தனைக்கு
என்னகுறைவுசெய்தோம் என்னபாதகஞ்செய்தோம்
ஈஸ்பரா ஈஸ்பரா ஈஸ்பரா ஈஸ்பரா. (அ)

மயானந்தனிலிருந்து மனதுமிகவுநொந்து
வந்தேன்காசிநகர்வீதி மாதுமித்ததியனுதி
வள்ளலே வள்ளலே வள்ளலே வள்ளலே. (அ)

அந்தணரோவெருகோபி யவர்மனையாளோபாவி
எந்தனுக்குக்காசுந்துண்டுந் தந்திடுவாரோதாராரோ
என்செய்வேன்என்செய்வேன்என்செய்வேன்என்செய்வேன் (அ)

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா என்னை யடிமை கொண்ட காலகண்டய்யரிடங் கொள்ளும் துண்டுங் காசும் வாங்குவதற்காக மயானத்திலிருந்து இந்தக் காசிமாநகர்வீதியில் வந்துசேர்ந்தேன் அன்னவரில்லத்தை நாடிச் செல்லுகின்றேன்.

பொதுவசனம்.

இவ்விதஞ் சந்திரவதி மயானத்திலிருந்து காலகண்டய்யரிடம் காற்பணமும் முழத்துண்டும் வாங்குவதற்காகக் காசிநகரத்துக்குட் பிரவேசித்தனள் இனிமேல் அந்நகர்க் கரசனாகிய காசிராஜன் விர்த்தாந்தங்காண்குக.

உ.

பரம்பதிதுணை.

# காசிராஜன் சபை.

காசிராஜன் கொலுவிருத்தம்.

தலம்புகழுங் காசிநகர் புரக்கும் பூமன்
  தையலார் மடலெழுதுந் தகைசேர் காமன்
பலகலைக ளுணர்திறன் பண்பின் மிக்கான்
  பரராஜ ரெதிர்த்தாலிப் பாரில் வைக்கான்
வலமுலகோ ரேழுவருந் துரக முள்ளான்
  மதிவல்லோ ரெடுத்துரைக்கும் வரனந் தள்ளாச்
சலசலேச சனனிருதாள் தன்னைப் போற்றிச்
  சந்தோஷ மாய்க்கொலுவில் தான்வந் தானே.



காசிராஜன்சொல் தரு.

தாஸ தாஸ தாஸ ராஜவென்ற மெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-தோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

தேசராஜர்தினம்போற்றும் திருமெய்ப்பிரான் - தினம்
செங்கோல்வழுவாது அங்கனுங்கெலாம்பொங்கமாயாளுதாரன் -
திருவளர்பூமன் - மருவிலாநேமன் உருவில்மிகுகாமன் - மா
வரமுயர்போதன் - உரமுடைநீதன் விரைசெறியுந்தாமன் - நன்
மதியான் நிதியான் - கதியான் விதியான் - பதிபுகழும்பதியரன்

திறமிகுபடையான் தருநிகர்கொடையான்
சீரார்காசிவேந்தன் சீரார்காசிவேந்தன்
சீரார்காசிவேந்தன் வந்தேன். (தேச)

காசிராஜன் சொல்தரு.

சபைவணக்கம்.

எனதுமனதுக்கேற்ற மங்கையென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தான்-பியாக்-தாளம்-ஏகம்.

கண்ணிகள்.

சபையிலுள்ளயாவருக்குந் தனியன்வந்தனம்
தனியன்வந்தனம் இதோ தாழ்ந்துதந்தனன்

சந்ததமாபெரியோர்க்கும் உயர்
தண்டமிழ்வாணர்கள்யார்க்கும் ஓங்கும்
அந்தமறைவேதியர்க்கும் நன்ற
அன்னைபிதா பதத்திற்கும்

அறவோர்க்கும் துறவோர்க்கும்
அன்புடன் இன்பமாய்
அடியனுங்கை கூப்பியே (ச)

கல்யாணசுந்தரதாசன் கற்றவர்நேசன்
கற்றவர்நேசன் மூதுகளத்தூர்நல்வாசன்

காதலுடனேகொண்டாடி. அந்த
கந்தவேள்பதத்தைநாடி. சொல்லும்
நிகிலாதபதம்பாடி. இந்தச்
சிறியேனனேகங் கோடி.



செந்தாமரை நந்தாமலர்
சீருடன் நேரதாய்
செம்மையாகத்தூவியே (ச)

காசிராஜன் வழிபடுகடவுள் வணக்கம் விருத்தம்.

மாதமும்மாரிபெய்யமனுநெறி தவராதோங்கத்
தீதிலாதறஞ்செழிக்கச் சிறந்தநாற்குலமும்வாழ
பூதலம்புரக்கவேந்தர் போற்றியர்வனசமங்கை
காதலனனெங்கள் காகுத்தன்பாதம்போற்றி.

காசிராஜன்சொல் தரு.

கந்தநாதாவென்ற வர்ணமெட்டு.

இராகம்-பியாக்-தாளம்-ஆதி.

பல்லவி.

கொண்டல்வண்ணா கோபாலாகண்பார்

அநுபல்லவி.

அண்டர்களிடர்நீங்கவே பண்டுசூர்சிரமதை
துண்டஞ்செய்த மதுசூதனா-தா. (கொ)

சரணங்கள்.

ஆழிதனிற்றுயிலேயில் வேழமூலமென்றழைக்கத்
தாழ்வில்லாது வந்துகார்த்தவா-தா. (கொ)

சாதுக்கள்நேசமறவா நீதன்கல்யாணசுந்தரன்
ஓதுந்தமிழ்க் கருணதவும்-ஓ. (கொ)

(காசி-வ-ம்.) ஓம் நமோநாராயணா, வைகுந்தவாசா, வேலையிற்றுயிலும்வித்தகா இவ்வரியாசனத்தினிடமாக எனது முன்னோர்கள் வீற்றரசு புரிந்ததுபோல யானும் வீற்றரசுபுரிய அருள்செய்யவேண்டும்

மந்திரி அரசனைவணங்கும் வசனம்.

மிதிலை, வதுவை, கயமென்றே தன்முன்றிலிடைமோகஞ் செய் மூன்றுமுரசையுடைய வேந்தேமந்திரி வந்தனஞ் செய்கின்றேன்.

(காசி-வ-ம்.) கல்யாணமந்திரி சமீபத்தில் வீற்றிருப்பீர்

(சேவ-வ-ம்.) இவருடைய பாரி ள்ளதிரில்லையென்றே குல வுங்கொடியுடைய கோவிவவந்தனஞ் செய்கின்றேன்சேவகன்.

(காசி-வ-ம்.) கல்யாண்சேவகா உஜாராகக் காவல்புரிவாய்.

(சேவ-வ-ம்.) ஆக்ஞைப்ரபூ.

(காசி-வ-ம்.) ஹெப்ரதான் நமதுராஜ்ய விஷயமாகச்சிலசங்க திகள் உம்மிடத்தில் கேட்கவிரும்புகிறேன்தம தபிப்பிராயம்யாது.

(மந்-வ-ம்.) மகாராஜ் பதிலுரைக்கத் தயாராயிருக்கின்றேன் ப்ரபூ.

## காசிராஜன்தேசவிசாரணை.

ஆசிரிய விருத்தம் வினு விடை.

இராகம்-ஆனந்தபைரவி.

அரசன் வினு.

அகிலமிசை வழுவின்றி மாதமும் மாரிதா
னடைவுடன் பொழிகின்றதா

மந்திரிவிடை.

அண்ணலே யவனிதனில் மாதமும்மாரிதா
னன்புன் பொழிகின்றதே

அரசன் வினு.

ஆலயங்கட்கெலா மாறுகாலப்பூசை
யனுதினம் நடக்கின்றதா

மந்திரி விடை.

அன்பனே யாறுகாலப்பூசை கோவில்களி
லனுதினம் நடக்கின்றதே

அரசன் வினு.

தகவுடைய வந்தணர்கள் சதுர்வேதமுஞ்சதாத்
தாழ்விலா தோதுறாரா

மந்திரிவிடை.

தண்ணளிசேரிறைவமர் வேதியர்கள் நாலுமறை
தாழ்விலா தோதுறார்கள்



316

அரசர்வினு

சத்திரியர் நீதியாத்தரணி தனையாண்டுதிரை
சரியாச் செலுத்துறாரா

மந்திரிவிடை.

சக்ராதிபாமன்னர் தரணிதனை யாண்டுதிரை
சரியாய்ச் செலுத்துறார்கள்

அரசர்வினு.

அகவிலைகள்குறைவின்றி தனவைஸ்யர் வர்த்தக
மன்புடன் செய்குறாரா

மந்திரிவிடை.

அண்ணலுயர்மன்னனே தனவைஸ்யர் வர்த்தகம்
அன்புடன் செய்குறார்கள்

அரசர்வினு.

அந்தமாப் பூவைஸ்யரனை வர்களுமுழுதவே
ளாண்மைசெய்தோங்குறாரா

மந்திரிவிடை.

அரசனேபூவை ஸ்யருழுது பயிர்செய்தென்றும்
அன்புடன் வாழ்குறார்கள்

அரசர்வினு.

பகாரியச்சூத்திரர்க ளாறிலோர் கடமையது
பண்பாக்கொடுக்கிறாரா
பகருமாய் மதிமந்திரி யிக்கணம்விரைவினிற்
பதிலெனக்குறை செய்வையே.

மந்திரிவிடை

பண்ணுடையசெஞ்சொலுயர் பார்த்திபா சூத்திரர்கள்
பாங்காகவிரு மூன்றிலோர்
பகுதிகள் நமக்குக்கொடுத்து வாழ்கின்றார்கள்
பாரிதனை யறிகுவீரே.

(காசி-வ-ம்.) எப்ரதான் மிகவுஞ் சந்தோஷம்.

(காசி வ-ம்.) அமைச்சே மற்றும் நமது நகர் சோதனைக்கா ரர்களாகிய தலையாரிகள் தினந்தினம் யாதொரு குற்றமின்றி நகர்சோதனை செய்து வருகிறார்களா? யேதேனும் தாழ்வுண்டா.

(மந்-வ-ம்.) ப்ரபூ நமது நகர்சோதனைக்காரர்களாகிய தலையாரிகள் தினந்தினம் மிகுந்த தைரியமுடையவர்களாய் யாதொரு அச்சமின்றி நமது அரண்மனை முதல் மற்றெவ்விடத்தும் களவு முதலியவை நடக்காமல் சீர்த்தியாக நகர்சோதனை செய்து வருகிறார்கள்.

(காசி-வ-ம்.) பூகவல்லபா அத்யந்த குதூகலம்.

(பொது-வ-ம்.) இவ்விதம் காசிராஜன் தேசவிசாரணைசெய்து கொலுக்கலைந்து அந்தப்புறஞ் சென்று அன்றிராத்திரி பத்தினி புத்திருடன் நித்திரைசெய்யலானான், இதன்மேல் விஸ்வாமித்திரர்வருகிற விதங் காண்குக.

## விஸ்வாமித்திரர் வசனம்.

ஆ! ஆ! ஆ! என்ன ஆச்சரியம் யான் இந்திரன் சபையில் வசிடன் பகையால் அயோத்தி வேந்தனை மகாபொய்யனெனக் கூறி அதனை ரூபிக்கும் பொருட்டு அன்னவனிடம் வந்து தந்திரமாக நாட்டைக் கவர்ந்து மீண்டும் கடனுக்குள்ளாக்கி அக்கடன்தீர்க்கும் பொருட்டாக இக்காசியம்பதிக்கு வந்து பத்தினிபுத்திரன் இருவரையும் விற்கும்படியாகச் செய்துதாருக்கூலிக்காக அன்னவனைப் பஞ்சமனுக்கடிமையாக்கித் தெற்பைகொய்யச் சென்றதேவதாசனை அரவாலிறக்கும்படி யமைத்துமற்றுமநேகதுன்பங்கள் செய்ததிலும் அயோத்திக்கரசனாகிய அரிச்சந்திரன் கனவிலும்பொய் சொல்பவனாகத்தெரியவில்லை ஆயினுமென்ன தற்சமயம்தேவதாசனைத்தகனிக்கும்விஷயமாய்க்காலகண்டனிடம் காற்பணமுழுத்துண்டு வாங்குவதற்குச் சந்திரவதியானவள் மயானத்திலிருந்து நகரத்துக்குட் பிரவேசித்துவருகிறாள் அன்னவள்வரும்வழியில் காசிராஜன்புத்திரனை மாய்கையாற்கொலைசெய்து கொண்டுபோய்ப்போட்டு அதனால் அநேககெடுதிகளையுண்டாக்கி அந்த அரிச்சந்திரனை பொய்சொல்லச் செய்யாதபக்ஷத்தில்நான் விஸ்வாமித்திரனா? இதோசெல்லுகின்றேன்.



பொதுவசனம். 377

இப்படியாக விஸ்வாமித்திரன் மனதில்தீர்மானித்துக்காசிராஜன் குழந்தையை மாய்கையாற்கொலைசெய்து சந்திரவதிவரும்வழியிற் போட்டுவிட சந்திரவதியானவள் அக்குழந்தையைத்தனது குழந்தையெனவெடுத்துப் புலம்புகிற விதங்காண்குக.

(சந்-வ-ம்.) ஆ காசிநாதா எனது பாதத்தில் யேதோ ஓர்குழந்தை தட்டுப்படுகிறது ஒருவாறு ஏந்தன்பாலனைத்தான் நாய் நரிகள் யிங்கிழுத்து வந்து போட்டதோ என்னவோ தெரியவில்லை நன்றாகவுற்றுப் பார்க்கின்றேன்.

## சந்திரவதி காசிராஜன்புத்திரனைத் தன் மகனெனச் சந்தேகமாய் நினைத்தெடுத்துப் புலம்புகிறபாகம்.

### சந்திரவதி சொல் தரு.

கண்ணே யென்கண்மணியே என்றமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-யேகம்.

கண்ணிகள்.

செல்வனேநீயாரடா இந்தத்
தெருவவதனையடித்தாய் சீராருயிர்விடுத்தாய்

வேந்தன்மகன்போலவே ஐயோ
விளங்குகின்றாய் வெகுவாய்த்துலங்குகின்றாய்

ஆர்பெற்றபாலகனே உந்தன்
அன்னையாரோ தந்தையாரோவய்யா

இருளானதாலேகண்ணே உன்னை
இன்னானெனவறிய வொன்றுமில்லை

என்மகன்தானோவப்பா நீ
இங்குவந்தகாரணமென்ன சொல்லாய்

கோசிகன்றுதிதவோ அந்தக்
குன்றவில்லியோ னருளிதுவோ

(சந்-வ-ம்.) பாலகா நீ யாரோ? உனதன்னை தந்தையாரோ? உனது நகர் எதுவோ? உன்னை இவ்விதத்துன்பத்துக் குள்ளாக்கினவர்களாரோ? நீயில்லாத நாடெந்த விதமாயிருக்கிறதோ? அல்லது நீ என்மகன்தானோ? இநனானதாலுன்னை இன்னாரெனத் தெரிந்து கொள்ளக்கூடவில்லையே என்செய்வேன்.

பொது வசனம்.

சந்திரவதி இந்தவிதமாகக் காசிராஜன் புத்திரனையெடுத்து வைத்தழுது கொண்டிருக்குந் தருணம் காசிக்காவலர் வருகிற விதங்காண்க.

## காசிக்காவலர் வருகிறபாகம்.

காசிக்காவலர் விருத்தம்.

இடையினிற்கச்சை தன்னை யிறுக்கியேமுறுக்கிக்கட்டி
உடைவளையதற்குள்வைத்தே யுன்னதப்பொட்டுமிட்டு
திடமிருந்தலைக்குக்குல்லாச் சேர்த்துமேபணிகள் பூண்டு
கடகளிறதனைப்போலக் காவலர்தோன்றினரே.

காவலர்சொல் தரு.

தாமவிபோகருணை கராவென்றமெட்டு.

இராகம்-தாளம்.

பல்லவி.

காவலர்கள் கதியாகவே வந்தோமிதோ (கா)

அநுபல்லவி.

அவனுடனேநாடி யன்பாக ஒன்றுகூடி (கா)

சரணங்கள்.

கையினில்வாளிலங்கக் கச்சைக்கட்டுதுலங்க
பையப்பையநடந்து பாதைதனைத்தொடர்ந்து (கா)
தீவெட்டியதனையே சிந்தையுடனேபற்றி
கூவிக்கூவிக்கொண்டு கோலத்தெருவைச்சுற்றி (கா)



(தலை-வ-ம்.) அப்பா தீரவீரசூரமிகுந்த காவலர்களே நமது மகாராஜாவின் உத்தரவின் பிரகாரம் தினம் தினம் இரவில் நகர் சோதனை செய்துவருவதுபோல இன்றையத்தினமும் நகர்சோதனைசெய்து வருவோம் வாருங்கள்.

(காவ-வ-ம்.) அப்படியே செல்வோம் தலையாரி அண்ணே.

(தலை-வ-ம்.) ஆ காவலர்களே இவ்வீதியின் கடைசியில் ஒற்றையாளரவங்கேட்குகிறதே அஃதின்னதெனத் தெரிவோம் வாருங்கள்.

(காவ-வ-ம்.) நல்லது தலையாரி அண்ணே.

தலையாரி சந்திரவதியைப்பார்த்துச்சொல் வசனம்.

ஏ! யாரேயார்? இந்தக் குழந்தை யார் சீக்கிரஞ் சொல்லுவாய்.

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா இதுவுமுன் சோதனையோ.

(தலை-வ-ம்.) அடா காவலர்காள் சீக்கிரம் தீவெட்டியைக் கொளுத்துங்கள்.

(காவ-வ-ம்.) இதோ கொளுத்திவிட்டோம் அண்ணே.

(தலை-வ-ம்.) காவலர்காள் இந்தச்சண்டாளி செய்திருக்கிற அநீதத்தைப் பார்த்தீர்களா?

(காவ-வ-ம்.) என்ன அண்ணே.

(தலை-வ-ம்.) இதோ பாருங்கள் இந்தச்சண்டாளி நமது மகாராஜாபுத்திரனைத் திருடிக்கொண்டுவந்து கொலைசெய்து தற்சமயம் தின்னுவதற்கெண்ணிக் கொண்டிருக்கிறாள் ஆகையால் இவளை நன்றாக அடியுங்கள் எலும்பைபடியொடியுங்கள் விட்டு விடாதீர்கள்.

சந்திரவதிசொல் தரு.

ஐயையோபரதேசியாகினேனென்றமெட்டு.

இராகம்-நாதநாமக்கிரியை-தாளம்-சாப்பு.

கண்ணிகள்.

ஐயோஇவ்வினைக்கென்னசெய்வேன் செய்குவேன்
ஆரிடத்திற்போய்ச்சொல்வேன் தெய்வமேதெய்வமேதெய்வமே
வைதெந்தனையேஇந்த வாள்வீரடிக்கின்ற
வகையொன்றுமறிகிலேன் தெய்வமேதெய்வமேதெய்வமே



(தலை-வ-ம்.) அடே காவலர்காள் பிள்ளையைக்கொன்ற பாதகியான இந்தக்கள்ளி ஓடிப்போய் விடுவாள் கயற்றினாற் பிடித்துக் கட்டுங்கள்.

(காவ-வ-ம்.) இதோ கட்டுகிறோம் அண்ணே.

சந்திரவதி சொல் தரு.

வள்ளல்மகனைச்சுடக் கொள்ளித்துண்டுநற்காசும்
வாங்கவேகுந்தருணம் தெய்வமேதெய்வமேதெய்வமே
பிள்ளையைக்கொன்றபெருங் கள்ளியிவளென்றெனைப்
பிடித்துக்கட்டவிதியோ தெய்வமேதெய்வமேதெய்வமே

(தலை-வ-ம்.) என்னடி பாலனைக்கொன்ற பாதகி நடவடி நட, ஜாலஞ்செய்யாதே.

(தலை-வ-ம்.) அடே காவலர்காளிவள் ஜாலஞ்செய்கிறாள் தலைமயிரைப் பிடித்துத் தள்ளுங்கள்.

சந்திரவதி சொல்தரு.

பாலனைக்கொலைசெய்த பாதகியென்றேமயிர்
பற்றியிழுக்குகின்றார் தெய்வமேதெய்வமேதெய்வமே
தாலமதனிலேதான் தலைமோதியுடைந்திடத்
தள்ளுகின்றார்விரைவாய் தெய்வமேதெய்வமேதெய்வமே

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா யீதென்ன வநியாயம் இந்தச்சண்டாளர்கள் என்னைப்பிள்ளையைக் கொன்றபாதகி, கள்ளி, நீலியென்று வாய்க்குவந்தபடி வைது கயிற்றினாற் பிடித்துக் கட்டித் தலைசிகையைப் பிடித்திழுக்குகிறார்கள் என்செய்வேன்.

(தலையாரி-வ-ம்.) அடியேமூர்க்கி சண்டாளர்கள் பிள்ளையைக் கொன்றவளென்று பிடித்தடிக்கின்றார்கள் என் செய்வேன் காசிநாதா வென்று கதறிப்பாசாங்கு செய்கின்றனையே நீயிந்தப்பிள்ளையைக் கொல்லவில்லையோ?

(சந்-வ-ம்.) ஐயா காவலர்களே இறந்த பிள்ளையானது என்கரத்திலிடமாக இருக்கயான் கொல்லவில்லை யென்றுசொல்லும்பக்ஷத்தில் நீங்கள் ஒப்புக்கொள்வீர்களா?

(தலையாரி-வ-ம்.) அடியே துஷ்டி எங்கே தந்திரவார்த்தை பேசுகின்றனை சீக்கிரஞ்செல் அரசன் சமுகத்திற்போய் எல்லாம் பேசிக்கொள்ளவோம்.

### சந்திரவதிசொல் தரு.

மன்னர்சமுகமிவர் வாவென்றடிக்கவுநான்
மாபாவமென்செய்தேனோ தெய்வமேதெய்வமேதெய்வமே
உன்னைக்கெதியெனவே என்றுமுந்துதிசெய்ய
உற்றபலனிதுவோ தெய்வமேதெய்வமேதெய்வமே

(தலையாரி-வ-ம்.) அடா காவலர்களே ஏதோயிவள் மிகவுஞ் சாந்தகுண முடையவளைப்போலத் தெய்வத்தை நொந்தழுகிறாள் ஆகையால் இவளைக்கம்பினாலுங் கையினாலும் சரீரத்திலிருந்து இரத்தமாறாகப் பெருகியோடும்படி அடியுங்கள்.

(காவலர்வசனம்.) நல்லதண்ணே.

### சந்திரவதிசொல் தரு

கம்பாலுங்கையாலுஞ் செம்பொன்மேனியில்ரத்தம்
கனமாய்ப்பெருகியோடத் தெய்வமே-தெய்வமே-தெய்வமே
தம்பமில்லாதவெனை வம்புதாய்மோதிடத்
தாழ்வென்னபுரிந்திட்டேன் தெய்வமே-தெய்வமே-தெய்வமே

சந்திரவதி விருத்தம்.

மூவர்க்குமுதலேயந்த முப்புரதகனாகாசிக்
காவலன்குழந்தைதன்னைக் களவினாற்கொன்றேனென்று
காவலர்கயிற்றாலிதோ கட்டியேயடித்திழுத்துப்
பூவிறைசமுகங்கொண்டு போந்தனர்காப்பாய்போற்றி.

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா, கருணாகரா, கைலைவாசா, கங்காதரா, கௌரிமனோகரா அடியாள் காசிராஜன்புத்திரனைக் கொலைசெய்தேனென்று காவலர்கயிற்றினாற் கட்டியடித்து அரசன் கொலுமண்டபத்திற்குக் கொண்டுவந்திருக்கிறார்கள் இனிமேல் என்ன நடக்குமோவறியேன்என்னைக்காத்துரக்ஷிப்பதுன துகடமையே.



(தலையாரிவசனம்.) அடா காவலர்காள் இந்தப்படுபாவியுடன் மஹாராஜா அரண்மனைக்கு வந்துசேர்ந்தோம் இச்சங்கதியை அரசனிடம் தெரிவிப்போமா?

(காவலர்வசனம்.) நல்லது தலையாரியண்ணே.

## காசிராஜன் விசாரணை செய்யும்பாகம்.

தலையாரி விருத்தம்.

பூசுராராசிகூறப்புலவர்கள் புகழ்ந்துபாட
பாசிழைமாதராடப் பாங்குடன்கொலுவில்வீற்றுக்
காசினிமுழுதுமோர்பூச் சக்கரக்குடைக்கீழ்ச்செங்கோல்
மாசிலாதோச்சுங்காசி மன்னவாபோற்றிபோற்றி.

(தலையாரி-வ-ம்.) மஹாராஜவந்தனஞ்செய்கின்றேன் தலையாரி

(காசி-வ-ம்.) கல்யாண், அடேதலையாரி தற்சமயம் நீ இங்கு வந்தவிஷயம்யாது.

(தலையாரி-வ-ம்.) ப்ரபூ தற்சமயம் யானிங்கு வந்தவிஷயத்தைத்தெரிவிக்க எனதுமனமிகவும் வருந்துகிறது.

(காசி-வ-ம்.) அடா தலையாரி ஏண்டா வருந்தவேண்டும் வருந்தாதுசொல்.

(தலையாரி-வ-ம்.) மஹாராஜ், தங்களருந்தவப் புத்திரசிகாமணியை ஓர்படுபாவி எந்தவிதமாகவோ திருடிக்கொண்டு வந்து வீதியில்வைத்து ஊட்டியைமுறித்துப் புசிப்பதற் காரம்பித்துக்கொண்டிருந்தாள் அச்சமயம் நகர்சோதனை செய்துகொண்டுவந்த யானுங் காவலர்களுங் கண்டு அன்னவளைப் பிடித்திதோ கட்டிக்கொண்டு வந்திருக்கின்றோம் பாருங்கள் ப்ரபூ.

(காசி-வ-ம்.) ஆ தலையாரிகாள் என்புத்திரனையா?

(தலையாரி-வ-ம்.) இதோ பாருங்கள் மஹாராஜ் தங்கள் புத்திரனைத்தான் இந்தராக்ஷதமுண்டை கொன்றனள்.

காசிராஜன் விருத்தம்.

கன்னலைக்கடிந்தநின்சொற் கண்மணிமகனேமேனுள்
என்னபாதகங்களோங்கு மிப்புவிதனிற்செய்தேனோ
நன்னயமஞ்சந்தன்னை நாடிநீ துயிலும்போது
பின்னமாந்திருட்டால்மாண்டாய் பெருந்துயரடையயானே.

## காசிராஜன்சொல் தரு.

அன்னமே நான்தொட்டசொர்ணமே என்றமெட்டு.

இராகம்-சாயா-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

பாலனேநீயிந்தக் கோலமதாய்மாளப்
பங்கயன்விதியோ காலகதியோ யெவர்சதியோ
பற்றுதே-மனம்பற்றுதே மனம்பற்றுதே
பற்றுதே பற்றுதே. (பால)

மாதவஞ்செய்துமே யாதரவாய்ப்பெற்ற
மாசிலைமைசேர்மகனே யருளகனே மதிமுகனே
வண்ணனே-மலர்க் கண்ணனே-மலர்க்
கண்ணனே கண்ணனே கண்ணனே. (பால)

மங்களமாகவே மாநாடாள்வாயென்று
மைந்தனேநானிருந்தேன் மிகச்சிறந்தேன் உனைத்துறந்தேன்
வாடுரேன்-மதி வாடுரேன்-மதி
வாடுரேன் வாடுரேன் வாடுரேன். (பால)

கண்ணேமணியே கரும்பேகனியே-கற்
கண்டேசெழுந்தேனே உனைத்தானே யினிநானே
காண்பனோ-எப்பக் காண்பனோ-எப்பக்
காண்பனோ காண்பனோ காண்பனோ (பால)

அங்கமுருகுதே ஆவிகருகுதே
யம்புயப்பூங்கையனே யருள்மெய்யனே யாகந்துய்யனே
ஆறுமோ-துயர் மாறுமோ-துயர்
மாறுமோ மாறுமோ மாறுமோ (பால)

---



(காசி-வ-ம்.) ஆ! கண்மணி இவ்விதவலங்கோலமாய் மாளவா இந்தச்சண்டாளனுன்னைத் தவஞ்செய்து பெற்றேன் இனிமேலுன்னை எந்தஜென்மத்திற் காணப்போகின்றேன்.

(காசி-வ-ம்.) வியாகூல மடைவதினாலென்ன பிரயோசனம் நடந்தவிர்த்தாந்தத்தை விசாரிப்போம்

காசிராஜன் விருத்தம்.

பொன்னினையனையமாதே பூங்காமதனிற்கொண்ட
வன்னமாஞ்சவத்தைக்கீழே வைத்ததிதிடமாயிப்போ
தென்முகமதைப்பார்த்துன்வா யெனுமலர்திறந்தேயாகந்
கன்னுதலடையாதுற்ற காரணங்களுருவாயே

## காசிராஜன் சொல்தரு.

நகரத்தில்யாதேனு மென்றவர்ணமெட்டு.

இராகம் - அமிர்கல்யாணி - தாளம் - ஆதி.

கண்ணிகள்.

மங்கையேநீயார் வாழ்வதுமெவ்வூர்
வழங்கிடுமுன்றன் பெயர்யாது
செங்கையிற்குழந்தை வந்தவிபரமேது
செப்புவாய்விபரமா யிப்போது (ம)

மலைகள்போலும் மலர்மகள்போலும்
வண்ணமாய்த்தோணுகிறு யல்லாது
கொலைசெய்யுமரக்கிபோற் குறிப்பிற்றெறியவில்லை
கூறுவாயுள்ளதைப் பதறாது (ம)

(வேறு மாதே, உன்னைப்பார்த்தால் கொலைசெய்பவளைப்போலத் தோன்றவில்லையே நடந்தவிர்த்தாந்தத்தைச் சொல்வாய்.

சந்திரவதி நான்னால்விருத்தம்.

செய்யமகவின்னுயிர் செகுத்தபடிகண்டாய்
கையினிலெடுத்ததோர் சவத்தனைதிர்கண்டாய்
மெய்யிடைபுலால்வெறி விரிந்தமுடைகண்டா
யையமில்லையானுமோ ராக்கியறிவாயே.

ஷை விருத்தம்.

என்றுநரவன்றசைக ளுண்டுடலெடுத்தேன்
வென்றிவடிவேலிறைவ நின்னகரின்மேவி
யின்றிரவினின்மகவிளந் தசைவிரும்பித்
தின்றிடநினைத்துயிர் செகுத்ததுளதாமால்

(சந்-வ-ம்.) வெற்றிபொருந்திய வேலாயுதத்தையுடைய வேந்தே? இந்தச் செவ்விதானபிள்ளையி னுயிரைக் கொன்றபடியையும் நீரே கண்டீர் கையிலெடுத்துக்கொண்டுவந்ததான ஒரு பிணத்தையும் உமக்கு முன்னே கண்டீர், என்னுடம்பில் புலால் நாற்றம் விரிந்திருக்கிறபடியையும் கண்டீர், எப்போதும் நான் மனிதருடைய வலியமாமிசங்களையே சாப்பிட்டு என் சரீரத்தை வளர்த்தேன் இன்றி ராத்திரி உம்முடைய நகரத்துக்குள்ளே வந்து உமது பிள்ளையின் இளமையான மாமிசத்தைத் தின்ன ஆசைகொண்டு உயிரைக்கொன்றதுண்மை சந்தேகிக்கத்தக்கதில்லை நானும் ராக்ஷஸிகளிலே ஒருத்தி யென்று தெரிந்துகொள்வீர்.

காசிராஜன் மந்திரிகளிடஞ்சொல் விருத்தம்.

மதிதயதனிற்சிறந்த மதிமந்திரிகா
ளிம்மாதினடக்க மற்றும் ஐ
விதிதவரா வொடுக்கமிவை பார்க்குங்கால்
வியநரமாமிசம் புசித்தே
எதிரிலா மற்றிரியும் ராக்ஷஸிபோ
லாகவெற்குத் தோன்றவில்லை
இதுவுமன்றி யிவள் வார்த்தைசுடச்சுடவே
யுரைக்குதிதற்கென் செய்வோமே.

(காசி-வ-ம்.) ஹே! மந்திரிகாள் இந்த மாதினுடைய அடக்கவொடுக்கமும், நன்மையான முகக் குறிப்புகளையும் பார்க்கும் விஷயத்தில் நரமாமிசபக்ஷணஞ் செய்து இவ்வுலகிலு மற்றெவ்வுலகிலும் நிகரில்லையெனத் திரியும் இராக்ஷசிபோலாகத் தோன்றவில்லை அன்றியுந் தலையாரிகள் பலரும் அநேக துன்பங்கள் செய்



தார்களென்று நமக்குத் தெரியும்படி இந்தப் பெண்ணரசியினுடைய வார்த்தை சுடச்சுடச் சொல்கின்றது பார்த்தீர்களா?

(மந்-வ-ம்.) மெய்தான் வேந்தே.

தலையாரிகள் விருத்தம்.

வையகம்புகழுங்காசிமா நகர்க்கரசேதங்கள்
செய்யதோர்மகவையிந்தத் திருடிநல்லுயிரைவீட்டிக்
கையில்வைத்திருந்தபோது கண்டிவண்கொடுவந்தோமால்
ஐயனேபொய்யைமெய்யா யறைவதுபாவமன்றோ.

(தலை-வ-ம்.) மஹாராஜ் இந்தக் கள்ளியானவள் தங்கள் புத்திரனைத் திருடிக்கொண்டுபோய்க் கொலைசெய்து கையில் வைத்திருந்தபடியே கண்டு பிடித்துக்கொண்டு வந்தோம் இது உள்ளபடியே யல்லாமல் இல்லாததைச் சொல்ல நியாயமுண்டோ நன்றாய் ஆலோசிக்க வேண்டும் அன்றியும் தங்கள் வார்த்தைக்குப் பதில் வார்த்தை யாங்கள் சொல்லத் தக்கவர்களல்ல ஆயினும் இந்தவரக்கியைத் தண்டிக்காது சும்மாவிட்டு விடுவீர்களானல் கடல்சூழ்ந்த இவ்வுலகத்தின் கண்ணுள்ள உயிர்களெல்லாமழிந்துபோகும்.

(காசி-வ-ம்.) ஏ தலையாரிகாள் பற்பல வார்த்தைகளைப் பேசுவதினாலென்ன பிரயோஜனம் அமருங்கள்.

(பொது-வ-ம்.) காசிராஜன் சந்திரவதியைப் பிடித்து வந்த தலையாரிகளை அமரும்படிசெய்து ஆங்குள்ள காவலர்களிடஞ்சொல்லும் விதங் காண்க.

காசிராஜன் விருத்தம்.

நகரின்காவலர்காணீங்கள் நானுரைன்றுநவிலக்கேட்பீர்
மிகைபடக்கொலைநடந்த வீதியிற்சென்றேயாங்கு
வகையதாய்ப்பதிந்திருக்கும் மற்றடிகளிலிம்மாதின்
தகையுயாடியுண்டுன்னிற் சாற்றுவீர்தெரிந்துவந்தே.

(காசி-வ-ம்) ஏ காவலர்காள் நீங்கள் விரைவிற் சென்றுஎனது புத்திரனைக் கொலைசெய்த வீதியிலிம்மாதினுடைய தடமட்டும் பதிந்திருக்கிறதா? அல்லது வேறே யாருடைய தடமும் பதிந்திருக்கிறதா வென்று பார்த்து வாருங்கள்.

(காவ-வ-ம்.) ஆக்ஞை மஹாராஜ்.

(காசி-வ-ம்.) அடே தலையாரிகாள் குழந்தையை எடுத்துக் கொண்டுபோய் அந்தப்புறத்தில் கொடுத்து விடுங்கள்.

(தலை-வ-ம்.) ஆக்ஞை பிரபூ.

(பொது-வ-ம்.) காசிராஜன் மனைவி மதனவல்லி நித்திரை தெளிந்தெழுந்த சமயம் தலையாரிகள் இறந்த குழந்தையைக்கொடுக்கும் விதங்காண்குக.

(தலையாரிகள் வசனம்.) மாதுஸ்ரீ அனேக வந்தனம் தங்கள்குழந்தை நித்திரை தெளிந்தெழுந்து விட்டதா?

(மதனவல்லி வசனம்.) இன்னுமில்லை இதோ அழைக்கிறேன் கண்மணி பாலகா எழுந்திருப்பாய் ஐயோ எங்கே என் குழந்தையைக்காணோம் அடே தலையாரிகாள் யாதுவிசேடம்.

(தலையாரிகள் வசனம்.) அம்மணி என்ன சொல்லப்போகின்றோம் தங்கள் குழந்தையை இராத்திரி ஓர் கள்ளியானவள் திருடிக் கொண்டுபோய்க் கழுத்துமுறித்துக் கொன்றுவிட்டனள் கண்டு பிடித்துக்கொண்டு வந்தோமிதோ பாருங்கள்.

(மதனவல்லி வசனம்.) ஆ தலையாரிகாளெனது குழந்தையையா.

(தலையாரிகள் வசனம்.) ஆம் அம்மணி இதோ பாருங்கள்.

## மதனவல்லி குழந்தையைவாங்கிக் கொண்டு புலம்புதல் தரு.

விருத்தம்.

கண்ணேமணியேகற்பகமே காவிலுறையுமிளங்குயிலே
விண்ணேமணியேமரகதத்தின் விளக்கேயெந்தனுருயிரே
மண்ணேயாள்வாயென்றிருந்தேன் மடிந்தாய்திருடிகையாலே
எண்ணுதெண்ணியுனையெடுத்திங் கேங்கித்துடிக்கின்றேன்பாவி.



## மதனவல்லி சொல் தரு.

தங்கமேயெந்தக்காலம் வந்தனையென்ற வர்ணமெட்டு

இராகம்-காபி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஐயோநானென்னசெய்குவெனெந்தனுருயிர் மகனே
வையமீதுனையெப்போதுகாண்பேன்வாகாரரசு முகனே (ஐ)

கள்ளிதிருடிக்கொலைசெய்துமாய்க்கக்கால கதியோ
வள்ளல்மாதவப்புதல்வாவண்டுறைமலரவன் விதியோ (ஐ)

மாநகரரசாள்வாயென்றுநான்மகிழ்ந்திருந் தேனே
தேனேகனியேதெவிட்டாவமுதேசிந்தைகொந் தேனே (ஐ)

பஞ்சணைதனிலஞ்சுகம்போலப்படுத்திருந் தாயே
துஞ்சிடவிளவந்தவிபரந்தோன்றச்சொல் வாயே (ஐ)

கண்ணேகண்ணினல்லொளியேவேறிட்டுக்களிப்பாய்ப்பாரடா
வண்ணமானவுன்வாயைத்திறந்தோர்வார்த்தை கூறடா (ஐ)

கந்தவேள்நிகர்சுந்தரமுள்ளமைந்தனையிக் கால்
எந்தவிதமாயுந்தனைமறந்திருப்பேன்புவியின் மேல் (ஐ)

## பொது விருத்தம்.

அங்கவர்கள்வந்திடுமுனத் தெருவகத்துக்
கங்கருகுகன்னல்வினை கன்னபுரிமன்னன்
மங்கையடியேயெழுதி மற்றையடியெல்லா
மங்கைகொடுநீவி முனிகௌசிகனழித்தான்.

(பொது வசனம்.) தடம்பார்க்கச் செல்வதற்குமுன் விஸ்வாமித்திரர் அவ்வீதிக்குச் சென்று அங்குள்ள தடங்கள் யாவையும் தமது கைகளினலழித்து சந்திரவதி யடியைமட்டும் எழுதி வைத்து மறைந்தனர்.

## காவலர்கள் தடம்பார்த்துவந்து அரசனிடம்சொல்

விருத்தம்.

நீதியாயரசுசெய்யும் நிருபனின்வருதிபோலக்
கோதிலாதாங்குசென்று குறிப்பதாய்ப்பார்க்குங்காலவ்

வீதியெல்லாமிக்கள்ளி மெல்லடிதானேயன்றி
யாதொருவடியுங்காணேம் மதிந்தவர்திட்டோமிங்கே.

(காவலர்கள் வசனம்.) மஹாராஜ் தங்களுத்திரவின் பிரகாரம் யாங்கள் சென்று தடம்பரிசோதித்ததில் இந்தத்திருடியின் அடிகளிருக்கிறதே தவிர வேற்றடிகளில்லை இது உண்மை இவள் ராக்ஷஸி என்பதற்கு யாதொரு ஆக்ஷேபனையில்லை.

(காசி-வ-ம்.) ஆ! காசிநாதா இப்பிரபஞ்சத்தில் ஜீவவதைசெய்தவர்களுடைய முகக்குறிப்பானது நன்றாகத்தோன்றும் அவ்வித்தோற்றங்கள் இம்மாதினிடம் கிஞ்சிற்றேனுமில்லை காவலர்களோ இந்த மாதினுடைய அடியைத்தவிர வேற்றடிகளில்லையெனச் சொல்லுகின்றார்கள் இதற்கென் செய்வேன் இன்னும் விசாரிக்கின்றேன்.

காசிராஜன் விருத்தம்.

மங்கையேயுன்னைப்பார்த்தால் மகன்றனைக்கொலைபுரித்த
நங்கைபோற்காணவில்லை நடந்தகாரணங்களெல்லாம்
சங்கடமடைந்திடாது சவிஸ்தாரமாகவேதான்
பொங்கமாயெந்தன்முன்னே புகலுவாய்புகலுவாயே.

(காசி-வ-ம்.) ஹே மாதே! உன்னைப்பார்த்தால் எனது புத்திரனைக்கொன்றவளென்று நினைப்பதற்கு மனந்துணியவில்லை உள்ளதைச் சொல்வாய்.

சந்திரமதி விருத்தம்.

வள்ளலேயுந்தனுகம் வருந்தத்தோடென்னைநோக்கி
யுள்ளதையுரைசெய்யென்றே யுரைக்கவுமானீரோங்குந்
தள்ளரும்புகழ்சேரிந்தத் தாணியிலெனையல்லாது
கள்ளியுமில்லையிதைக் கருத்தினிலுணருவீரே.

(சந்-வ-ம்.) ப்ரபூ யானெவ்வளவோ தமது சித்தத்திற்படும்படியாகக் கூறியும் மற்றும் உள்ளதைச்சொல்லென்று விளம்புகிறீர் என்னையல்லாது கள்ளியாருமில்லை இவ்வுண்மை நன்றாயுணர்ந்து கொள்வீர்.



384

பொது விருத்தம்.

முன்னைவிதியாலும்வினை முற்றுமதனாலு
மென்னையிவடன்னைவிட லென்பதுநினைந்தே
கன்னல்செறிகாசிபதி கன்னபுரிமன்னன்
மின்னைவதைசெய்வது விரும்பியொருமித்தான்.

(காசி-வ-ம்.) ஏ! தலையாரிகாள் "மடக்கொடிநெஞ்சமும் வானினீளமுங் கடற்குழியாழமும் யாவர்கண்டவர்" ஆகையாற் சீக்கிரத்திற் சேரிக்குச்சென்று வீரபாகுவைக்கூட்டி வாருங்கள் இம்மாதுக்கு மரணதண்டனை விதிக்கவேண்டும்.

(தலை-வ-ம்.) ஆக்ஞை ப்ரபூ.

தலையாரிகள் வீரபாகுவிடம் சொல்வசனம்

அடா வீரபாகுவே உன்னைமகாராஜா அவர்கள் கூட்டிவரும்படி ஆக்ஞாபித்தார்கள் சீக்கிரம்வருவாய்.

(வீர-வ-ம்.) இதோவருகிறேன்.

வீரபாகு அரசனைவணங்கும் விருத்தம்.

கொன்றையுமதியுஞ்சூடுங் குன்றவில்லியன்றன்பிரார்
மன்றலம்மலர்ப்பதத்தை வணங்கிடுமரசேபோற்றி
நின்றிருள்சேர்குமுன்னேஞ் சுடலைகாவலவனென்னை
இன்றுநீரழைத்த சங்கையியம்பிடப்பிரார்த்திக்கின்றேன்.

(வீர-வ-ம்.) மகாராஜ் தோட்டி வீரபாகு தெண்டஞ்செய்கிறேன் என்னைக் கூப்பிட்டக்காரணம் உத்தரவாகவேணும்.

(காசி-வ-ம்.) அடா வீரபாகு இந்தஸ்திரி எனதுகுழந்தையைக் கொலைசெய்தவளானதால் இவளை மயானத்திற்குக்கொண்டு போய் சிரச்சேதஞ் செய்துவிடுவாய்.

(வீர-வ-ம்.) உத்தரவுப்படி வெட்டிவிடுகிறேன் மகாராஜ்

வீர-வ-ம்.) ஓ அம்மா உன்னைப்பார்த்தால் மகாலெக்ஷ்மியைப்போலே தோற்றுகிறது உனக்கு இந்தவிதிவந்ததற்குக்காரணம் என்னவோதெரியவில்லை முறைப்படி இதோ கட்டினகட்டைகன்றுயிருக்கிப்பிடித்துக் கொண்டேன் கவலையடையாது முன்னே செல்வாய்.

சந்திரவதி விருத்தம்.

பிள்ளையம்புலிசேர்வேணிப் பிஞ்ஞகாகாசிராஜன்
பிள்ளையைக்கொன்றேனென் றுபிடித்துக்காவலர்கள்போந்து
வள்ளல்பால்நிறுத்தவன்றான் மரணதண்டனைவிதித்தான்
தள்ளியேகட்டிக்கொண்டு சண்டாளன்போரான்பாராய்.

## சந்திரவதிசொல் தரு.

நானென் றுநினைக்கத் தெய்வமென்றமெட்டு.

இராகம்-புன்னாகவராளி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

ஆருமற்றபாவி யானேன்
பாரினிலுனைநம்பி னேன்
காரணமீதென்று தேர்ந்தேனேன்
தேருதல்சொல்வாரைக் காணேன் (ஆ
வள்ளல்தனைப்பிரிந் தேன்
உள்ளமிகவேநொந் தேன்
பிள்ளையைப்பறிகொடுத் தேன்
கள்ளியென்றுபேரெடுத் தேன் (ஆ)
பாதகங்கள்புரிந் தேனோ
வேதியர்தமைவை தேனோ
காதகியெனவே கட்டி
யீதோகொண்டுபோரான் தோட்டி. (ஆ)
வாரிசமலர்ப்பூம் பாதா
நாரிபாகாகாசி நாதா
வாரணமுரித்த தேவா
பூரணமாயெனைக் காவா (ஆ)

(சந்-வ-ம்.) ஆ! காசிநாதா, கருணாகரா எனதுபத்தாவின் உத்தரவுபோல வத்ஸன் தேவதாசனைத் தகனிப்பதற்குக் காற்பணமும், முழத்துண்டும் காலகண்டையாரிடத்தில் வாங்கும்பொருட்டு வந்தயென்னை இவ்வித அலங்கோலத்துக் காளாக்கலாமா? இஃது னக்குச் சம்மதியா?



(வீர-வ-ம்) இதோ சேரிக்கு வந்துவிட்டோம் சற்றுநேரமிங்கு நில்லம்மா.

(சந்-வ-ம்.) அப்படியே நிற்குறேனப்பா.

(வீர-வ-ம்.) அடா மயானங்காக்கும் அடிமையே சீக்கிரத்திலிங்குவாடா.

(அரி-வ-ம்) இதோ வந்தேனப்பா வீரபாகுவே என்னையழைத்தகாரணமியாது.

(வீர-வ-ம்) அடா அடிமையே இந்த மாதானவள் இவ்வூர் மஹாராஜாவின் குழந்தையைக் கொன்றுபோட்டாளாம் ஆகையினால் என்னையழைத்து இவளுக்கு மரணதண்டனை விதித்து மயானத்தில் கொண்டுபோய் வெட்டும்படி உத்தரவு செய்திருக்கிறார் ஆகையினால் நீ இந்தக்கயிற்றை விடாமற்பிடித்துக் கொண்டுபோய் மயானத்தில்நிறுத்தி இந்தவாளினாற் கிஞ்சிற்றேனும் பெண்பிள்ளையென்றெண்ணாமல் ஒரேவெட்டில் சிரசானது அற்றுவிழும்படி வெட்டிப்போடுவாய்.

(அரி-வ-ம்.) அவ்விதமே செய்கின்றேனப்பா வீரவாகுவே.

அரிச்சந்திரன் சந்திரவதியைத்தன் மனையாளெனத்
தேரிந்துசொல் விருத்தம்.

என்னடிமங்கையாளே யெந்தன்பால்மகனைவைத்தே
தொன்மறையோரிடத்திற்றுண்டுடன் காசும்வாங்க
நன்னயவன்றோரில்லம் நாடியேசென்றநீயும்
என்னுடைகைவாளாலே யிறக்கநேர்ந்ததையேம்பாய்

## அரிச்சந்திரன்சொல் தரு

ஐயோவிதென்னகாலமென்றமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

கண்ணிகள்.

கற்பிலுயர்ந்தவெந்தன் கண்மணியே-உன்னை...
கட்டிவரவுங்காலமோ பெண்மணியே
மகனையென்னிடம்வைத்தேமறையவர் பால்-சென்ற
மங்கையேயித்துயர்வந்ததென்னவிக் கால்

இந்தவிதியுனக்கு வரலாமோ-பெண்ணே
இன்னும்வினைப்பயனைப் படியாமோ

அங்கமுருகுதடி மாமயிலே-ஐயோ
ஆவிகருகுதடி யிளங்குயிலே

என்னைமணந்தபல னிதுதானோ-கண்ணே
என்னபாதகமுன்னஞ் செய்தேனோ

(அரி-வ-ம்.) கண்ணாட்டி நமது புத்திரசிகாமணியைத்தகனஞ் செய்வதற்காக நின்னையடிமை கொண்டவேதியரிடத்தில் காற்பணமும் முழத்துண்டும் வாங்கிவரச் சென்றவுனக்கு இவ்விதக்கொடுந் தண்டனையேற்பட்ட காரணமென்ன விபரமாயெடுத்துரைப்பாய்.

சந்திரவதி அகவல்.

கஞ்சவாவியுங் கற்பகச்சோலையும்
விஞ்சியேதேவ ருலகெனவிளங்கும்
கன்னமாபுரிக்குக் களிப்புடன்வந்து
மன்னவரவையிலென் மங்கலங்கண்டு
விற்கையதாக விவாகமுடித்துச்
சுந்தரத்தோளைச் சுபமுடன்பற்றிய
மன்னவாவெந்தன் மணவாளாசற்றும்
இன்னலடையா தியம்பிடக்கேளும்
சிந்துரமுரித்த தேசிகனருளால்
வந்தவதரித்த மைந்தனைத்தம்பிடம்
வைத்துச்சுவந்தரம் வாங்கவந்தணர்பால்
சித்தமாயானுஞ் செல்லும்போது
வித்தகப்பிரமன் விதியோவிஸ்வா
மித்திரன்சூதோ வேறெதோவறியேன்
வீதியிலேயொரு மெல்லியகுழந்தை
பாதத்திற்படவே பதறிநம்மகனென்
றெடுத்துப்புலம்பும் போதிந்நகர்காவல
ரடுத்தெந்தனைப் பிடித்தடித்துப்பாதகி
யரக்கியெங்களரசன் புதல்வனைத்
திருடிக்கொன்றனை ஜெகசாலியென்று
கட்டியேகொண்டு போய்க்காசிக்காவல
மட்டிலாச்சமுகம் வன்மையாயிருத்த



அன்னோன்விசாரணை யடைவுடன்செய்து
பின்னுங்காலடி பிறங்கச்சோதித்து
வெட்டியான்றன்னை விரைவுடனழைத்தென்னை
வெட்டிடவாக்கினை விதித்தனனறிவீர்

(சந்-வ-ம்.) பிராணேசா தங்களிடங்குழந்தையை வைத்துவிட்டு உத்தரவின் பிரகாரம் அடிமைகொண்ட காலகண்டையரிடத்தில் காற்பணமும் முழத்துண்டும் வாங்கச் செல்லுந்தருணம் வீதியில் ஓர்குழந்தை எனது பாதத்திற்படவே அதனை நமதுகுழந்தையென வெண்ணிக் கையிலெடுத்துப் புலம்பிக் கொண்டிருக்கையில் சில தலையாரிகள்வந்து என்னைப்பிடித்துச் சரீரமெல்லாம் புண்ணாகநோகும்படி யடித்துக்கட்டிக்கொண்டுபோய்க்காசிராஜன் முன்விடுத்துப் ப்ரபூ. இந்தச்சண்டாளி தங்கள் புத்திரனைத்திருடிக் கொண்டுபோய்க் கொலைசெய்யுஞ் சமயத்திற்கண்டு பிடித்துக்கொண்டுவந்தோமென்று கூறினார்கள் உடனே அதைகேட்ட அரசன் விசாரணைசெய்து சந்தேகமடைந்து பின்னர் என்காலடியைப் பரிசோதித்து ஊழ்வினையால் வெட்டும்படி ஆக்ஞாபித்தான் இவைதான் நடந்தவிர்த்தாந்தம் ப்ரபூ கவலையடையாது வெட்டும்படி பிரார்த்திக்கின்றேன்.

பொதுவசனம்.

இவ்விதமாகச் சந்திரவதியை அரிச்சந்திரன் நடந்தவிர்த்தாந்தங்களைக் கேட்டுக்கொண்டிருக்குஞ்சமயம் சத்தியகீர்த்தி ஆங்குவந்து நடந்தவற்றை யெல்லாங்கேட்டு வியாகூலமடைந்து மூவருமாக மயானஞ் சென்றபின்னர் காசிராஜனுடைய குழந்தையைத் தகனஞ்செய்வதற்குக் காசிராஜன்முதலியோரும் ஆங்கெய்த வெத்தனித்தார்கள் அச்சமயம் தேவேந்திரலோகத்தில் வசிட்டமகாரிஷி தேவேந்திரனைப்பார்த்து அரசே, சமுகத்தில் விஸ்வாமித்திரனும் யானும் அரிச்சந்திரன்விஷயமாய் எற்படுத்திக்கொண்ட சபதமின்று முடிவாகிவிடும் ஆகையால் என்னுடன் தாமும் தும்புரு நாரதரும் மற்றயாவரும் அட்டதிக்குப் பாலர்களும் வாருங்களென்றழைக்க யாவரும் ஒருங்காகக்கூடி அந்தரத்திலொருவருக்குந் தெரியாது வந்திருந்தார்கள் இவ்விதமிருக்க அரிச்சந்திரன் சந்திரவதியை வெட்டுகிறவிதங்காண்குக.





# அரிச்சந்திரன் சந்திரவதியை வெட்டுகிறபாகம்.

அரிச்சந்திரன் விருத்தம்.

திங்கள்நேர்முகமுமிக்க செந்துவர்வாயுஞ்சீரார்
கங்கணக்கரமுந்தேனைக்கடிந்திடலானசொல்லும்
பங்கயக்குயமும்வேலைப் பழித்தநேத்திரமும்வாய்ந்த
மங்கையேயுனைநான்வெட்ட மனமுவந்திடுமோதேராய்

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஐயையோ மகனைத்தேடி என்ற மெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ரூபகம்.

பல்லவி.

மங்கையேயுனைநான்வெட்ட    மனமெப்படித்துணிவேன். (ம)

அநுபல்லவி.

திங்கள்நிகர்வதனியே    திகழ்கலைவிற்பனியே
கங்கணமணிகையாளே    கமலம்வாழுஞ்செய்யாளே. (ம)

சரணங்கள்.

அம்புநிகர்விழியாளே    அமுதநேர்மொழியாளே
வம்பணியுங்குயத்தாளே    வஞ்சமிலாநயத்தாளே. (ம)

சந்திரதயமன்செய்த    [illegible]த்தினில்வந்தபெண்ணே
அந்தமுனிவன்சதியோ    வழி[illegible]தன்கண்ணே. (ம)

மன்னவர்கள்மன்னனெனை    மகிழ்வுடனேமணந்து
என்னபலன்பெற்றாயையோ    விக்கதியடைந்தாய்நொந்து. (ம)

நான்முகன்றன்விதியோ    நானிலந்தனிலஞ்சாது
பானுகுலப்பாலகனைப்    பறிகொடுத்துமிப்போது. (ம)

(அரி-வ-ம்.) பிராணசகி யான் எவ்விதமனந்துணிந்து உன்னைவெட்டுவேன் இதற்காகவா கன்னமாபுரியிலிருந்து இந்தச்சண்டாளன் உன்னைமணம் புரிந்துவந்தேன் ஐயோ என்சிந்தையெல்லாம் வருந்துகின்றதே என்செய்வேன்.

சந்திரவதி விருத்தம்.

கன்னல்வேளனையரூபா காசினிதனிற்பிரதாபா
மன்னவர்மன்னுவெந்தன் மணவாளாப்ராணநாதா
இன்னல்தாமடைந்திடாம லிக்ஷணம்வாளினாலே
கன்னியாமென்னைவெட்டிச் சத்தியந்தனைக்காப்பீரே.

## அரிச்சந்திரன்சொல் தரு

ஐயேசுவுன் னருளின்சோதனையோ வென்றமெட்டு.

இராகம்-இந்துஸ்தானி-ப்யாக்-தாளம்-ஏகம்.

பல்லவி.

மன்னுநீர்மனம் வாடலாமா-ஆரசு
மன்னுநீர்மனம் வாடலாமா-கொண்ட
வாய்மைக் கழகாகுமா. (ம)

அநுபல்லவி.

நன்னயநீதா நான்மலர்ப்பாதா
ஒன்னலரைவெற்றி கொள்நாதா-ஒங்கும்
ஒன்னலரைவெற்றி கொள்நாதா-சிரா
ருள்ளமகிழ்ந் திடாது. (ம)

சரணங்கள்.

சடமோவநித்தியம் சாவதுநிச்சயம்
புடவியில் முத்திதருஞ்சத்யம்-ஞான்றும
புடவியில் முத்திதருஞ்சத்யம்-என்று
புகல்மறை யையுணர்ந்தும். (ம)

இக்களத்திற்சீமானே கட்கத்தினாற்பூமானே
இக்கணத்தில் வெட்டுவீர்தானே-கோனே
இக்கணத்தில் வெட்டுவீர்தானே-தலை
இரண்டுதுண் டாய்விழவே. (ம)

விஸ்வாமித்திரர் வசனம்.

அடே அரிச்சந்திரா பொறுபொறு வெட்டவேண்டாம் எனக்கு முன்னம்நீ தந்தராச்சியத்தை இப்போது தரவில்லையென்று ஒருபொய் சொல்லிவிட்டு உனதுநாட்டையும் இறந்தவுயிர்களையும் பெற்றுக்கொள்வாய் என்னதெரிவிக்கின்றாய்.



## அரிச்சந்திரன்சொல் தரு.

ஆரடி யுன்பேருர்கூறடிஎன்ற வர்ணமெட்டு.

இராகம்-காம்போதி-தாளம்-ஆதி.

பல்லவி.

என்னமொழிசொன்னீர் துணிவாய்-ஆ
இத்தருணமதில்விஸ்வா மித்திரமாமுனிவரே. (எ)

அனுபல்லவி.

சொன்னசொற்றவறாமலே பொன்னகரயோத்திதனை
நன்னயமாய்த்தமக்கீய்ந்த மன்னவனென்றும்பாராமல். (எ)

சரணங்கள்.

மைந்தன் மனைவிதனையே யிந்தநகரினில்வந்து
மறையோரிடத்தில்விற்றுக் குறைவிலாமல்
சுந்தரமாய்க்கூடவந்த தூதரிடந்தவணைக்குள்
சிந்தையாய்த்தமதுக்கடன் தீர்த்தவனென்றுமெண்ணாமல். (எ)

ஆதரவாய்வந்தவேதிய ராதரவாகத்தரகு
சுதுக்கினிலீய்வாயென வுறுக்கிடவே
ஏதும்பதிற்சொல்லாமலே பாதகனுக்கடிமையாய்
ஓதியபடியேசெம்பொன் நீதிலாமலீய்ந்தவென்முன். (எ)

புலையன்வருதிபோலே நிலையாகவிச்சுடலை
சலியாமலேகார்த்தின்று தலைவிதனை
கொலைசெய்தாக்கியெனக் கொற்றவன்வெட்டெனக்கூற
கூசாதுவெட்டப்போகையி லீசனைநிகர்த்தநீரும். (எ)

(அரி-வ-ம்.) முனிபுங்கவரே என்னவார்த்தை கூறினீர் கவனிக்கவேண்டும்.

## அரிச்சந்திரன் விஸ்வாமித்திரரிடம் பொய் மொழிதல் கூடாதவிஷயமென ஞாயங்கூறும்

முன்னூல் விருத்தம்.

புலையனும்விரும்பாத விப்புன்புலால்யாக்கை
நிலையெனுமருண்டுயிரினும் நெடிதுறச்சிறந்தே
தலைமைசேர்தருசத்தியம் பிறழ்வதுதரியேங்
கலையுணர்ந்தநீயெமக்கிது கழறுவதழகோ.

(அரி-வ-ம்.) தவசிரேஷ்டா பிரபஞ்சத்தின்கண் சண்டாளன் கூடவிரும்பாத இந்தப்புல்லிதான புலால்நாறுகின்ற தேகத்தை நிலையெனநினைத்து உயிரைப்பார்க்கிலும் அதிகமான சிறப்புவாய்ந் தமுதன்மைபொருந்திய சத்தியத்தைத்தவறி நடக்கமாட்டோம் அன்றியும் சகலசாஸ்திர முணர்ந்ததாம் இவ்விதவார்த்தைகளை எங்களிடஞ்சொல்வ தழகல்ல சென்றுவிடும்.

(விஸ்-வ-ம்.) நல்லதரசனே சென்றுவிடுகிறேன்.

விஸ்வாமித்திரர் பிருந்தவியாகூலமடைந்து சொல்வசனம்.

ஆ! ஆ! யானென்செய்வேன் என் எண்ணம் நிறைவேறுமற் போய்விட்டதே சாம, பேத, தான, தண்டம் என்ற நான்கு தொழிலுஞ்செய்தும் இந்த அரிச்சந்திரன் பொய்சொல்வதற் கிசைந்தா னில்லையே ஐயோ இந்திரன்சமுகத்தில் வசிட்டனுடன்போட்ட சபதந் தோற்றுவிட்டதே யான்இனிமேல் எவ்விதம் இந்திரன்சமுகஞ்செல்லுவேன் வசிட்டன் முகத்தில் எவ்விதம் விழிப்பேன் பட்டபாடெல்லாம்வீணாயதே இனிமேல் யோசித்தாவதென்னஇதோ இந்திரன்சமுகஞ் செல்லுகின்றேன்.

## சந்திரவதிசொல் தரு.

பட்டாபிஷேகம் படைத்திருந்தளென்ற மெட்டு.

இராகம்-கீர்வாணி-அடதாளம்.

கண்ணிகள்.

மன்னவா தாமத மின்னமேன்செய்குதீ
பின்னமாமுனிவன் தன்னுடைகொள்ளாது
கன்னியைப்போதிக்கு வெட்டுவீ
நன்னயந்தப்பாது திருக
காதலனே பேதியாது பூதலத்தி
கண்ணியமாகவே தான். (ம)

அந்தவயோத்தியைப் பந்தமதாயாண்ட
விந்தைப்புயாசலா வெந்தன் மணாளா
பெந்துக்களினீட்டம் புவியிற்
சந்தையிற்சேர்கூட்டம் என்று
பேசுமறை ஆசுருவிஸ் வாசமதாய்ப்
பட்புடனே தேர்ந்தும். (ம)



(அரி-வ-ம்.) கண்ணாளா யேன் இன்னுந் தாமசிக்கின்றீர்கள் சீக்கிரத்திலென்னைச் சிரச்சேதஞ் செய்து சத்தியத்தைக் காப்பாற் றுங்கள்.

## அரிச்சந்திரன்சொல் தரு.

ஆதாரமாருமில்லையே யென்றமெட்டு.

இராகம்-முகாரி-தாளம்-ஆதி.

பல்லவி.

மானேசெக் தேனேமயிலே
மாதாசேவுன்னைவெட்டி வாழ்வனேபூதலந்தனில். (மா)

அநுபல்லவி.

கானேர்குழலுடைய கண்ணேயபரஞ்சியே
வானுலகப்பெண்களில் வண்ணமிகுவஞ்சியே. (மா)

சரணங்கள்.

மாதவமுனிவரன் செய்சதியோ-அல்லால்
மலருறையும்பிரமன் றன்விதியோ
மாதிடப்பாகம்வாழ் மாதேவன்சோதனையோ
வாடுதையையோநெஞ்சம் மங்கையேமுன்வினையோ (மா)

மன்னனென்னைமணந்து கண்மணியே-என்ன
வாழ்வடைந்தாய்நலமாய்ப் பெண்மணியே
பொன்னகர்நேரயோத்தி புரந்திடவந்தபாலன்
புத்தரவாலிறந்தான் புன்மையேனிந்தக்காலம் (மா)

(அரி-வ-ம்.) ஆ! மாதே இதுவும்காலகதியோ.

## அரிச்சந்திரன் விருத்தம்.

சந்திரவதியேயெந்தன் றையலேபகரக்கேளுன்
சொந்தமாந்தெய்வந்தன்னைத் துதித்துமேகிழக்குநோக்கிச்
சிந்தையாகுலங்கொள்ளாது செவ்வையாய்நிற்பாய்பாவி
விந்தைசேர்வாளின்றலே வெட்டிதற்குகந்துதானே.

(அரி-வ-ம்.) பெண்ணேசந்திரவதி வழக்கம்போல வனதுவ ழிபடுதெய்வத்தை வணங்கிக்கிழக்குமுகமாகக் குனிந்து நிற்பாய் இந்தக்கொடியபாதகன் கட்கத்தால் வெட்ட எத்தனித்தேன்.

96

(சங்-வ-ம்.) கண்ணாளா கற்புடையமாதர்களுக்குக் கணவர்தானே தெய்வம் ஆகையால் தமது பாதமிரண்டையும் பணிந்தேன் இதோ கிழக்குமுகமாகக் குனிந்துநிற்கின்றேன் சந்தோஷமாய் வெட்டுவீராக.

## அரிச்சந்திரன் சொல் தரு.

விதியோமுனிசதியோ வென்றமெட்டு.

இராகம் - சஹானா - தாளம் - ரூபகம்.

கண்ணிகள்.

ஈசாவிசுவேசாவுமைநேசா பரமேசா
நேசிதனைவெட்டப்போரேன்காசிநகர் வாசா

திங்களுடன்கங்கையணிபொங்கமிகுந் தேவா
பங்கமுறுதிங்கிவளைப்பண்புடனே காவா

நாதாமலர்ப்பாதாவுயர்போதாகுழைக் காதா
வேதன்விதிதானோவிதுன்சோதனையோ நீதா

பரனேதிருவரனேமழுக்கரனேமாசங் கரனே
தரணிதனில்முனிவனுடசதியோபரா பரனே

(அரி-வ-ம்,) ஆ! காசிநாதா இதோ எனது மனைவியை வெட்டப்போகின்றேன் உனது திருக்கண்ணாற் பார்த்துக்களிகூறுவாய்.

## அரிச்சந்திரன் சந்திரவதியை

வெட்டும் விருத்தம்

அலைகடல்சூழும்புவியினுயிர்கட்கெல்லா
மாதிசிவன்முதலாயினவன் வாய்ச்சொல்லே
யிலகிடுமாமறையாயின் பலதர்மத்து
மேற்றமுடையது சத்யமாயினஃதை
விலகாதவிரதமதாய்க் கொண்டோனாயின்
மெல்லியெனையகலா வுத்தமியேயாயின்
உலைமதிலிவள்வீயா துறுகவன்றே
லுயிர்விடுகவெனவுயர் வாள்வீசினேனே.

மயானகாண்டம் முற்றிற்று.



உ

பரமபதி துணை.

# மீட்சிகாண்டம்.

## சிவபெருமான் வருகிறபாகம்.

சிவபெருமான் விருத்தம்.

மெய்யரிச்சந்த்ராவுந்தன் மெல்லியைவெட்டவேண்டாம்
மெய்யரிச்சந்த்ராநீயே மேதினியதனிற்புண்யன்
மெய்யரிச்சந்த்ராவோங்கும் விடையதிலூர்ந்தேயீசன்
மெய்யரிச்சந்த்ராநின்முன் விரைந்திதோவந்தேன்பாராய்.

அரிச்சந்திரன் விருத்தம்.

பிள்ளைவெண்டிங்கள்சூடும் பிஞ்ஞகாபோற்றிபோற்றி
உள்ளுமாய்ப்புறமாயெங்கு முளைவுவாய்போற்றிபோற்றி
கள்ளுலாங்கூந்தற்கன்னி காதலாபோற்றிபோற்றி
புள்ளின்மேலோன்மால்காணாப் புராந்தகாபோற்றிபோற்றி.

### அரிச்சந்திரன்சொல் தரு.

மாமதுரையம் பதியிலென்றவர்ணமெட்டு.

இராகம்-தேசிகதோடி-தாளம்-ரூபகம்.

கண்ணிகள்.

| | | |
|---|---|---|
| கைலைவாசகருணாகரா | | கங்கைச்சடையா |
| கங்கைச்சடையா | குளிர் | கங்கைச்சடையா |
| கஞ்சப்பூம்பாதா | எஞ்சாமெய்ப்போதா | நஞ்சணிநீதா |
| கண்டுமொழி | வண்டுவிழி | ஒண்டொடிமாதுள் |
| கலந்தணைந் | | திடும் (கை) |
| அரியயன்தேடியுங்காணா | | வரவாபரணா |
| அரவாபரணா | மிளிர் | அரவாபரணா |
| அருமறைமூலா | பெருமிதச்சீலா | மருள்காலகாலா |



| | | |
|---|---|---|
| மிகு | சோதிபிரக் | யாதியெனவே |
| பர் | | பரவும் (கை) |
| ளைமதிசென்னிசூடும | | பிஞ்ஞகாநீதா |
| நஞகாநீதா | சிரார் | பிஞ்ஞகாநீதா |
| மில்தாயா | நன்னயநாமா | வன்னமார்கோமா |
| லா | தாதரவாய்ப் | பூதலமதிற் |
| புட | | ளுள்வாய் (கை) |

(அரி-வ-ம்.) ஆ! கைலைவாசா, கருணாகரா, கமலப்பாதா, கங் கணிபா, காமதகனா, கருணைப்பிரவாகா, காலகாலா, திருநே ரே அநேக வந்தனம்.

(சிவபெருமான் வசனம்.) கல்யாணம் மெய்யரிச்சந்திரா.

சந்திரவதி விருத்தம்.

கரஞ்சடையாய்போற்றி திரிபுரதகனாபோற்றி
க்கருங்களத்தாய்போற்றி மலைமகள்பாகாபோற்றி
கெலாம்படைப்பாய்போற்றி திக்கெலாமளிப்பாய்போற்றி
கணாபோற்றியாதி முதல்வனேபோற்றிபோற்றி.

### சந்திரவதிசொல் தரு.

எப்போதானிரங்கு மென்றவர்ணமெட்டு.

இராகம்-சங்கராபரணம்-தாளம்-ஆதி.

பல்லவி.

| | |
|---|---|
| கைபாகனே | ஆலமுண்டயோகனே |

அநுபல்லவி.

| | |
|---|---|
| வோர்க்கனுகூலா | நான்மறைபுகழ்சீலா |
| னே-போதனே | நான்மலர்நேர்பாதனே (அ) |

சரணங்கள்.

| | |
|---|---|
| ராசதாசிவா | சச்சுதாநந்தாநீதா |
| நாதாராப்ரக்யாதா | கருணாகராவிநோதா |
| தனே அத்தனே | கனகமன்றில்நிர்த்தனே (அ) |

அத்தியுரித்துடுத்தும் அந்திவண்ணமாதேவா
சித்தர்முத்தர்கள்பணி சீரார்மகானுபாவா
திண்ணியாபுண்ணியா திருவருள்செய்கண்ணியா (அ)

(சங்-வ-ம்.) ஆ! திங்கள் நுதற்பெண் பங்காமாலையாய்ப் பொங்கரவணிந்த புராந்தகா அனேககோடி நமஸ்காரம்.

(பரமசிவன் வசனம்.) சுபமங்களம் சுபமங்களம்.

பொது வசனம்.

இவ்விதமிருக்குங்கால் மகாவிஷ்ணு, பிரமன், விநாயகர், முருகக்கடவுள், தேவேந்திரன், வசிஷ்டர், விஸ்வாமித்திரர், நாரதர், அஷ்டதிக்குப் பாலகர்கள் முதலியவர்களும் ஆங்கு பிரசன்ன மானார்கள் அன்னவர்களை அரிச்சந்திரன் முதலிய பேர்கள் வணங்கிய பின்னர் நிகழும்விதங்காண்குக.

## சிவபெருமான் விஸ்வாமித்திரரை

விநவும் விருத்தம்.

மாதவத்துயர் கோசிகாவரிகும்
பூதலந்தனில் யாவரும்போற்றிடும்
ஆதவன்குலத்தண்ணலை நீநண்ணிப்
பேதகஞ்செய்த காரணம்பேசுவாய்.

(சிவன்-வ-ம்.) கௌசிகரே இந்த அரிச்சந்திரனுக்கு இவ்வளவு துன்பம் வரும்படியாகச் செய்த காரணம் யாதுதெரியச்சொல்லும்.

(விஸ்-வ-ம்.) கைலாசபதே! யாதொரு அமரேசன் சபையில் எனக்கும் வசிட்ட மஹாரிஷிக்கும் நடந்த தர்க்கமும் பின்புஅரிச்சந்திரனைச் சத்யபங்கஞ்செய்ய வுத்தேசங்கொண்டவனாயன்னவனுக்கியற்றிய பற்பல துன்பங்களும் சர்வக்ஞாக விளங்குந் தேவரீருள்ளத்துக்கு நிஷ்களங்கமாகத் தோன்றுமே ஸ்வாமி.

(சிவ-வ-ம்.) ஓ கௌசிகரே தோற்றவாரார் ஜெயித்தவாரார் சொல்லும்.



(விஸ்-வ-ம்.) ஜெகரெக்ஷகா யானிந்த அரிச்சந்திரனைச் சத்தியவானென்றறியாமல் வசிட்டனுக்கு மெனக்குமேற்பட்ட பகையினால் அநேக கொடுஞ் செய்கைகள் நடாத்தியும் இஞ்சிற்றேனுஞ் சத்தியந் தவறுதல் செய்ய வென்னால் முடியவில்லை யாகையால் வென்றவர் வசிட்டரே தோற்றவன் யானே இதோ அமரேசன் சபையிற் கூறிய சபதப்படி எனது தவத்திற் பாதி கொடுப்பதோடு அயோத்திராஜ்யத்தையும் இந்த அரிச்சந்திரனுக்குக் கொடுத்துவிடுகிறேன் ப்ரபு.

## அரிச்சந்திரன் அகவல்.

சீரார்சடையிற்றிங்களுங் கங்கையும்
யோர்கொன்றையு மின்பமாய்ச்சூடி
மங்கையோர்பாகம் வைத்துக்கைலைவாழ்
சங்கராசாம்ப சதாசிவாதற்பரா
சூலப்படையா சுந்தரவிடையா
காலகாலா கதியருள்சீலா
பங்கயப்பாதா பகரொணாநீதா
துங்கமார்நாமா துகளிலாநேமா
தருவளரயோத்தி தன்னையிம்முனிக்கே
மருவிலாதளித்து மற்றும்ருணத்துக்
காசாங்கியிவ்வரு நகரடைந்து
காளகண்டர்க்குக் காதலியாளையும்
தனயன்றேவதாசன் றன்னையும்
மனநான்பொருந்தி வழக்குறையாது
விற்றேன்தரகு வேண்டினர்தூதர்
சற்றுந்தடை புகலாமல்தக்ஷணம்
வெட்டியானுக்கு விலைபுகுந்திய்க்கு
மட்டிலாவிந்த மயானம்வந்து
காத்திருந்தேன் வாய்க்கரிசிபுசித்தேன்
சீர்த்திசேர்பாலனுஞ் செகத்தினிலிறந்தான்
ஆகையாலினிமேலரசுசெய்திருந்தால்
நாகபூஷணாநலம தாகுமோ
ஏமங்கார்ப்பதெனது கடன்முனி
நேமமாயுலகுகாத்தல் நீதியே,

(அரி-வ-ம்.) ஜெகரக்ஷகா மகாவுன்னதம்பொருந்தியஅயோத்தியாபுரியை முனிவருக்குத் தாரைவார்த்து மீண்டுங் கடனுக்குட்பட்டு அக்கடன் தீர்க்கும் விஷயமாயிந்தக் காசியம்பதிக்கு வந்து பத்தினியையும் புத்திரனையும் வேதியருக்கு விற்றேன் யானும் வெட்டியானுக் கடிமையாகி எவருமிகழத் தக்கதான விந்தச் சடலை காத்திருந்து வாய்க்கரிசியும் புசித்தேன் அன்றியுமெனது செல்வப் புதல்வனுமிறந்து விட்டான் இனிமேல் யான ரசு புரிவது மிகவும் இழிவு ஆகையாலிந்த மயானங் காத்திருப்பதே எனக்குச் சரி இந்த முனீஸ்பரர் இராஜரீகஞ் செய்வதே நீதியாகுந் தேவா.

அக்கினிதேவன் வசனம்.

ஓ அரசனே நீரென்ன வார்த்தை சொன்னீர் உமது பத்தினியையும்புத்திரனையும் அக்கினிபகவானாகிய எனக்குவிற்றதுஉமக்கு இகழ்வாகுமோ இந்தச் சந்திரவதி விலையாகிறது முன்னமே தெரிந்து விலைக்கு வாங்குவதற்குச் சம்மதித்து வேதப்பிராமணர் குலத்திலே வந்து பிறந்து பின்னலையொத்த சந்திரவதியையும் பாலகனையும் நீவிற்க நான் விலைக்கு வாங்கின கிரய ஓலையை இதோ பார்வதி மணாளன் சந்நிதி முன்னே வைத்தேன் பார்த்துக்கொள்.

(அரி-வ-ம்.) ஆ! மீதென்ன ஆச்சரியம் பார்த்தேன் ப்ரபூ

எமதருமன் விருத்தம்.

அலைகடற்புவியிற் புலையருக்கடிமை
யானவனென்பது முதலறிந்து
புலையனுய்ப்பிறந்து கொண்டவன்யானே
பொருத்தநீ தந்தவாவணமீ
திலகுலாந்தொடையா யிருந்துநீகாத்த
வீமமுமியாக சாலைகள்காண்
தொலைவிலாவடிவென் றுணைறிநீயிகழ்ந்த
சடலையைப்பார்த்து நீயறிவாய்.

(எமன்-வ-ம்.) ஓ அரசனே யான் எமதருமன் அலைகளைக்கொண்ட கடலாற் சூழப்பட்ட இவ்வுலகத்தின் கண் நீசருக்கு



மையாவா யென்பதை யான்முன்னமே தெரிந்து நீசனுகப்பிற
ன்னைவிலைக்கு வாங்கினேன் நீ அடிமையாக ஒப்புக்கொண்டு
கொடுத்த விலைஓலை இதோ இருக்கிறது பார் நீவீற்றிருந்து
புரிந்தது சுடுகாடல்ல யாகசாலைகள் ஒருவாறு சந்தேகங்
ாயானல் இதோயாவற்றையும் பார்த்தறிந்து கொள்வாய்.

ரி-வ-ம்.) பார்த்தேன் ப்ரபூ.

சுப்பிரமணியர் வசனம்.

டா தேவதாசா உன் தாய்தந்தையர்கள் வந்துநின்றார்
ிரம் எழுந்துவாடா.

தேவதாசன் உயிர்பெற்றெழுந்து சொல்வசனம்.

ஈதென்ன ஆச்சரியம் நான்சேர்ந்த சமிதைகளெங்கே?
வந்த நேசர்களெங்கே? நானறுத்ததருப்பை எங்கே?
காணேமே, ஆ! காசிநாதா! இந்தச்சுடுகாட்டுக்கு யானெ
ந்தேன் அதோ வேற்றுருவமடைந்து நிற்கிற விருவரும்
தா பிதாபோலத்தெரிகிறதே சமீபத்திற்போய்ப் பார்க்

வ-வ-ம்.) தாயே வந்தனஞ்செய்கின்றேன்.

வ-ம்.) வாடா என்னருமைக் குழந்தாய் அதோ நிற்கிற
வைப் பணிகுவாய்.

-வ-ம்.) பிதா வந்தனஞ்செய்கின்றேன்.

வ-ம்.) கண்மணி தேவதாசா சமீபத்தில் வா.

அ-வ-ம்.) முருகக்கடவுளால் காசிராஜன் புத்திரனும்
றெழுந்தனன் அன்னவனும் தேவதாசனும் சிவபெரு
ங்கியபின்னர் நிகழும் விதங்காண்குக.

வபெருமான் அரிச்சந்திரனுக்குச்சொல் விருத்தம்.

னேபகரக்கேளாய் மாமுனிதவத்திற்பாதி
யில்லாமற்பெற்று நீயேர்மகுடஞ்சூட்டி
பவரசுசெய்தென்னாறு மலரடிக்காளாவாய்
னகரயோத்திக்கின்று புனிதமாய்ச்செல்லுவாயே.

97

(சிவ-வ-ம்.) இராஜனே இங்ஙனம் நடந்தவிஷயங்கள் யாவையுந் தெரிந்து கொண்டனையன்றோ? ஆகையால் நீ அயோத்தியாபுரிக்குப்போய் மகுடாபிஷேகம் சூட்டிக்கொண்டு இந்தவிஸ்வாமித்திரர் செய்ததவத்திற் பாதிபெற்று கடல் சூழ்ந்த வுலகமெல்லாம் சொந்தமாக ரக்ஷித்துப்பின்பு நம்முடைய பதத்துக்குவந்து சேரக்கடவாய் சந்தோஷமாக மனைவி, மகன், மந்திரியுடனும் மற்றவர்களுடனும் அயோத்தியாபுரிக்குச் சொல்வாயாக.

(அரி-வ-ம்.) ஓ ஜெகரட்சகா உத்தரவுபோல நடக்கின்றேன்.

(சிவபெருமான்-வ-ம்.) கேளாய் அமரேசா நீயும் காசிராஜனும் விஸ்வாமித்திரர் வசிஷ்டர் முதலியயாவரும் இந்தமெய்யரிச்சந்திரனை யழைத்துக்கொண்டு அயோத்திக்குச் சென்று சிம்மாசனத்திலேற்றிப் பட்டாபிஷேகம் செய்துவைத்துப்பின்னர் உங்களது எதாஸ்தானத்துக்குச் செல்லுங்கள்.

(தேவேந்திரன்-வ-ம்.) ஆக்ஞை தேவா.

(பொது-வ-ம்) இந்தப்பிரகாரம் இந்திரனிடம் ஆக்ஞாபனம் செய்து உமாபதி, லெக்ஷுமிபதி, சாரதாபதி, முதலானதேவர்கள் யாவரும் தத்தம் எதாஸ்தானத்துக்குச் சென்றார்கள் பின்பு தேவராசன் கையால் அரிச்சந்திர மஹாராஜனைப்பிடித்து இரதத்தில் வைத்துக்கொண்டும் இந்திராணி சந்திரவதிகையைப் பிடித்துத் தூக்கிவைத்துக் கொண்டும் காசிராஜனுடனும் பரிவாரங்களுடனும் சிலமகாரிஷிகளோடும் காசிப்பட்டணம்விட்டு அயோத்தியாபுரிக்கு வந்து அரிச்சந்திரனுக்கு முடிசூட்டுகிற விதங்காண்குக.



# அரிச்சந்திரமகாராஜன் பட்டாபிஷேகம்.

தரு.

இராகம்-கலியாணி-தாளம்-ஆதி.

பல்லவி.

மகுடாபிஷேகங்கொண்டான் அரிச்சந்த்ரராஜன்
மகுடாபிஷேகங் கொண்டா[ன்]

அநுபல்லவி,

தகுபுகழ்சந்த்ரவதிக் ஜைதயல்பாக[...]ருக்
சாஸ்திரவிற்பன்ன தேவதாசன்பக்கத்திருக்
மகிதலமன்னரெல்லாம் வந்தடிதனிற்று[…]
மாமுனிவரமரர் மதியமைச்சர்கள்[…]
மாதர்களாட கவி
வாணர்கள்பாட ஆதி
வேதியர்கூற வாத்ய
மென்றொனிமிற அதி
விந்தையைந்தருவளர் அந்தரவுலகெலாம்
சந்ததமரசுபுரி இந்திரன்திருக்காத்தால். (ம)

விஸ்வாமித்திரன் தாரைவார்ப்பது.

விஸ்வாமித்திரன் விருத்தம்.

ஆதவன்குலத்துதித்த வரசகேள்செய்தவத்திற்
பாதியைத்தமக்கிதோயான் பாங்கதாய்த்தாரைவார்த்தேன்
ஆதாவாகப்பெற்றிவ் வயோத்தியாபுரியையோங்கும்
நீதியாயரசுசெய்து நீடூழிகாலம்வாழ்வீர்

மங்களத் தரு.

இராகம் - சுருட்டி - அடதாளம்.

பல்லவி,

மங்களம் மங்களம் ஜெயசுப
மங்களம் மங்களம்



அநுபல்லவி.

கங்கையருள்பாலர்க்கும் செங்கைவடிவேலர்க்கும்
திங்களணிந்தவர்க்கும் தேவிமீனாம்பிகைக்கும் (ம)

சரணங்கள்.

செங்கண்மாலவருக்குஞ் செந்திருபெண்ணாளுக்கும்
தங்கப்பங்கயனுக்கும் சோதியார்நாமகட்கும் (ம)

மெய்யரிச்சந்திரர்க்கும் மெல்லிசந்த்ரவதிக்கும்
செய்யமறையில்வல்ல தேவதாசன்றனக்கும் (ம)

மந்த்ரிசத்யகீர்த்திக்கும் மாதவவசிட்டர்க்கும்
சுந்தவேளருள்சேர், கல்யாணசுந்தரனுக்கும். (ம)

சூர்தகுலாலகுல சுந்தரராஜனுக்கும்
மகிதலம்புகழு மகாலிங்கக்கோனுக்கும். (ம)

இச்சரித்திரந்தன்னை இன்பமாய்ப்படிப்போருக்கும்
அச்சிற்பதித்த குருசாமியன்பன்றனக்கும். (ம)

சுபமங்களம்.

## வாழி விருத்தம்.

மெய்யரிச்சந் திரன்வாழி கற்பின்மிக்க
மெல்லிசந்த்ர வதிவாழி யமைச்சன்வாழி
செய்யகுல குருவசிட்டர் வாழிதிவ்ய
தேவதா சன்வாழி ஜெகத்தோர்வாழி
கைவீரா றுடையகுரு பரன்றுள்போற்றுங்
கல்யாண சுந்தரவேள் வாழிஞான்றும்
ஐயமிலா திதையெவரு முணரும்வண்ணம்
அச்சிலிட்ட குருசாமி வாழிவாழி.

மெய்யரிச்சந்திரநாடகம்.
முற்றுப்பெற்றது.

396 789

உ

பரமபதிதுணை.

# விளம்பரம்.

இதனால் சகலமான கனவான்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் அடியிற்கண்ட புஸ்தகங்கள் தேவையுள்ளவர்கள் அடியிற்கண்டவரிடம் கிரையத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம்.

| | ரூ. | அ |
|---|---|---|
| மெய்யரிச்சந்திரநாடகம் | 1 | 8 |
| சத்தியவாக்குஅரிச்சந்திரநாடகம். | 1 | 4 |
| மூக்கவேளார் அரிச்சந்திரநாடகம் | 1 | 4 |
| நீதிநெறிஅரிச்சந்திரநாடகம் | 1 | 4 |
| சிவராமிஅரிச்சந்திரநாடகம் | 0 | 12 |
| அனேருசபெருமாள்பிள்ளை அரிச்சந்திரநாடகம் | 1 | 4 |
| சத்தியபாஷ அரிச்சந்திரவிலாசம் சுந்தரராவ் அடிவகிற புத்தகங்கள் | 1 | 0 |
| வள்ளிநாடகம் சுந்தரராவ் பாடிவருகிறது | 1 | 0 |
| சதாரம்சரித்திரம் | 0 | 1 |
| சாரங்கதசரித்திரம் | 0 | 1 |
| மணிமாலிகைசரித்திரம் | 0 | 1 |
| வள்ளியம்மைசரித்திரம் | 0 | 1 |
| மோகினிராஜன்சரித்திரம் | 0 | 1 |
| பாரிசாதபுஷ்பஹரணம் | 0 | 1 |
| தாராசங்கசரித்திரம் | 0 | 1 |
| அலங்காரஅம்பிகாவதிசரித்திர | 0 | 1 |
| குலேபக்காவலிசரித்திரம் | 0 | 1 |
| மஞ்சுகோஷாசரித்திரம் | 0 | 1 |
| நல்லதங்காசரித்திரம் | 0 | 1 |
| துரோபதைவஸ்திராபரணம் | 0 | 1 |
| இலங்காதகனம் | 0 | 1 |
| சகுந்தலா | 0 | 1 |
| விக்கிரமஸ்திரிசாகஸம் | 0 | 1 |
| கீசகசரித்திரம் | 0 | 1 |
| குணபூஷணி | 0 | 1 |
| புவனேந்திரஸபா | 0 | 1 |
| ஜெகதலப்பிரதாபன்சரித்திரம் | 0 | 1 |
| துருவசரித்திரம் | 0 | 1 |

| | ரூ. | அ. | |
|---|---|---|---|
| சிறுத்தொண்டசரித்திரம் | 0 | 1 | |
| மார்க்கண்டேயர்சரித்திரம் | 0 | 1 | |
| அபிமன்னுயுத்தம் | 0 | 1 | |
| சித்திரசேன கந்தர்வஉபாக்கியானம் | 0 | 1 | |
| சயிந்தவசரித்திரம் | 0 | 1 | |
| கோமாளிப்பாட்டு | 0 | 1 | |
| விநாயகக்கவித்திரட்டு | 0 | 1 | |
| திருவிளையாடல் வசனம் | 1 | 4 | 0 |
| ஷை நயம்பதிப்பு | 1 | 8 | 0 |
| ஷை நயம்பதிப்பு கிளேஸ் | 2 | 8 | 0 |
| பெரியபுராணம் வசனம் | 1 | 4 | 0 |
| மேற்படிநயம்பதிப்பு | 1 | 8 | 0 |
| ஷை நயம்பதிப்பு கிளேஸ் | 2 | 8 | 0 |
| இராமாயணசெய்யுள் அரும்பதங்களுக்குஉரையுடன் வால்யம் 2-க்கு | 6 | 0 | 0 |
| திருவருட்பா 6 திருமுறை | 3 | 0 | 0 |
| மூவர் தேவாரம் பண்முறை | 3 | 4 | 0 |
| சூடாமணிநிகண்டு 12தொகு | 1 | 4 | 0 |
| வால்மீகர் இரேகைசாஸ்திரம் | 1 | 0 | 0 |
| விநாயகர் தோத்திரப் பிரபந்தத்திரட்டு திக்கு | 0 | 10 | 0 |
| ஷை தின் | 0 | 8 | 0 |
| ஸ்ரீராமர் அஸ்வமேதயாகம் லெத்தகிராப்படத்துடன் | 1 | 0 | 0 |
| 11-12 நிகண்டு | 0 | 8 | 0 |
| நாநாசீவவாதக்கட்டளை | 0 | 1 | 0 |
| பரமானந்ததீபம் | 0 | 1 | 0 |
| திருக்கருவைப்பதிற்றுப்பத்தந்தாதி | 0 | 1 | 0 |
| உவமானசங்கிரகம் இரத்தினசுருக்கம் | 0 | 1 | 0 |

## சுத்தப்பதிப்பு புத்தகவிளம்பரம்.

இதனால் சகலமானவர்களுக்குந் தெரிவிப்பது யாதெனில் முன் அச்சிட்டு வழங்கிய யாழ்ப்பாணத்து பேரகராதியைவிட இப்போது யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்கள் மாணாக்கரின்மாணாக்கரி லொருவரும் சைவப்பிரசாரணருமாகிய யாழ்ப்பாணம் நா. கதிரைவேற்பிள்ளையவர்களைக் கொண்டு ஷை பேரகராதியில் அகராநேக நூதன சொற்கள் சேர்த்து, வினைமுற்று, வினையெச்சம், பெயரெச்சம் முதலானதற்கும் ஆங்காங்கு குறிகளமைத்தும், பொருளகராதியிலும் தொகையகராதியிலும், தொடையகராதிமுதலானதற்கும் ஆங்காங்கு வருந்து நூதன சொற்களும் சேர்த்து எமது புஸ்தக ஷாப்பில் 1901-வருடத்தில் புதிதாய் பதிப்பித்த கல்பளபளப்புள்ள இங்லீசு பதினாறுபவுண்கடிதத்தில் புதுயெழுத்தில் பிழையில்லாமல் அச்சிட்டு புல் சிமைத்தோல் பயிண்டுசெய் [illegible] ப்புத் தோலின்பேரில் தங்கரேக்கினால் பேர்குத்திய புஸ்தகம்1-க்கு கிரையம். 3 8 0

## ஸ்ரீமகா பக்தவிஜயம்!

ஜெயதேவர், கபீர்தாசர், துளசிதாசர், நாமதேவர், ஞானேசுவரர், குசேலர் ஆகிய இவர்கள் சரித்திரங்கள் இதில் அடங்கி இருக்கின்றன.

இப்புத்தகம் படிப்பதால் மஹம்மதிய முதலிய சமயங்களின் சித்தாந்தங்களும், கற்புடைய மகளீர் ஒழுக்கங்களும், பகவான் அடியார்க்கெளியவனென்பதும், பக்திசெய்யும் வகையும், பக்தியின் இலக்ஷணமும், சமாதியின் வகைகளும், பக்தர்கள் உடற்குவரும் இடர்பற்று சிறிதும் அஞ்சார் என்பதும், மனிதராய்ப்பிறந்த ஒவ்வொருவரும் நடந்துகொள்ளும் வகை இன்னவென்பதும், உள்மதக்கலகம் கூடாதென்பதும் வேறு பிரிவும் தெளிவாய் அறிந்துக்கொள்ளலாம்.

இது ஒவ்வருவர்கையில் அவசியமாய் இருக்கத்தக்கது தெளிவான நடையில் ஆண்பாலரேயன்றிப் பெண்பாலாரும் எளிதில் அறிந்துகொள்ளுமாறு எழுதபிபட்டிருக்கின்றன.

ராயல் 8-பேஜ் அளவில் 60-பாரம் கொண்டதாய் சுத்தமாய் அச்சிடப்பட்டு [illegible]யான காலிகோ கட்டடம் செய்யப்பட்டிருக்கிறது.

ஷை [illegible] கடிதத்தில் அச்சிட்டது ரூபா 2 0 0

ஷை [illegible]கடிதத்தில் அச்சிட்டது 1 [illegible] 0

எனது மேல்விலாசம்
இ. ரா. ம. தநசாமிக்கோன்,
புக்ஷாப் புதுமண்டபம் மதுரை.